# இந்தியக் கல்விமுறை

## (INDIAN EDUCATION SYSTEM)

## இரண்டாம் ஆண்டு

## வளநூல்

## ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி

*தீண்டாமை ஒரு பாவச் செயல்*

*தீண்டாமை ஒரு பெருங்குற்றம்*

*தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்*

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

© தமிழ்நாடு அரசு
முதற்பதிப்பு – 2009

## வளநூலாசிரியர் குழு

**குழுத் தலைவர்**
முனைவர் **எஸ். லட்சுமி**
மேனாள் துணைவேந்தர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்.

**மேலாய்வாளர்**

**சி. ராஜபாண்டியன்**
துணை இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி
பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

**நூலாசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்**
**கே. நடராஜன்**
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி–603 402,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நூலாசிரியர்கள்**

**திரு. எஸ். ராஜேந்திரன்**
முதல்வர்
மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம்
வடலூர்.

முனைவர் **எஸ். ராஜேந்திரன்**
தலைமை ஆசிரியர்
கி.ஆ.பெ. விஸ்வநாதம் மேல்நிலைப் பள்ளி
திருச்சி.

முனைவர் **எஸ். மலர்விழி**
விரிவுரையாளர்
மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

**திரு. ஆர்.எஸ். ராதாகிருஷ்ணன்**
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம்
மாயனூர்.

**விலை: ரூ.**

இந்நூல் 60 ஜி.எஸ்.எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது

வளநூல் தயாரிப்பு: தமிழ்நாடு அரசுக்காக ஆசிரியர் கல்வி
ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை–600 006

வெப்ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

# *இயக்ககத்திலிருந்து...*

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

மாணவர்களின் திறமைகளை வளப்படுத்துவதும் சுயக் கட்டுப்பாட்டை வளர்ப்பதும் சிறந்த கருத்துகளைக் கேட்டுணரச் செய்வதும் எதையும் கற்றுக்கொள்வதில் முனைப்பை ஏற்படுத்துவதுமெனக் கல்வியின் பரிமாணங்கள் பலவாகும். இக்கல்வியைக் 'கலைத்திட்டம்'(ஊரசசஉைரடரஅ) எனும் முறையான ஒழுங்கமைப்புடன் அளித்தலே கல்வி நிறுவனங்களின் தலையாய பணியாகும்.

கலைத்திட்டம் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், சூழலுக்குச் சூழல், தேவைக்கேற்ப, கற்பவர்க்கேற்ப மாற்றி வரையறுக்கப்படுகிறது. தேசிய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம், தற்போதைய கல்வி அமைப்பிற்கெனத் "தேசியக் கலைத்திட்டம் 2005"(சூஊகு 2005)–ஐ வடிவமைத்துள்ளது.

1. பள்ளிக்கு வெளியில் பெற்ற கற்றல் அனுபவ அறிவைப் பள்ளி அறிவோடு தொடர்புபடுத்துதல்.
2. மனப்பாடம் செய்வதைத் தவிர்த்துப் பொருள் புரிந்து கற்பதை உறுதிப்படுத்துதல்.
3. பாடநூல்களுக்கு அப்பாற்பட்டும் படித்தறிதல் மற்றும் செய்தி திரட்டுதல்.
4. தேர்வு முறைகளை மேலும் நெகிழ்வாக்கி வகுப்பறைக் கற்றல் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.
5. நாட்டின் மக்களாட்சி முறை மற்றும் நாகரிக பண்பாட்டுக் கூறுகளைக் கல்வியோடு இணைத்தல்.

முதலியன இதனுடைய வழிகாட்டும் கோட்பாடுகளாகும். இதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். 82, பள்ளிக் கல்வித் (யு1) துறை, நாள் 05.04.2007இன்படி ஆசிரியர் கல்விப் பட்டயப் படிப்பிற்கான கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறையில் உள்ள இப்புதிய கலைத்திட்டத்தின் மூலம் மாணவ ஆசிரியர்கள் கீழ்க்காணும் திறன்களைப் பெறுவர்.

★ தொடர்ந்து அறிவைப் பெருக்கும் திறன்
★ அறிந்தவற்றைச் செயல்படுத்தும் திறன்
★ தம் திறமைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ப வாழும் திறன்; பிறரோடு ஒருமித்து வாழும் திறன் அனைத்துப் பாடப்பகுதிகளிலும் அதிகபட்சக் கற்றல் அடைவு பெறும் திறன்
★ ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடும் திறன்
★ ஆய்வு மனப்பான்மை, புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில் செயல்திறனை மேம்படுத்தித் தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கும் திறன் மேலும் இக்கலைத்திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களையும் கொண்டுள்ளது.
★ மாணவ ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தி, அவர்களின் முழு ஆளுமையை வெளிக்கொணர்தல்
★ மாணவ ஆசிரியர்களிடம் நன்னெறி, நாட்டு ஒருமைப்பாடு, மனித நேயப் பண்புகளை வளர்த்தல்
★ வளரிளம் பருவக் கல்வி, உடல்நலக் கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, மனித உரிமைக் கல்வி, சாலைப் பாதுகாப்புக் கல்வி, அமைதிக் கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்.

மேற்கண்ட நோக்கங்களில் அடைவு பெற, இரண்டாண்டு ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பிற்கு எட்டு பாடங்கள் மற்றும் ஒன்பது செய்முறைப் பயிற்சிகள் (Practicum) உருவாக்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **முதலாமாண்டுப் பாடங்கள்** | **இரண்டாமாண்டுப் பாடங்கள்** |
|---|---|---|
| 1. | கற்கும் குழந்தை (Learning Child) | இந்தியக் கல்வி முறை (Indian Education System) |
| 2. | கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing learning) | கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing learning) |
| 3. | தமிழ்மொழி கற்பித்தல் (Teaching of Tamil)<br>மலையாள மொழி கற்பித்தல் (Teaching of Malayalam)<br>தெலுங்கு மொழி கற்பித்தல் (Teaching of Telgu)<br>உருது மொழி கற்பித்தல் (Teaching of Urdu)<br>மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) | தமிழ்மொழி கற்பித்தல் (Teaching of Tamil)<br>மலையாள மொழி கற்பித்தல் (Teaching of Malayalam)<br>தெலுங்கு மொழி கற்பித்தல் (Teaching of Telgu)<br>உருது மொழி கற்பித்தல் (Teaching of Urdu)<br>மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) |
| 4. | ஆங்கில மொழி கற்பித்தல் (Teaching of English) | ஆங்கில மொழி கற்பித்தல் (Teaching of English) |
| 5. | கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) | கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) |
| 6. | அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) | அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) |
| 7. | சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) | சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) |

| வ. எண் | முதலாமாண்டு செய்முறை பயிற்சிகள் | இரண்டாமாண்டு செய்முறை பயிற்சிகள் |
|---|---|---|
| 1. | குழந்தையை உற்றுநோக்கல் மற்றும் தனிமாணாக்கர் ஆய்வு | செயல் திட்டங்கள் |
| 2. | பள்ளிப் பார்வை | கலைக் கல்வி மற்றும் பணியனுபவம் |
| 3. | கதை கூறுதல் | கணினிக் கல்வியியல் |
| 4. | உடற்கல்வி, உடல்நலக்கல்வி மற்றும் யோகக்கலை | உடற்கல்வி, உடல்நலக்கல்வி மற்றும் யோகக்கலை |
| 5. | சுயவளர்ச்சிப் பணிமனை | சுயவளர்ச்சிப் பணிமனை |
| 6. | கற்றல் கற்பித்தல் பொருள்கள் | கற்றல் கற்பித்தல் பொருள்கள் |

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் பி.எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், கோவை பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் தொலைவழிக் கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.சுவாமிநாதபிள்ளை, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ். இலட்சுமி, சென்னைக் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் வி.கணபதி, திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஜி.பங்கஜம், பாண்டிச்சேரி விநாயகா மிஷன் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் கே. சுப்பம்மாள், சென்னைப் பல்கலைக்கழகத் தற்போதைய கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் டி.குமரன், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகக் கல்வியியல் பேராசிரியர் முனைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகிய குழுத் தலைவர்கள் பல அமர்வுகளில் கலந்துரையாடி, நூல்கள் பல ஆய்ந்தும் தேர்ந்தும் கருத்துகளைப் பகுத்தும் தொகுத்தும் எளிமைப்படுத்தி வளநூல்களை உருவாக்க வழிகாட்டியுள்ளனர்.

ஒவ்வொரு வளநூல் குழுவும், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், வட்டார வள மையம், பள்ளிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த கல்வியாளர்களை மேலாய்வாளர்களாகவும் ஒருங்கிணைப்பாளர்களாகவும் நூலாசிரியர்களாகவும் கொண்டுள்ளது. மேலும், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழக ஆசிரியக் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.கே.லில்லி, சென்னை ஆதர்ஷ் கல்வி நிறுவனங்களின் கல்வியியல் ஆலோசகர் முனைவர் என்.லலிதா, கிருஷ்ணகிரி முன்னாள் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் திரு கே.நாராயணப்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழக உருதுமொழி துறைத் தலைவர் முனைவர் எஸ்.சையத் சஜித் ஹுசைன் ஆகியோரைக் குழுத்தலைவர்களாகக் கொண்டு சிறுபான்மைப் பாடங்களுக்கும் வளநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் முனைவர் ஏ.எம். மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளையின் The School அமைப்பைச் சார்ந்த திருமதி. சுமத்ரா ஆ. கௌதமா, தன்னார்வக் கல்வியாளர்களான ஆமுக்தா மால்யதா மஹோபாத்ரா மற்றும் முனைவர் பாலாஜி சம்பத் (எய்ட்–இந்தியா), வேதாத்ரி மகரிஷி மனவளக் கலை மன்றத்தின் உதவிப்

பேராசிரியர் திரு. டி.என்.அருளானந்தம், புதுவை பண்பாடு மற்றும் மொழியியல் நிறுவன முதுநிலை விரிவுரையாளர் முனைவர் த.பரசுராமன் ஆகிய கல்வியாளர்களும் வளநூல்கள் உருவாக்கத்திற்குப் பங்களித்துள்ளனர்.

கற்பித்தல் என்னும் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து தானேகற்றல் என்னும் மாணவர் மையக் கல்விக்கு மாறியுள்ள இன்றைய தொடக்கக் கல்வி முறை, செயல்கள் வழிக் கற்றலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இப்புதிய வளநூல்களின் ஒவ்வோர் இயலும் செயல்களைக் கொண்டு தொடங்கி மாணவர்கள் தாமாகவே கருத்தை அறிந்துகொள்வதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. மாணவ ஆசிரியர்கள், நூலகங்களைப் பயன்படுத்துதல், பள்ளி மாணவர்களிடம் கற்றல் திறனை மேம்படுத்தத் தமது வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்துதல், உற்றுநோக்கும் திறன், வகுப்பறை மேலாண்மை, பாடப்பொருளறிவு, துணைக் கருவிகள் மற்றும் கற்றல் பொருள்களைப் பயன்படுத்தும் திறன், தலைமைப்பண்பு, குழந்தை உளவியலை அறிந்திருத்தல் ஆகிய அனைத்துத் திறன்களையும் அடைய வளநூல்கள் வழிகாட்டும். இவ்வளநூல்களைக் கற்பதன் மூலம் பணிஈடுபாடும் (Commitment) விரிந்த அறிவும் பரந்த ஆற்றலும் (Competence) பொறுப்புணர்வுடன் மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் கருத்துகளை எடுத்துரைக்கும் மாண்பும் (Communication) உடைய நல்லாசிரியர்கள் உருவாவர்.

வளநூல் (Source Book) என்பது கற்பதற்கான வளங்கள், ஆதாரங்கள் முதலியன எங்கெங்கே உள்ளன என்பதைக் காட்டும் வழிகாட்டியே. அதிலிருந்து கற்றலை விரிவுபடுத்தித் தேவையான செய்திகளை ஆங்காங்கே திரட்டி மாணவர்களது அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் திறன்களை மேம்படுத்துவதும் தரமான ஆசிரியக் கல்வி பெற வழிவகுப்பதும் வழிகாட்டுவதும் ஆசிரியக் கல்வியாளர்களின் கடமையாகும். புதிய வளநூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை முழுமையாக உள்வாங்கி, முறையாகப் படித்துப் பயனடைவது அனைத்து மாணவ ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

வளநூல்களைச் செம்மையாக உருவாக்க உதவிய அனைத்துக் கல்வியாளர்களுக்கும் கற்பிக்கவிருக்கும் ஆசிரியக் கல்வியாளர்களுக்கும் கற்கவுள்ள மாணவ ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த பாராட்டுகள்!

**இயக்குநர்,**

**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம்,**
**சென்னை – 600 006.**

# இந்தியக் கல்விமுறை
# பாடத்திட்டம் (Syllabus)

## நோக்கங்கள்

ஆசிரிய மாணவரிடையே பின்வரும் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் ''இந்தியக் கல்விமுறை'' வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ◈ இந்தியக் கல்வி முறையின் வரலாற்று மேல்நோக்கு அறிவைப் பெறுதல்.
- ◈ இந்தியக் கல்வி முறையின் நோக்கங்களைப் புரிந்துகொள்ளுதல்.
- ◈ இந்தியக் கல்வியின் அமைப்பை அறிந்துகொள்ளுதல்.
- ◈ கல்விமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை ஆய்ந்து தெளிதல்.
- ◈ ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் பன்முகப்பணிப் பங்குகளைப் புரிந்து கொள்ளுதல்.
- ◈ கல்விமுறையில் தன்னைப் பொருத்திக் கொண்டு திறம்பட நிறைவேற்றும் திறன் பெறுதல்.
- ◈ பள்ளியின் உரிமையாளத்துவத்தைச் சமுதாயம் பெற்றுக் கொள்ள ஊக்குவித்தல்.
- ◈ பள்ளியின் விழுமியங்களைப் புரிந்து கொண்டு கடைபிடித்தல்.
- ◈ பள்ளியின் பலவகைகளையும் மேலாண்மைகளையும் அறிந்துகொள்ளுதல்.
- ◈ பள்ளியில் நலத்திட்டங்களை நிறைவேற்றுதல்.
- ◈ கல்விமுறையின் உள்ளீடு, செயல்முறை, விளைவு பற்றிப் புரிந்துகொள்ளுதல்.
- ◈ தொடக்கக் கல்வி எதிர்நோக்கும் அறைகூவல்களைப் புரிந்து கொள்ளுதல்.

| கோட்பாடு (Theory) | செய்முறை (Practical) |
|---|---|
| 1. வரலாற்று மேல்நோக்கு | |
| 1. வரலாற்று மேல்நோக்கு<br>– இந்திய கல்வியின் நோக்கங்கள், கருத்து, வளர்ச்சி.<br>– ரூஸோ, டூயீ, மாண்டிசோரி, விவேகானந்தர், தாகூர், காந்தி ஆகியோரின் கல்வித்தத்துவங்கள் | – வேத, சமண, புத்த, தமிழ்ச்சங்க காலத்தில் கல்வியின் நோக்கங்களையும் கருத்துக்களையும் பற்றிய கருத்தரங்கு.<br>– குருகுலக் கல்விமுறை –கருத்தரங்கு.<br>– இந்திய, மேலைநாட்டுக் கல்வியாளர்களின் சிந்தனைகள், கருத்துகள் பற்றிய குறும்புத்தகம் (book-let) தயாரித்தல். |
| 2. கல்வியின் நோக்கங்கள் | |
| சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு, தொழில் தனிமனிதக் கல்வி நோக்கங்கள். | பழைய மற்றும் தற்கால இந்தியக் கல்வியின் நோக்கங்களைப் பற்றிப் பேச்சுப்போட்டிகள். |
| 3. தொடக்கக் கல்வியின் நிலை | |
| – ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ்/தொடக்கக் கல்வியின் வளர்ச்சி.<br>– படிநிலைகள்<br>– அரசியல் சாசனச் சட்டம்–தேசியக் கல்விக்கொள்கை 1986.<br>– செயல்திட்ட நடவடிக்கைகள் 1992 தொடக்கக் கல்வி சார்ந்த அரசியல் சாசனத் திருத்தம் (2002), கல்வி உரிமை மசோதா 2005, 21–ஆம் நூற்றாண்டில் கல்விநோக்கம், தேசியக்கலைத்திட்டம் 2005. | அனைவருக்கும் தொடக்கக் கல்வி, தேசியக் கல்விக் கொள்கை, அரசியல் சாசனம், பள்ளி வசதி மேம்பாடு, தக்கவைத்தல் மற்றும் எழுத்தறிவு விகிதம் பற்றிய கருத்தரங்குகள் |

| | |
|---|---|
| **4.** பொருளாதார வளர்ச்சியில் கல்வியின் பங்கு– மனிதவள மேம்பாடு | |
| – வேளாண்மை/தொழில்<br>பொருளாதாரத்திற்கும் அறிவுப்<br>பொருளாதாரத்திற்கும் வேறுபாடு<br>– தகவல்<br>அனுமதி மற்றும் வளர்ச்சிக்கான கல்வி–விழுமக் கல்வி–பாலினச் சமத்துவம்–சமூக நிலைப்பெயர்வு–மனப்பான்மை மற்றும் விழுமம் இணைத்து மேம்படுத்துவதற்கான நடைமுறை உத்திகள் | கல்வியின் வாயிலாகத் தனிமனித, சமுதாய, குடும்பப் பொருளாதார வளர்ச்சி பற்றிய உண்மை நிகழ்வுகளைச் சேகரித்தல்.<br><br>கல்வி வழியாக விழுமங்களை உருவாக்குதல்–வழிவகைகள் மற்றும் உத்திகள்–விவாதம்.<br>விழுமங்களின் பலவகைகள்–தனிமனித, நீதி, சமூக, ஆன்மீக, பண்பாடு, ஜனநாயக மற்றும் உலகம் சார்ந்த விழுமங்கள் பற்றிய கருத்தரங்கு மற்றும் குறும் புத்தகம் தயாரிப்பு |
| **5.** கல்வி மேலாண்மையில் சமூகத்தின் ஈடுபாடு | |
| – சமூகத்தின் விழிப்புணர்வு, ஈடுபாடு.<br>– சமூகப்பங்கேற்பு, திட்டமிடுதல் மதிப்பிடல்–கல்வி நிர்வாக மற்றும் செயல்பாடுகளைப் பரவலாக்கல்.<br>– சமூகக் கண்காணித்தல், உடைமை, கடமைகளை மேம்படுத்துவதற்கான செயல்கள். | – கிராமக் கல்விக்குழு செயல்பாடுகள் பற்றி ஆய்வு(Case study)<br>– கிராமக் கல்விக்குழுக் கூட்டம் நடைபெறும் முறை பற்றி பார்வையிடல்.<br>– பள்ளி→சமூகம் எதிர்பார்ப்பையும், சமூகம்→பள்ளி எதிர்பார்ப்பையும் பற்றிய செயலாய்வு (Project) |
| **6.** பண்பாட்டுப் பாரம்பரியம் | |
| தேச ஒருமைப்பாட்டை, தனித்தன்மையை வளர்ப்பதில் பண்பாட்டின் பங்கு–பண்பாட்டுப் பாரம்பரியம்–சிற்பக்கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம், ஓவியக்கலை, இசை–பண்பாட்டுப் பாரம்பரியத்தை வளர்ப்பதில் கல்வியின் பங்கு | – தேச அக்கறை தொடர்பான வாசகங்கள் எழுதுதல்.<br>– கலை, பண்பாடு தொடர்பான படப்புத்தகம் தயாரித்தல்.<br>– தேச ஒருமைப்பாடு, சமூக ஒற்றுமை பற்றிய கருத்தரங்கு, பாடல்கள் எழுதுதல்.<br>– இசைப்போட்டி<br>இந்திய பண்பாட்டுப் பாரம்பரியம்–டாக்டர் ராதாகிருஷ்ணன், நேரு, தாகூர், காந்தி ஆகியோர் எழுதிய புத்தகங்கள் படித்தல். |
| **7.** மக்களாட்சி அமைப்பில் அரசியலும் கல்வியும் | |
| சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி, குடியாட்சி முறையிலான அமைப்பு என்பதை உணர்தல்.<br>அனைவருக்கும் வாக்குரிமை–ஜனநாயக அமைப்பு முறையை உணர்ந்து பாராட்டுதல்.<br>அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்வகுதில் அரசின் உறுதிப்பாடு.<br>பெண்கள், குழந்தைகள் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கான உரிமைகள்–சமத்துவம் சமதர்மம். | ஜனநாயக அமைப்பு முறைக்கருத்தரங்கு<br>குழந்தைகள், வாக்காளர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமை, கடமை, பங்கு பற்றிய ஒப்படைப்பு<br>அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் மத்திய, மாநில அரசுகளின் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றிய ஒப்படைப்பு<br>சமத்துவம், சமதர்மம், குழந்தைகள் உரிமைகள் பற்றிய கருத்தரங்கு |

| | |
|---|---|
| **8.** தொடக்கக் கல்வியின் அறைகூவல்கள் | |
| – பள்ளி வசதி, சேர்க்கை, நிறைவு, இடைநிற்றல், மீளக்கற்றல், அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வி<br>– GER, NER, CR, DR, RR கணக்கிடுதல், நலத்திட்டங்கள் தேசியக் கல்விக்கொள்கை<br>– மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் கல்வி இயக்கம்–பணிகள் மற்றும் நிகழ்வுகள் BRC, CRC, VEC | – பள்ளி வசதி, சேர்க்கை, நிறைவு, இடைநிற்றல், மீளக்கற்போர் போன்ற விவரங்களைச் சேகரித்து ஆய்க.<br>– GER, NER, CR, DR, RR போன்ற புள்ளி விவரங்களை உங்கள் மாவட்டத்தில் சேகரித்து வட்டார அளவில் ஒப்பிடுக.<br>– அனைவருக்கும் கல்வி இயக்கம் பற்றிய கருத்தரங்கு.<br>– BRC, CRC, VEC பணிகள் பற்றிய ஒப்படைப்பு |
| **9.** பள்ளிக்கல்விக் கட்டமைப்பு | |
| முன் மழலையர் கல்வி (ECCE) தொடக்க, உயர்த்தொடக்க இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி<br>பள்ளிக்கல்வி – படிநிலைகள் மாநிலக் கல்வி வாரியம் மத்திய கல்வி வாரியம், மெட்ரிகுலேஷன், கேந்திரிய வித்தியாலயம், முறையான மற்றும் முறைசாராக் கல்வி. | – பால்வாடி, அங்கன்வாடி, ECCE மையங்களைப் பார்வையிடல்.<br>– மாவட்டத்திலுள்ள பள்ளிகளை வகைப்படுத்தல். |
| **10.** தேசிய அக்கறைகளும் கல்வியும் | |
| சுமயச்சார்பின்மை–தேச ஒற்றுமை–மகளிர் ஆளுரிமை (Women Empowerment) சுற்றுச்சூழல் கல்வி–பன்னாட்டு உணர்வு–உரிமைப்பறிப்பும் இழப்பும் அற்ற சுதந்திர நோக்குடன் கூடிய சமவாய்ப்பு–குழந்தைகளின் உரிமைகள்–சிறப்புக்கல்வி தேவைப்படும் குழந்தைகள்– வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளுக்கான கல்வி சமூக பிரச்சனைகளைப் பற்றி உணர்வூட்டுதல்–குழந்தைத் தொழிலாளர்கள்–எழுத்தறிவின்மை – சமுதாய ஏற்றத்தாழ்வு | ஒப்படைப்பு மற்றும் கலந்துரையாடல்<br>– சமயச்சார்பற்ற ஆசிரியர்<br>– தேச ஒற்றுமையை மேம்படுத்த பள்ளிச் செயல்கள்<br>– ஆற்றல் மிக்க பெண்<br>– பசுமைப்பள்ளி<br>– சமவாய்ப்பு<br>– வேற்றுமையில் ஒற்றுமை<br>– தேச அக்கறையும் பள்ளி நிகழ்வுகளும்<br>– பள்ளி விழாக்கள் நடத்துதல் |
| **11.** ஆசிரியர் கல்விக் கட்டமைப்பு | |
| ஆசிரியரின் பன்முகப்பங்கு<br>– மழலையர் கல்விப் பட்டயப் சான்றிதழ் படிப்பு– ஆசிரியர் கல்விப் பட்டயச் சான்றிதழ்– இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி–இளநிலை, முதுநிலை கல்வியியல் பட்டம்–ஆய்வு நிறைஞர், முனைவர் பட்டங்கள் – பிற சமூக நிறுவனங்களுடன் இணைப்பு | – இளநிலை கல்வியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய ஆய்வு.<br>– ஆசிரியர் கல்வியின் இன்றைய நிலைக்கும் கலைத்திட்டத்திற்கும் இடையேயுள்ள இடைவெளி பற்றிய ஆய்வு.<br>– பள்ளிக்கும், DIET, DEEO, CEO, DEO, CEO(SSA), DTERT ஆகியவற்றிற்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆய்வு. |

| | |
|---|---|
| – ஆசிரியர் கல்வியின் தரம் உயர்வதில் பல்வேறு அமைப்புகளின் பங்கு–மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் வட்டார வளமையம், பள்ளித்தொகுப்புக் கருத்தாய்வு மையம், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்–தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம்– தேசியக்கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் குழுமம், மண்டலக் கல்வி நிறுவனங்கள். | |
| 12. பள்ளி மேலாண்மை | |
| பள்ளி மேலாண்மையின் முக்கியக்கூறுகள்–தலைமை ஆசிரியரின் பணி–பள்ளி மேலாண்மையில் ஆசிரியர் பங்கு–ஆசிரியர் உறுதிப்பாடு–ஆசிரியர் பணிக்கடன் விழைவு–உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் பணிகள்–வட்டார வளமையம்/தொகுப்புக் கருத்தாய்வு மையம் ஆகியவற்றின் கல்விசார்ந்த பணிகள்–தொடக்கக் கல்வி விதிகள்–வகுப்பறை மேலாண்மை–முழுத்தரநிறைவு தர மேலாண்மை–ஆசிரியர் தொழில் திறன் மேம்பாடு–பள்ளி இணைப்புத்திட்டம் பிற அமைப்புக்களுடன் தொடர்பு. | – பள்ளிப் பார்வை ஆவணம் தயாரித்து, தொடக்கப்பள்ளியில் பராமரிக்கப்படும் ஆவணங்கள்.<br>– "முன்மாதிரித் தலைமையாசிரியர்" கருத்தரங்கு.<br>– தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியரின் கல்வி சார்ந்த கடமைகள்–விவாதம்.<br>– தலைமையாசிரியரின் நிர்வாகப் பொறுப்புகள், கடமைகள்–விவாதம்.<br>– "முன்மாதிரி ஆசிரியர்"–கருத்தரங்கம்<br>– தலைமையாசிரியர்–ஆசிரியர் இடையே நல்லுறவு–முழு விவாதம். |

# செய்முறைப் பயிற்சிகளுக்கான விளக்கம்

கீழ்க்காணும் செய்முறை பயிற்சிகளுடன், இப்பாட நூலின் உட்பிரிவுகளிலும் மொத்தம் 58 செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அச்செயல்பாடுகளுக்கான விவரக்குறிப்புகள் சிலவற்றை மாணவர்களிடம் இருந்து பெற வேண்டி உள்ளது. அச்செயல்பாடுகளுக்கான விவரங்களை மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிகளுக்கு செல்லும் போதே பள்ளியினின்றும் திரட்டிக் கொண்டு வரவேண்டும். அவ்விவரங்களை உற்றுநோக்குதல் மூலமாகவோ அல்லது சிறு வினாப்பட்டியல் போன்ற உரிய கருவிகளைப் பயன்படுத்தியோ பெற வேண்டி இருக்கலாம். இவ்விவரங்களை உரிய களப்பயிற்சிகளுக்குச் செல்லும் முன்னமேயே தயாரித்து ஆசிரியர், மாணவ ஆசிரியர்களுக்குத் தரவேண்டும். இவ்விவரங்களை மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு சென்று வருகையில் சேகரித்து வந்து ஆசிரியப் பயிற்றுநரிடம் தொடர் செயல்களுக்காகத் தருமாறு பணிக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு கற்பித்தல் பயிற்சியின் போது மாணவ ஆசிரியர் பள்ளி மாணவர்களிடம் பெற்ற விவரங்களை குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு உரிய தலைப்புகளில் பதிந்து அவற்றைத் தொகுத்து ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே பதிவேடுகள் தயாரித்து வைக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் அந்தப் பாடத்தை நடத்தும் ஆசிரியப் பயிற்றுநர்கள் அவ்விவரங்களை மாணவ ஆசிரியர்களிடம் தெளிவுபடுத்தி காலவாரியாக வழிகாட்டி ஆவன செய்ய வேண்டும்.

# இந்தியக் கல்விமுறை
## செய்முறைப்பயிற்சி

| வ. எண் | அலகு / பாடம் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தகவல் சேகரிப்பு |
|---|---|---|---|
| 1. | வரலாற்று மேநோக்கு | 1. பண்டைய இந்தியாவில் நிலவிய கல்வியின் கூறுகள் பற்றிய காலமுறைவாரி மன வரைபடம் வரைக. | கல்விக் கூறுகள் மனவரைபடம் – நூலகத்தின் உதவியுடன். சிந்துசமவெளி நாகரிகம், வேதகாலம், குருகுலம், இதிகாசகாலம் – பௌத்த காலம் – சமணகாலம், சங்ககாலம் – 7 காலங்கள். |
| | | 2. தொல்பழங்கால இந்தியாவில் கல்வி – இப்பாடப் பொருளில். | நூறு – வினா விடைகள் சேகரிப்பு. |
| | | 3. பண்டைய இந்தியா, நம்கால இந்தியா இவற்றில் ஆசிரியர், மாணவர் உறவு, பொறுப்புக் கூறுகள் வாரியான ஒப்பீட்டாய்வை வகுப்பில் மேற்கொள்க. | ஆசிரியர், மாணவர் உறவு, பொறுப்பு, கூறுகள் வாரியான ஒப்பீட்டாய்வை வகுப்பில் மேற்கொள்க. ALM முறையில் செய்க. வளநூல்–வகுப்புச் செயல்பாடு. |
| | | 4. 36 சொற்களுள் ஒவ்வொருவரும் ஒன்றைப் பற்றி நூலக உதவியுடன் ஆழ்பொருள், சொற்பொருள் தெளிக. | மடிப்பிதழ் (Folder) (S.L.M) தயாரிக்க |
| | | 5. வணிக நோக்குடையோர் யாவரே ஆயினும் இந்நாட்டின் கல்வியை நிர்வகிக்க ஏற்றவர்களல்லர். | என்ற படிப்பினையை இப்பாடப்பொருள் வழி ஒத்த கூறுகளையும், எதிர்மறைக் கருத்துக்களையும் பட்டிமன்றம் நடத்தி நிறுவுக – வகுப்பறைச்செயல். |
| | | 6. சமயச் சார்புடைய கல்வி – ஆன்மீகக் கல்வி ஒப்பிடுக. 'வழக்காடுமன்றம்' | இவ்வேறுபாட்டை உலகுக்குப் புகட்ட இந்தியக் கல்விக் கொள்கையின் பாரம்பரியத் தகுதியை நிறுவுக. |
| | | 7. கல்வியில் மதநோக்கு ஏற்படுமாயின் ஆசிரியர் மாணவர் உறவில் ஆய்ந்து தீர்வுக்குரிய அணுகுமுறைகளை ஆலோசிக்க. | ஆசிரியர் – மாணவர் உறவில் ஏற்படும் எதிரிடைகளை ஆய்ந்து தீர்வுக்குரிய அணுகுமுறைகளை ஆலோசிக்க. |

| | | | |
|---|---|---|---|
| | | **8.** ஒரு நாட்டின் எழுச்சியைத் தீர்மானிக்கும் காரணி–கல்வி , கல்வியை திசைமாற்றம், வகைமாற்றம் செய்வதன் வாயிலாக நாட்டின் முன்னேற்றத்தை மாற்றியமைத்தல் எளிது. கல்வி நோக்கம், பாடப்பொருள் கற்பித்தல், அணுகுமுறை முதலியனவற்றைத் தக அமைப்பதன் வாயிலாக இந்தியாவை வருங்காலத்தில் விரும்பத்தக்க வகையில் மாற்றியமைக்க இயலும் என்பதைப் பாடப்பொருள் கொண்டு விளக்குக. | விவாதித்துக் குறிப்பெடுத்தல் ஒப்படைப்பு |
| | | **9.** இந்தியக் கல்விக் கொள்கையில் மேலோங்கி நிற்பது கருத்தியல் கொள்கையே, இயற்கையியல் கொள்கையே, உண்மைக் கோட்பாடே, பயனளவைக் கோட்பாடே – நிலை நாட்டுக. | கருத்தரங்கமுறை |
| | | **10.** “தற்போது நாம் மேற்கொண்டுள்ள கல்விமுறை இந்திய தேசியக் கல்வி நோக்கங்களை வென்றெடுக்க வல்லதாக உள்ளது/இல்லை”. | இரு பங்கேற்பு விவாதக் குழுக்களை நிறுவிக் கருத்தாண்டு நோக்கர் கருத்தைத் திரட்டித் தீர்வுகளைப் பெறுக. |
| | | **11.** இந்தியா எதிர்கொள்ள நேரும் அறைகூவல்களைப் புலப்படுத்தி இடைநிலை ஆசிரியர்கள் தம்மளவில் தகஅமைத்து, கல்வியால் அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை ஆலோசிக்க. | இடைநிலை ஆசிரியர்கள் தம்மளவில் கல்வியால் அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை ஆலோசிக்க கருத்துச் சேகரிப்பு–நபர்வாரி திரட்டல்முறை |
| | | **12.** “கல்விக் கொள்கைகளை ஆலோசிப்பதே அரசு; கல்வி நோக்கங்களை நிலைநாட்டுவோர் உண்மையில் ஆசிரியர்களே”. | ஊடன்பாட்டு / எதிர்மறை விவாதங்களைப் பரிமாறுக. வகுப்பறைச் செயல் |
| | | **13.** சுமார் 2000 ஆண்டு கால இந்தியக் கல்வியின் வளர்ச்சியை மேநோக்கி அறிந்து இந்தியக் கல்வியாளர்களுக்கு வழங்கும் திரள் கருத்துக்கள். | கல்வி வளர்ச்சியை மேநோக்கி அறிந்த தாங்கள் இந்தியக் கல்வியாளர்களுக்கு வழங்கும் திரள் கருத்துக்களைப் பட்டியலிடுக. |

| | | | |
|---|---|---|---|
| 2. | கல்வியின் நோக்கங்கள் | 1. கல்வியின் நோக்கம், சமூக நோக்கமே! தனிமனித நோக்கமே! பட்டிமன்றம் நடத்தி மேலோங்கும் கருத்துக்களை ஒப்படைப்பாகப் பதிவிக்க. | பட்டிமன்றம் நடத்தி மேலோங்கும் கருத்துக்களை ஒப்படைப்பாகப் பதிவிக்க. |
| | | 2. சுதந்திர இந்தியாவின் கல்வி நோக்கங்கள் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா ? கலந்துரையாடுக. | கலந்துரையாடல் செய்க. |
| | | 3. கல்வியின் நோக்கங்களாக இவ்வளநூலில் விவாதிக்கப்படாத பிற நோக்கங்களை அறிவியல் நோக்கம், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கம், உடல் வளர்ச்சி மற்றும் நடத்தை நோக்கம், ஆளுமை வளர்ச்சி நோக்கம் போன்றவைகளை உன் கல்வியாளரிடம் கேட்டும், நூலகங்களின் துணை கொண்டும் அறிக. | கூடுதல் வாசிப்புப் பயிற்சி நூலகங்களின் துணை கொண்டு அறிந்து குறிப்பில் வைக்க. |
| 3. | தொடக்கக் கல்வியின் நிலை | 1. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (NCF 2005) முழுவதையும் படித்து அதில் கூறியுள்ள தற்காலக் கல்விக் குறைபாடுகளையும் அவற்றைக் களைய அதன் புதிய உத்தி, ஆலோசனைகளையும் குறிப்பெடுத்து ஒப்படைப்பாக்குக. | ஆசிரிய மாணவர்கள் ஒப்படைப்பு தயாரிக்க. |
| 4. | அறிவுப் பொருளாதாரம் மனிதவள மேம்பாடு | 1. உடலுழைப்பால், உற்பத்தியால், படைப்பால் இயற்றப்படும் பொருள் செல்வத்தைக்காட்டிலும், மதி நுட்பத்தால், செயல் நுணுக்கத்தால், கல்வி அறிவாற்றலால் ஒருவர் பெரும் செல்வம் ஈட்டும்முறை அதிகரித்து வருவதை திறமை எனலாமா ? ஏய்ப்பு, சுரண்டல் எனலாமா ? – கருத்தரங்கம் நடத்திக் திரளும் கருத்துக்களைப் பதிவேட்டில் பதிக. | ஆசிரிய மாணவர்கள் கருத்தரங்கம் நடத்தித் திரளும் கருத்துக்களைப் பதிவேட்டில் பதிக. |

| | | | |
|---|---|---|---|
| | | **2.** "இந்தியர்கள் முதலில் தன்னம்பிக்கை கொள்ள வேண்டும். தான் ஓர் இந்தியனாக இருப்பதன் அருமையை ஒப்பிட்டு உணர வேண்டும். சாதிக்கப் பிறந்ததாக ஆர்வப்பட வேண்டும். பன்னாட்டரங்கில் பாரதம் எந்நாட்டிற்கும் சளைத்ததல்ல என்ற உறுதியுடன் வாழத் தன் கல்வியறிவால் தக்கன தேடிப் பயில்வதும் பயிற்றுவதும் செய்து வலுவூட்டிக் கொள்ள வேண்டும்". இந்நாட்டின் எதிர்கால ஆசிரியர் எனும் வகையில் இந்நோக்கில் தங்கள் செம்மாப்புப் புனைவுகளை இனங்கண்டு கருத்தோவியம் தீட்டுக. | கட்டுரை வரைக. |
| | | **3.** உலக–நாட்டின் அமைதிக்காக அகிம்சை வழியில் போராடிய தலைவர்களின் செயல்பாடுகளைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளைப் பட்டியலிடுக. | அகிம்சை வழியில் போராடிய தலைவர்களின் செயல்பாடுகளைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக. |
| | | **4.** வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொண்ட மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடி உங்கள் மன அமைதிக்குக் காரணமான கோட்பாடுகளைக் குறிப்பிடுக. | வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொண்ட மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடுக. |
| | | **5.** அமைதிக் கல்வியைப் பரப்பும் விதத்தில் சிறுசிறு கதைகளை மாணவர்க்கொன்றென புனைந்து எழுதி ஒப்படைப்பாக்குக. அமைதிக் கல்விக் கூறுகளையும், சிந்தனைகளையும், பொன்மொழிகளையும், பழமொழிகளையும், பாடல்களையும் சேகரித்து ஓர் ஒப்படைச் சிறுநூல் (Book-let) தயாரிக்க. | ஒப்படைச் சிறுநூல் (Book -let) தயாரிக்க. |

| | | | |
|---|---|---|---|
| 5. | கல்வி மேலாண்மையில் சமுதாயத்தின் ஈடுபாடு | **1.** மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ள ஒரு பள்ளியையும், மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள ஒரு பள்ளியையும் தேர்ந்தெடுத்து, அவற்றில் கிராமக் கல்விக் குழுக்களின் பணிகளை ஒப்பிட்டுக் கட்டுரை வரைக. | கிராமக் கல்விக் குழுக்களின் பணிகளை ஒப்பிட்டுக் கட்டுரை வரைக. |
| | | **2.** வெற்றிகரமான பள்ளிகள் சமுதாயத்தை இணைத்துக் கொண்டதாக இருக்கும். துவண்டுள்ள பள்ளிகள் சமுதாயத்தின் பங்கேற்பைப் பெற்றிராது. இக்கூற்றை நிறுவிடப் படிவமொன்று தயார் செய்து அதன் வழி பயிற்றுதல் பயிற்சிக்குச் செல்லும் பள்ளிகளிலிருந்து விவரங்கள் சேகரித்து நிறுவுக. | ஆசிரிய மாணவர்கள் பயிற்றுதல் பயிற்சிக்குச் செல்லும் பள்ளிகளிலிருந்து விவரங்கள் சேகரித்து நிறுவுதல். |
| | | **3.** உங்கள் கிராமம்/நகரத்தில் உள்ள பள்ளி கிராமக் கல்விக்குழு/பெற்றோர் ஆசிரியர் கழகத்தை அணுகி/அதன் செயற்பாடுகளை அறிந்து கொள். | செயற்பாடுகளை அறிந்து கொள்ளுதல். |
| | | **4.** கிராமக் கல்விக்குழு செவ்வையாகச் செயல்படத் தலைமையாசிரியர் ஓர் கிரியாவூக்கி என்பதை நிறுவுக. | பள்ளியாசிரியர்களின், தலைமையாசிரியர்களின் பங்குப் பணிகளைப் பட்டியலிட்டு, கிராமக் கல்விக்குழு செவ்வையாகச் செயல்படத் தலைமையாசிரியர் ஓர் கிரியாவூக்கி என்பதை நிறுவுக. |
| | | **5.** கிராமக் கல்விக்குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்கள் சிலவற்றில் கலந்து கொண்டு உடனிருந்து நடத்திப் பள்ளியின் அனுபவ அறிவைப் பெறுதல். | பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களில் கலந்து கொண்டு உடனிருந்து நடத்திப் பள்ளியின் வளர்ச்சிக்காக அவர்கள் செயல்களைக் கண்டறிந்து தொகுத்து எழுதுக. |

| | | | |
|---|---|---|---|
| **6.** | பண்பாட்டுப் பாரம்பரியம் | **1.** இந்தியப் பண்பாட்டில் காணப்படும் நேர்மறைக் கூறுகளை இனங்கண்டு பட்டியலிடுக. | ஆசிரிய மாணவர்கள் ஆக்கக் கூறுகளுக்கான காலக் கணிப்பையும், கொடையாளிகளையும் ஆதாரங்களையும், அடிப்படைகளையும் கண்டறிந்து குறிக்க. |
| | | **2.** இக்காலத் தமிழர்தம் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள சில முரணான கூறுகளைப் பட்டியலிடுக. நீவிர் எவ்வாறு அவற்றை நேர்ப்படுத்தலாம்–மாணவர் ஆசிரியர் உறவால் பண்பாடு அடையக்கூடிய விரும்பத்தக்க கொடைகளைத் தெரிவு செய்க. | ஆசிரியர்–மாணவர் உறவால் பண்பாடு அடையக்கூடிய விரும்பத்தக்க கொடைகளைத் தெரிவு செய்து செயல்பட முனைப்பு கொண்டு ஒப்படைப்பு ஒன்றைத் தயாரிக்க. |
| | | **3.** உயர்வையும், சிறப்பையும் ஒருக்காலும் தாழ்வுக்கும், இழிவுக்கும் பண்பாடுவிட்டுக் கொடுக்காது. இதனைக்காலம் காலமாய் நிலைநாட்டி வருபவர்களே ஆசிரியர்கள் ஒரு கருத்தரங்கின் வழி நிறுவுக. | கருத்தரங்கம் செய்க. |
| | | **4.** (i) Indian Heritage-Dr. S. இராதாகிருஷ்ணன் (ii) Discovery of India- பண்டித ஜவஹர்லால் நேரு நூல்களைப் படித்து அவர்கள் கூறியுள்ள கருத்துக்களைச் சேகரித்துக் கலந்துரையாடுக ஒப்படைப்புகளாக எழுதிப் பதிக. | கூடுதல் நூல் அறிவு Book-study Review ஒப்படைப்புகள் தயாரிக்க |
| | | **5.** புதுடெல்லி, சி.சி. ஆர்.டி பயிற்சியின் போது வழங்கியுள்ள நழுவங்கள் மற்றும் ஒலிநாடாக்களைப் பார்த்தும், கேட்டும் நம் பாரம்பரியங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க. | சி.சி.ஆர்.டி பயிற்சியின் போது வழங்கியுள்ள நழுவங்கள் மற்றும் ஒலிநாடாக்களைப் பார்த்தும், கேட்டும் நம் பாரம்பரியங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து ஒப்படைப்புத் தயாரிக்கச் செய்க. |

| | | | |
|---|---|---|---|
| 7. | மக்களாட்சி அமைப்பில் அரசியலும் கல்வியும் | **1.** நமது அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள், உரிமைகள், கல்விச் சமத்துவ வாய்ப்புகள் ஆகியவற்றைத் தேடி எடுத்து ஒரு ஒப்படைப்பாக எழுதி வகுப்பில் கருத்தேற்றம் செய்க. | கடமைகள், உரிமைகள், கல்விச் சமத்துவ வாய்ப்புகள், ஆகியவற்றைத் தேடி எடுத்து ஒரு ஒப்படைப்பாக எழுதி வகுப்பில் கருத்தேற்றம் செய்க. |
| | | **2.** குழந்தைகளின் உரிமைகளை ஆசிரியர்கள் சிறிதும் பிழைபடாமல் வழங்குகின்றனர்/ வழங்கவில்லை என்ற தலைப்பில் வகுப்பில் பட்டிமன்றம் நடத்திக் கருத்துகள் சேகரித்துப் அகமதிப்பீட்டுக்குள்ளாக்குக. | குழந்தைகளின் உரிமைகளை வழங்குகின்றனர் / வழங்கவில்லை என்ற தலைப்பில் வகுப்பில் பட்டிமன்றம் நடத்திக் கருத்துகள் சேகரித்தல். |
| | | **3.** பெண்ணுரிமை எனப்படுவது ஆண்களால் வழங்கப்படும் கொடை அன்று. அரசுகளால் வழங்கப்டும் சலுகையுமன்று. ஆணுக்கு உரிமையை எது வழங்கியுள்ளதோ அதுவே தான் பெண்ணுக்கும் உரிமையை வழங்கியுள்ளது. பெண்ணுக்கு உரிமையைப் பிறரே தர வேண்டும் என்பது சிந்தனைச் பிரழ்வு. மனித சுதந்திரம் அருளின் ஊற்று; கோரிப் பெறப்படும் சலுகை அன்று; பெண்ணுரிமை இயற்கையால் சாசனம் செய்யப்பட்டுள்ளது. கடமையுணர்வும், விழிப்புணர்வுமே உரிமையின் விலை உரிமை கடமை, விழிப்புணர்வுள்ள எவரின் உரிமையையும் எவரும் பறித்துவிடலாகாது– பெண்ணுரிமை இனப்பிரச்சனை –யன்று; தனி நபர் பிரச்சனையே. | தனிநபர் பிரச்சனையே இந்நோக்கில் தலா ஐந்து புதிய வாக்கியங்கள் எழுதிப் பதிவிக்க. |
| | | **4.** பின்வரும் கருத்துக்களை மாணவர் விருப்புக்கேற்ப வழங்கி ஒரு கருத்தரங்கம் நடத்திப் பெண்ணுரிமை நடைமுறைப்பாட்டு உந்தம் வழங்குக. “ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கு இயற்கை | |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கியுள்ள சிறப்பு அம்சங்கள்", பெண்ணுக்கு "உரிமையை ஆண்களா பெற்றுத் தர வேண்டும்" **?.** பெண், உரிமையை எப்பொழுது இழந்தாள் **?** இப்பொழுது பெறுவதற்கு **? ?** "பெண்ணுரிமை என்பது தான் என்ன **?**".<br>''ஆண், பெண் பாகுபாடுகளின் உயிரியல் அடிப்படை". "ஆணோ பெண்ணோ விழிப்புணர்வு தான் உரிமையின் விலை" "பெண்ணுரிமை, ஆணுரிமை என்பன தகுதிக்கே பரிசு" "பெண்ணுரிமையை நிலைநாட்ட பெண்கள் என்ன செய்ய வேண்டும்", "ஆண்கள் என்ன செய்ய வேண்டும்"<br>"பெண்ணுரிமை மறுப்பு மனித பலவீனம்". பெண் உரிமை தேனீ இனிப்பைப் பிறரிடம் கேட்டுப் பெற வேண்டுவதில்லை. | |
| | | **5.** அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் அரசு முயற்சியில் ஆசிரியர்கள் எவ்வாறெல்லாம் தம்மை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றிய பயிற்சி. | கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் அரசு முயற்சியினை ஆசிரியர்கள் எவ்வாறெல்லாம் ஈடுபடுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றியதோர் உறுதிமொழியுரையினை இருபக்க அளவில் தயாரிக்க. |
| **8.** | தொடக்கக் கல்வியின் சவால்கள் | **1.** மாணவர்களின் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திய மாணவர் இருவரைச் சந்தித்து இடைநிறுத்தத்திற்கான காரணங்களைக் கேட்டறிக. ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் அனைவரும் சேர்ந்து உங்கள் ஒன்றியத்தில் தொடக்கப்பள்ளி மாணவர்களின் ஆண், பெண் இடைநிறுத்த சதவீதம் அதற்கான காரணங்களைத் தொகுத்து அவை குறித்து வகுப்பறையில் கலந்து ஆலோசிக்கவும். | மாணவர்களின் பள்ளிப் படிப்பை ஆண், பெண் இடைநிறுத்த சதவீதம் அதற்கான காரணங்களைத் தொகுத்து அவை குறித்து வகுப்பறையில் கலந்து ஆலோசித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | **2.** உங்கள் மாவட்டத்தில் தொடக்கப்பள்ளிகளில் மாவட்டத்தில் மாணவர் சேர்க்கை, இடைநிறுத்தம், தக்கவைத்தல், தேக்கம், அடைவுத்திறன் சதவீதம் ஆகிய புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை உங்கள் மாவட்டத்தில் உள்ள பிற ஒன்றியங்களின் சதவீதங்களுடன் ஒப்பிட்டு, ஒன்றியங்களுடன் குறியீடுகளை மாவட்ட அளவில் தரமிடுக. | உங்கள் மாவட்டத்தில் தொடக்கப்பள்ளிகளில் உள்ள ஒன்றியங்களின் சதவீதங்களுடன் ஒப்பிட்டு, ஒன்றியங்களின் குறியீடுகளை மாவட்ட அளவில் தரமிடுதல். |
| | | **3.** உங்களூர் கிராம சமுதாயம் விரும்பும் கல்வி நல மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கிக் கல்வியைத் தாங்கள் விரும்பும் வண்ணம் ஆக்கிக் கொள்வதற்காகவே கிராமக் கல்விக்குழு செயல்பட வேண்டும். ஏதேனுமோர் கிராமக் கல்விக்குழுவை இந்நோக்கில் பார்வையிட்டு அறிக்கையைப் பதிவிக்க. | கிராமக் கல்விக்குழு செயல்பட வேண்டும். ஏதேனுமோர் கிராமக் கல்விக்குழுவைப் பார்வையிட்டு அறிக்கையைப் பதிவித்தல். |
| | | **4.** ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கருத்தரங்கம் பங்கேற்கும் வகையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவிக்க. | கருத்தரங்கம் நடத்திப் பதிவித்தல். |
| | | **5.** ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவித்தல். | அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவிக்க. |
| **9.** | பள்ளிக் கல்வி கட்டமைப்பு | **1.** அனைவருக்கும் கல்வி இயக்கம், வெற்றிகரமான இயக்கம்–இக்கூற்றின் வன்மை, மென்மைகளை இரு அணிகளாக அமைந்து ஆதாரங்களுடன் விவாதித்தல். | அனைவருக்கும் கல்வி இயக்கம் குறித்த இக்கூற்றின் வன்மை, மென்மைகளை இரு அணிகளாக அமைந்து ஆதாரங்களுடன் விவாதிக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| | | **2.** செயலாக்கக் கல்விமுறை (ALM) உயர்தொடக்க வகுப்புகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பர். **6, 7, 8** வகுப்புகளுக்கு நீவீர் கற்பித்தல் பயிற்சி பெறச் சென்றாலும், செல்லவில்லை ஆயினும் ஒரு கற்றல் தொழில்நுட்பம் என்கிற வகையில் மொழிப்பாடம், கணிதம், அறிவில், சமூகஅறிவியல் பாடங்களுக்கு இந்நுட்பத்தைப் பயன்படுத்த அறிதல். | ALM (வகுப்பறை) பயிற்றுமுறையை வகுப்பில் நடத்த அறிதல் |
| **10.** | தேசிய அக்கறைகளும் கல்வியும் | **1.** ஆசிரியர் சமயச் சார்ப்பற்றவராகத் திகழ வேண்டுமெனில் அவர் பள்ளியில் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகள் எவை என குழுவில் விவாதித்துப் பட்டியலிடுக. | ஒழுகலாறுகள் எவை என குழுவில் விவாதித்துப் பட்டியலிடுக. |
| | | **2.** பள்ளிகளில் தேச ஒற்றுமையை வளர்க்க வேண்டிய செயல்களைப் பட்டியலிடுதல். | தேச ஒற்றுமையை வளர்க்க வேண்டிய செயல்களைப் பட்டியலிடுக |
| | | **5.** ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவித்தல். | அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவிக்க. |
| | | **3.** பெண்களுக்கு எதிரான பாகுபாட்டினைக் களைய அகில உலக மனித உரிமைகள் மாநாட்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின் இதர பிரிவுகளைப் பற்றி குழுவில் கலந்துரையாடுதல். | மனித உரிமைகள் பற்றி கலந்துரையாடல் செய்க. |
| | | **4.** உங்கள் நிறுவனத்தில் உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாடி அதில் ஆசிரிய மாணவர்கள், உரைகள், கவிதைகள், கதைகள் எழுதி வாசிக்குமாறு செய்க. | உங்கள் நிறுவனத்தில் உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாடிக் கட்டுரை ஒன்றை வாசிக்க. |

| | | | |
|---|---|---|---|
| 11. | ஆசிரியர் கல்விக் கட்டமைப்பு | 1. ஆசிரியர் முன் மாதிரியாகத் திகழ்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை கலந்துரையாடிப் பட்டியலிடுதல். | கலந்துரையாடல் செய்து பட்டியலிடுக. |
| | | 2. மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் ஏழு துறைகளைப் படப் பிரதியீடு செய்து அவற்றின் பணிகளைப் பட்டியலிட்டுக்காட்டுதல். | ஏழு துறைகளைப் படப் பிரதியீடு செய்து அவற்றின் பணிகளைப் பட்டியலிட்டுக்காட்டுக. |
| | | 3. வட்டார வளமையத்திற்குச் சென்று அவற்றில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்களின் செயல்பாடுகளைத் தொகுத்து எழுதுதல். | வட்டார வளமைய ஆசிரியர்களின் செயல்பாடுகளைத் தொகுத்து எழுதுக. |
| 12. | பள்ளி மேலாண்மை | 1. 1. உதவித் தொடக்கக் கல்வி அலுவலரின் பல்வேறு பணிகளைப் அறிதல்.<br>பள்ளிகள் எப்படித் தோன்றின ?<br>2. அவற்றின் தோற்றத்தைக் கனவு கண்டவர்கள் யாவர் ?<br>பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் உள்ள அடர் உறவை அறிதல்.<br>3. அப்பள்ளிக்கு விண்ணப்பித்தோர் யாவர் ?<br>4. ஏன் விண்ணப்பித்தனர் ?<br>5. பள்ளிக்குக் கிராமம் வழங்கிய கொடைகள் யாவை ?<br>6. புரவலர்கள் எத்தனை பேர் ?<br>7. பள்ளி விழாக்களின் செலவை ஏற்றுக் கொள்வோர் யாவர் ?<br>8. பள்ளி சரிவர செயல்படவில்லையெனில் சீரழிந்தால் பாதிக்கப்படுவோர் யாவர் ?<br>9. இப்பள்ளியில் படித்து முன்னேறியோர்–வெளியேறியோர் இது வரை மொத்தம் எத்தனை பேர் ? என்பனவறைக் கேட்டறிந்து குறித்து–பள்ளி யாருக்குச் சொந்தம் ? ஆசிரியர் ஊர்ச்சமுதாயத்தை எவ்வாறு அணுக வேண்டும். இப்பொழுது நாம் அணுகி வரும் முறை சரிதானா ? என்பனவற்றிற்கு விடை காண்க. | ஒழுகலாறுகள் எவை என குழுவில் விவாதித்துப் பட்டியலிடுக. |

| | | | |
|---|---|---|---|
| | | 2. தலைமையாசிரியர் தன்னுடைய பள்ளியில் பராமரித்து வரும் ஆவணங்களைப் பட்டியலிட்டு ஒப்படைப்பாக்குக. | ஒப்படைப்பு ஒன்றைத் தயார் செய்க. |
| | | 3. தலைமை ஆசிரியர் ஓர் ஆசிரியர்; ஓர் நிர்வாகி, ஓர் பண்பாளர், என்ற மூன்று நிலைகளிலும்அவரிடம் அமைந்திருக்க வேண்டிய நலக்கூறுகளைப் பட்டியலிட்டுப் பதிக. | தலைமை ஆசிரியர் ஓர் ஆசிரியர்; ஓர் நிர்வாகி, ஓர் பண்பாளர், என்ற மூன்று நிலைகளிலும்அவரிடம் அமைந்திருக்க வேண்டிய நலக்கூறுகளைப் பட்டியலிட்டுப் பதிக. |
| | | 4. தலைமையாசிரியர்<br>1. தலைமைப்பண்பு உடையவர் (Leader)<br>2. திட்டமிடுபவர் மேலாளர் (Planner & Manager)<br>3. கண்காணிப்பாளர், மதிப்பீட்டாளர் (Monitor & Evaluator)<br>4. நேர்மறை மனப்பாங்கை உருவாக்குபவர் (Developer of Positive outlooks)<br>5. ஒருங்கிணைப்பாளர் (Co-ordinator)<br>6. மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relations Officer)<br>7. நன்னெறிக் கல்வியாளர் (Value Educator)<br>8. வழிகாட்டி நெறிப்படுத்துபவர் (Guide & Counsellor)<br>9. வளங்களைச் சேகரித்து பயன்படுத்துபவர் (Resource Builder Economic User) என்ற 9 முகப்புக்களில் ஆற்ற வேண்டிய பணிகளை, கடமைகளை விவாதித்து பட்டியலிடுக. | தலைமையாசிரியர் 9 முகப்புகளில் ஆற்ற வேண்டிய பணிகளை/ கடமைகளை விவாதித்துப் பட்டியலிடுதல். |
| | | 5. ஆசிரியரின் கடமைகளைப் பட்டியலிடுக. ஆவற்றை நிறைவேற்ற ஆசிரியர்களிடம் அமைய வேண்டிய நலன்களைப் பட்டியலிட்டுப் பொறுத்துக. | ஆசிரியரின் கடமைகள் மற்றும் நலன்களைப் பட்டியலிடுக. |

| | | | |
|---|---|---|---|
| | | **6.** யார் நல்ல ஆசிரியர் ? ஒரு நல்ல ஆசிரியரின் அடையாளங்கள் யாவை ? ஆசிரியர்களை மிக நல்லவர்களாக்கும் பண்புக் கூறுகள் யாவை ? என்பன பற்றிக் கருத்தரங்கம் நிகழ்த்தி மேலோங்கும் கருத்துக்களை வரைந்துவை. | ஆசிரியரின் அடையாளம், பண்புக் கூறுகள் என்பன பற்றிக் கருத்தரங்கம் நிகழ்த்தி மேலோங்கும் கருத்துக்களை வரைக. |
| | | **7.** மேற்கண்ட அமைப்புகளுடன், பள்ளி கொண்டுள்ள தொடர்பை நீ வாழும் சமுதாயத்தில் இயங்கும் பள்ளியோடு தொடர்புபடுத்தி, ஒவ்வொன்றினுடைய பணியையும் பள்ளியின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு எழுதுக. | சமுதாயத்தில் இயங்கும் பள்ளியோடு தொடர்புபடுத்தி, ஒவ்வொன்றினுடைய பணியையும் பள்ளியின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு எழுதுக. |

# அலகுவாரி செய்முறைப் பயிற்சிகள்

| அலகு | | |
|---|---|---|
| 1 | – | 13 |
| 2 | – | 3 |
| 3 | – | 1 |
| 4 | – | 5 |
| 5 | – | 5 |
| 6 | – | 5 |
| 7 | – | 4 |
| 8 | – | 4 |
| 9 | – | 2 |
| 10 | – | 4 |
| 11 | – | 3 |
| 12 | – | 7 |
| **மொத்தம்** | – | 56 |

செயல்களின் விரிவு தன்மைக்கேற்ப இவற்றை அனைத்து மாணவர்களிடமும் வெவ்வேறான செயல்முறைகள் வருமாறு ஆண்டாரம்பத்திலேயே பிரித்தளித்து ஆண்டு நெடுகிலும் இயல்பாகச் செய்து மேம்படும் கருத்துக்களை வகுப்பில் பகிர்ந்து கொள்ளுமாறு செய்து – நேர்த்தி, சிறப்பு – அருமை கருதி மதிப்பெண் வழங்குக.

# பொருளடக்கம்


| வ. எண் | அலகுகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியக் கல்வி–ஒரு வரலாற்று மேநோக்கு | 1 |
| 2. | கல்வியின் நோக்கங்கள் | 46 |
| 3. | தொடக்கக் கல்வியின் நிலை | 59 |
| 4. | அறிவுப் பொருளாதாரம் – மனிதவள மேம்பாடு | 69 |
| 5. | கல்வி மேலாண்மையில் சமுதாயத்தின் ஈடுபாடு | 85 |
| 6. | பண்பாட்டுப் பாரம்பரியம் | 99 |
| 7. | மக்களாட்சி அமைப்பில் அரசியலும், கல்வியும் | 108 |
| 8. | தொடக்கக் கல்வியின் சவால்கள் | 121 |
| 9. | பள்ளிக் கல்வி – கட்டமைப்பு | 145 |
| 10. | தேசிய அக்கறைகளும், கல்வியும் | 158 |
| 11. | ஆசிரியர் கல்விக் கட்டமைப்பு | 179 |
| 12. | பள்ளி மேலாண்மை | 193 |
| | **இணைப்பு** | |
| | வினாத்தாள் வரைவு – I | 215 |
| | வினாத்தாள் வரைவு – II | 216 |
| | மாதிரி வினாத்தாள்-I | 217 |
| | மாதிரி வினாத்தாள்-II | 219 |
| | மேற்கோள் நூல்கள் | 221 |
| | அகமதிப்பீட்டுத் தேர்வு மதிப்பெண்கள் | 223 |

# அலகு–1
# இந்தியக் கல்வி–ஒரு வரலாற்று மேநோக்கு

## 1.1.1. அறிமுகம்

"நூறுகோடி நூல்கள் செய்து நூறு தேய வாணர்கள்
தேறும் உண்மை கொள்ள இங்கு தேடி வந்த நாளினும்
மாறு கொண்டு கல்வி தேய வன்மை தீர்ந்த நாளினும்
ஈறு நிற்கும் உண்மையொன்று இறைஞ்சி நிற்பள் வாழ்கவே!"

என பாரத அன்னைக்கு வாழ்த்துரைப்பார் மகாகவி பாரதியார்.

"பாருக்குள்ளே நல்ல நாடு–எங்கள் பாரதநாடு"–என்று இந்திய நாட்டினர் அனைவரும் பெருமிதம் கொள்ளும் வகையில், இந்தியா, பாரம்பரியச் சிறப்புகள் பல மண்டிக்கிடக்கும் மாண்புக்குரிய திருநாடு ஆகும். குடிமக்கள் அனைவரும் இந்தியர்களாக இருப்பது குறித்து செம்மாப்பு கொள்வதில் மிகையொன்றுமில்லை. சொல்லி மாளாத பழமைக்கும் சொல்லில் அடங்காத இடையறாப் பன்னெடுங்காலத் தொன்மைச் சிறப்புக்குமுரிய புண்ணிய பூமி, இது.

உலகில் மனித இனம் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம், நேயம், அன்பு, அருள், அறம், ஆன்மீகம், இறைநிலை எனப் பல மேலான அறிவு நுட்ப திட்பங்களை ஆய்ந்தறிந்து, இதமாக, இனிதாக இருந்து, இணங்கி வாழ்ந்து வருகிறது இந்நாடு. மனிதகுலம் கண்ட அனைத்துச் சிறப்புகளும் நம் இந்தியத் திருநாட்டில் உள்ளது போலவே ஒப்பாகவும், இணையாகவும், விஞ்சுதலாகவும் எல்லா நாடுகளிலும் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. இந்தியர்களைத் தவிர இவ்வுலகின் வேறெந்த நாட்டவரும், சொல்லவியலாத அருமைச் சிறப்புகள் ஆயிரங்கொண்டது நமதருமை பாரத நாடு.

"பாரத நாடு பழம் பெரும் நாடு
பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்
நீர் அதன் புதல்வர்! இந்நினைவகற்றாதீர்"

என்றார் தேசியகவி பாரதி, பிறிதொருகால்.

இந்திய நாடு இயற்கை நலம் மிக்க இன்னரும் வீடு. உயிர் வாழ்விற்கேற்ற தட்பவெப்ப நிலையும் இங்கு நிலவுகின்றது. இங்கு பல வகையான பெரிய, சிறிய, அரிய தாவரங்களும் கால்நடைகளும், பறவைகளும், விதவிதமான உயிரினங்களும் பல்கிப் பெருகி வளர ஏற்ற இயற்கைக் கூறுகள் அமைந்துள்ளன. இதனால் நம்நாடு உயிரினப் பன்மையம் (bio-diversity) நிலவும் இயற்கை வளம் மிக்க செழிப்பான நாடாகத் திகழ்கிறது. விலை மதிப்பு மிக்க பொன்னும், மணியும் கனிமப் பொருட்களும் இங்கு அதிகம். இன்சுவை காய், கனி, கிழங்கு வகைகளும், நுண்ணூட்டம் மிக்க பயறு வகைகளும், வாசனைத் திரவியங்களும், உணவில் சுவையும், மணமும் கூட்டும் எண்ணெய் வித்துக்களும், பற்றாக்குறையைப் போக்கி ஊட்டமளிக்கும் பல்வேறு உணவு வகைகளும், நோயும் பிணியும் நீக்கும் மூலிகை வகைகளும், உண்ண ஏற்ற உலர் கனிகளும் எனப் பட்டியலிட முடியாத பற்பல விளைபொருட்கள் தாவரப் பன்மையத்தின் பண்டக் கொடைகளை எடுத்துரைக்கும்.

கோடி வளங்கள் மிக்க இந்நாட்டைத் தேடி நாடி வந்த பயணிகள், வணிகர்கள், கலைஞர்கள்தாம் எத்தனை பேர்? வற்றிய பகுதிகளினின்றும் வந்து வாரிச் சென்ற கொள்ளையர்கள், பிரித்தாண்ட வஞ்சக நெஞ்சர் எத்தனை பேர்? இனம், மதம், பண்பாட்டுப் பன்மையை விளங்கிக் கொள்ள இயலாது, எதற்கோ வந்து ஏதேதோ செய்து வஞ்சித்த நரியர்கள்

மேற்கொண்ட படையெடுப்புகளும், ஆக்கிரமிப்புகளும், அபகரிப்புகளும் தான் எத்தனை ? இந்த வளமான வண்ணக் களஞ்சியத்தின் வளங்கள், பல தடவை பலவீனமாக்கப்பட்டதுண்டு.

எல்லா நிலைகளிலும் நீதியைத் தள்ளாத நிலை, உயர்விலே உறுதி, உண்மையில் நாட்டம், தேடலில் தெளிவு, அருளாளும் நெஞ்சம், வன்மையிலும் மனிதத்தன்மை, வளத்தில் வள்ளன்மை, போர்க்களத்திலும் நெறிகள், உயிர்வதைக்கு அஞ்சும் கொல்லா நெறி, பகைவர் மாட்டும் பண்பு நெறி, உயிர்களிடத்தில் அன்பு, கூர்ந்த மதிநலம், அறிவுக் கவர்ச்சி என்பன ஒருவாறு இந்தியப் பழங்காலக் கல்வியை விவரிக்கும்.

## 1.1.2. நில இயலின் அமைப்பு

இந்தியாவின் கல்வி, கலை, பண்பாடு, பாரம்பரியம், வரலாறு ஆகியன இடையறாத தொடர்ச்சியுள்ளவை. இதனையே

''தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்''

என்று மகாகவி பாரதியாரும் பாடினார்.

இவ்வுலகின் நில நீர்த் தோற்றங்கள், ஒரே மாதிரியாக நிரந்தரமாய் இருப்பவை அல்ல. கண்ணுக்குத் தெரியாமல் பூமியின் மேற்பரப்புக்கு அடியில் ஏற்படும் சலனங்களும் அசைவுகளும், பெயர்வுகளுமே இது போன்ற நிலம், நீர்ப்பரப்புத் தோற்ற மாற்றங்களுக்குக் காரணம் என்று கூறிடுவர் புவியியலார்.

பேரழிவையும் உயிர்ச் சேதத்தையும் உண்டாக்கும் இடர்களை நில அதிர்ச்சி, எரிமலை, இயற்கைச் சீற்றம், கடல்கோள், பேராழி அலைகள், புவிவெப்பம், என்றெல்லாம் கூறுகின்றோம். இந்நிகழ்ச்சிகளால் கடலுக்குள் மறைந்து கிடக்கும் நிலப்பகுதி மேலே தோன்றுவதும், கடல் மட்டத்துக்கு மேலே இருக்கும் நில அமைப்புகள் கடலுக்குள் அமிழ்வதும், கரையோரப் பகுதிகள் கடலுக்குள் மறைவதுமாகிய பேரூழிக்கால மாற்றங்கள் சில காலங்களில் நிகழ்ந்துள்ளன.று இது போன்ற பெரு மாற்றங்களை வரலாற்றில் 'பிரளயம்' என்ற குறிப்பிடுவர். பிரளயத்தால் பூமியின் பெருங்கடல், கண்டங்களின் அமைவுகள் இடமாற்றமும் நிலை மாற்றமும் அடைகின்றன.

தற்போதுள்ள உலக நிலப்படமும்கூட இதற்கு முன்பு, மூன்று முறை மாறி அமைவுற்றதெனத் தொன்மை வரலாறு கூறுகிறது. பிரளயங்களால் பாதிக்கப்படுவதால் புவி மீது தோன்றும் பண்பாடுகள் தொடர்ந்து நிலைபெறாமல் இடையற்றுப் போவதுமுண்டு. அவ்வாறு பிரளய காலப் பெருமாற்றங்களால் ஓரளவே பாதிக்கப்பட்டு, சிறுசிறு மாற்றங்களுடன் இடையறாது, தொடர்ந்து நிலைபேறுடன் வழங்கி வருவது நம் இந்திய உபகண்டமாகும். எனவே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இருந்ததாக வரலாறு கூறும் லெமூரியா கண்டத்தின் பண்பாடு இடையிட்டதாக, அதற்கு முன்பும் பின்பும் இன்றளவிலும் தொடர்ந்து நிலவி வரும் மனித நல வாழ்வியல் நுட்பங்கள், கலை, கல்வி, பண்பாடு முதலிய கூறுகள்தோய்ந்த கல்விப் பின்புலத்தையும், மிகப் புராதனமான பாரம்பரியச் சிறப்புள்ள கல்வி வரலாற்றையும் உடையது பாரதம்.

கட்டுரைக்கவும் இயலாத பன்னெடுங்காலப் பழமைக்குரிய இந்திய நாட்டின் கல்வி வரலாற்றுப் பின்னணி பல்வேறு கால கட்டங்களில் பன்முக வளர்ச்சியும், கிளைப்பும், தளிர்ப்பும் கொண்டதாக விளங்குகிறது.

## 1.2. கல்வி என்னும் கருத்துக்கோடல்—பொருண்மை ஆய்வு

### 'கல்வி'- சொல்லாய்வு

கல்வி என்பது ஒரு பழந்தமிழ்ச்சொல். அதில் 'கல்' என்பது பகுதி. பகுபத இலக்கணப்படி பகுதி தனித்து நின்று பொருள் தரும். கல் என்பது ஒரு வினைச்சொல் அன்றியும் பெயர்ச்சொல்லும் ஆகும். கல் என்னும் தன்வினை சொல் மற்றும் செய்வினைச் சொல் வெளிப்பாடு, வியாபகம், கமழ்வு, கற்றுக்கொள், வெளிப்படக்காண் என்றெல்லாம் பொருள்படும். எனவே கல்லுதல் எனும் வினைச்சொல் அகழ்தல், தோண்டுதல், துருவுதல், அரித்தல், தோன்றவிடுதல், வெளிக்கொணர்தல், மலரக்காணல், ஒலித்தல் என்றெல்லாம் பொருள்படக் கூடிய பலபொருள் ஒரு சொல்.

அன்றியும் 'கல்' என்பது ஒரு பெயர்ச்சொல்லும் கூட என அறிந்தோம். அணுக்கள் அல்லது துகள்கள், மூலக்கூறுகள் மண்டித்திணிந்து, பொதிந்து, அடர்ந்து, செறிந்து, ஒடுங்கிக் கிடக்கும் நிலையைக் 'கல்', 'கல்லகம்', மலை எனக் குறித்துள்ளனர். 'கல்' என்பது வெட்டி எடுக்கப்பட்டது, எனப் பெயர்ச்சொல் ஆதலும் கூடும். ஆதலினாற்றான் எல்லாக் கற்றலும் நிகழும் களமான மனத்தைக் 'கல்பு' என்றனர் போலும்.

மனத்தின் ஆற்றலைக் கற்பு என்றும், அதன் வியாபகத்தை கற்பனை, கற்பனா என்றும் அவ்வயப்பட்டவரைக் கற்போன், கற்றார், கற்பார் என வினையாலணையும் பெயரால் ஆன்றோர் குறித்தனர். எனவே 'கல்' என்பது ஏவல் வினைமுற்று. கற்றல் என்பது 'அல்' விகுதி பெற்ற தொழிற்பெயர். கல் என்பது பெயர்ச்சொல். கற்போர், கற்பவன், கற்றவர் என்பன வினையாலணையும் பெயர். இவ்விலக்கணக் குறிப்புகள் இச்சொல்லை மேலும் தெளிவாக ஆழமான பொருள் கொண்டு புரிந்து கொள்ள உதவும்.

## 1.3. கல்வியும், கேள்வியும்—கருத்தாய்வு

கல்வி, கேள்வி என்பன மிக நெருங்கிய தொடர்பும் பொருளுமுடைய இரட்டைச் சொற்கள். கல்வி என்பது ஓர் உயிரினுள் குடிகொண்டமைந்திலங்கும் பரிபூரண ஆற்றலின் வெளிப்பாடு, மலர்ச்சி; அதற்கான முயற்சி ஆகும்.

கேள்வி என்பதன் வேர்ச்சொல் 'கேள்' ஆகும். கேள் என்பது கிளைத்தல், உறவு, நட்பு, பரவல் என்றெல்லாம் பொருள்படுகிறது. செவிப்புலன் வழியே கேட்பதால் பெறும் கேள்வி அறிவு என்று பொருள்படும். கேள்வி என்பது பல்லுயிரும் தாம் தம் அறிவை மலர்த்தி வழங்கிச் சென்றுள்ள விவர, ஞான, நுட்ப திட்பங்களை தன்னுள் வாங்கும் முயற்சி எனலாம்.

சுருங்கச் சொன்னால் 'கல்வி' எனப்படும் முன்னது, உள்ளே உள்ளதை வெளிக் கொணர்ந்து மலர்த்தி வடிகாலாக்குவது. 'கேள்வி' எனப்படும் பின்னது, வெளியே உள்ளனவற்றை முயன்று கேள்வி—செவி வழி உள்வாங்கி தனது முன்னறிவோடு இணைப்பது. அதாவது முன்னது மலர்த்துவது: பின்னது திரட்டுவது. எவ்வாறாயினும் உள்ளே உள்ளதை மலர்த்துவதும், வெளியே உள்ளதைத் திரட்டுவதும் என இரண்டுமே கல்வியின் அடிப்படைச் செயல்களேயாகும்.

கல்வி என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் 'எஜூகேஷன்' (Education) என்பதாகும். இதன் மூலச் சொல் இலத்தீன் மொழியிலுள்ள எஜுகேர் (Educare) என்பதாகும். அதன் பொருள் வளர்ப்பது (to bring up) என்பதாகும். கல்வி என்பதற்கு வளர்ப்பது (அ) வெளிக் கொணர்வது என்னும் பொருள் புலப்படுகிறது. வான்புகழ்வள்ளுவர் "கண்ணென்ப வாழும் உயிர்க்கு" "கேடில் விழுச் செல்வம்" "எழுமையும் ஏமாப்புடைத்து" "கற்றனைத்தூறும் அறிவு" "அற்றம் காக்கும் கருவி" என்றெல்லாம் கல்வியை விவரித்துள்ளார்.

## 1.4. கல்வியின் பெருமை

கல்வி என்பது குறித்த விளக்கங்களும், விவரங்களும் பலப்பல. கல்வி என்றால் என்ன என்பது எல்லாருக்கும் புரியவே செய்கிறது என்றாலும், எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வரையறையாக, இது தான் அது எனச் சுருக்கமாகக் கூறுவது எளிதல்ல.

எது கல்வி ? என்ற கேள்விக்கான பதிலும் வரையறையும், தத்துவங்களும், நோக்கங்களும் காலம், இடம், சூழலுக்கேற்ப இடத்திற்கு இடம், சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம், நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம், தனிமனிதருக்குத் தனிமனிதர் மாறுபடும் தன்மை கொண்டது. எனினும் எல்லாக் கால கட்டத்திலும், அனைவராலும் கல்வியின் முக்கியத்துவமும், அருமை பெருமைகளும் உணரப்பட்டு, உன்னதமானதோர் இடம் கல்விக்கு அளிக்கப்பட்டு உள்ளமையை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

கல்வி என்ற கருத்து பல்வேறு சூழல்களில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. கல்வி எனும் சொல் வாழ்வியல் நோக்கில் மிகப் பரவலாகப் பொருள்படும். நம் முன்னோர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த தகவல்கள், பட்டறிவு, செய்திறன்கள், செய்முறைகள், சாதக, பாதகக் கூறுகள் முதலியவற்றைப் பயிலவரும் மாணவர்களுக்கு அளிக்கும் முயற்சியே கல்வி. இதனை 'முறையான கல்வி' (Formal Education) என்றும் கூறுவர்.

## 1.5. கல்வி வரையறைகள்

- முக்தி / இறைநிலை எய்துவதற்கு வழிநடத்திச் செல்வதே கல்வி.

  – ஆதி சங்கரர்

- ஞான ஒளியையும், ஜீவ ஆற்றலையும் மனிதனிடம் பெருக்கி, அதனால் அவனது உடல், மனம், அறிவு, ஆன்மா ஆகியவற்றின் பன்முக வலிமையை, ஒத்திசைவான விருத்தியும் நிலை மாற்றமும், கண்ணியமும் அடையச் செய்யும் வழிமுறையே கல்வி.

  – ஏ.எஸ். அல்டேகர்

- ஆன்ம பலம் அடையச் செய்வதே கல்வியின் இறுதியான உள்ளுறை நோக்கமாகும்.
- மனிதனுக்குள் இயற்கையாகவே அமைந்துள்ள பரிபூரண வல்லாற்றல் மலரப் பெறுதலே கல்வி.

  – சுவாமி விவேகானந்தர்

- குழந்தையினுள் உறைகின்ற மிக உன்னதமான, மிக வலிமையான, அதி முக்கியமான, இயற்கையான அனைத்து ஆற்றல்களையும் செய்திறன்களையும், வெளிப்படச் செய்து வளர்த்து மனிதனின் முழுமையான வார்ப்பச்சாகச் செயல்படும் முதன்மையே கல்வி எனப்படுகிறது.

  – ஸ்ரீ அரவிந்தர்

- சூழ்நிலையோடு பொருத்தப்பாட்டை அடைய ஒருவர் பெறும் பயிற்சியே கல்வி.

  – ஜான் டூயி

- குழந்தைகளின் (மனிதர்களின்) உடல், மனம், ஆன்மா இம்மூன்றையும் ஒருங்கிணைத்து திரண்ட வளர்ச்சி அடையச் செய்வதே கல்வி.

  – மகாத்மா காந்தி

- ஒருவரைத் தற்சார்புடையவராகவும், சுயநலம் இல்லாப் பொதுநல நோக்குடையராகவும் ஆக்குவதே கல்வி.

  – ரிக்வேதம்

- தன்னை உணர்வதும், மக்கள் தொண்டாற்றத் தூண்டுவதுமே கல்வி.

– குருநானக்

- இயற்கையோடிருந்து அதனை உற்றுநோக்கி இயற்கையைச் சரியாகப் புரிந்து கொண்டு, இயற்கையோடு இயைந்து, இயற்கை தரும் பாடங்களைப் பின்பற்றி நடப்பதே கல்வி.

– ரூசோ

- குழந்தைகளின் உள்ளார்ந்த திறனின் ஒட்டு மொத்த வளர்ச்சியே கல்வி; அதனை வெளிக்கொணரும் வகையில் தூண்டுவதும் முயலுவதுமே கல்வி.

– ஃபிரோபெல்

- இளைய தலைமுறையை முறைப்படுத்தப்பட்ட வழியில் சமூக மயமாக்குதலே கல்வி.

– சமூகவியலார்

- ஒரு நிறைவான வாழ்க்கைக்கு நம்மைத் தயாரிப்பதே கல்வியின் தலையாய பணியாகும்.

– ஹெர்பர்ட் ஸ்பென்சர்

- அனுபவங்களை தொடர்ச்சியாக புனரமைப்பு செய்வதும் மறு ஒத்திசைவு செய்வதுமே கல்வி.
- கற்போரின் உள்ளார்ந்த ஆற்றல்களையும், திறமைகளையும் மேன்மேலும் விருத்தி அடையச் செய்வதே கல்வி.

– ஜான்டூயி

- மனிதர்களை ஆக்கத்திறன் மிக்கவர்களாகவும், தாம் வாழும் சமுதாயத்தை ஆக்கபூர்வமானதாகவும் ஆக்க வழிகோலுவதே கல்வி.

– பெர்ட்ரண்டு ரஸ்ஸல்

- தனிமனிதனுக்கு உன்னதமான நடத்தையைக் கொடுத்து அவனை உலக நல்வாழ்வுக்கு சமர்ப்பணமாக்குவதே கல்வி.

– யஜ்னவால்கியர்

## 1.6. பண்டைய இந்தியாவில் கல்வி

நம் பாரத நாட்டில் வழங்கும் மொழிகளில் ‘க’ கர வரிசை, ‘ஞ’ கர வரிசை, ‘வ’ கர வரிசை ஒலி, வரி வடிவ எழுத்துக்கள் தோன்றி முறையே கல், கல்வி, கலை, தத்துவம், ஞானம், ஞாபகம், வரி, வல்லமை, விஞ்ஞானம், வித்யா, வித்தகம், வித்தை முதலிய சொற்கள் தோன்றி, புழங்கிய நாள் முதற்கொண்டு கல்வியின் தோற்றமும் விருத்தியும் இடம் பெற்றுள்ளமை சொல்லியல் ஆய்வால் புலப்படுகின்றது. இவ்வொலி, வரி வடிவங்களும் சொற்களும் உலகின் தொன்மை மொழி எவற்றிற்கும் குறையாததும் விஞ்சி நிற்பதுமான நெடும் பழமைக்குரியவை.

**செயல்**

பண்டைய இந்தியாவில் நிலவிய கல்வியின் கூறுகள் பற்றிய கால முறையிலான மனவரைபடம் வரைக.

### 1.6.1. தொல்பழங்கால இந்தியாவில் கல்வி

இந்திய நாடு பழமைச் சிறப்புமிக்க நாடாகும். உலகில் ஆதிமனிதன் தோன்றி வளர்ந்து, வேட்டையாடி, நாடோடியாய்த் திரிந்து, கற்கருவிகளுடன் வாழ்ந்த காலம் முதலே மனித இனத்தின் தொல்பழங்காலத் தொடர்ச்சி, இந்தியாவில் காணப்படுகிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் மனிதன் நீர்வளமும், நிலவளமும் மிக்க நதிக்கரையில் தங்கி விலங்குகளைப் பழக்கி பயிர்த்தொழில் செய்ததற்கான சுவடுகளும் காணப்படுகின்றன. அக்காலங்களில் அவன் உணவுக்கு அலைந்து

விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொண்டும், உழவுத்தொழில் செய்தும், நதிக்கரையில் சற்று ஓய்வைக் கண்டிருக்கிறான்.

தனது ஓய்வை தொல்பழங்கால மனிதன் ஆடியும் பாடியும் பானகம் அருந்தியும் களிப்புடன் ஏனையோரோடு கழித்திருக்கிறான். அவ்வாழ்வை அவன் தங்கியிருந்த குகைகளில் வண்ணச் சித்திரமாகவும், வரைந்து விட்டுச் சென்றிருக்கிறான். அத்தகு குகைச் சித்திரம் இந்தியாவில் பராபர் குன்றுகளில் காணப்படுகிறது. அதில் ஆணும், பெண்ணும், ஆபரணங்கள் அணிந்து இசைக்கருவிகளுடன் நாட்டியம் ஆடி மகிழ்ந்த நிலை சித்திரிக்கப்பட்டுள்ளது. சுமார் இருபத்தைந்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதப்படும் இக்காலம் முதலே நம் நாட்டில் ஆடல், பாடல், கருவியிசை, ஓவியம் வரைதல், வண்ணக்குழம்பு தயாரித்தல், ஆபரணங்கள் செய்தல், ஆடைநெய்தல், உடை தயாரித்தல் முதலிய கலைகளின் தொன்மை வடிவங்களும், மொழிவழக்கும், இசைக் குறிப்புகளும் காணப்படுகின்றன. அவனது மொழி, எழுத்து வழக்கு முதலியன நமக்குக் கிடைக்க வில்லையாயினும் அவ்வோவியங்களைக் கொண்டு அக்காலக் கல்வி, கலை, கைவினை நுட்பம் முதலியவற்றை நாம் உணர முடிகிறது.

### 1.6.2. சிந்துசமவெளி நாகரிக காலக் கல்வி (கி.மு. 3250–2750)

இந்தியாவில் சிந்து நதிக்கரையில் தழைத்தோங்கிய மொகஞ்சதாரோ, ஹரப்பா நகர நாகரிகங்கள் உலகின் மிகப்பழைய நாகரிகங்களுள் தலை சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. யூப்ரடீஸ், டைகிரிஸ் நதிகள் பாரசீக வளைகுடாக்கடலில் கலக்குமிடத்தில், சுமேரியா எனப்பட்ட பகுதியில் சுமேரிய நாகரிகம் அமைந்திருந்தது. நைல் நதிக்கரையில் அமைந்திருந்த எகிப்திய நாகரிகம், மஞ்சள் நதி தீரத்தில் காணப்பட்ட சீன நாகரிகம் ஆகியவைகள் அகழ்வாராய்ச்சியின் பயனாகக் கண்டெடுக்கப்பட்ட உலகின் பழங்கால நாகரிகங்களாகும்.

இவற்றுள் சுமேரிய நாகரிகத்திற்கும் இந்தியாவில் தோன்றிய சிந்துசமவெளி நாகரிகத்திற்கும் சில ஒத்தக் கூறுகள் காணப்படுகின்றன. இவை இரண்டுமே சமகாலத்தவை என்றும் திராவிடரும் சுமேரியரும் ஒரே இனத்தவர் என்றும் இவ்விரு நாகரிகங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

தொல் பழங்காலத்தில் தமிழ்நாட்டுப் பகுதியில் வழங்கிய திராவிட மொழிச் சொற்கள் சுமேரிய மொழியிலும் காணப்படுகின்றன. சுமேரியாவின் ஊர்ப் பெயர்கள் ஊர், நிப்பூர், எருதூர் என்று வழங்கப்பட்டுள்ளன. சுமேரிய மொழியின் அமா, பீடு, ஆள் என்னும் சொற்கள் தமிழில் வழங்கும் அம்மா, ஆடு, யாழ், ஒலி அல்லது ஓசை ஆகிய சொற்களுடன் ஒத்த பொருளை வழங்கி நிற்கின்றன. சுமேரிய, இந்திய நாகரிகங்களில் காணப்படும் யாழ் இசைக் கருவிகள் ஒரே வடிவினை உடையனவாயுள்ளன. எனவே இந்தியாவின் பத்துக்கும் மேலான பகுதிகளில் சுமார் கி.மு.3250–க்கும் 2750–க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய நாகரிகம் உலகின் தொன்மை நாகரிகங்களுள் தலை சிறந்ததான இந்திய நாகரிகம் ஆகும். மயிலை, சீனி வேங்கடசாமியின் வரலாற்று ஆராய்ச்சிகள் இது பற்றி பரவலாகக் கூறுகின்றன.

சிந்துவெளி நாகரிகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முத்திரைகள் குறிப்பாக சுமேரிய முத்திரைகளைப் போலவே சித்திர வடிவில் எழுத்துக்களைக் கொண்டிருந்தன. சிந்து வெளியில் காணப்பட்ட நடனமாதின் சிலை, ஆபரணங்கள், விளையாட்டுச் சாமான்கள், பயன்படுத்திய நாணயங்கள், சுட்ட செம்மண் பலகைகளில் காணப்பட்ட ஓவியங்கள் முதலியன இந்தியாவில் உலகின் வேறெவர்க்கும் பிந்துதலாக இல்லாத, உன்னதமானதோர் கலையும், கல்வியும் சிறந்து விளங்கியதற்குச் சான்றளிக்கின்றன.

## 1.6.3. வேதகாலக் கல்வி (கி.மு. 2500–1000)

வேதங்கள் எழுத்துவழிப் (ஸ்மிருதி) பரிமாற்றமாகவன்றி வாயுரையான (சுருதி) செவி வழிப்பரிமாற்றமான, மொழி வழக்கில் அடுத்த தலைமுறைக்கு வழங்கப்பட்டன. வேதங்கள் வரிவடிவமின்றி நெடுங்காலம் புழங்கி, பின் இந்தியாவில் அக்காலத்தில் அப்பகுதியில் வழக்கிலிருந்த தேவநாகரி வரிவடிவத்தைப் பெற்றன. அவ்வாறு செய்யப்பட்ட தேவநாகரி எழுத்து வடிவங்கள் திராவிட சித்திர எழுத்து முறையின் சாயல் கொண்டவை. எனவே வேதகாலக் கல்வி முறை பழங்கால இந்தியாவில் கால் ஊன்றித் தழைப்பதற்கு முன்னமேயும் இந்தியாவில் பூர்வ வாசிகளின் மொழி மரபுகள், கல்வி, கலை, இலக்கியம், பண்பாடுகள் தழைத்திருந்திருத்தல் திண்ணம். அவற்றின் சுவடுகள் ஆய்ந்தறியற்பாலவை.

இந்தியக் கல்வி வளர்ச்சியில் ஆரியர் கங்கைச் சமவெளியை வந்து அடைந்து தங்களின் வாழிடங்களை அமைத்துக் கொண்டது முதலே ஒரு திருப்பம் ஏற்பட்டது எனலாம். ஆரியர்கள் இந்தியாவுக்கு வரும் வழியில் அவர்கள் பல்கேரியா, ருமேனியா, ஆசியா மைனர், இராக் முதலிய பகுதிகளில் பல நூற்றாண்டுகள் தங்கிப் பின்னர் சிந்து சமவெளிப் பகுதியை வந்தடைந்தனர். அப்பொழுது அங்கு வாழ்ந்திருந்த மக்களை கறுப்பு நிறத்தவர் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆரியர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு தனி கலாச்சாரத்தை ஏற்படுத்தினர். குறிப்பாகக் கல்வியில் தனிப்பாதை வகுத்தனர். ஆரியர்கள் இந்தியாவில் நுழைகையில் நிலவிய உள்நாட்டுக் கல்விமுறை பற்றி அறிய, போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆரியர்களின் காலத்தைப் பற்றி அறிய வேதங்கள் அடிப்படையாகத் திகழ்கின்றன.

வேதங்களில் சமயம், சமுதாயம், பொருளாதாரம், அரசியல், நிர்வாகம், படையெடுப்புகள், ஆட்சி முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது. இக்காலம் பற்றிய கணிப்பில் வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. ‘வித்’ என்றால் அறிவு என்று பொருள். வேதம் என்றால் புனித அறிவு எனப் பொருள்படும்; உலக வாழ்வின் உண்மைப் பொருளை அறிதல் என்று பொருள். வேதங்கள் கற்பதனால் வாழ்க்கையின் இறுதிப் பேற்றை அடைய முயன்றனர். இயல்பான இயற்கையோடு இசைந்த வாழ்வை வேதங்கள் போதித்தன. ஆசிரியர் குரு எனப்பட்டார்.

**செயல்**

‘‘தொல்பழங்கால இந்தியாவில் கல்வி’’–இப்பாடப் பொருளில் நூறு வினாவிடைகள் கொண்ட–வினாடிவினா நிரல் தயாரிக்க.

## 1.6.4.1. வேத காலக் கல்வியின் நோக்கங்கள்

இறைநிலை, அதாவது மோட்சம் அடைவது கல்வியின் தலையாய நோக்கமாயிருந்தது. வேதங்களைக் குருவழியாகக் கற்று அவற்றின் வழி நடப்பதே மோட்சம் அடையும் வழி; மோட்சமே வாழ்வின் இறுதிப் பயன் என வலியுறுத்தப்பட்டது.

வாழும் வகை, முறை, நெறி, நோக்கம், பயன் முதலிய அனைத்தையுமே கல்வியின் வழி பெறுவதையே கல்வியின் நோக்கம் என்றனர்.

நன்மை தீமை, நிலையானது நிலையற்றது, உயர்வானது தாழ்வானது, செய்ய ஏற்றது செய்யக்கூடாதது, பற்றை வளர்ப்பது பற்றை நீக்குவது போன்ற அறிவுரைகளை வழங்குவதும் பெறுவதும் கல்வியின் நோக்கமாயிருந்தது.

சுற்றுச்சூழலை, மண்ணை, விண்ணை, உயிரை, படைப்பியலை, அறிந்து, விளங்கிக் கொண்டு ஏற்றதோர் வாழ்வியலை வழிவகுத்துப் பின்பற்றிட வேதகாலக் கல்வி உதவியது.

அண்டம், பிரபஞ்சம், பிரம்மம், உயிர், ஆன்மா, பற்றற்ற துறவு, பொறி புலன்களின் கட்டுப்பாடு முதலியவை பற்றி நடைமுறை அறிவைப் பெறுவதே வேதகாலக் கல்வியின் நோக்கமாயிருந்தது.

ஒழுக்கம், சீலம், பணிவு, புலனடக்கம், தற்காப்பு, போர்க்கலை, மதிநுட்பம், பொருளீட்டுதல், புண்ணியம் செய்தல், கலைநயம் முதலியன பற்றிய வாழ்வியல் படிப்பினைகளை வழங்குவதும் இக்காலக் கல்வியின் நோக்கமாக இருந்தது.

### 1.6.4.2. வேதகாலக் கல்வியின் பாடப்பொருள்

1. ரிக்வேத சம்ஹிதை: பத்துப் பிரிவுகளைக் கொண்ட இதில் கடவுளைத் தெளிதல், துதித்தல், வாழ்க்கை முதலிய குறிப்புகள் காணப்படுகின்றன.
2. சாமவேத சம்ஹிதை: சுமார் 1500 பாடல்களைக் கொண்ட இதில் மந்திரங்கள், அவற்றை இசையுடன் பாடுதல் முதலியன இடம் பெற்று உள்ளன.
3. யஜுர் வேத சம்ஹிதை: வெண்மை, கருமை என இரு பிரிவுகளைக் கொண்ட இதில் முறையே பாடல்கள், பாடலும் பொருளும், புரோகிதர் வேதச் சடங்குகளை நடத்தும் முறைகளும் கூறப்பட்டுள்ளன.
4. அதர்வணவேத சம்ஹிதை ரிக்வேதத்தைத் தழுவி அமைந்தது, மந்திரங்களும், தந்திரங்களும், மருத்துவக் குறிப்புகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

### 1.6.4.3. வேதக் கருத்துகள் ஆறு வகையாக ஆளப்பட்டுள்ளன

1. சிக்ஷா (உச்சரிப்பு)
2. சண்டாஸ் (அளவு)
3. வியாகரணம் (இலக்கணம்)
4. திருக்தா (சொல் விளக்கம்)
5. ஜியோதிஷா (வானவியல்)
6. கல்பா (சடங்குகள்)

### 1.6.4.4. உபவேதங்கள்: இவைகள் சமயச் சார்பற்றவை

1. ஆயுர்வேதம் (மருத்துவம் பற்றி விளக்குவது)
2. தனுர் வேதம் (போர்முறை பற்றிக் கூறுவது)
3. கந்தர்வ வேதம் (இசைக்கலை பற்றியது)
4. சில்பவேதம் (சிற்பம், கட்டிடம் அமைப்பு பற்றி விளக்குவது)

### 1.6.4.5. ஆசிரியர் மாணவர் உறவு

வேத கால ஆரம்பத்தில் தந்தையே தனது மகனுக்குக் கல்வி புகட்டினார். காலப் போக்கில் குலத்தொழில் நிலை பெற்றதும் கல்வி அறிவு பெறுவதும் வழங்குவதும் தனிப்பணியாகி குருகுலம் உதயமானது. தந்தையும் புனித அறிவைப் புகட்டிய குருவும் உற்பவ காரணனாகிய பிதா எனப்பட்டதாக மனுஸ்மிருதி கூறுகிறது.

**செயல்**

பண்டைய இந்தியா, நம் கால இந்தியா இவற்றில் ஆசிரியர், மாணவர் உறவு, பொறுப்பு, கூறுகள் வாரியான ஒப்பீட்டாய்வை வகுப்பில் மேற்கொள்க.

### 1.6.4.6. குருவின் தகுதிகள்

குருவாகத் திகழ பல அடிப்படைச் சிறப்புகளும், குணங்களும், நற்பண்புகளும் தகுதிகளாய் இருந்தன. தகுதிகளைப் படைத்திராத ஒருவரை ஆசிரியராக ஏற்பதன் தீய விளைவுகளை தர்மசாஸ்திரம் எடுத்தியம்புகிறது. ஆபஸ்தம்ப தர்ம சூத்திர உபநயணம் செய்யும் ஆசிரியர் கற்பதில் ஆர்வம் மிக்க ஆசிரியராகவும், இடையறாது கல்வி பயிலும் ஆர்வலராகவும் கற்றறிந்த செந்நெறியாளராகவும், பாரம்பரியம் மிக்க நற்குடிப்பிறப்பாளராகவும், தெளிந்த நல்லறிவு பெற்ற தூய

நெஞ்சினராகவும், அறவழி தவறாது நன்னெறி நின்று வாழ்பவராகவும் இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. வேதங்களைக் கற்றறிந்து, தர்மங்கள் வழி நின்று வாழும் நற்குடி பிறந்த, நன்னடத்தையாளரும் பிரம்மத்தை அடைய வாழ்நாள் நெடுகிலும், தூய வாழ்வு நடத்தி வருபவர்களும் மட்டும் தான் ஆசிரியர்களாயிருக்கத் தக்கவர்கள் என வாயு புராணம் கூறுகிறது. அவ்வாறு சீலம் மிக்க பிராமண ஆசிரியர்கள் எவரும் கிடைக்கவில்லையாயின் அதே தகுதிகளை உடைய சத்திரியர்களிடமோ வைசியர்களிடமோ கல்வி கற்கலாம் எனவும் கூறப்படுகிறது. உயர்குடிப்பிறப்பைக் காட்டிலும் உயர் அடைவுத் தகுதிகளே கருத்தில் கொள்ளப்பட்டன.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' பிறப்பால் அனைவரும் சமம் எனினும் காலப்போக்கில் கல்வியாலும் அரிய பல சான்றாண்மைகளாலும் சில பாரம்பரியமான பிராமண குடும்பத்தினர்கள் பெற்ற சிறப்புக் கருதி அத்தலைமுறையினர் மட்டுமே குருவாதல் இயலும் என்ற நிலை ஏற்பட்டுப் பின்னர் இன உரிமையாகவே அது மாறிவிட்டமை இங்கு கருதற்பாலது. ஆச்சார்யா, உபாத்யாயா, குரு என்னும் சொற்களால் கல்வி வழங்குவோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

குரு எனும் சொல் பரவலாக, வேதக்கல்வி நடைமுறை விதிகளைச் சொல்லிக் கொடுத்து அகத்திருள் நீக்கி, மாணவனின் உள்ளத்தில் ஒளியேற்றும் ஆண், பெண், அம்மா, அப்பா அல்லது முதியவர்கள் அனைவரையும் குறிப்பதாய் அமைந்தது. விஷ்ணுதர்ம சாஸ்திரம் அப்பா, அம்மா, ஆச்சார்யா ஆகிய மூவருமே உன்னதமான 'குருக்கள்' எனக் கூறுகிறது. உயர் வாழ்வை எடுத்துக் கூறி வழிகாட்டி, ஞானக்கொடை வழங்கும் அறிவு வள்ளல்கள் சிறியவரோ, பெரியவரோ, எளியவரோ, மாண்புமிக்கவரோ, எக்குலத்தவராயினும் அவர்கள் 'குரு' எனப்பட்டனர்.

ஆசிரியர் மாணவர் உறவில் குருவின்பால் மாணவரின் நன்றிக்கடன் உணர்வு நன்னடத்தை, பணிவுடைமை, நன்னம்பிக்கை இவைகளே அடிப்படைகளாய் இருந்தன. உழைப்புப் பங்கீடு அல்லது தொழில்களை அதனைச் செய்பவர்களிடையே பகுக்கும் முறையிலான (Division of labour) சமுதாய அமைப்பு நாளடைவில் வேற்றுமை மிக்க நாற்பாலாக உருவாகிப் பல நூற்றாண்டுகள் இம்மண்ணில் பல கேடுகளுக்குக் காரணமாகி தற்போது மாற்றம் கண்டுள்ளதெனலாம்.

## 1.6.4.7. மாணவன்

மாணவர்கள் பிரம்மச்சாரிகள் என்று அழைக்கப்பட்டனர். போதனா முறை வாயுரையாகவே இருந்தது. 'பிரணவம்' எனப்படும் ஓங்காரமும், 'வியர்த்தி' எனப்படும் துதியும் 'காயத்ரி' எனப்படும் அறிவொளிப் பிரார்த்தனையும் கற்பிக்கப்பட்டன. கல்வி ஆரம்பம் வித்யாரம்பம் எனப்பட்டது. 8 முதல் 12 வயதுக்குள் நடைபெற்ற கல்வி உபநயனம் முகக் கண்ணுக்கு மேலான, ஞானக் கண்ணையும் திறப்பதற்கான சிறப்பு நிழ்ச்சியாகும். ஆசிரியர் மாணவர் இடைவினையின் போது அனுசரிக்கப்பட வேண்டிய விவரமான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாணவன் தன் இரு கைகளையும் கட்டி வடக்கு நோக்கி அமர்ந்தே கற்றலை மேற்கொள்ள வேண்டும். மெல்லிய தூய்மையான ஆடைகளையே அணிய வேண்டும். தன் வலக்கையால் ஆசிரியரின் வலப்பாதத்தையும், இடக்கையால் இடப்பாதத்தையும் அழுந்தப் பற்றுமாறு தன்னிரு கைகளையும் குறுக்கிலிட்டு தரையில் வீழ்ந்து பணிந்து ஓங்காரம் கூறி வணங்க வேண்டும். பிரம்மச்சாரி என்றழைக்கப்படும் இம்மாணவர்கள் சத்தியமே பேச வேண்டும். தினமும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். கதிரவனைக் கண்களால் பார்த்தல், தேன், இறைச்சி, வாசனை திரவியங்கள், மலர் சூடுவது, நாள் பொழுதில் தூங்குவது, வாகனங்களில் பயணிப்பது, காலணிகள் அணிவது, குடை பிடிப்பது, காதலிப்பது, கோபிப்பது, பிறர் பொருளை அபகரிப்பது, மோகிப்பது,

வீணான விவாதங்கள் செய்வது, போதை கொள்வது, கூத்தாடுதல், இசைத்தல், அவதூறு பேசுதல், பெண்களை விரைத்து நோக்குவது, சூதாடுவது, கூடாநட்பு, விலங்குகளைத் தாக்குவது, ஆபாசப் பேச்சு, கடுஞ்சொல், மது ஆகியவற்றை பிரம்மச்சார்ய காலத்தில் அறவே தவிர்க்க வேண்டும். இவற்றை நாம் பொருளற்ற கட்டாயங்கள் என்பதை விடுத்து அக்காலத்தில் நிலவிய மாணவர் ஒழுக்கம், நலம் கருதிய வழிகாட்டல்கள் என்று கருத வேண்டும்.

### 1.6.4.8. குருக்களுக்கான நிபந்தனைகளும், ஒழுகலாறுகளும்

மனம் மாசுற்ற ஒருவனுக்கு அவனது படிப்போ, சுதந்திரமோ, யாகமோ, தியாகமோ, விரதமோ, பயிற்சியோ, கடுந்தவமோ இறுதிப் பயன் எய்திட உதவாது; வேதசாத்திர ஞானத்தைவிட ஒருவருடைய வாழ்வியல் செந்நெறிகளே அவனை உயர்த்த வல்லவை என்பதை குருக்கள் நம்பினர்.

ஆச்சாரியர், மாணவர் இருவருமே காட்டில் வாழ்ந்தனர். மாணவர்கள் ஆச்சாரியரின் ஆசிரமத்திலேயே தங்கிப் பயின்றனர். குருவின் துணைவியாரே மாணவனுக்கும் சமைத்து உணவு அருத்தினார். மாணவர்கள் அந்நாளில் தங்கள் பெற்றோர்க்குத் தங்கள் குடும்பங்களில் செய்யக்கூடிய பணிவிடைகளையே ஆச்சாரியருக்கும் செய்தனர். தன் பெற்றோர்க்குக் கட்டுப்பட்டிருந்ததைப் போல ஆச்சாரியருக்கும் கட்டுப்பட்டுப் புழங்கி மிக்குயர் ஞானம் பெற்று உலகின் பிறபகுதி மனிதகுலம் கண்டிராத மகத்துவங்களை இந்திய வேதகால மாணவர்கள் கற்றுத் தேர்ந்து, இறவாப் பெருநிலை எய்தினர். குரு மாணவர் இருவருமே சமுதாயம் ஈந்த கொடையில் வாழ்ந்தனர். ஆச்சாரியர்கள் தானம் பெற்றனர். ஆதலால் அவர்களிடம் சமுதாயக் கட்டுப்பாடும், மக்களை நேசிக்கும் தொண்டு நெறியும், உலகை வாழ்விக்கும் நோக்கமும் நிலைப்பெற்றது.

‘கானே’ என்பவரின் துல்லியமான மதிப்பீட்டைப் போல இன்றைக்குச் சுமார் ஏழாயிரம் ஆண்டு முதல் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த ஆட்சி, சமுதாய, சமூகப் பின்னணிகளுடன் நிலவிய சிறந்த கல்வி முறையை அதே காலத்தில் உலகின் பிற பகுதிகளில் நிலவிய கல்வி முறைகளோடு தான் ஒப்பீடு செய்ய வேண்டும்.

### 1.6.5. குருகுலக் கல்வி (கி.மு. 900–500)

வேத காலத்தைத் தொடர்ந்து வேதங்களைத் தழுவிய 1. பிராமணங்கள், 2. ஆரண்யகங்கள் 3. உபநிடதங்கள் 4. இதிகாசங்கள் போன்ற படைப்புகள் இந்தியாவில் தோன்றி வளர்ந்தன. அக்காலக் கட்டத்தில் கல்வி வளர்ச்சி பரவலானது. அக்காலத்தில் முன்னம் விளங்கிய குருகுலக் கல்வி முறையைப் போற்றிப் பணிவும், பண்பும், தனிமனித ஒழுக்கமும், இயற்கையோடு ஒத்திசைந்த கல்விக் கோட்பாடுகளும் நிலவின. குருகுலக் கல்விக் காலத்தில் சமயமும், வானசாத்திரமும் உலகியல் கல்வியும் போதிக்கப்பட்டன.

### 1.6.5.1. குருகுலக் கல்விக் காலப் படைப்புகள்

ஒவ்வொரு வேதத்திற்கும் விளக்கம் கூறுவனவாய் பிராமணங்கள் அமைந்தன. காடுகளில் வசித்து, இயற்கையைக் கூர்ந்து ஆய்ந்து எழுதப்பட்ட இப்படைப்புகளில் தத்துவக் கருத்துக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. குருவின் அருகில் அமர்ந்து கேட்கப்பட்ட அரிய பெரிய தத்துவ விளக்கங்கள் உபநிடதங்களில் காணப்படுகின்றன. அக்காலக் கட்டத்தில் கடவுள் வழிபாடு என்பது இயற்கையின் வெவ்வேறு தன்மைகளுக்கும் இயல்புகளுக்கும் ஆய்வுரு தந்ததால் பல கடவுள் வழிபாட்டு முறை தோன்றியது எனலாம். கடவுள் பற்றி பல கற்பிதங்களும், வழிபாட்டு முறைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் தோன்றின. எனினும் வேதத்தின் உட்பொருளான கடவுள் உருவமற்றவன். இயற்கையில் தோய்ந்து நிற்கும் ஆற்றல். அது உயிர்களினுள்ளே உறைந்தும் செயல்படுகிறது. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறல்ல. அச்செம்பொருள் தீயாய், வானாய்,

மண்ணாய், நீராய், காற்றாய்ப் பரவி இருக்கிறது. அது அன்புருவாம் பரம்பொருளாய் உள்ளது. அது ஜோதி மயமாய் உள்ளது போன்ற கருத்துக்களும், விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. கடவுள் என்றொன்று தனியே இல்லை; அது இயற்கையில் நீக்கமற நிலைத்து நிற்கும் பேராற்றல் என்ற கருத்தும் அக்காலப் படைப்புக்களில் ஆயப்பட்டது.

## 1.6.5.2. இதிகாச காலக் கல்வி

இக்காலக் கட்டத்தில் தத்துவங்களும், அவற்றின் விளக்கங்களும் வரலாற்றுக் கதைகளின் வழியே கூறப்பட்டன. வேதக் கருத்துக்கள் காலங்கள் தோறும் பல உருமாற்றங்களைப் பெற்றன. ஆரியர் வருகைக்கு முன்னமேயே இந்தியாவில் தொல் பழங்காலந்தொட்டு நிலவி வந்த ஆன்மீகக் கருத்துக்களும், வேதக் கருத்துக்களும் இணைந்தன. புதிய விளக்கங்களைப் பெற்றன.

துறவு வாழ்க்கையை, பற்றற்ற நிலையைப் போற்றி சுக வாழ்வைத் தவிர்த்த குருகுலக் கல்வி முறை மாறி வாழ்வியலை, மனித அபிலாசைகளை அவற்றின் நன்மை தீமைகளை விவரித்துக் கூறும் தத்துவ வித்தக விளக்கங்கள் கல்வியின் நோக்கங்களாய் மலர்ந்தன. இக்காவியக் காலத்தில் மகாபாரதம், இராமாயணம் என இரு பெரும் தொன்மை வரலாற்றுக் கதைகள் இம்மண்ணில் உருவெடுத்தன. நீ உன் கடமையைச் செய்; பலனை எதிர்ப்பாராதே; விருப்பு வெறுப்பற்றுக் கடனாற்றுபவனாக இருக்க வேண்டுமென பகவத் கீதையின் வழி அக்கால மனிதன் உபதேசிக்கப்பட்டான். 'அறத்தைக் காப்பவன் அறத்தால் காக்கப்படுவான்; சத்தியமே பேசுக; அறமே செய்க; நல்லுள்ளம் கொண்டவனாயிரு, நல்லவன் வாழ்வான், அறம் மட்டுமே வெல்லும், போன்ற கருத்துக்கள் கதைகளின் வழிபோதிக்கப்பட்டன.

அன்றைய விழாக்களும், வேள்விகளும் சமுதாயச் செயல்களும், இயற்கை தனக்கு அமைத்துத் தந்த சாதகங்களுக்கு நன்றி கூறு முகத்தான் நடைமுறைப்படுத்தப்பட்டன. அரிய பல உண்மைகள் பிற்காலத்தில் தத்துவங்களையும், விவர விளக்கங்களையும், நுணுக்கங்களையும் மறைபொருளாக வைத்துத் தாம் மட்டுமே பயன்பெற ஆர்வப்பட்ட சிலரால் கல்வியின் வழி வெளியே கொண்டு வரப்படாமல் விடுபட்டு மறைந்துபோயின. காலப்போக்கில் அவை அறிவு நுணுக்கமிழந்த வெற்றுச் சடங்குகளாகவும், பொருளற்ற அரைகுறைச் செயல்களாகவும் மாறி, மூட நம்பிக்கைகள் என்ற நிலையை அடைந்தன. கல்வியியல் தத்துவங்கள் தலைமுறை மாற்றம் பெறாது வலுவிழந்தன.

இயற்கை, வாழ்வியல் பற்றிய உயரிய கருத்துக்களை விளக்கும் இதிகாச காலக் நோக்கிலேயே கல்வி அமைந்தது. வீடுபேறு அடைதலே குருகுலக் கல்வியின் முக்கிய நோக்கமாக இருந்தது. சமயம் சார்புடையதாகக் கல்விமுறை இருந்தாலும் வாழ்வியலுக்கும், கணிதம், வானியல், மெய்யறிவியல் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் கிடைத்தது. மாணவர் ஒழுக்கத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் வழி வகுத்தது. குருவின் இல்லமே குருகுலமானது. 12 வயது ஆனவர்கள் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். குறைந்த எண்ணிக்கையிலேயே மாணவர்கள் பயின்றனர்.

கற்கும் மாணவர்களின் திறமையை அதிகரிக்க அரசியல், ஆட்சிமுறை, போர்க்கலை, விவாதம், உரையாடல், ஒப்புவித்தல் என்று பல வகையிலும் அவர்களின் திறமை போற்றி வளர்க்கப்பட்டது. பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. வாய்மொழியாக மனப்பாடம் செய்விக்கப்பட்டு குரு சீடர்கள் விவாத அடிப்படையில் கருத்துக்களுக்கு விளக்கம் தரப்பட்டது. குருபக்தியும், கடமை உணர்வும், கவனமும், ஒழுக்கமும், கல்விக் கருத்தும் கலைஞானமும் மிக்க மாணவர்கள் கற்றுத் தேர்ந்து வெளியேறினர். மன்னர்களின் அரசியல் தலையீடோ, செல்வந்தர்களின் குறுக்கீடுகளோ குருகுலக் கல்வி முறையில் இல்லை.

**செயல்**

பின்வருவனவற்றுள் ஒவ்வொருவரும் ஒன்றைப்பற்றி நூலக உதவியுடன் ஆழ்பொருள், சொற்பொருள் தெளிக. மடிப்பிதழ் (Folder) தயாரிக்க

| | | |
|---|---|---|
| காயத்ரி மந்திரம் | பிரம்மச்சாரி | பச்சை (கன்னி) வழிபாடு |
| சாந்தி பாடம் | குரு–ஆச்சார்யா | உபாத்யாயா |
| சடங்குகள் | தீக்ஷை | சித்தம்–மனம்–புத்தி |
| வேள்வி | இயற்கைத் தோற்றவழிபாடு | எண் வழிகள் |
| பிரம்மி–பிராகிருதம்–பாலி | ஜீவகாருண்யம் | பண் |
| ஜீனா | உபநயனம் | ஆன்மா–ஜீவன் |
| ரிஷபதேவர் | அகிம்சை | சாஸ்திரதானம் |
| புலனடக்கம் | வாலறிவு | ஹோமம் |
| மாணவன் | பாவனை | பேத விஞ்ஞானம் |
| கந்து–கஷாயம் | ஐந்திணை | புண்ணியம் |
| பள்ளி | அண்டம் | ரிக்குகள் |
| கந்தழிநிலை | வித்யாரம்பம் | மோக்ஷம் |

## 1.6.6. பௌத்தக்கல்வி (கி.மு.600)

வேதகால, குருகுலக் கல்வி முறைகள் மெய்ஞான நாட்டம் கொண்டிருந்தன. சுதந்திர சிந்தனைக்கும், செயலுக்கும் அங்கு வழியின்றி குரு வழியாகவே அனைத்தையும் கண்டு பொருள் கொண்டான். மாணவர் அனைவரும் கல்வியை உரிமையுடன் நாடிப்பெற வாய்ப்பு அப்போது இல்லை. உட்பொருளையும், நுட்பங்களையும் தழுவாத பல சடங்குகள் மலிந்தன. சமய வாழ்வில் புரோகிதர்களின் சுயநலமும் ஆதிக்கமும் ஓங்கின. சாதாரண மனிதனின் கல்வித் தேவை, உரிமை கருத்தில் கொள்ளப்படவில்லை. பரவலான இக்குறைபாடுகளைக் களைய, சீர்திருத்தங்களின் அடிப்படையில் ஒரு மாற்றமைப்பாக தோன்றிய எழுச்சியே பௌத்த மதமும், சமண மதமும் என்பதில் மிகையில்லை.

### 1.6.6.1. கி.மு. ஆறாம் நூற்றாண்டு

இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு பகுதிகளிலும் பழமைச் சமுதாய இன்னல்கள் மாற்றம் பெற்று புதிய கருத்துக்களும், சிந்தனைகளும், சமயங்களும் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றின. இந்தியாவில் பௌத்த மதமும் சமண மதமும் தோன்றின. இதே காலக் கட்டத்தில் சீனாவில் டாவோயிசமும், கன்பூசியானிசமும் மலர்ந்தன. அதனால் அந்நாடுகளில் பல புதுமைகள் பூத்தன. கிரேக்க நாட்டில் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்கள் தோன்றிப் பல சீர்திருத்தச் சிந்தனைகளுக்கு வித்திட்டு வளர்த்னர். பாரசீக நாடுகளில் சொரஸ்திரர் என்ற மேதை தோன்றி புதியதோர் ஆன்மீகப் பாதையையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் வகுத்துத் தந்தார். இம்மறுமலர்ச்சி பரவிய கி.மு. ஆறாம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு நாடுகளிலும் புதிய அறிவு பூர்வமான சிந்தனைகள் பல தோன்றின. கல்வித்துறையில் பற்பல புதிய விரும்பத்தக்க கருத்துக்கள் தோன்றி சுதந்திர வாழ்வியல் நெறிமுறைகளை வளர்த்தன.

கி.மு. ஆறாம் ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதியில் தோன்றிய பௌத்த சமண மதங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் விரைந்து பரவின. பௌத்தமும் சமணமும் தழைத்த அக்காலத்தில் எல்லோரும் கல்வி பெறுவது மனித உரிமை என்ற கோட்பாடு தலைதூக்கியது.

அறிவியலையும், சுதந்திரமாகச் சிந்திக்கும் திறனையும் செயலாற்றும் ஆர்வத்தையும் பௌத்த சமணக் கல்விகள் வளர்த்தது. சீனா, ஜப்பான், தாய்லாந்து, கம்போடியா, மலேசியா, சுமத்ரா, ஜாவா, போர்னியா, இலங்கை போன்ற கீழை நாடுகளிலும், ஆப்கானிஸ்தான் பாரசீகம் போன்ற மேற்காசிய நாடுகளிலும் வேரூன்றின. இன்றளவிலும் அந்நாடுகளில் பௌத்த மதத்தின் தாக்கமும் கோட்பாடுகளும் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 1.6.6.2. பௌத்தக் கல்வியின் தோற்றம்

ஆரியர் வருகைக்கு முன்னமேயே இந்தியாவில் வாழ்ந்த மரபுக் குடிகளிடம் பல்வேறுபட்ட புனிதமான இறைக்கோட்பாடுகள் இருக்கவே செய்தன. ஆரியர்கள் இந்தியாவிற்கு வருகையில் தங்களுடையது மற்றும் தாங்கள் கடந்து வந்த பல்வேறுபட்ட நாகரிகத்தினரின் இறை கோட்பாடுகளின் செல்வாக்கிலான கருத்துக்களுடன் வந்தனர். இந்தியாவில் வந்து தங்கிப் பழகி அவர்தம் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்திருந்த மரபுக் குடிகளுடன் இடைவினை புரிந்து அவர்தம் கோட்பாடுகளுடன் இணைந்த பழமைக்குப் பழமை, புதுமைக்குப் புதுமையான சிந்தனைகளுடன் ஒருவகையான எழுச்சி மனநிலையிலேயே தம் ஆன்மீகக் கோட்பாடுகளைக் கட்டுரைத்தனர். இந்திய மண்ணில் தோன்றிய அனைத்துப் புதுமைகளுமே இங்கு நிலவிய பழமைகளின் மறுபிறப்பே, மறுவடிவமே, மறுமலர்ச்சியே என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவை புதிய நோக்கில் புலப்பட்ட பழைய தத்துவங்களே என்பதே உண்மை.

வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு என்ற நான்கு துக்கங்களின் பிடியில் மனிதகுலம் சிக்கித் துன்புறுவதைக் கண்டு சித்தார்த்தர் (கி.மு. 566–486) கடுந்தவம் பூண்டார். சீலங்களை ஏற்று ஞான வேட்கை கொண்டு தனது வினாக்களுக்கு விடை தேடிப் பல துறவிகளை அண்டித் தெளிவு பெற முயன்றார்.

போதி சத்துவ தர்மத்தை நாடெங்கிலும் அவரது சீடர்கள் பரப்பினர். லட்சக்கணக்கானோர் புத்தர் காட்டிய வாழ்வியல் நெறியை, வாழ்க்கைக்குகந்த எளிமையான, செலவில்லாத, சடங்குகளற்ற, செந்நெறியை மனமுவந்து ஏற்றனர். 45 ஆண்டுகாலம் அருள்நெறியை அனைவர்க்கும் புத்தர் பரப்பினார். கடுந்தவத்தின் விளைவாகத் தான் பெற்ற ஞானச் சுவடுகள் அனைத்தையும் மறைபொருளாக, ஒன்றையும் ஒளித்து வைக்காது தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார். அனைத்து மொழியினரும் மக்களும் தம்மளவில் நேரடியாகக் கண்டு கற்குமாறு பாறைகளில் கல்வெட்டாகப் பதிந்து தாமே ஒரு இறைநெறிக் கல்வி பரப்பிய ஆசிரியராக விளங்கினார், புத்தரின் வாழ்வும், தவநெறியும், கொள்கைகளுமே, பௌத்தக் கல்வியின் அடிப்படைப் போதனைகளாய் அமைந்தன.

## 1.6.6.3. புத்தரின் போதனைகள்

1. உலகம் துன்ப மயமானது
2. அத்துன்பங்களுக்குக் காரணம் உண்டு
3. துன்பங்களை ஒழித்து விடலாம்
4. அதற்கு உகந்ததோர் வழியும் உண்டு.

ஆசையே துன்பத்திற்குக் காரணம். எண் வகை நெறிகளைக் கொண்டு துன்பத்தை நீக்கிவிடலாம். உலக வாழ்க்கை சங்கிலித் தொடர் போன்றது. எப்பொருளும் அழிவதில்லை. சிதையும் நிலை ஏற்படினும் அது மற்றொன்றின் தோற்றமாகிறது. வாழ்வில் நற்கதி அடைய யாகங்கள் வேண்டாம். எளிய எண் வழிகளைக் கடைபிடித்தாலே போதும் என்று புத்தா வழ்வில் கல்விக் கருத்துளை வரையறுத்தார்.

## 1.6.6.4. எண்வழிகள்

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துஉண்ணாமை நன்று.

என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க பெரும் பொருட்செலவிலான யாகங்களும், தினசரி சடங்குகளும் செய்வதன் மூலமே ஒருவன் நற்கதி அடைய முடியும் என்ற கருத்தை பௌத்தக் கல்வி ஏற்கவில்லை. மாறாக நன்னம்பிக்கை, நல்லெண்ணம், நற்பேச்சு, நன்னடத்தை, நற்சிந்தனை, நன்னெறி வாழ்வு, நன்முயற்சி, நற்தியானம் ஆகிய எட்டு செந்நெறிகளை பௌத்தக் கல்வி பறைசாற்றுகிறது.

இன்றைக்குச் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே வாழ்க்கைப் பயன் நோக்கில் இந்தியக் கல்வியில் ஏற்பட்ட மாற்றம் உலகின் கீழை நாடுகளில் செல்வாக்குடன் வளர்ந்தது. புத்தர் 'ஆசிய ஜோதி' என்றழைக்கப்பட்டார். பௌத்தக் கல்விக் கொள்கைகளை இந்திய மன்னர்கள் பலர் தாம் ஏற்றுக் கற்றுத் தேர்ந்து பின்பற்றினர். புத்த மதக் கொள்கைகளைப் பரப்ப தம் பேரரசில் கிராமங்கள் தோறும் தர்ம மகாமாத்திரர்கள் என்ற கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். நாட்டின், உலகின் பல்வேறு பகுதியினரும் கலந்து கொண்ட புத்த மகாநாடுகள் நடத்தப்பட்டன. வெளிநாட்டினர் பலர் இந்தியாவில் வந்து தங்கி கல்வி பெற்றுச் சென்றனர். பல உயர்கல்விப் பல்கலைக் கழகங்கள் தோன்றி வளர்ந்தன. 'சத்தா' என்ற தியான முறை வகுக்கப்பட்டு உலகெங்கிலும் பரவியது.

## 16.6.5. சமுதாயச் சீர்திருத்தங்களும் சமூக மேம்பாடும்

சாதிப் பாகுபாடுகளை புத்தக் கல்வி ஏற்கவில்லை. அரசர்கள் குடிகளைப் பேணி சமத்துவத்தை வலியுறுத்தியமையால் மக்களை இணைத்த சீர்திருத்தக் கல்வியாக பௌத்தர் கல்வி மலர்ந்தது. நாடெங்கிலும் அமைக்கப்பட்ட சங்கங்கள் மடாலயங்களை ஏற்படுத்தின. புத்த விகாரங்கள் கல்வி நிலையங்களாக அமைந்தன. வெளிப்படையான துறவுக் கோட்பாடுகளுடன், நெறிப்படுத்தப்பட்ட அன்றாடப் பழக்க வழக்கங்களைப் பேணி புறந்தூய்மை, அகந்தூய்மை இரண்டும் பெற்றவர்களாக மாணவர்கள் வெளியேறினர். சமஸ்கிருத மொழியில் மட்டுமின்றி பிராம்மி, பிராகிருதம், பாலி போன்ற அவரவர் வட்டார மொழியில் புத்தரின் உபதேசங்கள் போதிக்கப்பட்டன. பலியிடுதலும் யாகங்கள் நடத்துதலும் மறைந்தன.

வேதகால மாணவர்களைப் போன்றே புத்த மடாலயங்களில் சேர்ந்தோரும் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டனர். நீரைச் சேகரித்தல், உணவு பெறுதல், உணவைப் பங்கிடுதல், அறப்பணிகள் செய்வது ஆகிய பணிகளை மாணவர்கள் கீழ்ப்படிந்து செய்தனர். மாணவர்கள் மீது கண்டிப்புகளும் அதிகமாயிருந்தன. தற்காப்புள்ள தூய நெறியாளர்களாக மாணவர்களை மாற்றுவதில் புத்த குருக்கள் ஆர்வம் காட்டினர்.

## மாணவர்களின் சேர்க்கையும் கட்டுப்பாடும்

விருப்பமுள்ளவர்கள் அனைவரும் பள்ளியில் தடையின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சேர விரும்புவோர் தம் எட்டாவது வயதில் 'பப்பஜா' என்ற மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள வேண்டும். கல்வி கற்க வீட்டை விட்டு வெளியேறுதல் என்ற பொருள் கொண்ட இது வேதகால மாணவர்கள் மேற்கொண்ட பாணியையே ஒத்திருந்தது. புத்தமதம் நன்னடத்தை, நல்லொழுக்கத்திற்கு, உண்மை ஓம்புவதற்கு முதலிடம் அளித்தது. ஆரவாரமான கட்டுப்பாடுகள், புறக்காட்சிகளைத் தவிர்த்து மனதைக் கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்தும் பயிற்சியை மாணவர்களுக்கு அளித்து மனித நேயம் பேணுவதாக பௌத்தக் கல்வி அமைந்தது. இதனால் நாட்டில் நல்லொழுக்கம் பேணி, நல்லறம் நிலைநாட்டும் நற்சிந்தனையாளார்கள் பலர் தோன்றினர்.

மாணவர்கள் நற்பண்புகளையும், கற்றல் வளர்ச்சியையும் மதிப்பிட்டு அறிய கூட்டம் கூட்டப்பட்டது. மிகச் சிறந்த பண்புகள், சாதனைகள் உலகுக்கு எடுத்துக்காட்டப்பட்டன. ஆரம்ப கால மாணவர்கள் 'சாமனராக்கள்; என்றழைக்கப்பட்டனர். பனிரெண்டு ஆண்டுகள் கல்வி கற்றபின் ஒவ்வொரு சாமனராவும் பத்து ஆண்டுகள் மூப்புள்ள பத்து பிட்சுகளால் பரிசோதிக்கப்பட்டனர். கல்வித் தகுதி உறுதி செய்யப்பட்டு உபசம்பதா என்ற சடங்குடன் கூடிய பட்டமளிப்பு விழா நடத்தி அவர்களை புத்த பிட்சுவாக ஏற்றுக் கொள்வர்.

### பெண்கல்வி

சங்கங்களில் தங்கிப் படிக்க வேண்டியதால் பெண்கள் சேர ஆரம்பத்தில் அனுமதிக்கப்படவில்லை. பின்னர் விருப்பமும் ஆர்வமும் கருதி அனுமதிக்கப்பட்டனர். பெண்கள் கல்வி கற்று நூல்களையும் எழுதியுள்ளனர். சுபா, அனுபமா, கமேதா, போன்றோர் தேரிகா என்ற நூலை எழுதியுள்ளார். ஹர்ஷர் காலத்தில் அவரது அவையில் ஏழு பெண்பால் புலவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

### 1.6.6.6. பாடப்பொருள்

மடாலயத்தின் ஒழுக்க முறைகளை விளக்கியது வினைய பீடகம். அறநெறிக் கருத்துக்களை சுத்தபீடகம் கூறியது. பொருளியல் சார்ந்த நெறிமுறைகளை அபிதம்ம பீடகம் விவாதித்தது. புத்தரின் வாழ்க்கைக் கதைகள், துறவிகளின் அன்றாட வாழ்க்கைக் கதைகள் அறிவுரை, படிப்பினைகளைக் கதை வடிவில் கூறும் 500 ஜாதகக் கதைகளும் இருந்தன. வினா விடைகளாகவும் தத்துவ விவாதங்களாகவும், விவரிப்புக்களாகவும், சூத்திரங்களாகவும், அறிவுரைகளாகவும் பாடப்பொருள் அமைந்திருந்தது. பாடங்கள் வாயுரையாக வழங்கப்பட்டன. சிந்தனைக்கும் புரிதலுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. ஆன்மீக நெறிகளன்றி, ஆய்வுக் கட்டுரைகள், மருத்துவக் குறிப்புகள், வானசாத்திரம், ஜோதிடம், யோகம், சுற்றுச்சூழல், பயிர்த்தொழில், சுகாதாரம், கலை, இலக்கியம், சிற்பம் முதலிய சாத்திரங்களும் கருத்தாகவும், செயல்முறையாகவும் கற்றுத்தரப்பட்டன.

### 1.6.7. சமணக்கல்வி

"ஞானத்திலே பரமோனத்திலே உயர்ந்து, சாரத்திலே சாத்திரங்கண்டு தருவதிலே புகழ்பெற்று தவ வேடத்திலே தனி யோகத்திலே" பல சிறப்புகள் ஈட்டியது இவ்விந்திய நாடு. ஜீவ காருண்யம் தழைத்திட வாழ்ந்து காட்டித் தானும் இயல்பாய் வாழ்ந்து தாவரம் முதலாயப் பல்லுயிரினமும், பொருந்தி வாழ்ந்திட வழங்கிய அருட்கொடைகள் உலகமே வியந்து பாராட்டி ஏற்றுக் கொண்டதொன்றாகும்.

கி.மு. 540–ல் ஞானாத்திரிகர்கள் வம்சத்தின் தலைமகனும் வீரம் செரிந்த மன்னர் சித்தார்த்தருக்கும் இளவரசி திரிசலாவுக்கும் 'வர்தமானர்' மகனாகப் பிறந்தார். அரசாட்சி செய்திடக் கல்வி பெற்று திருமணம் முடித்து ஒரு மகளையும் இவர் ஈன்றார். ஆயினும் இவர் மனம் பிறவிப் பெருங்கடல் கடந்து பிறவா நிலை எய்துவதிலேயே ஆர்வம் காட்டியது.

தனது முப்பதாம் வயதில் கடுந்தவ நெறிநின்று இல்லறத்தைப் புறந்தள்ளி வெளியேறினார். அன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னம் பார்சுவநாதர் என்ற தவவாணர் புகட்டிய 'நிர்கிரந்த' என்ற 'தளைப்படாநிலை' தவநெறியைப் பின்பற்றினார். வர்த்தமானர் சார்ந்த தவநெறியில் இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரார்கள் பார்சுவநாதர். எனவே அந்நெறியில் வர்தமானருக்கு முன்னமே இருபத்தி மூன்று பேர் இம்மண்ணில் தோன்றி தவம் இயற்றியுள்ளனர் என்பதுறுதி. வர்த்தமானருக்கும் முன்னால் இருபத்தி மூன்று தீர்த்தங்கரார்கள் என்றால் அதன் நீண்ட பழமைப் பாரம்பரியம் குறிப்பிடத்தக்கது. தீர்த்தங்கரார்கள் என்ற சொல்லுக்கு "நீரிடைப்பட்ட நெடுவழிப்பாதை கண்டோர்" (FORD MAKERS) என்பது பொருள்.

மெய்யறிவுப் பாதையில் மெய்ப்பொருளறி நாட்டத்தில் பிச்சை பெற்று உண்டு தவம் கிடந்து விவாதங்கள் பல செய்து தம் உடலைப் பலவழிகளிலும் வருத்திக் கொண்டு பனிரெண்டு ஆண்டுகள் தவமிருந்தார். தன் பதிமூன்று ஆண்டுகால கடுந்தவத்தின் இறுதியில் கேவலமுக்தி ஞானம் அடைந்தார். வெல்லற்கரியது எதிரியின் படைபலமும் ஆர்ந்த வீரமும்; அதனினும் மிக அரியது தன்னுள்ளே தன்னைத்தான் வெல்லுவது. ஈட்டுவதற்கரியதாம் அந்நிலையை வென்றெடுத்த இவர் ''மேன்மையுறு தகைமை'' ஹர்ஹந்த் மகாவீரர்–ஜீனர் எனப்பட்டார்.

ஆன்ம ஞான ஒளிபரப்பிய இவர் தம் அறிவரிதான கோட்பாடுகளை கங்கை வளஞ்சேர்க்கும் பல அரசுப் பகுதிகளில் முப்பதாண்டு காலம் பயிற்றினார். பல லட்சம் பேர் குறுகிய காலத்தில் இவரது கோட்பாடுகளை ஏற்றனர். அரசர்கள் இவரைப் பின்பற்றினர். கி.மு. 468–ல் மகதப் பேரரசின் தலைநகர் ராஜக்கிருகத்தின் அருகிலிருந்த பாவா என்ற நகரில் உண்ணா நிலை காத்து உடலை உதிர்த்தார். சந்திரகுப்த மௌரியர் தன் அரசபதவியைத் துறந்து இத்தவ நெறியில் இணைந்தார். மௌரியர்கள் ஆட்சிக் காலத்தில் ஜீனக் கல்வி வலிமையுற்றது.

மகாவீரரின் அறிவுரைகள் வாய்மொழியாகவே ஆரம்பத்தில் பதிநான்கு உட்பகுதிகளைக் கொண்ட பூர்வ ஞான உபதேசக்கல்வி எனவும் பின்னர், வல்லபியில் பனிரெண்டு அங்கங்களாகவும் தொகுக்கப்பட்டது. பிராகிக்ருத மொழியிலும், சமஸ்கிருத மொழியில் பல விளக்க உரைகள் எழுதப்பட்டுள்ளன. சமணத்துறவிகள் கொல்லா நெறிநின்று, மருத்துவத்தாலும், கல்வியாலும், இலக்கியத் தொண்டாலும் மனிதகுலத்துக்குப் பல அரிய கொடைகளை வழங்கியுள்ளனர்.

மனிதகுலம் தம் அனுபவத்தாலும், உழைப்பாலும், அறிவாலும் ஆய்ந்தெழுதிக் கையெழுத்துப் பிரதிகளாக வைத்திருந்த சுவடிகள், மடாலயங்கள், சமணத்துறவிகள் இல்லாதிருந்தால் அடியோடு அழிந்து பட்டிருக்கும். இந்தியாவின் பல பகுதிகளில், பல மொழிகளில், சமயம் சாராத பல பணுவல்களை எடுத்து வாசித்துத் தொகுத்துப் பல நூற்றாண்டுகள் காத்து நமக்களித்த பெருமை சமணத் துறவிகளையே சாரும். தொண்டு, ஆக்கம், படைப்பு, சீர்திருத்தம், உழைப்பு, பணி முதலிய சிரமதானத்தை சமணர்க் கல்வி போதித்தது.

பிரபஞ்சம் அதற்கென உள்ள சில தெய்வங்களால் உருவாக்கப்பட்டதோ, நிர்வகிக்கப்படுவதோ, அழிக்கப்படுவதோ அல்ல என்று திட்டவட்டமாகப் போதித்தனர். பிரபஞ்சம் அழிவற்றது; நிலையானது; மனிதர்களைப் போலவே, விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் ஆன்மா உள்ளது. எனவே அவற்றின் நலன்களையும் பேண வேண்டுமென சமணக்கல்வி போதித்தது. மனிதர்களின் நல்வினை தீவினைகளே அவர்தம் இன்பதுன்பங்களுக்குக் காரணம் தீய செயல்கள் தீமையே பயக்கும். நல்ல செயல்கள் நன்மையை வழங்கும். வினை வலியது. தீயதையும், துக்கம் தருவதையும் ஒதுக்கி இயல்பைக் காத்து நன்மையை மட்டுமே நாட வேண்டுமென்பதே சமணக் கல்வியின் பின்னணியாக விளங்கியது.

கர்ம வினையின் தாக்கத்தை நோன்பு, தவம், கழுவாய் ஆகியவற்றால் குன்றச் செய்யலாம். உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான பக்குவங்களை அறிந்து அதன் வழிநின்று செந்தன்மை பூண்டொழுகப் பயில்வதே கல்வியின் தலையாய பயன் எனப் புகட்டினர். எழுத்தறிவு பெற்றவர், பெறாதவர் அனைவருமே நல்வினையை நாடிச் செய்யுமாறு சமண மடாலயங்களில் கல்வி போதித்தனர்.

அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவா அறுத்தல் முதலிய ஐந்து நெறிகளையும் வைராக்கிய விரதத்துடன் ஒரு சமணத் துறவி காக்க வேண்டும். வன்முறையும், வேண்டுமென்றே உயிர்க் கொல்லுதலும் தீவினையை அடர்வித்துக் குவிக்கும் வலிமை மிக்க கொடுஞ்செயல்கள்,

என சமணக்கல்வி அறிவுறுத்தியது. சமணக்கல்வி ஒரு வாழ்வியல் நெறிமுறையாக அமைந்திருந்தது. இந்நெறிகள் இல்லறத்தார்க்கும், துறவறத்தார்க்கும் என தனித்தனியே வகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

கல்வியின் இறுதிப் பயனாக மோட்சத்தைக் கூறினர். அதனை அடைய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற மூன்று வழிமுறைகளைப் புகட்டினர்.

சமணக் கல்வியில் ஞானம் அல்லது அறிவை ஐந்தாக வகுத்து ஆய்ந்தனர். அறிவறிந்து அறம் வளர்க்கும் ஆசிரியர்களாகப் பணிபுரிய அவற்றை ஆய்ந்தறிவது அனைவருக்கும் அவசியமானதாகும். ஐவகை ஞானங்களாவன

1. மதிஞானம் (Perceptions) பொறிகளுக்கு முதலில் தோன்றுவது; பிறகு அதனை மேலும் ஊக்கமாக அறிவது–பின் அறிந்ததை இதுதான் என நிச்சயம் செய்வது; அதை மறவாமல் நினைவில் நிறுத்திப் பயன்படுத்துவது.

2. கருத்துஞானம் (Scriptural) இது கற்கும் நூல்களிலிருந்து பெறும் அறிவாகும். கேள்வி ஞானமும் இதில் அடங்கும்.

3. அவதி ஞானம் (Clairvoyance) புலனாகாதவற்றையும் உள்ளத்தால் உணறும் ஆற்றல், இயல்பு கடந்த நுண்ணோக்காற்றல், பருப்பொருள்களின் இறந்தகால எதிர்கால நிலைகளை அறியும் திறன்.

4. மனப்பர்ய ஞானம் (Telepathy) இது ஐம்பொறி, மனம் இவற்றின் துணையின்றி பிறர் மனதில் உள்ளதை உள்நோக்கத்தை அறிதல் ஆகும்.

5. கேவலஞானம் (வாலறிவு) இடம், காலம், பொருள் இவை கடந்த முற்றும் உணரும் ஞானமாகும்.

இவ்வைந்திலும் மதிஞானமும் கருத்துஞானமும் கூட நன்றின்பால் உய்க்காமல் தீயதை அறியுமாயின் அவை நன்மை பயப்பதற்குப் பதிலாகத் தீமையையே பயத்தல் கூடும்.

### 1.6.7.1. மாணவர் சேர்க்கை

ஐந்து வயதுள்ள ஆண், பெண் மாணவர்கள் சமணப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். படிக்க விரும்பும் அனைத்து மாணவர்களும் சாதிப் பாகுபாடின்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை. தேவைக்கேற்ப இப்பள்ளிகளின் மாணவர் சேர்க்கை கூடுதலாகவோ, குறைவாகவோ அமைந்தது. ஐநூறு மாணவர்கள் வரையும் ஒரு பள்ளியில் சேர்ந்து பயின்றனர்.

### 1.6.7.2. சமணப் பள்ளிகள்

சமணத் துறவிகள் தங்கி உறைந்த இடங்கள் 'பள்ளிகள்' எனப்பட்டன. அவ்வாறு தாங்கள் தங்கித் தவமிருக்கும் குகைகள், மலையிடங்களை நாடி வரும் மாணவர்களுக்கு அவர்கள் கல்வியளித்தனர். குகைகளை ஒட்டி அமைக்கப்பட்ட கூடங்களில் மாணவர்களை அமர்த்திச் சொல்லிக் கொடுத்ததால் அவ்விடங்கள் நாளடைவில் பள்ளிக்கூடங்கள் என்னும் பெயரைப் பெற்றன. இன்றளவிலும் கல்வி கற்கும் இடங்கள் பள்ளிக்கூடங்கள், பள்ளிச் சாலைகள் என்று வழங்கி வருதல் சமணர்கள் தமிழ்நாட்டில் வழங்கிய கல்விக் கொடைகட்குச் சான்றாகும். இப்பள்ளிகள் பள்ளிச் சந்தம் எனப்படும் கொடைகளாலும், இறையிலி நிலதானங்களாலும் சமுதாயத்தினரின் அருள் உபயங்களாலும் நடத்தப்பட்டதாகக் கல்வெட்டாதாரங்கள் கூறுகின்றன.

### 1.6.7.3. சமணக் கல்விப் பாடப்பொருள்

வீடுபேறு அடைவதையே சமணர்கள் வாழ்க்கையின் இறுதிப் பயனாகவும், நோக்கமாகவும் கொண்டு வாழ்ந்தனர். எனவே இவர்களது கல்வியும் அதனை நோக்கி வழிப்படுத்துவதாகவே அமைந்தது.

துறவிகள் மட்டுமல்லாது இல்லறத்தார்க்கும் இனியவாம் ஒழுகலாறுகளை சமணக்கல்வி போதித்தது. இல்லறத்தார்க்கான கல்வியில் போதிக்கப்பட்டவை பின்வரும் பத்து ஒழுக்கங்களாகும்.

### சமணக்கல்வி வலியுறுத்திய இல்லறத்தார் ஒழுக்கங்கள்: 10

| | | |
|---|---|---|
| 1. கொல்லாமை | 2. பொய்யாமை | 3. கள்ளாமை |
| 4. பிறர்மனை நயவாமை | 5. பொருள் வரையாமை | 6. கள் உண்ணாமை |
| 7. ஊன் உண்ணாமை | 8. தேன் உண்ணாமை | 9. இரவு உண்ணாமை |

10. அருகர், சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் முதலிய உயரியவர்களை வழிபடல்.

அன்னதானம், ஔசததானம், அபயதானம், சாத்திரதானம் முதலிய நான்கு தானங்களையும் செய்ய வேண்டும் என்பது பாடம் நெடுகிலும் வலியுறுத்தப்பட்டது. சமணக் கல்வி ஆன்மீகக் கல்வியாகவன்றி அறிவியல் கல்வியாகவும் பல நுணுக்கக் கல்வியாகவும் அமைந்தது. மொழி, கணிதம், வான சாத்திரம், அறிவியல், வானியல், இயற்பியல், உளவியல், ஆய்வியல், வாழ்வியல், தர்க்கவியல் போன்றவற்றை மாணவர்கள் பயின்றனர்.

### 1.6.7.4. பயிற்று முறை

கல்வி வாய்மொழியாகவே புகட்டப்பட்டது. பாடநூல்கள் இடம் பெறவில்லை. யோகப் பயிற்சிகள் உபாத்தியாயராலும், துறவிகளாலும் நேரடியாக உடனிருந்து செய்து காட்டிச் சொல்லித்தரப்பட்டன. மாணாக்கர்கள் பாடப்பொருள்களைப் புரிந்து மனப்பாடமாக வைத்திருந்தனர். ஆயினும் திட்டவட்டமான அணுகுமுறையில் பாடப்பொருள்கள் மாணவர்களின் மனதில் பதிவிக்கப்பட்டது. இன்றைக்குச் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே சமணத் துறவிகளால் திட்டவட்டமானதோர் ஐந்துபடி நிலைகளுடன் கூடிய பயிற்றுமுறை பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அவையாவன

1. சொல்–பொருள் கேட்டறிதல் (Etymology)
2. விவாதித்து–ஐயம் தெளிதல் (Discuss to understand)
3. மனனம்–பாராயணம் செய்தல் (Retain by memory)
4. நினைவு கூர்தல்–மீட்டுக் கொணர்தல் (Recall-contextualise)
5. பிறர்க்கு எடுத்துரைத்தல் (Teach others)

### 1.6.7.5. சமணர்கள் போற்றிய ஆக்கவியல் கல்வி (Constructivism)

கருத்துக்களின் உண்மைத் தன்மையை நுணுகி ஆயும் புத்திக் கூர்மை வளர்க்கப்பட்டது. ஆராய்ச்சி, மனப்பான்மை தூண்டப்பட்டது. விவாதத் திறமை வடிகாலாக்கப்பட்டது. ஓதுவதைக் கூறுதல், வேறுபாடுகள், ஒப்பிட்டறிதல், வேறுபடுத்தி அறிதல் எனும் பேத விஞ்ஞானம்–பகுத்தறிவு மனப்பான்மை போற்றப்பட்டது. ஒரு கருத்தை, அதன் பல பரிமானங்களில் உற்றுநோக்கி ஆய்ந்த பின்னரே அதன் ஏற்புடைமை கைக் கொள்ளப்படும். இது அனேகாந்தவாதம் எனப்படும். தர்க்க ஞானம் மிக்கோராய் மாணவர்கள் வளர்ந்தனர். இக்கருத்துகளை இக்காலக் கல்வி அணுகுமுறைகளுடன் ஒப்பிட்டு மாணவ–ஆசிரியர்கள் விரிவாக அறிவது மிகுந்த பலனை அளிக்கும்.

### 1.6.7.6. ஆசிரியர்–மாணவர் கல்வி ஒழுக்கம்

உலகப் பொருள்பற்றைத் துறந்து, அனைத்து உயிர்களிடமும் அன்பும் கழிபேரிரக்கமும், கனிவும் மிக்கவர்களான அறவோர்களே மாணவர்களுக்குக் கல்வி புகட்டினர். சமணர் சங்கத்தின் அனைத்துத் துறவிகளும் கற்பிக்கும் பணியை விரும்பிச் செய்தனர். அவர்களிடம் குறுகிய நோக்கங்களும், தாழ்வான பழக்க வழக்கங்களும் சிறிதும் காணப்படவில்லை. ஆசிரியர்கள் என்றொரு தனி பணிப்பிரிவு இல்லை. எண் எழுத்தறிவையும், சாத்திரத்தையும் எடுத்துரைக்கும் பணி செய்த துறவிகள் உபாத்திபாயர்கள் எனப்பட்டனர். கூர்த்த மதி நலமும், நுணுகி ஆயும் திறமையும், பிறர்க்கும் விளக்கித் தெளிவாகக் கூறும் ஆற்றலும் அவர்களின் தகுதிகளாய் அமைந்தன. தாங்கள் கற்றுத்தர விரும்பும் பாடப்பொருளில், கருத்தாழம் மிக்க ஆழ்ந்த புலமை மிக்கவர்களாயிருந்தனர். அவற்றை நினைத்த தருணத்தில் எடுத்தியம்ப மனப்பாடமாக வைத்திருந்தனர். கனிவும், கண்டிப்பும் ஆசிரியர்களின் இருகண்களாய் இருந்தன. ஏட்டுக் கல்வியாக அது இல்லை. மனப்பயிற்சியாகவும், புலன் பயிற்சியாகவும் இருந்தது.

### 1.6.7.7. நன்னெறிக்கல்வி

மனக்கட்டுப்பாடும், உடல் உணர்வு மறுப்பும், புலனடக்கமும், அறிவார்வமும் மாணவர்களிடம் பேணி வளர்க்கப்பட்டது. உலகியலறிவைப் போலவே தனிமனித ஒழுக்க சீலங்களும் இல்லறத்தார்க்கு இயற்றப்பட்ட நெறிப்பாடுகள் அனைத்தும் மாணவர்களுக்கும் புகட்டப்பட்டு வலியுறுத்தப்பட்டன. மாணவர்களிடம் உழைப்பும், சுய சார்பும் வலியுறுத்தப்பட்டன. படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் நடை, உடை, பாவனை, சொல் செயல்களில் பரவலான வேறுபாடு காணப்பட்டது. படிப்புக்கும் நடைமுறைக்கும் வேறுபாடு அனுமதிக்கப்படவில்லை என்பது பின்பற்றத்தக்கதாகும்.

சங்க காலத்தின் இறுதியிலும், சங்கம் மருவிய காலத்திலும் தமிழ்நாட்டில் பல இலக்கிய, இலக்கண, காப்பிய, நன்னெறிப் படைப்புகள் உருவாயின. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவர்தம் அரிய உழைப்பால் ஆக்கம் பெற்று நூல்வடிவாயின. பதவிளக்கம் தரும் நிகண்டுகள் எழுதப்பட்டன. கலம்பகம், அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்கள் மலர்ந்தன. பெருங்கதை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மனோன்மணியம் ஆகிய காப்பியங்கள் பூத்தன. நன்நூல், நேமிநாதம், வச்சணந்திமாலை ஆகிய இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. இவை சமணர்தம் கல்வித் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் கூறுகின்றன.

## 1.7. சங்ககாலக் கல்வி

பண்டைத் தமிழகத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் கூட்டப்பட்டு தமிழாய்வுகள் நடைபெற்றதாக இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம் கூறுகிறது. இவற்றுள் நாம் இங்கு குறிப்பிடுவது கடைச்சங்கமாகும். இதன் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படினும் இங்கு நாம் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை எடுத்துக் கொள்வோம். இக்காலக் கட்டத்தில் கடைச்சங்க இலக்கியங்களான,

‘பாட்டும், தொகையும்’ இயற்றப்பட்டன
முருகு(1) பொருநாறு(2) பாணிரண்டு(3) (4) முல்லை(5)
பெருகுவள மதுரைக் காஞ்சி(6)
மருவினிய கோல நெடுநல்வாடை(7) கோல் குறிஞ்சி(8)
பட்டினப்பாலை(9) கடாத்தொடும்(10) பத்து–என்றவாறு பத்துப்பாட்டு நூல்களும்

நற்றிணை(1) நல்ல குறுந்தொகை(2) ஐங்குறுநூறு(3)
ஒத்த பதிற்றுப் பத்து(4) ஓங்கு பரிபாடல்(5)
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு(6) அகம்(7) புறம்(8)
என இத்திறத்த எட்டுத் தொகை—என்பதன்படி எட்டுதொகை நூல்களும்

சங்கம் மருவிய காலத்தில் திருக்குறள் முதலாய பதினெட்டு கீழ்க்கணக்கு நூல்கள் எழுதப்பட்டன. இவ்விலக்கிய ஆதாரங்களைக் கொண்டு அக்காலக் கட்டத்தில் தமிழகத்தில் நிலவிய கல்வி கூறுகளை ஆராயலாம்.

### 1.7.1. கல்விச்சிறப்பு

சாதி சமய வேறுபாடற்ற சமத்துவக் கல்வி வாய்ப்புகள் தமிழகத்தில் நிலவியது கல்வி கற்க முன்வரும் எவருக்கும் வாய்ப்பு நிராகரிக்கப்படவில்லை. கற்றவருக்கு சமூக மரியாதை கூடுதலாக வழங்கப்பட்டது. ஆண் பெண் பாகுபாடுகள் காட்டப்படவில்லை. அரசர் அமைச்சர், தளபதி முதலிய பதவிகளுக்குக் கல்வி ஒரு அடிப்படைத் தகுதியாக விளங்கியது. இளவரசர்களும், இளவரசிகளும் தம் இளமைப் பருவத்தைக் கற்பதற்குப் பயன்படுத்தினர். அறிவு, அறம், கல்வி முதலியவற்றில் சிறந்த கல்வியாளர்களின் மேதக்க ஆலோசனைகளின்படி அரசர்கள் கோலோச்சினர். கற்றறிந்த, தமிழ்வல்ல, நட்புள்ள, நன்னெறியாளர்களாம் புலவர்கள் பால் அரசர்களும் மிக்க மரியாதையுடனும், அன்புடனும் நடந்து கொண்டு கல்விப் புரவலர்களாக விளங்கினர். இன வேறுபாடின்றி, குல வேறுபாடின்றி, பால் பாகுபாடின்றி வறுமைத் தடையுமின்றி அனைவருக்கும் கல்வி என்ற மிக உயர்ந்த சமூக நீதி சங்ககாலத்தில் நிலவியது. கற்றவர்களை மக்கள் மதித்தனர். மன்னர்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

உற்றுழிஉதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே:
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்,
'மூத்தோன்' வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே
புறம் : 183
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியது.

இப்புறப்பாடல் சங்க காலத்தில் கல்விக்கும், கற்றோர்க்கும் இருந்து முதலிடத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. பெற்றதாயும், மன்னரும், சமுதாயமும், பிறரும் வயது, செல்வாக்கு, பதவி, உறவு முதலியவற்றைக் கருதாமல் கல்வி ஒன்றையே சிறப்புக்கும் உயர்வுக்கும் அடிப்படையாகக் கருதிக்கற்றோர்க்குச் சிறப்பிடம் அளித்தமையால் கல்வியை அடைவதில் சுணக்கம் காட்டாது ஆர்வம் காட்டுவது நல்லவற்றுள் எல்லாம் மிக நல்லது என்ற அந்நாள் சமூகக் கருத்தை மிகத் தெளிவாக இப்பாடல் இயம்புகிறது.

'தன் மக்களை சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே' என்கிறது புறநானூறு. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. அதிகாரம், பதவி, செல்வம், பணம் இவையாவற்றிலும் கல்வியின் மதிப்பு உயர்ந்திருந்தது. செல்வாக்கு, பதவி, சமூக மரியாதை ஆகிய அனைத்தையும் தரவல்லதாகக் கல்வி இருந்ததை அக்கால மக்கள் உணர்ந்திருந்தனர். எனவே ''கல்வியின் மிக்கதொரு செல்வம் ஒன்றில்லையே'' என்றும் பாடினர்.

திருவள்ளுவர் கூட கல்லாதவர்களை கண்ணற்றவர்கள், முகத்தில் புண்ணை உடையோர் என்று பாடியுள்ளமை கருதற்பாலது. கல்வி கற்காதவர்கள் மன்னர் வயிற்றிற் பிறந்த இளவரசர்களாயினும் ஆட்சிப் பீடத்தில் ஏற முடியாது. சங்க காலத்தில் உலகில் வேறெங்கும் காணவியலாத அளவிற்கு கல்வி முதலிடமும் முக்கியத்துவமும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும், அத்தகைய செறிந்த பாரம்பரியத்தின் குலத் தோன்றல்களுக்கே நாம் அனைவரும் கற்பிக்க நீங்கள் அனைவரும் பயிற்சி பெற்றுத் தயாராகி வருகிறீர்கள் என்பது பெருமிதம் அளிக்கிறது.

## 1.7.2. சங்க இலக்கியங்கள்

மூன்று சங்கங்களும் பற்பல இனிய, அரிய, கருத்துக்களை நூலாக்கியோரை வரவேற்று பாடல்களையும், தொகை நூல்களையும் உலகோர்க்கு அரங்கேற்றி வழங்கின. ஆயினும் கடல் கோள்களாலும், இயற்கைச் சீற்றங்களாலும் அவைகள் பேரளவில் சிதைந்து போயின. எழுதி வைத்த ஓலைச் சுவடிகளும் மட்கி மண்ணாயின. அவ்வாறு 195 தமிழ் நூல்கள் மறைந்து போயின என மயிலை சீனி வேங்கடசாமியின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு மறைந்து போன பெரும்பகுதி போக எஞ்சிய சொற்ப நூல்களே இப்பொழுது உள்ளன. அவற்றைத் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என வகுத்துள்ளனர். பன்னீராயிரம், சூத்திரங்களைக் கொண்டது, ‘அகத்தியம்’ அகத்தியரின் முச்சங்களுக்கும் பொதுவான இப்படைப்பு நமக்குக் கிடைக்கவில்லை. அகத்தியரின் மாணாக்கர்கள் பன்னிருவருள் ஒருவரான தொல்காப்பியரின் தொல்காப்பியம் நமக்குக் கிடைத்துள்ளது. இதன் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய பகுதிகள் மூன்றிற்கும் முறையே இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர். அவற்றினுள் பொதிந்துள்ள அரிய கருத்துக்களை வாசித்து அறிக.

## 1.7.3. கல்வி விழிப்புணர்வும்—முக்கியத்துவமும்

‘இளமையில் கல்’: ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?’ ‘வித்தை விரும்பு’: ‘எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்’. ‘எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்’. ‘கல்விக்கழகு கசடற மொழிதல்’. ‘பிச்சை புகினும் கற்கை நன்றே’, ‘அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்’ போன்ற பொன் மொழிகள் கல்வியின் முக்கியத்துவம் சங்ககாலத்தில் உணரப்பட்ட நிலையை எடுத்துரைக்கின்றன.

‘‘கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுள் பிறந்த பதர் ஆகுமே’’ ‘எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியில் கற்றோரை மேல் வருக என்பர்’ ‘கல்வி கரையில கற்பவர் நாள் சில’, ‘‘பிதா விரும்புவது வித்தையே’’ ‘‘கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு’’, ‘ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமைக்கும் ஏமாப்புடைத்து’’, ‘‘கண்டது கற்கப் பண்டிதன் ஆவாய்’’, என்னும் வரிகள் கல்விக்கு பண்டைத் தமிழகத்திலிருந்த வரவேற்பையும், விழிப்புணர்வையும் எடுத்தியம்புகின்றன.

## 1.7.4. ஆசிரியர்கள்

கற்றறிந்தவர்கள், மொழியிலும் பிற அறிவுப் புலங்களிலும் புலமை மிக்கவர்களாகிப் ‘புலவர்கள்’ என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அறிவு நாட்டத்தால் பல்கலையும் கற்று, வாணாளைக் கரையிலாக் கல்வியைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு கழித்தனர் என்பதை ‘புலமையும் வறுமையும் சேர்ந்தே இருக்கும்’ என்ற பழமொழியினால் நாம் அறியலாம். கல்விச் சாலைகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. கற்றவர்களுக்கும் புலவர்களுக்கும் பரிசும் பதவியும் அரசர்களால் வழங்கப்பட்டன. புலவர்களால் தாம் புகழப்படுவதையும் போற்றப்படுவதையும் அரசர்கள் தம் வாழ்வின் இலட்சியமாகக் கருதினர்.

## 1.7.5. பெண்கல்வி

பெண்களும் கற்றனர். பெண்பால் புலவர்களும் வாழ்ந்தனர். நச்செள்ளையார், வெள்ளிவீதியார், ஆதிமந்தியார், நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், பொன்முடியார் போன்ற பெண் புலவர்களுமிருந்தனர். காக்கைப் பாடினியார் காக்கைப் பாடினியம், சிறுகாக்கைப் பாடினியம் என்ற யாப்பிலக்கண நூல்களை எழுதிப் புகழ் பெற்றார். கல்வி ஒரு பணிக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளத்தான்; வயிற்றை நிரப்பிட, வசதியைப் பெருக்கிட ஊதியம் ஈட்டிடவே என்ற இக்காலம் போலன்றி கற்றனைத்தூறும் அறிவு: கல்வி வாழும் வகையை வாழ்வின் பயனை அடைந்திட பிறவியின் பயனைத் தெரிந்திடவே முயலப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதனைக் 'கற்க, கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற குறளாலும் அறியலாம். வாழ்நாள் முழுவதும் அவர்கள் தொடர்கல்வி மேற்கொண்டனர். அடுத்தடுத்த தலைமுறைக்கு அறிவுக்கொடை வழங்கினர்.

## 1.7.6. பாடப்பொருள்

ஆயிரம் கனவுகள் கண்டு அண்ணாந்து பார்த்து ஆன்மீகப் பயனடையவே கல்வி என்பதாகவன்றி–'வாழ்க்கை வாழ்வதற்கே வருங்காலம் வெல்வதற்கே' என்ற முனைப்புடன் 'அறவழியான் பொருள் ஈட்டுதல்', 'ஈதல், இசைபட வாழ்தல்', 'எய்திய புலமைக்காகப் போற்றப்படுதல்', 'வாழ்வாங்கு வாழ்தல்' புகழ் ஈட்டுதல் போன்ற பயன்நோக்கியல் கல்வியாக தமிழகத்தில் சங்ககாலக் கல்வி அமைந்தது.

வாழ்க்கையை முறைப்படுத்தி இயல்பொத்த இனிய வாழ்வு வாழ நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுதியிடப்பட்டு நிலத்தின் சூழலியலுக்கேற்ப வாழ்வியல் ஒழுக்கக்கூறுகள் ஆலோசிக்கப்பட்டிருந்தமை உலகில் வேறு எந்த நாட்டிலும் நிகழாத வாழ்வியல் அற்புதம் எனலாம். இலக்குகளும் இலக்கியங்களும் அகம், புறம் என்றவாறு சிறப்போடு இயற்றப்பட்டுள்ளமை வியந்து பாராட்டற்பாலதாகும்.

அறிவியல், வான சாத்திரம், கலைகள், கணிதம், இலக்கணம், காப்பியப் படைப்பு, இசை, நாடகம், கூத்து, பாட்டு போல்வன நிலத்திற்கு நிலம் மாறுபட்டன. ஆயகலைகள் அறுபத்து நான்கும் தமிழர்களின் ஆய்வுக்கும், அறிவுக்கும் சாட்சியாய்த் திகழ்கின்றன.

## 1.7.7. ஆசிரியர்–மாணவர் உறவு

ஆசிரியர் மாணவர் உறவு அன்புக்கும், மரியாதைக்கும் பண்புக்கும், பரிவுக்கும் நிலைக்கலமாய் அமைந்தது. நட்புறவு பேணப்பட்டது. கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கல்வியில் பணத்தின் ஆதிக்கம் இல்லை. எளியோரும் தடையில்லாது முயன்று ஏற்றமுறக் கற்றனர். கல்வியில் தன்னை விஞ்சும் மாணவர்கள் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டு மேன்மேலும் உயர வழிகாட்டப்பட்டது. தம்மின்தம் மாணாக்கர் புலமை கண்டுவந்த ஆசிரியரின் பெருந்தன்மை போற்றிப் பின்பற்றத் தக்கதாகும்.

## 1.7.8. பயிற்றுமுறை

வீடு கட்டும் நெறிமுறைகளின்படி கட்டப்படும் மனையின் ஏழில் ஒரு பங்கு தர்மபாகம் என்ற பெயரால் ஒதுக்கப்பட்டு அவற்றை அவ்வீட்டில் இல்லறம் நடத்துவோர் பராமரித்துப் பொதுத் தேவைகளுக்கு இடமளித்தனர். வீடுகள்தோறும் அமைந்திருந்த இவைகள் திண்ணை, முன்றில் எனக் கூறப்பட்டது. இல்லறத்தார் நுழைந்து புழங்கும் வீட்டுத் தலைவாயிலுக்கு வெளியில் அனைவரின் நல்லுபயோகத்திற்கும் அனைத்து வீடுகளிலும் ஏழில் ஒரு பங்கு விகிதப்பரப்பு ஒதுக்கிப் பராமரிக்கப்பட்டது. இத்தகு இடங்களில் பண்டைக் காலத்தில் திண்ணைப் பள்ளிகள் தமிழ்நாட்டில் நடைபெற்றன. அவ்வூர்ப் பகுதியைச் சேர்ந்த பெரியோர் கற்றறிந்த ஆசான்களாக இருந்து அப்பகுதியில் இருபால் பிள்ளைகளையும் ஐந்து வயதில் சேர்த்து கற்பித்து வந்தனர். இவைகள் திண்ணைப் பள்ளிகள் எனப்பட்டன.

எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டன. எழுதவும் படிக்கவும் கணக்கிடவும், குறிக்கவும் அனைத்து மாணவர்களும் அறிந்தார்கள். எடுத்துரைத்தல், எழுதிக்காட்டுதல், மனப்பாடம் செய்தல், ஒப்புவித்தல், விவாதித்தல் என்னும் கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற்றன. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட சுவடிகள் நூல்களாகப் பயன்பட்டன. படியெடுக்கும் பணிகளையும் ஆசிரியர் உதவியுடன் மாணவர்கள் செய்து பல்வேறு நூல்களைக் கற்றனர்.

பயிர்த்தொழிலில் உழவு செய்தல், நாற்றிடுதல், விதைத்தல், நடவு செய்தல், நீர்ப்பாய்ச்சுதல், பயிர்ப் பாதுகாப்பு உத்திகள், தானிய சேகரிப்பு பற்றிய அனைத்து நுட்பங்களும், மாணவர்க்குச் சொல்லித்தரப்பட்டன. நெசவு தொழிலில் பஞ்செடுத்தல், நூல் நூற்றல், தார்திரித்தல், நெசவு நெய்தல் முதலிய தொழில் நுட்பங்களும் சொல்லித்தரப்பட்டன. கைத்தொழில், தொழில் திறமை, நுணுக்கங்கள் கல்வியின் வாயிலாக சொல்லித்தரப்பட்டன. ஏட்டுக் கல்வியாக மட்டுமின்றி சமுதாயத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய புனைபொருள் உற்பத்தி செய்யும் பணிகளாகவும் அவைகள் வளர உதவின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் இல்லாத நேரங்களில் இத்திண்ணைப் பள்ளிகளைச் சட்டாம் பிள்ளை எனும் தலை மாணாக்கர்கள் காலவிரையம் இன்றி நடத்திப் பேருதவி செய்தனர். மூத்த மாணவர்கள் கற்கப் புகும் மாணவர்களுக்கு உடனிருந்து வழிகாட்டும் ஆதரவான அணுகுமுறை காணப்பட்டமை போற்றிப் பின்பற்றத்தக்க முறையாகும்.

பண்டைக்காலக் கல்வி உலகின் பிற நாடுகளில் காணப்பட்டதைக் காட்டிலும் மிகுந்த வேறுபாடுகளுடனும் சிறப்புடனும் தமிழ்நாட்டில் காணப்பட்டது. பாடப்பொருள், மாணவர் சேர்க்கை, பயிற்று முறை, கல்வி நோக்கம் முதலிய பல கூறுகளால் இது பிற கல்வி முறைகளிலிருந்தும் வேறுபட்டுக் காணப்பட்டது. பிற கல்வி முறைகளில் வாய்மொழி, மனப்பாடக் கல்வி வலியுறுத்தப்பட்டது. இங்கு தொன்மையான எழுத்து முறையும், மொழிக்கூறுபாட்டு வசதி வாய்ப்புகளும் மிகுந்திருந்தன. தொன்மையானதோர் மொழியின் வரிவடிவமும் ஒலி வடிவமும் மேம்பட்டு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எழுதுவதற்குப் பதம் செய்யப்பட்ட பனை ஓலைகள் சுவடிகளாகக் கோர்க்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டமை உலகில் வேறெப்பகுதிகளிலும் கையாளப்படாத எளிய உத்தி ஆகும்.

## 1.8. பண்டைய இந்தியக்கல்வி மையங்கள்

முனிவர்களின் வாழிடங்களில் தோன்றிய கல்வி, குகைகளிலும், ஆசிரமங்களிலும், காடுகளிலும், சங்கங்களிலும், விகாரங்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும், தழைத்தோங்கி வளர்ந்து பல பரிமாணங்களை அடைந்தமையைக் கண்டோம். இந்நாட்டின் பண்டைக்காலக் கல்வி ஓர் ஆன்மீக முயற்சியாகவே ஆரம்பித்தது. தனிமனித முயற்சியாக உதயமான இந்தியக் கல்வி இன்றைக்கு அரசின் தலையாயக் கடமையாக, அரசியலமைப்புச் சட்டத்தின் உந்துதல் பெற்று அனைவர்க்கும் தரமான கட்டாயக் கல்வியாக வளர, காலங்கள் தோறும் பலவித மாற்றங்களைப் பெற்று வந்துள்ளதை அறிவது மாணவ ஆசிரியரின் தொலை நோக்குக்கும் ஈடுபாட்டுக்கும் அவசியம் ஆகும். இந்தியாவின் தொன்மைக்காலக் கல்வி உலகின் பல்வேறு பகுதியினின்றும் மாணவர்களை இந்தியாவை நோக்கி ஈர்க்கும் அளவிற்கு வளர்ந்ததை, சில கல்வி மாநகர்களின் பல்கலைக்கழக அளவிலான வளர்ச்சியை வைத்து இங்கு காண்போம்.

### 1. தக்ஷசீலம்

வடமேற்கு இந்தியாவில் காந்தாரத்தின் தலைநகர் தக்ஷசீலம். இது ஒரு தொன்மையான கல்வி நகரம் ஆகும். மஹாபாரதத்தில் இந்நகர் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகர்களின் தலைவனான தக்ஷகா என்பவரின் பெயரிலிருந்து இந்நகர் தன்பெயரைப் பெற்றுள்ளது. இந்நகரில் மிகப்

புராதனமான பல்கலைக்கழகம் அமைந்திருந்தது. இந்தியாவின் பல்வேறு இராஜ்யங்களின் இளவரசர்கள், பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், நூற்றுக்கணக்கில் இங்கு வந்து கூடித் தங்கியிருந்து கல்வி பெற்றனர். தொன்மைக்கால மருத்துவர் ஜீவகர் மற்றும் பரத்வாஜா, அங்குலமாலா, தர்மபாலா ஆகியோர் இங்கு கல்வி கற்றுள்ளனர்.

வேதங்கள், சடங்குகள், பத்து அறிவியல்கள், வில், வாள் போர்முறை, மாயாஜாலம், சாத்திரங்கள், கலைகள் முதலியன கற்றுத் தேர்ந்த பேராசிரியர்களால் இங்கு பயிற்றுவிக்கப்பட்டன. பல நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து வணிகர்கள் வாணிபம் செய்த வாணிப நகரமாகவும் இது திகழ்கிறது. சந்திரகுப்த மௌரியரை சாணக்கியர் தக்ஷ சீலத்திற்கு அழைத்துச் சென்று கல்வி கற்கச் சேர்ப்பித்தார். பாடலிபுத்திரம், ராஜகிருகம், காசி, மிதிலை, அவந்தி, கோசலம், தென்னிந்தியா ஆகிய பகுதிகளிலிருந்து வந்தும் கல்வி கற்றனர். இது அந்நாளில் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக விளங்கியது. மௌரிய அரசர்களுக்குப் பின் பாக்டிரிய அரசனால் ஆளப்பட்டது. தக்ஷசீலக் கலைப்பாணி, காந்தாரக் கலைப்பாணி, யுனானி காலச்சாரமும் இங்கு பரவியிருந்தது. இந்தியாவின் வடமேற்கு எல்லை வழியில் அமைந்திருந்ததால் பல மேலை நாட்டினரோடு தொடர்பில் இருந்தது. புத்தரின் தொன்மைக் காலச் சிலைகள் பல இங்கு காணப்படுகின்றன.

தக்ஷசீலத்தில் கல்வி குருகுலப் பாணியில் வழங்கப்பட்டது. ஒவ்வொரு குருவும் தம் தம் சிறப்புப் பாடத்தைக் கற்பித்தனர். அப்பாடத்தை விரும்பும் மாணவர்கள் அவரிடம் சேர்ந்து படித்தனர். ஒவ்வொரு ஆசிரியரிடமும் 20 முதல் 300 மாணவர்கள் வரை சேர்ந்து விடுதிகளில் இருந்து கல்வி கற்றனர்.

இலக்கியங்கள், தொழில்கல்வி, மருத்துவக் கல்வி, ஓவியம், வானவியல், இலக்கணம், அரசியல், ஆயுர்வேதம், அறுவை சிகிச்சை, போர்முறை, கலை, அறிவியல் ஆகியவை சிறப்புப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. பிரம்மி, பிராகிருதம், சமஸ்கிருதம், பாலி ஆகியவை போதனா மொழிகளாக இருந்தன.

கல்விக்குக் கட்டணம் ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டது. கட்டணம் செலுத்த இயலாதோர் கடன் கூறியும், உடல் உழைப்பு செய்தும் கற்றனர். குருவின் இல்லத்திலேயே தங்கிப் படிப்போர் அதிகக் கட்டணம் செலுத்தினர். வெளியில் தங்கியும் கல்வி கற்றனர். சிலமாணவர்கள் வெவ்வேறு சிறப்புப் பாடங்களை வெவ்வேறு சிறப்புக் குருவிடம் கட்டணம் செலுத்திக் கற்றனர்.

இரவு நேரங்களிலும் வகுப்புகள் நடைபெற்றன. சுழற்சி (Shift) முறையும் இங்கு நடைமுறையில் இருந்ததாகத் தெரிகிறது. அரசர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் விளங்க அக்காலத்தில் கல்வி இன்றியமையாத தகுதியென முக்கியத்துவம் பெற்றது.

## 2. காசி

கங்கை நதிக்கரையில் அமைந்திருந்த தொன்மை நகரமான காசி, மிகப்பெரிய பிராமணக் கல்வி மையமாகத் திகழ்ந்தது. கஸ்யர்கள் என்ற மரபினர் இந்நகரில் வாழ்ந்திருந்ததால் இந்நகர் காசி எனப்பட்டது. வருணா, அசி ஆகிய இரு நதிகளுக்கும் இடைப்பட்ட பகுதி என்பதால் இது வாரணாசி என்றும் அழைக்கப்பட்டது. சுங்கர்கள், கன்வர்கள், குஷானர்கள், குப்தர்கள் முதலிய பல வமிசத்தினரின ஆட்சியின் கீழும் இந்நகரம் சிறப்புற்று விளங்கியது. மக்கள் தொகை மிக்க, வாணிபம் சிறந்த வளமான, நகரமாக இருந்ததோடு சிறந்ததோர் கல்விமையமாகவும் நெடுங்காலம் விளங்கிய பெருமை காசிக்கு உண்டு. இங்கு பல குருகுலங்கள் நடைபெற்றன. பலமொழி வல்லுநர்களும் சமயத் தலைவர்களும் புகழ்பெற்ற குருக்களும் இங்கு வாழ்ந்திருந்தனர். புகழ்பெற்ற

ஆசிரியர்களிடம் வேதங்களையும் உபவேதங்களையும், பிராமணங்களையும், உபநிடதங்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த மாணவர்கள் கற்றுத் தேர்ந்தனர். இங்கு கற்றுத் தேர்ந்த கல்விமான்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் சென்று பணியாற்றினர். இங்கு வில், வாள் பயிற்சியும், ஓவியம், நடனம், ஆயுர்வேதம், இசை, கைத்தொழில்கள் போன்ற பதினெட்டு கலைகள் பயிற்றுவிக்கப்பட்டன. மாணவர்கள் அடக்கம், பணிவு, ஒழுக்கத்துடன் விளங்கினர். கல்வி நாடும் மாணவர்கள் அனைவரும் கூடும் பல்கலை மையமாக இந்நகரம் சிறப்புற்றிருந்தது. மாணவர்கள் ஏழு ஆண்டுகள் வரை தங்கிப் பயின்றனர். தென்னிந்தியாவிலிருந்து சென்ற ஆதிசங்கரரும் இந்நகரில் தங்கிக் கல்விப் பணியாற்றித் தனது அத்வைதக் கருத்துக்களை வெளியிட்டார்.

## 3. மிதிலை

இந்தியாவின் புகழ்பெற் கல்வி நகரங்களுள் மிதிலையும் ஒன்று. இங்கு பிராமணக் கல்வி தழைத்தது. பல அறிஞர்கள் கூடிச் சமயக் கருத்துக்களை விவாதித்துக் கற்பிக்கும் முறை பின்பற்றப்பட்டது. ஆன்மிகச் சிந்தனையாளர்களின் படைப்புகள் பல இங்கு வெளியாயின.

பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த மாணவர்கள் இங்கு தங்கிப் பயின்றனர். இளவரசர்கள் தங்கிப் பல்கலையும் பயிலும் பட்டணமாக இது அமைந்தது. வித்யாபதி, ஜெயதேவர், போன்றோர் இங்கு தங்கி தங்கள் படைப்புகளை எழுதினர். பண்டிதர் கணேச உபாத்யாயரின் ஜத்வசிந்தாமணி என்ற நூல் இங்கிருந்து எழுதப்பட்டதாகும். இங்குக் கல்வி பயின்று முடித்து வெளிவருபவர்களுக்கு ‘ஞாதகாஸ்’ என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## 4. நாலந்தா பல்கலைக்கழகம்

தற்கால பீகார் மாநிலத்தில் அந்நாளில் முதலாம் குமாரகுப்தர் என்ற மன்னரால் நாலந்தா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இது உலகப் புகழ்பெற்ற மகாயான பௌத்தக் கல்வி மையமாகும்.

இங்கு சீனப் பயணிகளான பாகியானும், பின்னர் ஹர்ஷர் காலத்தில் யுவான்ஸ்வாங்கும் இப்பல்கலைக்கழகத்தைப் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார்கள். மாணவர் ஆசிரியரின் விகிதம் 1:8 என்பதாக அமைந்திருந்தது. 1500 ஆசிரியர்களிடம் 10,000 மாணவர்களும் தங்கி கல்விப் பணி மேற்கொண்டனர்.

காஞ்சிபுரத்திலிருந்து சென்ற கல்வியாளர் தர்மபாலர் நாலந்தாவில் துணைவேந்தராகச் செயலாற்றினர். நாலந்தாவிற்கு வந்த யுவான்ஸ்சுவாங் சீல பத்திரர் என்ற துணை வேந்தரிடம் யோகக்கலை பயின்றார்.

மாணவர்களின் திறமையையும் ஆர்வத்தையும் சோதித்த பின்னரே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்பணியைச் செய்ய தேர்வுக்குழு ஒன்று செயல்பட்டது. இங்கு சேரும் மாணவர்கள் 12 ஆண்டுகள் தங்கித் தொடர்கல்வி கற்றனர்.

அசோகனின் தர்ம சக்கரத்தைப் போன்றதோர் கட்டட அமைப்பை இப்பல்கலைக்கழகம் பெற்றிருந்தது. இந்நிறுவனத்தின் பராமரிப்புக்காக பல கிராமங்கள் மானியமாக வழங்கப்பட்டன. மாணவர்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

இதன் கட்டிடம் தற்போது சிதைந்த நிலையில் காணப்படுகிறது. இது காண்போரை வியக்க வைப்பதாய் 300–க்கும் மேலான மாணவர் அறைகளையும், மூன்று பெரிய அரங்குகளையும் தன்னகத்தே பெற்றுள்ளது. மூன்று பெரிய அரங்குகள் அரிய நூல்கள் சேகரிப்புடன் அமைந்திலங்கின.

புத்தமதக் கல்விக்கான சிறப்பு நிறுவனமாயினும் வேதங்கள், பிராமணங்கள், வைசேசிகா, யோகா, பூர்வமீமாம்ஸா, உத்திரமீமாம்ஸா, சமண மதத் தத்துவங்கள் ஆகியனவும் பயிற்றுவிக்கப்பட்டன. தர்க்கம், வானசாத்திரம், மருத்துவம், இலக்கணம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் போன்றவைகள் கற்பிக்கப்பட்டன. மாணவர் தேர்ச்சிக்கு தேர்வுகள் இடம் பெற்றன. சீனா, திபெத், மங்கோலியா, கொரியா, இலங்கை, ஜாவா, சுமத்ரா போன்ற பிற நாட்டு மாணவர்களும் இங்கு வந்து தங்கிப் படித்தனர்.

உலகச் சிறப்பு வாய்ந்த இப்பல்கலைக்கழகம் பக்தியார் கில்ஜி படையெடுப்பின் போது அழித்து நாசமாக்கப்பட்டது. கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. நூலகங்கள் தீயிடப்பட்டன. மாணவர் சேர்க்கையும் தடைப்பட்டது.

## 5. விக்ரமசீலா

மகதநாட்டின் பால வம்சத்து மன்னர் தர்மபாலர் விக்ரமசீலத்தில் விகாரம் அமைத்துப் பல்கலைக்கழகமாக மாற்றினார். 114 பேராசிரியர்கள் இங்கு பணி செய்தனர். இப்பல்கலைக் கழக மாணவர் தீபங்வார் என்ற துறவி திபெத் சென்று புத்தமத விளக்கங்களை அளித்தார். இங்கு 3000 மாணவர்கள் பயின்றனர். மிகச்சிறந்த முறையில் இங்கு உயர் படிப்புக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. வியாகரணம், மெய்யறிவியல், தர்க்கவியல், தத்துவங்கள், தனித்தனியே சிறப்பு வகுப்புகளில் கற்பிக்கப்பட்டன. இங்கு ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

**6.** ஓடாண்டபுரி, ஜகத்வாலா, வல்லபி, காஞ்சிபுரம் போன்ற நகரங்களிலும் இது போன்ற சிறப்புக் கல்வி மையங்கள் செயல்பட்டன. பெரிய நூலகங்கள், விடுதிகள் இணைக்கப்பட்டிருந்தன. உள்நாட்டு அறிஞர்களும், வெளிநாட்டு மாணவர்களும் இங்கு வந்து தங்கி கற்றனர். இங்கிருந்து பல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிநாடுகள் பயன்பெற அனுப்பி வைக்கப்பட்டன.

சமயச் சகிப்புத்தன்மையுடன், அறிவு நுட்பம் போற்றப்பட்டு இந்நிறுவனங்களில் மேம்பட்டது. இந்நிறுவனங்களுடன் தெய்வீகத் தொழுகை இடங்களும், தியான மண்டபங்களும் இணைந்து இருந்தன. தொண்டு நோக்கத்திலேயே இந்நிறுவனங்கள் செயல்பட்டன. தற்காலத்திலுள்ளது போல் இலாப நோக்கம் அப்போது சிறிதும் இல்லாமை போற்றத்தக்கதொன்றாகும்.

பொதுவாகப் பண்டைய காலம் தொட்டு மக்களாட்சி மலரும் வரை இந்தியாவில் கல்வி தனிநபர் ஆர்வம் சார்ந்ததாகவும், குடிமக்கள் முயற்சியையும் விருப்பத்தையும் அடியொற்றி நிற்பதாகவுமே அமைந்திருந்தது எனலாம். கல்வி முயற்சிகள் சமுதாயப் புரவலத்தையும், ஆர்வலர்களின் கொடையையும், செல்வந்தர்களின் தொண்டு முயற்சிகளையும், வணிகர்களின் நிதி உதவியையும் சார்ந்தே அமைந்தன. முடியாட்சி நடத்திய மாநிலங்களில் கூட தம் நல்லாட்சி கருதி, ஊழியர்களின் திறன் கருதியே கல்வியில் ஈடுபாடு காட்டினர்.

## 1.9.1. அரச வம்சங்களும் கல்வியும்

பிராமணக் கல்விக் காலத்தில், கல்வி ஒரு சாராரின் உரிமையாய் நின்றது. பௌத்த கல்வி ஆன்மீக நாட்டமுள்ள அனைவரது மேம்பாட்டுக்கும், வாழ்க்கையின் உச்ச பயனடைவிற்கும் ஒரு பாலமாக அமைந்தது. அருள் நெஞ்சங்கொண்ட துறவிகளின் தொண்டுக் கொடையைத் தழுவி நின்றது. சமணக் கல்விக் காலத்தில் கல்வி ஆன்மாவை அதன் தளைகளிலிருந்து விடுவிக்கும் சாஸ்திர தானமாக இருந்தது.

சங்க காலத் தமிழகத்தில் கல்வி ஒரு தனிமனித மேம்பாட்டு முயற்சியாகவும் சுயச் சார்பையும் தன்மதிப்பையும் வழங்கும் செல்வமாகவும், 'வாழ்க்கை உலகோடு பொருத்தி

வாழ்வதற்கே’ என்ற முனைப்பை உண்டாக்குவதாகவும் அமைந்தது. அடுத்தடுத்து வந்த காலக்கட்டங்களில் கல்வி சமுதாய நலவாழ்விற்கு ஒரு தகுதியாகவும், மனித நல மேம்பாட்டுயர்வுக்கொரு ஓடுதளமாகவும் விளங்கியது.

சிற்றரசுகள் பரப்பில் விரிந்த பேரரசுகளாகி மன்னர்களின் முனைப்புக்கும் விஸ்தரிப்பு நோக்கத்திற்கும் இடமளித்தன. நல்லாட்சி நடத்தும் செங்கோலர்களான அரசர்கள் அறிவார்ந்த நல்ல குடிமக்களின் அமைதியான நல்லாட்சிக்கும், பற்றுமிக்க குடித்தனத்திற்கும் தகுதியானவர்கள் என்ற நோக்கில் கல்விப் புரவலர்களாகத் தங்களை மன்னர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டனர். மக்களின் கல்வி ஆராய்ச்சி நாட்டின் வளத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வழிகோலுகிறது என்பதை முடி மன்னர்களும் மற்றையோரும் உணரத் தலைப்பட்டனர்.

மன்னர்களின் குடிபுரக்கும் காவலுணர்வினால் கல்வி மான்யங்கள் பல வழங்கப்பட்டன. இறையிலி நிலங்களாகவும், பள்ளிக் கொடைகளாகவும், தொண்டு நல்லுள்ள தர்மங்களாகவும் பலகாலும் வழங்கிக் கல்வியை வளர்த்தனர். கல்வியை நேரடியாக கட்டாயப்படுத்தாமல் கலையார்வம், சங்கீதம், நாட்டியம், நாடகம் பல்கலைப் படைப்பாகவும், அறிவியல், சாஸ்திரம், சிற்பம், ஓவியம், இலக்கியம் என்றவாறு செயலாக்கக் கல்வியை வமிசத்திற்கு வமிசம், மன்னருக்கு மன்னர் கல்வி விருப்பார்வங்கள் பரவலாக வேறுபட்டன. எனினும் கல்விப் பெருக்கம் ஆட்சி செய்த மன்னர்களின் அருள் உள்ளத்தின் வெளிப்பாடாக அமைந்தது.

### 1.9.2. பல்லவர்கள் காலம்

பல்லவர்கள், கல்வியில் கரையிலாக் காஞ்சி மாநகரைக் கல்விக் கேந்திரமாக்கினர். சமஸ்கிருத கல்வி வெகுவாக விரிவடைந்து வளர்ந்தது. மறையவர்களின் கல்வியறிவும் இலக்கிய படைப்பும் வெகுவாக வளர்க்கப்பட்டன. 12 ஆழ்வார்களும், 63 நாயன்மார்களும் பக்தி இயக்கத்தை தொடங்கி பக்திக் கல்வியை வளர்த்தனர்.

### 1.9.3. சோழர்கள் காலம்

சோழர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் தொகுக்கப்பட்டு திவ்யப் பிரபந்தமும், பெரிய புராணமும், தொகையடியார் தம் தொண்டுக் கொடைகளும் மேலோங்கின. வேத பாட சாலைகளும் கல்லாரையும் கட்டியிழுத்து நலம் பல கற்பிக்கும் புராணச் சொற்பொழிவு, அருளுரை வழங்கும் களமாகத் திகழ்ந்தன. பரவலான நல்லறக் கோட்பாடுகளும் நன்னெறிகளும் வளர்ச்சியடைந்தன.

### 1.9.4. விஜயநகரப் பேரரசுக்காலம்

விஜயநகர நாயக்கர்கள் காலத்தில் அரசர்கள் கல்விக்கு ஊக்கம் அளித்தனர். மதுரை புகழ்மிக்கதோர் கல்வி மையமாய்த் திகழ்ந்தது. 10,000 பிராமணச் சிறுவர்கள் கல்வி கற்றனர். நாயக்க மன்னர்களும், மடங்களும் பிராமணர்களின் சமயக் கல்வியை மேம்படுத்தினர். அதில் மருத்துவம், தத்துவம், சிற்பம், வானநூல், இசை, கலைகள் முதலியன போதிக்கப்பட்டன. பாரசீகம், அராபி, தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, ஹிந்தி, ஆங்கிலம் முதலிய மொழிகள் கற்பிக்கப்பட்டன. சரஸ்வதி மஹால் நூலகம் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் நிறுவப்பட்டது. இதில் 22000 கையெழுத்து பிரதிகள் உள்ளன. 25,000 வடமொழி இலக்கியங்கள் பதினாறு இந்திய மொழிகளில் பெயர்த்தெழுதப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. 1805–ல் சரபோஜி தேவநாகரி எழுத்து அச்சகம் ஒன்றை நிறுவினார்.

### 1.9.5. முகம்மதியர் கல்வி

கி.பி. 712ல் நிகழ்த்தப்பட்ட அரேபியப் படையெடுப்பினால் அரேபியரின் ஊடுருவலும் பின்னர் ஏற்பட்ட கஜினியின் படையெடுப்புகளினாலும் அதனைத் தொடர்ந்து அடிமைவம்சம், கில்ஜிவம்சம், துக்ளக்வம்சம் போன்ற சுல்தானியரின் காலத்தில் ஏற்பட்ட விளைவுகளாலும் இந்நாட்டின் கல்வியில் பல மாறுதல்கள் தோன்றின. சுல்தானியரின் ஊடுருவல் வழியாக ஏற்பட்ட அரேபிய, பாரசீகக் கல்வி முறை இந்தியாவின் பாரம்பரியக் கல்வி முறைக்குப் பெரும் தடையாக இருந்தது. அரேபியர் இந்து, பௌத்த, சமணக்கல்வி நிலையங்களைத் தாக்கி அழித்தனர். உலகப் புகழ்பெற்ற நாலந்தா, வல்லபி, விக்ரமசீலா போன்ற கல்வி மையங்கள் சிதைக்கப்பட்டன. சுல்தான்கள் தம் மதத்தின் மேலாதிக்கத்தால் குர்ரான் கல்வியை போதித்தனர்.

### 1.9.6. மொகலாயர் காலக்கல்வி

முகம்மதியரின் காலத்தைவிட மொகலாயர்களின் காலத்தில் கல்வி அதிக வளர்ச்சி கண்டது எனலாம். அக்பர் காலம் முதல் கல்வி வளர்ச்சி தேசிய அளவில் பரவியது. மக்களின் மனம், தேவை முதலியவற்றை அறிந்து செயல்பட பாடத்திட்டத்தை வளர்த்தார். பதேபூர்சிக்ரி என்ற புதிய நகரம் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் பதேபூர்சிக்ரியில் வந்து படித்தனர். அனைத்து மத அறிஞர்களையும் அறிவியல் மேதைகளையும் சமய சகிப்புத் தன்மையுடன் அரவணைத்து கல்வி வளர்ச்சியைக் கண்காணித்து ஊக்கம் அளித்தார்.

வடமொழி நூல்களும், சமண, பௌத்த, கிறித்துவ நூல்களும் ஊக்குவிக்கப்பட்டன. இசை, எழுத்து, ஓவியம், தத்துவம், அறிவியல், மொழி வளர்ச்சி என அனைத்தின் வளர்ச்சிக்கும் அக்பர் ஊக்கமளித்தார்.

ஜஹாங்கீர் காலத்தில் பல கல்லூரிகள் உருவாயின. வாரிசு இல்லாமல் இறப்பவர்களின் செல்வங்கள் கல்வி நிறுவனங்களுக்குச் சேரும்படி சட்டம் இயற்றப்பட்டது. ஷாஜகானின் இளவரசன் தாராஷூகோ மிகச் சிறந்த கல்விமான். வடமொழிப் புலமை பெற்றிருந்தார். உபநிடதங்கள், வேதங்கள், பகவத் கீதை போன்றவை பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

### நான்குவகைக் கல்விச்சாலைகள்

இஸ்லாமியக் கல்வி முறைப்படி மக்தப்கள், கான்வாக்கள், மதரசாக்கள், இந்துப் பள்ளிகள் என்ற நான்கு வகைப் பள்ளிகளும் அக்பர் காலம் வரை தொடர்ந்தன. பாரசீக மொழி பயிற்று மொழியாக இருந்தது. பாரசீகம் கற்பிக்க வெளிநாடுகளிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். இந்துக் கோயில்களிலும், மடங்களிலும், இந்து மக்களின் மத சம்பந்தமான பாடங்கள் போதிக்கப்பட்டன.

அக்பர் காலத்தில் இம்முறை மாற்றியமைக்கப்பட்டது. இஸ்லாமியக் கல்வி முறைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தால் மக்களிடையே குறுகிய மனப்பான்மை ஏற்பட்டு அரசாட்சியை விரும்பி ஏற்கமாட்டார்கள் என்று அக்பர் கருதினார். எனவே இந்திய வரலாறு, தத்துவம், அறநெறி, சமூகவியல், வானவியல், மருத்துவம், சித்தாந்தம், பௌதிகம் போன்றவற்றைக் கற்கவேண்டுமென நடைமுறைப்படுத்தினார். உயர்கல்வி பயிற்றும் மதரசாக்களில் இந்துக்களும் சேர்ந்து படிக்க அனுமதித்தனர். இது அக்பர் ஏற்படுத்திய மிகப்பெரும் கல்விச் சீர்திருத்தமாகும்.

ஆங்கிலேயேர் இந்தியாவில் வாணிப முயற்சியுடன் குடியேறிய போது, இந்தியக் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தனியார் வசமே இருந்தன. அப்போது பாடசாலைகள், மக்தபுகள், மதரசாக்கள் என மூன்று வகையான கல்விச் சாலைகள் செயல்பட்டன. இவை முறை சார்ந்த,

முறைசாராத கல்விச் சாலைகளாக இருந்தன. கிழக்கிந்திய வாணிபக் கழகம் இவற்றின்பால் எந்தவித ஈடுபாடும் இன்றி இருந்தது.

அவரவர் குலத் தொழிலுக்குத் தேவையான அடிப்படைகளைக் கற்கும் இடங்களாகவே கல்வி நிறுவனங்கள் அமைந்தன. எனினும் எழுதவும், படிக்கவும், கணக்கள் செய்யவும் அனைவரும் கற்றனர். மசூதிகளுடன் இணைந்தமைந்திருந்த மக்தபுகளும், மதரசாவும், பாரசீகம், அரபு மொழி வழியாகக் கல்வி அளித்தன.

## 1.10. வணிக நிறுவனங்களின் கல்வி முயற்சிகள்

1498–ல் போர்த்துக்கீசியர்கள் இந்தியா வந்தடைந்தனர். பிரதிநிதியான அல்புகர்க் என்பார் பள்ளிகளைத் திறக்கச் செய்தார். அவர்கள் கல்வி மூலமாகக் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் முயற்சியில் இறங்கினர். சமயப் பரப்புக் குழுவினர் பல பள்ளிகளை இந்நோக்கில் திறந்தனர். பைபிள் கற்றிட அங்கு வழிவகை செய்யப்பட்டது. சுவாட்ஸ் என்னும் சமயப் பரப்பாளர் கல்வி மையங்களை அதிக அளவில் தொடங்கினார்.

## காலனி ஆதிக்க காலக் கல்வி நோக்கங்கள்

1665ல் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாக இயக்குநர்கள் இந்தியாவை ஆளும் உரிமையைக் கைக் கொண்டனர். அவர்கள் கல்வி நிலையில் மாற்றமேதுமின்றி உள்ளதையே தொடரச் செய்தனர். அவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கீழிருந்து பணியாற்றத் தேவையான பணியாளர்களைத் தயாரிக்கும் நோக்கிலேயே கல்வி முயற்சிகளை மேற்கொண்டனர். தங்களாட்சியை வலுப்படுத்திக் கொள்ள பல உத்திகளையும் குயுக்திகளையும் கையாண்டனர். அவர்தம் கல்வி முயற்சியும் இதற்கு விலக்கல்ல. இப்பள்ளிகளில் ஆங்கிலக் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. சுதேசி உணர்வும், விடுதலை வேட்கையும் அந்நிய ஆட்சி எதிர்ப்பும் இந்தியரிடம் தோன்றாத தன்மையையும் மாறாக ஆங்கிலேயரை விரும்பும் பணிவு கொள்ளும் சொன்னதைச் செய்யும் மனப்பான்மையையும் வளர்க்கும் கல்வியையே தர முன்வந்தனர். இந்நோக்கிலேயே 1781ல் கல்கத்தாவில் மதரசா பள்ளியை வாரன்ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தி இதன் மூலம் இஸ்லாமியரை மனநிறைவு கொள்ளவும் செய்தார். அதன் பராமரிப்புக்காக ரூ. 3000 மானியத்தையும் வழங்கினார். 1784ல் தஞ்சையில் சல்லிவன் என்பார் உயர்குடி மாணவர்களுக்கு ஓர் ஆங்கிலப் பள்ளியை நிறுவினார். 1785 ல் சர்வில்லியம் ஜோன்ஸ் ''வங்காள ஆசியக் கழகம்'' என்ற அமைப்பை நிறுவினார். ஜான் ஓவன் பள்ளிகள் நிறுவி ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

1792ல் இந்தியருக்கான கல்வி முறைபற்றி இங்கிலாந்து பாராளுமன்றம் விவாதித்தது. இந்தியாவுக்கு பள்ளி ஆசிரியர்களையும் சமயப் பரப்பாளர்களையும் அனுப்பி இந்தியர்களுக்குக் கல்வி புகட்டலாம் என்ற கருத்தைத் தெரிவித்தது. இந்தியர்களுக்குப் போதுமான அறக்கருத்து நம்பிக்கை ஏற்கனவே உள்ளதெனக் கூறி உறுப்பினர்கள் இதனை எதிர்த்தனர்.

1800ல் கல்கத்தாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவன ஊழியர்க்கென ஒரு கல்லூரியை வெல்லெஸ்லி நிறுவினார். இது அரசு ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியை அளித்தது. சார்லஸ் கிராண்ட் என்பவர் இந்தியருக்கு ஆங்கில மொழி கற்பிக்க வேண்டுமென ஆங்கில அரசுக்குக் கோரிக்கை விடுத்தார். 1813ல் பட்டயச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் 1823 வரை அதன்படி ஒதுக்கப்பட்ட ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்படவில்லை. மேல்நாட்டுக் கல்வி முறையே இந்தியாவுக்கு ஏற்றதென மெக்காலே பிரபு வலியுறுத்தினார். 1835ல் வில்லியம் பெண்டிங்கின் ஆணைப்படி ஆங்கிலம் ஆட்சிமொழி ஆயிற்று.

### 1.10.1. சர் சார்லஸ் உட் அறிக்கை–1854

1854 ஆம் ஆண்டு சர் சார்லஸ் உட் என்பவரின் கல்வி அறிக்கை வெளியிடப்பட்டது. இதன்படி இந்தியக் கல்வி வளர்ச்சி ஆங்கில அரசின் பொறுப்பாக்கப்பட்டது. அனைவரும் தடையின்றிக் கல்வி பெற வழிவகை செய்யப்பட்டது. இவ்வறிக்கைக்குப் பின்னரே இந்தியக் கல்வி ஒரு திட்டமிட்ட கல்வியாக உருப்பெறத் தொடங்கியது.

### 1.10.2. கிறிஸ்தவர்களின் கல்வித்தொண்டு

#### போர்த்துக்கீசியர்

வணிக நிறுவனங்களுடன் வந்த சமயப் பற்றும் அன்புள்ளமும் கொண்ட கிறித்தவப் பாதிரியார்கள் இங்கிருந்த மக்களுக்கு சமயக் கல்வியுடன் எழுத்தறிவுக் கல்வியையும் ஒன்றுக்கொன்று சார்வாய்த் தர முற்பட்டனர். 1542ல் வந்த போர்த்துக்கீசியரான புனித பிரான்சிஸ் சேவியர் கிராமப் பகுதிகளில் விவிலியத்தைப் போதித்தார். கொச்சினில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவினார். மும்பை, கோவா, டாமன், டையூ, சிட்டகாங், ஹுக்ளி போன்ற இடங்களில் தொடக்கப் பள்ளிகளை நிறுவினார். பைபிளைப் பின்பற்றுவோரின் குழந்தைகளுக்குக் கல்வியை இலவசமாக வழங்கினார்.

#### டச்சுக்காரர்கள்

ஹாலந்து நாட்டைச் சேர்ந்த இவர்கள் சின்சுரா, ஹுக்ளி, நாகப்பட்டினம், தரங்கம்பாடி ஆகிய இடங்களில் கல்வி நிலையங்களை ஏற்படுத்தினர். அவற்றில் தம் நாட்டிலிருந்து வந்த பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. இந்தியர் சிலருக்கும் இதில் கல்வி பயில வாய்ப்புத் தரப்பட்டது.

### 1.10.3. பிரெஞ்சுக்காரர்கள்

சூரத், மசூலிப்பட்டினம், சந்திரநாகூர், பாலசூர், காசிம்பஜார், புதுச்சேரி, மாஹி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் வாணிப மையங்களை நிறுவிய இவர்கள் அப்பகுதிகளில் எல்லாம் பள்ளிகளையும் நிறுவி முன்வரும் இந்தியர்கள், அனைவர்க்கும் கல்வி கற்பித்தனர். அப்பள்ளிகளில் வட்டார மொழிகளும், கிறித்துவ போதனைகளும் கற்றுத் தரப்பட்டன.

### 1.10.4. டென்மார்க் நாட்டுக்காரர்கள்

இவர்கள் திருவாங்கூர், செராம்பூர் ஆகிய ஊர்களில் சமயப்பள்ளி, கல்விப்பணி ஆகியவற்றை மேற்கொண்டனர். 1706ல் ஸீகன்பால்க், புளூட்சான் எனும் ஜெர்மானியர்கள் டேனிஷ் நாட்டின் உதவியுடன் இந்தியக் குழந்தைகளுக்கான பள்ளிகள் துவக்கினர். 1727ல் ஸ்சூல்ஸ் என்ற ஜெர்மானியரின் முயற்சியால் சென்னை, கடலூர், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் பள்ளிகளைத் திறக்கப்பட்டன. இவைகள் பெரும்பாலும் கிறிஸ்துவ சமயப்பரப்பு மையங்களாகத் திகழ்ந்தன. எண் எழுத்தறிவுக் கல்வி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 1.10.5. லண்டன் சமயப் பரப்பாளர் சங்கம்

இச்சங்கத்தினர் சின்சுராவிற்கு அருகில் 30 தொடக்கப் பள்ளிகளைத் துவக்கினர். 3000 மாணவர்கள் அவற்றில் பயின்றனர். 1824ல் மகளிர்க்கென 37 பள்ளிகளைத் தொடங்கினர்.

### 1.10.6. அமெரிக்க மறைபரப்பாளர் சங்கம்

பம்பாயில் டாக்டர் வில்சன் என்பவர் 1829–ல் பெண்களுக்கான 6 பள்ளிகளையும் ஆண்களுக்கு ஒரு பள்ளியையும் நிறுவினார். பஸ்ஸீன், நாசிக் போன்ற இடங்களில் ஆண்களுக்காவும், பெண்களுக்காகவும் பள்ளிகள் திறக்கப்பட்டன. திருநெல்வேலியில் 107 பள்ளிகள் திருச்சபை மறைபரப்பாளர் சங்கத்தால் திறக்கப்பட்டு பரவலான கல்வி வாய்ப்பளித்தனர்.

அமெரிக்க மறை பரப்பாளர் சங்கத்தினர் சென்னை, நாகப்பட்டிணம், கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், சித்தூர், விசாகப்பட்டிணம், கடப்பை, பெல்லாரி போன்ற இடங்களிலும் பள்ளிகளைத் திறந்து கற்பித்தனர்.

இப்பள்ளிகள் சமயப் பரப்பு முயற்சியாக நடைபெற்றன. திட்டமிட்ட பாடப்பொருளைக் கற்பித்தனர். பள்ளிகளின் வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டது. பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டன. மனிதநேயம், மருத்துவம், கல்விப் பணிகளில் ஈடுபட்டனர். மேலை நாட்டுக் கல்வி முறையை இந்தியாவுக்குக் கொண்டு வரக் காரணமாயிருந்தனர்.

இந்தியத் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் அவரது சட்ட அமைச்சராக இருந்த மெக்காலே 1832ல் இந்தியக் கல்வி பற்றிய தமது கொள்கைகளை வெளியிட்டார். இவர் ஆங்கிலக் கல்வியையே வலியுறுத்தினார். கல்வி மதங்களின் பிடியில் இல்லாமல் சுதந்திரத் தன்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்றார். தமது எண்ண ஓட்டங்கள் பலவற்றைத் தமது அறிக்கையில் கூறியுள்ளார். அவற்றில் பொருந்தாத, மாறான நோக்கங்களும் கோட்பாடுகளும் இருக்கவே செய்தன. அதுவரை இந்தியக் கல்வி முறையைப் பின்பற்றும் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட மானியங்களை நிறுத்தி அந்நிதியை ஆங்கில முறைக் கல்வி நிறுவனங்களுக்குச் செலவிட வேண்டுமென்று ஆலோசித்தார். மெக்காலே இந்திய நவீனக் கல்விக்கு அடிக்கல் நாட்டியவர் எனப்படுகிறார்.

## 1.10.7. கீழ்நோக்கிப் பரவும் கல்வி முறை (The Downward Filtration Theory)

கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப சிறந்த வழியாக ஆங்கில மொழி வழிக் கல்வியைக் கொண்டனர். இந்திய மேட்டுக்குடி மக்கள் சமுதாயத்தில் உயர் பொருளாதாரம், பதவித் தகுதியில் உள்ளவர்களின் கொள்கையை அப்படியே பின்பற்றும் இயல்பு உள்ளவர்களாய் இருந்தனர். இதனைக் காட்டி ஆங்கிலேயர்கள் இந்தியர் அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதினர்.

**செயல்**

வணிக நோக்குடையோர் யாவரே ஆயினும் இந்நாட்டின் கல்வியை நிர்வகிக்க ஏற்றவர்களல்லர்–என்ற படிப்பினையை இப்பாடப்பொருள் வழி ஒத்த கூறுகளையும் எதிர்மறைக் கருத்துக்களையும் பட்டிமண்டபம் நடத்தி நிறுவுக.

''உயர் வகுப்பினருக்கு மட்டும் கல்வி அளித்தாலே போதும். பின்னர் அவர்கள் மூலமாகக் கல்வி தானே பரவும்'' இதுவே கீழ்நோக்கிப் பரவும் கல்வி எனப்பட்டது. இம்முறை 1870 வரை ஆங்கில அரசின் கொள்கையாக இருந்தது. ஆங்கிலேய அரசு பின்பற்றிய இந்த ஆட்சி நீட்டிப்பு உத்தி இந்தியர் ஒற்றுமைக்கு குலைப்பு, பிரித்தாளும் சூழ்ச்சி, இந்தியர்களுக்கு தேசாபிமானம் வந்துவிடக் கூடாது இந்தியர்களை பிரித்தாள வேண்டும் என்ற வஞ்சகமான கொள்கையால் ஏற்பட்டதாகும். இதனால் இந்தியாவில் சமுதாயச் சிக்கல்களும், பல பின்னடைவுகளும் ஏற்பட்டன.

## 1.10.8. சர் சார்லஸ் உட் என்பாரின் கல்வி அறிக்கை (1854)

இவ்வறிக்கை இந்தியர்க்குக் கல்வியை அளித்து அவர்களை விரைவில் முன்னேற்ற வேண்டும் என்ற நோக்குடையதாய் அமைந்தது. மெக்காலேயின் குறுகிய நோக்கால் விளைந்த தவறுகளைச் சரி செய்யும் நோக்கில் இது அமைந்தது. இந்தியருக்குக் கல்வி வழங்கி, அவர் தம் நன்மைகளைப் பாதுகாத்துத் தர வேண்டிய அரசின் கடமையை இது வலியுறுத்தியது.

ஐரோப்பிய நாடுகளில் படிப்பதைப் போன்ற அறிவியலும், தத்துவக் கோட்பாடுகளும், கலைப்பாடங்களும் இந்தியருக்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறியது. இந்திய மொழிகள் தொடர்ந்து கற்றுத் தரப்படவும் ஆதரவு தந்தது. வட்டார மொழிகளில் தொடக்கப்பள்ளி நிறுவப்பட ஆதரவு அளிக்கப்பட்டது. 1857ல் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய மாநகரங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. முதலில் இப்பல்கலைக்கழகங்கள் தேர்வு நடத்தி சான்றிதழ்களை வழங்கும் பணியைச் செய்தன. இப்பல்கலைக்கழகங்களோடு இணைந்த நிறுவனங்களின் பயின்ற மாணவர்களுக்கு தோவு நடத்தி சான்றிதழ்களையும், பட்டங்களையும் வழங்கின. 1600ல் வணிக நிறுவனங்களாக இந்தியாவிற்கு வந்து இங்கு சிறுகச் சிறுகத் தன்னை வலுப்படுத்திக் கொண்டு இங்கிருந்த பலநிலைமைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்த நாட்டின் செல்வத்தைச் சுரண்டி பல அடக்குமுறை உத்திகளைக் கையாண்டு கல்வி பற்றிய பொருத்தமான பல நன்மைகளைச் செய்ய வேண்டியிருந்த நிலையிலும் ஆங்கிலேய அரசினர் பல தந்திரங்களைக் கையாண்டு கல்வி வழியிலான சுதந்திர உடனடித் தீர்வுகளைத் தள்ளிப் போட்டனர்.

இந்நிலையில் சுமார் 254 ஆண்டுகள் சென்ற பின் வந்த உட்ஸ் அறிக்கை உண்மையிலேயே நல்லெண்ண அடிப்படையில் அமைந்து ஒரு விரும்பத்தக்க கல்வி மாற்றம் உண்டாகி வளர ஏதுவாக இருந்தது என்பதொரு குறிப்பிடத்தக்க உண்மை.

அடுத்தடுத்துப் பின்வரும் அறிக்கைகளும் பரிந்துரைகளும் இந்தியா சுதந்திரம் பெறும் வரையிலும் இடம் பெற்றன.

- 1882ல் ஹண்டர் தலைமையிலான அறிக்கை
- 1899–1905 கர்சன் காலக் கல்வி முன்னேற்றங்கள்
- 1917 சாட்லர் குழுவின் பரிந்துரைகள்
- 1924 ஹர்டாக் குழு அறிக்கை
- 1937 காந்தியடிகளின் வார்தா கல்விமுறை
- 1944 சார்ஜண்ட் குழுவின் பரிந்துரைகள்

**செயல்**

சமயச் சார்புடைய கல்வி–ஆன்மீகக் கல்வி ஒப்பிடுக. இக்கோட்பாட்டை உலகுக்குப் புகட்ட இந்தியக் கல்விக் கொள்கையின் பாரம்பரியக் கல்வித் தகுதியை நிறுவுக.

## 1.11. இந்தியாவின் சமரசக் கல்வித் தத்துவம்

ஆசிரியர்களாவதற்குக் கற்றுத்தேற வேண்டிய அறிவுப் புலங்களில் தத்துவங்களும், கல்வித் தத்துவ அணுகுமுறையும் முக்கியமானதொன்றாகும். மருத்துவக்கல்வி பெறுபவர்களுக்கு உடற்கூறியலறிவும், உயிர்ம வேதியலறிவும் எவ்வளவு அடிப்படையானவைகளோ அவ்வளவு முக்கியமானவைகளாக மெய்ப்பொருளியறிவும் அது சார்ந்த அணுகுமுறையும் அடிப்படையாக ஆசிரியர் கல்வியில் அமைகிறது எனலாம். கல்வித்தத்துவ அறிவுத் தெளிவற்ற ஒருவர் கல்விநுட்பமறிந்தவராக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் அவர் கல்வியாளராக ஆசிரியராக இருத்தல் இயலுவதில்லை. ஆசிரியர்களாக வாழ்நாள் நெடுகிலும் பொருந்திப் பணியாற்றத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அனைவரும் இந்தியாவின் கல்வி அணுகு முறையில் குறிப்பிட்ட கல்வித் தத்துவ அறிஞர்களின் தாக்கத்தை எடுத்தாளுதல் பற்றி இங்கு அறிவோம்.

**செயல்**

கல்வியில் மதநோக்கு ஏற்படுவதால் ஆசிரியர் மாணவர் உறவில் ஏற்படும் எதிரிடைகளை ஆய்ந்து தீர்வுக்குரிய அணுகுமுறைகளை ஆலோசிக்க.

பரவலாகப் பலநாடுகளின் கல்வித் தத்துவங்களை ஆய்கையில் கற்றறிவதற்கு ஏற்ற வகையில் அவற்றைக் கருத்தியல் கொள்கை, உண்மையியல் கொள்கை, இயற்கையியல் கொள்கை, பயனியல் கொள்கை என நான்காக வகுத்தளித்துள்ளனர். இந்நான்கும் ஒன்றுக்கொன்று முழுக்க முழுக்க வேறுபட்டவை அல்ல. இந்நான்கிலுமே ஒரு நாட்டின் தன்மைக்கு ஏற்றவைகளும் ஒத்தவைகளும் இருத்தல் இயல்பே. எனவே இந்திய நாட்டுக் கல்வி அறிஞர்கள் எந்த ஒரு கொள்கையையும் அப்படியே தனியாக எடுத்துக் கொள்ளாமல் அனைத்துக் கோட்பாடுகளிலுமுள்ள ஏற்புடைக் கூறுகளைத் திரட்டி சமரசக் கல்விக் கொள்கையாகப் பறை சாற்றியுள்ளனர். ஆயினும் தொன்மை தொட்டே இந்தியக் கல்வித் தத்துவங்கள் உயர்கருத்தியல், உன்னதக் கோட்பாட்டியல் இறைநிலை எய்துதல் போன்ற விழுமய நோக்கங்களைக் கொண்டதாக இருந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடற்பாலது.

**செயல்கள்**

- ஒரு நாட்டின் எழுச்சியைத் தீர்மானிக்கும் காரணி கல்வி–கல்வியை திசைமாற்றம் வகைமாற்றம் செய்வதன் வாயிலாக அதன் முன்னேற்றத்தை மாற்றி அமைத்தல் எளிது .
- கல்வி நோக்கம், பாடப்பொருள், கற்பித்தல் அணுகுமுறை முதலியனவற்றைத் தக அமைப்பதன் வாயிலாக இந்தியாவை வருங்காலத்தில் விரும்பத்தக்க வகையில் மாற்றியமைக்க இயலும் என்பதை பாடப்பொருள் கொண்டு விளக்குக விவாதித்து நாட்டுப்பற்று மிக்க உன் நண்பருக்கு இது பற்றி விரிவான கடிதம் ஒன்றை எழுதுக .

## 1.11.1. ஜீன் ஜேக்கஸ் ரூசோ (1712–1778)

கல்வியில் இயற்கைக் கொள்கை, கருத்தியல் கொள்கையைப் போலவே மிகவும் தொன்மையானது. கல்வியின் நோக்கங்கள், இலட்சியங்கள், வழிமுறைகள், பயிற்றுமுறைகள் கலைத்திட்டக் கூறுகள், பள்ளிமேலாண்மை முதலிய அனைத்துக் கூறுபாடுகளும் இயற்கையின் இயல்புகளுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்பது இயற்கைக் கோட்பாடு (Naturalism) எனப்படுகிறது. இக்கோட்பாட்டாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் பிரான்சு நாட்டறிஞர் ரூசோ ஆவார்.

இவர் ஐரோப்பாவின் அரசியலில் மிகப் பெரிய திருப்பத்தை விளைவித்த பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமான மக்களுரிமை வேட்பார்வம்மிக்க தத்துவஞானியும் அரசியல் தத்துவ விற்பன்னரும் ஆவார். இவர் எழுதிய நூல்களில் சமூக ஒப்பந்தம் (Social Contract) எமிலி (Emile) என்பன மிகவும் முக்கியமானவை. எமிலி என்னும் நூல் இயற்கை இயலோடு ஒன்றிய கல்விக் கோட்பாடுகளை விளக்கியுரைக்கும் புதின வடிவிலான நூல் ஆகும். இந்நூலில் எமிலி என்னும் கற்பனைப் பாத்திரமான ஒரு குழந்தையின் குழவிப் பருவம், பாலப்பருவம், வளர்இளம் பருவம், இளமைப்பருவம், திருமணவாழ்வு ஆகிய ஐந்து படிநிலைகளில் தமது கல்விக் கருத்துக்களை விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

### ரூசோவின் கல்விக் கருத்துக்கள்

- இயற்கையால் படைக்கப்படுகின்ற அனைத்தும் நல்லவையே. ஆனால் அவைகள் மனிதர்களின் கைகளில் சீரழிகின்றன. மனிதனின் நடைமுறைகளும், விருப்பங்களும்

இயற்கையைச் சீரழிப்பனவாகவே உள்ளன. மாறாக இயற்கையை அணுகி, ஒன்றி இருந்து, அதனை உற்றுநோக்கிப் புரிந்துகொண்டு, அதனிடம் படிப்பினைகளைப் பெற்று, இயற்கையோடு ஒத்திசைந்து வாழ வேண்டும்.

- இயற்கையினின்றும் முரண்படும் மனிதச் செயல்கள், முயற்சிகள், மனிதனுக்கு இன்னலைத் தருவனவாய் உள்ளன. எனவே இன்னல்களிலிருந்து விடுபட இயற்கைக்குத் திரும்புங்கள் என்றார்.

இவரது தத்துவம் சமூக இயற்கையியல், உளவியல் இயற்கையியல், உடலியல் இயற்கையியல் என மூன்று கூறுகளில் அமைந்தது. ஒவ்வொரு புதிய பண்பாடும் பழைய பண்பாட்டின் குழந்தையே என்றார். மனிதன் மனிதனாக வாழ்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இயல்புக்கு மாறானவற்றில் குழந்தையைப் பழக்கி அதன் குழந்தமையை நசுக்கிவிடக்கூடாது. தாவரங்கள், விலங்குகள், பறவைகள் இயற்கைப் பொருள்கள் இவற்றோடு இருந்து பார்த்து அதனைச் சரிவரப் புரிந்து கொள்வதன் மூலம் பலவற்றை மனிதன் கற்றுக் கொள்ளவியலும் என்றார். மனிதரும் சமூகமுமே குழந்தைகளை வீணடிக்கின்றனர். நன்னெறி நல்வாழ்வுக்கு முரண்பாடாகவே நகர வாழ்வு அமைகிறது என்றார். சுதந்திரத்திற்காகவும் சம வாய்ப்புரிமைக்காகவும் இவர் போராடினார். குழந்தையின் ஆற்றல்களின், உறுப்புகளின் இயல்பொத்த வளர்ச்சியே கல்வி என வரையறுத்தார்.

கல்வி என்பது சீலங்களையும் உண்மையும் குழந்தைக்குப் போதிப்பதன்று; மாறாக தீநெறிகளும் பிழைபாடுகளும் குழந்தைகளின் மனத்தை அண்டவிடாமல் காப்பதே கல்வி என்றார். நமது விருப்பு, வெறுப்புகளை அடிப்படையிலேயே குழந்தை அதன் உலகை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று திணிப்பது பாவம் என்று விவாதித்தார்.

“என்னிடத்தில் ஒன்றுமே தெரியாத பனிரெண்டு வயதுச் சிறுவனைத் தாருங்கள் அவனுக்கு பதினைந்து வயது ஆவதற்குள் பிற சிறுவர்கள் தம் பதினைந்து வயதுக்கால நெடுகிலும், உங்களிடம் கற்றறிந்துள்ளவைகளுக்கு ஈடும் எடுப்புமாக கற்றனவற்றை அவன் வாழ்ந்து காட்டுவான். உங்களிடம் படித்தவன் அவற்றை நினைவிலிருந்து சொல்பவனாக மட்டுமே இருப்பான்” என்றார்.

“கல்விக்கு ஒத்தனவற்றை வழங்கிச் செய்விப்பதைக் காட்டிலும் கற்றல் நிகழாமைக்கான காரணங்களைக் கண்டாய்ந்து ஏற்ற சூழலை உருவாக்கித் தருவதே ஒருவரின் சரியான கற்றலுக்கு வழிவகுக்கும்” என்றார். “குழந்தைகள் தங்களுக்கே உரிய உகந்த வழிகளில் கற்றுக் கொள்கின்றனர். உங்கள் பயிற்று வழி முறைகளை அவர்கள் மீது திணிக்கலாகாது; அவ்வாறு செய்தால் அது எதிரிடையான பலன்களையே தரும்” என்றார்.

மாணவன் தனக்குத்தானே படிப்பித்துக் கொள்ளுகிற போது வலுவான நடைமுறைக் கற்றல் நிகழ்கிறது. தம்மில் தாமே உய்த்துணர்ந்து கற்கின்ற வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் வகுத்துத் தருவது ஆசிரியர்களின் பணியாக அமைய வேண்டும் என்றார்.

ஒரு மாணவன் வகுப்பறையில் கற்றுக் கொள்ளும் நன்னெறிகளைக்காட்டிலும் நான்கு மடங்கு கூடுதலாக அவற்றை விளையாட்டு மைதானத்தில் இயல்பாகவே கற்றுக் கொள்கிறான் என்றார். பாடங்களை வாயுரையாக வழங்குவது எதிர்பார்க்கும் பலன்களை அளிக்காது என்றார். துய்த்துக் கற்றலையும் செய்து கற்றலையும் ஆசிரியர்களுக்கு ஆலோசித்தார். கற்போரின் இடத்தில் தன்னை வைத்துப் பார்த்து விளைவுகளை உறுதி செய்து கொண்டே சொல்லித்தர வேண்டும் என்றார். குழந்தைகளைக் குழந்தைகளாகவே பார்த்து, குழந்தைகளாகவே புரிந்து கொண்டு

குழந்தைத் தன்மைகளைப் புறந்தள்ளாது ஏற்றுக் கற்றல் அனுபவங்களை வகுத்து வழங்க வேண்டும் என்றார். மாணவர்களைக் கடிந்துரை செய்வதை அறவே கண்டித்து எழுதினார். சொற்களைக் காட்டிலும் செயல்கள் வலுவாகக் கற்பிக்கின்றன என்பதை ஆசிரியர்கள் என்றென்றும் மனதில் கொள்ள வேண்டும் என்றும் ரூசோ வலியுறுத்தினார். குழந்தைகளை மையமாகக் கொண்டு கல்வி (Child Centred Education) என்ற இன்றைய கல்வி நடைமுறையின் முன்னோடி ரூசோ ஆவார்.

### 1.11.2. ஜான்டூயி (1859–1952)

ஜான்டூயி இங்கிலாந்தில் ஊரகச் சூழலில் கடைக்காரரின் மகனாக எளிய குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே விவாதித்துப் பேசி அறிவதில் விருப்பார்வம் மிக்கவராகக் காணப்பட்டார். தத்துவ இயலில் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பட்டம் பெற்றார். தத்துவ இயல் துறைத் தலைவராக அமெரிக்காவில் சிகாகோ பல்கலைக் கழகத்தில் கல்விப் பணியாற்றினார்.

"சோதித்தறியும் பள்ளியை" (Experimental School) நிறுவி பேரும் புகழும் பெற்றார். தனது அரிய கருத்துக்களாலும், ஆய்வுகளாலும் அமெரிக்கக் கல்வி முறையில் செல்வாக்குடன் பல திருப்பங்களைக் கொண்டு வந்தார். பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பள்ளி நடைமுறைகளைக் கண்டறிந்தார். தனது ஆழ்ந்த அனுபவ அறிவுடன் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட கல்வி நூல்களை எழுதினார்.

டூயி ஒரு பயனியல் வாதியாகத் (Pragmatist) திகழ்ந்தார். பரிசோதித்துச் செய்து பார்த்து அறிவதில் ஆர்வமிக்கவராயிருந்தார். வாழ்க்கையில் எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாகக் கல்வியின் பயன் அமைய வேண்டுமென வாதிட்டு முயன்றார். எல்லாக் காலத்துக்கும் சூழலுக்கும் நல்லவை என்று ஒன்றும் கிடையாது; ஒரு செயல் சரியான செயலா தவறான செயலா என்பதைச் சந்தர்ப்பங்களே தீர்மானிக்கின்றன. இன்றைக்கு சரியானவைகளாகத் தோன்றுபவை நாளைக்கு வேறாகவும் மாறலாம். நாம் அறிகின்ற நிலையில் தீர்க்கமாக ஒன்றைச் சரி/தவறு என்று கூற முடியாது என்று விவாதித்தார். நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராத எதனையும் வேண்டாம் என்றார். உண்மை எது என்பதை அனுபவ வாயிலாகத் தீர்மானிப்பதே சரி என்றார்.

சிந்திப்பது நல்லது, ஆனால் வெற்றுச் சிந்தனைகளைவிட நடைமுறைப்பாடும், செயல்களுமே மேலானவை; சொல்லும் செயலும் ஒன்றையொன்று தழுவி அமைய வேண்டும்; உலகில் அனைத்துமே தற்காலிகமான வாய்ப்புகளே; நிரந்தரம் என்று ஏதும் இல்லை எனத் தெளிவுபடுத்தினார்.

மனிதன் தனித்து வாழ்ந்துவிட முடியாது. மனிதன் கூடி வாழும் விலங்கு; மனிதன் தன் சமூகத்தில் பொருந்தி வாழப் பழக வேண்டும். ஒருவரின் முன்னேற்றத்திற்கு சமுதாயம் மிகவும் உதவியாக அமைவதை அவன் உணர வேண்டும். 'சூழ்நிலையோடு பொருத்தப்பாட்டை அடைய ஒருவர் பெறும் பயிற்சியே கல்வி' என்றார்.

இவர் நடைமுறை வாதத்தை ஊக்குவித்தார். எதையும் சோதித்துச் சரிபார்த்த பின்னரே ஏற்க முடியும் என்றார். சமுதாயத்தின் உண்மைத் தேவைகளை உண்மையிலேயே நிறைவேற்றாதனவற்றை அவர் ஏற்க மறுத்தார். நல்லவைகள் எனப்படுபவை பயனுள்ளவைகளாகவும் இருக்க வேண்டும். பயனுள்ளவைகள் மட்டுமே நல்லவைகள் என முழங்கினார்.

பெறும் அனுபவங்களைத் தொடர்ந்து உரைபார்த்துச் சீரமைப்பதாகக் கல்வி அமைய வேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் தன்னைத் தக அமைத்துக் கொண்டு வாழும் படிப்பை, அணுகுமுறையை ஒருவருக்கு வழங்குவதாகக் கல்வி அமைய வேண்டும் என வலிந்துரைத்தார்.

**செயல் : கருத்தரங்கம்**

இந்தியக் கல்விக் கொள்கையில் மேலோங்கி நிற்பது கருத்தியல் கொள்கையே, இயற்கையியல் கொள்கையே, உண்மைக் கோட்பாடே, பயனளவைக் கோட்பாடே–நிலைநாட்டுக.

## 1.11.3. மரியா மாண்டிசோரி (1870–1952)

இவர் 1870ல் ரோம் நகரில் பிறந்து கற்றுத் தேர்ந்து மனநலம் குன்றிய குழந்தைகளின் காப்பகத்தில் பணியாற்றினார். புலன் உறுப்புகளின் தொய்வான நிலையே கற்கும் திறன் தோய்வுக்குக் காரணமாக அமைகிறது என்றார். அது போன்ற குழந்தைகளுக்கு புலன் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வகுத்துப் பயிற்றித் தீர்வு காண்பதில் ஈடுபட்டார். தான் வழங்கிய பயிற்சிகளின் எடுபடும் தன்மையைச் சோதித்து உறுதி செய்து கொண்ட இவர் அவற்றின் அடிப்படையாகக் கொண்டே தனது கோட்பாடுகளை வடிவமைத்தார். குழந்தைகளின் உடல்வளர்ச்சிப் புள்ளி விவரங்களைப் பதிந்து அவற்றை நுணுகி ஆராய்ந்து புலன் பயிற்சி உத்திகளில் பயன்படுத்தினார். குழந்தைகளோடு உடனிருந்து பழகி உற்றுநோக்கிக் குழந்தை மேம்பாட்டுக்கும், கல்விக்கும் பயன்மிகு கோட்பாடுகளை வழங்கியுள்ளார்.

‘‘குழந்தையின் முழுமையான மலர்ச்சிக்கு உதவியாக இருக்கக் கூடியவைகளை நுணுகி ஆய்ந்து அளித்து குழந்தைகளின் தனித்தன்மைகளை மங்காது, விருத்தி செய்வதே ஏற்புடைய, விளைவுமிக்க கல்வியாகும்’’ என்றார். குழந்தைகளின் வேறுபாடுகளைக் கருதி, வழிகாட்டி, விரும்பத்தக்க அமைவுகளை விருத்தி செய்து தருவனவாக ஆசிரியரின் முயற்சிகள் அமைய வேண்டுமென அறிவுறுத்தினார்.

குழந்தைகள் முழுச் சுதந்திரத்துடன் இருக்க அனுமதிக்கப்படும் போது அதில் அவர்கள் பொருந்தியிருக்கையில் இயல்புக்கு ஒத்த தருணங்களில் குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி வளர்க்க முடியும் என நிரூபித்தார். தற்சார்பும், சுதந்திரமும் குழந்தைகளிடம் அரிய திறன்களை வளர்க்க உதவுகின்றன. சுதந்திரமாக இருப்பது குழந்தைகளின் அடிப்படை உரிமை. அவ்வாறு இருக்க நாம் அவசியம் அனுமதிக்க வேண்டும் என்றார்.

### 1.11.3.1. முழுச் சுதந்திரத்தில் இயல்பான வளர்ச்சிக் கொள்கை

சுதந்திரமான சுய வெளிப்பாட்டுச் சூழல்களில் குழந்தைகள் இயல்பாக இருக்கையில் அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களை உற்றுநோக்கி அவர்தம் உண்மை இயல்புகளை அறிய வேண்டும். சுதந்திரத்தின் வாயிலாகவே உண்மையான கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் குழந்தைகளிடம் வளர்க்க இயலுமென எச்சரித்தார்.

### தானே கற்றல் கொள்கை (Principle of Auto Learning)

சுய கற்றலுக்கு வழி வகுக்கும் முறையே உன்னதமான பயிற்றுமுறை. தனக்கே உரிய தான் விரும்பும் வழியில் தனக்கியன்ற வேகத்தில் கற்பதற்கு வாய்ப்பளித்தால் சுயக்கற்றல் முறை நிகரற்றதாய் அமையும் என்பார். ஆசிரியரைச் சார்ந்திராமலும், அவர் சார்ந்த இறுக்கங்கள் இல்லாமலும் தானே ஈடுபட்டுக் கற்கும் கற்றலே சுயக்கற்றல் என்றார்.

கற்றலுக்கு வழிவகுக்கும் உபகரணம் ஒன்றைத் தானே தயாரித்து, பிழைகளை நீக்கவும் பிழை ஏற்படாது காக்கவும் வழிகோலினார்.

## தசைப்பயிற்சிக் கொள்கை

எழுதுதல், நடத்தல், ஓடுதல், கைவினைகள் போன்ற தசைப்பயிற்சிகள் குழந்தைகளின் சுயச் சார்பை வளர்த்துச் சிறு பிராயத்திலேயே செயலாற்ற வழி கோலுகின்றன. குழந்தைகளின் தன் முனைப்பு ஈடுபாட்டை, ஆர்வத்தை வாய்ப்பளித்து வடிகாலாக்கிப் பயிற்றுவிக்க வேண்டும். ஆர்வத்தடைகள் குழந்தைகளைச் சுணக்கமடையச் செய்கின்றன என்பதை எடுத்துக்காட்டினார்.

## புலன் பயிற்சிக் கொள்கை (Principle of Training of Senses)

ஐம்புலன்களே அறிவின் நுழைவாயில்கள் குழந்தைகளின் மூன்று முதல் ஏழாவது வயது வரையிலான பிராயத்தில் அவர் தம் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன விறுவிறுப்பாகவும், விரைப்பாகவும் இருந்து வினைபடுகின்றன. அப்பருவத்தில் போதிய சரியான வாய்ப்புக்களை அளித்தால் பேரளவில் கற்றலை எளிதில் நிகழ்த்தலாம் என அறிவுறுத்தினார். புலன் உணர்ச்சிகளை துல்லியமாகவும் வேறுபடுத்தியறியும், கூர்மையுடனும் பயன்படுத்துவதால் அறிவுக் கூர்மை தூண்டப்படுகிறது என எடுத்தியம்பினார். குழந்தைகளின் கவனம் பொறிகளின் வயப்பட்டதாக உள்ளன. பொறிகளின் வழித் தூண்டல் தருவதன் வாயிலாக கவனத்தைத் திருப்பவும் கற்றலில் ஈடுபடுத்தவும் விரும்பத்தக்க துலங்கல்களைப் பெறவும் முடியும் என நிரூபித்தார்.

எடை, நிறம், ஒலி, ஒளி, அழுத்தம், வெப்பம் போன்ற வித்தியாசங்களைப் பயன்படுத்தி பொறிகளை மேன்மேலும் பயிற்சியளித்துத் துல்லியமாக்கலாம் என்பதனைச் செயல் விளக்கங்கள் செய்து விளங்க வைத்தார்.

## உருமாற்றம்/உருத்திரிபுக் கொள்கை (Physical Metamorphosis and Psychological Metamorphosis)

குழந்தைப் பருவம் தீவிர தொடர் உருமாற்றம் ஏற்படும் பருவம் ஆகும். பிற எப்பருவத்திலுமில்லாத அளவிற்குக் கூடுதலான உடல் வளர்ச்சியும், பரிமாண மாற்றங்களும் குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்றன. உடலியல் வளர்ச்சி மாற்றங்களைக் குழந்தைகள் அடைகின்றனர். இவ்வளர்மாற்றத் தீவிரத் தொடர்ச்சியை உரிய வழிகளில் வடிகாலாக்கிட உடல் உறுப்புப் பயிற்சிகளை வழங்க வேண்டும். இத்தகு முறையான பயிற்சிகள் குழந்தைகளின் செயலார்வத்தைத் தூண்டி, பணியில் ஈடுபாட்டையும் விருப்பத்தையும் வளர்த்தாக்குகின்றன. இதனை நன்கு புலப்படுத்தி பாலர் கல்வி, அணுகுமுறையில் உளவியல் உடலியல் சார்ந்த பல விரும்பத்தக்க தீர்வுகளைஅறிமுகப்படுத்திய பெருமை மாண்டிசோரி அம்மையாரையே சாரும். இவரது ஆய்வுக்கருத்துக்கள் எக்காலத்துக்கும் ஆசிரியர்களுக்குக் கற்றல் களத்தில் ஆலோசனைகளையும், பயன்மிக்க தீர்வுகளையும் வழங்க வல்லவையாக நிலைத்து நிற்கின்றன. தொடக்கப்பள்ளி வகுப்பறைக் கற்றல் களத்தில், செயல்வழிக் கற்றல் அணுகுமுறைகள் பல இவரது உத்திகளைத் தழுவி அமைந்துள்ளன. வகுப்பறையில் உளவியல் பூர்வமான, நுட்ப அடிப்படைத் தீர்வுகளைக் காண மாண்டிசோரியின் கருத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வது ஆசிரியர்களின் திறமையை மிகுவிக்கும்.

மாண்டிசோரி குழந்தைகளை இயற்கையின் தளிர்கள் என்றார். குழந்தைகளைத் தெய்வமாகவே கண்டார். குழந்தைகளிடம் அன்பு கொள்ளுங்கள். அதிகமான கவனத்தையும் ஈடுபாட்டையும் காட்டுங்கள் என்றார். அவர்களிடம் ஆசிரியர்கள் கரடுமுரடாக அணுகாமல் நுணுக்கமாகவும், கவனத்துடனும் வினைபட வேண்டும் என்றார். அனைத்துக் குழந்தைகளும் கற்க வல்லவர்களே. சிலருக்குக் கற்றலில் புதிய/கூடுதல் தேவை இருக்கலாம். தேவைகள் தான் வேறுபாடு என்று தெள்ளத்தெளிவாகப் புலப்படுத்தினார்.

**செயல்**

"தற்போது நாம் மேற்கொண்டுள்ள கல்விமுறை இந்திய தேசியக் கல்வி நோக்கங்களை வென்றெடுக்க வல்லதாக உள்ளது / இல்லை" என்பதை இரு பங்கேற்பு விவாதக் குழுக்களை நிறுவிக் கருத்தாண்டு நோக்கர் வாக்கெடுப்பால் தீர்வு காண்க.

## 1.11.4. சுவாமி விவேகானந்தரின் கல்விக் கொள்கைகள்

தந்தை விசுவநாத தத்தருக்கும் தாயார் புவனேஸ்வரிக்கும் **1863** ஆம் ஆண்டு கல்கத்தாவில் நரேந்திரநாத் மகனாகப் பிறந்தார். நல்உணவை ஊட்டியதைப் போலவே பெற்றோர் நரேந்திரருக்கு நல்உணர்வையும் ஊட்டி வளர்த்தார். சிறு வயதிலேயே இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். அவரது பள்ளித் தலைமை ஆசிரியர் W.W. ஹேஸ்டி தன் மாணவரான நரேந்திரரைப் பற்றி "நான் தூரத்து நாடுகளில் பரவலாகப் பயணித்துள்ளேன். ஆனால் நரேந்திரனைப் போல ஒரு புத்திக் கூர்மையும், ஞான நாட்டமும், துடிப்புமுள்ள மாணவரை ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களிலும் கண்டதில்லை" என்று வியந்து பாராட்டிக் கூறியுள்ளார். பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல நரேந்திரர் அவரது ஆன்மீக வழிகாட்டி இராமகிருஷ்ண பரமஹம்சரைக் கண்டு அவர் வழியில் இணைந்தார்.

இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு ஏற்ற, நாட்டு நலன் தழுவிய மேம்பாட்டுக் கல்வியை விவேகானந்தர் வலியுறுத்தினார். இந்தியர்கள் அனைவருக்கும் இந்நாட்டின் பண்பாட்டைப் பிரதிபலிக்கவும் தன்னம்பிக்கையூட்டவும், தேசிய உணர்வை கல்வியின் வாயிலாக ஊட்டிடவும் வலியுறுத்தினார். இந்தியாவில் ஆங்கில ஆட்சியில் கல்வி எனும் பெயரால், இந்த நாட்டின் விடுதலையை, முன்னேற்றத்தைத் திட்டமிட்டே வஞ்சித்து வந்தனர். இந்தியர்களைத் தன்னம்பிக்கையூட்டி, உருவாக்கும் கல்விக்குப் பதிலாகச் சுயசார்பைத் தள்ளிப்போடும், நிலையிழக்கச் செய்யும் எழுத்தறிவை மட்டும் வழங்கினர். தம் பெற்றோரை முட்டாள்கள் என்றும் மூதாதையரை பைத்தியக்காரர்கள் என்றும் இங்கிருந்த ஆசிரியர்களைக் கபட வேடதாரிகள் என்றும் இந்நாட்டின் புனிதநூல்களை பொய் மூட்டைகள் என்றும் இகழ்ந்துரைத்து, அவற்றோடு ஒன்ற விடாது விகற்பப்படுத்தி இந்நாட்டின் இளைஞர்களைக் கலைத்து விடும் யுக்தியையே கல்வி என ராஜதந்திரமாக ஆங்கிலேயர் நம்பவைத்தனர். இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் இந்நாட்டில் ஆங்கிலேயர்கள் வழங்கும் கல்வியைப் பெற்றாலும் சுதேசி உணர்வும், நாட்டுப்பற்றும் ஆங்கிலேயரைக் குறைகண்டு வெளியேற்றும் தைரியமும் கொண்ட இளைஞர்களை உருவாக்கி இந்நாட்டை ஆங்கிலேயர் அவர்களிடமிருந்து விடுவிக்க உதவாது என விழிப்பூட்டினார்.

**செயல்**

இந்தியா எதிர்கொள்ள நேரும் அறைகூவல்களைப் புலப்படுத்தி இடைநிலை ஆசிரியர்கள் தம்மளவில் கல்வியால் தக அமைத்து அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை ஆலோசிக்க.

## 1.11.5.1. விவேகானந்தரின் தேசியக் கல்விக் கொள்கைகள்

### 1. உள்ளுணர்வின் வளர்ச்சி (Self-development)

இளைஞர்களின் தன்னம்பிக்கை ஒரு நாட்டின் உயர்வுக்கும் சிறப்புக்கும் அடிப்படைக் காரணம். உழைப்பில் ஆர்வமும் நியாய உணர்வுமே ஒருவரின் தன்னம்பிக்கைக்கும் வீரத்திற்கும் ஆதாரம். தைரியமான மனம், திடமான சிந்தனை, நியாயமான செயல், வலுவான உடல், தன்னால் இயலும் என்ற நம்பிக்கை இவைகளைக் கல்வி உருவாக்க வேண்டும். அது இந்தியாவின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும் உத்தி என்றார். கல்வி மாணவர்களின் சுயமரியாதையை வளர்த்து சுய வெளிப்பாட்டுக்கு வகை செய்து அவர்தம் ஆர்வங்களை வடிகாலாக்கித் தற்சார்பை வளர்க்க வேண்டும் என வீரமுரசு என்னும் நூலில் முழங்கினார்.

என்னால் இயலும், நான் வல்லவன், எனக்கு வாய்ப்புகள் தான் உடனடித் தேவை என்ற செயலார்வத் துடிப்பைக் கல்வி வழங்கி ஊக்குவிக்க வேண்டும். மேலை நாட்டுக் கல்வித் தத்துவங்கள் சூழ்நிலையோடு முரண்படாது, ஒதுங்கி நிற்கும், ஒத்துப்போகும் தன்மையை மாணவர்களிடம் வளர்த்தது. உண்மை அறிவாற்றல் எனப்படுவது வெளியில் இருந்து மாணவர்களுக்கு உள்ளே தகவல் வழி சென்றமைவதல்ல. மாறாக ஆன்மாவின் உயிர் ஆற்றலின் மகத்துவங்களை வெளிக் கொணர்ந்து வளர்க்கக் கல்வி ஆவன செய்ய வேண்டும் என்றார்.

## 2. சுயேச்சையாய் இருக்கவிடுதல் (Self accordance)

குழந்தைகளை முழுச் சுதந்தித்துடன் இருக்கவும் சுயேச்சையாய் குறுக்கீடின்றி அதனதன் இயல்புக்கு வளரவிட வேண்டும். ஒரு முன் மாதிரியை வருணித்து நிர்ணயித்து அதன்படியே பின்பற்ற வேண்டுமென அனைத்துக் குழந்தைகளையும் திணிக்கக் கூடாது. குழந்தைகளின் சுய ஆர்வங்களின் வெளிப்பாடுகளுக்கு வாய்ப்புத் தரவேண்டும். உள்ளார்ந்த வேட்கைகளே உண்மையான முன்னேற்றத்திற்கு வழிவகுக்க முடியும். மாறாக பலவந்தமாக நாம் கட்டாயப்படுத்துவதால் விரும்பத்தக்க விளைவுகள் நேர்வதில்லை. சுயச்சார்பும் சுயவெளிப்பாட்டு வாய்ப்புகளும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும். ''ஒருவர் சிங்கமாக ஆவதை நாம் தடுத்தால், முடக்கினால் அவர் நரியாகவும் மாறிவிடக் கூடும்'' என்றார் சுவாமி விவேகானந்தர்.

## 3. வளர்வதற்கான சுதந்திரம் (Un inhibited growth)

சுவாமி விவேகானந்தர் சுதந்திரம்தான் சுய வளர்ச்சிக்கு முதல் தேவை என வலியுறுத்தினார். ஆசிரியர் ஒரு தோட்டக்காரரைப் போன்றவர். ஒரு தோட்டத்தில் உள்ள அனைத்துத் தாவரங்களும் தாங்களே வளர்கின்றன. மண்ணைக் கிளறுவதும், உரம், இடுவதும், நீருற்றுவதும், பட்டி அடைத்துப் பாதுகாப்பதும் தோட்டக்காரரின் வேலை. ஆனாலும் செடி அதுவாகவே தான் வளர வேண்டும். எந்த வெளி ஆற்றலும் அதன் உள் வளர்ச்சியைத் தடுத்துவிட முடியாது; அது போலவே எந்த வெளியாற்றலாலும் அதனை விரைந்து வளர்த்துவிடவும் முடியாது. செடி அதுவாகவே தான் வளர வேண்டும். அது போலவேதான் மாணவர்களும் அவர்களது கல்வியும் என்றார்.

## 4. நடத்தை கட்டமைக்கப்படுதல் (Character Formation)

நன்னடத்தையும் ஒழுக்கமும் நற்கல்வியின் கொடைகள்; கல்வியின் பயனே நன்னடத்தையைக் கட்டமைப்பதுதான் என்கிறார் சுவாமி விவேகானந்தர். ஒரு மனிதரின் நடத்தை என்பது அவரது மனப்போக்குகள், நாட்டங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பே. இன்பங்களும், துன்பங்களும் ஒரு ஆன்மாவின் இடையறாத அனுபவங்களாகிற போது அவற்றின் கூட்டு விளைவாக அவனிடம் படியும் பதிவுகளே அவரது நடத்தை எனப்படுகிறது. நடத்தையைக் கட்டமைப்பு செய்வதே கல்வியின் தலையாய நோக்கம். எனவே மாணவர்களுக்கு அரிய பின்பற்றத்தக்க உன்னதமான நன்னடத்தையாளர்களை மட்டுமே சான்றாக்கவும் ஆசிரியர்கள் முன்வைக்கவும் வேண்டும்.

''தானே சரியான முன்னுதாரணமாகத் திகழ்ந்து ஒழுகும் ஆசிரியரே நடத்தைக் கட்டமைப்புச் செய்யும் வல்லமை மிக்கவராவார்''. என விவேகானந்தர் விவரித்தார். நல்ல குணவான்களும் சத்தியம் தவறாத சீலர்களும், பற்றற்று நடுநிலைமையோடு வாழ்வோரும், உழைக்கும் செந்நெறியாளர்களும், தியாகிகளும் தான் நன்னடத்தைக் கல்வியாளர்களாக முடியும் என்று அழுத்தம் திருத்தமாக முழங்கினார். கடின உழைப்பு, நீதி, ஆன்மீக நன்னெறிகள், ஆசிரியர் மாணவர் விசுவாச உறவு, நல்ல பழக்க வழக்கங்கள், முயன்று தவறிக் கற்கும் பட்டறிவு முதலியன நன்னடத்தைக்கு ஏதுவாகும் காரணிகள் என்றார் சுவாமி விவேகானந்தர்.

## 1.11.5.2. கல்வி அணுகுமுறைகள் (Means of Education)

### 1. அன்பு (Affection)

அன்பை ஊடகமாக்கிக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். மாணவர்கள்பால் காட்டும் அன்பு, பரிவு, கனிவு இவைகள் வலிமை மிக்க ஆசிரியர் மாணவர் பிணைப்பை ஏற்படுத்தி கற்றலை வலுப்படுத்தும்; இருவர் முயற்சியும் வீணாகாது; நீடித்த வலுவான கற்றலை வழங்கும். இத்தகு அணுகுமுறை ஆசிரியர்க்கு என்றும் குன்றாத தெம்பையும் மாணவர்க்கு விருப்பார்வமிக்க ஊக்கத்தையும் வழங்கும் இன்ப ஊற்றாய் அமையும் என்பதை நாம் மறத்தலாகாது.

உலகியல் வாழ்வில் ஏற்படக் கூடிய வேறெந்த உறவைக் காட்டிலும் ஐக்கியமானதாகவும், வலுவானதாகவும் நீடித்து நிலைத்திருப்பதாகவும், மிக்க பயனை வாழ்நாள் நெடுகிலும் வழங்குவதாகவும், ஆசிரியர் மாணவர் உறவு ஆழ்ந்த அன்பின் பலனாக அமைதல் இலக்கணம்.

### 2. உதவி (Help)

கற்க வரும் மாணவரின் உள்ளே ஒளிந்து கிடக்கும் பல்வகை ஆற்றல்களையும் செய்திறன்களையும், வல்லமைகளையும் இனங்கண்டு வெளிப்படச் செய்ய மிகவும் உதவ வேண்டும். வாழ்வென்னும் போராட்டத்தில் மாணவன் தன்னையும் தன் பாரம்பரியப் பண்பாட்டுச் சிறப்புகளையும் இழந்து வீணாகாதவாறு மாணவர்க்குச் சீலக் கண்திறக்க வேண்டும் என்றார்.

### 3. வழிகாட்டுதல் (Guidance)

கற்க வரும் மாணவர் எவர்க்கும் கல்வி ஓர் இதமான மலர்படுக்கை அனுபவமாக அமைந்துவிடுவதில்லை. கற்பதில் அவரவரும் இதுவரை அறிந்திராத இக்கட்டான பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். அவை யாவற்றையும் குருவருள் ஆலோசனையுடனும் தன்னம்பிக்கை மிகுந்த முயற்சியுடனும், உளையாது ஊற்றி, உப்பக்கம் காண வேண்டும். ஆசிரியரின் உளவியல் அறிவும், நீண்ட பட்டறிவும், தொடர் கண்காணிப்பும், மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சல்களையும், சுவை தோன்றாச் சுமைகளையும், இறுக்கங்களையும் எளிதாக்கி வழிகாட்டுவனவாய் அமைதல் வேண்டும் என விவேகானந்தர் ஆசிரியர்களின் அறத்தொண்டு அமையப் பல ஆலோசனைகளைப் பகர்ந்துள்ளார்.

### 4. கவனக்குவிவு (Concentration)

கவனக்குவிவே கற்றலுக்கு அடிப்படை கவனத்தை ஒருமுகப்படுத்த விவேகானந்தர் பல ஆலோசனைகளை உலகிற்கு வழங்கியுள்ளார். ஒன்றன் மீது நாம் செலுத்தும் ஒருமுகப்படுத்தப்பட்ட கூர்ந்த கவனம் நம்மை ஆராய்ச்சியாளர்களாக்கி உலகுக்குப் புரியாத பல கண்டுபிடிப்புக்களை புலனாக்கித் தர வல்லதாகும்.

மாணவர்களின் வல்லமைக்கேற்ப போதுமான பொறுமையுடன் ஆசிரியர்கள் பயிற்சி அளித்து, தொடர் கண்காணிப்புச் செய்து மாணவர்களின் தியான ஆற்றலை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு மாணவர் மீதும் தனிக்கவனம் செலுத்தி, வழிகாட்டி இடைவிடாது முயன்று பல நன்மைகள் தரும் கவனக் குவிவு ஒருவரிடம் மேலோங்க ஆசிரியர்கள் துணையாக இருத்தல் அவசியம்.

### 5. பிரம்மச்சாரியம்

நீத்தல், உபவாசம் இருத்தல், ஆசை மறுப்பு ஆகியன கவனக்குவிவுக்கு வழிகோலித் துணை செய்யும். உள்ளத்தின் உறுதி, மனத்திட்பம் ஆகியன ஆன்மீக ஆற்றல் மற்றும் மன சக்தியைக் கூட்டுகின்றன. இவை மன ஆற்றல் சிதறலைக் குறைத்து பால் உணர்வு, உந்தத்தை மடைமாற்றி மன ஆற்றலைக் கல்வியின்பால் ஒருமுகப்படுத்த வல்லவை. பிரம்மச்சார்யமும் எண்ணத் தூய்மையையும் செயல் ஆற்றலை அதிகரிக்கச் செய்கின்றன.

## 6. விவாதமும் சிந்தனை ஆற்றலும்

விவாதம் கருத்தோட்டத்தையும் சிந்தனைத் தெளிவையும் வழங்கவல்லது. சிந்தனை மனதை ஒரு பொருட்கண் செலுத்தி ஆய வல்லது. இவை இரண்டும் கல்விக்குத் துணை நிற்பவை. ஒத்தக்கருத்து, மாற்றுக் கருத்து உடையோர்களுடன் விவாதிப்பதன் வாயிலாக பன்முகச் சிந்தனை ஆற்றல் வளரும்; சிந்தனை: மன ஆற்றல் அலைகளை நாம் விரும்பும் பொருள் மாட்டு ஈடுபடுத்தும். கேள்வி, வாசிப்பு, தகவலுடன் நிறுத்திவிடாமல் விவாதம், சிந்தனை, கருத்தாய்வு ஆகியவற்றை மேற்கொள்வதன் வாயிலாக மாணவன் தன் அறிவைத் தானே கட்டமைத்துக் கொள்ள முடியும் என்று விவேகானந்தர் அறிவுறுத்தியுள்ளார். இதனையே தற்காலத்தில் மேலை நாட்டோர் ஆக்கவியல் கல்வி (Constructivist pedagogy) எனப் புனைந்துரைத்து வருகின்றனர்.

வகுப்பில் குழந்தைகளின் கற்றல் பணிகளில் ஆசிரியர்கள் இடைவினைபுரிகையில் இவைகளை மனதில் கொண்டு பேரளவிலான கற்றலுக்குத் துணை செய்து, மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி வழிகாட்ட வேண்டுவது மிக அவசியம்.

## 7. பல்வகைக் கற்றல்

வளமான உடலில்தான் திண்மையான மனப் பெற்றிமைகள் (mental calibres) அமையும் என வாதிட்டார். உடலோம்பல், உடல் நலம், உடல் வலிமை இவைகளைப் பற்றிய போதுமான விழிப்புணர்வு, அக்கறை, கல்வி, பயிற்சி ஆகியவற்றைக் கல்வி நிறுவனங்கள் அளிக்க வேண்டுமென வலியுறுத்தினார். மாணவர்களுக்கு நீதி, நன்னெறி, மனப்பக்குவம் தரும் சமயக் கல்வியையும் வழங்க வேண்டுவதன் அவசியத்தை எடுத்தியம்பினார். உன்னதமான இலட்சியங்கள், தைரியம், தன்னம்பிக்கை, தொண்டு, அர்ப்பணிப்பு, உண்மையறிவு, பின்பற்றும் வேட்கை, அடிமைத் தனமற்ற சுதந்திர வேட்கை, நாட்டுப்பற்று, புனித நூல்களை நேரடியாக ஆழப் படித்துணர்ந்த ஆன்மீகப் புலமை ஆகியவற்றைக் கல்வி மாணவர்களுக்குத் தவறாது வழங்க வேண்டும் என்றார். பெண் கல்வி, எளியோரின் சமத்துவக் கல்வி, ஆகியவற்றையும் விவேகானந்தர் தனது நாட்டு நலநோக்குக் கல்விக் கருத்துக்களில் பரவலாக வலியுறுத்தியுள்ளார்.

சாந்தி நிகேதன் பள்ளியும், விசுவபாரதி பல்கலைக்கழகமும் இவரால் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகும். இவர் இயற்றிய கீதாஞ்சலி என்னும் கவிதை நூலுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## 1.11.6. இரவீந்திரநாத் தாகூர் (1861–1941)

ஒரு கவிஞராகவும், கலைஞராகவும், துறவியாகவும் உலகறிய வாழ்ந்தவர் தாகூர். தன்னைத்தான் அறிந்தின்பமுறுவதையே கல்வியின் தலையாய பயன் என்றார். பிரபஞ்சத்தையே ஒரு பேருயிரி என்றார். அந்த பெரிய உயிரினின்று கிளைத்தவை தாம் பசுந்தாவரமும், பல பிராணிகளும், மனிதர்களும் என்றார். உயிரிகளனைத்தும் அப்பேருயிரியை மீண்டும் அடைவதை நோக்கியே இயங்கி வருகின்றன. கல்வி இல்லை எனினும் இவ்வியக்கம் தொடரும். எனினும் அவ்வியக்கம் தன்னைத் தானறிந்ததாகவும் உணர்ந்ததாகவும் அமைவதில்லை. எனவே, அவ்வினிய அனுபவத்தைத் தன்னில் தானறிவது நிகழ்ந்திட ஏதுவாய் அமைவதே கல்வி என்றார் கவியரசர்.

### 1.11.6.1. தன்னை அறிவதற்கான கொள்கைகள்

### 1. தற்சார்பு (Independance)

மாணவர்கள் பரிபூரண சுதந்திரமாய் வாழ வேண்டும். எதையும் நுணுகி அறியும் உரிமை, தீர்வுகாணல், இதயபூர்வமான உணர்வுகளை வெளிப்படுத்துதல், விரும்பும் தகவல்களைச் சேகரித்தல், நினைப்பனவற்றைச் செய்தறியும் உரிமை, கட்டுப்பாடற்ற, தான் ஆர்வப்படும்

வழியிலான தொழுகை ஆகிய உரிமைகள் மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும். இவற்றை அடைய மாணவர்கள் பற்றற்ற தன்மையையும், இயற்கையுடனான ஒத்திசைவையும், மனக்கட்டுப்பாட்டு நிலையையும் வகுத்து உன்னதமான நன்னடத்தையாளர்களைச் சான்றாக்கி ஆசிரியர்கள் முன்வைக்க வேண்டும் எனத் தாகூர் வலியுறுத்தினார்.

## 2. பரிபூரணம் (Perfection)

இயற்கையால் வழங்கப்பட்டுள்ள அனைத்து மனப்பரிபாகப் பெற்றிமைக் கூறுகளிலும் மாணவர்கள் நிறைவை எய்த வேண்டும். மனமாட்சிமைகள் உள்ளத்தின் இயலுமைகள், மனோ சக்தியின் பூரிதம் ஆகியவற்றை வேண்டிய பயிற்சிகளால் எய்த வேண்டும். தேர்வு நோக்கில் சிலவற்றைப் படித்துத் தேர்வில் வெற்றி பெற்று பட்டங்கள் பெற்று, சான்றுகள் பெற்று அவற்றைப் பதிந்து / காட்டி வேலைகள் வாங்கி ஊதியம் பெற்று பொருளாதாரத் தன்னிறைவைப் பெறுவதே கல்வியின் தலையாய நோக்கம் ஆவதில்லை. மாணவரின் ஆளுமைக் கூறுகள் யாவும் என்றும் புறக்கணிக்கப்படாமல் பயிற்றப் பெற்று, முறையான வளர்ச்சியடைந்து திரண்ட ஆளுமை வளர்ச்சியுடன் மனப்பரிபாகப் பூரித நிலையை அடையப் பெறுதலே கல்வியின் இன்றியமையாத நோக்கம் என்றார் தாகூர். மாணவர்களின் மனத்திறன், மன வளங்களை வளர்ப்பதாக கல்வி அமைய வேண்டுமென இவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 3. வரைவின்மை / எங்குமுள்ளமை (Universality)

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பது எது ? உருவாய், அருவாய், அருவுருவாய் நிற்பது எது ? உளதாய், இலதாய், காணும்போது தெரிந்தும் காணாதவாறு மறைந்தும், மறைத்தும், ஒளித்தும் ஒளிர்வது எது ? ஒன்றென இரண்டென; ஒன்றிரண்டு அன்றென நிறை பூரிதமாய் நிலவுவது எது ? நீக்கமற நின்றது எது ? எல்லாம் அது: அதுவும் பிறவும் ஒன்றே; அதுவும் பிறவும் அதுவே இயற்கை; வேறல்ல: எனவே அதுவே யாமும்; அதுவே எல்லாமும், என்பதையும் அது வரைவிலாது: எங்கும் உள்ளமையை மாணவர் அனைவரும் ஓர்ந்திட , உணர்ந்திட, தேர்ந்திட, தெளிந்திட, கல்வி வழிவகை செய்திட வேண்டும். இப்புரிதல் நிகழ்ந்திட யாவர்க்கும் கல்வி துணை நின்றிட வேண்டும். கல்வியின் பயன் அதுவே. இதனையே ஔவையார்ா “தெய்வம் தெளிமின்” என்றார். கல்வியாலன்றி இதனை எய்திடலாகாது எனத் தாகூர் தெளிந்துரைத்துள்ளார்.

### 1.11.6.2. தாகூர் வலியுறுத்தும் கல்விப்பயன்

நினைப்பதும் பேசுவதும், படிப்பதும், நடப்பதும், வெவ்வேறாக அமையக் கூடாது. படிப்பது வாழ்வதற்காகவே. எதனையும் தீர்க்கமாக அறிந்து கொள்ள ஆவலுறுவதே இயற்கை. வாழ ஒவ்வாதனவற்றைப் படிக்க வேண்டுவதில்லை. இரட்டை வேடம் கூடாது. கல்விச்சாலைகள், இயற்கைச் சோலைகளிலும் வனங்களிலுமே அமைய வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே; படிப்பும் வாழ்வதற்கே! வாழ்தலும் இயற்கையானதே, எனில் வாழுமிடமும் படிக்கும் சூழலும் இயல்பாகவும் இயற்கையாகவுமே இருத்தல் அவசியம் என வலிந்துரைத்தார்.

இயற்கைக்கு அந்நியமாக மனிதன் சிந்திக்கும், செய்யும் அனைத்துமே மனிதனுக்கு இன்னலைத் தரும். இயற்கையோடு ஒத்திசையும் கலையே கல்வி: இயற்கையோடு முரணுவது ‘ஹிம்சை’ என எச்சரித்தார். சுற்றுச்சூழல் நலக்காப்பும், நம் உறைவிடச் சுகாதாரமும், நம் உடலை நாம் ஓம்புவதும் எல்லாம் ஒன்றே, ஒரே செயலின் விரிநிலையே, ஒன்றை ஒன்று பிண்ணியதே என மாணவர் பேசுமாறோ, கேட்குமாறோ செய்தால் போதாது; மாணவர்கள் இதனை ஓர்ந்து எண்ணிப்பார்த்து ஏற்றொழுகிட ஆவன செய்யுமானால் அதுவே கல்வி எனப்படும். அரைகுறைப் புரிதலும், நிறைவற்ற செயலும் கல்வி ஆகாது; ஆசிரியர் இத்தீர்வு கிட்டுமாறு புகட்ட வேண்டும். தேர்வுகள் இம்மனிதப்பாங்கினை மதிப்பிட வேண்டும் என்றார் தெய்வீகக் கவிஞர்.

## 1.11.6.3. தாகூர்காட்டும் கல்விச் சமதர்மம்

தாகூர் ஒரு சித்தாந்தி மட்டுமல்ல. நடைமுறைவாதியும் கூட. ஆனால் நடைமுறை என்பது இயற்கைக்கு மாறான, முரணிய தீர்வுகளை உத்தேசிப்பதல்ல. ஒரு தீர்க்கமான தொலைநோக்குடன் கூடிய நடைமுறைவாதி; கல்வியின் ஜீவாதார வருவாய்ப் பயனை தாகூர் மறுக்கவில்லை. ஆயினும் படிப்பதெல்லாம் பணம் பண்ணவே; பணம் பண்ணவேதான் படிப்பு என்பதையே இகழ்ந்துரைத்தார்.

தனி ஒருவர்க்கு வாழ வழிகாட்டுவதாக மட்டுமே கல்வி அமைந்து விடக்கூடாது. ஒருவரது கல்வி முயற்சியால் அவருக்கும் பலபேருக்கும் பயன் கிடைக்க வேண்டும்; ஒரு நாட்டுக்கே தொண்டாய் அது அமைய வேண்டும். வல்லார்க்கும் மாட்டார்க்கும் வாழ்வுக்கு வகை செய்வதாகவும், எல்லார்க்கும் எல்லாமும் ஆக்கியும் பகிர்ந்தும் அளிக்கும் கல்வியாக அமைதல் மிகச் சிறப்பு. பிள்ளைகளுக்கு வெற்று எண்ணெழுத்து அறிவு கிடைக்க ஆவன செய்வதே கல்வி நோக்கமாகாது. கல்வியால் பெறக் கூடிய அனைத்துச் சிறப்பு, தெளிவு, நன்மை, பண்பு முதலிய முழுமையான இலட்சியங்களை எட்டவும் அது வழிகோல வேண்டும். அதன் வாயிலாக, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் கண்டு எல்லார்க்கும் வாய்ப்பைத் தந்து வாழும் இனிய சூழலை ஆக்க வேண்டும். அது கண்டு தானும் இன்புறும் தகைசால் கல்வியாக, மனித அறம் வளர்த்து, இயற்கையறம் பேணும் இன்னுலகை நோக்கி உலகை அழைத்துச் செல்லும் கல்வியாகவும் அமைய வேண்டியதன் அவசியத்தை ஆசிரியர்கள் கருத்துக்கு வைத்துள்ளார்.

**செயல்**

''கல்விக்கொள்கைகளை ஆலோசிப்பதே அரசு கல்வி நோக்கங்களை நிலைநாட்டுவோர் உண்மையில் ஆசிரியர்களே" உடன்பாட்டு/எதிர்மறை விவாதங்களைப் பரிமாறுக.

## 1.11.7. மகாத்மா காந்தி (1869–1948)

''குழந்தைகளின் / மனிதர்களின் உடல், மனம், ஆன்மா ஆகியவற்றின் ஒத்திசைந்த திரண்ட வளர்ச்சியை உண்டாக்குவதையே கல்வி'' என்றார் மகாத்மா. சுயச்சார்பை வளர்ப்பதே கல்வி; பொறுப்புணர்ச்சியும் கண்ணியமும் மிக்க குடிமக்களை உருவாக்குவதே கல்வி என்றார் இவர்.

குழந்தை மையக் கல்வி முறையை இவர் ஆலோசித்தார். முழுமையான வளர்ச்சியைக் குழந்தை அடையக் கல்வி வழிவகுக்க வேண்டும். எழுத்தறிவினைப் போலவே நன்னடத்தைக் கூறுகளின் வளர்ச்சியையும் முக்கியமானதென்றார். நல்ல எண்ணம், இன்சொல், நற்செயல், அஹிம்சை, சத்தியம், புலனடக்கம் ஆகியவற்றைப் பின்பற்றுவதன் வாயிலாகவே நன்னடத்தை உருவாகிறது. நல்லனவற்றையே பார்க்க வேண்டும்; கேட்க வேண்டும்; பேச வேண்டும். தீயனவற்றை பார்க்கக் கூடாது; கேட்கக் கூடாது; பேசக் கூடாது எனப்புகட்டினார்.

குழந்தைகளிடம் இயற்கையாகக் காணப்படும் பல்வேறு திறமைகளையும் மலர்த்தி வல்லமைகளாக்க வேண்டும். ஏதோ ஒரு சிலவற்றை மட்டும் பிடித்துக் கொண்டு வழிகாட்டி வளர்ப்பது முழுமையான கல்வியாகாது. தனித்தனியான தொடர்பற்ற துண்டுத் தகவல்களை, உதிரிச் செய்திகளை வழங்கி மனதிலிறுத்தாமல் ஒவ்வொரு தகவலையும் தேவையறிந்து ஏற்று நேர்வுறப் பின்னி வலையாக்க வேண்டும்.

தனிநபர் சுதந்திரத்தை வலியுறுத்தினாரானாலும் அவர் சமூகத்தோடு பொருந்தி வாழும் அவசியத்தையும் இடித்துரைத்தார். இறைநிலையை எய்துவது கல்வியின் இறுதிப் பயன். மக்களுக்குத் தொண்டு செய்வதும் அதனால் அடையும் இன்பமும் அலாதியானது என்றார்.

தற்சார்பை ஏற்படுத்த மாணவர்களுக்குக் கைத்தொழில், பணி அனுபவக் கல்வியை ஆலோசித்தார். கைவினைத்திறம் ஒருவகையான கற்றல் வெளிப்பாடே. வேலைவாய்ப்பு இதன் மையமாக அமையும். பல நோக்குப் பூரிதக் கல்வியை மாணவர்க்கு வழங்கி, ஆக்கபூர்வமான பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி, இளைஞர்களை உடலுழைப்பு, படைப்பு பற்றிய மகிழ்ச்சிக்குள்ளாக்கிச் சரியான மனப்பான்மையை அவர்களுக்கு வழங்குவது அவசியம் என்றார்.

**செயல்**

சுமார் **2000** ஆண்டு கால இந்தியக் கல்வியின் வளர்ச்சியை மேனோக்கி அறிந்த தாங்கள் இந்தியக் கல்வியாளர்களுக்கு வழங்கும் திரள் கருத்துகளைப் பட்டியலிடுக.

## 1.11.7.1. மக்களாட்சிப் பயிற்சி

மக்களாட்சிச் சமுதாயத்தின் சிறப்பான குடிமக்களாக வாழக் கல்வி வகை செய்ய வேண்டும். பள்ளியை ஒரு சமுதாயமாகக் கருதி, அதில் சரியான பங்கேற்புடன் மாணவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும். வரைமுறைகளை அறிமுகமாக்கி கடைமையும், உரிமையும் பற்றிய சரியான கருத்துகளுடன் பொறுப்புள்ள எதிர்காலக் குடிமக்களாக அவர்கள் திகழ ஆவன செய்ய வேண்டும். பள்ளிகளில் மாணவர்களுக்கு ஒத்துணர்வு, தொண்டு, அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் முதலிய சீலங்களை வளர்க்க வேண்டும்.

எல்லா விதமான அடைவறிவும் பண்பாட்டை உருவாக்கவே: பண்பாட்டை வலுப்படுத்தாத கல்வி பயனற்றதாகும். தளையற்ற ஆன்ம சுதந்திரமே உண்மைச் சுதந்திரம். இந்த உண்மைச் சுதந்திரத்தை அடைவிப்பதாகவே கல்வி அமைதல் வேண்டும் என்று காந்தி வலியுறுத்தினார். இவர் ஓர் கருத்தியல் கல்விக் கொள்கையாளர்.

## 1.11.7.2. காந்தியக் கல்வி அணுகுமுறைகள்

கல்வி வாழ்க்கையோடு இணைந்ததாகவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும். கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டுமிராது பயனுள்ள உடலுழைப்பு, செய்திறன்களின் வளர்ச்சியாக அமைய வேண்டும். வாழ்ந்து கற்றல், செய்து கற்றல், இணைந்து கற்றல் போன்ற அணுகுமுறைகளை அண்ணல் காந்தி எடுத்துரைத்தார். மனப்பாடம் செய்து கற்பதை அவர் ஏற்கவில்லை. சுய அனுபவத்தோடு கூடிய செய்முறைக் கல்வியையே காந்தி விரும்பினார். தாய்மொழி வழிக் கற்றலையே இவர் ஆதரித்தார். வன்முறையற்ற கல்வி, அகிம்சையை நிலைநாட்டும் கல்வி, புலனடக்கம் பயிற்றும் கல்வி, உழைப்பை விரும்பும் கல்வி என காந்தியின் கல்விக் கோட்பாடுகளைப் பலவாறாக விவரிக்கலாம்.

## 1.11.7.3. ஆதாரக்கல்வி திட்டம் (Varda Scheme of Education)

ஆக்கிரமிப்பற்ற, வன்முறை நீங்கிய, அகிம்சை நெறி நாடிய வாழ்வும், கல்வியும் காந்தியக் கல்வியின் அறைகூவல்களாகும். சுரண்டலற்ற, அதிகாரமும் உரிமையும் பரவலாக்கப்பட்ட ஒரு பாரத சமுதாயத்தைக் காந்தி விரும்பினார். அதனடிப்படையிலேயே அவரது கல்விக் கோட்பாடுகளும் அமைந்துள்ளன.

காந்தியடிகளின் வார்தா ஆரம்பக் கல்வி முறை பின்வரும் கோட்பாடுகளைக் கொண்டதாயிருந்தது.

1. ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தல்
2. ஆசிரியர் மேற்பார்வையுடனான உடலுழைப்பு கல்வியில் பெரும்பகுதி இடம் பெற வேண்டும்.
3. மாணவ, மாணவியரின் நாட்டத்தை நன்கறிந்து அவரவர் நாட்டத்திற்கேற்ப பணி அனுபவங்கள் வழங்கப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு செயல்முறையையும் ஏன் செய்ய வேண்டும், எந்தக் காரணங்களுக்காக இதனைச் செய்ய வேண்டும் என்ற காரண காரியங்களைத் தொடர்புபடுத்திச் சொல்லித்தர வேண்டும்.
5. மாணவர்களுக்குப் புரியுந்திறன் வந்தவுடனேயே பொது அறிவுக் கல்வியை வழங்க வேண்டும்.
6. குழந்தைகளுக்கு எழுதக் கற்றுத் தருமுன்னரே ஜியோமிதி வடிவங்கள் அனைத்தையும் வரையும் பயிற்சியை வழங்க வேண்டும். முதலிலிருந்தே அழகிய கையெழுத்து எழுதும் பயிற்சியை அனைவர்க்கும் வழங்க வேண்டும்.
7. குழந்தைகளுக்கு எழுதக் கற்றுத்தரு முன்னரே படிக்கக் கற்றுத் தர வேண்டும்.
8. எட்டு வயதாகும் முன் வாயுரை, வாய்மொழி வாயிலாகவே பெருவாரியான அறிவை மாணவர்க்குப் புகட்ட வேண்டும்.
9. குழந்தைகளைக் கற்றுக் கொள்ளுமாறு திணிக்கக் கூடாது.
10. குழந்தைகளின் விருப்பார்வத்தின் அடிப்படையிலேயே எக்கற்றலும் அமைய வேண்டும்.
11. குழந்தைகளுக்குப் பிரியமான விளையாட்டைப் பயன்படுத்திக் கற்பிப்பதே சிறந்தது.
12. குழந்தையின் தாய்மொழி வழியாகவே கற்பிக்க வேண்டும்.
13. கைத்தொழில் ஒன்றை அனைவரும் அவசியம் கற்க வேண்டும்.
14. தொடக்கக்கல்வி நிலையிலும்கூட பணி அனுபவக் கல்வியை வலியுறுத்தினார்.
15. தன் எதிர்கால நலன் கருதி ஏதேனும் ஒரு கைத்திறனை மாணவன் கற்றுக் கொள்ள வேண்டும்.
16. எல்லா மாணவர்களும் பொது அறிவு, உலக வரலாறு, உலகப் புவியியல், தாவரவியல், வான சாத்திரம், எண்கணக்கறிவு, வடிவ கணிதம் முதலியவற்றின் அடிப்படைகளையும் கற்க வேண்டும்.
17. பதினாறு வயதுடைய ஆணோ பெண்ணோ தையல் வேலையும் சமையலும் அறிந்திருக்க வேண்டும்.
18. ஆசிரியர்கள் அப்பணிக்கு மிகுந்த விருப்பார்வம் உள்ளவர்களாகவும் நன்னடத்தை உள்ளவர்களாகவும் இருத்தல் அவசியம்.

நாட்டின் மனிதவள, பொருளாதார, சமுதாய, சமூகப் பண்பாடு, அரசியல், பாரம்பரிய, சமத்துவ, மக்களாட்சித் தேவைகளை நிறைவேற்றுவதாகக் கல்வி முறை அமைய வேண்டும். நாட்டின் அனைத்துத் தேவைகளையும் தெளிவுப்படுத்தி, நிறைவேற்றித் தரவல்ல பல படிநிலை முன்னேற்றங்களை உடையதாகக் கலைத்திட்டம், காலங்கள் தோறும் மாறி அமைய வேண்டும் தேசிய நோக்கங்களை கலைத்திட்டம் பிரதிபலிக்க வேண்டும் என்றார்.

காந்தியின் கல்வித் தத்துவம் இந்நாட்டின் அனைத்து அமைவுகளுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய நுட்பதிட்பங்களைக் கொண்டதாக இருந்தது. அன்றளவில் நிலவிய அனைத்துக் கல்வியாளர்களின் சிறப்புக் கூறுகளையும், உள்வாங்கிய, ஏற்புடையதொன்றாக ஆதாரக் கல்வித்திட்டம் அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அலகு –2
# கல்வியின் நோக்கங்கள்

## முன்னோக்கு

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர், பின்
        கார்கொள் வானிலோர் மீனினைத் தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
        ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்
        வாழும் நாட்டிற் பொருள் கெடல் கேட்டிலார்
கணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
        சொல்லு வாரெண் குணப் பயன் கண்டிலார்

எனப் பாரதியார் நோக்கங்களை நிறைவேற்றாத, பயன்குன்றிய கல்வியை இகழ்ந்துரைக்கிறார்.

கல்வி சமுதாயம் வாழ்வதற்கான ஓர் அடிப்படை; வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது; சமூக நிலையை மேம்படுத்த ஒரு கருவி. கல்வியின் நோக்கங்கள் சமுதாயத் தேவைகளோடு தொடர்புடையதாக இருக்கின்றன. குழந்தைகளின் இயல்பான தேவைகள் மற்றும் நடவடிக்கைகள் சமுதாயத் தேவைகளோடு சார்ந்து நிற்பவை. குழந்தைகள் சமுதாயத்தின் இளம் அங்கத்தினர் ஆவர். ஆகவே கல்வியின் நோக்கங்கள் அக் குழந்தைகளின் சமுதாய மேம்பாட்டிற்கு உதவக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

பிறந்த குழந்தை, சமுதாயத்தின் மரபுகள் மற்றும் பழக்க, வழக்கங்களை அறிந்திருப்பதில்லை. எந்த மதிப்புகளையும் அல்லது கருத்துகளையும் அடைய அது எண்ணுவதில்லை. குழந்தை வளர, வளர கல்வியின் முறையான, முறையற்ற செயல்களால் அதன் உடல், மனம், உணர்ச்சி மற்றும் சமுதாய உணர்வுகள் மாறுகின்றன. பின்னரே தன் பொறுப்புகளை உணர்ந்து, பிரச்சனைகளைத் தானே தீர்த்துக் கொள்ள அக்குழந்தை முயலும். சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப, குழந்தையிடம், விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த கல்வி வகை செய்கிறது. கல்வி, குழந்தைகளின் முழுமையான ஆளுமையை வளர்க்கிறது. துணிவு உடையவன், நன்நடத்தை உடையவன், உயர்பண்பு உடையவன் என வளர்ச்சி அடையச் செய்வதோடு, சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் உதவுகிறது. மேலும் கல்வியின் வாயிலாக, சமூக நடத்தை, ஆன்மீக நாட்டம், தேசிய விருப்பங்கள், கலாச்சாரப் பாரம்பரியங்கள் ஆகியன ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மாற்றப்படுகின்றன.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளையும், தெரிவு செய்யப்பட்ட இலக்குகளையும், கல்வி நடைமுறைகளோடு இணைக்கச் சரியான வழிகாட்டுதல்களாக கல்வியின் நோக்கங்கள் உதவுகின்றன. அதே நேரத்தில் உடனடித் தேவைகளையும், கல்வியின் நோக்கங்கள் பிரதிபலிக்கின்றன. தேய்ந்து வரும் சமூக மதிப்புகளையும், சமூகத்தின் விருப்பார்வங்களையும், உடனடி சமூக எதிர்பார்புகளையும், மனித குலத்தின் விரிந்த இலக்குகளையும் கல்வியின் நோக்கங்கள் வலியுறுத்துகின்றன. அவை மனித குல எதிர்பார்ப்புகளையும், சமூக மதிப்புகளையும் குறிப்பிட்ட நேரத்தில், இடத்தில் பொருத்தமான முறையில் நினைவு கூர்வனவாய் அமையும்.

### 2.1.1. கல்வி ஒரு நோக்க அடிப்படையிலான செயல்

கல்வி என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டது. அம்மொழியில்

எஜீகேட்டம் – Educatum – பயிற்சி அளித்தல்–பயிற்சி மற்றும் கற்பித்தல் செயல்

எஜீசீர் – Educere – வெளிக் கொணர்வது, வழிகாட்டுவது

எஜீகேர் – Educare – வளர்ப்பது, எழுப்புவது , கல்வி அளிப்பது எனப் பொருள்படும்.

“வாழ்வின் இறுதிப் பேறாகிய வீடு பேற்றை அடைய உதவக் கூடியதே கல்வி”-உபநிடதம்

”நாட்டிற்காகப் பயிற்சி, தேசத்தின் மீது பற்று கொள்ளக் கற்றுத் தருவதே கல்வி”–கௌடில்யர்

“தன்னை உணர்தல் கல்வி” – ஆதிசங்கரர்

“இயற்கையாக மனிதனுக்குள் புதைந்திருக்கும் தெய்வீகமான பரிபூரணத்தை வெளிக்கொணர்வது கல்வி. உள்ளத்தின் விருப்பங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து பயனுள்ளதாக ஆக்குவதே கல்வி” – விவேகானந்தர்.

“குழந்தையின் உடல், மனம், ஆன்மா இம் மூன்றையும் ஒரு சேர வளர்ப்பது கல்வி”– காந்தி.

“மனிதனுக்குள் இருக்கும் அனைத்தையும் வளர்ச்சி அடையச் செய்து, அதன் வழியாக அவன் தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும், தன்னைப் பொருத்திக் கொள்ளவும் வகை செய்வது கல்வி “ – ஜான் டூயி

### 2.1.2. கல்வி–தொடர் செயல்

கல்வி வாழ்நாள் முழுவதும் நிகழும் தொடர் செயலாகும். மனிதனின் குழவிப் பருவம் முதல், இறுதி நாள் வரை கல்வி தொடர்கிறது. மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் உறுதுணையாக இருப்பது கல்வி. கற்பதற்கு வயதோ வரம்போ இல்லை; முதுமையிலும் கற்கலாம்; ஆயினும் இளமையில் கற்பது எளிதாகும்.

### 2.1.3. கல்வி இருவழிச் செயல்

கற்பிக்கும் ஆசிரியரின் ஆளுமை கற்போரது ஆளுமையில் மாற்றத்தை ஏற்படுத்த வல்லது. அறிவைப் பலவகையில் பயன்படுத்தக் கல்வி உதவி செய்கிறது. எக்கல்வியைக் கற்பிப்பவருக்கும் ஒரு நோக்கம் உண்டு: அதுபோலவே கற்றுகொள்பவருக்கும் நோக்கம் உண்டு. கற்போர், கற்பிப்போர் ஆகிய இருவர் நோக்கமும் இணைய வேண்டும்.

### 2.1.4. கல்வி மும்முனைச் செயல்

சமுதாய இடைவினையில் (interaction) கல்வி கற்பிப்பவரின் ஆளுமை, கல்விப் பெறுபவரின் நடத்தைப் பண்புகள், உள்ளுணர்வு, தூண்டல், மனப்பாங்கு ஆகியவற்றை நெறிப்படுத்தி அவற்றை சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆற்றுப்படுத்தும். கற்பிப்போர் கற்பிப்பதும், கற்போர் கற்பதும் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டும்.


## 2.2. கல்வியும், தத்துவமும்

கல்வி முடிவற்றது. ஆசிரியரின் நம்பிக்கைகள், மதிப்புகள், மற்றும் கருத்துகளால் குழந்தைகளிடம் மாற்றங்கள் ஏற்படும். ஆசிரியர் தத்துவஞானி. தன் தத்துவங்களின் வழியாகக் குழந்தையை விரும்பத்தக்க வகையில் மனிதனாக வளர்ச்சி பெறச் செய்கிறார்.

தத்துவம் என்பது ஆழ்ந்த அறிவு, சிந்தனை மற்றும் எண்ணங்கள் மூலம் கடவுள் மற்றும் இயற்கையோடு தன்னை மனிதன் இணைத்துக் கொள்ள உதவி செய்வது. தன்னுடைய அனுபவங்கள் வாயிலாகப் புதிய அறிவைத் தேடுகிறான் மனிதன். அதன் வழியாகப் பலவற்றை வேறுபடுத்தி உணர்கிறான். புதிய கருத்துகள், எண்ணங்கள், நம்பிக்கைகள், மதிப்புகள் தனக்குள் தோன்றி அதன் வழி மனிதன் வாழ்கிறான்; பிறருக்கு வழிகாட்டுகின்றான். தத்துவங்களின் வாழ்வியல் நடைமுறை உந்தமே கல்வி எனலாம். கல்வியும், தத்துவமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

## 2.2.1. கல்வித் தத்துவத்தின் வகைகள்

கல்வி என்பது வலிமையும் உணர்வும் மிக்கது; சரியான வழிகாட்டுதலும், மேற்பார்வையும், தேவைப்படும் செயல். சரியான வழிகாட்டுதலின்றி கல்வி தன்னுடைய இலக்கை அடைய இயலாது. தத்துவம், வாழ்வின் இலக்கை நிர்ணயம் செய்து, வழிகாட்டிக் கல்வியின் இலக்கை அடைய உதவுகின்றது. "உண்மையான கல்வி என்பது உண்மையான தத்துவத்தின் மூலமே நடைமுறையாகும்" என்கிறார் ஸ்பென்சர்.




## 2.2.2. கருத்தியல் கொள்கை

கருத்தியல் கொள்கை கடவுள் மீது நம்பிக்கையை வலியுறுத்திக் கூறுகிறது. கடவுளை அடைய ஆன்மீகப் பற்று அவசியம். ஆன்மீகக் கோட்பாடுகளே முழுமையானதும், உயரியவையுமாகும். மதிப்புகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை. இது சாக்ரடீஸ், விவேகானந்தர், காந்தி, பிளேட்டோ போன்றவர்கள் வலியுறுத்திய கோட்பாடு ஆகும். கருத்தியல் கொள்கையின் கல்வி நோக்கங்கள்

- தன்னை உணர்தல்
- ஆன்மீக வளர்ச்சி
- உண்மை, அழகு, அன்பு ஆகியவற்றை அறிதல்
- கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், வளர்த்தல் மற்றும் மாற்றம் செய்தல்
- அறிவு பகுத்தறிவை வளர்த்தல்
- புனிதமான வாழ்க்கைக்குத் தயார் செய்தல்

## 2.2.3. உண்மையியல் கொள்கை

தனிமனித வளர்ச்சியையும், சமூக வளர்ச்சியையும், இக் கொள்கை வலியுறுத்துகிறது. பருப்பொருளான உலகத்தின் மீதான நம்பிக்கை, காரண காரியத் தொடர்பு, அறிவியல் கொள்கைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை. அறிவியல் மனப்பான்மையைக் குழந்தைகளிடம் வளர்க்க உதவி செய்கின்றது.

**உண்மையியல் கொள்கையின் கல்வி நோக்கங்கள்**

- உண்மையான வாழ்க்கைக்குக் குழந்தையைத் தயார் செய்தல்
- குழந்தையின் உடல் மற்றும் மன ஆற்றலை வளரச் செய்தல்
- புலன்களுக்கான பயிற்சியும் வளர்ச்சியும் வழங்குதல்
- இயற்கை சுற்றுச் சூழலைத் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துதல்
- தொழிற்கல்வி அளித்தல்
- ஐம்புலன்களுக்கான பயிற்சி மற்றும் ஐம்புலன் வளர்ச்சி என்பனவாகும்.

## 2.2.4. இயற்கையியல் கொள்கை

அரிஸ்டாட்டில், ரூசோ டார்வின், பெர்னாட்ஷா, ஹெர்பர்ட் ஸ்பென்சர், போன்றோர் இக்கொள்கையைப் பின்பற்றிக் கல்வித் தத்துவங்களை வகுத்தனர். இயற்கையே எல்லாம் என்ற நம்பிக்கையை உடையவர்கள். பருப்பொருள் உலகத்தின் இயற்கைத் தன்மைகளையும், இயற்கையையும் இது அடிப்படையாகக் கொண்டது. புத்தக அறிவை எதிர்த்து, குழந்தையை மையமாகக் கொண்ட அணுகுமுறையை வற்புறுத்துவதாகும். இயற்கையியலின் கல்வி நோக்கங்கள்

- மனிதனை முழுமையாக்குதல்.
- சூழ்நிலையோடு மனிதனை பொருத்தப்பாடு அடையச் செய்தல்.
- இயற்கையோடு இயைந்த வளர்ச்சி பெறச் செய்தல்.
- சுய வளர்ச்சி.
- சுதந்திரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்.
- குழந்தைகளை மையமாகக் கொண்ட கல்வி முறை.

## 2.2.5. பயனளியியல் கொள்கை

ஆன்மீகக் கோட்பாடுகளையோ, கடவுளையோ நம்பாமல், மனிதன் மீது முழுமையான நம்பிக்கைக் கொண்ட கொள்கையே பயனளியியல் கொள்கை ஆகும். ஆன்மீகக் கோட்பாடுகள், காலம், சூழல் இவற்றிற்கேற்ப மாறும் தன்மை உடையதால், மனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. இது உளவியல் மற்றும் மனிதத் தன்மைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு நன்மதிப்புக்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுவதில்லை. வில்லியம் ஜேம்ஸ், ஜான் டூயி, கில்பேட்ரிக் போன்றவர்கள் இக்கோட்பாட்டாளர்களாவர்.

- நன்மதிப்புக்கள் புதிதாக உருவாக்கப்படுதல்
- இடம் காலம், சூழலுக்கேற்ப கல்வியின் நோக்கங்கள் மாறும் தன்மையுடையவை.
- சமுதாயத்தோடு ஒத்துப்போதல் மற்றும் மனிதனின் முழுமையான வளர்ச்சி.
- வாழ்க்கையை வளப்படுத்த கல்வி உதவ வேண்டும்.
- நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வி உதவுதல்.

தத்துவங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து கல்வி அளிப்பது, கல்வியின் இயற்கையான கோட்பாடுகளை, நோக்கங்களை புரிந்து கொள்ளாமையைக் குறிக்கும். கல்வியின் வழிமுறைகள் தத்துவங்களின் உதவியின்றி முறையான பாதையில் செல்ல முடியாது. ஆகவே, கல்வியின் நோக்கங்கள் தத்துவ அடிப்படைகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

## 2.3. கல்வி நோக்கங்களின் அவசியம்

நோக்கம் என்பது முன் கூட்டித் தீர்மானித்த இலக்கை அடைய, சரியான சிந்தனை மற்றும் திட்டமிடுதல் ஆகியவற்றுடன் எடுக்கும் நடவடிக்கைகள் அல்லது செயல்களைக் குறிக்கின்றது. நாம் செல்ல வேண்டிய பாதையைக்காட்டி இலக்கினை அடைய உரிய முடிவுகளை எடுக்கக் கல்வி நோக்கங்கள் மிகமிக அவசியம்.

பள்ளியில், புதிதாகச் சேரும் குழந்தைகளின் தேவைகளுக்கும், வளர்ந்து வருகின்ற அல்லது வளர்ந்துள்ள சமுதாயத்தினரின் தேவைகளுக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்கக் கூடியதாக கல்வியின் நோக்கம் அமைய வேண்டும். குழந்தைகளின் தேவை, கல்வியின் கொள்கைகள், ஆகியவற்றைப் பற்றி அறிவியல் பூர்வமான ஆய்வுகள் செய்து மதிப்புமிக்க கல்வி நோக்கங்களை உருவாக்க வேண்டும். வாழ்க்கையும், கல்வியும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இதையே டூயி "வாழ்க்கையே கல்வி " என்று குறிப்பிட்டார். மனிதன் பூமியில் பிறந்து வளர்ந்து ஆளாகி வாழ்வது ஒரு நோக்கத்திற்காகத்தான். தனிமனிதன் தன் நோக்கத்தை எய்துவதற்கு வழிகாட்டுவது கல்வி.

பண்பு உருவாக்கம், சூழ்நிலையோடு பொருத்தப்பாடு, வாழ்வதற்கான பொருளை ஈட்ட தொழில் செய்தல், அறிவு பெறுதல், நல்ல குடிமகனை உருவாக்குதல் போன்ற பலவகையான நோக்கங்களை அடைவதற்கான செயல்களைக் கல்வி மேற்கொள்ள வேண்டும்.

- ◈ பள்ளிக்கு வெளியில் உள்ள வாழ்க்கையுடன் அறிவைத் தொடர்பு படுத்துவது.
- ◈ கற்றல், மனப்பாடம் செய்யும் முறையில் இருந்து மாறி வருவதை என்பதை உறுதிப்படுத்துதல்.
- ◈ பாடப்புத்தகத்தை மையப்படுத்தாமல், குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையப்படுத்துதல்.
- ◈ நாட்டின் ஜனநாயகப் பன்முகத் தன்மையைப் புறந்தள்ளாமல் தனித்துவத்தை வளர்த்தல்.
- ◈ தேர்வுமுறைகளை நெகிழ்வுடையதாக்கி ஒருங்கிணைந்த வகையில் வகுப்பறை வாழ்வோடு இணைத்தல்

– தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005

உலகைப் புரிந்துகொள்ளவும், பிறர் நலன், அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும், அறிவை உருவாக்கவும், புதிய சூழலை படைப்பாற்றல் தன்மையோடும், நெகிழ்வோடும், எதிர்கொள்ளக் கற்றுக் கொடுக்கவும், ஜனநாயக வழிமுறைகளில் பங்கேற்க, ஒத்துழைப்பு உணர்வோடு, மற்றவர்களுடன் இணைந்து பணியாற்ற ஊக்குவிக்கவும், சமூக, பொருளாதார நிலைகளைப் பற்றிய புரிதலை உருவாக்கவும், வேலையோடு தொடர்புடைய அனுபவங்கள் பெறவும், கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றைப் பாராட்டவும், வளர்க்கவும் வகை செய்வனவாய்க் கல்வியின் நோக்கம் அமைய வேண்டும்.

## 2.4. கல்வியின் நோக்கங்களைத் தீர்மானிப்பவை

கல்வியின் நோக்கங்களை இருவழிகளில் தீர்மானிக்கலாம். அவை (அ) இலட்சிய வழி (Idealistic way) (ஆ) யதார்த்த வழி (Realistic way)

### 2.4.1. இலட்சிய வழி

முன்னேற்றமடைந்த சமுதாயத்தில் கல்வியின் நோக்கம் வாழ்வின் உயர் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும் என்பது இலட்சிய வழியாகும். அறிவைப் பெறுவது அறிவுக்காகவே என்பது குறிக்கோளாகும். தனிமனித வளர்ச்சி, நடத்தை மாற்றம் கலாச்சார மற்றும் மன வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சமூக வளர்ச்சி போன்றவை கல்வியின் அடிப்படை நோக்கங்களாக அமைகின்றன.

## 2.4.2. யதார்த்த வழி

சமுதாயத்தில் நடைமுறையிலுள்ள வாழ்க்கைத் தத்துவம், அரசியல் கொள்கைகள், சமுதாயப் பிரச்சனைகள், பொருளாதார நிலை, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை ஒரு நாட்டின் கல்வி நோக்கங்களை முடிவு செய்கின்றன. சமூகத்தின் தறபோதைய நிலையின் அடிப்படையில் தான் கல்வியின் நோக்கம் அமைய வேண்டும் என்பது யதார்த்த வழியாகும். கல்வி நோக்கங்கள், சமுதாயத்தின் மாறும் தன்மைக்கேற்ப, நெகிழுந்தன்மை உடையதாக இருக்கவேண்டும். அப்போதுதான் குழந்தைகள் வாழ்வின் யதார்த்தமான இடர்பாடுகளை எதிர்க்கொண்டு, அவற்றைத் தாமே தீர்த்துக் கொள்ளும் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். கல்வியின் யதார்த்த வழி பின்வரும் நான்கு காரணிகளால் பாதிக்கப்படுகின்றது.

1. வாழ்க்கைத் தத்துவங்கள்
2. அரசியல் முன்னேற்றம்
3. தொழில் நுட்ப வளர்ச்சி
4. சமூக பொருளாதார நிலைகள்

**(1) வாழ்க்கைத் தத்துவங்கள்**

கல்வி, வாழ்க்கை நோக்கங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது போன்றே, வாழ்க்கைத் தத்துவங்களாலும் பாதிக்கப்படுகின்றது. ஆன்மீகத் தத்துவங்களால் உந்தப்படுகின்றவர்கள் நடத்தை மற்றும் ஒழுக்க நோக்கங்களையும், இயற்கையை ஆதரிப்பவர்கள் பருப்பொருட்களின் வளமை மற்றும் மகிழ்வான வாழ்க்கை நோக்கங்களையும் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

**(2) அரசியல் வளர்ச்சி**

''ஒரு நாட்டின் கல்வி அமைப்புகள், அந்நாட்டை ஆள்கின்றவர்களின் சிறப்புக்களை வெளிப்படுத்தும்'' என பிரௌன் கூறுகின்றார். மக்களாட்சி நாடுகளில் நல்லகுடிமக்களை உருவாக்குவதும், சுயக்கட்டுப்பாடு மற்றும் மக்களாட்சி பண்புகளை ஊட்டுவதும் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். பொது உடைமை அரசாட்சி நாடுகளில் கீழ்ப்படிதல் மற்றும் கேள்விகளற்ற ஒழுக்கம் ஆகியவை கல்வியின் முதன்மையான நோக்கங்களாக உள்ளன.

**(3) தொழில் நுட்ப வளர்ச்சி**

நவீன அறிவியல் யுகத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மனி, ரஷ்யா போன்ற வளர்ந்த நாடுகள் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவதே கல்வியில் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. முன்னேறிவரும் நாடுகள் தொழில் நுட்பத்தில் புதிய ஆய்வுகள் செய்து அவற்றைக் கல்வியில் புகுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

**(4) அறிவியல் பொருளாதார நிலை**

அரசியல், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள நாடுகள், வலிமை மிக்கக் குடிமக்களை உருவாக்கிச் செயல் நுட்பத்தை, திறமையை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்தை கல்வியின் நோக்கமாகக் கொண்டுள்ளன நம்முடைய நாட்டில் மக்களாட்சி அடிப்படையில், தங்களை நாட்டிற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளக் கூடியவர்களை உருவாக்குவதைக் கல்வியின் நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றோம். ஆகவே, கல்வியின் நோக்கங்கள் வாழ்க்கையின்/சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படுகின்றன என்பதை நாம் தெளியலாம்.

## 2.5. கல்வி நோக்கங்களின் வகைகள்

தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005, மக்களாட்சி மதிப்புகளாக நாம்ஏற்றுக் கொண்டுள்ள சமத்துவம், நீதி, சுதந்திரம், சமயச்சார்பின்மை மனித உரிமைக்கும், நேர்மைக்கும் மதிப்பளித்தல் ஆகிய மதிப்புக்களைக் கட்டி வளர்க்கவும், உலகைப் பற்றிய புரிதலோடும், அறிவோடும், பிறர் நலன் மீதும், அவர்களின் உணர்வுகள் மீதும் அறிவார்ந்த அக்கறை கொள்ளவும், குழந்தைகளிடத்தில் அனுபவங்களை அளிக்கவும் கல்வி பொறுப்பேற்க வேண்டும் என்று எடுத்துக் கூறியுள்ளது. அதன் அடிப்படையில் கல்வியின் நோக்கங்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

- தனி மனித நோக்கம்
- சமூக நோக்கம்
- பொருளாதார நோக்கம்
- அரசியல் நோக்கம்
- பண்பாட்டு, கலாச்சார நோக்கம்
- தொழில் நோக்கம்
- அறிவு நோக்கம்
- உடல் வளர்ச்சி நோக்கம்
- நேரத்தைப் பயனுள்ளவாறுப் பயன்படுத்தும் நோக்கம்
- நடத்தை நோக்கம்
- ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி நோக்கம்

## 2.6. தனிமனித நோக்கம்

சிறந்த கல்வி முறை, தனிமனிதனைச் சிறந்தவனாக உருவாக்க வேண்டும். மனித இனத்திற்குள்ள எல்லா நல்லவைகளும் மனிதனின் கட்டுபாடற்ற, சுதந்திரமான செயல்களால் மட்டுமே உருவாகும். எல்லாக் கல்விச் செயல்களும் இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

கல்வி தனித்துவத்தை வளர்க்க முற்படும் போது தனிமனிதனின் உடல், உள்ளம், உணர்வு, மனம் சார்ந்த திறன்களை வளர்க்கக் கூடியதாக அமைய வேண்டும். மேலும் மனிதனுக்குள் இயல்பாய் உள்ள திறமைகள் தடையேதுமில்லாமல் வளரக் கல்வி உதவ வேண்டும்.

**கல்வியின் தனிமனித நோக்கம் கீழ்க்காணும் காரணங்களால் தேவை –**

- தன்னை உணர்த்தல் கோட்பாடு– ஆன்மீகவியலார்
- ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தன்மை உள்ளது. ஒவ்வொரு தனிமனிதனும் தொடர்ந்து முழுமையான வாழ்வை வாழ இயலுமாறு செய்யக் கல்வி அவசியம்– உயிரியல் அடிப்படை.
- குழந்தைகள் ஒவ்வொருவரும், ஆர்வம், சுவை, நாட்டம், தேவை, ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகிறார்கள். ஆகவே குழந்தையின் உள்ளுறையும் திறன்களைக் கண்டறிந்து அவற்றை வளர்க்க உதவ வேண்டும்– உளவியல் அடிப்படை.
- சமுதாயம், பண்பாடு மற்றும் கலாச்சார மாற்றங்கள் வளர்ச்சி ஆகியவை வரலாற்றில் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றிய மாமனிதர்களால் ஏற்பட்டன. ஆகவே மனித வாழ்விற்கு ஒவ்வொரு தனிமனிதரும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள கல்வி வழி கோல வேண்டும்.
- தனிமனிதனின் சுதந்திரத்தைப் பேணிக் காப்பதில் மக்களாட்சி சிறந்து விளங்குகிறது. அங்கு கல்வியின் நோக்கம், நற்குடிமகனை உருவாக்குவது ஆகும். நற்குடிமக்கள் நல்ல மனிதர்களிடமிருந்து மட்டுமே உருவாக முடியும்.

தனி மனிதனுக்கு வழங்கப்படும் சுதந்திரத்தினால் ஒழுக்கமின்மை, முரண்பாடு, மனஉளைச்சல் போன்றவை ஏற்பட்டு சமூகப் பிளவுகள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. மேலும் மனிதர் ஒவ்வொருவரும் சமுதாயத்திற்குத் தன்னை அர்ப்பணித்துத் தன் கடனை ஆற்றக் கடமைப்பட்டவர்கள். தனிமனித நோக்கத்தினால் இக்கடமையைத் தனிமனிதன் நிறைவேற்ற இயலாது.

## 2.7. சமூக நோக்கம்

சமூகம் என்பது, அதன் குடிமக்களை விட மேலானது. சமூகம் அவர்களின் ஆசை மற்றும் ஆர்வத்தை மேம்படுத்தி தனக்காகப் பயன்படுத்திக் கொள்ளும், தனித்தன்மை வாய்ந்தது. சமூகம் உண்மையானது. அதன் உட்பட்ட பணியாளரில் ஒருவன் தனிமனிதன் ஆவான். தனிமனிதன் சமூதாயத்தின் கட்டளைக்கு உட்பட்டு வாழ வேண்டும். அவனை சமுதாயத்தின் நோக்கத்திற்கு பொருத்தப்பாடு உடையவனாக உருவாக்க கல்விக்கு முழு சுதந்திரம் உள்ளது.

பண்டைய ஸ்பார்டா நாட்டு அரசின் கொள்கையின்படி, ஒவ்வொரு மனிதனும் பிறப்பது அவனுக்காக அன்று, தன் தாய் நாட்டிற்காகவே. ஆகவே கல்வியின் கொள்கை, ராணுவ வீரர்களை உருவாக்குவதாக அங்கு அமைந்தது.

## சமூக நோக்கம் ஏன் ?

தனி மனிதன் சமுதாயமின்றி வாழ வளர இயலாது. தனிப்படுத்தப்பட்ட மனிதன் என்பது கற்பனையே என்று ரேமண்ட் கூறுகிறார். மனிதன் சமூக விலங்கு என்பதால், சமூகத் தொடர்பு மூலமே அவன் வளர்ச்சி பெற முடியும்.

கல்வி ஒவ்வொரு தனி மனிதனையும், சமூகத்திற்கேற்ற திறமையானவர்களாக உருவாக்கவும், தனிப்பட்டவர்களின் திறமைகளையும், சக்திகளையும் உறுதியான முறையில் சமூதாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்– என்பார் ஜான் ரூயி

காந்தி ஆதாரக் கல்வி முறையைத் தனிப்பட்டவர்களின் நன்மைக்காக மட்டுமன்றி, கிராம மற்றும் விவசாய மக்களின் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உருவாக்கினார்,

ஓர் உயிரி பலஉறுப்புகளைக் கொண்டு, ஒவ்வொன்றும் தன் பணியைச் செய்வதோடு, பிற பகுதிகளோடும், ஒருங்கிணைந்து செயல்படுவது போல் ஒவ்வொரு தனிமனிதனும் ஒருங்கிணைந்து சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படும் வகையில் செயல்பட வேண்டும்.

சமுதாயம் மற்றும் அதன் பண்பாட்டுடன் இணைத்து, தனி மனிதனை வளர்ச்சிப் பெறச் செய்தல் அவசியம். தான் தனது, சமுதாயம், அதன் சூழல் ஆகியவற்றோடு தன் ஆளுமையை ஒவ்வொரு தனிமனிதனும் வளர்த்துக் கொள்வதோடு, சமுதாயத்திற்குத் தன்னை அர்ப்பணித்து அதற்கு முழுமையாகப் பணியாற்ற வேண்டும்.

மனித இனம் பன்னெடுங்காலமாக திரட்டிப் பாதுகாத்து வைத்த அறிவுக்களஞ்சியத்தின் அடிப்படையில் தான் தனிமனித வளர்ச்சி நடைபெறுது. எனவே கல்வக்கு சமூக நோக்கு அவசியம் என்று சமூகவியலார் கூறுகின்றனர்.

**செயல்**

கல்வியின் நோக்கம், சமூக நோக்கமே! தனிமனித நோக்கமே! பட்டிமன்றம் நடத்திக் மேலோங்கும் கருத்துகளை ஒப்படைப்பாகப் பதிவிக்க.

## 2.8. பொருளாதார நோக்கம்

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார முறைகளில் மக்களைப் பொருத்தப்பாடு உடையவர்களாக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். கல்வி சமூக பொருளாதாரப் பிரச்சனைகளை அமைதியான முறையில் களைந்து, சமத்துவ, கூட்டுறவு மற்றும் சக வாழ்வுள்ள சமுதாயத்தை அமைக்க முயல வேண்டும். பலவகைப்பட்ட சாதி, பொருளாதார சமூகப் பின்னணி, பழக்க

வழக்கங்கள் இந்தியாவில் நிலவி வருகின்றன. இச் சூழலில் ஒற்றுமையை மேம்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்தைக் கல்வி பெற்றிருக்க வேண்டும்.

அரை நூற்றாண்டிற்கு முன்பு, டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகள் பொருளாதார நெருக்கடியில் இருந்து வந்தன. மக்கள் தொகையின் அடர்த்தி அதிகம் காரணமாக அனைவருக்கும் உணவு வழங்க அரசால் இயலவில்லை. பழைய மரபுத் தொழில் அவர்களுக்குப் போதிய வருவாய் ஈட்டித் தரவில்லை. இயற்கை வளங்கள் மற்றும் மனிதசக்தி பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தன்னுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, கால்நடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டும் கூட, பால்பண்ணைத் தொழில் தொடங்கப்பட்டது. இப்புதிய தேவையை உணர மக்களுக்கு கல்வி வழங்கப்பட்டது. கல்வியின் காரணமாக மக்கள் புதிய சக்தியைப் பெற்றனர். பால் பொருட்கள் இங்கிலாந்து மற்றும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் மக்களின் தலா வருமானம் உயர்ந்தது. நாட்டின் செல்வம் தழைக்கத் தொடங்கியது. இதையே கல்வியும், பொருளாதார முன்னேற்றமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை எனவும், அவைகள் இருவழிச் செயல் (Two way process) எனவும் பி. சி. திலக் கூறுகிறார்.

## 2.8.1. பொருளாதார வளர்ச்சியில் கல்வியின் பங்கு

கல்வி பயனுள்ள உற்பத்திச் செயலாகக் கருதப்படுகிறது. அதன் மூலம் நாட்டின் பலதுறைகள் செழிப்படைகின்றன. தன்னுடைய பணியால் மனிதனை மிகவும் அறிவுள்ளவனாகவும், நம்பிக்கையுள்ளவனாகவும் விரைவாகச் செயல்படக் கூடியவனாகவும், கல்வி மாற்றுகிறது. அவனுடைய வாழ்வை உயர்த்தி வளப்படுத்த கல்வி வழிவகை செய்கிறது – ஆல்பிரட் மார்ஷல்

மனப்பாங்கு, தொழில் நுட்ப அறிவு மற்றும் திறன்களில் ஏற்படும் அடிப்படையான மாற்றங்களின் அடிப்படையில் பொருளாதாரம் விரைவாக முன்னேறும். உணர்வூட்டப்பட்ட மனம், உண்மையான அறிவு, உயரிய திறன் மற்றும் விரும்பத்தக்க மனமாற்றம் ஆகியவை பொருளாதார முன்னேற்றத்திற்கான காரணிகள் ஆகும். ஆகவே கல்வி இத்திறமையையும், பண்புகளையும் வளர்க்க உதவ வேண்டும்.

திறனுள்ள உழைப்பாளி, நிர்வாகி, ஆசிரியர் மற்றும் தொழில் வல்லுநர் போன்றோரைக் கண்டறிய கல்வி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வி, தரத்தை உயர்த்தும் ஒரு சாதனம். கல்வி மனித சக்தியை ஆக்கபூர்வமாக மாற்றும் தன்மை உடையது. அதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த இயலும்.

## 2.9. அரசியல் நோக்கம்

அரசியல் அமைப்புகள், இன்றைய சூழலில் சமுதாய வாழ்வைத் தீர்மானிக்கின்றன. சமுதாய மற்றும் வாழ்க்கைக் கருத்துகள் குடியரசுக்கும் , கம்யூனிச அரசுக்கும் வேறுபட்டவை. எந்த நாட்டிலும் கல்வி, எல்லாக் காலங்களிலும் ஆட்சி செய்பவர்களின் மதிப்புகளை, கருத்துகளை பிரதிபலிப்பதாகவே அமையும் என்று ஜே. எப். பிரௌன் கூறுகின்றார். கல்வியின் நோக்கத்தை ஆட்சி செய்யும் அரசு தீர்மானிக்கும். எல்லா நாடுகளிலும் அரசாட்சி ஒரு குறிப்பிட்ட அளவு, கட்டுப்பாட்டை கல்வியின் மீது செலுத்தும். இக்கட்டுப்பாடின்றி கல்வியை அனைவருக்கும் அரசால் வழங்கவியலாது.

கம்யூனிஸ் நாடுகளில் உழைப்பிற்கும், உழைப்பை நல்குபவனுக்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. ஆகவே அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பிற நிலைகளில் உழைப்பை

மையமாகக் கொண்டே கல்வியின் நோக்கம் அமைய வேண்டும். அரசின் கொள்கைகள் அனைத்தும் கல்வி பெறுபவருக்கு மாற்றப்படும். அதனை எதிர்க்கவோ, அல்லது விமர்சிக்கவோ எவருக்கும் உரிமையில்லை. கம்யூனிஸக் கோட்பாடுகளே கல்வியின் நோக்கமாகத் திகழும்.

குடியரசு நாடுகளில், கூட்டுறவு மனப்பான்மையுடன் பணியாற்றுதல், சமுதாய மனப்பாங்கை வளர்த்தல், தனிப்பட்ட சிந்தனையைப் பெருக்குதல், அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்குதல், சமூக நீதியைப் பாதுகாத்தல், உழைப்பையும், உழைப்பின் மேன்மையையும் உணரவைத்தல் போன்றவை கல்வியின் நோக்கங்களாக அமைந்து இருக்கின்றன.

**செயல்**

சுதந்திர இந்தியாவின் கல்வி நோக்கங்கள் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா ? கலந்துரையாடுக.

மக்களின் நலத்தின் மீது அக்கறை உள்ள நல அரசு, குறிப்பிட்ட அளவு கல்வியின் மீது அக்கறையும், கட்டுப்பாடும் கொண்டிருக்கும். உதாரணமாகக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பப் பெற்றோர்களைக் கட்டாயப்படுத்தலாம். தொடக்கக் கல்வி அளவில், அரசு அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை வழங்கத் தீர்மானிக்கும். மேலும் தேவையான பாடப்புத்தகங்கள் தயாரிக்க, கல்விக்காக வரி விதிக்க, கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் கலைத் திட்டங்களை நிர்ணயம் செய்ய முடியும்.

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகளில், கல்வியின் நோக்கம், ஆட்சியாளர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் மக்களை உருவாக்குவதாக அமைகிறது.

1986 ஆம் ஆண்டு இந்திய அரசு வெளியிட்ட கல்விக் கொள்கையில் நமது தேசியக் கண்ணோட்டத்தில் அனைவருக்கும் கல்வி என்பது நமது கொள்கை. இந்த கொள்கைதான் நமது பொருளாதார ஆன்மீக வளர்ச்சியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாகும் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, கல்வி என்பது மக்களின் அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## 2.10. பண்பாட்டு நோக்கம்

பண்பாடு என்பது மனிதனுக்குரிய ஒப்பற்ற சிறப்பாகும். மனிதன் பிறந்து அதன்பின் பண்பாட்டுச் சூழலுக்குக் கொண்டுவரப்படுகின்றான். பிற உயிரினங்கள் இயற்கைச் சூழலிலேயே வாழ்கின்றன. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தில் பிறப்பதன் மூலம், அதன் பண்பாட்டில் வளர்கிறான்; வாழ்கின்றான். ஒவ்வொரு மனிதனும் பண்பாட்டிற்கான பிரதிநிதி. இப்பண்பே அவனை விலங்குகளிடமிருந்து வேறுபடச் செய்கிறது.

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்பது தமிழ்வாக்கு. கரடு முரடான வாழ்க்கையிலிருந்து பண்பட்டுப் பெருகி வளர்ந்து விரிந்து சிறப்பான ஆளுமை கொண்டவராகவும், சிறப்பான வாழ்க்கை வாழ்பவராகவும் இருப்பவர் பண்பாடு உள்ளவர் என்று கருதப்படுகிறார். ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலில் பிறக்கிறான். அது அவனுக்குச் சரியான, முன்மாதிரியான நடத்தைப் பண்புகளையும், மதிப்புகளையும் வழங்குகிறது.

மனிதன் குறிப்பிட்ட இயற்கைச் சூழலில் வாழ்வதால், அதனோடு தன்னைப் பொருத்திக் கொள்ள வேண்டும். இப்பொருத்தப்பாட்டு வழியில், அவன் மேற்கொள்ளும் ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும், பண்பாட்டின் முக்கிய அங்கமாகும். பல்வேறு வகைப்பட்ட சூழலிலுள்ள

பலவிதமான சமுதாயத்தின் காரணமாகப் பல்வகைப் பண்பாட்டுச் சூழல் உருவாகிறது. இவை அனைத்தையும் புதிய தலைமுறைக்கு மாற்றம் செய்யக் கல்வி அவசியம்.

பண்பாடு, நம்முடைய மரபு, நம்பிக்கை போன்றவற்றை குறிப்பிடுகின்றது. இவைகள் மனிதனை தன் வாழும் சமுதாயச் சூழலோடு இசைந்து வாழ வகைச் செய்யும். சமுதாயச் சூழலுக்கு ஏற்ப இவைகளும் மாறும் தன்மை கொண்டவை. மனம், சமுதாயச் சூழல் மற்றும் பண்பாட்டுச் சூழலுடன் குழந்தைத் தன்னைத் தக அமைத்துக் கொள்ள கல்வி அவசியமாகும்.

கல்வி ஒவ்வொருவரையும், தன் பண்பாட்டின் அறிவைப் பெறச் செய்வதோடு, மட்டும் நின்றுவிடாமல் பிறரின் பண்பாடுகளையும் உணர்ந்து அவற்றின் முக்கியக் கூறுகளை அறிந்து புரிந்துக் கொள்ளவும், அவற்றைப் பாராட்டவும் உதவிட வேண்டும்.

கல்விக்குப் பண்பாட்டு நெறிகளைத் தேர்ந்து மேற்கொள்ளும் பணி உண்டு. அது நாட்டில் ஒருமையுணர்வுக்கும், அறிவியல் மனப்பாங்குக்கும், மனம் மற்றும் ஆன்ம விடுதலைக்கும் உதவி செய்யும் வகையில் அனைவரது உணர்வுகளையும், எண்ணங்களையும் செப்பமிடுகிறது எனத் தேசிய கல்விக் கொள்கை (1986) கூறுகிறது.

வட்டாரப் பண்பாடுகளை உள்ளடக்கிய பல மண்டலப் பண்பாடுகளைக் கொண்ட பன்முகப் பண்பாடுடைய நாடாக இந்தியா இருக்கிறது. மக்களின் மத நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள், அவர்களின் சமூகத் தொடர்புகளைப் பற்றிய புரிதல்கள் ஆகியவற்றில் ஒருவரிடமிருந்து, மற்றொருவர் முற்றிலும் மாறுபட்டவர்களாக உள்ளனர். கூட்டாக வாழ்வதற்கும், வளர்வதற்கும் எல்லாக் குழுக்களுக்கும் சம உரிமை உண்டு. பன்முகப் பண்பாடுடைய நம் சமூகத்தில் இவ்வுரிமைகளைப் பிரதிபலிக்கக் கூடிய கல்வி முறை தேவைப்படுகிறது.

நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தையும், தேசிய அடையாளத்தையும் வலுப்படுத்தும் வகையில் மாறிவரும் சமூகச் சூழலில் இன்றைய முன்னுரிமைகளைச் செயற்படுத்த கடந்த காலத்தை மறு மதிப்பீடு செய்து, மறு பொருள்படும் வகையில் இளம் தலைமுறையினரை உருவாக்கக்கூடியதாய் நமது கலைத் திட்டம் அமைய வேண்டும். மனித இனப் பரிமானத்தைப் புரிந்துக் கொள்வது, நம் நாட்டின் பன்முகத் தன்மையைப் புரிந்து கொள்ள உதவுவதுடன் நம் நாட்டின் சிறப்புத் தன்மைகளைப் பாராட்டி ஏற்றுக் கொள்ளவும் உதவும். இந்த மண்ணின் பண்பாட்டுப் பன்முகத் தன்மை போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

– தேசிய கலைத் திட்ட வடிவமைப்பு, 2005

## 2.11. தொழில் நோக்கம்

கல்வியின் அறிவு மற்றும் கலாச்சார நோக்கங்கள் மட்டுமே மனிதனின், சமுதாயத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துவிடுவதில்லை எனக் கல்வியாளர்கள் சிலர் குறிப்பிட்டுக் கல்வியின் தொழில் நோக்கத்தையும் வலியுறுத்துகின்றனர். மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம்ஆகியவற்றைப் பெற கல்வி உதவிட வேண்டும்.

தொழிற்சாலைகளும், இயந்திரமயமாதலும், கல்வியின் தொழில் நோக்கத்தின் முக்கியத்துவத்தை அதிகரித்து உள்ளன. இன்றைய குழந்தை நாளைய குடிமகன். அவன் தன் எதிர்கால வாழ்விற்கு பணம் ஈட்ட வேண்டும். அவனைப் பொருளாதார சுதந்திரமுள்ளவனாகவும், திறன் மிக்கவனாகவும், எதிர்காலப் பணிக்கு/தொழிலுக்கு தயாரிக்கவும் கல்வி முக்கியமானதாகும்.

தொழிலைக் கற்றுக் கொள்வதன் மூலம் வேலையின்மை என்பதிலிருந்து மாணவர்கள் தம்மைக் காப்புறுதி செய்து கொள்கின்றனர் என்று காந்தி கூறியுள்ளார். உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை உயர்த்திட இந்நோக்கம் உதவுகின்றது.

காந்தியின் ஆதாரக்கல்வி கைத்திறனை அடிப்படையாகக் கொண்டது. குழந்தைகளின் புதியன படைக்கும் திறனை வளர்த்துத், தன்னுடைய திறமை மற்றும் ஆற்றலை முழுமையாக இளமைப் பருவத்தில் பயன்படுத்திட ஆதாரக் கல்வி உதவியது.

கல்வியை ஒரு உறுதியான நோக்கத்தைக் கொண்ட செயலாக உருவாக்கிக், குழந்தைகளின் ஆர்வம், உணர்வு மற்றும் எண்ணங்களை விழித்தெழுமாறு செய்யக் கல்வியின் தொழில் நோக்கம் உதவ வேண்டும்.

குழந்தைகளின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களுக்குக் கல்வி மற்றும் தொழில் சார்ந்த வழிகாட்டுதல்களைப் பள்ளி வழங்க வேண்டும். குழந்தைகளின் ஆர்வம் மற்றும் ஆற்றலை அறிந்து, அதற்கேற்றாற் போல் உரிய படிப்பைத் தேர்ந்தெடுக்க அறிவுரை வழங்கி பின் வயதில் சமுதாயத்திற்கும் தனக்கும் பயன்படும் வகையில் தொழிலை அல்லது பணியை மேற்கொள்ள கல்வி உதவ வேண்டும்.

மனிதனுக்கு சமூகத்தில் ஒரு நிலையான அந்தஸ்தை, கௌரவத்தை ஏற்படுத்தித் தருவதோடு, தன்னுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் இந்நோக்கம் வழி செய்கின்றது.

தொழில் நோக்கம் மனிதனின் பருப்பொருள் சார்ந்த தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்து, அவனுடைய மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சிகளைத் தவிர்த்து விடுதலும் கூடும். அவைகளும் அவனுடைய முழுமையான வளர்ச்சிக்கு முக்கியமானவைகளே. மேலும் அமைதியும், மகிழ்ச்சியும், ஏற்பட மனம் மற்றும் ஆன்மீக சார்ந்த வளர்ச்சியும் தேவை.

தொழில் நோக்கம் மனிதனை இயந்திரத்தனமான சூழலில் சிக்கவைப்பதால், மனிதன் தன் வாழ்வை சுவையாக அனுபவிக்க விடாது. உண்மைக்கல்வி, ஒவ்வொருவரும் தன் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த உதவிட வேண்டும். தேவையற்ற விரும்பத்தகாத பழக்க வழக்கங்களும் தொழில் செய்வதால் ஏற்படுகின்றன. ஆகவே ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் மனிதன் பயன்படுத்த இயலாமல் போவதுமுண்டு.

## முடிவுரை

கல்வி என்பது தத்துவத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. கல்வி நிறைவேற்ற வேண்டிய வாழ்வின் இலக்குகளைத் தத்துவம் முடிவு செய்யும். நோக்கம் வாழ்விற்கு அர்த்தம் எனில், கல்வி அதனை அடைவதற்கான வழி. பல தத்துவ அறிஞர்களும், கல்வியாளர்களும், பல காலங்களில், பல நாடுகளில் மாறும் சூழலுக்கேற்ப கல்வி நோக்கங்களை உருவாக்கியுள்ளனர். தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப கல்வி நோக்கங்களும் அவற்றை அடையும் முறைகளும் மாறுபடுகின்றன. இயற்கையான இம்மாற்றம் நிகழவில்லையெனில் கல்விச் செயல்கள் தேங்கும். நவீன கல்வியாளர்களின் கருத்துப்படி எல்லாக் கல்வி நோக்கங்களும் அத்யாவசியமானவையே. ஆனால் ஒன்றிணைந்த ஒரு நோக்கத்தைக் கல்வியின் நோக்கமாகத் தீர்மானிக்க இயலாது. எந்த ஒரு தனி நோக்கமும் கல்வி வளர்ச்சிக்கான விரும்பத்தக்க எல்லாப் பலன்களையும் தனித்து அளிக்க இயலாது. அவைகள் தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சியின் ஒரு பகுதி அல்லது சில பகுதிகளை மட்டுமே வளர்க்கும். முழுமையான ஆளுமைத் தன்மையை வளர்க்க எல்லா நோக்கங்களையும் தழுவிய உட்படுத்திய கல்வி முறை நல்ல சமுதாயம் மற்றும் மனிதனை உருவாக்கத் தேவை.

**செயல்**

கல்வியின் நோக்கங்களாக இவ்வள நூலில் விவாதிக்கப்படாத பிற நோக்கங்களை அறிவியல் நோக்கம், ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கம் உடல் வளர்ச்சி மற்றும் நடத்தை நோக்கம், ஆளுமை வளர்ச்சி நோக்கம் போன்றவைகளை, உன் கல்வியாளரிடம் கேட்டும், நூலகங்களின் துணைக் கொண்டும் அறிக.

## தொகுப்புரை

கல்வி மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்துள்ள ஆற்றலை வெளிப்படுத்தச் செய்வது. தன்னை உணர, தன்னை வெளிப்படுத்த, நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட தனிமனிதன் முயல வேண்டும். சமுதாயத்தோடு தன்னைப் பொருத்தி, சமுதாயம் வளர தன்னால் முடிந்தனவற்றைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கல்வி நோக்கமும், மனிதனின் ஒருமுக ளர்ச்சிக்கு மட்டும் உதவும். மனிதன் மற்றும் சமுதாயத்தின் பன்முக வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி முறையை பள்ளியில், வகுப்பில் நிறைவேற்றித் தருவது ஆசிரியரின் தலையாய பொறுப்பாகும்.

# அலகு 3
# தொடக்கக் கல்வியின் நிலை

## 3.1. முன்னுரை

பண்டைய உலகில் கல்வி ஒரு தனிநபரின் நாட்டமாக இருந்தது. இடைக்காலத்தில் கல்வி ஒரு தனிமனிதனின் சமூக பொருளாதாரத் தகுதியாப் போற்றப்பட்டது. நவீன காலத்தில் தொடக்கத்தில் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாடு செய்யும் முதலீடாகச் செயல்பட்டது. இக்காலக்கட்டத்தில் தொடக்கக் கல்வி ஒரு நபரின் தற்காப்பு, வாழ்வாதார உத்தரவாதமாகவும் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளந்தறியும் குறியீடாகவும், அதன் எதிர் காலத்தை உலக நாடுகளுடன் ஒப்பிட்டுக் கணிப்பு செய்யும் அளவு கோளாகவும், தர வேறுபாட்டுக் காரணியாகவும் கொள்ளப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது.

வாழ்வாதாரக் காப்புச் சின்னமாகவும், ஜீவாதார உரிமையாகவும் கல்வி உலக அரங்கில் போற்றப்படுகிறது. எண்ணெழுத்தறிவு இல்லாதவர்களின் நல்வாழ்வையும், உரிமைகளையும் காத்துத்தர இனி அரசாங்கச் சட்டத்தாலும் கூட இயலாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்களாட்சிநாட்டில் ஒரு குடிமகன் தன் இறையாண்மையைக் காத்துப்பயன்படுத்திக் கொள்ளவும், குடியுரிமைகளை அடைந்தனுபவிக்கவும், தான் ஒரு நல்லாட்சி அரசைத் தெரிவு செய்து தன்னைத் தானே ஆண்டுகொள்ளவும் கல்வி இன்றியமையாததோர் அடிப்படைத் தகுதியாகும். கல்வியின் பன்முக அவசியத்தைப் பாரதம் பன்னெடுங்காலத்திற்கு முன்பே உணர்ந்திருந்தது எனினும் வாய்ப்புச் சமத்துவமும் உரிமையும், அரசர்களின் படையெடுப்பால் அவ்வப்போது இடர்பாடுகளுக்குள்ளாயின என்பது ஒரு கசப்பான உண்மையே.

“நவீன பாரதத்தின் விடிவெள்ளி” என்று போற்றப்படும் ராஜா ராம் மோகன் “கல்வி ஒன்றால் தான் இந்நாட்டு மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கித் தரமுடியும். நாட்டு விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் கல்வி தான் வழிகோலும்” என முழங்கினார்.

சுதேசி இயக்கக் காலத்தில் சிலரேனும் பெற்றிருந்த கல்விதான் இத்தாய் மண்ணின் விடுதலை வேட்கையைத் தூண்டி விடுதலைப்போர் வீரர்களின் கேடயமாகப் பயன்பட்டு அந்நியரை அஞ்சவைத்த ஒற்றுமையுணர்வின் நுணுக்கமாகவும், விடுதலை நாளை விரைவில் கண்டிட முழுமுதற் காரணியாகவும் செயல்பட்டது. அதே உணர்வின் உந்துதலுடன்தான் இந்தியா விடுதலை பெற்றபின், தன்னாட்சி செலுத்தும் குடியரசாகிட 1950–ல் சட்டத் திட்டங்களை வகுத்தாக்கி ஏற்ற போதும் இன்னும் பத்தே ஆண்டுகளில் இந்தியர் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வாய்ப்பைத் தந்தாக வேண்டுமென வழிகாட்டு நெறிமுறைகளில் அழுத்தந்திருத்தமாக எழுதிச் சட்டமாக இயற்றியது. அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை நாட்டின் குறிக்கோளாக்கித் தன் அரசியலமைப்புச் சட்டத்திலேயே பட்டயமாக்கி முயன்றுவரும் பெருமை பாரதத்திற்கே சேரும்.

ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் கல்வியால், தொழில் விருத்தியால், வாணிபத்தால், காலனி ஆதிக்கத்தால் தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை செல்வ வளம் கொழிக்குமாறு செய்து கொண்ட அதே காலக்கட்டத்தில் நம் அன்னை பாரதம் சுமார் மூன்றரை நூற்றாண்டுகள் பொருளாதாரச் சுரண்டலுக்கும், அரசியல் சூழ்ச்சிகளுக்கும் ஆளாகித் தன் முப்பது கோடி மக்களுக்கும் தரவேண்டிய கல்விக் கண் திறப்பு; கல்வி விழிப்புணர்வு; அறியாமை நீக்கும் மருந்து ஆகிய, மனித வள மேம்பாட்டுக் காரணியின் தாக்கம் பல்வேறு நிலைகளில் கிடைக்காமல் போனது. இதனை வலிந்து சரிகட்டவே இந்திய அரசியலமைப்புச் சட்டத் திட்டம் கல்விக்குக் காலவரையரையிட்ட முன்னேற்றத்தை அதிகாரப் பூர்வமாக அறிவித்தது. இந்நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்கு

வாழ்வாதாரக் கல்வியைத் தான் அளிக்க வேண்டிய பொறுப்பை ஒரு போதும் நேரடியாக ஏற்றுக் கொண்டு திட்டமிட்டுச் செயலாற்றாமலேயே சுமார் 250 ஆண்டுகால மேலாதிக்கத்தையும், கிட்டத்தட்ட நூறாண்டுக் கால வல்லாட்சியையும் இங்கிலாந்து இந்தியாவில் செலுத்தியது. இக்காலம் பாரத வரலாற்றில் முன்னேற்றம் குன்றிய, சுரண்டல் காலமாகவே கழிந்தது.

## 3.2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி – சுதந்திர இந்தியாவின் முயற்சிகள்

பரந்து விரிந்த இந்தியாவின் கல்வி நோக்கங்களை நிறைவேற்றிட 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29–ஆம் நாள் மத்தியக் கல்வி அமைச்சகம் தன் பணியைத் தொடங்கியது. பல்வேறு பெயர், பொறுப்பு மாற்றங்களுடன் இன்று அது 1986–ல் செப்டம்பர் 26–ல் நிறுவப்பட்ட இந்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் நான்கு துறைகளுள் ஒன்றாகச் செயல்பட்டு வருகின்றது.

இந்தியாவின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் கல்வியின் அவசியமும் தாக்கமும் பிணைந்து அமைந்துள்ளன. 1951–52-ல் 644.6 மில்லியன் ரூபாயாக இருந்த மத்திய, மாநில அரசுகளின் கல்வி ஒதுக்கீட்டுத் தொகை, 1995–96–ல் ரு. 3,00,000/– மில்லியனாக 45 ஆண்டுகளில் 465 மடங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் காலத்தில் நாட்டில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் பல திட்டமிடப்பட்டு கனரகத் தொழில்களும், அடிப்படைத் தொழில்களும் பேரளவில் வளர்ச்சிபெற்றன. இத்திட்ட காலத்தில் ஆதாரக் கல்வி முறை மாற்றம் பெற்றது. தாக்கம் இடைநிலை, உயர்நிலைக் கல்வி வளர்ச்சியின் பால் செலுத்தப்பட்டது. 1960 களில் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலால் கல்வி முன்னேற்றமும் சிறிது பாதிக்கப்பட்டது. இதனால் பள்ளி மாணவர் வருகை விகிதமும் வீழ்ச்சி அடைந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961-62 to 1965-66) 6–11 வயதுடைய குழந்தைகளனைவரையும் பள்ளியில் சேர்க்க வசதி வாய்ப்புக்களைப் பரவலாக்க முற்பட்டது.

நான்காவது ஐந்தாண்டு திட்டம் (1969 – 74) தொடக்கக் கல்வியின் விரிவாக்கத்துக்கு முன்னுரிமை அளித்தது. பெருளாதாரத்தில் பின்தங்கிய ஊரகப் பகுதிகளிலும் பின் தங்கிய சமுதாயப் பிரிவினர்க்கும் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர முற்பட்டது. ஆசிரியர் கல்விக்கும் விரிவாக்கம் வழங்கியது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974–1978) கல்வி பெறும் வாய்ப்பைச் சமத்துவமாக்கி சமூக நீதியை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்துவதாய் அமைந்தது. கல்வியினால் கிடைக்கக் கூடிய வேலைவாய்ப்பு – வேலைவாப்பிற்குகந்த கல்வி பற்றி சிந்தித்தது.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் (1980–85) வயது வந்தோர்களுக்கு முன்னுரிமை அளித்து, வயதுவந்தோர் எழுத்தறிவைப் பரவலாக்க முற்பட்டது அனைவருக்கும் கல்விக்கான இணைப்புத் திட்டங்கள் பல வழங்கப்பட்டன.

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டம் (1985–90) கல்விக்கட்டமைப்புகளை நெறிப்படுத்தி நாட்டின் சமூக பொருளாதாரத்தை உலக அரங்கின் நிலைகளுக்கு ஈடுகொடுத்து முன்னேற்றும் நோக்கோடு அமைந்தது. அனைவருக்கும் கல்வி 15–35 வயதினரிடம் காணப்பட்ட எழுத்தறிவின்மையை அடியோடு நீக்குதல், தொழிற் கல்வி வளர்ச்சி முதலியனவற்றை வலியுறுத்தியது.

**3.3.**

**1950–51** முதல் **1989–90** வரையிலான **40** ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியைப் பின்வரும் அட்டவணை மூலம் அறிதல் எளிது.

| ஆண்டுகள் | I-V வகுப்புகளில் மாணவர் (லட்சங்களில்) | 6-11 வயதுப் பிரிவிலிருந்த மொத்த குழந்தைகளுள் படிக்கும் மாணவர் சதவீதம் | VI-VIII வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை (லட்சங்களில்) | 11-14 வயதுப்பிரிவில் இருந்த மொத்த குழந்தைகளுள் படிக்கும் மாணவர் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1950–51 | 191.5 | 42.6 | 31.2 | 12.7 |
| 1960–61 | 349.5 | 62.4 | 67.0 | 22.5 |
| 1968–69 | 543.5 | 78.1 | 125.4 | 33.5 |
| 1978–79 | 689.5 | 81.6 | 181.6 | 38.0 |
| 1979–80 | 715.5 | 82.7 | 192.79 | 39.6 |
| 1982–83 | 795.5 | 86.5 | 236.31 | 45.6 |
| 1984–85 | 856.5 | 93.6 | 262.2 | 48.1 |
| 1986–87 | 899.9 | 95.96 | 287.8 | 53.14 |
| 1987–88 | 929.4 | 97.86 | 299.1 | 55.14 |
| 1988–89 | 957.3 | 99.56 | 309.4 | 56.95 |
| 1989–90 | 973.0 | 99.9 | 322.0 | 59.1 |
| 1990–91 | 991.0 | 101.03 | 333.0 | 60.11 |

எட்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1992–97) காலம் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி (UPE) அளிப்பதன் வழியாக நாட்டின் மனிதவளத்தை விருத்தி செய்வதன் வாயிலாக நாட்டின் பிரச்சனைகள் அனைத்துக்கும் தீர்வுகாண இயலும் என்பதைத் தீவிரமாக மனதில் கொண்டு மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டத்தை பெண் கல்விச் சதவீதம் தேசிய பெண் கல்விச் சதவீதத்துக்குக் குறைவாக உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் நடைமுறைப்படுத்தியது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் (1997–2002) இந்தியா சுதந்திரம் பெற்ற ஐம்பதாவது ஆண்டில் இயற்றப்பட்ட இத்திட்டம் அனைவருக்கும் தொடக்கக் கல்வியைக் கட்டாயச் செயல்பாடாக்கிக் கிராமக் கல்விக் குழுக்களை அமைத்து கல்வியில் சமுதாயத்தின் பங்கேற்புக்கு ஆவன செய்து மேம்படுத்தியது. விரிவான கட்டமைப்புச் செயல்பாடுகள் **73, 74**–வது இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின் வாயிலாகக் கிராம சமுதாயத்தை அதன் கல்வி நிர்வாகத்தில் பெரும்பங்கேற்று நடத்த வலியுறுத்தியது. முன்குழவிப் பருவக் கல்வி பள்ளிகள்தோறும் இணைத்து வழங்கப்பட்டது. இடையில் நிற்பவர்களுக்கான மாற்று முறைக் கல்வியை நடைமுறைப் படுத்தி இடை நிற்றலை வெகுவாகக் குறைத்து, மீண்டும் பள்ளிப்படிப்பைத் தொடர வழிவகை செய்தது.

மாநில மற்றும் நடுவணரசின் பன்முனைத் தாக்குதல் திட்டங்களால் இந்தியக் குடியரசில் **1950** முதல் கல்வி வசதிவாய்ப்புக்கள், மாணவர் சேர்க்கை, தக்க வைத்தல், இடை நிற்றலைக் குறைத்தல், நிறைவு செய்வோரின் சதவீதத்தைக் கூட்டுதல், தரத்தை மேம்படுத்துதல், கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்துதல் முதலிய பல்வேறு முயற்சிகளால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கல்வி விரிவாக்க முயற்சிகள் ஈட்டித் தந்துள்ளன. மாணவர் சேர்க்கை 1 முதல் 5 வகுப்புகளில் 1950–51–ல் 19.2 மில்லியன் என்பது 2000–2001–ல் 113.8 மில்லியன் ஆக 50 ஆண்டுகளில் 64 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இதே காலத்தில் உயர் தொடக்க, 6, 7, 8 வகுப்புக்களின் மாணவர் சேர்க்கை 3.1 மில்லியன் என்பதிலிருந்து 42.8 மில்லியன் என 14 மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதில் பெண்களின் சேர்க்கை 1950–51ல் 5.4 ஆக இருந்ததை 2000–2001–ல் 40.8 மில்லியன் ஆக உயர்த்தியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

## 3.4.

பள்ளியில் ஆண் / பெண் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையில் 1950–51 முதல் 2000–2001 வரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பின்வரும் அட்டவணை மில்லியன்களில் காட்டும்.

| ஆண்டுகள் | தொடக்கக் கல்வி | | | உயர்தொடக்கக் கல்வி | | |
|---|---|---|---|---|---|---|
| | I முதல் V | | மில்லியன்களில் | VI முதல் VIII | | |
| | ஆண் | பெண் | கூடுதல் | ஆண் | பெண் | கூடுதல் |
| 1950–51 | 13.8 | 5.4 | 19.2 | 2.6 | 0.5 | 3.1 |
| 1960–61 | 23.6 | 11.4 | 35.0 | 5.1 | 1.6 | 6.7 |
| 1970–71 | 35.7 | 21.3 | 57.0 | 9.4 | 3.9 | 13.3 |
| 1980–81 | 45.3 | 28.5 | 73.8 | 13.9 | 6.8 | 20.7 |
| 1990–91 | 57.0 | 40.4 | 97.4 | 21.5 | 12.5 | 34.0 |
| 2000–2001 | 64.0 | 40.8 | 113.8 | 25.3 | 17.5 | 42.8 |

## 3.5.

1950–51 முதல் 2000–2001 வரையிலான 50 ஆண்டுகளில் ஆண், பெண் மாணவர் சேர்க்கை சதவீதத்தின் சீரான உயர்வினைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டுகள் | தொடக்கக் கல்வி (சதவீதம்) | | | உயர் தொடக்கக் கல்வி (சதவீதம்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | கூடுதல் | ஆண் | பெண் | கூடுதல் |
| 1950–51 | 60.6 | 24.8 | 42.6 | 20.6 | 4.6 | 12.7 |
| 1960–61 | 82.6 | 41.4 | 62.4 | 33.2 | 11.3 | 22.5 |
| 1970–71 | 95.6 | 60.5 | 78.6 | 46.5 | 20.8 | 33.4 |
| 1980–81 | 95.8 | 64.1 | 80.5 | 54.3 | 28.6 | 41.9 |
| 1990–91 | 114.0 | 85.5 | 100.1 | 76.6 | 47.0 | 62.1 |
| 2000–2001 | 104.9 | 85.9 | 95.7 | 66.7 | 49.9 | 58.6 |

## 3.6.

2001-ல் நடத்தப்பட்ட தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரத்தின்படி எழுத்தறிவு பற்றிய ஒரு நோக்கு.

| | | | |
|---|---|---|---|
| மக்கள் தொகை மொத்தம் | : | 1,027,015,247 | |
| ஆண் | : | 531,277,078 | 51.73% |
| பெண் | : | 495,738,169 | 48.27% |
| கடந்த 10 ஆண்டுகால மக்கள் தொகைப் | | | |
| பெருக்கம் மொத்தம் | : | 180,627,359 | 21.34% |
| ,, பெருக்கம் ஆண் | : | 91,944,020 | 20.93% |
| ,, பெருக்கம் பெண் | : | 88,683,339 | 21.79% |
| சதுர கிலோ மீட்டருக்கு மக்கள் தொகை | : | 324 | பேர் |
| பால் விகிதம் 1000 ஆண்களுக்கு | : | 933 | பெண்கள் |
| மக்கள் தொகை வயது 0–6 மொத்தம் | : | 157,863,145 | 15.41% |
| மக்கள் தொகை ஆண் | : | 81,911,041 | 51.89% |
| மக்கள் தொகை பெண் | : | 75,952,104 | 48.11% |
| எழுத்தறிவுபெற்றோர் மொத்தம் | : | 566,714,995 | 65.38% |
| எழுத்தறிவுபெற்றோர் ஆண் | : | 339,969,048 | 75.85% |
| எழுத்தறிவுபெற்றோர் பெண் | : | 226,745,947 | 54.16% |

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே தேசிய அளவில் எழுத்தறிவு வேறுபாடு 21.69% சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## 3.7. ஊரக, நகர்ப்புற ஆண்/பெண் எழுத்தறிவு சதவீதம் (2001)

| பகுதி | ஆண் எழுத்தறிவு (சதவீதம்) | பெண் எழுத்தறிவு (சதவீதம்) | எழுத்தறிவு மொத்தம் (சதவீதம்) |
|---|---|---|---|
| ஊரகம் | 71.40 | 46.70 | 59.40 |
| நகர்புறம் | 86.70 | 73.20 | 80.30 |
| மொத்தம் | 75.85 | 54.16 | 65.38 |

## 3.8. தேசியக் கல்விக் கொள்கை (NPE) (1986)

1985 ஜனவரி மாதம் இந்திய அரசு கல்வி முறையை மேம்படுத்துவதற்கான தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டது. 1986 மே மாதம் "தேசியக் கல்வி கொள்கை 1986" என்ற கொள்கை செயல்திட்டத்தையும் ஆவணத்தையும் (Programme of Action) மத்திய அரசு வெளியிட்டது. இது 12 பகுதிகளை உள்ளடக்கியது. தொடக்கக் கல்வியுடன் தொடர்புடைய சில பிரிவுகளைக் காண்போம்.

பகுதி 1 : அறிமுகம் – இதில் "1986 தேசியக் கல்வி கொள்கை" பற்றிய பகுப்பாய்வும் கல்வியைப் பற்றிய அக்கறையும் இடம் பெற்றுள்ளது.

பகுதி 2 : கல்வியின் பங்கு – தேசிய மேம்பாட்டிற்குக் கல்வி முக்கியமானது. இன்றைக்கும், எதிர் காலத்திற்கும் கல்வி முக்கிய முதலீடு எனவும் இது எடுத்துரைக்கிறது.

பகுதி 3 : தேசிய கல்வி முறை 10 + 2 + 3 கல்வி முறை. தேசிய கலைத் திட்ட வடிவமைப்பு. பன்னாட்டு உணர்வு மற்றும் அமைதிக் கல்வி . கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்பு. குறைந்த பட்சக் கற்றல் இலக்குகள் (MLL). உயர்கல்வி மற்றும் தொழில் கல்வியில் பக்கவாட்டு நிலைப் பெயர்வுக்கு (Lateral entry) வசதி. UGC, AICTE, ICA, IMC, NCERT, NIEPA, NAC போன்ற தேசிய நிறுவனங்களின் செயல் தரம் உயர்த்தல்.கல்வியைப் பொதுப்பட்டியலில் வைத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பகுதி 4 : கல்வியில் சம வாய்ப்பு பாகுபாடுகளைக் களைதல். பெண் மேம்பாட்டிற்கான செயல் திட்டம். பெண்களின் எழுத்தறிவின்மையை நீக்குதல். தாழ்த்தப்பட்டோருக்கான கல்வியை பிற இனத்தவருடன் சமமாக வழங்குதல். பழங்குடி மக்களுக்கான கல்வி வாய்ப்பு. சிறுபான்மையினருக்கான கல்வி. கல்வியில் சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளுக்கான கல்வி. வயது வந்தோர் கல்வி போன்றவற்றைப் பற்றியதாகும்.

பகுதி 5 : கல்வியின் பல நிலைகளில் சீரமைப்பு செய்தல். 14 வயது வரையுள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், தக்கவைத்தல், தரத்தை உயர்த்தல். குழந்தை மையக்கல்வி முறை, தொழில் கல்வி தன்னாட்சிக் கல்லூரிகள், தன்னாட்சித் துறைகள் ஏற்படுத்தல், திறந்தவெளிக் கல்வி முறை ஆகியவற்றை விவரிக்கிறது.

**செயல்திட்ட நடவடிக்கைகள் (Programme of Action) 1992**

இந்திய அரசு, கல்வியின் தற்போதைய நிலையை மதிப்பிடவும், தேசியக் கல்விக் கொள்கையைத் திறம்பட நடைமுறைப்படுத்தவும், தேசியக் கல்விக் கொள்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய விரிவான நிதி ஆதாரங்களை உரிய முறையில் செலவிடவும், 23 சிறப்புப் பணிக்குழுக்களை (Task Forces) அமைத்தது. தேசியக் கல்வி கொள்கையின் 12 பகுதிகளுக்கான, 23 சிறப்பு பணிக்குழுக்களில் சிறந்த கல்வியாளர்கள், வல்லுநர்கள், மத்திய, மாநில அரசின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

## இருபத்து மூன்று சிறப்புப் பணிக்குழுக்கள் (Task Forces)

1. திட்டத்தைச் செயல்படுத்துதல்
2. பள்ளிக் கல்வியின் பாடப்பொருள் மற்றும் செயல்முறைகள்.
3. பெண்களுக்கான கல்வியில் சம வாய்ப்பு.
4. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய வகுப்பினருக்கான கல்வி.
5. சிறுபான்மையினருக்கான கல்வி.
6. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான கல்வி
7. வயது வந்தோர் மற்றும் தொடக்கக் கல்வி
8. முன் மழலைப் பருவக் கல்வி.
9. தொடக்கக்கல்வி
10. இடைநிலைக் கல்வி மற்றும் நவோதயா வித்யாலயா.
11. தொழிற்கல்வி
12. உயர்கல்வி
13. திறந்த வெளிப்பல்கலைக் கழகம் மற்றும் தொலை வழிக் கல்வி.
14. தொழில் நுட்பக் கல்வி மற்றும் மேலாண்மை.
15. ஆய்வு மேம்பாடு.

16. தொலைத் தொடர்புச் சாதனங்கள் மற்றும் கல்வித் தொழில் நுட்பவியல்
17. வாழ்வியல் நோக்கிற்கான கல்வி.
18. பண்பாட்டுத் தொலை நோக்கு மற்றும் மொழிக் கொள்கையை நிறைவேற்றுதல்.
19. உடற்கல்வி மற்றும் யோகா.
20. மதிப்பீட்டு வழிமுறை, மற்றும் தேர்வு முறை மாற்றம்
21. ஆசிரியர் பயிற்சி.
22. கல்வி மேலாண்மை.
23. ஊரகப் பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள்.

தேசியக் கல்வி கொள்கையின் செயல் திட்ட ஆவணம் 7 உட்பிரிவுகளை உள்ளடக்கியது.

இன்றைய உலகம் வெகுவாக மாறிவருகிறது, பல்வேறு ஊடகங்களின் வழியாகத் தகவல்கள் தொடர்ந்து வந்த வண்ணமாக உள்ளன. இத்தகவல்கள் குழந்தைகளின் உலகத்தையும் விட்டு வைப்பதில்லை. இவ்வாறு பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு வகையான தகவல்களும்; அறிவு சார் செய்திகளும் தொடர்ந்து கிடைப்பதை குழந்தைகளும் பெற்றுப் பயனடைய வேண்டும். உதாரணமாக கிராமத்துக் குழந்தைகளுக்கு உரையாடல், வானொலி, சுவரொட்டி, தொலைக்காட்சி, சினிமா போன்றவற்றைக் கேட்பதன் பார்ப்பதன் வழி இச்செய்திகள் கிடைக்கின்றன. நகரத்துக் குழந்தைகள் மேற்குறிப்பிட்டவையோடு கணினி மற்றும் இணையதள வசதிகள் மூலமாக அநேகச் செய்திகளைப் பெறுகிறார்கள்.

தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள குழந்தைகளிடம் ஆர்வம் ஊட்டப்பட வேண்டும். குழந்தை தானே கற்றுக் கொள்வதற்கான திறமையைப் பெற்றிருக்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு 21–ம் நூற்றாண்டில் தொடக்க கல்வியின் கொள்கைகள் எவை என்பது பற்றியும் கல்வியின் நான்கு முக்கிய அம்சங்கள் எவை என்பது பற்றியும் இனி பார்ப்போம்.

## 3.10. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தொடக்கக் கல்வியின் நோக்கங்கள்

தற்போதைய சூழ்நிலைகளின் தேவைகளைத் தன்னம்பிக்கையுடன் கையாளுகின்ற திறமையைக் குழந்தையிடம் வளர்ப்போமாயின் எதிர்காலத்தில் வரும் பிரச்சனைகளை அவர்கள் எளிதில் எதிர்கொள்வார்கள். அறிவு, திறமை, தேவையான மனப்பாங்கு மற்றும் நன்னெறிப் பண்புகளை வளர்ப்பதன் மூலம் குழந்தைகளிடம் தேவையான தன்னம்பிக்கையை வளர்க்க முடியும். ஆக இதுவே இந்த நூற்றாண்டின் கொள்கை எனக் கொள்ளலாம். இவற்றைச் சுருக்கமாக 'கல்வியின் நான்கு தூண்கள்' அல்லது முக்கிய அம்சங்கள் என அழைப்பர்.

கல்வியின் நான்கு தூண்கள்

- ◈ தொடர்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் திறனைப் பெறுதல்
- ◈ அறிந்தனவற்றைச் செயல்படுத்தும் திறனைப் பெறுதல்.
- ◈ பிறரோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறுதல்
- ◈ தன் திறமைகளை அறிந்து, அவற்றிற்கேற்ப வாழும் திறனைப் பெறுதல் என்பனவாகும்.

## 1. தொடர்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் திறனைப் பெறுதல்

குழந்தை எழுத்தறிவு, எண்ணறிவு, சிக்கலுக்குத் தீர்வு காணல், ஆய்வு மனப்பான்மையுடன் சிந்தித்து மேலும் சில அடிப்படை அறிவுகள் ஆகிய திறமைகளைப் பெற்று அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையில் பொருத்தமுடன் அவற்றைக் கையாளும் திறமையை அவசியம் பெற வேண்டும்.

## 2. அறிந்தனவற்றைச் செயல்படுத்தும் திறனைப் பெறுதல்

அறிந்து கொள்ளும் திறமை மட்டும் குழந்தைக்கு போதுமானதல்ல. தான் அறிந்து கொண்டவற்றைச் செய்து பார்க்கப் போதுமான திறனையும் சரியான மனப்பான்மையையும் பெற்றிருக்க வேண்டும். அதாவது குழந்தை செய்து கற்கும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். கைகள் நன்கு பழக்கப்படுவதோடு வேலையைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகும். தங்கள் கைகளாலே பொருட்கள் செய்வதனால் குழந்தைகளிடம் தன்னம்பிக்கையையும், தனித்தன்மை உணர்வுகளையும் வளர்க்கலாம்.

## 3. பிறரோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறுதல்

தனித்தன்மையும், தன்னம்பிக்கையும் உடையதாகக் குழந்தை வளர வேண்டும் என்பது முக்கியம் என்ற போதிலும் வேகமாக மாறிவரும் உலகச் சூழலுக்கு இது போதுமானதாயிராது. குழந்தை அன்றாடம் பலரைச் சந்திக்கிறது. பல அனுபவங்களைப் பெறுகிறது. இத்தகைய சூழ்நிலைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையையும், பாராட்டும், பொறுத்துக் கொள்ளும் மனப்பாங்குகளையும் பெற வைக்கிறது. மற்றவர்களோடு விளையாட, வேலை செய்ய, சேர்ந்து வாழத் தேவையான திறன்களைப் பெற வைக்கிறது. அதே நேரத்தில் குழந்தை தன்னுடைய சமூகச் சூழ்நிலை, பண்பாடு, வலிமை அல்லது குறைபாடு ஆகியவைகளை அறிந்து வைத்திருக்க தேவைப்படுகிறது. இவ்வாறாகக் குழந்தைப் பிறரோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறவியலும்.

## 4. தன் திறமைகளை அறிந்து அவற்றிற்கேற்ப வாழும் திறனைப் பெறுதல்

மேற்கண்ட மூன்று அம்சங்களும் கற்றலின் நான்காவது அம்சமாகிய எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான திறனைப் பெறவைக்கின்றன. குழந்தையின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சி என்ற இலக்கிற்குத் தொடர்புடையதாக இது இருக்கிறது.

- ◈ மக்களோடு தொடர்பு கொள்ளும் திறனும் தன்னம்பிக்கை உணர்வும்
- ◈ தன்னம்பிக்கையும் தனித்தன்மை உணர்வும்
- ◈ அடிப்படை நன்னெறிப் பண்புகள் பற்றிய உணர்வு
- ◈ அன்றாடச் சூழ்நிலையில் தானே முடிவெடுக்கும் திறன்
- ◈ கற்பனை செய்தல், படைத்தல் மற்றும் அழகுணர்தல் போன்ற திறன்கள்
- ◈ தன்னைச் சுற்றியுள்ள உலகோடு ஒத்து வாழும் திறன்.

ஆகவே தொடக்கக்கல்வி மேற்குறிப்பிட்ட நான்கு சிறப்பம்சங்களையும் அடைய ஆதாரமாக அமைய வேண்டும்.

## 3.11. தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு (NCF 2005)

இந்தியா, மிக நீண்ட வரலாற்றையும், மிகச் சிறந்த பண்பாட்டையும், ஜனநாயகப் பண்புகளையும், சமத்துவ நோக்கையும் கொண்ட சுதந்திர நாடு. சுதந்திரத்திற்கு பின் நாம் பின்பற்றி வரும் கல்வி முறையை ஆய்வு செய்யும்போது, நமது கல்வி நடைமுறை மனநிறைவளிப்பதாக இல்லை.

- ◈ நமது பள்ளி முறை நெகிழ்வற்ற தன்மையுடன் இருப்பதால் மாற்றங்களைக் கொண்டுவரத் தடையாக உள்ளது.
- ◈ கற்றல் தனிமைப்படுத்தப்பட்ட செயலாக இருப்பதால், குழந்தைகள் தங்கள் வாழ்க்கையை, பெற்ற அறிவோடு தொடர்புபடுத்திப் பார்க்க இயலாமல் உள்ளது.
- ◈ ஆக்கப் பூர்வமான சிந்தனைகளுக்கும், அகநோக்குச் சிந்தனைகளுக்கும் பள்ளிகள் ஊக்கம் தருவதில்லை.

- ◈ கல்வியின் பெயரால் பள்ளியில் எதைக் கொடுக்கின்றோமோ அது புதிய அறிவை உருவாக்கும் மனிதத் திறன்களை முடக்கி விடுகின்றது.
- ◈ குழந்தைகளின் நிகழ்காலத்தைக் கருத்தில் கொள்ளாது எதிர் காலம் மையப் படுத்தப்படுவதால் தேசநலன், சமூகநலன், குழந்தைகள் நலன் பாதிக்கப்படுகின்றது.

தேசியக் கல்விக்கொள்கை 1986, பல்வேறு நிலைகளில் திறமைகள் இனம் காணப்பட்டு, மதிப்புகள் வளர்க்கப்பட வேண்டும் என பரிந்துரைத்த போதிலும் கல்வி, தேர்வை மையமாக வைத்து, செய்திகளின் சுமையைப் பாடநூல்களில் மேன்மேலும் சேர்த்துக் கொண்டே போகும் போக்கு நீடித்து வந்ததாலும், 2000–இல் நடைபெற்ற கலைத்திட்ட வடிவமைப்புப் பரிசீலனை விரக்திஅடையச் செய்யும் நிலையில் இருந்ததாலும், இந்த நூற்றாண்டில் பள்ளிக் கல்வியின் எதிர்காலத் தேவையை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் "தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு 2005 "உருவாக்கப்பட்டது. இதன் வழிகாட்டும் கொள்கைகள் :

- ◈ பள்ளிக்கு வெளியில் உள்ள வாழ்க்கையுடன் அறிவைத் தொடர்புபடுத்துவது.
- ◈ கற்றல் மனப்பாடம் செய்யும் முறையிலிருந்து மாறி வர வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல்.
- ◈ பாடப்புத்தகத்தை மையப்படுத்தாமல், குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையப்படுத்தி, கலைத் திட்டத்தை செழுமைப்படுத்துதல்.
- ◈ தேர்வு முறைகளை நெகிழ்வுடையதாக்கி, ஒருங்கிணைந்த வகையில் வகுப்பறை வாழ்வோடு இணைத்தல்.
- ◈ நாட்டின் மக்களாட்சிப் பன்முகத் தன்மையைப் புறம் தள்ளாமல் தனித்துவத்தை வளர்த்தல்.

கல்வியைப் பொறுத்தவரை பல்வேறு மாநிலங்களில், பல சமூகப் பிரிவுகளில் வாழும் அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் கல்வி, ஒப்பிடக் கூடிய தரத்தில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. "இந்தியக் கல்வி முறையில் சமத்துவம், தரம், அளவு ஆகிய மூன்றும் புரிந்துகொள்ள இயலாத மாய முக்கோணத்தின் மூன்று பங்கங்களாக உள்ளன" என J.P. நாயக் கூறியுள்ளார்.

## கல்வியின் நோக்கங்கள்

- ◈ தற்காலப் பிரச்சனைகளில் குழந்தைகள் மூழ்கிவிடாது இருக்க வழிகாட்டுதல்.
- ◈ மக்களாட்சி மதிப்புகளான சமத்துவம், நீதி, சுதந்திரம், மதச் சார்பின்மை போன்றவற்றை உருவாக்கத் தேவையான அனுபவங்களை அளித்தல்.
- ◈ உலகைப் பற்றிய புரிதலோடும், அறிவோடும், பிறர் நலன்மீதும், அவர்களின் உணர்வுகள் மீதும் அக்கறை கொள்ள வழிகாட்டல்.
- ◈ புதிய சூழலை நெகிழ்வோடும், படைப்பாற்றல் திறனோடும் எதிர்கொள்ளப் பயிற்சியளித்தல்.
- ◈ அழகை ஆராதிப்பதும், கலையைப் போற்றுவதும், கலை இலக்கியப் படைப்பாற்றலும், வாழும் இடச்சூழல் பற்றிய அறிவும் பெற வகை செய்தல்.

## ஆசிரியர் பயிற்சிக்கான தொலைநோக்கு

- ◈ பள்ளிச் செயல் முறைகளிலிருந்து தாமாகவே எழும் தேவைகளுக்கு எற்ப, ஆசியர் பயிற்சி மாறவேண்டும்.
- ◈ தையரி மூட்டுதல், ஆதரவு அளித்தல், மாணவர்கள் தம் திறமைகளை உணரச் செய்தல், மனிதநலத்தை வளர்த்தல், சிறந்த குடிமகனாக வாழ நல்லியல்புகளை வளர்த்தல் போன்ற கடமைகள் உள்ளவராக ஆசிரியரை உருவாக்குதல்.

- கற்பவரின் தனிப்பட்ட தேவைகளுக்கும், மாறிவரும் சமூகத் தேவைக்கும் ஈடுகொடுக்கும் வகையிலும், கலைத்திட்டம் புதுப்பித்தலுக்குச் சுயச்சிந்தனையோடு தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் வகையில் ஆசிரியரை உருவாக்குதல்.

## தேர்வுச் சீர்த்திருத்தங்கள்

தற்போது பாட நூல்களிலிருந்து கேட்கப்படும் வினாவிடை அடிப்படையிலான கேள்வித் தாள்களை மாற்றும் வகையில் மறு சீரமைப்பு செய்யவேண்டுமென சுமையின்றி கற்றல் பற்றிய யஷ்பால் அறிக்கை வலியுறுத்தியுள்ளது. கிராமப் புறங்களில் மிக அதிகமான குழந்தைகள், குறிப்பாக பொருளாதார சமூக நீதியில் பின்தங்கியுள்ள குழந்தைகள், தேர்ச்சிபெறாமல் இருப்பதை ஆய்ந்து தேர்வு மற்றும் மதிப்பீட்டு முறையில் முழுமையாக மாற்றம் செய்யப்பட வேண்டும். மிகவும் வெளிப்படையானதாக இந்தியத் தேர்வு முறை மாற்றப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

# அலகு 4
# அறிவுப் பொருளாதாரம் – மனிதவள மேம்பாடு

## 4.0. முன்னோக்கு

கற்றவர்கள் எல்லாக்காலங்களிலும் கல்லாதவர்களைக் காட்டிலும் அதிகாரம் மிக்கவர்களாகவே இருந்து வந்துள்ளனர். கற்றவர்க்கு ஆளும் அதிகாரம் எளிமையாகக் கிடைத்து வந்தது. அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் என்ற புறநானூற்று வரிகளாலும் கல்வியால் வரும் தகுதிச் சிறப்பு போற்றப்பட்டுள்ளது.

வேளாண் பொருளாதாரம், பயிர்த்தொழில் உற்பத்தி குறித்த அறிவாக அமைந்தது. அதன் வளர்ச்சி வணிகப் பொருளாதாரத்தை உருவாக்கியது. வேளாண் விளைபொருள்களின் உற்பத்தியும் வணிகமுமே பொருளாதாரத்தின் நிலைகளாக நீண்டகாலம் அமைந்தன. பொருளாதாரம் நாளடைவில் விளைபொருட்களோடு, எரிபொருள்களான நிலக்கரி, எரி எண்ணெய், உலோகம் (இரும்பு, தங்கம், செம்பு) என்னும் கனிம வளப் பொருளாதார அடிப்படைகளில் விரிந்தது. பின்னர் போக்குவரத்தும், தொலைத்தொடர்பும் வளர்ந்தபின், விளை பொருட்கள், கனிமப்பொருட்கள் என்பவற்றோடு உயர்கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும் இணைந்து அறிவுப் பொருளாதாரம் வழியாக உலகம் ஒரு குடும்பமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. உலகின் ஆறில் ஒரு பங்கு மக்கள் தொகையைக் கொண்டது இந்தியா. இம்மனித வள வாய்ப்பு கொண்ட இந்தியா, கல்வியின் வழி அறிவுப் பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ளது. இதனால் நாட்டின் பொருளாதார வலிமை அதிகரிக்க உள்ள வாய்ப்புகளை இவ்வலகில் காண்போம்.

## 4.1. கல்வியும் பொருளாதாரமும்

பண்டைக் காலத்தில் எல்லாச் சமூகங்களிலும் மத குருக்களும், மந்திரிகளும் கற்றவர்களாக இருந்து அரசை வழி நடத்தியதற்கு "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்னும் புறநானூற்று வரிகள் சான்றுரைக்கின்றன. "கல்வியின் மிக்கதாம் செல்வம் ஒன்றில்லையே' என பாவேந்தர் பாரதிதாசனாரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே கல்வி, எந்நாளிலும் உற்பத்திக்கும் உயர்வுக்கும் நிர்வாகத்திற்கும் அடிப்படையானது என்பது பெறப்படுகிறது.

வாழ்விற்குத் தேவையானது அறிவு. அதனை விசாலமாக்கிப் பயன்மிகுவிப்பது கல்வி எனலாம். உற்பத்தியின் பெருக்கம், பொருள் விற்பனை–வாணிபப் பெருக்கமாக மாறுகிறது; வணிகப் பொருளாதாரமாக மாறி உலக நாடுகளிடையே தொடர்பு நெருக்கம் ஏற்பட்ட பொழுது, விளைபொருள் பற்றிய அறிவும், புவியியல் அறிவும் கல்வியில் இடம்பெற்றன. வேளாண்மை, வாணிபம், போர்க்கலை, மருத்துவம், அரசியல், வானியல் என விரிந்து கொண்டே செல்லும் தேவையையொட்டிப் பரவலாகி வளர்ந்த கல்வி, பொருளியலுக்கு அடிப்படையாகி நாடுகளின் வளத்துக்கு வழிவகுத்தது.

## 4.2. அறிவுப் பொருளாதாரம் என்பது தான் என்ன ?

கடற்பயணக் கண்டுபிடிப்புகளின் தொடர்ச்சியாக, மேற்கத்திய நாடுகளின் பல்வேறு கண்டுபிடிப்புகளினால் உலகின் ஆற்றல் வளங்களைக் கண்டுபிடிக்கும் தீவிரம் வளர்ந்தது. இதனால் இயந்திரக் கண்டுபிடிப்பும், தொழில் நுட்பமும் அறிவுப் பொருளியலின் அடிப்படையாயின. கல்வி, காகித அச்சு செய்வதாகவும் இயந்திரத் தொழில் நுட்பம் அறிவதாகவும் மாறியது. கருத்தியல் கல்வியுடன், தொழிலியல் கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும், கணிணிக் கல்வியும் உலகளவில் பரவலாயின. இன்றைய கணினியுகத்தில் 'அறிவு' உடைமையாக்கப்பபட்டு (Intelectual Property)

பதிவு உரிமை செய்யும் நிலையில் கல்வி அறிவு, பொருளாதாரத் தாக்கம் பெற்று வருகிறது. அனைத்துப் பொருளாதார நடைமுறைகளிலும் கல்வியறிவின் தாக்கம் இன்றியமையாததோர் முக்கித்துவத்தைப் பெற்றுவருகிறது. அறிவையே மூலதனமாகக் கொண்டு ஆற்றப்படும் பொருள்செய், நிதிசெய் வாணிப முயற்சிகளைப் படிப்பதே அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy) எனப்படுகிறது. பொருளாதாரத்துக்குப் பொருளும் பணமும் அடிப்படையாவதற்கு மேலாகவும் அறிவு அடிப்படையாகிறது என்பதே இப்பொருண்மை.

## 4.3. பொருளியலாளர்களின் பார்வையில் கல்வி

கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும், திருவள்ளுவரின் திருக்குறள் பொருட்பாலும் பொருளியலை அரசின் அங்கமாகக் கொண்டன. ஆடம்ஸ்மித் 'தம் தேசங்களின் வளங்கள்' என்னும் நூலில் கல்வியை அறிவும் திறமையும் பெறுவதற்கான மூலதனம் எனக் குறிக்கிறார்.

"மன்னரும் மாசரக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன்–மன்னர்க்குத்
தன்தேசமே அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு".–வாக்குண்டாம்–ஔவையார்.

ரிக்கார்டோ என்னும் பொருளியலாளர், எழுதிய மக்களின் பொருளியல் நல்வாழ்வு, மக்கள் தொகையைக் குறைப்பதன் மூலமும், கல்வி மூலதனத்தைப் பெருக்குவதன் வாயிலாகவும் அமையுமென்றார். ஜான்ஸ்டுவர்ட்மில் பொதுமக்கள் பெறும் கல்வி, பெருமை, பொருளியல் முன்னேற்றம், தனியாள் மேம்பாடு ஆகியவற்றை மக்களிடையே உருவாக்கும் என அறிவித்தார். ஆல்பிரட் மார்ஷல் என்பவர் அரசும் பெற்றோரும் இணைந்து தொழிற்கல்வி வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கார்ல்மார்க்ஸ், தொழிலாளர் வர்க்க ஆட்சியில் தொழில் நுட்பக் கல்வி, கருத்தியல் மற்றும் செய்முறையாகத் தொழிலாளர்களின் பள்ளியில் கற்றுத் தரப்பட வேண்டுமென்றார்.

மற்ற தொழில்களைப் போலவே கல்வியிலும் உள்ளிடு பொருட்களான (inputs) நிலம், கட்டடப்பொருட்கள், நூல்கள், விளையாட்டுப் பொருள்கள், அறிவியல் கருவிகள், ஆசிரியர் தொண்டு ஆகியனவற்றைப் பணம் செலவிட்டுப் பெற வேண்டியவைகளாக அமைத்திருக்கின்றன. எனினும் வெளிப்பாட்டில் கல்வியும், பயிற்சியும், சேவையும் சந்தை விற்பனைப் பொருட்கள் அல்ல என்றார் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா. இன்று தொழிற்சாலை முதலாளிகளைப் போலவே தொழிலில் வல்லுனத்துவம், அனுபவக் கல்வி பெற்றவர்களும் பொருளாதார மேன்மை பெற்றவர்களாக வாழ்கின்றனர். தொழில் வல்லுனர்களின் பாண்டிதயமும், அறிவும் பெரும் தொழிற்சாலைகளின் அடிப்படை மூலதனமாய் அமைகின்றமை கண்கூடு.

## 4.4. கல்வியின் முன்னேற்றம்

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாகக் கல்வியைப் பொருளாதாரச் சொல்லாட்சியின் வழி ஆய்ந்து பார்க்கத் தொடங்கியுள்ளோம். கல்வி முறையை சமூக வாழ்முறையுடன் இணைத்தல், கல்வியின் முக்கியத்துவத்தைத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்பாட்டுடன் இணைத்தல், கல்வி மூலாதாரங்களை மறுபகிர்வு செய்தல், ஒழுங்குப்படுத்துதல், கல்வியைப் பொருளியல் உற்பத்திக்கு உகந்ததாக்குதல், சமூகப் பொருத்தப்பாட்டைத் தரும் கல்வியாக மாற்றுதல், கல்வித் திட்டமிடல் மற்றும் கல்வி மேலாண்மை உத்திகளை மேம்படச் செய்தல் ஆகியன அறிவுப் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறை உத்திகளாகும். எல்லா நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திலும் அடிப்படைக் கல்வியறிவு தனிப்பெருங்காரணியாக, முதலீடாக, இடுபொருளாக வலியுறுத்தப்படுகிறது.

கல்வியை வெறும் பொருளாதார நோக்கில் மட்டுமே காணுதல் கூடாது. கல்வியின் பயன்களை அளந்தறிய இயலாது. கல்வியறிவால் ஒருவருக்கு ஏற்படும் நன்மைகள் எவை ? அவை எங்கு தோன்றி எங்கு முடிகின்றன என்பதை அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாத பலமுனைத்தாக்கமும், நெடுநாள் பயனும் மிக்கதாகக் கல்வி அமைகிறது. பொருளாதார வரவாகக் கல்வியை நாம் காண்பதைக் காட்டிலும், அறிவு பெறுதல், பண்பாடு, சமூகத்திறன் நன்னடத்தை, நல்வாழ்வு ஆகிய விலை மதிப்பிட இயலாத அரும்பயன்கள் எனக் கல்வியின் மேம்பட்ட பெருமைகள் பலவாகும். எனினும் இந்தியாவிலிருந்து கல்வியும், தொழில்நுட்பமும் கற்ற இந்தியர்களைப் பேரளவில் வெளிநாடுகள் நம்பகமாக வரவேற்கும் நிலை ஏற்பட்டுள்ளமை பெருமைக்குரியதாகும். இந்தியர்களின் பகுப்பொருள் அறிவைப் போலவே தனிமனிதப் பண்பாட்டுக் கூறுகளும், நன்னெறிப் பாங்குகளும் உலக மனிதவளச் சந்தையில் உயரிய இடத்தைப்பிடித்து வருகிறது.

## 4.5. பொருளாதார வகைப்பாடுகள்

பொதுவாகப் பொருளாதாரத்தைக் காலவரிசை நோக்கில் மரபுநிலைப் பொருளாதாரம், தொழில்யுகப் பொருளாதாரம், தற்போதைய நவீனகாலப் பொருளாதாரம் எனப் பிரித்து அறியலாம்.

**செயல்**

பலரது உடலுழைப்பால், உற்பத்தியால், படைப்பால் இயற்றப்படும் பொருள் செல்வத்தைக் காட்டிலும், மதிநுட்பத்தால், செயல்நுணுக்கத்தால், கல்வி அறிவாற்றலால் ஈட்டப்படும் பெரும் செல்வம் பன்மடங்காக அதிகரித்து வருவதை திறமை எனலாமா ? ஏய்ப்பு, சுரண்டல் எனலாமா ? – கருத்தரங்கம் நடத்தித் திரளும் கருத்துக்களைப் பதிவேட்டில் பதிக.

### 1. மரபுநிலைப் பொருளாதாரம்

மனித வரலாறு, உணவு தேடுதல், வேட்டையாடுதல், வேளாண்மை, நெசவு, கைத்தொழில், ஆலைப்புரட்சி, போக்குவரத்து கணினித் தொழில், தகவல் தொடர்பு வளர்ச்சி எனப்பல காலக்கட்டங்களைச் கண்டு வருகிறது. இவற்றில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வுப் பொருளாதாரத்தை மரபுநிலைப் பொருளாதாரம் எனக் குறிப்பிடலாம்.

### 2. வேளாண் பொருளாதாரம்

இந்தியாவில் உடலுழைப்பையும், கைத்தொழிலையும் மையமாகக் கொண்ட பண்பாட்டு வாழ்க்கையில் வேளாண் உற்பத்திப் பொருளாதாரம் சிறந்திருந்தது. உழைப்பு, கால்நடைகள், நிலம், நீர், காற்று, சூரிய ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையான வளங்களாகக் கொண்டு இவ்வாழ்க்கை அமைந்திருந்தது. இது உழைப்பை உலகுக்களித்து. இதில் பயன்நோக்கம் அதிகம். இது ஒரு உற்பத்திப்பணி.

### 3. வணிகப் பொருளாதாரம்

வேளாண் விளை பொருட்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கும், வேறொரு நாட்டிற்கும் தரை மற்றும் கடல்வழியாகக் கொண்டு சென்று வாணிகம் செய்வதால் வரும் வணிகப் பொருளாதாரம் வேளாண் பொருளாதாரத்தின் உச்சகட்ட மாற்றமாக எல்லாச் சமூகங்களிலும் நிலவியது. இது வணிகப் பொருளாதாரம் எனப்பட்டது. இது யூகத்தை அடிப்படையாகக் கொண்டது. இலாப நோக்கம் அதிகம். இது சேவைப்பணி.

## 4. தொழில் யுகப் பொருளாதாரம்

தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களான ஆடை, கருவிகள், சரக்குகள் முதலான சந்தை உருவாகத் தேவையான தொழிற்சாலைகளைக் கொண்டிருந்த நாடுகள் பொருளுற்பத்தியில் மிகுந்த நாடாகத் திகழ்ந்தன. இது மற்றவர் உழைப்பை நாடிய முயற்சி. இங்கு தேவைகள் நிறைவேற்றம் பெற்றன. இங்கு ஆக்கத்தைப்போலவே சுரண்டலும் இடம் பெற்றது.

## 5. கனிமவளப் பொருளாதாரம்

இரும்பு, தங்கம், நிலக்கரி, பாறை எண்ணெய்கள் போன்ற நிலத்தடி கனிம வளங்களைக் அகழ்ந்தெடுக்கும் நாடுகள் தங்கள் வளங்களின் வாயிலாகப் பொருளதார உயர்வைக் கண்டன. மத்திய கிழக்கு நாடுகள் பெட்ரோலியப் பொருளாதாரத்திரல் உயர்ந்ததை அறிவோம். ஈடு செய்யவியலாவற்றும் வளங்களை இது பயன்படுத்துகிறது. சூழல் மாசு அதிகம், பக்க விளைவுகளும் அதிகம்: ஆக்கம் அறிவு இரண்டுமே இதில் இடம் பெறுகின்றன.

## 6. தொழில், வாணிபப் பொருளாதாரம்

இயற்கை வளங்களும், கனிமவளங்களும் இல்லாத நாடுகள் வாணிபத்தை மேற்கொள்ளுவதன் வாயிலாகப் பொருளாதாரத்தில் உயர்ந்தன. அவை தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதன் வாயிலாகப் பெருவளம் பெற்றன. இதனை இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் உயர்வு வழியாகப் புரிந்துகொள்ளலாம்.

## 4.6. அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy)

இக்காலத்தில் மனித அறிவே பொருளாதாரமாக அமையும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குப் பல நாடுகளிலிருந்தும் குடியேறிய ஆய்வறிஞர்களால் அந்நாட்டின் பொருளாதார உயர்வு ஏற்றம் பெற்று வருகின்றது. இதன் வழியே வளரும் நாடுகளின் அறிவைத் தம் குடியேற்ற உத்திகளின் மூலம் பெறும் உத்தியை வளர்ந்த நாடுகள் மருத்துவம், ஆய்வு, பொறியியல் துறைகளில் கையாள்கின்றன. பொருளாதார உயர்வைக் கொண்டிருக்கும் நாடுகளின் போக்குவரத்தும், தொலைத் தொடர்பும் உலகளாவி விரிந்துள்ளன. எந்நாட்டிலும் எந்நாட்டினரும் பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அறிவுப் பொருளாதாரம் உலகளவில் பரந்துவிரியத் தொடங்கியுள்ளது. அறிவுப் பொருளாதாரம் உடலுழைப்பைக் குறைத்து, தொழில் நுட்பங்களையும், உத்திகளையும் அதிகமாகப் பயன்படுத்தி, மக்கள் தொகைமிக்க வளரும் நாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு வளர்ந்த நாடுகள் தம்மை மிக விரைவாக உலக நிதிய மதிப்பில் உயர்த்திக் கொள்ள வழிவகுப்பதாகவும் அமைந்துள்ளது.

## 4.7. அறிவு வணிகப் பொருளாதாரம்

இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 117 கோடி. உலகில், ஆங்கிலம் பேசும் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களில் பெரும்பான்மையாயோர் இந்தியாவில் வாழும் சூழல் காலனியாதிக்கத்தால் நம் நாட்டில் ஏற்பட்ட சூழலாகும். அமெரிக்க ஐக்கியநாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை எண்ணிக்கையில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைய நம்நாட்டு இளைஞர்கள் ஆங்கிலவழி கணினிகற்று மனிதவளத்தை மேலைநாடுகளில் விற்பனைப் பொருளாக்குகின்றனர். இது தொலைத் தொடர்புகளின் நீட்சியாக, அயலகப்பணி (Out Sourcing) வாயிலாகவும் நடைபெறுகிறது. இப்பணி தாராளமயம், உலகமயமாக்கம், தனியார்மயமாக்கலின் வழி வாகனம், மின் உற்பத்தி, மருந்து, வேளாண்மை போன்ற பலதுறைகளிலும் விரிவடைந்துள்ளது. இதனால் அறிவுசார், மனிதவளம் மிக்க இந்தியா உலக அரங்கில் தம் அறிவு வளத்தை வணிகப் பொருளாக்கி வருகின்றது. எது எப்படி ஆயினும் உடல்உழைப்பு, தொழில்நுட்பம், விழிப்புணர்வு, தனிமனிதப்பண்பு, கட்டுப்பாடு, நன்னெறிகள் இவை அனைத்திலுமே உயர்ந்த, சீரான மனித வளத்தையுடைய நாடுகளே இப்பொருளாதாரப் போட்டியில் வெற்றியுடன் நிலைத்து நிற்க முடியும் என்பது உறுதி.

## 4.8. பண்பாட்டறிவுப் பொருளாதாரம்

உலகெங்கும் உடலுழைப்புக் கூலிகளாகக் குடிபெயர்ந்த இந்தியமக்கள் இந்தியப் பண்பாட்டினையும் தம் வாழ்வின் சிறப்பாகவே கொண்டிருந்தனர். இன்றைய அறிவுப் பொருளாதார உலகில் பண்பாட்டின் கூறுகளான நடனம், இசை, நாடகம், இலக்கியம், மருத்துவம், குடும்பப் பிணைப்பு, தனிமனித ஒழுக்கம், மனிதநேயம் என்னும் பல்வேறுகூறுகள் பண்பாட்டு மூலதனமாக உலகெங்கும் இணையம் மற்றும் வாழ்வு வழி, பரிணமித்து வருகிறது. வேற்றுமையுள் ஒற்றுமை கொண்ட இப்பண்பாட்டு வாழ்முறையால் உலகோரைத் தம்பக்கம் மாற்றம் கொள்ளச் செய்வதோடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதற்கு அடிப்படையான இந்தியக் கல்விமுறையைப் பாராட்டுவதையும் இணைத்துக் காணும்போது அறிவுப் பொருளாதார உலகில் நம் நாடு கோலோச்சும் நிலை தொலைவில் இல்லை என்பதை ஊகிக்க முடிகிறது. எனினும் இதன் எதிர்முகத் தாக்கங்களுக்குள் இந்தியா சிக்கிக் கொள்ளக்கூடாது என்பது பற்றியும் நாம் அனைவரும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியுள்ளது.

## 4.9. இந்திய அறிவு மேலாண்மை

நீண்ட காலக் காலனியாதிக்க ஆட்சியின் கீழிருந்த இந்தியாவில் கற்றவர்கள் சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் குறைந்தே இருந்து வந்துள்ளனர். கணிதம், வானியல், வேளாண்மை, நீர்ப்பாசனம், கட்டடக்கலை, மருத்துவம், இசை போன்ற பல்வேறு துறைகளில் பன்முகப் பரிமாண அறிவு கொண்டிருந்த இந்தியரின் நிலை சுதந்திர இந்தியாவில் விரும்பத்தக்க வகையில் மாறத் தொடங்கியுள்ளது.

எல்லார்க்கும் கல்வியறிவு, எல்லார்க்கும் சுகாதார நல்வாழ்வு, எல்லா நாடுகளிலும் கற்றறிந்த இந்தியர்களுக்கு வரவேற்பு, இந்தியர்களின் உலகப்பரவலான குடியேற்றம், தொழில்நுட்பத்தில், வேளாண்மையில், பண்பாட்டில் இந்தியர்களின் ஈடுகொடுக்கும் தன்மை முதலியன இந்தியாவின் அறிவுப் பொருளாதாரத்தின் சிறப்புக் கூறுகள் எனலாம். நம் நாட்டின் அறிவு மேலாண்மை புதுமையாக்கத்தின் வாயிலாகத் தொழில் நுட்பத்தில் மட்டுமின்றி அடிப்படை அறிவியலிலும் மாற்றம் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே நிகழுமென அறிஞர்கள் கருதுகின்றனர்

**செயல்**

''இந்தியர்கள் முதலில் தன்னம்பிக்கை கொள்ள வேண்டும். தான் ஓர் இந்தியனாக இருப்பதன் அருமையை ஒப்பிட்டு உணர வேண்டும். சாதிக்கப் பிறந்ததாக ஆர்வப்பட வேண்டும். பன்னாட்டரங்கில் பாரதம் எந்நாட்டிற்கும் சளைத்ததல்ல என்ற உறுதியுடன் வாழத்தன் கல்வியறிவால் தக்கன தேடிப் பயிற்றுவதும் பயிலுவதும் செய்து வலுவூட்டிக் கொள்ள வேண்டும்''. இந்நாட்டின் எதிர்கால ஆசிரியர் எனும் வகையில் இந்நோக்கில் தங்கள் செம்மாப்புப் புனைவுகளை இனங்கண்டு ஒரு கட்டுரை வரையச் செய்க.

## 4.10. மனித வளம்

கி.பி 2020 இல் இந்திய மக்கள் தொகை உலக மக்கட் தொகையில் 25 விழுக்காடாக உயரும் நிலை உள்ளது. மனித வளம், அறிவு வளம், ஆக்க வளம், பண்பாட்டு நலம், பொருள் ஆதாரமாகக் விளங்கும் இச்சூழலில் உலகின் இளைஞர்களை மிகுதியாகக் கொண்டதாக பாரதம் இருப்பதால், மனவளம், உடல்வளம், அறிவுவளம் உடையவர்களாக அவர்களை உருவாக்கும் கல்வித்தரம் இந்நாட்டின் இன்றைய உடனடித் தேவையாகும். அனைவர்க்கும் தொடக்கநிலைக் கல்வி தொடங்கி 14 வயது முடியும் அனைவர்க்கும் பொதுக்கல்வி தந்து, உயர்கல்வியில் உலகச் சந்தையில் தவறாது தனக்கொரு இடம் கண்டு தன்னை வாழ்வித்துக் கொள்ள வழிவகுப்பது தலைமையாய கடமையாகும். உயர்கல்வி கற்போரின் ஆய்வுத்திறனை வளர்த்து தன்னம்பிக்கையும் சுய மரியாதையும் நாட்டுப்பற்றும், மனிதநேயமும் கொண்ட குடிமக்களாக அவர்களை வளர்ப்பதும் கல்வியின் முக்கியத் தேவைகளாகும்.

## 4.11. இயற்கை வளம் காத்தல்

இயற்கையைப் பேணாமலே சுரண்டியதன் விளைவாகச் சுற்றுச் சூழலில் நீர், நில, காற்று மாசு இன்று அதிகமாகி வருகிறது. வெப்ப மிகுதியால் பெருங்கேடுகள் தோன்றும் சூழல், எரிசக்திப் பொருள்கள் குறைந்து கனிமவளப் பொருளாதார நிலை குலையும் வாய்ப்பும் உள்ளது. உலகச் சூழலில் இயற்கை வளங்களையும் நலங்களையும் பேணி, நீடித்த அறிவியல் வழிமுறைகளை எல்லாத் துறைகளிலும் நம் நாட்டினர் கல்வியின்வழிப் பெற்றாக வேண்டும். அனைவருக்கும் கல்வி தந்து, கல்வியில் தர வேறுபாடுகளை நியாயப்படுத்தாமல் அனைவரும் தரமான கல்வியை முயன்று பெற்று உலக அறிவுப் பொருளாதாரத்தில் இந்தியா மேலோங்கி நின்றிட, கல்விப் பணியாளர்களாம் நாம் கருத்துமிக்க நாட்டுப்பற்றாளர்களாகவும் தன்னார்வலர்களாகவும் முயன்று செயலாற்ற வேண்டும்.

## மனித வள மேம்பாடு
## Human Resource Development

மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் மலரச் செய்து, அவர்களைத் தற்சார்புள்ள வளமான நிறைமனிதர்களாக்கிடக் கல்வி முறை உதவ வேண்டும். கல்வி நாட்டின் முன்னேற்றத்திற்கு நிலையான முதலீடாகும். நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வி அறிவு பெற்ற மனித வளம் முக்கியமானதாகும். கல்விச் செயல் முறையில் இடுபொருள்கள், விளைபயன்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பயன்களைப் பெருக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கும் தனி மனித மதிப்புகள் உயர்வதற்கும் கல்வி வழிவகுக்க வேண்டும். குழந்தைகளிடையே மனப்பான்மைகளும் விழுமங்களும் இணைந்து பெருகவும் கல்விச் செயல்கள் உறுதுணையாய் அமைய வேண்டும்.

## 4.12. அமைதிக் கல்வி

அமைதிக் கல்வி, அமைதிக்கான கல்வி என்பவை ஒன்றுக்கொன்று இணையானவை. அமைதிக் கலாச்சாரத்திற்குத் (Culture of peace) துணைபுரியக் கூடிய மனப்பான்மையை வளர்க்க வேண்டும். ஆற்றல் மாற்றம் செய்யக் கூடிய கல்விச் செயல்பாடுகளை உள்வாங்கி பாடப்பொருள்களுடன் உரிய கற்றல் சூழல்களில் இணைத்தும், பிணைத்தும், பாட இணை, துணை செயல்களாக வகுத்தும் மாணவர்கள் ஏற்கும் வண்ணம் அமைதி உணர்வை வளர்க்கும் வகையில் வழங்குதல் அமைதிக்கான கல்வி எனப்படுகிறது.

அமைதிக்கான கல்வி குறித்து NCF (2005 பக்கம் 88) இரண்டு நோக்கங்களின் அடிப்படையில் பட்டியல் தயாரித்துள்ளது.

- ◈ வன்முறை இல்லாத, அகிம்சை வழிமுறைகளைத் தனி மனிதன் தேர்ந்தெடுப்பதற்கான மனப்பான்மையைத் தருதல்.
- ◈ அமைதியை விரும்புபவர்களாகவும், அமைதியை அனுபவிப்பவர்களாகவும் மட்டுமன்றி அமைதியை உருவாக்குபவர்களாகவும், நிலை நாட்டுபவர்களாகவும் மாணவர்களை உருவாக்குவது.

**அமைதிக் கல்வி** என்பது விழுமியக் கல்விப் பாங்குகளான அகிம்சை, சகிப்புத் தன்மை, பொறையுடைமை, கூடிவாழும் உணர்வு, மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்டறிதல், மற்றவர்களின் உணர்வை மதித்தல், கலாச்சாரப் பன்மைய வகைப்பாடுகளை விரும்புதல், நீதி, சமத்துவம், வாய்மை ஆகியவற்றை வலுப்படுத்துவதாகும். அமைதி மனப்பான்மையை நிலைப்படுத்துதல், வன்முறையை வெறுத்தல், நல்லிணக்கம், மற்றவர் உரிமைகளை மதித்தல்

முதலான மனப்பெற்றிமைகளை மாணவர்களிடையே வளர்த்தாக்கிட வேண்டிய கற்றல் அனுபவங்களைப் பாடத்திட்டத்தில் **சேர்த்துத் திட்டமிட்டுப் பயிற்சி** அளிப்பது அமைதிக்கான கல்வி எனப்படுகிறது.

## 4.12.1. அமைதிக் கல்வியின் அவசியம்

''அமைதி என்பது போரில்லாமல் இருப்பதை மட்டும் குறிப்பதன்று; உலக சமுதாயத்தில் சகோதர மனப்பான்மையும், நீதியும் நிம்மதியும் நிறைந்த வளர்ச்சியுடன் இருப்பதாகும்''. வன்முறை, தீவிரவாதம் இனவெறுப்பு, ஆயுதக்குவிப்பு, ஆக்கிரமிப்பு, பற்றாக்குறை, பஞ்சம், பட்டினி, பயம், கடத்துதல் முதலான அவலமும் அச்சமும் இல்லாமல் மனிதர்கள் எங்கும் அமைதியும், நிம்மதியும் திளைக்க வாழ்வதே அமைதிக் கல்வின் நோக்கமாகும். ஒரு நாட்டின் ஒரு பகுதியில் தோன்றும் ஒரு சிறு நெருக்கடியும், தாக்குதலும், போராட்டமும் கூட ஒரே நாளில் உலகெங்கிலும் பரவி அனைத்து மனிதர்களின் நிம்மதியையும், இதமான, இயல்பான வாழ்வையும் பாதிக்கக்கூடிய நெருக்கமான மனிதப் பிணைப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் ஒரு சிறு கிராமமாக மாறிவிட்டது. பெட்ரன்ட்ரசல் உலக அமைதியைப் பற்றிக் கூறும்பொழுது, ''மனித இனம் தற்பொழுது ஒரே குடும்பத்தைச் சேர்ந்தாற்போல் இருக்கிறது. அதன் காரணமாக தனிமனிதர், எவரும் தனக்கென்று மட்டும் எதையும் செய்ய முடியாது. தற்பொழுது உலகத்தில் சமதர்ம சமுதாய அமைப்பு அமைய மிகப் பெரிய வாய்ப்பிருக்கிறது. இது உலகத்தில் ஏற்பட்டு வரும் மிகப்பெரிய மாற்றம். இதற்கு மனிதனுடைய மனதில் ஒரு நீடித்த சிந்தனை தேவைப்படுகிறது'' என்றார். எனவே அத்தகைய மாற்றத்தை அமைதிக் கல்வியால் மட்டுமே கொணர முடியும்.

பேரழிவை ஏற்படுத்தக் கூடிய போர்க்கருவிகள் மற்றும் நாச வேலையை உருவாக்கக் கூடிய கண்டம்விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகள் அனைத்து நாடுகளிடமும் உள்ளன. சகிப்புத்தன்மையின்மை, மக்களிடையே இருக்கக் கூடிய வெறுப்புணர்வு, ஆதிக்கவெறி, பொருள் குவிப்பு, பதுக்கல் ஆசை, தன்பெருமை முனைப்பு, தீய எண்ணங்கள் போன்றவற்றிற்கிடையே உலகத்தில் அமைதிப் பண்பை நிலை நாட்டுவது என்பது மிக அரிய பணியாகும்.

ஒவ்வொரு நாளும் வன்முறை, நாசவேலை, ஆட்சேதம் போன்றவற்றை உலகம் எதிர்கொண்டு வருகின்றது. இச்சூழலில் உலகத்தில் மனித நேயம், அன்பு, சகிப்புத் தன்மை, சகோதர உணர்வு, நல்லிணக்கம், சகவாழ்வு முதலிய பண்புகளின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து கொள்வது அவசியம். உலகின் அழிவுச் சிந்தனைகளிடமிருந்தும், அழிவுச் சக்திகளிடமிருந்தும், ஆதிக்க உணர்வினரிடமிருந்தும், தன் முனைப்பாளர்களிடமிருந்தும் வெறுப்பு, விரக்தி, புரிவின்மை முதலியவற்றை நீக்கிக் கருணை, இரக்கம், உயிர்க்காப்புணர்வு, தொண்டுள்ளம் முதலியவற்றை வளர்ப்பதே கல்வியின் உடனடித் தேவை எனலாம். பன்னாட்டுப் பாங்குகளை மாணவர்களிடம் வளர்த்தல் வேண்டும். கற்ற மனிதர்களை சுய நலமின்றி, விசாலமான நோக்குடன் வன்முறையை மறுப்பவர்களாகவும், அமைதி, அறத்தின் காவலர்களாகவும் ஆகுமாறு வழிவகுத்துக் கற்பிக்க வேண்டும்.

இந்தியா அமைதி மற்றும் சகிப்புத் தன்மையில் மிகப் பெரிய வரலாற்றைப் பெற்றிருக்கிறது. ''மேலைநாட்டு அணுகுமுறையில் தெரிவு செய்யப்பட்டுத் தொடங்கப்படும் எந்த நற்செயலும் இறுதியில் ஓர் இந்திய அணுகு முறையின் முடிவாகத்தான் இருக்க வேண்டும் (பால்கிவாலா 2000 பக்கம் 1). ''மனித இனத்தின் மீட்பு என்பது உலகத்தில் எப்பொழுதுமே நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியும், அசோகரும் காட்டிய அகிம்சை வழியைப் பின்பற்றுவதே ஆகும்'' என்பார் ஆர்னால்ட்டு டாயின்பி. டாயின்பி மேலும் குறிப்பிடுகையில் அகிம்சை வழியைப் பின்பற்றாத, அகிம்சை வழியை

ஏற்றுக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளாத எந்த ஒரு சமூகமும் இறுதியில் சிதறுண்டே போகும் என்றார்.

அமைதிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) மற்றும் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO) அமைதிக்கல்வியைப் பற்றிய பாடக்கருத்துக்களை ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக் கலைத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப் பரிந்துரைக்கின்றன.

**செயல்**

உலக–நாட்டின் அமைதிக்காக அகிம்சை வழியில் போராடிய தலைவர்களின் செயல்பாடுகளைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளைப் பட்டியலிடுக

## 4.13. அமைதிக்கல்வியின் கோட்பாடு

இந்தியாவில் அனைத்து ஆன்மீகப் புனிதச் செயல்பாடுகளின் இறுதியிலும் ''ஓம் சாந்தி'' 'சாந்தி', "சாந்தி" என்ற சொற்றொடர் ஒலிக்கப்படுகிறது. 'சாந்தம் உண்டானால் சௌகர்யமும் உண்டாகும்', 'சாந்தம் இல்லையேல் சௌகர்யமும் இல்லை' என்பது ஒரு கவிவாணரின் வாக்கு. சாந்தமும் நன்மைகளும், சாந்தமும் நிம்மதியும், சாந்தமும் சுகமும் ஒன்றையொன்று தழுவியே நிற்கும்.

யுனெஸ்கோவின் அமைதிக் கல்வித் திட்டக் கோட்பாடுகள் பின்வருமாறு

- நேர்மறையாக (Positive) சிந்தனை செய்தல்.
- அகிம்சை வழியில் சிந்தித்தல்.
- உள்ளத்தில் அமைதியைக் காணுதல்.
- மனித மேன்மையைப் போற்றுதல்.
- சமுதாயத்தில் அமைதியை உருவாக்குதல்.
- பூமியைப் பாதுகாக்கக் கவனம் செலுத்துதல்.
- கருத்து வேறுபாடுகளை அமைதியான வழியில் தீர்த்தல்.
- தன்னைத் தானே அறிதல்.
- சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளுதல்.
- கருணை கொண்டு, தீங்கு செய்யாதிருத்தல்.

அகிம்சை என்பது இந்தியாவிற்கே உரித்தான தனித்துவப் பண்பு. பழங்கால இந்திய குருமார்கள் ''மகிழ்ச்சி அடைவதற்கு ஒரே வழி அமைதி மட்டுமே'' என்று நம்பினர். ''மன அமைதி இல்லாத இடத்தில் மகிழ்ச்சி இல்லை'' என்பதை கீதை குறிப்பிடுகிறது. பயம், கோபம் என்பதைப் பற்றிய எண்ணம் கூட இருத்தல் ஆகாது. மனித இனத்தின் மேல் அன்பு செலுத்துவது தான் உலக நிம்மதிக்கு அடிப்படைக் கொள்கை ஆகும்.

**செயல்**

வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொண்ட மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடி உங்கள் மன அமைதிக்குக் காரணமான கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

## 4.14. அமைதிக் கல்விக்கான கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகள்

"இலக்கியங்களில் அமைதி பொதிந்து கிடக்கின்றது; புனிதநூல்களில் அவை போதிக்கப்பட்டுள்ளன. இறைவழிபாடுகளில் அமைதி வேண்டப்படுகிறது; எல்லா அறமும் அமைதியையே புகட்டுகின்றன.

ஆனால் வாழ்க்கையில் பின்பற்றப்படுவதில்லை" என்பதே பரவலான மனக்குறை. குழந்தைகளின் வாழ்க்கையோடு இயைந்த அமைதிக்கான வாழ்க்கைக் கல்வியைப் பள்ளிகள் பல்வேறு வழிமுறைகளில் செயல்படுத்துகின்றன. நேர்மறையான உணர்வுகளையும், மன எழுச்சிகளையும் கொண்டு, ஆர்வமுடையவர்களாக மாணவர்களை வழிகாட்ட வேண்டும். அறப்பணியாற்றும் ஆசிரியர்களும் அமைதியை மாணவர்களிடம் புகட்டி நிலைநாட்டாவிட்டால் – உலகை எவரே காக்க வல்லார்!?

வழிறைகள் பல; அவற்றுள் சில;

- ◈ தன் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்,
- ◈ அமைதிப் பாதையைப் போற்றுதல்,
- ◈ கற்பனைத் திறனையும், ஆன்மீக சிந்தனையையும் மாணவர்கள் மனதில் எழச் செய்தல்.
- ◈ ஆன்மீக, அறிவுத் தூண்டுதலை, ஆழ்மனத்திலிருந்து எழச் செய்தல்.
- ◈ வகுப்பறையில் நட்புடனும், கூட்டுறவு மனப்பான்மையுடனும் செயல்படுதல்.

## 4.15. அமைதிக் கல்வி சார்ந்த செயல்பாடுகள்

அமைதிக்கல்வியில் கலைத்திட்டம் சார்ந்த செயல்பாடுகளாகப் பின்வரும் மனப்பான்மை, பண்பு மற்றும் திறன்களைக் கூறலாம்.

- ➢ நாட்டுப்பற்று
- ➢ ஆன்மீக விழிப்புணர்வு
- ➢ சகோதர மனப்பான்மையை வளர்த்தல்
- ➢ அன்பு, நேயம் போன்ற உயரிய பண்புகளைப் பிறருடன் பகிர்ந்துக் கொள்ளுதல்.
- ➢ கொல்லாமையை ஏற்றொழுகுதல்.
- ➢ சமய நல்லிணக்கம்.
- ➢ உடலை உறுதியாக்குதல்.
- ➢ பிறருக்கு உதவும் மனப்பான்மையை வளர்த்தல்.
- ➢ சக வாழ்க்கைக்குத் தேவையான நல்லிணக்க அடிப்படைத்திறன்களை வளர்த்தல்.
- ➢ முதல் உதவி, தீ அணைத்தல் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற தொண்டுகளைச் செய்தல்.

### செயல்

அமைதிக் கல்வியைப் பரப்பும் விதத்தில் சிறுசிறு கதைகளை மாணவர்க்கொன்றென புனைந்து எழுதி ஒப்படைப்பாக்குக. அமைதி, சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம், கொல்லாநெறி, அகிம்சை, ஜீவகாருண்யம், தொண்டு, நிம்மதி போன்ற அமைதிக் கல்விக் கூறுகளையும், சிந்தனைகளையும், பொன்மொழிகளையும், பழமொழிகளையும், பாடல்களையும் சேகரித்து ஓர் ஒப்படைச் சிறுநூல் (Book-let) தயாரிக்க.

## 4.16. விழுமக் கல்வி (Value Education)

## விழுமக்கல்விச் செயல்பாடுகள்

- ◈ நாடகம்.
- ◈ தெரு முனை நாடகங்கள்.
- ◈ போட்டிகள்.
- ◈ பயிற்சிப் பள்ளியில் ''அமைதித் திருவிழாக்கள்'' நடத்துதல்.
- ◈ கண்காட்சி அமைத்தல்.

## மனப்பான்மையும் விழுமமும் இணைந்து மேம்படுவதற்கான நடைமுறை உத்திகள்.

- ◈ மேம்பட்ட புரிந்து கொள்ளும் தன்மை.
- ◈ பாதுகாப்பு உணர்வு.
- ◈ அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் திறன்.
- ◈ ஆன்மீக வாழ்வின் சாரத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- ◈ செயல், கடமை மற்றும் விளைவுகள் பற்றிய அறிவு.
- ◈ எல்லா நிலைகளிலும் பொறுப்பேற்கும் தன்மை.
- ◈ மனித சக்தியை முறையாகப் பயன்டுத்தும் திட்டம் தயாரித்தல்.
- ◈ தனி நபர் அர்ப்பணிப்பு.
- ◈ முறையான கல்வி

'எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க சமூகத்தின் பல்வகைப் பிரச்சனைகளும் ஓய்ந்துவிடும்' என்று இந்தியாவின் விடிவெள்ளி ராஜாராம் மோகன்ராய் அவர்கள் கூறினார். ஆயினும் கற்றவர்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்து வரும் இக்காலக்கட்டத்தில் சமூகப்பிரச்சனைகள் ஓய்ந்துதொழிக்கப்படுவதற்குப் பதிலாக அதிகமாகி வருவதும் கண்கூடு. எனவே நாம் கல்வி எனும் பெயரால் எண்ணெழுத்தறிவைத் தான் வழங்கி வருகிறோமே ஒழிய வாழ்வை, மனித குலத்தை, அமைதியடையவும், சுகப்படவும் வைக்கும் நல்வாழ்வு விழுமங்களையும், சகவாழ்வுப் பண்பாட்டையும், சன்மார்க்கத்தையும், மனித நேயத்தையும் புகட்டுவிக்கத் தவறியுள்ளோம் என்பதோர் கசப்பான உண்மை.

இளைஞர்கள் தங்களைச் சமுதாயத்தில் தகஅமைத்துக் கொள்ள இயலாமல் பெருவாரியாக முரண்படுகின்றனர். குடும்பம், நண்பர்கள், கல்வி நிலையங்கள், விளையாட்டுமைதானம், பணி செய்யுமிடம் போன்ற களங்களில் தம் பொருந்தாத எண்ணங்கள், சிந்தனைகள், பேச்சுகள், இடைவினை, நல்லிணக்கம் போன்றவற்றில் எதிர்மறையாகச் செயல்பட்டு இன்னலுறுகின்றனர். இதற்குக் கல்வித் தீர்வுகளை உண்டாக்க வேண்டும்.

## 4.17. விழுமங்கள் பொருள்

''விரும்பத்தக்கவை, முனைந்து அடைய வேண்டிய பண்புகள், மதிப்புமிக்கவை என்று எவற்றை மனிதர்கள் தம் சிந்தனை, உணர்வு, செயல்கள் மூலம் வெளிப்படுத்தி நம்புகிறார்களோ அவை விழுமங்கள் அல்லது மதிப்புக்கள்'' எனப்படும். நடைமுறையில் எவை பயனளிப்பவையோ, மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவையோ, முடிந்த நன்மைகளைத் தருபவையோ அவைகளை விழுமங்கள் எனலாம்.

## 4.18. தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்தியுள்ள விழுமங்கள்

- ○ நமது தேசிய மரபுப் பண்பாடுகள்
- ○ சமத்துவம், ஜனநாயகம், சகோதரத்துவம்

- பெண் சமத்துவம்
- சுற்றுச் சூழல் பாதுகாப்பு
- சமூக நல்லிணக்கம்
- சிறு குடும்ப நெறி
- அறிவியல் மனப்பான்மை
- சமய நல்லிணக்கம் தேசிய ஒருமைப்பாடு

### 4.18.1. விழுமங்களின் / மதிப்புகளின் வகைகள்

- சுய மதிப்புகள்
- சமய மதிப்புகள்
- சமூக மதிப்புகள்
- பொருளாதார மதிப்புகள்
- அரசியல் மதிப்புகள்
- அறிவு சார் மதிப்புகள்
- ஒழுக்க நெறி மதிப்புகள்
- ஓய்வு நேர அல்லது மகிழ்வு மதிப்புகள்
- நடத்தை மதிப்புகள்

### 4.18.2. விழும அமைப்பு முறை (Value System)

விழுமங்கள் நான்கு முக்கிய உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

1. மனிதத் தன்மையைப் பற்றிய நம்பிக்கைகள்.
2. இலட்சியங்கள் பற்றிய நம்பிக்கைகள்.
3. செய்ய வேண்டியவை – செய்யக் கூடாதவை என்பன தொடர்பான விதிகள்.
4. சரியான/தவறான வழிகளைத் தேர்ந்தெடுக்க நம்மைத் தூண்டுபவைகளை இனங்கண்டு தவிர்த்தல்.

### 4.18.3.விழும அமைப்பு முறையை பாதிக்கும் காரணிகள்

- சமூகக் காரணிகள்
- பொருளாதாரக் காரணிகள்
- பண்பாட்டுக் காரணிகள்
- அரசியல் காரணிகள்

### 4.18.4.விழும அமைப்பு முறையை மாற்றங்களை ஏற்றபடுத்தும் காரணிகள்

- தொழில் மயமாதல்
- நகர மயமாதல்
- சமயச் செல்வாக்கு மங்குதல்
- அறிவியலின் எதிர்மறைத் தாக்கம்
- மேலைநாட்டுப் பிறழ்நெறிகளின் தாக்கம்
- தொழில்நுட்பப் புரட்சி
- நவீனமயமாதல்

## 4.19. விழுமத்தை மையமாகக் கொண்ட கல்வி (Value Centered Education)

குழந்தைகளிடம் சரியான மனப்பான்மைகள், உணர்வுகள், நடத்தைகள் ஆகியவற்றை உருவாக்கிடும் அனைத்துக் கல்விச் செயல்களும், விழுமக் கல்வி எனப்படும். மேலும் குழந்தையை மேம்பட்ட மனிதனாக்கி, ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதும் வழுமத்தை மையமாகக் கொண்ட கல்வி எனப்படும்.

‘‘அறநெறிகளை அறிவது, ஒழுக்க உணர்வுகளைப் போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் குழந்தைகளிடம் கற்பிக்க முயல்வது விழுமக் கல்வி’’ ஆகும். விழுமங்கள் கற்பிக்கப்படுவதில்லை; விழுமங்கள் அபிமானித்து ஏற்கப்படுகின்றன. எனவே விழுமங்களைப் பட்டியலிட்டுக் கூறுவதனாலோ, விழுமங்கள் பற்றிய விரிவான தகவல்களை அறிந்தவர்களாக இருத்தலினாலோ பயனில்லை. மாறாக விழுமங்களைத் தாமே முனைந்து, முன் வந்து ஏற்றொழுகுபவராகவும், பிறர் செய்யும் கட்டாயத்துக்காகவன்றி, கடைபிடிப்பவராகவும் மாணவர்களை வழிநெறிப்படுத்த வேண்டும்.

‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்’ என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க தன்னார்வத் தெரிவாக அது இலங்க வேண்டும்.

## 4.20. விழுமக் கல்வியின் குறிக்கோள்கள்

ஆசியா – பசிபிக் நாடுகளில் மதிப்புணர்வுக் கல்விப் பிரச்சனைகளை ஆராய்ந்து, பன்னாட்டுப் பயிலரங்கில் மதிப்புணர்வுக் கல்விக்கு **6** முக்கிய குறிக்கோள்களை முன்மொழிந்துள்ளனர். அவைகளாவன

- முழுமையான வளர்ச்சி – உடல் வளர்ச்சி – மன வளர்ச்சி – அறிவு வளர்ச்சி
- சமுதாய அக்கறை – தன், மற்றும் தன்னைச் சுற்றியுள்ளோர் மீது, சமுதாயத்தினர் மீது அக்கறை.
- சமூக நலன் – ஜனநாயக மதிப்புகள், பண்பாட்டு மதிப்புகள், அரசியல் விழிப்புணர்வு.
- தேச நலன் – தேசப் பற்று, தேசிய ஒருமைப்பாடு.
- உலக மனப்பான்மை – பிற நாட்டு மக்களைப் புரிந்து கொண்டு, அவர்கள் நலனில் அக்கறை கொள்ளுதல்.
- விழிப்புணர்வு – விழிப்புணர்வு மற்றும் உயர்நடத்தை

## 4.21. மதிப்புகள் பரவுதல்:

குழந்தை, பிறக்கும் போது மதிப்புக்களை அறிந்திருப்பதில்லை. தன்னைச் சுற்றுப்புறச் சூழலோடு, அதிக அளவில் பொருத்திக் கொள்ளும் போது பல்வேறு கருத்துக்களை, மனப்பான்மைகளைப் பெற்றுத் தன்னைத் தனித்தன்மை உள்ளதாக, குழந்தை அடையாளம் காட்டிக் கொள்கிறது. பிறரை உற்று நோக்கித் தன்னை உணர்ந்து தனக்கென்று விழுமங்களை உருவாக்கிக் கொள்கிறது. எந்த ஒரு விழுமத்தையும் தனதாக்கிக் கொள்வதில் குழந்தை ஐந்து படி நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது.

1. குறிப்பிட்ட விழுமத்தை அறிதல்.
2. அவ் விழுமத்தை உயர்வாக எண்ணி ஈடுபாடு கொள்ளுதல்.
3. அவ்விழுமத்தை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தி உணர்தல்.
4. அவ்விழுமத்தைச் செயல் மூலம் முயன்று வெளிப்படுத்துதல்.
5. நடத்தையில் விழுமங்களைத் தன்னிச்சையாக வெளிப்படுத்துதல்.

விழுமங்களை மாணவர்களிடம் விதைக்கப் பின்வரும் பள்ளி நடைமுறை உத்திகளைப் பின்பற்ற வேண்டும்.

- காலை வழிபாட்டுக் கூட்டம்.
- பாடப் புத்தகங்களை மாற்றி அமைத்தல்.
- வல்லுநர்களைக் கொண்டு விரிவுரையாற்றல்.
- மதிப்புக் கல்வியைக் கட்டாயமாக்கல்.
- கலைத் திட்டத்தைச் சீரமைத்தல்.
- கலை மற்றும் ஓவியப் போட்டி நடத்துதல்.
- பிறந்த நாள் கொண்டாட்டம்.
- பன்னாட்டுத் தினங்களைக் கொண்டாடுதல்
- மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.
- புத்தகக் கண்காட்சி.
- கூட்டுறவு சங்கம் நடத்துதல்
- கூட்டுறவு வங்கி மற்றும் அஞ்சலகம் நடத்துதல்
- மதிப்புக்கல்வி கொண்ட செய்தி மடல்கள் வெளியிடல்.
- நலம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை நடவடிக்கைகள்.
- சமுதாய ஆக்கப் பணிகள் செய்தல்.
- குடிமைப் பண்புகளை வளர்த்தல்.
- முதலுதவி செயல்கள்.
- நாட்டு நலப்பணி
- முன்னுதாரணமாகத் திகழ்தல்
- தேசிய விழாக்கள் கொண்டாடுதல்.
- சமுதாய வழிப்பாட்டுக் கூட்டம்.
- கூட்டு சமயப் பிரார்த்தனை.

குழந்தைகளிடம் சமூக, ஒழுக்க மதிப்புக்கள் வளர்ச்சியடைவதில் குடும்பமும், சுற்றுப்புறக் காரணிகளும் அதிகப் பங்கு வகிக்கின்றன. சமூக விழுமங்களான ஜனநாயகம், நாட்டுப்பற்று, சகிப்புத் தன்மை போன்றவற்றிலும், சிறந்த குடிமகனாக வாழ்வதற்கும் பள்ளி உதவ வேண்டும். விழுமக் கல்விக்கெனத் தனிப்பிரிவேளை, வகுப்புக்களுக்காக, காத்திராது சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம், இணைத்துப் பயிற்ற வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் விழுமக்கல்வியைப் புகட்டுவது ஆசிரியர் கடன்.


## 4.22. கல்வியின் வாயிலான பாலினச் சமத்துவம்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி வையம் தழைக்குமாம் – பாரதியார்.

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும், மக்கள் பெறும் தரமான கல்வியின் அடிப்படையில் அந்த நாட்டினுடைய வளர்ச்சி அமைந்துள்ளது. எல்லா நாடுகளிலும் கல்வி என்பது அனவைருடைய அடிப்படை உரிமையாகும். 1948 இல் ஐக்கியநாடு பொது சபை பிரிவு 26 –இன் படி, ஒவ்வொருவரும் கல்வி பெற உரிமை உண்டு தொடக்க மற்றும் அடிப்படை நிலையில் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் வழங்கப்பட வேண்டும்.

### பாலினம்–பொருள்

ஆணாகவோ, பெண்ணாகவோ பிறக்கும் குழந்தை சிறுவன், சிறுமியாகக் கருப்பட்டு பின் ஆடவராகவும், மகளிராகவும் வளர்ச்சியடைகின்றார்கள். அவர்களுக்குரிய நடத்தை, மனப்பான்மை, பங்கு, செயல்கள் ஆகியவை கற்றுத்தரப்படுவதோடு அவற்றை மக்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்துவது என்றும் விளக்கப்படுகின்றது. இவ்வாறு கற்றுணரப்படும் நடத்தை அவர்களுடைய பாலினத்தை அடையாளம் காணவும், அவர்களுடைய பாலின பங்களிப்பை நிர்ணயிக்கவும் உதவுகின்றது.




**பாலினப் பாகுபாடு**

எழுத்தறிவு விழுக்காடு (%)

| மாநிலம் | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| இந்தியா | 65.38 | 75.96 | 54.28 |
| தமிழ்நாடு | 73.47 | 82.33 | 64.55 |
| கேரளா | 90.92 | 94.20 | 87.80 |
| கர்நாடகம் | 67.04 | 76.29 | 57.45 |
| ஆந்திரம் | 61.11 | 70.85 | 51.17 |

**பாலின வேறுபாடுகள் இருப்பதற்காக காரணங்கள்**

- சமூகப் பண்பாட்டுக் காரணம்
- குறைவான கல்வி நிலை
- கல்வியின் பால் பெண்களின் மனப்பான்மை
- பள்ளி அமைவிடம்/வசதி
- பெண் ஆசிரியர்களின் குறைவான எண்ணிக்கை.
- கலைத்திட்டம்
- கற்பித்தல் முறைகள் / பொருள்கள்.

## 4.23. சமூக நிலைப் பெயர்வு

### பொருள்

“சமுதாய அமைப்பில் ஒரு மனிதன் ஒரு நிலையிலிருந்து மற்றொரு மேலான நிலைக்கு மாறுவது சமூக நிலைப் பெயர்வு” எனப்படும். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய முயற்சி மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, தகுந்த நிலையை உயர்த்திக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ முடியும். இந்த நிலை மாற்றமே சமூக நிலைப் பெயர்வு ஆகும்.

வரையறை: ‘‘தனிமனிதன், குழுக்கள் (அ) குடும்பங்கள் போன்றவை ஒரு சமூக நிலையிலிருந்து மற்றொரு சமூக நிலைக்கு மாறுவது சமூக நிலைப்பெயர்வு எனப்படும்’’.

‘‘சமூகக் குழு அல்லது படிநிலையில் உள்ள ஒருவர் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவது சமூக நிலைப் பெயர்வு’’ என்பதாகும். தொழில், தகுநிலை, வருமானம், சொத்து, அதிகாரநிலை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு சமூக நிலைப் பெயர்வு அறியப்படுகிறது. நிலைப்பெயர்வை செங்குத்து நிலைப்பெயர்வு, கிடைமட்ட நிலைப்பெயர்வு என்றும் பிரித்து அறிதல் இயலும்.

## 4.23.1. சமூக நிலைப்பெயர்வின் வகைகள்

சமூக நிலைப் பெயர்வு

| செங்குத்து நிலைப் பெயர்வு | இடைமட்டப் பெயர்வு |
|---|---|

## செங்குத்து நிலைபெயர்வு

எல்லா சமூகக் குழுக்களும் சமமான சமூகத் தகுநிலையைப் பெற்று இருப்பதில்லை. கீழ் நிலையில் இருக்கும் ஒரு குழு அல்லது மனிதர் உயர் தகுநிலையை அடைவதையோ அல்லது உயர் தகுநிலையில் இருக்கும் ஒரு குழு அல்லது மனிதர் கீழ் நிலையை அடைவதையோ செங்குத்து நிலைப் பெயர்வு என்பர்.

செங்குத்து நிலைப் பெயர்வை மேல்நோக்கு நிலைப்பெயர்வு (Seceding Mobility), கீழ் நோக்கு நிலைப்பெயர்வு (Descending Mobility) என இரண்டாம் பிரிக்கலாம்.

மேல்நோக்கு நிலைப் பெயர்வு என்பது கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு மாறுவதைக்குறிக்கும். கூலி விவசாயியாக இருந்த ஒருவர் சொந்த நில விவசாயியாக உயர்வு பெறுவதை மேல் நோக்கிய நிலைப் பெயர்வுக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

கீழ் நோக்கு நிலைப் பெயர்வு என்பது உயர் தகு நிலையில் இருந்து கீழ்நிலைக்கு மாறுவதைக் குறிக்கும். மொத்த வியாபாரியாக இருந்த ஒருவர் சில்லரை வியாபாரியாக மாறுவதைக் கீழ்நோக்கிய நிலைப் பெயர்வுக்கு உதாரணமாகக் கூறலாம்.

## கிடைமட்ட நிலைப் பெயர்வு

ஒரு சமூகத்தில் வாழும் ஒரு பிரிவினர் ஒரே, உயர் அல்லது கீழ் தகுநிலையிலேயே எவ்வித மாற்றமுமின்றி, சீரான போக்கில் நெடுங்காலம் இருப்பது கிடைமட்டநிலைப் பெயர்வு எனப்படும்.

கிடைமட்ட நிலைப் பெயர்வில் தனி நபரின் நிலை மாறுமேயின்றி அவருடைய வருமானம் / பதவி / அதிகாரம் போன்றவை மாறாது.

செங்குத்து நிலைப் பெயர்வை ஒரு நாடு விரும்புகிறது இருக்கும் நிலையிலிருந்து தகுதி, வளம், ஆற்றல் முதலியவற்றால் செங்குத்து நிலைப் பெயர்வை உண்டாக்கவே கல்வி தனிமனிதராலும் அரசினராலும் முயலப்படுகிறது. ஆசிரியர்கள் இதனை உணர்ந்து அனைவரது தரமான கல்விக்கும் ஆவன செய்து செங்குத்து நிலைப் பெயர்வுக்கு ஆவன செய்தல் அவசியம்.

### 4.23.2. கல்வியும் சமூக நிலைப் பெயர்வும்

கல்வி சமூக முன்னேற்றத்திற்கான ஒரு கருவி எனலாம் – கல்வி சமூக அமைப்பிலுள்ள கடினத் தன்மையை, பிறப்பின் காரணமாக எழும் பாகுபாடுகளை நீக்குகிறது. கல்வி உயர் கொள்கைகளை, தகுதிநிலையை, நல்ல பழக்க வழக்கங்களை, தன் நம்பிக்கையை, மதிப்புக்களை அடையச் செய்கிறது.

மாணவர்களுடைய நிலைப்பெயர்வு அவர்கள் பெறும் கல்வியைப் பொறுத்து அமைகிறது. மாணவர்கள் பெறும் மொழி அறிவு, பாடப்பொருளறிவு மேற்கொள்ளும் கல்வி ஆய்வுகள் போன்றவற்றைப் பொறுத்து அவர்களது நிலைப் பெயர்வு அமைகிறது.

ஒரு நாட்டினுடைய பின் தங்கிய நிலையை நீக்கி, வளர்ச்சியை நோக்கி அழைத்துச் செல்ல கல்வி உதவுகின்றது. வளர்ந்த நாடுகளில் கல்வி உயர்தொழில் நுட்பம் காரணமாக நாட்டின் வளர்ச்சி மேலோங்கி வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் கல்வியின் வாயிலாக சமூக நிலைப் பெயர்வு ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

### 4.23.3. சமூக நிலைப் பெயர்வின் – நன்மைகள்

- தனி மனிதனின் முழுமையான வளர்ச்சி
- சமூக வளர்ச்சி மற்றும் சமூகத் திறன் மேம்பாடு.
- தேசிய பற்று உறுதிப்பாட்டை வளர்த்தல்.
- சமூக முன்னேற்றத்தில் மாறாத்தன்மைக்குத் தீர்வுகாணல்
- மகிழ்வுறு நல் வாழ்வை மேம்படுத்துதல்.

கல்வி மனித விடுதலைக்கு வித்திடுகிறது. தனிமனிதனை சமூக உணர்வு உள்ளவனாக்குகிறது. சமூக மாற்றமும், வளர்ச்சியும் கல்வியைப் பொறுத்தே அமையும். அமைதிக் கல்வியின் வழியாக அகிம்சை, சகிப்புத் தன்மை பிறர் உணர்வுகளை மதித்தல், நீதி, சமத்துவம், வாய்மை, நிம்மதி, மகிழ்ச்சி ஆகியவற்றைக் குழந்தைகளிடையே வளர்க்க வேண்டும். குழந்தைகளின் வாழ்வோடு இயைந்த அமைதிக்கான வாழ்க்கைக் கல்வியைப் பள்ளிகள் வழங்க வேண்டும்.

குழந்தைகள் தங்களைச் சுற்றுப்புறச் சூழலோடு பொறுத்திக் கொண்டு பல்வேறு கருத்துகளை, மனப்பான்மைகளைப் பெற்றுத் தன்னைத் தனித்தன்மை உள்ளவனாக அடையாளம் காட்டி, தனக்கென்று விழுமங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். தம் சிந்தனை, உணர்வு, செயல்கள் மூலம் அவற்றை வெளிப்படுத்த குழந்தைகளுக்குப் பள்ளி வாய்ப்புகளை வழங்க வேண்டும். கல்வி அனைத்துக் குழந்தைகளும் தங்களுடைய பாலினச் சமத்துவத்தை உணர்ந்து உணர்ந்து பாகுபாடின்றிச் செயல்பட வழி செய்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய முயற்சி மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப தன்னுடைய தகுதிநிலையை உயர்த்திக் கொள்ள முடியும். இது சமூக நிலைப் பெயர்வுக்கான வாய்ப்புச் சமத்துவம் (Equality of Opportunity) எனப்படும்.

# அலகு 5
# கல்வி மேலாண்மையில் சமுதாயத்தின் ஈடுபாடு
# (Community Involvement in Educational Management)

## முன்னுரை

கல்வி ஒரு சமுதாயப் பணி பள்ளி சமுதாயத்தின் ஒரு அங்கமாகும். பள்ளியில் பயிலும் மாணாக்கர்களை அவர்கள் வாழும் சமுதாயத்தில் சிறப்பாகப் பங்கேற்கத் தேவையான பயிற்சிகள் அளிக்கும் கடமையும் பொறுப்பும் பள்ளியையே சாரும். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அங்குள்ள பள்ளிகளின் வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். “ஆற்றல்களில் மிகச்சிறந்த ஆற்றல் மனித ஆற்றல்” என்றார் மார்ஷல் ஸ்டாலின். அத்தகைய மனிதனது மனத்தினைப் பக்குவப்படுத்தி, அவனைப் பண்புள்ளவனாக, நன்னெறியில் செல்பவனாக உருவாக்குவது கல்விக்கூடங்களின் தலையாய பணியாகும்.

கல்விச்சாலைகளின் செயல்பாடுகளை செம்மைப்படுத்தி முறையாகப் பயன்படுத்திக் கொள்வது சமுதயாத்தின் பொறுப்பாகும். கல்வி சமுதாய வாழ்க்கையோடு தொடர்புடையது. மனித வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக நம் நாட்டில் பல கல்வித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைவருக்கும் கல்வி இயக்கம் என்பது ஒரு கூட்டு முயற்சியாக சமூகநீதியை நிலைநாட்ட, பள்ளி நிர்வாகத்தில் கிராம மக்கள் பங்கேற்புடன் பள்ளித்தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றி வருகின்றது. இன்றைய நிலையில் பள்ளி நிர்வாகத்தில் சமுதாயத்தின் ஈடுபாடும், பங்கேற்பும் பள்ளிச் செயல்பாடுகளின் மீது சமுதாயக் கண்காணிப்பும் மிகவும் அவசியமானதாகும்.

## 5.1. சமுதாய விழிப்புணர்வும் ஈடுபாடும்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 45–வது பிரிவின் படி ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக்கல்வி அளிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 1995–இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கட்டாயக் கல்விச் சட்டம் இயற்றியது. இந்நோக்கில் மைய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. இருப்பினும் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்ற நிலையினை இன்னும் முழுமையாக அடைய முடியவில்லை. அனைவருக்கும் கட்டாய இலவசக்கல்வி இலக்கை தேசிய அளவில் நிறைவேற்ற சமுதாயத்தின் விழிப்புணர்வும், பங்கேற்பும், மதிப்பீடும் உரிமையாளத்துவமும் மிகவும் இன்றியாமையாததாகும். இந்நோக்கிலேயே அனைவர்க்கும் கல்வி என்ற தேசிய முயற்சி ஒரு மக்கள் இயக்கமாக, மக்கள் முனைந்து பங்கேற்று நடத்தும் தீவிரச் செயலியக்கமாக வகுத்தளிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்ற இலக்கினை அடைவதற்கு மக்களிடையே கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அனைவருக்கும் கல்வி வழங்குவதில் நிலவும் இடர்பாடுகளைப் பற்றியும் அவற்றிற்குரிய தீர்வுகளை வழங்குவதில் ஓர் கூட்டுணர்ச்சியையும் ஒத்துழைப்புணர்வையும் மக்களிடையே வளர்க்க வேண்டும்.

அனைவருக்கும் கல்வி வழங்குவதில் கண்டறியப்பட்டுள்ள இடர்ப்பாடுகள் சில

- அனைத்து மாணவர் சேர்க்கை
- தேக்கம்
- கழிவு
- அனைத்துப் பெண் குழந்தைகளின் சேர்க்கை

- இடைநீக்கம்.
- பெற்றோர்களின் வறுமை.
- குறைபாடுடைய கலைத்திட்டம்
- தேவையான கற்றல் கற்பித்தல் பொருள்கள் இல்லாமை.
- ஆசிரியர்கள் அடிக்கடி இடமாற்றம்.
- கவர்ச்சியற்ற கற்பித்தல் முறைகள்.
- சரியான மேற்பார்வையும், வழிகாட்டலும் இன்மை.
- தகுந்த சேர்க்கைக் கொள்கை இன்மை.
- கட்டாய வருகையை வலியுறுத்துவதில் தோல்வி.
- ஆண்–பெண் இணைக்கல்விக்கு மறுக்கும் மனப்பாங்கு.
- வகுப்பறைகள் பற்றாக்குறைவு.
- போதாத சத்துணவு.
- முழுமையில்லாத ஆரம்பப்பள்ளிகள் அதிக அளவில் இருப்பது.
- பகுதி நேரப்பள்ளி வசதியின்மை
- உள்ளூர் வட்டாரங்களில் கட்சிகளின் குறுக்கீடு
- போதாத பண முதலீடு
- பெருகிவரும் மக்கள் தொகை.
- குழந்தைகளின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வின்மை
- குழந்தைப் பணியாளர்களைக் கண்டறிந்து மீட்டு, கல்வி கற்கச் செய்வதில் தொய்வு
- குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும், கிராம மக்களுக்கும் கல்வி விழிப்புணர்வின்மை
- குழந்தைகளின் கல்வி வளர்ச்சிகளைத் தொடர்ந்து ஆண்டு முழுவதும் கண்காணித்தல்.
- குழந்தைகள் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கிடையே இடைவெளி

**செயல்**

மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ள ஒரு பள்ளியையும் , மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள ஒரு பள்ளியையும் தேர்ந்தெடுத்து, அவற்றின் கிராமக் கல்விக் குழுக்களின் பணிகளை ஒப்பிட்டுக் கட்டுரை வரைக.

## 5.1.1. கல்வி விழிப்புணர்வுப் பணிகள்

பள்ளிகள் சமுதாயத்தின் கல்வித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே நிறுவப்பட்டுள்ளன; பள்ளி சமுதாயத்தின் சொத்தாகும். பள்ளிகளைச் சரிவர நிர்வகிப்பதில் சமுதாயத்திற்குப் பெரும்பங்குண்டு. எனவே சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் கல்வி பற்றிய விழிப்புணர்வு இருந்தால் தான் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி என்ற குறிக்கோளை, நாம் அடைய முடியும். விழிப்புணர்வு ஒரு சமுதாயத்தில் குறைந்திருக்குமாயின் அதனை ஆர்வமூட்டி, சிறுகச்சிறுக நல்வழிப்படுத்தி, பயிற்சி தந்து பள்ளிக்கு உறுதுணையாக இருக்குமாறு ஆக்கிக் கொள்வது ஒரு தலைமை ஆசிரியரின் பொறுப்பாகும்.

அரசு ஆணை எண்.53 நாள் 26.04.2002 இன் படி பள்ளி அமைந்துள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராமக் கல்விக்குழு அமைக்கப்பட்டுள்ளது. கிராமக் கல்விக் குழுவில் கிராம அளவில் கல்வி விழிப்புணர்வு, கல்வித்தர மேம்பாடு, மதிப்பீடு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைவர்க்கும் கல்வி நோக்கில் பின்வரும் பங்கு பணிகளை கிராம சமுதாயம் பங்கேற்றுச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- ஒவ்வொரு கல்வி ஆண்டின் தொடக்கத்திலும் ஜூன் மாதம், முதல் வாரத்தில் பள்ளிச் சேர்க்கை மற்றும் தரமான கல்வி பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குவதற்குக் கூட்டங்கள் / கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.

- ஆசிரியர்களும் பள்ளிக் குழந்தைகளும் கிராமக் கல்விக் குழுவும் இணைந்து கல்வி விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்துதல்.
- விளம்பரங்கன் மூலமாகவும், மகளிர் சுய உதவிக்குழு மற்றும் கிராமக் கல்விக் குழுவுடன் இணைந்தும் வீடு வீடாகச் சென்று கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் பள்ளிச் சேர்க்கை விழாவினைக் கிராமத்தில் நடத்தி, கல்வி விழிப்புணர்வைத் தூண்டுதல்.
- துண்டுப் பிரசுரங்கள், தெருமுனைப் பிரசாரங்கள், வீதி நாடகங்கள் மூலமாக மக்களிடையே கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் காலம் தாழ்த்தாது பள்ளியில் சேர்ப்பது.
- இடையில் நின்றுவிட்டவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பது.
- பள்ளியின் குடிநீர் வசதி, சாலை வசதிகள், தெருவிளக்கு, துப்புரவுப் பணிகள், சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு ஆவன ஆகியவற்றைத் திட்டமிட்டுத் தீர்மானங்களியற்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

## 5.1.2. கல்வி மேலாண்மையில் சமுதாயத்தின் ஈடுபாடு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்!

என மகாகவி பாரதியார் ஒற்றுமையின் பலத்தைப் பற்றியும்; ஒற்றுமையின்மையின் ஆபத்தைப்பற்றியும் எச்சரித்துள்ளார். பள்ளி ஆசிரியர்கள் அவ்வூரின் ஒற்றுமைக்காக நன்மைக்காகத் தொண்டாற்றிச் சமூக மதிப்பைப் பெறுவதே அவர்களீட்டும் முதல் ஊதியம்.

தங்களூர்ப் பள்ளியின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக, கல்வி மேலாண்மையில் உள்ளூர்ச் சமூதாயத்தின் ஈடுபாடு இன்றியமையாததாகும். பள்ளிகள் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகச் செயல்படுகின்றன. பள்ளிகளின் செயல்பாடுகள் மக்கள் வாழும் சமுதாயத்தின் நிலைமையை மேம்படுத்த வேண்டும். எனில் மக்களுக்குக் கல்வியின்பால் அக்கறையும் ஈடுபாடும் உண்டாக்குதல் உடனடி அவசியமாகும். மக்கள் தங்கள் ஊரில் உள்ள பள்ளியின் வளர்ச்சிக்காகத் தாமாகவே முன்வந்து ஆவன செய்ய வேண்டும். முன்வரவில்லையெனில் பள்ளி ஆசிரியர்கள் சமுதாயத்துடன் பழகித் திரட்ட வேண்டும். பள்ளி அமைந்துள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கல்விக்குழு அமைக்கப்பட்டுள்ளது. கிராமக் கல்விக் குழுவின் வெற்றியே அப்பள்ளியின் வெற்றியாகவும் அமைகிறது.

### கிராமக் கல்விக் குழுவின் பணிகள்

- கிராமத்திலுள்ள அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்.
- அவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தல்.
- பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் இடைநிற்றல் மற்றும் தேக்கம் ஏதுமின்றித் தொடர்ந்து பள்ளியில் படித்து எட்டு வகுப்பு வரையாகிலும் முடிக்கச் செய்தல்.
- இடையில் நின்ற குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களைப் பள்ளிக்கு வருமாறு செய்தல்.
- பள்ளியின் உள்ளீட்டுத், தளவாட வசதிகளை மேம்படுத்துதல்.

**செயல்**

வெற்றிகரமான பள்ளிகள் சமுதாயத்தை இணைத்துக் கொண்டதாக இருக்கும். துவண்டுள்ள பள்ளிகள் சமுதாயத்தின் பங்கேற்பைப் பெற்றிராது. இக்கூற்றை நிறுவிட படிவமொன்று தயார் செய்து அதன் வழி பயிற்றுதல் பயிற்சிக்குச் செல்லும் பள்ளிகளிலிருந்து விவரங்கள் சேகரித்து நிறுவுக.

## 5.2. சமுதாயப் பங்கேற்புடன் கல்வி முன்னேற்றத்திற்காகத் திட்டமிடல், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் உரிமையாளத்துவம்

சமுதாயம் என்பது ஒரு பெருங்குழு அமைப்பு ஆகும். அது ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாலேயோ இன, மொழி, சமூகப் பொருளாதார வேறுபாடுகள் உடையவர்களாலேயோ அமைந்திருக்கலாம். சமூகத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் தாம் வாழும் இடத்தில் பொதுவாகத் தமக்கென ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சமுதாயத்திற்குச் சுய ஆட்சி செய்யும் உரிமையும் கல்வி, சுகாதார , நிர்வாகப், பொதுநல மற்றும் அடிப்படை வசதிகள் சார்ந்த பிரச்சனைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளும் ஆற்றலும் உள்ளது. விழிப்புடைய சமுதாயங்கள் தங்களைச் சீரமைத்துக் கொண்டு தங்கள் தேவைகளைத் தாங்களே திட்டமிட்டு நிறைவேற்றிக் கொள்கின்றன. கல்வி ஒரு சமுதாயத்தின் அடிப்படைத் தேவை. அதனை அரசாங்கத்தின் நிதி உதவியோடும் சமுதாய வளங்களைக் கொண்டும், தங்கள் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப நிறைவேற்றிக் கொள்ள முனைப்புடன் செயல்பட வேண்டும். அவ்வாறு அது முனைப்புடன் செயல்படவில்லையெனில் அதனை உடனிருந்து வழிகாட்டித் தகஅமைத்துக் கொள்ள வேண்டுவதும் ஓர் ஆசிரியரின் கடமையாகிறது. மாறாகச் சமுதாயத்தைப் பழித்துக் குறைகூறி உள்ளூர் அரசியலில் சிக்கிக் கொள்ளாது ஆசிரியர்கள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும்.

**செயல்**

உங்கள் கிராமம்/நகரத்தில் உள்ள பள்ளி கிராமக் கல்விக்குழு/பெற்றோர் ஆசிரியர் கழகத்தை அணுகி, அதன் செயற்பாடுகளை அறிந்து கொள்.

### 5.2.1. கல்வி முன்னேற்றத்தில் சமுதாயப் பங்கேற்பின் அவசியம்

கற்றல் வகுப்பறைகளில் மட்டும் நிகழ்வதில்லை. குடும்பத்திலும், சமூகத்திலும், விளையாட்டிடத்திலும், பொதுமக்கள் கூடும் விழாக்கள் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கற்றல் நிகழ்கிறது. சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் குழந்தைகளுக்குக் கல்வி தருவதில் ஓரளவு பொறுப்பை வகிக்கின்றனர். குடும்பத்திற்கு வெளியேயும் உலகத்தவரோடும் தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கும் வரை குழந்தைகளின் கல்விக்குப் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பொறுப்பு என்று கூறமுடியாது.

சமூகத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் பல்வேறு சாதி, மத அமைப்புகளைச் சார்ந்தவர்களும் குடும்ப உறுப்பினர்களும் குழந்தைகளை நல்ல குடிமக்களாக வளர்ப்பது எப்படி ? மற்றும் கற்றலில் தேர்ச்சி பெறச் செய்வது எப்படி ? எனச் சொல்லித் தந்து அதன்படி செயல்படத் தேவையான ஆதரவையும் அளிக்க வேண்டும். சமுதாயம் மேம்படத் தேவையான திறன்களைக் குழந்தைகளுக்கு வழங்கி அத்திறன்களைச் செயல்படுத்தும் ஆற்றலை வெளிப்படுத்தும் தளங்களாகவே பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே பள்ளிகள் சமுதாயத்திலிருந்து தனித்து செயல்படும் நிறுவனங்களாக இருக்க முடியாது. சமூகத்தில் வாழும் ஒவ்வொரு உறுப்பினரும் வித்தியாசமான பங்களிப்பைக் கல்வி வளர்ச்சிக்காகத் தருவதால், அவர்களது பங்களிப்பை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் அனைத்துப் பிரிவினரும் ஒருங்கிணைந்து செயல்பட பள்ளி ஒரு பாலமாக அமைய வேண்டும். பல்வேறு தரப்பட்ட மக்கள் ஒருங்கிணைந்து பாடுபடும்போது தரமான

கல்வி நிகழ்கிறது. சமூகம் மற்றும் பெற்றோர் தொடர்ந்து பள்ளியுடன் இணைந்து தம் பங்கு பணியைச் செய்திட, பள்ளி நிர்வாகிகளும் ஆசிரியர்களும் கிராமக் கல்விக் குழுவினரும் சேர்ந்து அயராது பாடுபட வேண்டும்.

கல்விச் சேவையில் சமுதாயப் பங்கேற்பு என்பது புதிய கருத்து அல்ல. இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதிக்காலம் வரை குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட வேண்டிய பொறுப்பு பெரும்பாலும் சமூகத்தினரிடமே இருந்தது. இந்தியாவில் வெற்றி பெறும் காலம்வரை கல்விச் செலவை ஏற்று, மக்களுக்குக் கல்வித் தொண்டாற்றியவர்கள் சமுதாயத்தினரே! கல்விப்புரவலர்களே!! பின்னரே கல்வியில் அரசின் பங்கேற்பு பரவலாக்கப்பட்டு நெறிமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

## 5.2.2. சமூகப் பங்கேற்பும் கல்வி வளர்ச்சியும்

சமூகப் பங்கேற்பு கல்வி வளர்ச்சிக்குப் பின்வரும் வழிகளில் துணை புரிகின்றது.

- பள்ளிச் சேர்க்கை மற்றும் கல்வி விழிப்புணர்வுக் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றல்.
- பள்ளி வயதுக் குழந்தைகளின் பெற்றோரிடம் கல்வியின் பயனை எடுத்துரைத்தல்.
- பள்ளியில் பணிபுரிவோரைக் கௌரவித்தல்.
- பள்ளியின் வளர்ச்சிப் பணிகளுக்காக வளங்களைத் திரட்டுதல்.
- மாணவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வருவதை உறுதி செய்தல்.
- தொடர்ந்து கல்வி கற்றுத் தேர்ச்சி அடைவதை உறுதி செய்தல்.
- பள்ளிக் கட்டிடப் பராமரிப்புப் பணிகளிலும், பள்ளி வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலும் அக்கறையோடு ஈடுபடுதல்.
- ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க, கிராமத்திலுள்ள படித்தவர்களைத் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்தல்.
- மாணவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு வகுப்பறைச் செயல்பாடுகளின் வளர்நிலையை உறுதி செய்தல்.
- கிராமக் கல்விக் குழுக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுதல்.
- பள்ளிகளில் நடத்தப்பெறும் அனைத்துக் கூட்டங்களுக்கும் தவறாமல் சென்று குழந்தைகளின் கற்றல் அடைவுகளையும் அவர்களது வகுப்பறை நடத்தை பற்றியும் நேரடியாக விசாரித்துத் தெரிந்து கொள்ளல்.
- உள்ளூரிலுள்ள பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் தமக்குத் தெரிந்த கைவினைத் தொழில் நுட்ப அறிவையும் மாணவர்களிடையே பகிர்ந்து கொள்ளுதல்.
- குழந்தைகள் கற்பதில் உள்ள சிரமங்களைக் களைய உதவுதல்.
- பெண் கல்வியை ஊக்குவித்தல்.
- ஆண் பெண் பாகுபாடுகளைக் களைதல்.
- கல்வித் தர மேம்பாட்டுப் பிரச்சனைகளுக்கான காரணங்களை இனம் கண்டு அவற்றைக் களைய கிராமக் கல்விக் குழுவிற்கு உதவி செய்தல்.

## 5.2.3. திட்டமிடலும் மதிப்பீடும்

எந்த ஒரு செயலையும் சரியாகச் செய்து முடிக்கத் “திட்டமிடல்” இன்றியமையாததாகும். கல்வி வளர்ச்சி முழுமைக்கும் திட்டமிடுதல் அடிப்படையாகும். கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் தயாரிப்பதில் கல்விக் கொள்கைகள், நாட்டின் தேவைகள், நிதிவசதிகள், போன்ற யாவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். சிறந்த கல்வித் திட்டங்கள் உண்மையான, துல்லியமான பள்ளி விவரங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும்.

உடனடித் தேவைகள், எதிர்காலத் தேவைகள் ஆகிய இரண்டும் கவனிக்கப்படுதல் வேண்டும். நம் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களில், பல கல்வி வளர்ச்சித் திட்டங்கள் முக்கிய இடத்தைப் பெற்று வந்துள்ளன. இவை மைய அரசு, மாநில அரசு, மாவட்டங்கள் ஆகிய நிலைகளில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், அவையாவும் எதிர்ப்பார்க்கப்பட்ட விளைவுகளைத் முழுமையாகத் தர இயலவில்லை. எனவே இன்று பள்ளிகளின் நிலையிலிருந்து வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் என்பதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. இதனைப் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் அல்லது நிறுவனத்திட்டமிடல் என்று அழைக்கின்றனர். இச்செயல்த்திட்டத்தை தலைமையாசிரியர், ஆசிரியர், பெற்றோர், மாணவர், சமுதாயம் யாவரும் ஒன்று சேர்ந்து உருவாக்க வேண்டும். இவ்வகைத்திட்டம் நுண்ணிலைத் திட்டம் எனவும் (Micro Plan) அழைக்கப்படுகின்றது.

### 5.2.3.1. நிறுவனத்திட்டமிடல் அல்லது பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள்

- நூற்றுக்கு நூறு சேர்க்கை, தக்கவைத்தல், நிறைவேற்றுதல் செய்தல்.
- பள்ளியின் அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்.
- தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து இணைந்து செயல்படுதல்.
- கிடைக்கக் கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.
- சமுதாய வளங்களைத் திரட்டிப் பயன்படுத்துதல்
- சமுதாயப் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டினை அதிகரிக்கச் செய்தல்.
- பிறதுறைகளுடன் இணைப்புக்கு ஆவன செய்தல்.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்துதல்.
- ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கத்திறன் படைப்பாற்றலை வளர்த்தல்.
- பிற பள்ளிகளின் நிகழ்வுகளில் தம் பள்ளிக்கு ஏற்புடையவற்றைப் பயன்படுத்துதல்.
- பள்ளிகளிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்குதல்.
- மாணவர்களின் பாடவாரியான கல்வித் திறனடைவைக் காலவாரியாகத் திட்டமிட்டு உயர்த்துதல்.
- பாட இணை, துணைச் செயல்களை ஆண்டுநெடுகிலும் திட்டமிட்டு நடத்துதல்.

பள்ளிகளில் மாணவர் தர அடைவு குறைவாக உள்ளது; ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களில் போதிய அடைவு இல்லை என்பதையே பரவலாகக் குறைகூறித் தம்மூர் இலவசப்பள்ளிகளை விடுத்து சமுதாயத்தினர் தம் பிள்ளைகளை வெளியூர் கட்டணப்பள்ளிகளில் சேர்க்கின்றனர். மாறாக தாம் விரும்பும் கல்வித்தரத்தைப் பாடவாரியாக நிர்ணயித்து அவற்றை ஆசிரியர்கள் உதவி கொண்டு தம்மூர் இலவசப் பள்ளியிலேயே திட்டமிட்டு வென்றடையுமாறு நிறுவனத்திட்டங்கள் அமைய வேண்டும். இவ்வாறு பெற்றோர் கருத்துக்களைப் பிரதிபலப்பனவாக நிறுவனத்திட்டங்கள் அமைவுற ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். இவ்வகை அணுகுமுறையால் உள்ளூர் அரசுப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், தக்கவைக்கவும் செய்யலாம். பள்ளி மாணவர் எண்ணிக்கை வெகுவாகக் கூடும். புதிய ஆசிரியர் நியமனங்களைப் பள்ளிகள் பெறலாம். பள்ளித்தரம் பேணப்படும்.

### 5.2.3.2. பள்ளிமேம்பாட்டுத் திட்டம் தயாரித்தலும் செயல்படுத்துதலும்

பள்ளியைப் பற்றிய முழு விவரங்களையும் “ பள்ளிவிவரப் படிவம், (School Profile) மூலம் சேகரித்து அவற்றில் வலுவானவை, வலுவற்றவை(weakness),வாய்ப்புகள் (opportunities) எதிரிடையான கூறுகள் (Threats) என்ற நான்கு கூறுகளையும் ஆராய்ந்து தொகுத்த பின் அவற்றின் அடிப்படையில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். பள்ளியைப் பொறுத்த வரையில் நீண்ட காலத்திட்டத்தை விட குறுகியகாலத் திட்டமே சிறந்தது. குறுகிய காலத்திட்டம் என்பது பள்ளியின் ஓராண்டிற்கான செயல்திட்டம் ஆகும். செயல்திட்டம் உருவாக்குவதில் கீழ்க்கண்டவர்களை ஈடுபடுத்துதல் அவசியம்.

- ❖ தலைமையாசிரியர், ஆசிரியர்கள்.
- ❖ சரக/ஒன்றியக் கல்வி அலுவலர்கள்.
- ❖ அரசின் பிற துறை அலுவலர்கள்.
- ❖ மாணவர், பெற்றோர்கள்
- ❖ சமுதாய உறுப்பினர்கள்
- ❖ தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்
- ❖ பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள்
- ❖ கிராமக்கல்விக்குழு உறுப்பினர்கள்
- ❖ பள்ளியின் கொடையாளர்கள்/புரவலர்கள்
- ❖ ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள்
- ❖ சத்துணவுத் திட்ட ஒருங்கிணைப்பாளர்
- ❖ அங்கன்வாடி மையப் பணியாளர்
- ❖ கிராம நிர்வாக அலுவலர்.
- ❖ வட்டார வளமைய மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள்.

### 5.2.4. மதிப்பீடு

எந்த ஒரு திட்டமும் செம்மையாகச் செயல்படுகின்றதா என்பதை உறுதி செய்ய மதிப்பீடு மிகவும் இன்றியமையாததாகும். பள்ளிமேம்பாட்டிற்காக உருவாக்கப்படும் திட்டம் குறுகிய காலத் திட்டம் என்பதால் ஓராண்டின் முடிவில் மதிப்பீடு மிகவும் இன்றியமையாததாகும். ஓராண்டின் முடிவில் திட்ட இலக்குகளையும், திட்டத்தின்படி மேற்கொண்ட செயல்பாடுகளையும், சந்தித்த பிரச்சனைகளையும், எடுத்த தீர்வுகளையும், குறிக்கோள்களின்படி பெற்ற அடைவுகளையும் ஆராய்ந்து அதன் அடிப்படையில் அடுத்த ஆண்டிற்கான திட்டத்தினை உருவாக்க வேண்டும். இது பள்ளித் தரமேம்பாட்டிற்குத் தொடர் நிகழ்வாக அமைய வேண்டும். முன் ஆண்டில் நிறைவுறாதனவற்றை அடுத்த ஆண்டுத் திட்டத்தில் இலக்குகளுடன் இணைத்துக் கொள்ளலாம்.

சமுதாய உறுப்பினர்களும் அவ்வப்போது பள்ளிக்குச் சென்று திட்டங்களில் உருவாக்கிய செயல்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதைச் சரிபார்க்க வேண்டும். தலைமை ஆசிரியரும் பிற ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிடப் பள்ளிச் செயல்பாடுகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும். ஒன்றிய, மாவட்ட அளவிலான கல்வி அலுவலர்களும், மேற்பார்வையாளர்களும் திட்ட நடைமுறைப்பாட்டில் வளர்நிலை காண வேண்டும்.

## 5.3. கல்வி நிர்வாகப் பொறுப்புகளைப் பரவலாக்குதல்.

### 5.3.1. பரவலாக்குதலின் முக்கியத்துவம்

பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்குவதை உறுதி செய்வதற்காக 2001–02 ஆண்டிலிருந்து “அனைவருக்கும் கல்வி இயக்கம்” என்ற மக்கள் இயக்கம் இந்தியா முழுவதிலும் செயல்பட்டு வருகின்றது. சமூக பொருளாதார காரணங்களினாலோ ஆண், பெண், இன வேறுபாடு காரணமாகவோ கல்விச் செயல்பாடுகளிலும் அடைவுகளிலும் காணப்படும் இடைவெளியை முற்றிலும் நீக்கி வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை அவர்களுக்கு அளித்திட வேண்டும் என்பது இத்திட்டத்தின் மிக முக்கிய குறிக்கோளாக வரையறுக்கப்பட்டுள்ளது. சமூக, பொருளாதார வேறுபாடுகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும்/ மாவட்டத்திற்கும் நகரத்திற்கும் கிராமத்திற்கும் 1992 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறைவேற்றப்பட்ட சட்ட நடவடிக்கைப்படி (73 ஆவது மற்றும் 74 ஆவது) அரசியலமைப்பின் சட்டச்சீர்திருத்தம்) உடல்நலம், குடும்பநலம் மற்றும் கல்வி வாய்ப்புகள் இவற்றைக் கிராம உள்ளாட்சிகளின் தனித்தன்மை வாய்ந்த தவிர்க்க இயலாத பொறுப்பாகவும், கடமையாகவும் ஆக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பரிந்துரைக்கிணங்க கிராமக்கல்விக்குழு மாவட்டத்தொடக்கக் கல்வித் திட்டத்தின் (DPEP) கீழுள்ள பள்ளிகள்தோறும் உருவாக்கப்பட்டுள்ளன.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கிராமக்கல்விக் குழு (VEC) எஸ்.எஸ்.ஏ., திட்டத்தின் கீழும் செயல்பட்டு வருகின்றன. கிராமக்கல்விக் குழு என்பது கல்வித்திட்டத்தின் அடிமட்டத்தில் இயங்கும் அதிகார பூர்வமான நிர்வாகக் குழு ஆகும்.

" ஊராட்சி ஒன்றிய அளவில் கிடைக்கும் பல்வேறு தகவல்களைத் திரட்டி, ஆராய்ந்து, ஒருங்கிணைத்து அதன் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும் இம்முறை தொடர்ந்து நடைபெற்றால்தான், அரசால் நடைமுறைப்படதத்தப்படவுள்ள பல கல்வித்திட்டங்கள் முழுமையான பயனளிப்பனவாகச் செயல்பட முடியும் "என்பதை இந்திய தேசியக் கல்விக் கொள்கையின் (1986) செயல்திட்டம் (Programme of Action) வலியுறுத்துகிறது. எனவே கல்வி நிர்வாகத்தை, அதிகாரத்தைப், பொறுப்புக்களை மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும், கிராமங்களுக்கும், பரவலாக்குதல் மிகவும் முக்கியமான சீர்திருத்தமாகும். அதிகாரப்பன்முகப்படுத்தும் திட்டம் செவ்வையாகச் செயல்பட அவ்வம்மட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளும் அலுவலர்களும் முனைப்புடன் வழிகாட்ட வேண்டும்.

## 5.3.2. நிர்வாக அமைப்புகளும் அதன் பணிகளும்

கல்வி நிர்வாகப் பணிகளைப் பரவலாக்கும் நோக்கத்துடன் மாநில அமைப்புக்கு உதவியாகப் பின்வரும் அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

1. மாநிலத் திட்ட இயக்ககம் (State Project Directorate)
2. மாவட்டத் திட்ட அலுவலகம் ( District Project Office)
3. வட்டார வள மையம் (Block Resource Centre)
4. கிராமக் கல்விக் குழு (Village Education Committee)

## 5.3.2.1 மாநிலத் திட்ட இயக்ககத்தின் பணிகள்

- ◈ மாநிலத் தொலைநோக்குத் திட்ட அறிக்கையையும் ஆண்டுத் திட்ட அறிக்கையையும் தொகுத்து அளித்தல்.
- ◈ திட்ட ஆவணங்கள் தயாரிப்பதிற்கு கிராமம், வட்டாரம், மாவட்டம் ஆகிய நிலைகளில் பரவலான முறையில் திட்டச் செயல்களை வகுத்தும் தொகுத்தும் திட்ட ஆவணங்களை உருவாக்க வழிகாட்டுதல்.
- ◈ அனைத்து நிலைகளிலும் திட்டமிடும் குழுவினருக்குத் திட்டமிடும் நடைமுறையில் பயிற்சி அளித்தல்.
- ◈ கல்வி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்வு செய்து திட்டமிடல், திட்டமதிப்பீடு, திட்ட விளைவுகளைக் கண்டறிதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்துதல்.
- ◈ மாநில அளவிலான சமுதாயப் பங்கேற்பை உள்வாங்கித் திட்ட நடைமுறைப்பாட்டை மக்களியக்கமாக உரிய பிரதிநிதித்துவத்துடன் நடத்துதல்.
- ◈ திட்டப் பணிகளுக்கான நிதியை, திட்ட ஆவணங்களின்படி மைய மாநில அரசுகளிடமிருந்து உரியகாலத்தில் பெற்று மாவட்டங்களுக்கு வழங்குதல்.
- ◈ மாவட்டங்களில் நடைபெறும் திட்டப் பணிகளின் செலவின முன்னேற்றங்களைக் கண்காணித்து விரைவு நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
- ◈ மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களின் மீளாய்வுக் கூட்ட நடவடிக்கைகளில் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைப் பரிசீலித்துத் திட்டப் பணிகளை விரைவுபடுத்த ஆலோசனை வழங்குதல் .
- ◈ திட்டச் செலவினங்களுக்கான மாவட்டக் கணக்குகளைத் தணிக்கை செய்தல்.
- ◈ மைய, மாநில அரசுகளுக்கு, திட்டச் செயலாக்க நிலை குறித்து அறிக்கைகளை அனுப்புதல்.
- ◈ மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு செயல்களை மேற்கொள்ளுதல்.

- ❖ திட்டப் பணியாளர்கள், ஆசிரியர்களிடையே செயலாராய்ச்சியை ஊக்குவித்தல்.
- ❖ திட்ட நடவடிக்கையில் நெருங்கிய தொடர்புள்ள பள்ளிக் கல்வித் துறை, தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சித் துறை மற்றும் பள்ளி சாராக் கல்வித் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- ❖ மாவட்ட, வட்டார, கிராம நிலை அமைப்புகள், திட்டம் செயலாக்கத்துக்கான பிற அமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல், திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அடிப்படை நிலை அமைப்புகள் அனைத்துக்கும் வழிகாட்டுதல்.
- ❖ மாநில வளக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றைத் திட்டக் கூறுகளின் செயலாக்கத்துக்குப் பயன்படுத்துதல், சிறப்புக் கவனக் குழந்தைகளுக்கான திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- ❖ திட்டத்தின் அனைத்துக் கூறுகளிலும் புதிய செயல்பாடுகளை ஊக்குவித்தல்.
- ❖ திட்டப் பணிகளுக்கான பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- ❖ கிராமக் கல்விக் குழு, பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம், வட்டார வள மையம், மாநிலத்திட்ட அலுவலகம் ஆகியவற்றின் செயல்பாடுகள், மாவட்ட நிர்வாகத் தகவல் தொடர்பு முறைகள், அறிக்கைகள், கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம், பயிற்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம், சிறப்புக் கவனத்திற்குரிய குழந்தைகளுக்கான செயல்பாடுகளில் முன்னேற்றம், மாற்றுப் பள்ளிகளின் செயல்பாடுகள் முதவியவற்றைக் கண்காணித்தல்.

## 5.3.2.2. மாவட்டத் திட்ட அலுவலகத்தின் பணிகள்

- ❖ மாவட்ட அளவிலான மக்கள் பிரதிநிதித்துவத்தை உள்வாங்கி மக்களியக்கமாக இதனை நடத்துதல்.
- ❖ அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டச் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பை மாவட்ட நிலையில் மேற்கொள்ளுதல்.
- ❖ கிராம, வட்டார நிலை அமைப்புகளுக்குத் திட்டப் பங்கேற்பு முறையில் ஆவணங்கள் தயாரித்தல்.
- ❖ பள்ளி வரைபடம் தயாரித்தல், நுண்ணலகுத் திட்டமிடல் ஆகியவற்றில் பயிற்சி வழங்குதல்.
- ❖ கிராம, வட்டார அளவிலான திட்டங்களைத் தொகுத்து ஆண்டுத் திட்ட ஆவணத்தையும், தொலைநோக்குத் திட்ட ஆவணத்தையும் தயார் செய்தல்.
- ❖ கிராம அளவிலும், வட்டார அளவிலும் திட்டக் குறிக்கோள்களையும் அடைவு நிலையையும் நிர்ணயித்து அதற்கான வழிகாட்டுதல்களை வகுத்துச் செயல்படுத்துதல், மேற்பார்வையிடல் மற்றும் கண்காணித்தல்.
- ❖ பள்ளி வாரியாக மாணவர் சேர்க்கை, தொடர்ந்து கற்றல், இடைநிறுத்தம் குறித்துத் தொடர் ஆய்வு செய்தல்.
- ❖ செயல்திட்ட கால அட்டவணையின்படி அனைத்துச் செயல்களையும் நடைமுறைப்படுத்துதல். முறையான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், பள்ளிகள், வட்டார வள மையங்கள், பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையங்கள், கிராமக் கல்விக் குழுக்கள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டும் கண்காணிப்புச் செய்தல்.
- ❖ குடும்பக் கணக்கெடுப்புத் தகவல்கள், பள்ளித் தகவல்கள் ஆகியவற்றைப் புதுப்புத்துப் பராமரித்தல்.
- ❖ திட்ட நிதியினை உரிய அமைப்புகளுக்கு வழங்கி அவற்றைத் திறம்படப் பயன்படுத்துவதையும், வெளிப்படையான தன்மையையும் கண்காணித்தல்.
- ❖ அடிப்படை வசதித் தேவைகைளைக் கண்டறிந்து அவற்றை நிறைவு செய்தல்.

- ◈ சமுதாயப் பங்கேற்பு மூலம் மேற்கொள்ளப்படும் திட்டக் கூட்டப் பணிகளை மேற்பார்வையிடுதல்.
- ◈ விழிப்புணர்வு இயக்கங்களை நடத்துதல், கிராமங்களில் நடைபெறும் விழிப்புணர்வு நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
- ◈ இடைநிற்றல், அடைவுநிலைக் குறைவு போன்ற பிரச்சனைகளைச் சமாளிக்க பிற அரசுத் துறைகள், சுய உதவிக்குழுக்கள், அரசு சாரா அமைப்புகள், ஆகியவற்றின் ஒத்துழைப்பை நாடுதல்.
- ◈ மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் நடைபெறும் பயிற்சித் திட்டங்களை மேற்பார்வையிட்டு மதிப்பீடு செய்தல்.
- ◈ மாவட்ட அளவில் திட்டம் சார்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் ஆசிரியர்கள் செயலாராய்ச்சி மேற்கொள்ளுவதற்கான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்தல்.
- ◈ மாநில அளவில் திட்டம் சார்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் ஆசிரியர்கள் செயலாராய்ச்சி மேற்கொள்ளுவதற்கான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்தல்.
- ◈ மாநிலத் திட்ட அலுவலகத்துக்கு உரிய காலங்களில் காலமுறை அறிக்கைகளை அனுப்புதல், மாநில ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்றல்.

## 5.3.2.3. வட்டார வள மையத்தின் பணிகள்

- ◈ மாணவர் சேர்க்கை, தக்க வைத்தல், பள்ளிப் படிப்பினை முடிக்கச் செய்தல் ஆகிய குறிக்கோள்களை நூறு விழுக்காடு அடையும் வகையில் வீட்டுக் கணக்கெடுப்பு, பள்ளித் தகவல் ஆகியவற்றைப் புதுப்பித்துப் பராமரித்தல்.
- ◈ கிராம, வட்டார , அளவிலான திட்ட அறிக்கைகளைத் தொகுத்துத் தயாரித்து மாவட்டத் திட்ட அலுவலகத்துக்கு அனுப்புதல்.
- ◈ வட்டாரவள மைய அளவிலான ஆண்டுத் திட்டப் பணிகளை வரையறுத்து, செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- ◈ வீடுவாரியாகப் பள்ளி வயதுக் குழந்தைகளையும், பள்ளிக்கு வெளியில் உள்ள பள்ளி சேராத மற்றும் இடைநின்றவர்களையும் துல்லியமாகக் கணக்கிட்டு, அவர்களை மாற்றுப் பள்ளிகள் / இணைப்புக் பள்ளிகளில் சேர்க்க ஏற்பாடு செய்தல்.
- ◈ பள்ளி / மாற்றுப்பள்ளிகள் தொடங்க நடவடிக்கை எடுத்தல்.
- ◈ கிராமக் கல்விக்குழு மூலமாகப் பள்ளிக்கு வழங்கப்படும் பள்ளி மானியம், ஆசிரியர் மானியம், துணைக் கருவிகள் மானியம் ஆகியவற்றை வெளிப்படையாகவும் சரியாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.
- ◈ வட்டார அளவில் நடைபெறும் கட்டடப் பணிகளைக் கண்காணித்து அவற்றின் தரத்தை உறுதி செய்தல்.
- ◈ கிராம அளவிலும், வட்டார அளவிலும் கல்வி விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்
- ◈ வட்டார அளவில் திட்ட வெற்றிக்காகப் பிற அரசுத் துறைகளுடனும், உதவிக் குழுக்களுடனும் அரசுசாரா அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- ◈ பள்ளித் தலைமையாசிரியர்கள் பங்கேற்கும் மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி, திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளை அகற்றுதல்.
- ◈ ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியையும், மாற்றுப் பள்ளிப் பயிற்றுநர்கள், பால்வாடி, அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோருக்கும், கிராமக் கல்விக்குழு உறுப்பினர்களுக்கும் பயிற்சிகளையும் வகுத்து நடத்துதல்.
- ◈ பயிற்சி அட்டவணை தயாரித்தல்.
- ◈ மாவட்டத் திட்ட அலுவலர் நடத்தும் ஆய்வுக்கூட்டங்களில் பங்கேற்றல், மாதாந்திர அறிக்கைகளை அனுப்பிவைத்தல்.

- ◈ வட்டார வள மையச் செயல்பாடுகளுக்கான செலவினக் கணக்குகளைப் பராமரித்துத் தணிக்கைக்கு அனுப்புதல்.
- ◈ மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களின் ஆண்டு, மாத, வார, பணித்திட்டம் தயாரித்தல்.
- ◈ பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்
- ◈ ஆண்டுத் திட்ட அறிக்கை தயாரித்தல்.
- ◈ செயல்திறன் குறைந்த பள்ளிகளை இனங்கண்டு தரவரிசை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ◈ வட்டார வள மையப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் செயல்திறன் குறைந்த பள்ளிகளில் 5 பள்ளிகளைத் தத்தெடுத்து மேம்படுத்துதல். (School Adoption Programme)
- ◈ பள்ளிகளைப் பார்வையிடுதல் (School visits)
- ◈ மாற்றுப் பள்ளிகளைப் பார்வையிடல்.
- ◈ மழலையர் கல்வி மையங்களைப் பார்வையிடல்.
- ◈ வட்டார அளவில் தரக் கண்காணிப்புக் குழு அமைத்தல் (கல்வியாளர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள், பெண்கள் ஆகியோரில் ஒவ்வொரு பிரிவிலும் ஒருவர் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற வேண்டும்).
- ◈ பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையக் கூட்டங்களில் கலந்து கொள்ளல்.
- ◈ கல்வி மேம்பாட்டுக்கான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆசிரியர்கள் செயலாராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுதல்.
- ◈ மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்டத் திட்டக்கூடுதல் ஒருங்கிணைப்பாளர், மாவட்டத் திட்ட உதவி ஒருங்கிணைப்பாளர், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், ஆகியோர் அனைவருடனும் மேற்பார்வையாளரும், ஆசிரியப் பயிற்றுநர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

## 5.3.2.4. கிராமக் கல்விக் குழுவின் பணிகள்

- ◈ அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டப் பணிகளில் கிராமக் குழுவினரும் பங்கேற்பதற்கு வசதியாக, அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் கலந்து கொள்ளச் செய்தல்.
- ◈ பள்ளியின் தேவைகளைக் கண்டறிந்து பள்ளித் திட்ட அறிக்கை தயாரித்தல் (School Plan Document)
- ◈ புதிய பள்ளி / மாற்றுப் பள்ளி தொடங்க நடவடிக்கை எடுத்தல்.
- ◈ விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தி, சமுதாயத்தின் ஒத்துழைப்பு மற்றும் சமுதாயத்தை ஒன்றுபடுத்தித் திட்டத்தினைச் செயலாக்குதல்.
- ◈ பள்ளிக்கு வழங்கப்பட்ட மானியத்தை முறையாகச் செலவிட்டு உரிய பயன் அடைதல்.
- ◈ கிராமக் கல்விக் குழுத் தலைவரும், உறுப்பினர் செயலரும் நிதி அனைத்தையும் பராமரித்தல் வேண்டும்.
- ◈ பள்ளிக் கட்டடம், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, கட்டடம் பழுது பார்த்தல் போன்ற கட்டுமான வேலைகளைச் சமுதாய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளுதல்.
- ◈ மக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியினைக் கொண்டு கட்டுமானப் பணிகளுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் நிதியைச் சரிகட்ட ஏற்பாடு செய்வதன் மூலம் பள்ளி, கிராமப் பொதுச் சொத்து என்னும் பொதுமை உணர்வை வளர்த்தல்.
- ◈ பள்ளி வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து எட்டாம் வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்கச் செய்தல்.
- ◈ கல்வி விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.

- ◈ பள்ளியில் விழாக்கள் நடத்துதல், குழந்தைகளின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் பொது நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் நடத்துதல்.
- ◈ திட்டச் செயல்பாடு சிறப்பாக நடந்திட சமுதாய உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தித் தருதல்.
- ◈ கல்வி உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் மாற்றுப் பள்ளிகள் தொடங்க ஏற்பாடு செய்தல்.
- ◈ பள்ளியில் சேராத குழந்தைகளையும் இடையில் நின்றவர்களையும் கண்டறிந்து அவர்களைப் பள்ளியிலோ, மாற்றுப் பள்ளியிலோ சேர்க்க ஆவன செய்தல்.
- ◈ மாற்றுப் பள்ளிகளின், இணைப்புப் பள்ளிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
- ◈ கிராமக் கல்விப் பதிவேட்டினைப் (VER) பராமரித்து, அனைத்துத் தகவல்களையும் அதில் பதிவித்தல்.
- ◈ பள்ளி அறிவிப்புப் பலகையில் திட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை எழுதி வைத்தல்.
- ◈ பள்ளி தொடர்பான கட்டடப் பணிகளையும் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.
- ◈ மாதம் இருமுறை கூட்டம் நடத்திப் பள்ளி வளர்ச்சியை ஆய்வு செய்தல்.

**செயல்**

கிராமக்கல்விக் குழுவின் சிறப்பான செயல்பாட்டுக்குப் பள்ளியாசிரியர்களின், தலைமையாசிரியரின் பங்கு பணிகளைப் பட்டியலிடுக. கிராமக் கல்விக்குழு செவ்வையாகச் செயல்படத் தலைமையாசிரியர் ஓர் கிரியாவூக்கி என்பதை நிறுவுக.

## 5.4. சமுதாயக் கண்காணிப்பு மற்றும் உரிமை உடைமை உணர்வை மேம்படுத்துவதற்கான செயல்கள்.

### 5.4.1 சமுதாயக் கண்காணிப்பு

அனைவருக்கும் தொடக்கக் கல்வி இயக்கம், மாணவர்களின் வருகை, சேர்க்கை, தக்கவைத்தல் போன்ற குறிக்கோள்களுடன் கண்காணித்தல் பணியிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. இதன் ஒரு அணுகுமுறையாகச் செயல்பட்டு வரும் அனைவருக்கும் கல்வி இயக்கத் (SSA ) திட்டமும் கண்காணிப்பும் பின் வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- ❖ பெண்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் வள்ளுவர் சமுதாயக் குழுக்களை அமைத்து ஆரம்பப்பள்ளிகளின் (Primary School) செயல்பாடுகளை கண்காணிக்க உதவுதல்.
- ❖ தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் கண்காணித்தலை நெறிப்படுத்துதல்.

மாவட்டத்திட்ட அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், உதவிக்கல்வி அலுவலர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் கல்வித்திட்டச் செயல்களை அவ்வப்போது பார்வையிட்டு, கல்வி முன்னேற்றம் குறித்த அறிக்கையினை மாநிலத் திட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்புகின்றன. கல்வி முன்னேற்றம் என்பது முழுவதும் பள்ளி அமைந்துள்ள சமுதாய முன்னேற்றத்திற்காக என்பதால் சமுதாயத்தில் உள்ளவர்களும் கல்விச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மிகவும் அவசியமாகும்.

## 5.4.2. பள்ளிகள் சமுதாயத்தின் உடைமை (Community Ownership of Schools)

பள்ளியானது சமுதாயத் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு சமூக நிலையமாகும். பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. பள்ளியானது சமுதாயத்தின் மையமாகத் திகழ்கிறது. "பள்ளி எனப்படுவது சமுதாய வாழ்க்கையில் உயர் நிலைப்பட்ட சிறு பதிப்பு போன்றது. சமுதாயச் செயல்களில் பயனுள்ள பல்வேறு முக்கியக் கூறுகளைப் பள்ளி பிரதிபலிக்கின்றது " என்று ஜே..சி. மையதின் குறிப்பிடுகிறார்.

ஆசிரியரும் சமுதாயமும் ஒத்திசைந்து செயல்படத் தொடங்கிவிட்டால், பள்ளி நலம் பெறுவது திண்ணம் – ஆசிரியர் தம் பணியைச் செம்மையாக்கிக் கொள்வதும் எளிது. இம்முயற்சியில் ஆசிரியர் ஒரு தூண்டுகோலாக, செயலாளராக, காவலராக, ஊக்குநராக அமைதல் வேண்டும். சமுதாயத்தைப் பள்ளியின் பயனாளிகள், மேலாளர்கள் என்ற நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அதற்கான படிநிலைகள்.

- சமுதாயத்தைக் கல்வி விழிப்படையச் செய்தல்.
- சமுதாயத்தைப் பள்ளி வளர்ச்சிக்காக ஒன்று திரட்டுதல்.
- சமுதாயத்தைக் கல்விப் பணிகளில் பங்கேற்கச் செய்தல்.
- சமுதாயத்திற்கு மேலாண்மை நெறிபுகட்டுதல்.
- சமுதாயத்தைப் பள்ளி நிர்வாகத்தில் ஈடுபடச் செய்தல்.
- சமுதாயம் பள்ளி நடைமுறைப்பாட்டை மதிப்பிடச் செய்தல்.
- சமுதாயத்தைப் பள்ளியின் உரிமையாளர்களாக்குதல்.

பள்ளி "நமது சொத்து " என்ற எண்ணத்தை ஒவ்வொரு தனி நபரிடமும் உருவாக்குவதன் மூலம் கல்வியைச் சமுதாய உடைமையாக்க முடியும்.

## 5.4.3. சமுதாயக் கண்காணித்தல் மற்றும் சமுதாய உரிமை உடைமை உணர்வை மேம்படுத்துவதற்கான செல்கள்

தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் பயன்படும் வகையில் ஒரு குழந்தையின் உள்ளார்ந்த தகுதிகளை மேன்மை பெறச் செய்வது கல்வியாகும். கல்வி என்பது தனி மனிதத் தேவையாகவும், சமூகத் தேவையாகவும் விளங்குகிறது. இத்தகைய கல்விப்பணிகள் சிறப்பாக நிகழ்ந்திட கண்காணித்தல் ஒரு ஊக்குவிக்கும் காரணியாக அமைதல் வேண்டும். பள்ளிகளில் நடக்கும் செயல்பாடு அனைத்தும் நம் குழந்தைகளின் வளர்ச்சிகாகத்தான் நிகழ்கின்றன. இது 'நமது பள்ளி' 'கல்வி நமது உடமை' என்ற எண்ணம் பெற்றோர், தலைமை ஆசிரியர், ஆசிரியர், மாணவர் மற்றும் சமுதாய பிரதிநிதிகளிடம் இருத்தல் வேண்டும். இந்த எண்ணம் இருந்தால் கல்வி வளர்ச்சியில் அனைத்துத் தரமக்களிடமும் அக்கறை ஏற்படும். இதனால் "அனைவருக்கும் கல்வி மேம்பாடும் சமுதாய மேம்பாடும்" ஏற்படும் என்பது திண்ணம்.

### 5.4.3.1. சமுதாயக் கண்காணிப்பை மேம்படுத்தும் செயல்கள்

- குழந்தைகளின் சீரான வருகையைக் கண்காணித்தல்.
- குழந்தைகளின் அடைவு நிலையைக் கண்காணித்தல்.
- வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல்.
- சத்தான தூய்மையான உணவு வழங்க வழிவகை, மேற்பார்வை செய்தல்.
- பள்ளிக்கூடச் சுற்றுப்புறத்தூய்மை பேணுதல்.
- குழந்தைகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு முகாம்களை நடத்துதல்.
- குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து தருதல்.

- ◈ பெண் கல்வியை ஊக்குவித்தல்.
- ◈ குழந்தைகளின் நன்னடத்தைச் செயல்களை வளர்த்தல்.
- ◈ சிறப்புக் கவனம் நாடும் குழந்தைகளின் கல்வி சார் செயல்களை உற்றுநோக்குதல்.
- ◈ கல்வி மேம்பாட்டிற்காகத் திட்டமிட்ட செயல்திட்டத்தை அவ்வப்போது கண்காணித்தல்.

இச்செயல்களைப் பெற்றோர், ஆசிரியர், தலைமையாசிரியர், அரசுப் பிரதிநிதிகள் மற்றும் சமுதாயப் பிரநிதிகள் யாவரும் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்து மேற்கொள்ளுதல் அவசியம்.

### 5.4.3.2. சமுதாய உரிமை உடைமை உணர்வை மேம்படுத்தும் செயல்கள்

" பள்ளி நமது சொத்து" என்ற உணர்வை சமுதாயத்திடம் எற்படுத்தும் பொறுப்பு சமுதாய உறுப்பினர்களையே சாரும். எனவே சமுதாயத்தின் அங்கமாகத் திகழும் பெற்றோர், தலைமை ஆசிரியர், ஆசிரியர், கிராமக்குழு உறுப்பினர்கள், கிராம மக்கள், மாணவர்கள் அனைவரும் பின்வரும் செயல்களில் ஈடுபட வேண்டும்.

- ◈ பள்ளிக் கட்டுமானப் பணிகளை சமுதாயம் கண்காணித்தல்/ஏற்றுநடத்துதல்
- ◈ மாணவர்களுக்குத் தேவையான சீருடை எழுதுபொருள்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் வாங்கித் தருதல்.
- ◈ சுத்தமான குடிநீர், சத்துணவு, கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ◈ கற்றல் கற்பித்தல் துணைக் கருவிகளை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- ◈ ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாத பள்ளியில் தங்கள் ஊரில் / கிராமத்தில் உள்ள படித்தவர்களைக் கற்றல் பணியை மேற்கொள்ளச் செய்தல்.
- ◈ பெற்றோர்களுக்குக் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- ◈ மாணவர்களின் சுகாதாரம் மற்றும் உடல்நலனைப் பேணுதல்.
- ◈ பெற்றோர் ஆசிரியர்க் கழகக் கூட்டங்கள் தவறாமல் நடந்திட பெற்றோர்கள், அனைவரும் பங்கேற்றல்.
- ◈ சமுதாயத்தில் உள்ள வளங்களைச் சேகரித்துப் பள்ளி மேம்பாட்டிற்குப் பயன்படுத்துதல்.
- ◈ குழந்தைப் பணியாளர்களை முழுநேரக் கல்வி / மாற்றுக் கல்வி முறையில் சேர்த்துக் கல்வியறிவு பெறச் செய்தல்.
- ◈ பெண்கல்வியை ஊக்குவித்தல்
- ◈ பெற்றோர், ஆசிரியர், தலைமை ஆசிரியர், மாணவர்கள், அரசு அதிகாரிகள், கிராமக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் இணைந்து அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுதல் வேண்டும்.

**செயல்**

கிராமக் கல்வி குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்கள் சிலவற்றில் கலந்துகொண்டு, உடனிருந்து நடத்திப் பள்ளியின் வளர்ச்சிக்காக அவர்கள் செய்யும் செயல்களைக் கண்டறிந்து தொகுத்து எழுதுக.

# அலகு–6
# பண்பாட்டுப் பாரம்பரியம்

## முன்னோக்கு

இந்தியாவில் பிறக்கும் குழந்தை பல்லாயிரம் ஆண்டுகளின் பண்பாட்டுப் பாரம்பரியப் பின்னணியில் பிறந்து வளர்கின்றது. இந்தியா பல மொழிகள் பேசும், வேறுபட்ட பல கலாச்சாரங்களைக் கொண்ட பல இன மக்கள் வாழும் நாடு ஆகும். பல்வேறு கலைகள், இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றில் சிறப்புப் பெற்ற கலைவாணர்கள், இசை ஞானிகள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் போன்றோர் பலர் வாழ்ந்த பூமியாகும்.

தத்துவ ஞானிகள், முனிவர்கள், மாமன்னர்கள், போர் வீரர்கள், தியாகச் செம்மல்கள், சமூகச் சீர்த்திருத்தவாதிகள் தூயதுறவிகள் ஆகியோர் வாழ்ந்த சமுதாய மரபுகளைப் பின்பற்றி இங்கு பிறந்து வாழும் குழந்தைகள் வளர்கின்றனர். பராம்பரியங்கள் யாவும் குழந்தைக்குச் சமுதாயத்தில் தகுதி நிலையை ஏற்படுத்தித் தருகின்றன. இப்பண்பாட்டுப் பாரம்பரியம், அக்குழந்தை தான் அடைந்த கற்றல் அடைவுகளினால் தன்னம்பிக்கையைப் பெற்று, எதிர்காலத்தில் தான் அடையவேண்டிய இலக்கினையும் நிர்ணயம் செய்து தருவனவாக அமைகின்றன. பள்ளியின் வாயிலாக, நம் சமூக மரபுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் குழந்தைகள் உணர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு பள்ளியும் நம்முடைய சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு மாற்றம் செய்யும் உன்னதப் பணியை நிறைவேற்றுகின்றன.

## 6.1. பண்பாடு

சமுதாய உறுப்பினர் என்கிற முறையில், மனிதன் பெறும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்ட திட்டங்கள், பழக்க, வழக்கங்கள் போன்றவற்றின் திரண்ட நிலையே “பண்பாடு” என இ.பி. டைலர் குறிப்பிடுகிறார்.

“உண்மையை நாடி ஏற்றுக் கொள்வதும், பொய்யை இனங்கண்டு துறப்பதும் “பண்பாடு” “ என்பார் தயானந்தர்.

“மனதையும் ஆன்மாவையும் விரிவுபடுத்துவது பண்பாடு“– என்றார் பண்டிதநேரு.

மனதை விசாலப்படுத்துவதும் ஆன்மாவைச் சுகங்காணச் செய்வதுமே பண்பாடு என்பது தெளிவு.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்” என்பது தமிழ்வாக்கு.

“நமது செயல்களுக்கு அடிப்படையாய் அமைவது பண்பாடு” எனவே பண்பாடு என்பது அறிவு மற்றும் அன்பு ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும்.

சிறந்த பண்பாடு என்பது நம்முடைய நடத்தை, பழக்கம், உணர்வு, மகிழ்வு போன்றனவற்றை உள்ளடக்கிய குறியீடாகும்.

இந்தியக் கலைகள், இலக்கியம், சட்டம், வரலாறு ஆகியவை நம் பண்பாட்டின் முக்கியக் கூறுகள் ஆகும். ஒவ்வொரு இந்திய மாணவனும், இந்நாட்டின் வரலாற்றுப் பின்னணியை

முழுமையாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். நம்முடைய தேசத்தின் சுதந்திரத்திற்கு அயராது பாடுபட்டவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும், நம்முடைய நாகரிக முன்னேற்றத்திற்கு அடிகோலியவர்கள் பற்றியும், வேத வித்தகர்கள், முனிவர்கள், யோகியர்கள் ஆகியோர் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். இது நம் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொலை நோக்காக அமையும்.
– பல்கலைக்கழகக் குழு 1948–49,

## 6.2. சமுதாயமும் பண்பாடும்

பண்பாடு என்பது சமுதாயம் வாழும் முறையை விளக்குவது. இது உணவு உட்கொள்ளும் முறை, ஆடைகள் அணியும் விதம், மொழியாளும் திறன், அறிவுடைமை, விளையாட்டுத் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியது. மனிதனுடைய பண்பாட்டைப் பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன. அவை

| நம்பிக்கைகள்,<br>மதிப்புகள் | மனமகிழ்<br>முயற்சிகள் | மனப்பான்மைகள் | வாழும்<br>முறைகள் | பிற<br>காரணங்கள் |
|---|---|---|---|---|
| i. சமயம், சமூக எண்ணங்கள்<br>ii. அரசியல் நோக்கு<br>iii. சிந்தனைகள் | i. தொலைக் காட்சி<br>ii. வானொலி<br>iii. விளையாட்டு<br>vi. கலைகள் | i. நல்லெண்ணங்கள்<br>ii. நன்நெறிகள்<br>iii. திருமண முறைகள்<br>vi. சமூகநல்லிணக்கம் | i. உணவு<br>ii. உடல் நலம்<br>iii. உடைகள்<br>vi. குடும்பம்<br>v. உறவுகள் | i. வருமானம்<br>ii. தொழில்<br>iii.மொழி<br>vi. நண்பர்கள் |

எனவே பண்பாடு என்பது தனிமனிதனின் அல்லது ஒரு குழுவினரின் எண்ணங்களாலும் செயல்களாலும் அமையும்.

## 6.3. பண்பாட்டின் வகைப்பாடு

பண்பாடு என்பது இயற்கையின் மீதும், தன் மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு, மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மீகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது என்று எல்வுட் மற்றும் பிரௌன் (Ellwood and Brown) ஆகியோர் கூறுகின்றனர். இவர்கள் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு எனப் பாகுபடுத்தி ஆய்கின்றனர்.

### பொருள் சார்ந்த பண்பாடு

மனிதர்கள் உருவாக்கும் கட்டுமானப் படைப்புகள், வசதிகள், வாய்ப்புகள் கருவிகள் இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால், அவற்றால் கிடைக்கும் நிம்மதியால் நடைமுறை, பழக்கவழக்கங்களால், இயல்புகளால் நன்மைகளால் மனிதர்கள் பண்பட்டவர்களாக வாழ்கின்றனர் இது பொருள் நலம் சார்ந்த பண்பாடு எனப்படுவதாகும்.

### பொருள் சாராப் பண்பாடு

மனிதர்கள் கொண்டொழுகும் வழக்கங்கள், வழி வழியாக வந்த பழக்கங்கள், எண்ணங்கள், மனப்பெற்றிகள், பக்தி, மதிப்புகள், நீதி, நெறிமுறைகள், அறம், சமூக நிறுவனங்கள் மற்றும் அறிவு ஆகியவைகளால் மனிதர் தம் வாழ்வில் ஏற்படும் பண்பாட்டு மெருகூட்டும் சாயல்கள், பக்குவங்கள், அவை போல்வன பிறவும் பொருள்சாராப் பண்பாட்டின் பாற்படும்.

## 6.4. பண்பாட்டின் சிறப்பு இயல்புகள்

மனிதன் தன்னுடைய தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு என சி. சி. நார்த் ( C.C. North) குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமுதாயத்தின் அல்லது ஒரு நாட்டின் பண்பாடு, காலச்சூழலுக்கேற்ப வளரும் தன்மை கொண்டது. இவ்வளர்ச்சிப் பாதையில், பயன்படக்கூடிய , ஒப்புக் கொள்ளப்பட்ட விரும்பத்தக்க, சமுதாயத்திற்கேற்ற, தேவையான கூறுகள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மற்றவைகள் காலப்போக்கில் விலக்கப்பட்டுவிடும். பண்பாடு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் குறிப்பிட்ட காலத்தின் வேலையாக மட்டுமன்றிப் பன்னெடுநாளைய வளர்ச்சியைக் கொண்ட ஒன்றிணைந்த திரட்டாக வளர்ந்த வண்ணமுள்ளது எனலாம். பல்வேறு காலக்கட்டங்களில் ஒரு பூபாகத்தில் மனித இனம் கண்ட அனுபவங்கள், அதற்கு அவர்கள் செய்த இடைவினைகள், அங்கு ஏற்பட்ட நன்மை, தீமைகள் சீர்திருத்தங்கள், சமூக பொருளாதார, அரசியல், கலாச்சாரம் அனைத்துமே அப்பண்பாட்டில் ஐக்கியப்பட்டு நிற்கின்றன என்பதே உண்மை.

**செயல்**

இந்தியப்பண்பாட்டில் காணப்படும் நேர்மறைக் கூறுகளை இனங்கண்டு பட்டியலிடுக. ஆக்கூறுகளுக்கான காலக்கணிப்பையும், கொடையாளிகளையும், ஆதாரங்களையும், அடிப்படைகளையும் கண்டறிந்து குறிக்க.

மனிதனுடைய இயற்கை உந்து உணர்வுகளான பசி, சேர்ந்து வாழ்தல், பாதுகாப்பு உணர்வு, போன்றவைகள் உலகம் முழுவதும் ஒன்றாக இருப்பினும், அவைகள் வெளிப்படும் முறை வேறுபட்டுக் காணப்படுகின்றன. பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் பற்பல மாற்றங்களைக் கொண்டு மாறிவரினும் உளம்சார் பண்பாடு அடியோடு மாறாமல் உயர்வு, சிறப்பு, நன்மை, அறம் போன்ற உட்கூறுகளைச் சிறிதும் பின்வாங்காமல் பின்பற்றி போற்றியே வருகின்றமை கண்கூடு.

சமூக வாழ்வில் நிகழும் கண்டுபிடிப்புகள், மாற்றங்கள் காரணமாக ஒரு குழுவினரின் பண்பாட்டு மாற்றங்கள், பிற குழுவினருக்கும் கசிந்து பரவும் தன்மையுடையன. தொலைக்காட்சி, வானொலி, விமானம், செய்தித்தாள் ஆகிய கண்டுபிடிப்புகளால் நம்முடைய பண்பாட்டுக் கூறுகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன.

மனிதன் பிறக்கும் போதே மரபுக் குணமாக உயிரியல் அடிப்படையில் அமையும் பண்பாடு மாற்றப்படுவதில்லை. பல மனிதர்களுடன், குழுவுடன் ஏற்படும் தொடர்பு வாயிலாகவும் மனிதன் பண்பாட்டைக் கற்றுக் கொள்கின்றான். பண்பாடு தனிபட்டு இருக்கவியலாதது. சமூகத்தின் ஒட்டு மொத்தத் தன்மையைப் பண்பாடு பிரதிபலிக்கும். சமூக இடைவினை மூலம் பண்பாடு தோன்றி வளர்கின்றது. எந்த மனிதனும், பிற மனிதர்களுடன் பங்கு கொள்வதன் மூலமே பண்பாட்டைப் பெற முடியும்.

சமூகவியல் அடிப்படையில் பண்பாடு என்பது பிறருடன் பகிர்ந்து கொள்வதைக் குறிப்பிடும். நம்முடைய பழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள், கொள்கைகள், எண்ணங்கள், மதிப்புக்கள் எல்லாமே மக்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டவையே ஆகும். ஆரியபட்டர் கண்டுபிடித்தவை, காளிதாசரின் இலக்கியங்கள், ஆதிசங்கரர், விவேகானந்தர் அருளிய தத்துவங்கள், இரவிவர்மாவின் ஓவியங்கள் முதலானவை பகிர்வே எனலாம்.

மனித இனத்தினுடைய கடந்தகால நிகழ்கால மற்றும் எதிர்கால அடைவுகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியையே பண்பாடு எனும் சொல் குறிப்பதாகும். ஆகவே பண்பாடு பல நூற்றாண்டுகளாக ஒரு தலைமுறையிடமிருந்து மறு தலைமுறைகளுக்கு மரத்தின் வேர் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருப்பது போல் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றது.

பண்பாடு, நம்முடைய தேவைகளையும், விருப்பங்களையும் மனநிறைவுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு வழிகாட்டி வாய்ப்பளிக்கின்றது. நம்முடைய உணவு, உடை, உறைவிடம் மற்றும் பதவி பணம், புகழ், எல்லாம் பண்பாட்டின் வழியாகவே நிறைவேறுகின்றன. மனிதனுடைய செயல்களை நிறைவேற்ற பண்பாடு வழிகாட்டுகின்றது. ஆகவே பண்பாட்டின் வாயிலாக மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றான்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட பண்பாடு உள்ளது. அவை ஒரு சமுதாயத்திற்கே உரிய தனித்தன்மைகளைப் பெற்றவை. பண்பாட்டுக் கூறுகளான பழக்கம், எண்ணம், தத்துவம், நம்பிக்கை ஆகியவை சமுதாயத்திற்கு ஏற்ப மாறுபடும் தன்மை உடையன. காலத்திற்கு ஏற்பவும் மாறும். எந்த ஒரு பண்பாடும் மாறாத் தன்மை உடையதாக இருக்க முடியாது.

**செயல்**

இக்காலத் தமிழர்தம் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள சில முரணான கூறுகளைப் பட்டியலிடுக. ஓர் ஆசிரியர் என்கிற வகையில் நீவீர் எவ்வாறு அவற்றை நேர்ப்படுத்தலாம்–மாணவர் ஆசிரியர் உறவால் பண்பாடு அடையக்கூடிய விரும்பத்தக்க கொடைகளைத் தெரிவு செய்து செயல்பட முனைப்பு கொண்டு ஒப்படை ஒன்றைத் தயாரிக்க.

## 6.5. பண்பாட்டின் தன்மைகள்

ஜார்ஜ் பீட்டர் முர்டாக் (George Peter Murdock) பண்பாட்டின் தன்மைகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

- ◈ மனிதன் பண்பாட்டுடன் பிறப்பதில்லை. சூழலோடு வாழ, அவனைப் பொருத்திக் கொள்ள உதவும் ஒரு கற்றல் முறையே பண்பாடு.
- ◈ பண்பாடு ஒருவரிடமிருந்து, மற்றவர்க்கு தலைமுறை, தலைமுறையாக மாற்றப்படுகிறது.
- ◈ ஒவ்வொரு சமூகத்திற்கும், தனியான பண்பாடு உள்ளது. ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சார்ந்து வாழ்கின்றனர். இது சமுதாயத்தை ஒரு கட்டுக்குள் வைக்க உதவுகின்றது.
- ◈ பண்பாடு முன்னோர்களின் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. முன்னோர்களிடமிருந்து அவற்றைப் பெற்று, அதன் வழி மனிதன் வாழ வகை செய்கின்றது.
- ◈ சூழ்நிலையிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப் பண்பாடு முயல்கின்றது. பல்வேறுபட்ட பண்பாடுகள், சமூகத்தில் இடைவினை புரிகின்றன அவற்றில் நல்ல கருத்துக்களை சமூகம் ஏற்றுக் கொண்டு முழுமையான ஒன்றிணைந்த ஒரு பண்பாடாக உருப் பெறுகின்றது.
- ◈ மனிதர்கள் தங்களுடைய எண்ணங்கள், நடத்தைகள், மற்றும் செயல்களைத் தொடர்ந்து தெளிவுப்படுத்தவும், மெருகேற்றவும் செய்கிறார்கள். இதற்குப் பண்பாடு உதவுகின்றது.
- ◈ பண்பாடு மனிதனின் புதிய தேடல்களுக்கு, புதியத் தேவைகளுக்கும் அவன் இறக்கும் வரை உதவுகின்றது.

**செயல்**

உயர்வையும், சிறப்பையும் ஒருக்காலும் தாழ்வுக்கும் இழிவுக்கும் பண்பாடு விட்டுக்கொடுக்காது; இதனைக் காலம் காலமாய் நிலைநாட்டி வருபவர்களே ஆசிரியர்கள் ஒரு கருத்தரங்கின் வழி நிறுவுக.

மனிதன் ஒரு சமூக விலங்கு; அவன் சூழ்நிலையின் கைதி; ஆயினும் நன்னெறிகளின் சிற்பியாகவும் பண்பாட்டின் காவலனாகவும் திகழ்கிறான். பண்பாடு, மனிதன் சமூகத்தில் வாழ அரண் செய்து உதவுகின்றது. பண்பாடு மனிதனை, மனிதனாக உயர்த்துகின்றது.

## 6.6. ஆளுமையை உருவாக்குவதில் பண்பாட்டின் பங்கு

நாடக நடிகர்கள், மேடையில் நடிக்க நுழையும் போது அணியும் 'முகமூடி' (Mask) என்ற பொருள் தரக்கூடிய 'பெர்சன்' (Person) என்ற கிரேக்கச் சொல்லிருந்து ஆளுமை எனப் பொருள்படும், Personality எனும் ஆங்கிலச் சொல் பெறப்பட்டது. நாடக நடிகர்கள் ஏற்று நடிக்கும் பாத்திரங்களுக்கேற்ப முகமூடியும் மாறும். ஏற்று நடித்தல் (Role Playing) என்பது பண்பாட்டுடன் தொடர்புடையது. மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை; தொழில், மனித உறவுகள், திருமணம் என்ற மூன்று சமூக நிறுவனங்கள் மற்றும் செயல்களின் வழியாக நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு மனிதனும் இம் மூன்று செயல்களிலும் வெற்றி பெற விழைகின்றான். இவ்விழைவே ஆளுமையை உருவாக்குகின்றது. இவ்வாறு ஆளுமை, பண்பாட்டைத் தீர்மானிக்கின்றது.

மொழியைக் கற்றுத் தரவும், விரும்பத்தகாதது, நல்லவை, கெட்டவை போன்றவற்றை வேறுபடுத்திப் பார்ப்பதற்கும், ஆளுமையின் அடிப்படைகளைப் பெறவும் குடும்பம் உதவுகின்றது. பள்ளியும் ஒத்த குழுவும் வெவ்வேறு பண்பாட்டு சூழலில் இருப்பினும், அவை தனித்தன்மை வாய்ந்த ஆளுமை வளர்ச்சிக்கு, குடும்பத்திற்கு அடுத்தபடியாகப் பேருதவி செய்கின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றிச் சென்று, இடைவினை புரியும் போது வெற்றி அல்லது தோல்வியை அடையலாம். தோல்வி அடையும் போது, குறையை அறிந்து திருத்திக் கொள்ளவும், புதிய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும், ஆளுமை வளர்ச்சியை அடையவும், குடும்பம், பள்ளி ஆகியவை உதவிட முடியும்.

## 6.7. பண்பாடும் கல்வியும்

ஒரு நாட்டின் பண்பாட்டில் முழுமையாக இசைந்து வாழ, அப்பண்பாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை விதிகளைப் பற்றிய விழிப்புணர்வை அதன் உறுப்பினர்கள் பெற்றிருக்க வேண்டும். கல்வியின் வாயிலாக, குழந்தைகளும், சமுதாயத்தின் புதிய உறுப்பினர்களும் பண்பாட்டுச் செய்திகளைப் பெற்று, அதன் சூழலோடு வாழ முயல்கின்றனர். அதாவது, பண்பாட்டின் இயல்புகளை மனிதனுக்கு அறிமுகப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி அதோடு இசைந்து வாழச் செய்வதும், கல்வியின் முக்கியப் பணியாகும்.

## 6.8. பண்பாடும், பள்ளியும்

தன்னுடைய இளம் உறுப்பினர்கள் அறியாமையிலும் நாகரிக மற்றும் இருப்பதைச் சமுதாயம் விரும்புவதில்லை. சமூகம், பண்பாடு, சமயம் மற்றும் பிறதுறைகளில் அடைந்த அடைவுகளை அடுத்த தலைமுறைக்கு மாற்றவேண்டிய கடமை சமுதாயத்திற்கு உள்ளது. சமுதாயம் சிக்கலுறும் போதும் அறிவு தடைப்படும் போதும், சமுதாயம் முறையான கல்வியின் தேவைகளை உணர்கிறது.

**பள்ளியால் வளர்க்கப்பட வேண்டிய பண்பாட்டு நோக்கங்கள்**

1) பண்பாட்டுப் பாரம்பரியத்தை மாற்றம் செய்தல்
2) பண்பாட்டுப் பாரம்பரியத்தை மேம்படுத்துதல்
3) பண்பாட்டைப் பாதுகாத்தல்
4) பண்பாட்டைத் தூய்மைப்படுத்துதல்

**பண்பாட்டை மேம்படுத்துதல்**

சமுதாய நிலைகளைப் பிரதிபலிப்பதோடு நில்லாமல், சமுதாயத்தை மேம்படுத்துவதும் கல்வியின் நோக்கம். வேகமாக வளர்ந்து வரும் உலகத்தோடு பொருந்தி வாழவும், சமுதாயத்தின் தேவைப்படாத புதிய கருத்துக்கள் நம்மை அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளவும், பண்பாடு வழிகாட்ட வேண்டும். கண்மூடித்தனமாக, புதிய வளர்ச்சிகளைப் பின்பற்றாமல், கல்வி வழியாக, கடந்த காலத்தை மதிப்பிட்டு, நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு, எதிர்காலத்தைச் சந்திக்கத் தயாராக இருத்தல் வேண்டும். மாணவர்கள் கடந்த கால உன்னத எண்ணங்களால் தூண்டப்பட்டு, வலிமை மிக்க நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ள கல்விப் பண்பாட்டுப் பராம்பரியத்தை மேம்படுத்த வேண்டும்.

**செயல்**

(i) Indian Heritage – Dr. S. ராதாகிருஷ்ணன்
(ii) Discovery of India – பண்டித ஜவஹர்லால் நேரு

இந்நூல்களைப் படித்து நம் பண்பாடு, கலாச்சாரம் தொடர்பாக அவர்கள் கூறியுள்ள கருத்துக்களைச் சேகரித்து, அது இன்றைய சூழலுக்கும் பொருத்தப்பாடு உடையது என கலந்துரையாடுக. ஒப்படைப்புகளாக எழுதிப் பதிக.

**பண்பாட்டைப் பாதுகாத்தல்**

எதிர்கால இந்தியப் பண்பாட்டின் தொடர்ச்சியும், உயிரோட்டமும் இளைஞர்கள் கைகளில் உள்ளது. நம் பண்பாட்டின் புகழை, மதிப்பை, தவிர்த்து அல்லது கவனிக்கத் தவறி, பிறநாட்டுப் பண்பாட்டினை சிந்திக்காமல், சீர்தூக்கிப் பார்க்காமல் அப்படியே ஏற்று அதில் மயங்கி, மோகங் கொண்டிருப்பது நம் நாட்டின் முன்னேற்றங்களைத் தடைப்படுத்தும். ஆகவே நம் உயிருக்கு காப்பீடு செய்து நம் சந்ததியினரைக் காப்பாற்றுவது போல், நம் மூதாதையர்கள், மகான்கள், அறிஞர்கள், சீர்திருத்தவாதிகள், தத்துவ ஞானிகள், சித்தர்கள் , முனிவர்கள் கட்டிக் காத்த பண்பாட்டுக் கலாச்சாரப் பாரம்பரியத்தை, இளம் தலைமுறையினரும் நிலையாக, உறுதியாக, நலத்துடன் பாதுகாக்கக் கல்வி உதவிட வேண்டும்.

**பண்பாட்டைத் தூய்மைப்படுத்தல்**

பண்பாட்டைப் புனரமைப்பு செய்து சீரமைத்துப் புதியதோர் உலகை, சமுதாயத்தை உருவாக்கும் அரிய பொறுப்பு கல்விக்குள்ளது.

## 6.9. இந்தியக் கலைகள்

நீண்ட, நெடிய 10000 ஆண்டு கால இந்தியப்பண்பாடு, வரலாறு, பல நாகரிகங்களைக் கடந்து, உள்வாங்கி உலகப்புகழ் படைத்த பண்பாடு ஆகும். நம் மக்கள், அவர்களின் வாழும் முறை, நடன, இசை மற்றும் கலைகள் ஆகியவை நம் பண்பாட்டின் உயிர் மூச்சு என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றன. ஆய கலைகள் அறுபத்தி நான்கும் இம்மண்ணில் தோன்றி வளர்க்கப்பட்டன. அவைகளாவன

## ஆயகலைகள் அறுபத்து நான்கு

1. அக்ஷர இலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாஸ்திரம்
8. சோதிட சாஸ்திரம்
9. தர்ம சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுண சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சப்தபிரமம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அஸ்திரபரீக்ஷை
28. கனகபரீக்ஷை
29. ரதபரீக்ஷை
30. கஜபரீக்ஷை
31. அஸ்வபரீக்ஷை
32. ரத்தினபரீக்ஷை
33. பூபரீக்ஷை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யுத்தம்
36. ஆகரஷனம்
37. உச்சாடனம்
38. வித்து வேஷணம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. ரசவாதம்
43. காந்தர்வவாதம்
44. பைபீலவாதம்
45. கௌத்துகவாதம்
46. தாதுவாதம்
47. காருடம்
48. நட்டம்
49. முஷ்டி
50. ஆகாயப்பிரவேசம்
51. ஆகாய கமனம்
52. பரகாயப்பிரவேசம்
53. அதிர்ஷயம்
54. இந்திரஜாலம்
55. மகேந்திரஜாலம்
56. அக்கினித்தம்பம்
57. ஜலஸ்தம்பம்
58. வாயுத்தம்பம்
59. திட்டித்தம்பம்
60. வாக்குத்தம்பம்
61. சுக்கிலத்தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத்தம்பம்
64. அவத்தைப்பிரயோகம்

– அபிதான சிந்தாமணி

பரத நாட்டியம், கதகளி, குச்சுபுடி, குட்டியாட்டம், மோகினியாட்டம், மணிப்புரி, ஒடிசி போன்ற பல்வேறு நாட்டியங்கள் மாநிலத்திற்கு ஏற்ப அமைந்து, அங்கு வாழும் மக்களின் பண்பாட்டை, பாரம்பரியத்தை விளக்குகின்றன.

பரத நாட்டியம் என்பது தமிழ்நாட்டின் சிறப்பு நடனம் ஆகும். பரத முனிவர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அவர் ‘நாட்டிய சாத்திரம்’ என்ற நூலில் பரத நாட்டியத்தை வெகுவிவரமாகச் சித்தரித்துள்ளார். இதன் மூலக்கூறுகள் தொல்காப்பியத்திலும் காணப்படுவதாக மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுரை எழுதியுள்ளார்.

பரத நாட்டியம், ராகம் (Raga) தாளம் (Tala) பாவம் (Bhava) என்ற மூன்று அம்சங்களைக் கொண்டது. கை, கால், முகம் மற்றும் உடல் அசைவுகளை ஒருங்கிணைத்து, 64 கோட்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் நடனமாடப்படுகிறது.

## 6.10. பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்

பலவிதமான கலாச்சாரங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறைகள், வாழ்க்கை முறைகள், உடை, உணவு பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள் ஆகியவற்றில் இந்திய மக்கள் வேறுபட்டு இருப்பினும் ஆன்மீக உணர்வு, எளிய வாழ்வு, உயரிய சிந்தனை, விருந்தோம்பல், கலை உணர்வு, அழகுணர்வு , சமயச் சார்பற்ற தன்மை, மக்களாட்சி ஆகியவற்றில் இந்தியர்கள் என்ற உணர்வும், ஒற்றுமையும் பெற்று வாழ்ந்து உலகிற்கு முன்னோடியாக வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்கிறோம். இப்பண்பாட்டு ஒற்றுமையை பாடப்பொருளுடன் இணைத்தும், பிணைத்தும் ஆசிரியர்கள் கற்றல் அனுபவங்களாக்கி வகுப்பில் வழங்க வேண்டும். பின்வரும் வழிகளையும் பின்பற்றலாம்.

- ◈ குழந்தைகளின் பங்கேற்புடன் பொறுப்புக்களை ஒப்படைத்து, அதன் வழியாக அவர்கள் விரும்பும் வண்ணம், பண்பாட்டு விழாக்களை அவர்களின் குழுக்களைக் கொண்டே வழிகாட்டுதல்.

- ◈ குழந்தைகளிடம் மிகுதியாகக் காணப்படும் ஆர்வங்களை நல்வழியில் ஆற்றுப்படுத்தி, அவர்களின் ஈடுபாட்டுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், மறப்போம், மன்னிப்போம் என்ற மேதக்க போக்கையும் வளர்த்தல்.

- ◈ முகாம்கள், மலையேற்றம், தோட்டம் அமைத்தல். நடைப்பயணம் போன்றவற்றை நடத்திப் பண்பாட்டு உறவுகளை மேம்படுத்தல்.

- ◈ குழுநடனம், நாடகம் நடித்தல், மண் உருவங்கள் செய்தல், குழுவாகப் பாடல், நூல் நூற்றல், துணி நெய்தல் முதலானவற்றை நடத்தி நம் பண்பாட்டை வலுப்படுத்தச் செய்தல்.

- ◈ மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்திப் பண்பாட்டை வளர்க்கலாம். மேலும் விளையாட்டு விதிகளை மதித்து நடந்து கொள்வதுபோல், நம் பண்பாட்டையையும் மதிக்கக் கற்றுக் கொள்ளவும், அதன் வழி நடக்கவும் வழிகாட்டல்.

- ◈ பிற குழந்தைகளுக்கு இடர் ஏற்படும்போது அவர்களிடம் அன்பு பாராட்டி, உதவிட வழி காட்டுவதன் வாயிலாக நம் இந்தியப் பண்பாட்டின் உள் இழையான அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் என்ற அருள் உணர்வை வளர்த்தல். இராமலிங்க அடிகள் "வாடிய பயிரைக் கண்டபோதல்லாம் வாடினேன்" என்று "ஆருயிர்க்கெலாம் அன்பு செயல் வேண்டும்" பாடிய முழுப் பாடல்களை என்றும் மாணவர்கள் உணர்வுடன் பாடிப் பழகிடச் செய்தல். நாமக்கல் கவிஞரின் 'சூரியன் வருவது யாராலே' என்ற பாடலைப் பண்ணோடு இசைக்கப் பழக்குதல்.

- ◈ ஒவ்வொரு நாளும் பலசமயக் கோட்பாடுகளை வலியுறுத்தும் கூட்டு சமய வழிபாட்டுக்கு வழிவகுத்தளித்தல்.

- ❖ பள்ளியின் அமைவிடத்தைச் சூழ்ந்துள்ள தேசிய, மாநில, மாவட்ட மற்றும் கிராம முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு இடங்களுக்குக் களப்பயணம் மேற்கொள்ளுதல்.

- ❖ பிற மதத்தவர்களின் பண்டிகைக் காலச் செயல்பாடுகளின் பின்னணியில் உள்ள சரியான உட்கருத்துக்கள் நோக்கங்களை மாணவ ஆசிரியர்கள் அறிதல், தெளிதல்.

- ❖ தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் பண்பாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

- ❖ பண்பாட்டுக் கருத்துக்களையொட்டிய கருத்தரங்கு, வினாடி–வினா, விவாதம் போன்றவற்றைப் பயிற்சிப் பள்ளிகளில் நடத்துதல்.

- ❖ நம்நாட்டு மகான்கள், சித்தர்கள், ஞானிகள், ஆன்மீகவாதிகள், வரலாற்றுச் சிறப்புப் பெற்றோர் ஆகியோர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கச் செய்தல்.

- ❖ பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிப்பதோடு நின்றுவிடாமல், அவற்றைப் பேணிக் காக்கவும் வேண்டும்.

- ❖ ஆசிரியர் மன்ற நிகழ்ச்சிகளிலும், இலக்கியமன்ற விழாக்களிலும், ஆண்டுவிழாவிலும் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கிராமிய நடனம், கரகம், நாடகம், நாட்டியம் முதலிய கலைநிகழ்ச்சிகளைப் பண்பாட்டுக்கேற்ற வகையில் நடத்துதல்.

# அலகு – 7
# மக்களாட்சி அமைப்பில் அரசியலும், கல்வியும்

## முன்னோக்கு

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க! வாழ்க!! பாரத சமுதாயம் வாழ்கவே
என வாழ்த்திசைத்தார் – பாரதியார்.

மக்களாட்சி நாட்டுக்குக் கல்வி அடிப்படைத் தேவையாகும். மக்களாட்சி மக்களின் முனைப்பான பங்கேற்பையும், விழிப்புணர்வையும், விருப்பார்வத்தையும் தழுவி நிற்கும் ஆட்சி முறையாகும். குடிமக்களின் கல்வியறிவு நாட்டின் குடியரசுக்கு வலுவூட்டுவதாகும். தம்மைத்தாமே ஆண்டு கொள்ள கல்வி ஒரு கிரியா ஊக்கியாக அமைகிறது. கல்வியறிவு பெற்ற மக்களால்தான் உரிமை, கடமை, சமத்துவம், சட்டம், தற்சார்பு போன்ற இறையாண்மைக் கூறுகளைப் பிறர்க்கும் வழங்கித் தாமும் துய்த்து இயல்பானதொரு நல்லாட்சியை நடைமுறைப்படுத்தமுடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்திய அரசின் புதிய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு, மக்களுக்கு வழங்கப்படவேண்டிய கல்வி, இந்திய மக்களின் தலையாய பொறுப்பாக உருவெடுத்தது. அனைவருக்கும் கல்வி வழங்கும் திட்டம் உரிய முன்னுரிமை பெற்றது. இந்தியக் குழந்தைகள் ஒவ்வொருவரும் அடிப்படைக் கல்வி பெற வேண்டியது அவசியமானது. அனைவருக்கும் இலவச, கட்டாயக்கல்வி, வழங்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றிலிருந்து, இன்றுவரை, நம்மால் நமக்காக ஏற்படுத்தப்பட்ட நம்முடைய அரசுகள் இவ்விலக்கை அடையத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, இலக்கை விரைந்து நெருங்கி வருகின்றோம்.


## 7.1. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம்

### 7.1.1. முன்னுரை

இந்தியரின் விடுதலைப் போராட்ட முயற்சிகளாலும், தியாகங்களாலும் இந்தியா 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் விடுதலை பெற்றது. 200 ஆண்டுகால ஆங்கிலேய ஆதிக்கம் முடிவுற்று, 1950 சனவரி 26 இல் பாரதம் உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக மலர்ந்தது. சுதந்திரம் பெற்றதோடு நம் கடமைகள் முடிவுறவில்லை. பெற்ற சுதந்திரத்தின் பயன்களைக் கல்வி அறிவை ஊடகமாக்கி நாம் அனைவர்க்கும் வழங்கி முயன்றுவருகிறோம். சமூகநீதி, சமத்துவம், சமஉரிமை போன்ற மக்களாட்சிக் கொள்கைகளுடன் பாரதக் குடியரசு உலக அரங்கில் உயர்தனி இடத்துடன் பாருக்குள்ளே நல்ல நாடாக விளங்கி வருகின்றமை கண்கூடு.

இந்திய அரசியலமைப்புச்சட்டம் என்பது, “மக்கள் அரசு, ஆட்சிப்பணியாளர், சட்டம் இயற்றுவோர், நீதித்துறை ஆகியோர்க்கு இடையேயுள்ள தொடர்புகளை வரையறுத்து, நிர்ணயம் செய்துள்ளது. இந்திய அரசியல் சட்டம் 22 பகுதிகள், 395 சட்டப்பிரிவுகள், 22 அட்டவணைகள் மற்றும் 9 உட்கூறுகளைக் கொண்டது.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் எட்டு அடிப்படையான கொள்கைகளைக் கொண்டுள்ளது. இந்தியாவின் அரசியல் அக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது.




**செயல்**

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள், உரிமைகள், கல்விச் சமத்துவ வாய்ப்புகள், ஆகியவற்றைத் தேடி எடுத்து ஒரு ஒப்படைப்பாக எழுதி வகுப்பில் கருத்தேற்றம் செய்க.

### 7.1.2. சிறப்பு முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை இறையாண்மையுடைய, பொது உடைமையான, சமயச்சார்பற்ற, சனநாயக, குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்களுக்கு, சமூக சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், அரசியல் சுதந்திரம், நீதி கோரும் உரிமை சிந்திக்க சுதந்திரம், பேசச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்ற, வழிபாடு செய்ய உரிமை ஆகியவற்றையும்

சமுதாயப் படிநிலைகளில் சமவாய்ப்புகளோடு அவரவர்கள் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கான **சமத்துவம்,**

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையோடு தனி நபர் சுயமரியாதைக்குச் சகோதர உணர்வோடு **உறுதியளித்தல்** ஆகியவற்றையும்

அரசியல் அமைப்புச் சட்டப்பேரவையில், இந்த **அரசியல் அமைப்புச்சாசனத்தை உருவாக்கி, ஏற்று, நமக்குநாமே வழங்கிக்கொண்டோம்.**

அனைவரும் சமநிலை, யாவர்க்கும் சமநீதி, எழுத்துரிமை, பேச்சுரிமை, தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கான சமத்துவம் போன்றவை அரசியல் சாசனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

''வாழி கல்விசெல்வம் எய்தி, மனமகிழ்ந்து கூடியே மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே'' எனப் பாரதியார் விடுதலைக்கணவு கண்டு பாடியதைப் போல் வாழ அரசியல் சாசனம் நமக்கு உரிமை வழங்கியுள்ளது.

### 7.1.3. கல்வியும் சமூக நீதியும்

ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வியால் தன்னை உயர்த்திக்கொள்ள, வளர்ச்சியடைய, முன்னேற, சமவாய்ப்பு வழங்குவதைக் குறிப்பது சமூக நீதி. கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் அனைவர்க்கும் சமமானதாக அமைந்திருக்க வேண்டும். மாநிலம், சமூகம், சமயம், சாதிகள் என்று எவ்விதப்பாகுபாடுமின்றி அனைவருக்கும் கல்வி வாய்ப்புகள் திறந்திருக்க வேண்டும்.

### 7.1.4. கல்வியும் சுதந்திரமும்

அரசியல் சட்டத்தால் பேச்சுரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசையும், சமூகக்கேடுகளையும் விமர்சனம் செய்ய அனைவருக்கும் உரிமையுண்டு. விமர்சனம் நம்முடைய தேச ஒற்றுமையை சீர்குலைக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. அறிவியல் பூர்வமாக சிந்தித்துப் பேசும் உரிமையை பயன்படுத்திக் கல்வி ஒரு கருவியாகச் செயல்படுகின்றது. அது போன்றே பிறரின் சுதந்திரமான வழிபாடுகள், நம்பிக்கைகள் போன்றவற்றையும் சரியான முறையில் ஏற்றுக்கொள்ளவும் கல்வி உதவுகின்றது.

### 7.1.5. கல்வியும் சமத்துவமும்

அனைவருக்கும் கல்விச் சமவாய்ப்பு அளிக்காவிடில் அரசியல் அமைப்பு வழங்கியுள்ள சமத்துவம் என்ற கோட்பாட்டை அடையமுடியாது. பிற்பட்ட மற்றும் குறைந்த சலுகை பெற்ற பிரிவினர், தங்களின் நிலையை உயர்த்திக்கொள்ள கல்வி ஒரு வலிமைமிக்க கருவியாகப் பயன்படுகிறது.

### 7.1.6. கல்வியும் உறுதிப்பாடும்

தேசிய ஒருமைப்பாட்டுக்கும், தனி நபர் சுய மரியாதைக்கும் கல்வி உறுதியளிக்க வேண்டும். சமுதாய ஒற்றுமை தனிநபர் கண்ணியம் மற்றும் தேச ஒருமைப்பாடு வளர கல்வி அவசியமாகும். கல்வியின் வாயிலாக சமுதாயத்தையும், தனிநபரையும் இணைத்து உறுதிப்பாட்டை எட்ட வேண்டும்.

## 7.2. அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள், அரசியல் அமைப்புச்சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

உரிமைகளை (i) நியாயப்படுத்தப்பட்ட உரிமைகள் (ii) நியாயப்படுத்தப்படாத உரிமைகள் (Justifiable and Non Justifiable) என இருவகையாக விவரிக்கின்றது. நியாயப்படுத்தப்பட்ட உரிமைகளை நீதிமன்றத்தினால் நடைமுறைப்படுத்த முடியும். அரசியல் அமைப்புச்சட்டத்தின் பகுதி – III இல் அடிப்படை உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. பகுதி – IV இல் வழிகாட்டும் நெறிமுறைகள் உள்ளன. அதில் நியாயப்படுத்த முடியாத உரிமைகளாக வேலைவாய்ப்பு மற்றும் கல்வி இடம் பெற்று உள்ளன.

அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளாவன

| வ.எண். | அடிப்படை உரிமைகள் | சட்டப் பிரிவுகள் |
|---|---|---|
| 1. | வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு | 16 |
| 2. | தீண்டாமை ஒழிப்பு | 17 |
| 3. | சுதந்திரம் | 19 |
| 4. | பத்திரிகை சுதந்திரம் | 19 |
| 5. | ஒன்றுகூட உரிமை (Right to Assemble) | 19 (1) (b) மற்றும் 19(3) |
| 6. | சங்கம் சேர்த்தல் | 19 (1) (c) மற்றும் 19(4) |
| 7. | இடம் பெயர்ந்து வாழ | 19 (1) (d) மற்றும் 19(5) |
| 8. | விருப்பமான தொழில், வியாபாரம், பணி செய்ய | 19 (1) (g) மற்றும் 19(6) |
| 9. | உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு | 12 |
| 10. | கைது செய்வது மற்றும் சிறை வைப்பதினின்றும் பாதுகாப்பு | 22 |
| 11. | சுரண்டலை எதிர்க்கும் உரிமை | 23 மற்றும் 24 |
| 12. | குழந்தைத் தொழிலாளர் தடுப்பு | 24 |
| 13. | சமயச் சுதந்திரம் | 25, 26, 27, 28 |
| 14. | கல்வி மற்றும் கலாச்சார உரிமை | 29 மற்றும் 30 |
| 15. | சொத்துரிமை | 32, 31-A, 31-B, 31-C & 31-D |
| 16. | குறைகளுக்கு அரசியல் சட்டவழியாகத் தீர்வு காணல் | 32 மற்றும் 32 A |

## 7.3. அடிப்படைக் கடமைகள்

அரசியல் சாசனத்தின் 42 ஆவது திருத்தம், சாசன பகுதி IV-A மற்றும் சட்டப்பிரிவு 51-A இல் இந்திய குடிமக்களுக்கான பத்து அடிப்படைக் கடமைகளைக் கொண்டு வந்துள்ளது. இந்திய மக்கள் தன்னுடைய செயலிலும், நடத்தையிலும் பின்பற்ற வேண்டிய நடத்தை விதிகளை இது குறிப்பிடுகின்றது.

- ◈ அரசியலமைப்பை அங்கீகரித்தல், தேசிய கீதம், தேசியக்கொடி ஆகியவற்றிற்கு மரியாதை செலுத்துதல்
- ◈ விடுதலைப் போராட்டத்தின் போது ஏற்றுக்கொண்ட உன்னதமான இலட்சியங்களைப் பின்பற்றல், போற்றுதல்.

- ◈ இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு மற்றும் ஒன்றுபட்ட நாட்டுணர்வு ஆகியவற்றைப் பாதுகாத்தல்
- ◈ ஜாதி, மத, இன, மொழி வேறுபாடுகளின்றிச் சகோதரத்துவத்தை வளர்த்தல்
- ◈ இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்
- ◈ காடு, ஆறு, ஏரி, மிருகங்கள் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் வளர்த்தல், அனைத்து உயிரினங்களிடமும் அன்பு காட்டுதல்
- ◈ தொழில், அறிவியல், விவசாய ஆராய்ச்சிகளில் பங்கு பெறுதல்
- ◈ பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், வன்முறை சிந்தனை, செயல்களை உறுதியோடு தவிர்த்தல்
- ◈ நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் ஈடுபடுதல்

## 7.4. சமதர்மம்

சமதர்ம சமுதாயத்தைத் தோற்றுவிக்க இந்தியா தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. நம்முடைய அரசியல் அமைப்புச்சாசனத்தின் முன்னுரையில், நம் நாட்டை, இறையாண்மையுடன் கூடிய சோசலிச, மதச்சார்பற்ற நாடாக அறிவித்து இருக்கின்றோம். பிறப்பு, சமூகம், பொருளாதாரம் போன்றவற்றால் யாரும் பின் தங்கிவிடாது அனைவரும் சமம் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்தியர் என்ற உணர்வு, அன்பு, கருணை ஆகியவற்றை அனைவரிடமும் ஏற்படுத்துவதே சமதர்மத்தின் நோக்கமாகும்.

## 7.5. மதச்சார்பின்மை

''மக்கள் மீது எவ்வித மதக் கோட்பாடுகளையும் திணிப்பதற்குப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதையே மதச்சார்பற்ற நாடு என்பது குறிப்பிடுகிறது'' என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.

''மதச்சார்பின்மை என்பது மத நம்பிக்கை இன்மையைக் குறிக்காது. எல்லா மதக்கோட்பாடுகளையும், மதங்களையும் மதிக்கின்றோம்'' என்பதைக் குறிப்பிடுகின்றது என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார். காந்தியடிகள்'' மற்ற மதக்கோட்பாடுகளையும், என்னுடைய மதக்கோட்பாடுகளைப் போன்றே மதிக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளமை பின்பற்றத்தக்க தொன்றாகும்.

அரசியல் சட்டப்பிரிவு 25 மற்றும் 26ன்படி குடிமக்கள் தாங்கள் விரும்பும் மதக்கோட்பாடுகளைப் பின்பற்ற உரிமை உள்ளது. அரசிற்கு என்று தனியான மதம் ஏதுமில்லை. ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு முன்னுரிமை வழங்கவோ, அவர்களின் மத நம்பிக்கை காரணமாக யாரையும் வேறுபடுத்திப்பார்க்கவோ அரசு முயலக்கூடாது. அரசுப் பணியில் சேர யாருக்கும் மதம் தடையாக இருத்தல் கூடாது.

## 7.6. மக்களாட்சி

மக்களாட்சி, ''டேமோஸ்'' (Demos) மக்கள் மற்றும் ''கிரேட்டியா (Kratia) '' – அதிகாரம் – என்ற இரு கிரேக்க சொற்களில் இருந்து பெறப்பட்டதாகும். அதாவது மக்களுக்கே அதிகாரம் என்பதை இச்சொல் குறிப்பிடுகிறது.

ஆப்ரகாம்லிங்கன் ''மக்களுக்காக, மக்களால், மக்களே நடத்தும் ஆட்சி'' மக்களாட்சி என்று வரையறுத்தார்.

மக்களாட்சி எல்லாருக்கும் பேச, விமர்சிக்க உரிமை வழங்கியுள்ளது. சகிப்புத்தன்மைக் கோட்பாட்டின் அடிப்படையில், பல கருத்துக்களை, கொள்கைகளை மக்கள் பின்பற்ற, அமைதியான

முறையில் வாழ சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகியவற்றை முன் நிறுத்தி, செயல்பட வழி செய்துள்ளது. மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்தின்படி இயங்குகிறது.

**செயல்**

இந்தியா ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக நாடு. அதன் பொருள் அனைவரின் நம்பிக்கைகளும் மதிக்கப்படவேண்டும் என்பதாகும். அதே நேரத்தில் இந்திய அரசு எந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கைக்கும் முன்னுரிமை தராது. எனவே, மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, அனைத்து மக்களுக்கும் மதிப்பு தரும் பண்பைக் குழந்தைகளிடையே வளர்க்க வேண்டியதே ஆசிரியரின் தலையாய கடன்.

– தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005.

## 7.7. குடியாட்சி

குடியாட்சியில் கூட்டாக வாழ, வளர அனைவருக்கும் சம உரிமையுண்டு. ஒரு குடியாட்சியில் குடிமக்கள், தவறுகளில் இருந்து உண்மையை வேறுபடுத்திப் பார்ப்பவராகவும், பிரச்சாரங்களிலிருந்து உண்மை விபரங்களை அறிந்து கொள்பவராகவும், வெறித்தனமான ஆபத்தை நிராகரிப்பவராகவும், புத்திசாலித்தனமான நம்பகத்தன்மையும், நல்ல புரிதலும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இத்தன்மைகள் மாணவர்களிடம் மலரும் வண்ணம் ஆசிரியர்களாகிய நாம் குழந்தைகளை வழிநடத்த வேண்டும்.

**செயல்**

ஒவ்வொரு தனிநபரின் மதிப்பையும், கௌரவத்தையும் அடிப்படை நம்பிக்கையாகக் கொண்டதுதான் ஜனநாயகம். ஒவ்வொரு தனி நபரின் ஆளுமையையும் முழுமையாக வளர்ச்சி பெறச் செய்வதே ஜனநாயகக் கல்வியின் குறிக்கோள். அதாவது ஒருவர் தனித்தவராக வாழ்தலோ வளர்தலோ ஆகாது. தன் சகமனிதர்களோடு கனிவோடும், ஒத்திசைவோடும், பயன் தரும் வகையிலும், வாழ்வதற்குத் தேவையான திறன்களைக் கொடுக்கும் கல்வியே, கல்வியாக இருக்க முடியும்.

– மேல்நிலைக்கல்விக்கான குழு அறிக்கை 1952 – 53 (பக்கம் 20)

## 7.8. வாக்குரிமை

இந்தியக் குடிமக்களாகிய நாம் இந்தியாவை இறையாண்மையுடைய குடியரசாக அறிவித்து இருக்கின்றோம். அரசியல் சட்டப்பிரிவு 326, வயது வந்தோருக்கான வாக்குரிமை (Adult suffrage) அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர் என எடுத்தியம்புகிறது. ஒருவருக்கு ஒருவாக்கு – ஒரு மதிப்பு என்ற அரசியல் சமத்துவக்கோட்பாட்டின் அடிப்படையில் இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்கியவர்கள், வயது வந்தோருக்கான வாக்குரிமையை வழங்குவதோடு நின்றுவிடாமல் சுதந்திரமாக தேர்தல் நடைபெறவும், சுதந்திரமான, தற்சார்புடைய அதிகாரம் படைத்த இந்தியத் தேர்தல் ஆணையம் என்ற அமைப்பால் தேர்தல்கள் முறைகேடின்றி நடைபெற வேண்டுமெனவும் விரும்பி அதற்கென ஓர் அமைப்பையும் ஏற்படுத்தினர். இன்று வரை நடைபெற்ற தேர்தல்களில் பணி மற்றும் அதிகார அச்சுறுத்தல்களின்றி இந்திய மக்கள் நம் நாட்டின் மிகப்பெரிய இறையாண்மையைக் கட்டிக் காத்து வருகின்றனர்.

## 7.9. மக்களாட்சி முறையை உணர்ந்து பாராட்டுதல்

மக்களாட்சி முறையை உணரச் செய்து புரிந்து பாராட்டுமாறு செய்வதாகவும் கல்வி அமைதல் வேண்டும். மொழி, இனம், சமயம், மதம் போன்றவற்றால் நாம் வேறுபட்டு இருப்பினும், மக்களாட்சியை வளர்க்க நம் உணர்வுகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

நம் நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்வதோடு, பிற நாடுகளின் மதிப்புக்கள், கலாச்சாரம், மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை உணர்ந்து பாராட்டிப் பன்னாட்டு உணர்வையும் வளர்க்கவேண்டும். கூட்டுறவு மனப்பான்மை, சகோதரத்துவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட உறவுகளைப் பள்ளிகளில் வளர்க்கவேண்டும். சுதந்திரம் என்பது நம் உயிர் மூச்சு. பள்ளிகளில் சுதந்திரமான கற்றல் நிகழவும், குழந்தைகள் எவ்வித நெருக்கடியுமின்றித் தெளிவு பெறக் கேள்விகள் கேட்கவும் தம் கருத்துக்களை வெளியிடவும், விமர்சனம் செய்யவும் வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

குழந்தை, பல கல்விப் படிநிலைகளைக் கடந்து வளர்ந்து நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்க இருப்பதால் ''சுதந்திரமான கட்டுப்பாடு'' என்ற கோட்பாட்டிற்குச் சிறப்புக் கவனம் செலுத்திப் பயிற்ற வேண்டும். தன்கட்டுப்பாடு, தன் ஒழுக்கம் ஆகியவற்றைக் குழந்தைகள் பின்பற்றி, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு வழிகாட்ட வேண்டும்.

## 7.10. கல்வியும் ஐந்தாண்டுத்திட்டங்களும்

''நாடு முழுவதுமான சமூக, பொருளாதார முன்னேற்றத்தையறிய, குறியீடாக இருப்பது தொடக்கக் கல்வியின் வளர்ச்சியே'' ஆகும் என்று ஜே.பி. நாயக் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். தொடக்கக்கல்வியின் வளர்ச்சிக்கும், முக்கிய கல்விப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சிறப்பு முன்னுரிமை வழங்கவும், ஐந்தாண்டுத்திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### 7.10.1. முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் (1951 – 56)

அனைவருக்கும் கட்டாயக்கல்வி வழங்கவும், ஆதாரக்கல்வி முறையைத் தேசிய முறையாக ஏற்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. தொடக்கப்பள்ளி 210 ஆயிரத்திலிருந்து 278 ஆயிரமாகவும், மாணவர் சேர்க்கை 192 லட்சம் குழந்தைகளிலிருந்து 251 லட்சம் குழந்தைகளாகவும் ( I - V வகுப்புகள் மட்டும்) ஆசிரியர்கள் எண்ணிக்கை 5,38,000 இலிருந்து 6,91,000 ஆகவும், கல்விச்செலவு ரூ. 85 கோடியாகவும் உயர்த்தப்பட்டன.

### 7.10.2. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1956 – 60)

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், ஆதாரக்கல்வியில் ஆய்வுகள் செய்வதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. பள்ளிகள் எண்ணிக்கை 3,30,000 ஆகவும், குழந்தைகள் எண்ணிக்கை (1 – 5 வகுப்பு) 251 இலட்சமாகவும், ஆசிரியர் எண்ணிக்கை 742 ஆயிரமாகவும், கல்விச் செலவு ரூ. 95/– கோடியாகவும் உயர்ந்தது.

### 7.10.3. மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் (1961 – 65)

மைய அரசு 11 – 14 வயதுள்ள குழந்தைகளுக்கும் கல்வி வாய்ப்புகளை வழங்க முடிவு செய்தது. ஆகவே 8 ஆண்டு தொடக்கக்கல்வி இரண்டாக (1) தொடக்கக்கல்வி – 5 ஆண்டுகள் (2) நடுநிலைக்கல்வி – 3 ஆண்டுகள் எனப்பிரிக்கப்பட்டது.

i) தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 4,00,000
ii) 1 – 5 வகுப்பில் சேர்க்கை 505 லட்சம் குழந்தைகள்
iii) தொடக்கப்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை 1050 ஆயிரம்
iv) கல்வி நிதி ஒதுக்கீடு ரூ. 178/– கோடி என உயர்ந்தது.

### 7.10.4. நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் (1968 – 1973)

கல்விக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு ரூ. 239/– கோடியாக உயர்ந்தது. 6 – 11 வயது குழந்தைகளில் 90.2 விழுக்காட்டினரும், 11 – 14 வயது குழந்தைகளில் 47.4 விழுக்காட்டினரும் பள்ளியில் சேர்ந்து படித்தனர்.

### 7.10.5. ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம் (1974 – 79)

கல்விக்கான மத்திய நிதி ரூ. 855/– கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதாவது கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 47 % தொடக்கக் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. முக்கிய விரிவாக்க வசதிகள் :

- ◈ 6 – 11 வயது குழந்தைகளில் 97% க்கும் 11 – 14 வயது குழந்தைகளில் 41 % க்கும் பள்ளி வசதிவாய்ப்புகள் முழுமையாக வழங்கப்பட்டன.
- ◈ 78 லட்சம் குழந்தைகள் (1 1 – 14 வயது ) பகுதி நேரக் கல்வி பெற வசதி செய்யப்பட்டது.
- ◈ கல்வியில் தேக்கமும் , கழிவும் குறைய முயற்சிகள் எடுக்கப்பட்டன.

### 7.10.6. ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் (1980 – 85)

அனைவருக்கும் தொடக்கக்கல்வி வழங்குவதற்குப் பல்வேறு செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. 1–5 வகுப்புகளில் 100 சதவீத சேர்க்கை நடத்த முடிவெடுக்கப்பட்டது. 95.2% குழந்தைகள் 5–10 வயதிலும், 50.3 % குழந்தைகள் 11 – 14 வயதிலும் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். கல்வியின் தரத்தை உயர்த்தப் பரவலான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இவைகள் தவிர, கல்வியில் பின் தங்கியிருந்த ஒன்பது மாநிலங்களில் முறைசாராக் கல்வி வழங்க, தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு ரூ. 25 கோடி சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இயல்பான குழந்தைகளுடன், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளையும் இணைத்துக் கல்வி வழங்க 20 ஆண்டுத்திட்டம் (1980 – 2000) தீட்டப்பட்டது. வழங்கப்படும் கல்வியை உறுதிப்படுத்தவும், மேற்பார்வையிடவும் சமுதாயப் பங்கேற்பிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.10.7. ஏழாவது ஐந்தாண்டுத்திட்டம் (1985 – 90)

21 நூற்றாண்டில் எதிர் நோக்கும் சவால்களைச் சந்திக்க, நாட்டைத் தயாரிக்க கல்விப் புனரமைப்பு செய்ய இத்திட்டம் வகுக்கப்பட்டது. பின்வரும் அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

- ❖ அனைவருக்கும் தொடக்கக் கல்வி
- ❖ 15 – 35 வயது பிரிவினரிடையேயுள்ள எழுத்தறிவின்மையை நீக்குதல்
- ❖ கல்வியின் பல நிலைகளில் தொழிற்கல்வி மற்றும் திறன் பயிற்சி
- ❖ அறிவியல், சுற்றுச்சூழல் மற்றும் நன்மதிப்புக்களோடு இணைந்த கல்வி, கல்வியை நவீன மயமாக்கல், கல்வியின் தரத்தை உயர்த்துதல்
- ❖ தொழில் நுட்பக்கல்வியின் பழமைகளைக் களைந்து, புதுமையாக்குதல்
- ❖ தொலைதூர மற்றும் முறைசாராக்கல்விக்கு முக்கியத்துவம்
- ❖ உயர்கல்வியை வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தல்.

### 7.10.8. எட்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1992 – 97)

இத்திட்டத்தின்படி 5.61 கோடிக் குழந்தைகளைத் தொடக்கக் கல்வியில் சேர்க்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் 4.38 கோடி குழந்தைகள் முறையான பள்ளிகளிலும், ஒரு கோடி குழந்தைகள் முறைசாராக் கல்வி மையங்கள் வழியாகவும் சேர்க்கப்பட்டனர். பிற குழந்தைகள் திறந்த நிலைக் கற்றல் வழியாக உயர் தொடக்கப் பள்ளியில் இணைக்கப்பட்டனர்.

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்திற்கு (NCTE), ஆசிரியர் கல்வியின் தரத்தை மேம்படுத்த, பொறுப்பு வழங்கப்பட்டது. இது தவிர, முதியோர் கல்வி, இடைநிலைக்கல்வி, தொழிற்கல்வி, பல்கலைக்கழக மற்றும் உயர் கல்விகளும் வளர்ச்சி பெற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.10.9. ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம் (1997 – 2002)

இத்திட்டம் தொடக்கக்கல்விக்கும், தகவல் தொழில்நுட்பக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்தது. ஊராட்சி ஒன்றிய நிறுவனங்களுக்கு, திட்டங்களை நடைமுறைப்படுத்த அதிகாரம் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியது. கல்லூரிக்கல்விவரை அனைத்துப் பெண்களுக்கும் இலவசக் கல்வி வழங்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம், அரசியல் அமைப்புச்சட்டம் 45 ஆம் பிரிவின் கீழ் ஐந்தாம் வகுப்புவரை இலவசக் கட்டாயக்கல்வி வழங்கிட முக்கியத்துவம் வழங்கவும், 8 ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் கல்வி வழங்கவும் திட்டம் தீட்டப்பட்டது.

## 7.11. மனித உரிமைகள்

### 7.11.1. முன்னுரை

அறியாமை என்பது இருட்டு; அறிவு பெறாமலிருப்பது ஓர் இடர். ஒவ்வொரு மனிதனும், தான் மனிதன் என்பதையும், மனிதத்தன்மையோடு வாழவேண்டும் என்பதையும் உணர வேண்டும். ஒவ்வொருவரும், தான் பெற்றிருக்கும் உரிமைகள் மற்றும் சலுகைகள் பற்றிய அறிவு பெற்றிருப்பதோடு, அதனை உணர்வோடு உறுதி செய்து கொள்ளவும் வேண்டும். பிறருடைய உரிமைகளில் தலையிடக்கூடாது என்பதையும் உணர வேண்டும். மனிதன் கல்வியின் வழியாகத் தன் விழிப்புணர்வு மற்றும் பகுத்தறிவைப் பயன்படுத்தி, தன் நன்மைகளையும், இறையாண்மைத் தன்மையையும், உரிமைகளையும் காத்துக்கொள்ள வேண்டும்.

''உரிமை என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாட்டால் நடைமுறைப்படுத்தப்படும் செயலாகும் '' என்று போசாங்கே கூறியுள்ளார். மனித உரிமை எனப்படுபவை '' இந்திய அரசியல் சாசனம் எடுத்தியம்பும் அடிப்படை உரிமைகளாலும், அகில உலக உடன்படிக்கைகளாலும், உறுதியளிக்கப்பட்ட தனி நபரின் மாண்பு, சமத்துவம் மற்றும் சுதந்திரம் தொடர்பான உரிமைகள்'', ஆகும்.

### 7.11.2. மனித உரிமைகள்

**குழுக்களின் உரிமைகள்**

- ◈ வேலைவாய்ப்புக்கான வழிகாட்டல், பயிற்சி பெறுதல்
- ◈ பதவி உயர்வு, சம வாய்ப்பு, பாதுகாப்பான, சுகாதாரமான பணிச் சூழல்
- ◈ பணி நீக்கம் செய்யப்படும் முன் முன்னறிவிப்புப் பெறுதல்
- ◈ வரையறுக்கப்பட்ட வேலை நேரத்திற்கான உரிமை
- ◈ நியாயமான ஊதியம் பெறுதல்

**சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்**

- ◈ அரசியலில் கலந்துகொள்ளும் உரிமை
- ◈ கருத்துச் சுதந்திர உரிமை
- ◈ சமயம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் சுதந்திரம்

**பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள்**

- ◈ கலாச்சார வாழ்வில் பங்கு பெற உரிமை
- ◈ கல்வி பெற உரிமை
- ◈ தொழிற்சங்கம் அமைக்க உரிமை
- ◈ வேலை பெற உரிமை

## 7.11.3. குழந்தைகளின் உரிமைகள்

குழந்தைகள் சமுதாயத்தில் சமுதாயத்தின் வழியாகச் சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றனர். சமுதாயத்தைப் பற்றியும், தான் வாழும் உலகத்தைப்பற்றியும் குழந்தை நன்கு புரிந்துகொள்ளும் வகையில் கல்வி வழங்கப்படவேண்டும். உலகத்தோடு குழந்தை தன்னைத் தக அமைத்துக்கொள்ள வழிகாட்டும் ஆசிரியர், முதலில் குழந்தைகளின் உரிமைகளைப் புரிந்துகொள்ளவும், மதிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

- ◈ ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெறும் உரிமை
- ◈ இன்றைய நாள் வரையிலான கல்வியைப் பெற உரிமை
- ◈ உரிய சூழலில் பள்ளிக்கல்வியைப் பெறும் உரிமை
- ◈ பள்ளிக்கும், வீட்டிற்கும் தொடர்பு ஏற்படுத்தவும், பள்ளிக்கும், எதிர்கால வாழ்விற்கும் தொடர்பை ஏற்படுத்தவும், வளர்க்கவும் கூடிய கல்வியைப் பெறும் உரிமை
- ◈ தன்னுடைய கல்வித்தேவைகளை நிறைவு செய்துகொள்ளத் தேவையான நிதியை எல்லா வழிகளிலும் பெறும் உரிமை
- ◈ நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை
- ◈ கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதல் உடல் நலம் பேணல் போன்றவற்றில் உரிமை
- ◈ சமுதாய வாழ்வில் பங்குபெறவும், தான் வாழும் சமுதாயத்தைப் புரிந்துகொண்டு பயன்படுத்தும் உரிமை
- ◈ ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற்றிட உரிமை

**செயல்**

குழந்தைகளின் உரிமைகளை ஆசிரியர்கள் சிறிதும் பிழைபடாமல் வழங்குகின்றனர். 'வழங்கவில்லை' என்ற தலைப்பில் வகுப்பில் பட்டி மண்டபம் நடத்திக் கருத்துகள் சேகரித்துப் பதிவில் வைத்து அகமதிப்பீட்டுக்குள்ளாக்குக.

## 7.11.4. பெண்களுக்கான உரிமைகள்

''ஒரு ஆணுக்கு வழங்கப்படும் கல்வி அவன் ஒருவனுக்கும், பெண்ணிற்கு வழங்கப்படும் கல்வி அவள் குடும்பம் முழுமைக்குமாகும்'' என்று பண்டித நேரு குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்கு அனைத்துத் துறைகளிலும் சம உரிமை, சம வாய்ப்பு வழங்க வேண்டும்.

- ◈ சமமான கல்வி பெறும் உரிமை
- ◈ பொருளாதார சுதந்திரம், வேலைவாய்ப்பு, பணிநிலை ஆகியவற்றில் உரிமை
- ◈ முடிவுகள் எடுப்பதில் பங்கேற்கவும், தலைமைப் பொறுப்பை ஏற்கவும் உரிமை.
- ◈ சட்டத்தின் முன் சமம் எனும் உரிமை
- ◈ சம ஊதியம் பெறும் உரிமை
- ◈ தரமான உடல் பேணல், கவனிப்புப் பெற உரிமை.

‘‘எப்போது பெண்கள் மதிக்கப்படுகின்றார்களோ, அப்போது கடவுள் மகிழ்விக்கப்படுகிறார். எங்கு, பெண்கள் பெருமைப்படுத்தப்படுவதில்லையோ, அங்கு நம்முடைய சமயச்சடங்குகள் எவ்வித பயனும் பெறாது’’ என்று மனு தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களின் கல்லாமையை நீக்கவும், தொடர்ந்து அவர்கள் கலவியைப் பெறவும், தடையாகவுள்ளவைகளைத் தகர்க்க வேண்டும். தொழில்சார்ந்த கல்வி மற்றும் உயர் தொழிற்கல்வி நிலைகளில் பால் அடிப்படையில், வழிவழியாகப் பின்பற்றி வந்த பாகுபாட்டு நிலைமைகளை மாற்றி, பெண்களும் இக்கல்வியைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**செயல்**

பெண்ணுரிமை எனப்படுவது ஆண்களால் வழங்கப்படும் கொடை அன்று அரசாங்கங்களால் வழங்கப்படும் சலுகையுமன்று. ஆணுக்கு உரிமை பெறும் அருகதையை எது வழங்கியுள்ளதோ அதுவே தான் பெண்ணுக்கும் அவ்அருகதையை வழங்கியுள்ளது. பெண்ணுக்கு உரிமையைப் பிறரே தர வேண்டும் என்பது சிந்தனைச் சீரழிவு. மனித சுதந்திரம் அருளின் ஊற்று; கோரிப்பெறப்படும் சலுகை அன்று; பெண்ணுரிமை இயற்கையால் சாசனம் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் பெண்களுக்குச் சமமான ஊதியம், வாய்ப்புகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன. தங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள பெண்களே முன்வரவேண்டும். பெண்களின் முன்னேற்றம், நலன், சமூகச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட பெண்களைப் பற்றி, வகுப்பில்எடுத்துரைக்க வேண்டும். தங்களின் மகன் மற்றும் கணவரின் வெற்றிக்கு, வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஊக்கமளித்த வீர சிவாஜியின் தாய் ஜீஜிபாய், துளசிதாசரின் மனைவி ரத்னாவளி, பிரான்ஸ் நாட்டு ஜோன், ஜான்சிராணி, ராணிலட்சுமிபாய், வீரமங்கை வேலுநாச்சியார் போன்றவர்களைப் பற்றி எடுத்துரைத்துப் பெண்களை மேலும் ஊக்கப்படுத்த கல்வி உதவ வேண்டும். உலக நல்வாழ்விற்காக, தன் நாட்டிறக்காக, தன் குடும்பத்துக்காகத் தங்களின் வாழ்க்கையைத் தியாகம் செய்த கோடானுகோடி இந்தியத் தாய்களை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

**செயல்**

பின்வரும் கருத்துக்களை மாணவர் விருப்புக்கேற்ப வழங்கி ஒரு கருத்தரங்கம் நடத்திப் பெண்ணுரிமை நடைமுறைப்பாட்டுக்கு உந்தம் வழங்குக. ‘‘ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கு இயற்கை வழங்கியுள்ள சிறப்பு அம்சங்கள்’’, பெண்ணுக்கு ‘‘உரிமையை ஆண்களா பெற்றுத்தர வேண்டும் ?’’ “பெண்” உரிமையை எப்பொழுது இழந்தாள் ? இப்பொழுது பெறுவதற்கு ? ?’’ ‘‘பெண்ணுரிமை என்பது தான் என்ன ?’’ ‘‘ஆண் பெண் பாகுபாடுகளின் உயிரியல் அடிப்படை’’ ஆணோ பெண்ணோ ‘‘விழிப்புணர்வு தான் உரிமையின் விலை’’ ‘‘பெண்ணுரிமை ஆணுரிமை என்பன தகுதிக்கே பரிசு’’ ‘‘பெண்ணுரிமையை நிலைநாட்ட “பெண்கள் என்ன செய்ய வேண்டும்” ஆண்கள் என்ன செய்ய வேண்டும் ‘‘பெண்ணுரிமை மறுப்பு மனித பலவீனம்’’ பெண்ணுரிமை வேட்டல் தேனீ இனிப்பைப் பிறரிடம் கேட்டுப்பெற முயல்வதொக்கும்.

## 7.11.5. தாழ்த்தப்பட்டோருக்கான கல்வி

சமூக, பொருளாதார மற்றும் பிற காரணங்களால் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்களுக்கு எல்லா நிலைகளிலும் சம வாய்ப்புக்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- சாசனப் பிரிவுகள் 15, 16, 17, 18, 36 மற்றும் 46 ஆகியவை சமய, வகுப்பு, பிரிவுகள் அடிப்படையில் வேறுபாடு கூடாது என்று உறுதியளித்துள்ளது.
- அத்தகு குழந்தைகளுக்கு 14 வயது வரை பள்ளிகளில் கல்வி கற்க ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

- தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தல்
- விடுதிகளில் தங்கிப் பயில வசதிகள் வழங்குதல்
- பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்பு – நிலமற்றவர்களுக்கு அரசு நிலம் வழங்கி வருகிறது.
- அரசுப் பணிகளில் குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு
- கல்வியில் சம வாய்ப்பு – கல்வி, புத்தகம், சீருடை, உறைவிடம் இலவசம்
- தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி பெற ஏதுவாகப் பள்ளிக்கூடங்கள், விடுதிகள் குழந்தைக் காப்பகங்கள், முதியோர் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தித் தருதல்.

## 7.11.6. பழங்குடியினருக்கான வாய்ப்பு

பல நூற்றாண்டுகளாகத் தங்களுடைய வாழ்க்கைமுறையை மாற்றி அமைத்துக்கொள்ளாது வாழ்ந்து வரும் இவர்கள் சில சிறப்பு இயல்புகளைப் பெற்றுள்ளனர். பல குடும்பங்கள் ஒன்றிணைந்து குழுவாக வாழ்தல், பொதுவான பெயர், ஓரிடத்தில் வாழ்தல், தங்கள் திருமணம் மற்றும் தொழில் போன்றவற்றில் குறிப்பிட்ட கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழ்தல் போன்ற பல சிறப்புக்கள் மரபுக்குடியினரிடம் காணப்படுகின்றன என டாக்டர் மஜூம்தார் குறிப்பிடுகின்றார்.

இவர்கள் சமுதாயத்திடமிருந்து மிகக் குறைவாகப் பெற்றுக்கொண்டு அரசுக்கும் சமூகத்திற்கும் தொல்லைதராமல் ஒதுங்கி வாழ்கின்றனர். இவர்கள் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் வழங்கும் உழைப்பும் உற்பத்திகளும் ஏராளம் என்றாலும் இவர்தம் வாழ்வில் நிம்மதி, சுகம் என்பன எட்டாக் கனவாகவே உள்ளன. அவர்கள் மற்றெவரையும் போல் எல்லாத் தகுதிகளுக்கும் உரியவர்கள் இவர்களுக்குக் கல்வியளித்து, உரிமைகளோடு நிம்மதியாகவும் நலமாகவும் வாழ நாம் ஆவன செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

- ◈ இவர்கள் வாழும் பகுதிகளில் தொடக்கப்பள்ளி ஏற்படுத்த முன்னுரிமை, கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு.
- ◈ குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உருவாக்கப்படும் கலைத்திட்டமும், கற்பித்தல் நூல்களும், தொடக்கத்தில் அவர்தம் மொழியிலேயே அமைந்திடல் வேண்டும். பிறகே வட்டார மொழிக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட வேண்டும்.
- ◈ உண்டு, உறையும் பள்ளிகள், விடுதிகள் அதிக அளவில் நிறுவப்படுதல்
- ◈ தகுதி பெற்ற, கற்ற பழங்குடி இளைஞர்கள் தத்தம் பகுதிகளிலேயே ஆசிரியர்களாகப் பணியாற்ற ஊக்குவித்தல்
- ◈ பழங்குடியினரின் செறிவான கலாச்சாரத் தனித்தன்மைகளையும், அவரிடையே காணப்படும் மிகுதியான உழைப்பு, உருவாக்கும் திறன், படைப்பாற்றல் போன்றவை வெளிப்படும் வண்ணம் கல்வியின் எல்லா நிலைகளிலும் கலைத்திட்டம் உருவாக்கப்படுதல்.
- ◈ அவர் தம் சிறப்புத் தேவைகளையும், வாழ்க்கை முறைகளையும் கருத்தில் கொண்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் உருவாக்குதல்.
- ◈ ஐந்தாண்டுத்திட்டங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் நலத்திற்காகப் பல சிறப்புத் திட்டங்களை அரசு இயற்றிச் செயல்படுத்தி வருகின்றது.

## 7.11.7. சிறுபான்மையினருக்கான வாய்ப்புகள்

சமூக நீதி மற்றும் சமத்துவம் போன்றவற்றின் அடிப்படையில், சிறுபான்மையினர் வளர்ச்சிக்கு அரசியலமைப்பு உத்தரவாதம் அளித்துள்ளபடி, தமக்குரிய பள்ளிகளைத் தாமே நிர்வகிக்கும் உரிமை வழங்கப்படுகின்றது. அவர் தம் மொழியையும், கலாச்சாரத்தையும் காக்கும் செயல்களும் இவற்றுள் அடங்கும். தேசிய லட்சியங்களையும், நோக்கங்களையும் ஒருமைப்பாட்டையும் விட்டுத்தராமல் இவர்களின் பள்ளிகள் நடைபெற்று மேன்மை காண வேண்டும் என்பதே அரசின் நோக்கம்.

### 7.11.8. சிறப்புக் கவனம் தேவைப்படுவோருக்கான வாய்ப்புகள்

உடல் மற்றும் மனதால் சமூகத்தில் பின் தங்கிய குழந்தைகளைப் பிறருடன் சமமாக நினைப்பது முக்கியமானதாகும். தம், வாழ்வை இவர்கள் நம்பிக்கையோடும், திடத்தோடும் எதிர்கொள்ளத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வழிகாட்ட வேண்டும்.

- ◈ இயக்கக் குறைபாடுகள் அல்லது சிறு ஊனமுடைய குழந்தைகளின் கல்வி பிற இயல்பான குழந்தைகளின் கல்வியோடு இணைந்து இருக்கும்படி செய்தல்.
- ◈ மிகவும் கடுமையான உடல் ஊனமுற்றோருக்கு மாவட்டத் தலைநகர்களில் விடுதியோடு இணைந்த சிறப்புப்பள்ளிகளை நிறுவிப் பராமரித்தல்.
- ◈ தொழிற்கல்விப் பயிற்சி அளித்தல்
- ◈ ஆசிரியர்களுக்குப் புத்துணர்வு மற்றும் நெறிப்பாட்டுப் பணியிடைப்பயிற்சி.

**செயல்**

அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் அரசு முயற்சிகளில், ஆசிரியர்கள் எவ்வாறெல்லாம் தம்மை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றியதோர் உறுதிமொழியுரையினை இருபக்க அளவில் தயாரிக்க.

### முடிவுரை

இந்தியா சிறப்புமிக்க வரலாற்றையும், மிக உயர்ந்த பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் சனநாயகப் பண்புகளையும், சமத்துவ நோக்கையும் கொண்ட மக்கள் வாழும் சுதந்திர நாடு. இங்கு எல்லோருக்கும் சமூக நீதியும், சம வாய்ப்புகளும் கிடைக்கச் செய்ய கல்வி மிக அவசியமானது. பெண்களின் சக்தியை நம் நாடு முழுமையாகப் பெற, கல்வியில் உரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அரசியல் அமைப்புச் சாசனம் நமக்கு வழங்கியுள்ள உரிமைகளையும் கடமைகளையும் முறையாகப் பயன்படுத்திப்பேணி “தண்ணீர் விட்டா வளர்த்தோம், சர்வேசா ? இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம் “ என்று பாரதி பாடியது போல், நம் நாட்டைப் பாரினில் இன்னும் உயர்த்திட ஆசிரியர்களாகிய நாம் முழு மூச்சுடன் தேவைக்கேற்ப முனைந்து கடனாற்ற உறுதிபூணுவோம்.

இந்திய அரசியல் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அனைவருக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் போன்ற உறுதிப்பாடுகள் வழங்க நமக்கு நாமே செயல்பட்டு வருகின்றோம். அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கவும், எம்மதத்தையும் பின்பற்றவும், பிறர் மதக் கொள்கைகளில் தலைமையிடாமலும் உலகிற்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டி வருகின்றோம். மக்களாட்சி முறையை உணர்ந்து பாராட்டி, நம் தேசத்தைப் பற்றியும், பிற தேசங்கள் பற்றியும் அறிவுப்பூர்வமாக உணர்ந்து பாராட்டி உறவுகளைப் பலப்படுத்தி வருகின்றோம். பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சிறப்புக் கவனம் வேண்டுவோர் ஆகியோருக்கு கல்வியில் முன்னுரிமை வழங்கிட அரசு முனைப்போடு செயல்பட்டு வருவதற்கு மேன்மேலும் வலுச்செய்வோம்.

# அலகு– 8
# தொடக்கக் கல்வியின் சவால்கள்

## 8.1. முன்னுரை

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சி மக்களின் கல்வியறிவைச் சார்ந்தே அமைந்துள்ளது. எனவே உலக நாடுகள் அனைத்தும் தம் மக்கள் அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன. முன்னேறிய நாடுகளில் நூறு சதவீதம் எழுத்தறிவு மக்களிடம் காணப்படுகிறது. வளரும் நாடுகளில் கல்வி அறிவு பெற்றோரின் விழுக்காடு குறைவாக உள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்ற போது, நமது நாட்டு மக்களிடையே எழுத்தறிவு 16.67 சதவீதமாக இருந்தது. அது 2000 ஆம் ஆண்டில் 65.38 சதவீதமாக உயர்ந்துள்ளது. எனினும் நமது அரசியல் சாசனத்தில் கண்டுள்ளபடி நூறு விழுக்காட்டை எட்டுவதற்குத் தொடர்ந்து நமது அரசு பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

முறையான கல்வி பயிலத் தொடங்கும் நிலையைத் தொடக்கக் கல்வி எனலாம். இந்நிலையில் 6வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர், சிறுமியர் கல்வி பயிலுகின்றனர். இதில் 1 – 5 வகுப்புகள் உள்ள பள்ளிகள் தொடக்கப்பள்ளிகள் என்றும், 1 முதல் 8 வகுப்புகள் உள்ள பள்ளிகளை உயர் தொடக்கப்பள்ளிகள் என்றும் குறிப்பிடுகிறோம். உலகில் மிகப்பெரிய கல்வி முறையைக் கொண்டுள்ள நாடுகளில் இந்தியா இரண்டாம் இடத்திலுள்ளது. இதில் முதலிடம் வகிப்பது சீனா. இந்தியாவில் 0.66 மில்லியன் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. 94.7 விழுக்காடு மக்கள் ஒரு கி.மீ. தொலைவிற்குள் தொடக்கப்பள்ளி வசதியைப் பெற்றிருக்கிறார்கள். பள்ளி வசதிகள் இல்லாத சிறு பகுதிகளில் மாற்றுப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நமது அரசுகளின் பெரு முயற்சிகளால் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கையானது வெகுவாக உயர்ந்துள்ளது. துவக்கப்பள்ளிகளில் மாணவர் பகரச் சேர்க்கை விகிதம் (GER): ஆண்களுக்கு 111% பெண்களுக்கு 92% நிகரச் சேர்க்கை விகிதம் (NER) ஆண்களுக்கு 78ரூ பெண்களுக்கு 64% (UNICEF 2006) இருப்பினும் பள்ளியில் சேராத குழந்தைகள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். குழந்தைத் தொழிலாளிகள், நாடோடி சமூகத்தினர், வேலைக்காக தொடர்ந்து இடம் விட்டு இடம் பெயரும் நிலையில் இருப்போர், ஊனமுற்றோர், பள்ளி வசதி அருகில் இல்லாதோர், தெருக்குழந்தைகள் (Street Childern), தாழ்த்தப்பட்ட / மலைவாழ் இனத்தவர்கள், பெண்கல்வி வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளவர்கள் போன்றோரில் பலர் பள்ளிக்குச் செல்லாது இருத்தல் கூடும். இவர்கள் அனைவரும் கல்வியறிவு பெற ஆவன செய்வதே நமது உடனடிக் கடமையாகும்.

### 8.1.1. துவக்கக் கல்வியின் அறைகூவல்கள்

அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை அடைய எல்லாப் பகுதிகளிலும் போதிய பள்ளி வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். பள்ளி வயதிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து, இடைநில்லாது தக்கவைத்து, தொடக்கக் கல்வியினை நிறைவு பெறச் செய்ய வேண்டும். சேர்ந்த குழந்தைகள் அனைவரும் எந்த வகுப்பிலும் தேங்காது தொடர்ந்து பயின்று குறிப்பிட்ட காலத்திற்குள் இறுதி வகுப்பினை முடிக்கும் திறனை அடையச் செய்தல் வேண்டும். குழந்தைகள் தாம் பயிலும் காலத்தில் ஒவ்வொரு வகுப்பிலும், ஒவ்வொரு பாடத்திலும் முழுமையான அடைவுத்திறனைப் பெறவேண்டும். இவற்றில் எவ்வளவு சாதனை பெற்றுள்ளோம் என்றும், இன்னும் சாதிக்க வேண்டிய இலக்குகள் எவையெனவும் ஆய வேண்டும்.

## 8.1.2. அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளி மற்றும் சார்ந்த வசதிகள்

அனைவருக்கும் தரமானக் கல்வியைக் கொடுக்க வேண்டுமெனில் அதற்கான பொருத்தமான சூழலையும், உத்திகளையும், வகுத்துத்தர வேண்டும். அதாவது குழந்தைகள் எளிதாகச் சென்று படிப்பதற்குப் பள்ளி வசதிகள் அருகில் தேவை. மாணவர்க்கு 10 சதுரமீட்டர் வீதம் போதிய கட்டிட வசதிகளும் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் தேவை. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகவும் அவசியம். இவற்றோடு தேவையான அளவிற்கு கற்றல், கற்பித்தல் பொருட்களும், கரும்பலகையும், உலகப்படம், வரைபடங்கள், விளையாட்டுக் கருவிகள், நூலகம் போன்றவையும் இருக்க வேண்டும். விளையாடுவதற்கு வேண்டிய இடவசதியும் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து ஊர்களிலும் பள்ளிகள் துவக்கப்பட்டு அவற்றில் குடிநீர், கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் பள்ளி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலை அனைத்து மாநில மக்களுக்கும் உறுதிசெய்யப்பட வேண்டும்.

## 8.1.3. பள்ளி வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்

பள்ளி வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பது சட்டம். அதாவது (6–14) வயதுப்பிரிவினர் அனைவரும் முறையான பள்ளியில் அல்லது மாற்றுப்பள்ளியில் சேர்ந்து பயில வேண்டும். இதற்காக ஆண்டுதோறும் குடும்பக் கணக்கெடுப்பு செய்வது வழக்கம். பள்ளி வசதி இல்லாத சிற்றூர்களில் மாற்றுப்பள்ளிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. அரசின் பெரு முயற்சியால் ஆரம்பப்பள்ளியில் சேர்க்கையானது பல மடங்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம் 100 விழுக்காட்டையும் தாண்டிவிட்டது. இருப்பினும் இன்னமும் சேராதவர்களும் இருக்கிறார்கள். இவர்களையும் பள்ளியில் சேர்க்க நமது அரசு அனைத்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## 8.1.4. சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் தக்க வைத்தல்

பள்ளியில் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் எந்த வகுப்பில் சேர்க்கிறார்களோ அந்த வகுப்பிலிருந்து தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு வகுப்பாக முன்னேறி இறுதியில் தொடக்க அல்லது உயர் தொடக்கக் கல்வியை முடிக்க வேண்டும். இதற்கிடையில் பள்ளியைவிட்டு நின்றுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் இதைத்தான் நாம் தக்க வைத்தல் என்கிறோம்.

குழந்தைகளைத் தக்கவைப்பதில் பலபிரச்சனைகள் இருக்கின்றன. பள்ளிச்சூழல் பிடிக்காத சிலர் நின்று விடுகின்றனர். கலைத் திட்டத்தில் கற்பித்தல் முறையிலும் எவ்வளவோ மாறுதல்களைக் கொண்டு வந்த போதிலும் அவர்களால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. அரசு பல நலத்திட்டங்களை அறிவித்திருக்கிறது. அதனால் தமிழ்நாட்டில் தக்கவைத்தல் சதவீதம் உயர்ந்துள்ளது.

**COHORT INDICATORS**
**Completion Rate (CR) Repetition Rate (RR) Drop Out Rate (DR)**

| Year | Primary | | | Upper Primary | | |
|---|---|---|---|---|---|---|
| | CR | RR | DR | CR | RR | DR |
| 2002-03 | 64 | 24 | 12 | 68 | 19 | 13 |
| 2003-04 | 69 | 23 | 8 | 74 | 16 | 10 |
| 2004-05 | 75.38 | 18.83 | 5.79 | 79.33 | 12.03 | 8.64 |

Source: DISE - 2005 SSA - Tamil Nadu.

## 8.1.5. அனைத்துக் குழந்தைகளையும் இடை நிறுத்தம் இல்லாது தொடர வைத்தல்

தொடக்க நிலையிலும், உயர் தொடக்க நிலையிலும் இடையில் எந்த வகுப்பிலிருந்தும் குழந்தை நிரந்தரமாக பள்ளிக்கு வராது நின்று விடுவதை இடைநிறுத்தம் என்கிறோம். இதற்கும் பல காரணங்கள் உண்டு. வறுமை, வேலைக்குச் சென்று குடும்பத்திற்கு உதவுதல், பள்ளிப்படிப்பின் அவசியத்தை உணராதிருத்தல், படிப்பில் போதிய முன்னேற்றமின்மை, பின்தங்கல், பெண்கள் தொலை தூரம் சென்று படிக்க விரும்பாமை, வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பேண வேண்டிய பொறுப்பு, உடல் நலக்குறைவு போன்ற காரணங்களினால் குழந்தைகள் படிப்பை விட்டு இடையில் நின்று விடுகின்றனர். தற்போது இந்தியாவில் தொடக்கப்பள்ளிகளில் இடைநிறுத்த விகிதம் 14.40 சதவீதமாகவும், உயர் தொடக்கப்பள்ளிகளில் இதன் விகிதம் 35.59 சதவீதமாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் இடைநிற்றல் விகிதம் தொடக்கப்பள்ளிகளில் 5.79 எனவும் உயர்தொடக்க வகுப்புகளில் 8.64 (2004–05) எனவும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இடைநிற்றலைக் குறைப்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இலவச சீருடை, இலவச மதிய உணவு, இலவச எழுது பலகை, இலவசப் பாடநூல்கள், இலவசப் பேருந்து வசதி, பத்தாம் வகுப்பு முடித்த பெண்களுக்குத் திருமண உதவிப்பணம், மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுத்திட்டம் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆயினும் இடைநிறுத்தம் முழுவதுமாகக் குறைந்தபாடில்லை.

**செயல்**

பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய மாணவியர் இருவரைச் சந்தித்து இடைநிறுத்தத்திற்கான காரணங்களைக் கேட்டறிக: ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் அனைவரும் சேர்ந்து உங்கள் ஒன்றியத்தில் தொடக்கப்பள்ளி மாணவர்களின் ஆண், பெண் இடைநிறுத்த சதவீதம் அதற்கான காரணங்களைத் தொகுத்து அவை குறித்து வகுப்பறையில் கலந்து ஆலோசிக்கவும்.

## 8.1.6. தேக்கமில்லாது அனைத்துக் குழந்தைகளும் கல்வியை நிறைவு செய்தல்

ஒரு குழந்தை ஒரு வகுப்பில் ஓராண்டிற்கு மேல் கற்க நேர்வது தேக்கம் எனப்படும்.

முதல் இரண்டு வகுப்புக் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் தேங்கும் நிலை காணப்படுகிறது. காரணம் 1) குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளிக்கு வருவதில்லை. (2) பள்ளி வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகள் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டு, பின்பு பள்ளி வயது வரும் வரை அவ்வகுப்பிலேயே தொடர்ந்து இருக்கச் செய்தல். (3) பள்ளிக்கு வராமலேயே சில குழந்தைகளின் பெயர்கள் பதிவேட்டில் இருத்தல். இது போன்ற குழந்தைகள் தேக்க நிலையில் காட்டப்படுவர். (4) குழந்தையை ஒரு வகுப்பில் தேர்ச்சியின்றி தொடர்ந்து நிறுத்தக்கூடாது என்ற அரசின் கொள்கையைக் கருதாத ஆசிரியர்கள் குழந்தைகளை தேக்கநிலைக்கு ஆளாக்குதல். இதற்கான காரணத்தைக் கண்டறிய அநேக ஆய்வுகள் நடத்தப்பட்டு இருப்பினும் சரியான காரணங்கள் முழுவதையும் கண்டறிய முடியவில்லை.

## 8.1.7. அனைத்துக் குழந்தைகளும் முழு அடைவுத்திறன் எய்துதல்

பள்ளியில் சேர்க்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளும் 1 முதல் 5 வகுப்பு வரை வரையறுக்கப்பட்டுள்ள 663 திறன்களில் முழு அடைவு பெற்றிருக்க வேண்டும். அதாவது 80 விழுக்காடு திறன்களையேனும் மாணவர்கள் அடைவு பெற்றிருத்தல் வேண்டும்.

ஆனால் ஆய்வுகள் பெரும்பான்மையான குழந்தைகள் முழு அடைவை எய்தவில்லை என்றே புலப்படுத்துகின்றன. அனைவர்க்கும் கல்வித் திட்டத்தில் செய்யப்பட்ட மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் முழு அடைவுத்திறனை குழந்தைகள் பெறவில்லை என்றே தெரிவிக்கின்றன. இச்சவாலை நாம் முனைப்புடன் எதிர்கொள்ள வேண்டும்.

**செயல்**

உங்கள் மாவட்டத்தில் தொடக்கப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை, இடைநிறுத்தம், தக்கவைத்தல், தேக்கம், அடைவுத் திறன் சதவீதம் ஆகிய புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை உங்கள் மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களின் சதவீதங்களுடன் ஒப்பிட்டு, ஒன்றியங்களின் குறியீடுகளை மாவட்ட அளவில் தரமிடுக.

## 8.2.1. அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்பதன் விளக்கம்

இந்திய அரசியல் சாசனம் 45 ஆம் பிரிவில் ''அரசியல் சாசனம் அமல்படுத்தப் பட்டதிலிருந்து (1950) பத்தாண்டுகளுக்குள் (அதாவது 1960 க்குள்) 6 முதல் 14 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க வேண்டியது அரசுகளின் கடமையாகும்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி,

1. முதல் வகுப்பில் இருந்து 8ஆம் வகுப்புவரை தொடக்கப்பள்ளிக் கல்வியினை அனைவர்க்கும் இலவசமாக வழங்குதல் வேண்டும்.
2. 5 வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளும் முதல் வகுப்பில் சேர்க்கப்படுதல் வேண்டும்.
3. இதனைக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்.
4. அவ்வாறு பள்ளியில் சேர்த்த குழந்தைகள், எட்டாம் வகுப்பை நிறைவு செய்யும் வரை பள்ளியை விட்டு நீங்காது வைத்திருத்தல் வேண்டும்.

   இதுவே அனைவருக்கும் தொடக்கக் கல்வி (Universalisation of Elementary Edu cation) என்பதன் பொருளாகும்.

### அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் அடிப்படைக் கூறுகள்

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளி வசதிகளை ஏற்படுத்துதல்.
2. பள்ளி வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்.
3. அனைத்துக் குழந்தைகளையும் இடை நிறுத்தம் இல்லாது தொடர வைத்தல்.
4. அனைத்து குழந்தைகளும் தேக்கமில்லாது 5 ஆண்டுக்கல்வியை 5 ஆண்டுகளிலும், 8 ஆண்டுக் கல்வியை 8 ஆண்டுகளிலும் நிறைவு செய்தல்.
5. அனைத்துக் குழந்தைகளும் முழு அடைவுத்திறன் பெறுதல்.

## 8.2.2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்னும் இலக்கை எட்ட முடியாததற்கான காரணங்கள்

இந்திய அரசியலமைப்புச் சாசனம் உருவாக்கப்பட்ட பொழுது, அடுத்த 10 ஆண்டுகளுக்குள் (1960) அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கத்திட்டமிடப்பட்டது. இக்குறிக்கோளைப் பல காரணங்களால் தேசிய அளவில் இந்நாள் வரை எட்ட இயலவில்லை. இதற்கான முக்கிய காரணங்களில் சிலவற்றைக் காண்போம்.

### (1) பொருளாதாரக் காரணிகள்

தொடக்கப்பள்ளியில் சேர்ந்திருக்க வேண்டிய மாணவர்கள் குடும்ப வறுமை நிலைமையின் காரணமாகப் பள்ளியில் சேராது விட்டு விடுகின்றனர். இளஞ்சிறார்கள், கூலி வேலைக்குச் சென்று

பொருள் ஈட்டி குடும்பத்திற்கு உறுதுணையாக இருக்கவே விரும்புகின்றனர். கட்டாயக் கல்விச் சட்டத்தை பல மாநில அரசுகள் இயற்றியும் சில பெற்றோர்கள் பிள்ளைகளைப்பள்ளிக்கு அனுப்பவில்லை. இதற்கான காரணம் அவர்களது ஏழ்மைநிலையே.

### (2) பெற்றோரின் கல்வி விழிபுணர்வின்மை

படித்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைப் போல, படிக்காத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. பெற்றோர்களின் கல்வி அறிவின்மை, குழந்தைகள் பள்ளிக்கு வருவதில் ஒரு தடையாக உள்ளது.

### (3) சமூக இனத்தடைகள்

நமது நாட்டிலுள்ள சில சமூக இனத்தவர்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்களின் காரணமாக தங்கள் குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவதில் ஆர்வம் குறைந்து காணப்படுகிறது.

### (4) மக்களின் சமூக, சமயப்பழக்க வழக்கங்களினால் ஏற்படும் தடைகள்

இந்திய மக்களின் சமூகப் பழக்கம், சிலரின் சமயப்பழக்கம் குழந்தைகள் பள்ளியில் சேருவதற்குத் தடையாக உள்ளது. ஒரு சில மதப்பிரிவினர் தங்களின் பெண் குழந்தைகள் வயதுக்கு வந்துவிட்டால், படிப்பை நிறுத்திவிடுகின்றனர். ஒரு சில மதத்தினர் பெண்கல்வியின் அவசியத்தை முழுமையாக உணராதிருக்கின்றனர்.

### (5) வசிக்கும் பகுதியால் ஏற்படும் தடைகள்

கிராமப்புறத்திலுள்ள பெற்றோர்களில் சிலர் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்குச் சரியாக அனுப்புவதில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள், மலைப்பகுதிகள் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது. மேலும் இப்பகுதிகளில் பள்ளிகளும் அதிகம் இருப்பதில்லை. மாணவர்கள் தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. இக்குறையை நீக்க அனைவர்க்கும் கல்வித்திட்டம் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகின்றது.

### (6) கல்வி சார்ந்த தடைகள்

பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தவர்கள் **5**ஆம் வகுப்பு முடிப்பதற்குள் படிப்பை இடையிலே நிறுத்திவிடுவதாலும் (Drop Outs) மாணவர்களுக்குத் தேர்ச்சி தராமல் ஒரே வகுப்பில் நிறுத்தி வைப்பதாலும், குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. மேலும் பள்ளிப்பாடங்கள், கவர்ச்சியற்று இருப்பதாலும், நடைமுறை வாழ்க்கைக்குத் தொடர்புடையதாக இல்லாமலிருப்பதாலும், மாணவர்களுக்கு ஆர்வமூட்டாத கற்பித்தல் முறைகளினாலும் மாணவர்களிடம் பள்ளி செல்லும் ஆர்வம் குறைந்துவிடுகிறது.

### (7) நிர்வாகத் தடைகள்

கல்வித்தர மேலாண்மை குன்றிய பள்ளிகளிலும் தனி மாணவர் அடைவை நிறைவேற்றாத பள்ளிகளிலும் மாணவர்கள் படிப்பைத் தொடராது நின்று விடுகின்றனர். பள்ளி மேற்பார்வை, தர உத்தரவாதம் சார்ந்த அலுவலர்களின் நிர்வாகக் குறைபாடுகளாலும் பள்ளிக் குழந்தைகள் பாதியில் நிற்கும் நிலை அறவே களையப்படாமல் போகிறது.

**(8) மாணாக்கர் தடைகள்**

உடல் ஊனமுற்ற, மனநலம் குன்றிய, பிரச்சனைக்குரிய நெறிபிறழ் நடத்தையுடைய குழந்தைகளால் தொடக்கப்பள்ளிகளில் இணக்கமாகத் தொடர்ந்து கல்வி பெற முடியாமல் போகிறது.

**(9) மக்கள் தொகைப் பெருக்கம்**

இந்தியாவில் **1971** இல் **6/14** முதல் வயதுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை **11.7** கோடியாகும். இது கி.பி. **2001** இல் **26** கோடியாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவ்வாறு உயரும் போது, தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குப் **(25.3** இலட்சம்**)** பதிலாக **50** இலட்சம் ஆசிரியர்கள் தேவைப்படுவர். இதற்கான செலவு அதிகம் பிடிக்கும். இதனைச் சமாளிக்கப் பெருநிதியும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது. மக்கள் தொகைப் பெருக்கமும் அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை அடைவதற்குத் தடையாக உள்ளது.

## 8.3. கல்வி வளர்ச்சி அளவீட்டுக் குறியீடுகள்

### 1. எழுத்தறிவுச் சதவீதம்

ஒரு நாட்டில் எல்லாரும் எழுத்தறிவு பெறுவதால் எல்லாருக்கும் தற்சார்பும், மனிதவள மேம்பாடும் கிட்டுகிறது. ஒரு நாட்டின் மேம்பாட்டைக் கணக்கிட எழுத்தறிவுச் சதவீதம் அடிப்படையானதோர் மூலதனமாகவும் குறியீடாகவும் பயன்படுகிறது. எல்லார்க்கும் எழுத்தறிவு, எல்லார்க்கும் எல்லாம் என்ற மேம்பட்ட நிலைக்கு அழைத்துச் செல்லவல்லதாகும். எழுத்தறிவுச் சதவீதத்தைப் பின்வருமாறு தொகுப்பாகவும் கூறுகளாகவும் குறியீடுகளிட்டு ஆய்ந்தறியலாம்.

$$\text{தேசிய எழுத்தறிவுச் சதவீதம்}^{(LR)} = \frac{\text{எழுத்தறிவு பெற்ற மக்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த மக்கள் தொகை (1–5 வயதினர் நீங்கலாக)}} \times 100$$

$$\text{எழுத்தறிவுச் சதவீதம் (ஆண்)}^{LR} = \frac{\text{எழுத்தறிவும் பெற்ற ஆண்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த ஆண்களின் தொகை (1–5 வயதினர் நீங்கலாக)}} \times 100$$

$$\text{எழுத்தறிவுச் சதவீதம் (பெண்)}^{LR(F)} = \frac{\text{எழுத்தறிவும் பெற்ற பெண்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த பெண்களின் தொகை (1–5 வயதினர் நீங்கலாக)}} \times 100$$

$$\text{வயதுவந்தோர் எழுத்தறிவுச் சதவீதம்}^{(ALR)} = \frac{\text{15 வயதுக்கு மேலானோரில் எழுத்தறிவு பெற்றோர்}}{\text{15 வயதுக்கு மேலானோரில் மொத்த தொகை}} \times 100$$

எழுத்தறிவு பெற்றோர் சதவீதத்தை ஆண்–பெண் ஊரகம்–நகரகம், தாழ்த்தப்பட்டோர், மரபுக்குடிகள், மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய சமூகப்பிரிவினர் எனவும், கிராமங்கள், வார்டுகள்

வாரியாகவும் கணக்கிட்டு, ஒப்பிட்டு உரிய கல்வி முன்னேற்றங்களைத் திட்டமிட்டும், ஒதுக்கீடுகள் வழங்கியும் ஆவன செய்யலாம்.

2. பள்ளி வசதிவாய்ப்புச் சதவீதம்(AR)

$$\frac{\text{300க்கு மேல் மக்கள் தொகையுள்ள ஒரு கிலோமீட்டர் தொலைவுக்குள் பள்ளி வாய்ப்பைப் பெற்ற வாழிடங்களின் எண்ணிக்கை}}{\text{300 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட வாழிடங்களின் மொத்த எண்ணிக்கை}} \times 100$$

பள்ளி வசதிவாய்ப்புச் சதவீதத்தை ஒன்றியம்வாரியாகவும், மாவட்ட அளவிலும், தொடக்கப்பள்ளிகளுக்கெனவும், உயர்தொடக்கப் பள்ளிகளுக்கெனவும் தனித்தனியேயும் கணக்கிட்டு அறிந்து ஆவன செய்தல் இயலும்.

## 3. மாணவர் சேர்க்கை சதவீதம்

இதனை மொத்தச் சேர்க்கை விகிதம் என்றும் நிகரச் சேர்க்கை விகிதம் என்றும் தொடக்கக் கல்விக்கென்றும், உயர் தொடக்கக் கல்விக்கென்றும் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனியேயும் பின்வருமாறு கணக்கிடலாம்.

மொத்தச் சேர்க்கை விகிதம்(GER)

$$\frac{\text{1–5 வகுப்புகளின் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{பள்ளி வயதுடைய குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை (5 வயதுக்குக் குறைவானோர் 11க்கும் மேலானோர் உட்பட)}} \times 100$$

நிகரச் சேர்க்கை விகிதம்(NER)

$$\frac{\text{1–5 வகுப்புக்களில் உரிய வயதுடைய மாணவர் சேர்க்கை}}{\text{பள்ளி வயதுக் குழந்தைகள் 5+ – 10+ வயதுடைய மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை}} \times 100$$

## நிறைவு செய்வோர் சதவீதம்

தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பெறும் அனைத்துக் குழந்தைகளையும் எட்டு வயது வரையிலேனும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும் என்பது இலக்கு. எனினும் சில குழந்தைகள் 5 வகுப்பை முடிப்பதற்குள்ளாகவும், சிலர் 8 ஆம் வகுப்பை முடிப்பதற்குள்ளாகவும் பல காரணங்களால் இடையில் நின்று விடுகின்றனர். இடையில் நிற்போரின் எண்ணிக்கையை முழுவதுமாக இல்லாமல் ஆக்கி நிறைவு செய்வோரின் சதவீதத்தை நூற்றுக்கு நூறாக ஆக்க வேண்டும்.

## நிறைவு செய்வோரின் சதவீதத்தைக் கணக்கிட்டறிதல்

ஒரு பள்ளியில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒன்றாம் வகுப்பில் சேரும் மாணவர்களை ஓர் ஆய்வுக்குரியகுழுவாக எடுத்துக் கொண்டு வகுப்பு 2, 3, 4, 5 என அக்குழு மாணவர்களைத்

தொடர்ந்து கண்காணித்து அவர்களுள் எத்தனை பேர் ஐந்து ஆண்டுகளுக்குள் ஐந்தாம் வகுப்பை நிறைவு செய்கின்றனர், எத்தனை பேர் இடையில் உதிர்ந்து விடுகின்றனர், எத்தனை பேர் ஒரு வகுப்பை முடிக்க ஓராண்டுக்குமேல் எடுத்துக் கொண்டு தோல்வியுறுகின்றனர் என்பதையெல்லாம் கணக்கிட இயலும். அக்குறிப்பிட்ட ஆண்டில் ஒன்றாம் வகுப்பில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை நூறு எனில் அவர்களுள் நிறைவு செய்தோர் சதவீதம், இடையில் நின்றோர் சதவீதம், ஒரே வகுப்பில் மீளப் பயில்வோர் சதவீதம் ஆகியவற்றை எளிதில் கணக்கிடலாம். எனவே

குறிப்பிட்ட குழுவில் 5 வகுப்பை முடித்தவரின் எண்ணிக்கை

**4.** நிறைவு செய்வோர் சதவீதம்$^{(CR)}$ ------------------------------------ x 100

குறிப்பிட்ட ஆண்டில் 1 ஆம் வகுப்பில் சேர்ந்த மாணவர்கள்

5 ஆண்டுகளுக்கு முன்னமேயே பள்ளியைவிட்டு விலகியோர்

**5.** இடையில் நின்றோர் சதவீதம்$^{(DR)}$ ------------------------------------ x 100

குறிப்பிட்ட ஆண்டில் ஒன்றாம் வகுப்பில் சேர்ந்தோர் எண்ணிக்கை

அவர்களுள் தேர்ச்சி பெற ஒரு வகுப்பிற்கு ஓராண்டுக்கு மேல் தேவைப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

**6.** மீளக்கற்போர் சதவீதம்$^{(RR)}$ ------------------------------------ x 100

குறிப்பிட்ட குழுவில் குறிப்பிட்ட ஆண்டில் 1 ஆம் வகுப்பில் சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை

## மாணவரின் கற்றல் அடைவை அளவிடுதல்

கற்றல் என்பது ஒரு மனவினை. கற்றலை அளவிடுதல் ஆழ்ந்த சிந்தனைக்குரிய நுணுக்கமானதொன்றாகும். ஒவ்வொரு செயலாலும் மனதினுள் நிகழும் மாற்றத்தை, கற்றல் நிகழ்த்துவோரால் எதிர்பார்க்கப்கடும் நடத்தை மாற்றத்தை அல்லது துலங்கலைக் கொண்டுதான் ஒருவர் கண்டுகொள்ள முடியும். அப்படி நிகழும் கற்றலும்கூட ஆழமானதா, மேலோட்டமானதா, நிலைத்த, நெடுநாட்களுக்குப் பலன் தரவல்லதா, தாற்காலிகமானதா என்பனவற்றையெல்லாம் உடனுக்குடன் வரையறுத்துக் கூறிவிடமுடிவதில்லை என்றாலும் தாம் வழங்கிய கற்றல் அனுபவங்களால் உரிய எதிர்ப்பார்க்கப்படும் கற்றல் நிகழ்ந்துள்ளதா என்பதை அறிய வேண்டுவதும் அவசியமே.

இன்றுள்ள வகுப்பறைக் கற்றல் களத்தில் அன்றாடம் நிகழும் கற்றல் மாணவரின் அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்ல உதவுவதாய் அமைந்துள்ளது. கற்றல் நிகழ்வு தனிமாணவர் அடைவு வேறுபாடுகளைச் சார்ந்திருப்பதும் உண்மையே. எனவே கற்கும் விரைவு இயல்பானதாய் அமைய நிர்பந்தமற்ற, வல்லந்தமற்ற தன்மை செயல்வழிக் கற்றல் அணுகுமுறையில் பேணப்பட்டு வருகிறது. எனினும் ஒவ்வொரு திறனுக்கும் அடைவு மதிப்பீட்டுச் செயல்களும், மைல் கற்களும், அடைவு ஏணிகளும் வகுத்தளிக்கப்பட்டுள்ளமை கண்கூடு. மாணவர்களின் அடைவை ஒருவாறு இம்முறையால் அறிதலும் சாத்தியமே. மதிப்பெண்ணிட்டுத்தான் மாணவர் அடைவை அளக்க முடியும் என்பதையும் ஏற்க இயலவில்லை. மதிப்பெண்ணிட்டு அளக்கும் முறை நம்மால் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படுவதால் அதற்கு மாறான ஒன்றைச் சிந்திக்கவும் சிலர் தயங்குகின்றனர்.

## 8.4. அனைவருக்கும் கல்வி வாய்ப்பினை அளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

### (1) தொடக்கப்பள்ளிகளின் வளர்ச்சி

1947 இல் இந்தியாவில் 173 ஆயிரம் தொடக்கப்பள்ளிகளே இருந்தன. ஆனால் 1990 – 91 இல் இவை ஏறத்தாழ 500 ஆயிரம் பள்ளிகளாக உயர்ந்துள்ளன. இதே போல் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

### (2) மாணவர் சேர்க்கை

தொடக்கப்பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இருந்ததைவிடப் பல லட்சங்கள் கூடியுள்ளது.

### (3) கலைத்திட்டம்

மாணவர்களின் தேவைகள், அவர்கள் வாழும் சூழல்கள், உலகின் கல்விப் புதுமைகளின் வளர்ச்சி இவற்றையொட்டி பயனுள்ள பொருள் பொதிந்த கற்றல் அனுபவங்கள் இன்று கலைத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன. சான்றாக, சுற்றுச்சூழல் கல்வி, மக்கள் தொகைக்கல்வி, வேலைத் திறனளிக்கும் கல்வி, மதிப்புணர்வுக் கல்வி போன்றவை பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. தாய் மொழி வழியே பாடங்களைக் கற்பிக்கும் முயற்சி கடைப்பிடிக்கப்படுகிறது.

### நலிவடைந்த பிரிவுக் குழந்தைகளின் கல்விக்கு முன்னுரிமை

இந்திய அரசியல் சாசனத்திலுள்ள 46 ஆவது பிரிவு, ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரின் கல்வி முன்னேற்றத்திலும், பொருளாதார முன்னேற்றத்திலும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. இதன்படி இம்மக்களின் குழந்தைகள் கல்வி உதவித்தொகை, இலவசப் பாடநூல்கள், இலவசச் சீருடைகள், இலவச விடுதிகள் ஆகியன வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### (5) நிதி ஒதுக்கீடு

தொடக்கக் கல்வி முன்னேற்றத்திற்காக, மத்திய மாநில அரசுகள் குறிப்பிடத்தக்க அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றன. மொத்தக்கல்விச் செலவில் 48.5 விழுக்காடு தொடக்க நிலைக்கல்விக்காகச் செலவிடப்பட்டு வருகிறது. இது தவிர தனியார் அமைப்புகளும் கல்விக்காகப் பெரும் தொகை செலவிட்டு வருகின்றன.

### (6) சில புதிய திட்டங்கள்

1. ஒவ்வொரு பள்ளியின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இன்றியமையாத தேவைகள் திட்டம் (Mainimum Needs Programme) ஒன்று மைய அரசால் தொடங்கப்பட்டுள்ளது.
2. படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுபவர்களுக்கு 6 முதல் 14 வயது வரையில் முறைசாராக் கல்வி தொடங்கப்பட்டது.
3. பள்ளி வகுப்புகளில் கழிவும், தேக்கமும் (Wastage and stagnation) நிகழாதிருக்க 1 முதல் 5 வகுப்பு வரை அனைவருக்கும் தேர்ச்சி என்னும் முறை பின்பற்றப்பட்டது.
4. பள்ளி மேலாண்மையைச் சீராக்க நிர்வாகம் நன்கு செயல்பட உதவுவதற்குக் கல்வி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### (7) புதிய கல்விக் கொள்கையின் முயற்சிகள்

1. அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்கும் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் தேசிய புதிய கல்விக்கொள்கை (1986)இல் சில திட்டங்களைத் தீட்டியுள்ளது.
2. கரும்பலகை இயக்கம் (Operation Blackboard)
3. கிராமப்புற மாணவர்களின் வசதிக்கு ஏற்றாற்போல் பள்ளி நாள்களையும் விடுமுறை நாள்களையும் மாற்றி அமைத்தல்.
4. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை உயர்த்துவதற்காக நாடெங்கும் மாவட்ட ஆசிரியர் கல்விப்பயிற்சி நிறுவனங்கள் (DIETs) திறக்கப்பட்டுள்ளன.
5. தேசியக் கல்வியறிவு இயக்கம் (National Literacy Mission) தொடங்கப்பட்டு 5000 மக்கள் தொகை உள்ள கிராமப்புறங்களில் மக்கள் கல்வி மையம் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு முறைசாராக் கல்வியின் வழியிலும் அனைவருக்கம் கல்வி தரும் முயற்சி நடைபெற்று வருகிறது.

## 8.4.1. அனைவருக்கும் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசின் நலத்திட்டங்கள்

1. நாடெங்கும் புதிய தொடக்கப்பள்ளிகள் பல திறக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 300 பேர் வாழும் சிறு குடியிருப்புகளிலும் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. பள்ளிகளில் கல்வி கற்கக் கட்டணம் இல்லை. தமிழ்நாட்டில் ஒன்று முதல் 10 வகுப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. 10–ஆம் வகுப்புக்கு மேல் படிப்பவர்களுக்கு தமிழ் போதனா மொழி வழிப்படிப்பவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

3. ஏழை மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

4. நண்பகலில் பள்ளியில் மாணவர்களுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

5. மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறது.

6. ஆதிதிராவிடக் குழந்தைகளுக்கு இலவசத் தங்கும் விடுதிகளில் தங்கிப் படிக்க வசதி செய்து தரப்பட்டுள்ளது.

7. நலிந்த மக்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு அவர்கள் பள்ளியின் இறுதி வகுப்பு வரை வேறுபாடு இன்றிப் படித்துப் பயன்பெற வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

8. ஆதிதிராவிட கல்வித்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிட நலத்துறை மற்றும் அரிமாசங்கங்கள், ரோட்டரி சங்கங்கள், மக்கள் தொண்டு நிறுவனங்கள் ஆகியன பல்வேறு வழியில் பணம், கட்டடம், தளவாடம், விளையாட்டு இடம், சத்துணவுக்கான பல்வகை பொருட்கள் இலவசமாக வழங்க ஊக்குவித்து வருகின்றன.

9. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி அந்தந்த ஊர் மக்களே பள்ளித் தேவைகளை பூர்த்தி செய்வதில் உடல் உழைப்பு, பண உதவி, பண்டங்கள், பாத்திரங்கள் வழங்க அரசு ஊக்குவித்து வருகிறது.

10. பள்ளிச்சிறுவர்களின் உடல் நலத்தை இலவசமாக தக்க மருத்துவர்கள் மூலம் சோதித்து குறைகளைக்களைய இலவச மருத்தவ வசதிகள் செய்யப்படுகின்றன.

11. பாடங்கள் கவர்ச்சிகரமாகவும், சுவையோடும், பொருத்தமான அணுகுமுறைகளில் கற்பிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறைந்த விலையில் புத்தகங்களையும், குறிப்பேடுகளையும் அரசே வழங்கி வணிகர்கள் கொள்ளை லாபம் பெறுவதை தடுத்து மாணவர்களுக்கு உதவி செய்து வருகிறது.

12. பாடத்திட்டத்தை மேம்படுத்தி வருகிறது. தற்காலத் தேவைக்கேற்ப கணக்கு, அறிவியல், புவியியல் போன்ற பாடநூல்களைத் தர உயர்வு செய்துள்ளது. தேச ஒருமைப் பாட்டிற்கு ஊறு நேரா வண்ணம் நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

13. விளையாட்டு, கைவேலை, கலைவேலை, ஈடுபாடுகள், அறிவியல் துணைப் பொருட்கள் ஆகியவற்றில் அரசு அக்கறை காட்டி ஆண்டு தோறும் போதுமான பண ஒதுக்கீடு செய்து வருகிறது. கண்காட்சிகளும் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

14. ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தி, ஆசிரியர்கள் கவலையின்றி தம் கற்பிக்கும் பணிகளில் ஈடுபடுகின்ற வகையில் சில சலுகைகளையும், அரசு வழங்கி வருகிறது.

15. பிள்ளைகளின் சேர்க்கை, படிப்பை முடிக்கச் செய்தல், தேக்கம், இடைநிறுத்தமின்மை போன்றவற்றில் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

16. ஆண்டு தோறும் நல்லாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கியும், இறுதித் தேர்வில் முதலாவதாக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு ரூபாய். ஆயிரம் பரிசுத்தொகை அளித்தும் ஊக்குவிக்கிறது.

## புதிய தேசிய கல்விக்கொள்கை – 1986

## 8.5.0. முன்னுரை

ஒரு நாட்டின் வளம் அந்நாட்டில் வாழும் மக்களின் கல்வி, ஆற்றல், ஒழுக்கம் என்ற உயர் பண்புகளைப் பொருத்தே, அளவிடப்படுகிறது. நாட்டு வளர்ச்சியின் முதுகெலும்பாகக் கல்வி கருதப்படுகிறது. எந்த ஓர் அமைப்பும், மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப மாற்றமடைய வேண்டும். சமுதாய வளர்ச்சி, புதிய அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றால் காலத்திற்கேற்றாற் போல் கல்வியும் மாறுதலடைந்து நவீனமடைய வேண்டும்.

21ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாயம், பல புதிய பிரச்சனைகளை எதிர் நோக்கிட வேண்டியிருக்கும், அப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு புதிய அறிவும், திறன்களும், அணுகுமுறைகளும் தேவைப்படும். இத்தகைய பண்புகளைப் பெறுவதற்கு முற்றிலும் புதிய கல்விமுறை தேவை. எனவேதான் 1985ல் ஓர் கல்வி ஆவணத்தை நம் மைய அரசு வெளியிட்டு, அதன் மீது நாடுதழுவிய விவாதத்திற்குப் பின்னர், 1986ல் தேசிய கல்விக் கொள்கையாக அது வெளியிடப்பட்டது.

## 8.5.1. தேசிய கல்விக்கொள்கை (1986)ல் தொடக்கக் கல்வி இலக்குகள்

1. 14 வயதுக்குட்பட்ட அனைவரையும் பள்ளிகளில் சேர்த்து, இடையில் விலகாது காத்தல்.

2. துவக்கக் கல்வியில் கல்வித் தரத்தை உயர்த்துதல், குழந்தை மையக் கற்பித்தல் வழியே, அவர்களின் கற்றல் திறன்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல்.
3. துவக்கப்பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளான கட்டிடங்கள், ஆசிரியர்கள், பள்ளியின் இதர வசதிகளான மேசை, நாற்காலிகள், கற்பித்தல் கருவிகள், விளையாட்டு வசதிகள் ஆகியவற்றை அனைத்துப் பள்ளிகளுக்கும் கிடைக்கச் செய்ய ''கரும்பலகை இயக்கம்'' (Operation Black Board) அமலாக்கம்.
4. கிராமப்பள்ளிகளில் உள்ள குழந்தைகள் பெரும்பாலும் வேளாண்மை வேலைகளில், பெற்றோருக்கு உதவிட வேண்டியிருப்பதால் அவர்கள் பள்ளிக்கு வருவது தடைப்படுகிறது. இத்தடையை நீக்கிட பள்ளியின் நேரமும், விடுமுறைக்காலங்களும் கிராமப்புறக் குழந்தைகளின் தேவையை ஒட்டி அமைக்கப்படல் வேண்டும்.
5. கிராமப்புறங்களில் உள்ள முதல் தலைமுறை மாணவர்கள் தங்களின் சொந்த வேகத்தில் கற்பதற்கு ஏற்ற வகையில், ஆசிரியர்களால் ''தனிக்கவனக் கல்வி'' (Individualised Instruction) வழங்கப்பட வேண்டும்.
6. தேர்வுகளைப் புறவயத்தன்மையுடையதாக்கி, துவக்கக்கல்வியில் எந்த வகுப்பிலும் மாணவர்களைத் தேக்கி வைத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
7. துவக்கப்பள்ளியிலிருந்து விடுபட்டவர்கள், தங்கள் பகுதியில் பள்ளியிலில்லாத குழந்தைகள், வேலைக்குச் செல்லும் குழந்தைகள் போன்றோருக்கான முறைசாராக் கல்வி முறையை அமைத்தல்.
8. முறைசாராக் கல்விமுறையில் நன்கு கற்கும் குழந்தைகள், விரும்பினால் முறையான கல்விமுறைக்கு எளிதில் மாறும் வகையில் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கை நெகிழுந்தன்மையுடன் இருத்தல் வேண்டும். 1995க்குள் 15–35 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் முறைசாராக் கல்வி மூலம் எழுதப்படிக்கக் கற்றுத்தர வேண்டும். 100% எழுத்தறிவு எட்டப்படவேண்டும்.

## 8.6. மாவட்ட தொடக்கக் கல்வி திட்டம்

**(District Primary Education Programme (DPEP))**

''அனைவருக்கும் கல்வி'' என்ற நோக்குடன் தொடங்கப்பட்ட திட்டம் ''மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம்'' ஆகும். இதன்படி மக்கள் வாழ்விடங்களுக்கு அருகில் கல்விக் கூடங்கள் அமைத்து பள்ளி வயது எய்திய ஆண், பெண் இருபாலாரையும் பள்ளிகளில் சேர்த்து பதினான்கு வயதுவரை இடையில் நிறுத்தமின்றி தொடர்ந்து கல்வி கற்கச் செய்வதும், கல்வித்தர முன்னேற்றம் அடைவிப்பதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

### 8.6.1. தோற்றமும் வளர்ச்சியும்

1989ல் தாய்லாந்தில் ஜாம்டியன் என்னும் நகரில் உலக ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளாதார கலாச்சாரக் கழகத்தின் ஆதரவில் கி.பி. 2000க்குள் அனைவருக்கும் கல்வி என்ற உலகளாவிய நோக்கத்தை வலியுறுத்தி ஒரு மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் மூன்று குறிக்கோள்கள் வலியுறுத்தப்பட்டன.

(1) பள்ளி வயது எய்திய குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களை 5ஆம் வகுப்புவரை தொடர்ந்து கற்கச் செய்தல். குறிப்பாக பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலிந்தோர் ஆகியோரின் குழந்தைகளுக்குத் தனிக்கவனம் செலுத்திப் படிக்க வைத்தல்.

(2) ஒவ்வொரு நிலையிலும் குறைந்த அளவு கற்றல் திறன்களையேனும் வளர்த்துக் கொள்ளும் வகையில் தரமான கல்வியளித்திட வழிவகை செய்தல்.

(3) கற்றல் – கற்பித்தலுக்கு ஏற்ற சூழ்நிலையைப் பள்ளிகளில் உருவாக்கிடப் போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றவையே அம்மூன்று குறிக்கோள்களாக இருந்தன.

வளரும் நாடுகளின் இந்த அறைகூவல்களை வளர்ந்த நாடுகள் ஏற்றுக் கொண்டன. பன்னாட்டு நிதியுதவி அமைப்புகளின் மூலம் இவற்றை செயல்படுத்தவும் ஆவன செய்யப்பட்டது.

இதற்கடுத்து 1993ல் வளரும் 9 நாடுகளின் உச்சிமாநாடு டெல்லியில் கூடி ''அனைவருக்கும் ஆரம்பக்கல்வி'' என்னும் கொள்கையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டன. அதன் விளைவாக 1986இல் இந்திய தேசிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் இத்திட்டம் இந்தியாவிலும் தொடங்கப்பட்டது. 1994–95ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பெற்று ஏழு ஆண்டுகளில் இலக்கை நிறைவேற்றிட வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டது.

### 8.6.2. மாவட்டங்களைத் தெரிவு செய்தல்

**மாவட்டத் தொடக்கக்கல்வி திட்டத்தை செயல்படுத்திட மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான அடிப்படைகளாவன**

1. பெண்களின் எழுத்தறிவுச் சதவீதம் தேசிய பெண் எழுத்தறிவுச் சராசரியை விட பின்தங்கியுள்ள மாவட்டங்கள்.
2. அறிவொளி இயக்கம் வெற்றிகரமாகச் செயல்பட்டு அதன் பயனாய்த் தொடக்கக் கல்விக்குக் கூடுதல் தேவை ஏற்பட்டுள்ள மாவட்டங்கள்.

### 8.6.3. அணுகுமுறைகளும்,உத்திகளும் (Approaches and Strategies)

#### 1. பரவலாக்குதல் (Decentralisation)

செயல் திட்டங்களும், வரவு செலவுத் திட்டங்களும் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட்டு, நிறுவன ஆற்றலை மேம்படுத்த முதலீடுகளும் மாவட்ட அளவிலேயே வழங்கப்பட்டன.

#### 2. சமவாய்ப்பில் கவனம் (Equity Focus)

பெண் கல்வியறிவுச் சதவீதம் குறைந்த நிலையிலுள்ள மாவட்டங்களின் மீது கவனத்தைச் செலுத்தி அடிப்படை ஆய்வுகள் நடத்தப்பெற்று, உரிய அணுகுமுறைகள், சிறப்பாக மகளிர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்காக வகுக்கப்பெற்றன.

#### 3. பங்கேற்பு முறையில் திட்டமிடல்

கலந்துரையாடல்கள் மற்றும் பணிமனைகள் வாயிலாகவும், கிராம அளவிலும் மாவட்ட அளவிலும், பெற்றோர், ஆசிரியர் கழகங்கள். அரசுசாரா நிறுவனங்கள், மாவட்ட, ஊராட்சி ஒன்றிய அளவிலும் பள்ளி அளவிலும் பல்வேறு அமைப்புகள் திட்டமிடுதலில் ஈடுபடுத்தப்படுகின்றன.

மாவட்ட மற்றும் மாநில அலுவலர்கள், உலகக் கல்வி வளர்ச்சி அலுவலர்கள், மனிதவள மேம்பாட்டு அமைச்சக அலுவலர்கள், தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வல்லுநர்கள், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக வல்லுநர்கள், தேசியக்கல்வித் திட்டமிடுதல் மற்றும் நிர்வாக நிறுவனத்தினர் (NIEPA) மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனக்

கல்வியாளர்கள் போன்றோர் பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளில் பங்கு பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் தேவைகள், பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

## 8.7. மாவட்டங்கள் தெரிவு

நாடு முழுவதும் ஏழு மாநிலங்களில் மொத்தம் "70" வருவாய் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**தமிழ்நாட்டில்**

| | |
|---|---|
| திருவண்ணாமலை, | இராமநாதபுரம் |
| புதுக்கோட்டை , | பெரம்பலூர் |
| தருமபுரி, | விழுப்புரம் |
| அரியலூர் | கடலூர் |

ஆகிய எட்டு மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட்டது. இத்திட்டத்திற்காக உலக வங்கி இந்தியாவுக்கு ரூ. 122 கோடியைக் கடனாக வழங்கியுள்ளது.

### 8.7.1. அதிகாரப் பரவல்

1994 ஆம் ஆண்டு வரை பள்ளிக்கல்வி இயக்ககத்துடன் இணைந்திருந்த தொடக்கக் கல்வியைத் தனியே பிரித்து நிர்வாக வசதிக்காக "தொடக்கக் கல்வி இயக்ககம்" உருவாக்கப்பட்டது. தொடக்கக் கல்விக்கென மாவட்டத் தொடக்கக் கல்வி (DEEO) அலுவலகங்களும் ஒன்றிய அளவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவிகளும் (AEEO) உருவாக்கப்பட்டன.

### 8.7.2. விழிப்புணர்வு

குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், பிள்ளைகள் சேர்க்கையுடன், தக்கவைத்தல் பற்றியும், பல்வேறு நலத்திட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்திட கல்வியாண்டுத் தொடக்கத்தில் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

### 8.7.3. பள்ளி வரைபடம்

பள்ளி வரைபடம் தயாரிப்பது, தொடக்கக் கல்வி நுண்ணிலைத் திட்டமிடலில் மிக முக்கிய இடம் பெற்றது. பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பின் அவசியம், பள்ளிக்குத் தேவையானவை ஆகியவற்றையறிந்து நிறைவு செய்திட இது வழி வகுக்கிறது. ஆண்டு தோறும் பள்ளிகள் தோறும் நிகழும் இச்செயலுக்குரிய பயிற்சியும் அளிக்கப்பட்டது.

தொடக்கப்பள்ளிகளில் காலியாகயிருந்த ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம் செயல்படும் மாவட்டங்களில் அத்திட்ட நிதி கொண்டு '1026' ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

### 8.7.4. பெரும் பயிற்சித் திட்டங்கள்

மாநிலம் முழுமைக்கும் 1994–95, 1995–96, 1996–97 மற்றும் 1997–98 கல்வி ஆண்டுகளில் இருபெரும் பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்று, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான ''சிறப்புப் புத்தறிவுப் பயிற்சி'' SOPT (Special Orientation Programme for Teachers) மற்றொன்று குறைந்த பட்சக்கற்றல் இலக்குகள் MLL (Minimum Level of Learning) செலவு குறைந்த / செலவில்லா கற்பித்தல் கருவிகள் பற்றியதாகும் மற்றும் திறன் அடிப்படையிலான கற்பித்தல் முதலியன பெரும் பங்கு வகித்தன. புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாடநூல்கள் திறன் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டன. இதற்கான பயிற்சியும் ஆசிரியர்களுக்கு மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் வழியே அளிக்கப்பட்டது.

### 8.7.5. கற்றலை எளிமையாக்குதல்

ஒன்றியப் பயிற்சி மையங்கள் (Block Resource Centres) ஒன்றியங்கள்தோறும் அமைத்து உரிய மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு 8 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்துப் பயிற்சிப் போதகர்களாக (Teacher Eductors) நியமனம் செய்யப்பட்டது. முதலில் தலைமை ஆசிரியர்களுக்கும் பின்பு ஒன்றாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு ஆசிரியர்களுக்கும் பிறகு 4ம் வகுப்பு ஆசிரியர்களுக்கும் ஒரு வாரப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 8.7.6. நிர்வாக அமைப்பு

DPEP செம்மையாக நடைபெற மாநில அளவில் தமிழ்நாடு கல்வி இயக்கத்தின் கீழ் ஆட்சிக்குழு, செயற்குழு என்ற அமைப்புகளுடன் மாநிலத்திட்ட இயக்ககம் அமைந்தது. பொதுக்குழுவின் தலைவர் தமிழக முதல்வர், துணைத் தலைவர், கல்வியமைச்சர் ஆவார். இதன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்வி இயக்ககம், பள்ளி சாராக் கல்வி இயக்ககம், ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி இயக்ககமும் செயல்பட்டன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், அதன் நேரடிப் பார்வையில் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் இயங்கின. இதன் கீழ் பல ஒன்றியப் பயிற்சி மையங்களும், அதற்குக் கீழ் பல குறுவட்டக் கருத்தாய்வு மையங்களும் இயங்கின. இவை மாதந்தோறும் ஒருமுறை கூடி கல்வி முன்னேற்றக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டன. எந்தத்திறனுக்கு எந்த உபகரணங்கள் செய்யலாம் என்பதும், பாட போதனையை எவ்வாறு எளிமைப்படுத்தலாம் என்பதும் கருத்தாய்வு மையக்கலந்துரையாடலில் இடம் பெற்றன.

### மாவட்டங்கள் தோறும் திட்டச்செயற்பாட்டுக் கூட்டமைப்பு

மாவட்டக்குழுவின் தலைவராக அந்தந்த மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் பொறுப்பேற்கிறார், துணைத்தலைவராக முதன்மைக் கல்வி அலுவலர் விளங்கிட DIET நிறுவனத்தின் முதல்வர், மாவட்டக்கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் உட்பட '17' பேர் பொறுப்பேற்றனர். இத்திட்டத்தின் சீரிய நடைமுறைப்பாடு கருதி தமிழ்நாடு அரசு அனைத்துத் தரப்பினர்களையும், உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கிராமக் கல்விக்குழு

மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டத்திலிருந்து ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.2000/–யை இக்குழுவின் ஒப்புதலோடு கற்பித்தல் பொருட்களை வாங்கிக்கொள்ளலாம். தாமே

செய்ய முடிகின்ற கற்பித்தல் பொருட்களை ஆசிரியர்கள் செய்து, மீதிப் பணத்தில் நிரந்தரமாகப் பயன்படும் உபகரணங்களை வாங்கி மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது பயன்படுத்திடலாம். தாங்கள் வாங்கும் ரூ. 500/– மதிப்புள்ள கற்பித்தல் உபகரணங்களின் பெயர் மற்றும் அவை எந்த திறனுக்காகச் செய்யப்பட்டது அல்லது வாங்கப்பட்டது என்று விவரங்களை எழுதி வைத்துத் தலைமையாசிரியரிடம் ஏற்பு பெறப்பட்டது.

### 8.7.7. கற்றல் திறன்கள்

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு எல்லா பாடங்களுக்கும் சேர்த்து '663' திறன்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

| பாடங்கள் | ஒன்றாம் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் | 19 | 19 | 19 | 19 | 19 | 95 |
| ஆங்கிலம் | – | – | 65 | 57 | 57 | 179 |
| கணக்கு | 24 | 22 | 48 | 60 | 53 | 207 |
| சூழ்நிலை இயல் | 13 | 16 | – | – | – | 29 |
| சூழ்நிலை அறிவியல் | – | – | 30 | 24 | 20 | 74 |
| சூழ்நிலை சமூகவியல் | – | – | 22 | 27 | 30 | 79 |
| கற்றல் திறன்கள் மொத்தம் | 56 | 57 | 184 | 187 | 179 | 663 |

### 8.7.8. பெண் கல்வி

3,4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்த பெண் மாணவிகளுக்குப் பள்ளி வேலை நாட்களில் மாலை நேரத்தில் சிறப்புப் பயிற்சி 1 1/2 மணி நேரம் கூடுதலாக இத்திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டது. ஆசிரியர்களின் கூடுதல் பணியைக் கருத்தில் கொண்டு பணியாற்றும் ஆசிரியருக்கு ஒரு மாணவிக்கு மாதம் ரூ.10/– வீதம் மதிப்பூதியம் இத்திட்டத்தின் வழியே வழங்கப்பட்டது.

இதுபோல் ஊனமுற்ற குழந்தைகளும் கல்வி பெற்றிடும் வகையில் அவர்களையும் பள்ளியில் சேர்த்து ஏனைய குழந்தைகளுடன் ஒருங்கிணைந்து படிக்கச் செய்வதற்கு மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டத்தில் புதிய திட்டங்கள் இணைக்கப்பட்டன.

## 8.8. சர்வ சிக்ஷா அபியான் எனப்படும் அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA)

### 8.8.0. முன்னுரை

இந்திய அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக்கல்வி வழங்குவதை உறுதி செய்திட **மக்கள் இயக்கமென** உருவெடுத்த திட்டமே அனைவருக்கும் கல்வித்திட்டமாகும். இத்திட்டம்

வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களுடன், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சமூக, பொருளாதார, பாகுபாடின்மை, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்வதற்கான அணுகுமுறைகளைக் கொண்டதாகும். அதிகாரப்பரவல் மூலமாக உள்ளாட்சி நிர்வாகத்தினரின் பங்களிப்பு மற்றும் ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை **மக்களே முனைந்து நின்று தங்கள் சொந்த நடவடிக்கையாக** ஏற்று நடத்துவதால், இதனை **"அனைவருக்கும் கல்வி இயக்கம்"** என அழைக்கிறோம்.

## 8.8.1. திட்டக் குறிக்கோள்கள்

1. 2003ஆம் ஆண்டிற்குள்ளாக பள்ளி வயதிலுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்.
2. பள்ளியில் சேர்க்கப்பட்ட அனைவரையும் 2007 ஆம் ஆண்டிற்குள்ளாக ஐந்தாம் வகுப்பை வெற்றிகரமாக முடிக்கச் செய்தல்.
3. பள்ளியில் சேர்க்கப்பட்ட அனைவரையும் 2010 ஆம் ஆண்டிற்குள்ளாக எட்டாம் வகுப்பை வெற்றிகரமாக முடிக்கச் செய்தல்.
4. அனைவருக்கும் வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை உறுதி செய்தல்.
5. சமூக, பொருளாதார அடிப்படையிலோ, ஆண், பெண் இன வேறுபாட்டினாலோ மாணவர்களின் சேர்க்கை, இடைநிறுத்தம், தொடர்ந்து படித்தல், கற்றலடைவு ஆகியவற்றில் ஏற்படும் இடைவெளியை முற்றிலுமாகக்களைதல்.
6. பள்ளியில் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் 2010 ஆம் ஆண்டில் இடைநிறுத்தமின்றிப் பள்ளிகளில் தக்கவைத்தல்.

## 8.8.2. திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

பதினான்கு வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்குவதற்கான காலக்கெடுவுடன் கூடிய செயல்திட்டம்.

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை உறுதியுடன் நிறைவேற்றும் திட்டம்.
2. அடிப்படைக்கல்வியின் வாயிலாகச் சமூகநீதியை வளர்க்க வாய்ப்பளிக்கும் திட்டம்.
3. ஊராட்சி மன்றம், கிராமக் கல்விக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் போன்ற அமைப்புக்களை, ஆரம்பக் கல்வி நிர்வாகத்தில் ஈடுபடச் செய்யும் திட்டம்.
4. அனைவருக்கும் கல்வி வழங்குவதில் அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் திட்டம்.
5. மைய, மாநில மற்றும் உள்ளாட்சி நிர்வாகங்களின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் திட்டம்.
6. ஆரம்பக்கல்வி பற்றிய மாநில அரசின் தொலை நோக்குக் குறிக்கோள்களை இலக்கிட்டு காலவரம்புக்குள் நிறைவேற்றுவதற்கான செயல்திட்டம்.

## 8.8.3. வட்டார வளமையம் (Block Resource centre)

தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் உள்ள 385 ஒன்றியங்களிலும், ஓர் ஒன்றியத்திற்கு ஒரு வட்டார வளமையம் என 385 வட்டார வளமையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் வட்டார வளமைய அமைப்புக்குப் பதிலாக, கல்விச்சரகம் உள்ள இடங்களில் பள்ளித்தொகுப்புக் கருத்தாய்வு மையங்கள் (Cluster Resource Centres) வட்டார வளமையங்களாகச் செயல்படும். ஒவ்வொரு மையத்திலும் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணிநிலையில் ஒரு மைய மேற்பார்வையாளரும், பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில் ஏழு ஆசிரியப் பயிற்றுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியப் பயிற்றுநர்கள் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல் என்று பாடவாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வட்டார வளமையங்களின் பணிகள்

1. மாணவர் சேர்க்கை, தக்க வைத்தல், பள்ளி வகுப்புக்களை முடிக்கச் செய்தல் ஆகிய குறிக்கோள்களை நூறு விழுக்காடு அடையும் வகையில் வீட்டுக்கணக்கெடுப்பு, பள்ளித் தகவல் ஆகியவற்றைப் புதுப்பித்துப் பராமரித்தல்.

2. கிராம, வட்டார தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் திட்டம் தயாரித்து அவற்றைத் தொகுத்து, மாவட்டத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்து, மாவட்டத்திட்ட அலுவலகத்துக்கு அனுப்புதல்.

3. வட்டார வளமைய அளவிலான ஆண்டுத்திட்டப் பணிகளை வரையறுத்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

4. வீடுவாரியாகப் பள்ளிவயதுக் குழந்தைகளையும், பள்ளிக்கு வெளியில் உள்ள பள்ளிசேராத மற்றும் இடைநின்றவர்களையும் துல்லியமாகக் கணக்கிட்டு அவர்களை மாற்றுப்பள்ளிகள்/ இணைப்புப் பள்ளிகளில் சேர்க்க ஏற்பாடு செய்தல்.

5. பள்ளி / மாற்றுப்பள்ளி தொடங்க நடவடிக்கை எடுத்தல்.

6. கிராமக் கல்விக்குழு மூலமாகப் பள்ளிக்கு வழங்கப்படும் பள்ளி மானியம், ஆசிரியர் மானியம், துணைக் கருவிகள் மானியம் ஆகியவற்றை வெளிப்படையாகவும்,சரியாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

7. வட்டார அளவில் நடைபெறும் கட்டடப் பணிகளைக் கண்காணித்து அவற்றின் தரத்தை உறுதி செய்தல்.

8. கிராம அளவிலும், வட்டார அளவிலும் கல்வி விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

9. வட்டார அளவில் திட்ட வெற்றிக்காகப்பிற அரசுத்துறைகளுடனும், அரசுசாரா அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

10. பள்ளித் தலைமையாசிரியர்கள் பங்கேற்கும் மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி, திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்பாடுகளை அகற்றுதல்.

11. ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியையும், மாற்றுப் பள்ளி பயிற்றுநர்கள், பால்வாடி, அங்கன்வாடி பணியாளர்கள், கிராமக் கல்விக்குழு உறுப்பினர்கள் போன்றோர்க்குப் பயிற்சித் திட்டங்களையும் வகுத்து நடத்துதல்.

12. பயிற்சித் தேவைகளைக் கணித்து அட்டவணை தயாரித்தல்.

13. மாவட்டத் திட்ட அலுவலர் நடத்தும் ஆய்வுக்கூட்டங்களில் பங்கேற்றல். மாதாந்திர அறிக்கைகளை அனுப்பி வைத்தல்.

14. வட்டார வளமையச் செயல்பாடுகளுக்கான செலவினக் கணக்குகளைப் பராமரித்து தணிக்கைக்கு அனுப்புதல்.

15. மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்களின் ஆண்டு, மாத, வார பணித்திட்டம் தயாரித்தல்.

16. பள்ளிமேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.

17. ஆண்டுத்திட்டம் தயாரித்தல்.

18. செயல்திறன் குறைந்த பள்ளிகளை (Low Performing Schools) இனங்கண்டு, தரவரிசை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

19. வட்டார வளமையப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் செயல்திறன் குறைந்த பள்ளிகளில் 5 பள்ளிகளை தத்தெடுத்து மேம்படுத்துதல் (School Adoption Programme)

20. பள்ளியில் சென்று வழங்கும் பயிற்சிக்கான (School based Training) நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

21. பள்ளியை கல்விநலப் பார்வையிடுதல் (School Visits)

22. மாற்றுப் பள்ளிகளை நெறிப்படுத்தும் பார்வையிடல்.

23. மழலையர் கல்வி மையங்களை நெறிப்படுத்தும் பார்வையிடல்.

24. வட்டார அளவில் தரக் கண்காணிப்புக்குழு அமைத்தல். (கல்வியாளர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள், பெண்கள், ஆதிதிராவிடர், மலைவாழ் மரபுக்குடியினர் ஆகியோரில் ஒவ்வொரு பிரிவிலும் ஒருவர் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற வேண்டும்).

25. பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையக் கூட்டங்களில் கலந்துகொள்ளல்.

26. கல்வி மேம்பாட்டுக்கான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆசிரியர்கள் செயலராய்ச்சி நடைவடிக்கைகளை மேற்க்கொள்ள வழிகாட்டுதல்.

27. மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர், கூடுதல் மாவட்டத்திட்ட ஒருங்கிணைப்பாளர், உதவித்தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

### 8.8.4. பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் (Cluster Resource Centre)

ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் வகையில் கற்பித்தலில் புதிய அனுகுமுறைகள், உத்திகள், பாடத்திற்குப் பொருத்தமான கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல், பயன்படுத்துதல், போன்றவற்றை நடைமுறைச் சாத்தியமாகவும், அனுபவபூர்வமாகவும் அறிந்து கொள்ளவும் தங்கள் பணியில் ஏற்படும் பிரச்சனைகளைக் கலந்தாலோசித்துத் தீர்வு காண்பதற்காகவும் ஆசிரியர்கள் ஒன்று கூடிச் சிந்தித்தாவன முயலுவதற்காகவும் பரிமாறிக்கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையமாகும். இதனை ஆசிரியர்களின் ஆற்றல் மேம்பாட்டு மையம் என்றும் அழைக்கலாம்.

## மையம் அமைத்தல்

ஒருகுறிப்பிட்ட பகுதியிலுள்ள 10 முதல் 12 பள்ளிகளை இணைத்து 40 ஆசிரியர்கள் வரை உறுப்பினர்கள் உள்ளவாறு மையம் அமைக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு மையத்தை அமைக்க வேண்டும். அனைத்து உறுப்பினர்களும் வந்து செல்வதற்கு ஏற்ற போக்குவரத்து வசதியும், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான இடவசதியும் உடையதாக உள்ள பள்ளியை மையமாகத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பள்ளி அரசு, ஊராட்சி, நகராட்சி ஆகியவற்றைச் சார்ந்த பள்ளியாக இருத்தல் வேண்டும். இம்மையங்களுக்கெனவே புதிய கட்டிடங்களும் கட்டித்தரப்பட்டுள்ளது.

## மைய ஒருங்கிணைப்பாளர்

மையப் பகுதிப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களில் பணி மூத்த நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மைய ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். பணி மூப்பில் அடுத்து உள்ளவர் உதவி ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். தவிர்க்க இயலாத காரணங்களால் பணி மூப்பில் உள்ளோர் ஒருங்கிணைப்பாளராகவோ அல்லது உதவி ஒருங்கிணைப்பாளராகவோ இயருக்க இயலாதநிலையில் அவரிடம் எழுத்து மூலம் ஒப்புதல் பெற்றுக்கொண்டு பணிமூப்பில் அடுத்துள்ளவரை நியமிக்கலாம். மையப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஒருங்கிணைப்பாளராகவோ, உதவி ஒருங்கிணைப்பாளராகவோ இல்லாத நிலையில் அவர் மையத் தொடர்பாளராகச் செயல்படலாம். கருத்தாய்வு மையத்திற்கு ஒருவரென அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் பட்டதாரி ஆசிரியர் கல்வித் தகுதியில் ஒருங்கிணைப்பாளர்கள் (CRCTE) நியமிக்கப்பட்டு வடட்டார வளமையத்தின் கீழ் இயங்கி வருகின்றனர்.

## பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையங்களின் பணிகள்

1. மையம் அமைத்தல், இருப்பிட வரைபடம் தயாரித்தல்.
2. மைய உறுப்பினர்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்துவைத்தல்.
3. மையச் செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் கருத்து வள நிறுவனங்கள், கருத்தாளர் முகவரி ஆகியவற்றைத் தொகுத்து வைத்துக்கொள்ளுதல்.
4. ஓர் ஆண்டிற்கான மையத்தின் நிகழ்வுகளைத் திட்டமிடுதல்.
5. ஆண்டிற்கான திட்டத்தில் மைய உள் நிகழ்வுகள், வெளி நிகழ்வுகள் எவை என்பதை வகைப்படுத்துதல்.
6. நிகழ்ச்சிகளை நடத்த நேர மேலாண்மையுடன் நிகழ்ச்சியை நடத்திச் செல்லுதல்.
7. நிகழ்ச்சிகளை மதிப்பிடுதல்.
8. நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தல்.
9. மதிப்பீட்டின் அடிப்படையில் குறை, நிறைகளை ஆராய்ந்து, குறைகளைக் களைய ஆவன செய்தல்.
10. மையத்திற்குத் தேவையான பொருள்கள், நிதிவசதிகளைச் சேகரித்துச் சிறப்பாகப் பயன்படுத்துதல்.
11. கிராமக் கல்விக் குழுவினருக்குப் பயிற்சி அளித்தல், பயிற்சித் தேவையை ஆய்வு செய்து பயிற்சியளித்துப் பயிற்சியின் தாக்கத்தையும் அறிதல்.
12. பிற மையங்களுடன் தமது மையத்தை இணைத்துச் சிறப்புச் செயல்பாடுகளைப் பரிமாறிக்கொள்ளுதல்.

13. கருத்தாய்வுப் பார்வை – மையத்தைச் சார்ந்து பள்ளிகளைத்தாமோ அல்லது குழுவாகவோ பார்வையிட்டு ஆசிரியர்களின் செயல்பாடுகள், கற்றல் கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்தியவிதம் பள்ளிகளின் நடைமுறை ஆகியன பற்றி மையத்தில் தம் கருத்துக்களை வெளிப்படுத்தி விவாதித்தல்.
14. மைய நிகழ்வுகளின் அறிக்கையை மேல்நிலை அலுவலர்க்கு சமர்ப்பித்தல்.
15. மையத்திற்கான செலவினங்களை உரியமுறையில் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல்.

## 8.8.5. கிராமக் கல்விக்குழு

பள்ளி அளவில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்துச் செயல்பாடுகளும் பள்ளியின் கிராமக் கல்விக்குழு அல்லது பெற்றோர், ஆசிரியர் குழுவினரின் பொறுப்பாகும்.

### அமைப்பு

| | | |
|---|---|---|
| ஊராட்சி மன்றத் தலைவர் / வார்டு உறுப்பினர் | தலைவர் | 1 |
| வார்டு உறுப்பினர் / தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி | உறுப்பினர் | 1 |
| பள்ளித் தலைமையாசிரியர் | உறுப்பனர் செயலர் | 1 |
| பெற்றோர் ஆசிரியக் கழகத்தின் தலைவர் | | 1 |
| சுயஉதவிக்குழு உறுப்பினர் | உறுப்பினர் | 1 |
| (பெற்றோராக இருத்தல் வேண்டும்) | | |
| (இயலாக் குழந்தையின் பெற்றோர் ஒருவர் உட்பட) | உறுப்பினர் | 4 |
| மழலையர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் / | | |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் | உறுப்பினர் | 1 |
| தொண்டு நிறுவனப்பிரதிநிதி | உறுப்பினர் | 1 |
| கல்வியாளர் | உறுப்பினர் | 1 |
| ஆசிரியர் பிரதிநிதி | உறுப்பினர் | 1 |
| சுகாதாரப் பணியாளர் | உறுப்பினர் | 1 |
| கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் | 1 |
| | மொத்த உறுப்பினர்கள் | 15 |

### கிராமக் கல்விக்குழுவின் பணிகள்

1. அனைவருக்கும் கல்வி இயக்கத்திட்டப் பணிகளில் கிராமக்குழுவினரும் பங்கேற்பதற்காக வசதியாக, அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் கலந்து கொள்ளுதல்.
2. பள்ளியின் தேவைகளை நிறைவேற்றப் பள்ளித்திட்ட அறிக்கை தயாரித்தல் (School Plan Document)
3. புதிய பள்ளி / மாற்றுப்பள்ளி தொடங்க நடவடிக்கை எடுத்தல்.
4. விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தி, சமுதாயத்தை ஒன்றுபடுத்தி திட்டத்தினைச் செயலாக்குதல்.
5. பள்ளிக்கு வழங்கப்பட்ட மானியத்தை முறையாகச் செலவிட்டு உச்சப் பயனை அடைதல்.
6. கிராமக் கல்விக்குழுத் தலைவரும் உறுப்பினர் செயலரும் இணைந்து வங்கிக் கணக்கு தொடங்கி பெறப்படும் நிதியைப் பராமரித்தல்.

7. பள்ளிக்கட்டடம், கழிப்பறை வசதி, குடிநீர், கட்டடம் பழுது பார்த்தல் போன்ற கட்டுமான வேலைகளைச் சமுதாய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளுதல், மக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியினைக் கொண்டு, கட்டுமானப்பணிகளுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் நிதியைச் சரிகட்ட ஏற்பாடு செய்து, பள்ளி கிராமப்பொதுச் சொத்து என்னும் பொதுமை உணர்வை வளர்த்தல்.
8. பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து எட்டாம் வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்கச் செய்தல்.
9. கல்வி விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.
10. பள்ளியில் விழாக்கள் நடத்துதல். குழந்தைகளின் திறன்களை வெளிக் கொணரும் வகையில் பொது நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் நடத்துதல்.
11. திட்டச் செயல்பாடு சிறப்பாக நடந்தேறிட, சமுதாய உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துதல்.
12. கல்வி உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் மாற்றுப் பள்ளிகள் தொடங்க ஏற்பாடு செய்தல்.
13. பள்ளியில் சேராத குழந்தைகளையும், இடையில் நின்றவர்களையும் கண்டறிந்து அவர்களைப் பள்ளியிலோ, மாற்றுப் பள்ளியிலோ சேர்க்க நடடிவக்கை எடுத்தல்.
14. மாற்றுப்பள்ளிகள், இணைப்புப் பள்ளிகள் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
15. குழந்தைகளின் அடைவு நிலையைக்கண்காணித்துப் பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தல்.
16. கிராமக் கல்விப் பதிவேட்டினைப் (VER) பராமரித்து அனைத்துத் தகவல்களையும் அதில் பதித்தல்.
17. பள்ளி அறிவிப்புப் பலகையில் திட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை எழுதி வைத்தல்.
18. மாதம் இருமுறை கூட்டம் நடத்தி, பள்ளி வளர்ச்சியைக் கண்காணித்தல்.

**செயல்**

உங்களூர் கிராம சமுதாயம் விரும்பும் பிற கல்வி நல மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி தங்களூரின் கல்வியை தாங்கள் விரும்பும் வண்ணம் ஆக்கிக்கொள்வதற்காகவே கிராமக் கல்விக்குழு செயல்பட வேண்டும்–ஏதேனுமோர் திட்டக் கல்விக்குழுவை இந்நோக்கில் பார்வையிட்டு அறிக்கையைப் பதிவிக்க.

## 8.8.6. அனைவருக்கும் கல்வி இயக்கத்தால் ஏற்பட்டுள்ள கல்வி முன்னேற்றம்

1. அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டிட வசதி – கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.
2. பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மாணவர்களின் இடை நிறுத்த வீதம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.
3. கற்றல் – கற்பித்தலுக்கான துணைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
4. ஆசிரியர்க்குப் பணியிடைப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
5. கணினி – விளையாட்டு – யோகாசனங்கள் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
6. மாணவர்களின் அடைவுநிலை உயர்த்தப்பட்டு வருகிறது.
7. இயலாதோர்க்கான ஒருங்கிணைந்த கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.
8. பள்ளிகளிலிருந்து இடையில் நின்றோர்க்காக மாலை நேரங்களில் மாற்றுக் கல்வித்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
9. கல்விக்காப்புறுதித் திட்டம் பள்ளியிலிருந்து இடையில் நின்றோரை, முறையான பள்ளிகளில் 6 மாதம் படிக்க வைத்து மேல்வகுப்பிற்குத் தகுதியுடையவராக்கி வருகிறது.

## 8.9. தொடக்கக் கல்வியின் தரத்தை நிலைநாட்டுதல்

அனைவரையும் பள்ளியில் சேர்த்தலில் பேரளவில் வெற்றிகண்டு வரும் நிலையில், தக்கவைத்தலிலும் நிறைவுறுத்தலிலும் முன்னேற்றத்தை நிலைநாட்டி வந்தாலும், திருப்திகரமானதோர் தரம் என்பது இன்னும் எட்டாக் கனியாகவே உள்ளது. தொடக்கக் கல்வியில் தர மேம்பாட்டை அடைவதற்குத் தேசிய கல்விக் கொள்கை (NPE 1986)-யும் அனைவர்க்கும் கல்வி இயக்குநர் (SSA)-மும் பல்வேறுபட்ட ஆசிரியர் ஊக்க முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. வகுப்பறைச் செயல்பாடுகளாலும், ஆசிரியர் திறனூக்கப் பயிற்சிகளாலும் தொடக்கப்பள்ளி மாணவர்களின் அடைவில் கணிசமானதோர் முன்னேற்றத்தைக் கல்விப் பணியாளர்கள் சாதிக்க வேண்டும். அதற்காகப் பல்வேறு கூட்டு முயற்சிகள், ஒருநோக்கு ஆக்கப்பணிகள், வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. செயலாராய்ச்சி, களநிலைஆய்வு, கற்றல் உத்திகளின் ஏற்புடைமை, நம்பகமானதோர் தொடக்கக் கல்வி மதிப்பீடு முதலிய களங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, மிக்க விளைவுள்ள தரமுயர்த்தும் இடுபொருட்களைக் களமிறக்க வேண்டும்.

பங்கேற்பு முறையிலான திட்டங்கள் தீட்டுதல், கல்வித்தர மேம்பாட்டை அடைய சமுதாயத்தை இணைத்துக் கொள்வது, சமுதாயத்தின் கல்வி விருப்பங்களை நிறைவேற்றித் தரும் நம்பகமான பள்ளிகளாக அரசின் பள்ளிகளை மாற்றுவது, பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுக்கும், தனியார் பள்ளிகளை, கட்டணப் பள்ளிகளைத் தரத்தில் விஞ்சும் பள்ளிகளாக அரசுப்பள்ளிகளை விருப்பாக்கம் செய்ய வேண்டுவது உடனடி அவசியமாகும். இலவசக் கல்வி வழங்கும் அரசுப்பள்ளிகள் மற்றும் நிதிபெற்றியங்கும் பள்ளிகளைப் பிற தனியார் பள்ளிகளைக்காட்டிலும் மேம்பட்டதாக மாற்றி அனைவர்க்கும் கல்வி முயற்சிகள் கடையனுக்கும் கடைத்தேற்ற கிடைக்குமாறு சமூகநீதியைச் சாதிக்க ஆசிரியர்களும் அலுவலர்களும் முயல வேண்டும். தொடக்கக் கல்வி முன்னேற்றத்திற்கான அரசு நிதி ஒதுக்கீடுகள் பேரளவில் கிடைக்கும் இத்தறுவாயில், அரசின் முயற்சிகளோடு துறைப்பணியாளர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் கல்வித்தர மேம்பாட்டை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். கல்வியில் வசதி வாய்ப்புள்ளோருக்கு மேம்பட்ட தரமும் ஏழை எளியவர்களுக்குக் குன்றிய தரமும் என்ற நிலையை நாம் மாற்றிச் சமதரம், உயர்தரம் எல்லார்க்கும் கிடைத்திடத் திட்டமிட்ட வகையில் உறுதிபூண்டு செயல்பட வேண்டும்.

- ◈ பொருளாதாரத்தில், தகவல்நுட்பத்தில், போக்குவரத்தில், வேளாண்மையில், வாழ்க்கை வசதிகளில் மேம்பட்டுவரும் நம் தாயகம் கல்வியிலும், சுகாதாரத்திலும் பின்னடைவுகளைச் சந்திக்கவிடலாகாது.

- ◈ கற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாவதைப்போல் கற்பதனால் ஏற்படும் நாட்டுயர்வும், அமைதியும், முன்னேற்றமும் அனைவர்க்கும் திருப்தியளிக்க வேண்டும்.

- ◈ எட்டாண்டு கால உயர்தொடக்கக் கல்வியுடன் ஒருவர் தம் படிப்பை முடித்துக் கொண்டு வாழத்தலைப்பட்டாலும், கல்வியால் அவருக்குக் கிடைத்தளிக்க வேண்டிய அனைத்து நியாயங்களும், தற்சார்பும், தன்னம்பிக்கையும் கிடைத்திருப்பதாக அவர் மன நிறைவும் துணிவும் அடையும் வகையில் கல்வி வாழ்க்கைப் பயன்களுக்கு உத்திரவாதமளிப்பதாய் அமைவதே தரமான கல்விக்கு அடையாளமாகும்.

- ◈ வன்முறை, சுயநலப்பத்து, குறுகிய மனப்பான்மை, தீய பழக்கவழக்கங்கள் முதலிய சமூக விரோத கூறுகளற்ற இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும்.

- அறிவியல் மனப்பான்மை, காரணகாரிய ஆய்வறிவு, சுயசிந்தனை, நோக்கத்தெளிவு கொண்டவர்களைத் தான் வழங்கும் எட்டாண்டு காலக்கல்வியால் பள்ளிகள் ஆக்கித்தர வேண்டும்.

- எழுதப்படிக்கத் தெரிந்தவர்களை உருவாக்கும் ஒரு மேம்போக்கான முயற்சியாகத் தொடக்கக் கல்வி அமையாமல், மாணவர்களிடத்திலே கடமை உணர்வும், உரிமை வேட்பும், அரசியல் விழிப்புணர்வும் பொலியுமாறும் ஆக்கித்தர வேண்டும்.

- குடிமைப்பண்புகளும், ஆண்டான்—அடிமை என்ற இருநிலையற்ற, ஏமாற்றாத ஏமாற்றவியலாத தற்சார்புக் குடிமக்களை நாடு செழிக்கும் வண்ணம் உருவாக்குவதே தரமான தொடக்கக்கல்வி என்பதன் முழுப்பொருளாகும்.

**செயல்**

ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட அம்சங்கள் & செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் நடத்திப் பதிவிக்க.

இவற்றையெல்லாம் கல்வியாளர்களும், அலுவலர்களும், ஆசிரியர்களும் நாட்டு நலநோக்கிலும், பணிக்கடன் ஆற்றும் அறநோக்கிலும், தன்னார்வலத்துடன் தகஅமைத்துத் தர வேண்டும்; ஒவ்வொரு கல்விப் பணியாளரும் தத்தம் அளவில் ஈடுபாட்டுடனும் உண்மை உணர்வுடனும் கடனாற்றிச் சாதித்துக் கல்விச் சவால்களை, களத்திலிருந்து வரும் அறைகூவல்களை எதிர்கொண்டு வெற்றி பெற்று நாட்டு நலன் விழைய வேண்டும் என்றே இந்திய நாட்டின் கலைத்திட்டப் புனராக்கம் 2005 மேன்மேலும் வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது.

# அலகு – 9
# பள்ளிக் கல்வி – கட்டமைப்பு

## 9.1.0. முன்னோக்கு


கல்வி என்பது மனிதனைச் சமூகப்பண்பினனாக்கும் வழிமுறை ஆகும்.

- குழந்தையின் ஒட்டுமொத்த முழுமையான மேம்பாட்டுக்கான திரண்ட முயற்சி.
- குழந்தையின் உடல், மனம், உயிர் அவற்றின் உணர்வுகள், மனப்பான்மைகள், தொடர்புகள், குணநலம், ஆளுமை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வழி.
- இயல்பாகவே உள்ளார்ந்த ஆற்றல்களுக்கும் சுய வெளிப்பாட்டுக்கும் ஒரு வடிகால்.
- உரிமையும் கடமையும் கொண்ட சமுதாய உறுப்பினர்களை உருவாக்கும் நாட்டு நலப்பணி.
- மனிதர் நல்வாழ்க்கை வாழ, வளம் பெற வழிகாட்டும் ஓர் அறப்பணி என்று பல பரிமாணங்களில் கல்வியை விவரித்துக் கொண்டே போகலாம்.

அடிப்படையான, முறைசார்ந்த வகையில் அமைக்கப்பட்டுள்ள கல்வியமைப்பில், பிறப்பு தொடங்கி 16 வயது வரை உள்ள கல்வியமைப்பு பள்ளிக்கல்வியாகும். தமிழகத்தில் பள்ளிக் கல்வியமைப்பு கட்டமைப்பு, பள்ளிக்கல்விப் படிநிலைகள், மழலைக் குழந்தைகள் நலனும், கல்வியும் ஆகியவற்றை இவ்வலகில் காணலாம்.

## 9.1.1. பள்ளிக் கல்வியின் படிநிலைகள்

குழந்தையின் உடல் வயது அடிப்படையில் இந்தியப் பள்ளிக் கல்வி நிலைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவை




"துள்ளித்திரியும் வயதில் என்துடுக்கை அடக்கிப் பள்ளிப்படுத்தியிலனே என்தந்தையாகிய பாவி" என்பதோர் தனிப்பாடலின் ஏக்கக் குரல்

தன்வாழ்வில் தான் அடைய வேண்டியனவற்றை உரியவாறு கல்வியால் அடைய இயலாமல் போன ஒ மனிதனின் ஏக்கக் குரல் இது. முறையான பாடசாலைகள், பள்ளிக் கூடங்கள்மட்டுமே ஒருவனின் எதிர்காலத்துக்கு உறுதி அளிக்கமுடியும், நல்வாழ்வுக்கு அரண் செய்யமுடியும் என்பதை உலகில் வாழும் அறிவறிந்த நன்மக்கள் யாவரும் எச்சரிப்பர். அத்தகு வாழ்வாதார முயற்சிக்கு வழிகாட்டுவனவாய் அமைவன பள்ளிகளாகும்; தொடக்கப்பள்ளிகளாகும்.

குழந்தையின் உடல் வயதை அடிப்படையாகக் கொண்ட இவ்வகைப் பிரிவுகளில் கற்றல் தொடர் செயல்பாடுகளின் மதிப்பீட்டு அடிப்படையில் தேக்கம் அல்லது தேர்ச்சி நிகழ்த்தப்படுகின்றது. வகுப்பறைக் கற்றலை மட்டுமே கருதாது கற்றல் தொடர் நிகழ்வு என நோக்கினால் இப்படிநிலைகளில் அமைந்துள்ள நெகிழ்வுத் தன்மையைப் புரிந்து கொள்ளலாம். இப்பிரிவுகள் நாடு, மொழி, சூழல் என்னும் அமைப்புக்கேற்ப வேறுபடுகின்றன.

## 9.1.2. பல்வேறு படிநிலை வேறுபாடுகள்

இந்திய நாட்டின் பல மாநிலங்களிலும் ஒரே விதமான கல்விப் படிநிலைகளே வலியுறுத்தப்படுகிறது. 10+2+3 என்னும் பள்ளிக்கல்வி 10 ஆண்டுகள் வரையும், மேல்நிலைக்கல்வி இரண்டு ஆண்டுகளும், கல்லூரிக் கல்வி 3 ஆண்டுகளும் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வியின் பத்தாண்டுகளை 5 ஆண்டுகள் தொடக்கக் கல்வி என்றும், அடுத்த 3 ஆண்டுகள் உயர்தொடக்கக்கல்வி என்றும் அதற்கடுத்த இரண்டாண்டுகளை அதாவது 9, 10 வகுப்புக்களை இடைநிலைக்கல்வி என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் 6 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பள்ளிக்கல்வி நிலையை

1 முதல் 5 + 6 முதல் 7 வகுப்புகள்

1 முதல் 5 + 6 முதல் 8 வகுப்புகள்

1 முதல் 4 + 6 முதல் 7 வகுப்புகள்

1 முதல் 3 + 4 முதல் 6 வகுப்புகள்

1 முதல் 4 + 5 முதல் 7 வகுப்புகள்

1 முதல் 4+ 5 முதல் 8 வகுப்புகள்

என ஆறு விதங்களில் இந்திய நாடெங்கும் பள்ளிக் கல்வியின் தொடக்க நிலைக் கல்வியமைப்பு மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுக் காணப்படுகிறது.

## 9.1.3. பள்ளி அங்கீகாரம்

நம் நாட்டில் குழந்தைகளின் கல்வியில் அக்கறை கொண்டுள்ள மைய அரசு, மாநில அரசு, சமூக நல அமைப்புகள், தனியார், தொழிற்சாலை நிர்வாகத்தினர் மதப்பிரிவினர் எனப்பலரும் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகின்றனர். பல்வேறு பள்ளிகளும் அரசின் அங்கீகாரம் பெற்றே நடத்தப்பட வேண்டும் எனினும் தொடக்கக்கல்வியின் படிநிலை அமைப்பு அங்கீகாரம் பெறாத சில பள்ளிகளும் சில மாநிலங்களில் செயல்படுகின்றன. கல்வி சார்ந்த சட்டம் மற்றும் விதிகளைப் பின்பற்றி நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் நிர்வாகத்தினரின் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது அரசின் கடமை. கல்வி நிறுவனத்தை நடத்துவோரும் அவ்வப் படிநிலைகளில் உரிய கல்வி அலுவலரிடம் முன் அனுமதி பெறவேண்டும்.

பள்ளி, முறையாகப் பதிவு செய்யப்பட்டு அரசின் இட கால மாறுபாடுகளுக்கேற்ப உரிய கட்டணங்களை மட்டுமே பெற்று, ஆசிரியரின் கல்வித் தகுதி, நியமனம் ஆகிய அரசின் சமூக நலக் கொள்கைகளுக்கு உட்பட்டு கல்வி பயிலும் குழந்தைகளின் அனைத்து வசதிகளையும் உறுதி செய்யும் வகையில் சுகாதாரம், கற்றல் கருவிகளைக் கொண்டதாகவும் அமைக்கப்பட வேண்டும். உரிய அலுவலர்களால் அங்கீகரிக்கப்படாத பள்ளிகள் தொடர்ந்து செயல்பட இந்தியச் சட்ட முறைகளால் தடை விதிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் நலனை, மையமாகக் கொண்ட பள்ளி நடத்துவதற்கான அங்கீகாரம் வழங்கும் சட்டவிதிகள் இயற்றப்பட்டுள்ளன. எனினும் உலகமயமாதல், தனியார் மயமாதல், தாராளமயமாதல் என்னும் மாறிவரும் சூழலுக்கேற்ப கோடிக்கணக்கான மக்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்ற தனியார் தொடங்கி நிகழ்த்தும் பள்ளிகள் அரசுத்துறையினரால் வரவேற்கப்படுகின்றன. ஆயினும் இப்பள்ளிகளை வணிகநோக்கில் நடத்துவதைத் தடுக்க அங்கீகார நடைமுறைகளில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு பல மாநில அரசுகளும் கல்வி நலனைப் பாதுகாக்க முயன்று வருகின்றன.


## 9.1.4. அரசுப்பள்ளிகள், அரசின் நிதியுதவி பெறும் பள்ளிகள்

இந்தியாவில் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பாக உள்ளூர் அரசாட்சி அமைப்புகளின் உதவியுடன் தொடக்கக் கல்வி நடைபெற்று வந்தது. அங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தனியார், மதம், மொழி, இன வகைகளில் தொடங்கி நடத்தும் பள்ளிகளுக்கு அரசு நிதி உதவி செய்யும் முறை நடைமுறைக்கு வந்தது. விடுதலைக்குப் பின்பு பள்ளி வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் தேவைக்கேற்ப அரசுப் பள்ளிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

வருமானம் குறைந்த ஏழை மக்களுக்கு கட்டடம், நவீனக் கல்விக் கருவிகள், புத்தகங்கள், உணவு சீருடை எனப் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி அரசுப் பள்ளிகள் செயல்படுகின்றன. தனியார் நடத்திவரும் அரசின் நிதியுதவிப் பள்ளிகளிலும் குழந்தைகளின் நலத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. கட்டட மான்யம், நிர்வாக மான்யம், புதிய நியமனங்கள் போன்றவற்றிற்கும் நிதியுதவியை அரசு வழங்கி வருகின்றது. பற்றாக்குறை ஏற்படுகையில் அரசுநிதி உதவி பெறும் பள்ளிகள் பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் வாயிலாகப் பள்ளிகளுக்குத் தேவையான வசதிகள் நிறைவு செய்யப்படுகின்றன. அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட தொடக்கப் பள்ளிகளில் கிராமக்கல்விக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசுத் தொடக்கப்பள்ளிகளுக்கு அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு தொடக்கப்பள்ளிகள் தமிழகத்தில் தன்னிறைவை அடைந்துள்ளமை மகிழ்ச்சியுடன் குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

### 9.1.4.1. பல்வகை நிர்வாக அமைப்பின் கீழ் பள்ளிகள்

தமிழக அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பள்ளிகளில் நிர்வாக அடிப்படையில் சில வேறுபாடுகளுடன் பள்ளிகள் இயங்கி வருகின்றன




அரசின் நிதி உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள் வேறுபாடு உடையவை எனினும் இவை அனைத்தும் கல்வித் துறையின் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு உரிய கல்வி அலுவலர்களின் ஆட்சிக்குட்பட்டே செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## 9.2. மழலையர் நலனும் கல்வியும் (ECCE)

குழந்தை தாயின் வயிற்றில் வளரும் பொழுதே ஊட்டச் சத்துமிக்க நல்லுணவு, நற்காற்று, நல்ல தண்ணீர், தாயின் இதமான நல்லுணர்வு ஆகியன குழந்தையின் உடல், மன வளர்ச்சிக்குக் காரணங்களாக அமைகின்றன. தாயின் உணவுப் பற்றாக்குறைகளும், மனநிலை மாறுபாடுகளும் பிறக்கும் குழந்தையின் உடற்கூறுக்குறைபாடுகளையும், இயலாமைகளையும் உண்டு பண்ண வாய்ப்புண்டு. எனவே சேயின் நலம் தாயின் நலத்தை அடிப்படையாகக் கொண்டது. பெற்றோரின் கல்வி நிலையும், பண்பாட்டுச் சூழலும், குடும்பத்திலுள்ள பிறர் பெற்றிருக்கும் கல்வியும் குழந்தையின் உடல், மன வளர்ச்சியில் பங்கேற்கும் காரணிகளாகின்றன. எனவே எல்லாக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும், ஊட்டமிக்க சத்துணவு, தூய்மையான காற்று, தண்ணீர், நோய்த்தடுப்பு, பாதுகாப்பு, உளவியல் அடிப்படைக் காரணிகள் சூழலியல் நல்லமைவுகள் ஆகியன மிகமிக அவசியம். குழந்தை பிறந்து வளரும் சூழ்நிலை சுகாதாரம் ஒருங்கிணைந்த சூழலாக இருக்க வேண்டியது இன்றியமையாதது. பிறப்பதற்கு முன்னும், பிறந்த பிறகு வளர்ச்சிக் காலத்திலும் ஒரு குழந்தைக்கு வழங்க வேண்டிய அனைத்துத் தேவைகளையும், நன்மைகளையும் நாம் வழங்கினால்தான் நாடு நல்ல பிள்ளைகளை வளர்த்தாக்கவியலும். மழலைப் பருவத்தில் குழந்தைகளை வளர்ப்பது எச்சரிக்கைமிக்க, திட்டமிட்ட பல கடமை நிறைவேற்றல்களை அடிப்படையாகக் கொண்ட செயலாகும்.

பெற்றோரின் திருமண வயது, கருவுற்ற தாய்க்குச் சத்துணவு குறித்த விழிப்புணர்வு, உரியகாலத்தில் செய்யப்படும் நோய்த்தடுப்பு எச்சரிக்கைச் செயல்கள் ஆகியவற்றினால் ஒரு நாடு வலுவான நல்ல குழந்தைகளைப் பெற முடியும். தாய் சேய் நலம் குறித்த அரசின் திட்டங்கள்

குழந்தைகள் பிறப்பதற்கு முன்னரே உடல் மனவளத்துடன் அமைய மனிதவள நோக்கில் திட்டமிடப்பட்டு அரசுகளால் நிறைவேற்றப்படுகின்றன.

இந்நோக்கிலேயே மத்திய மாநில அரசுகள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கருவுற்ற தாயினைப்பேணுதல் (Anti Natal Care) என்ற மக்கள் நல்வாழ்வுச் செயல்திட்டங்களின் வாயிலாக தாய் கருவுற்ற மூன்றாம் மாதத்திலேயே பதிவு செய்து 4, 5 மாதங்களில் தாய்க்கு ரணஜன்னி (Tetanus Toxtoid Cerum-TTC) தடுப்பூசியும், இரத்தப்பரிசோதனை ஆய்வும், சிறுநீர்ப் பரிசோதனையும், 7, 9 மாதங்களில் குழந்தையின் நல்வளர்ச்சியை உறுதி செய்ய ஒலிக்கதிரியக்க (Scan) ஆய்வும், பிரதிமாதம் இரத்த அழுத்தமும், எடையும் கண்டறியப்பட்டு, 7, 8, 9 மாதங்களில் இரும்புச்சத்து, கால்சியம், வைட்டமின் மாத்திரைகளும், சுகாதார நலக்கல்வியும், ஊட்டச்சத்துமாவும் வழங்கப்படுகின்றது.

குழந்தை பிறந்த மூன்று நாள்களுக்குள் காசநோய்த்தடுப்பூசியும், இளம்பிள்ளைவாதச் சொட்டுமருந்தும், 1½, 2½, 3½, மாதங்களில் (DPT) எனப்படும். கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், ரணஜன்னி எனும் முத்தடுப்பூசியும், மீண்டும் இளம்பிள்ளைவாதச் சொட்டுமருந்தும் மஞ்சள்காமலைக்கு மருந்தும், பிறந்த 10 ஆம் மாதத்தில் தட்டம்மைத் தடுப்பூசியுடன் இளம்பிள்ளைவாதத் தடுப்பூசியும், 1½ ஆண்டில் முத்தடுப்பு ஊக்குவிப்பு ஊசியும் திட்டமிட்டு, கிராம நலச் செவிலியரின் களத் தொண்டால் அளிக்கப்படுகிறது. பிறந்த 6 மாதம் முதல் 2½ வயது வரை குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துமாவு உருண்டையும், 2½ வயது முதல் 5 வயது வரை அங்கன்வாடிகளில் முட்டை, காய்கறி, கீரை, பருப்பு கலந்த கலவைச் சத்துணவும் வழங்கப்படுகின்றது.

இவையாவும் இந்நாட்டுத்தாய்மார்கள் முந்தித்தவமிருந்து, நேர்த்திக் கடன்கள் பல கூறி, நினைவெல்லாம் அதுவேயாய், தம் வாழ்க்கைக்கு அர்த்தமாய், கருவுற்று இந்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறக்குமுன்னும் பிறந்தபின் 5 ஆண்டுகள் வரையிலும் ஊட்டமும், திடமும், திரண்டவளர்ச்சியும் பெறுவதற்காக இந்திய அரசுகள் சமூகப்பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கருதாது அனைவர்க்கும் வழங்கும் முன்னேற்புத் திட்டங்களாகும். இதோடு குழந்தையின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், சமுதாயத்தினர், தன்னார்வலர்கள் எனப் பலதிறத்தாரும் குழந்தைவளர்ப்பில் அக்கறைகாட்டிய பெருந்தொண்டாற்றி வருகின்றனர். இவ்வாறெல்லாம் எல்லாரும் கைகோர்த்துக் கருத்தொருமித்து நாளைய பாரதம் என்னும் ஆலமரத்தின் விழுதுகளை நிலமிறக்குகிறார்கள்.

இறையருள் குழந்தைகளை ஐந்து வயதில் அவர்தம் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பெற்றோர் விட்டுப் பிரியமனமின்றி, உற்றார் உறவினர் தோள் மீதும் மார்மீதும் தவழவிட்டுக் கொஞ்சிக்குலவிட விரும்பினாலும் குருவருள் துணைக் கொண்டு நெஞ்சத்திருள் நீங்க, எண்ணும் எழுத்தும், கலையும் திறம்படக் கற்று, அன்பினில் தழைத்தோங்கி, அறம் வளர்த்து அருள்வழி நின்று பொருள் தேடிப் புகழும் தேடி வாழ்வாங்கு வாழ்ந்திடவும் வையம் தழைத்திடவும் வழிகாட்ட நம்மை வேண்டிக் கைகூப்பித் தொழுது நம்மிடம்விட்டுச் செல்கின்றனர். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டுவது நமக்குக் கடமைமிக்கதோர் தெய்வீகப் பணியாகும். நமது ஆசிரியப் பணியில் தழைக்கும் பள்ளிக் கல்வியால் நமக்குப் பெருமிதத்தையும் துறைக்குப் பற்பல நன்மைகளையும் உரித்தாக்குமாறு நாம் நம்மை அர்ப்பணித்து இப்பணியின் மகத்துவத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பிறக்கின்ற நேரத்திலேயே குழந்தை, புற உலகப் பதிவுகளைப் பெறத் தொடங்குகிறது, பேசப்பழகும் முன்பே குழந்தை சூழலைக் கற்கத் தொடங்குகிறது. இப்பருவத்தில் கற்றுக் கொள்பவை பிற்காலத்தில் வாழ்க்கை நிகழ்வுகளுக்கு அடிப்படையாகின்றன. குழந்தைக் கல்வி

என்பது கற்கும் குழந்தைகள் தன்னிடம் தொடர்பு கொண்டுள்ள நல்ல தூய இதயத்தை உணருமாறு செய்வதே என்பது உணரத்தக்கது. வளர் இளமைப் பருவத்தைப் பண்படுத்த குழந்தைப் பருவத்தைப் பயன்படுத்தும் தொடக்கச் செயல்பாடே தொடக்கக் கல்வி ஆகும். இந்தியக் கல்வி முறையில் முன் தொடக்கக்கல்வி மையங்களாகச் செயற்படும் பால்வாடி, அங்கன்வாடி குறித்தும் குழந்தைக் காப்பகங்கள் குறித்தும் நாம் இங்குக் காண்போம்.

### 9.2.1. பால்வாடிகளும், அங்கன்வாடிகளும்

குழந்தை பிறந்ததிலிருந்து 3 வயது வரை கல்வி முறைக்குள் கொண்டுவரப்படாமல் இயல்பாகக் குடும்பச் சூழலில் இருத்தலே சிறந்ததாகும். ஆயினும் நடைமுறை வாழ்வில் உழைப்புக்காக வெளியே செல்லும் தாயாரும், பெற்றோர் கவனிப்பைப் பெற வாய்ப்பில்லாத குழந்தைகளும் நம் நாட்டில் எண்ணற்றோராவர்.

ஆலைத்தொழில், வேளாண்மைத் தொழில், கட்டடத்தொழில், கல்லுடைத்தல் போன்ற உடலுழைப்புப் பணிகளில் ஈடுபடுவோர் குழந்தை பிறந்த உடனேயே வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. அவ்வேளைகளில் தாங்கள் வாழும் இடங்களிலோ, பணி செய்யும் இடங்களிலோ குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள அமைப்புகள் தேவைப்படுகின்றன. இவற்றை அரசு சாரா அமைப்புகள் நிறுவி நடத்தி வருகின்றன. இவற்றைப் பால்வாடிகள் எனக் குறிக்கின்றனர். அரசே ஏற்று நடத்தும் இவ்வகை நிலையங்கள் அங்கன்வாடிகள் என அழைக்கப்படுகின்றன. இங்கு குழந்தைகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, நற்பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது. தமிழகத்து அங்கன்வாடிகளில் சத்துணவு வழங்குவதுடன் பாடல், குழு விளையாட்டு, திருக்குறள் ஒப்புவித்தல் போன்ற பேச்சுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

### 9.2.2. குழந்தைக் காப்பகங்கள்

வேலைக்குச் செல்லும் பெற்றோரின் குழந்தைகள் நகர்ப்புறங்களில் தனியார் மையப் பொறுப்பகங்களில் காலை முதல் மாலை வரை கவனித்துக் கொள்ளப்படுகின்றனர். இவை குழந்தைக் காப்பகங்கள் (Creche) என அழைக்கப்படுகின்றன. இங்கு குழந்தைகளின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப உணவும், விளையாட்டும், பாதுகாப்பும் வழங்கப்படுவதைக் காணலாம். பெரும்பாலும் விளையாடுவதற்கு வாய்ப்பற்ற இடப்பற்றாக்குறை மிகுந்த சூழலில் குழந்தைகள் பல மணி நேரங்கள் அடைத்து வைக்கப்படும் சூழலை நகர்ப்புறங்களில் காண்கிறோம். தொழிற்சாலைகள் மற்றும் பல நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் குழந்தைகளுக்கென குழந்தைக் காப்பகங்களை நிறுவிப் பொறுப்புடன் செயற்படுத்துகின்றன. இங்கே குழந்தைகள் மகிழ்ச்சிகரமான சூழலில் வைத்துக் காக்கப்படுகின்றனர்.

### 9.2.3. சிசுவகங்கள் (Cresche)

பெருநகரங்களில் 11/2 வயதுக்கு மேல் 3 வயது வரை உள்ள குழந்தைகளின் விளையாட்டுலகமாக சிசுவகங்கள் (Infant school) அண்மைக் காலங்களில் செயற்படத் தொடங்கியுள்ளன. இங்குக் குழந்தைகளின் மொழியறிவுத் தொடக்கச் செயற்காடுகளும், ஏணி, ஊஞ்சல், மரமேறுதல் போன்ற உடல்திறன் பழகுநிலைகளும், பாடல், நடனம், போன்ற சூழல்களோடு நிகழ்த்தப்படுகிறது. சிலஇடங்களில் இவ்வகை விளையாட்டுப் பள்ளிகள் (Play Schools) சூழலைக் கற்க இயற்கையிடங்களுக்கு அழைத்துச் சென்று வரவும் ஆங்கில மொழி அறிமுக மையமாகவும் திகழ்கின்றன.

## 9.2.4. மழலையர் கல்வி நடைமுறை

எல்.கே.ஜி. யு.கே.ஜி வகுப்புகள் ஏறக்குறைய எல்லாத் தனியார் பள்ளிகளிலும் இன்று கல்வி முறையின் பொது அம்சமாக மாறியுள்ளது.

மாறிவரும் இந்தியக் குடும்பச் சூழலில் கூட்டுக் குடும்பங்கள் (joint family) தந்தை, தாய், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் மட்டுமே உள்ள சிறு குடும்பங்களாகப் பெரும்பான்மையும் நாட்டின் முன்னேறிவரும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இக்குடும்பங்களில் குழந்தைகள் உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற தாராளமான வாய்ப்பிருந்தாலும் கூட்டுக்குடும்பங்களின் சிறப்பு வாய்ப்புகளான, மகிழ்ச்சி, உறவுச் சூழல், மட்டற்றபரிவு, மொழியறிவுப் பயிற்சி, கூட்டு வாழ்க்கை, சமூக மதிப்பீடுகளை ஒட்டியமைந்த தொடக்க அறிவுச் சூழலை இழந்துள்ளன. மோகத்தின் ஆர்வச் செயல்பாடாக மழலையர் கல்விஉளவியலுக்குத் தொடர்பில்லாத, உடல் வளர்ச்சிக்கு ஊறான எழுத்துப் பயிற்சியில் தொடங்கிக் கல்வியை இரண்டாண்டுகள் முன்கூட்டியே வழங்கும் சூழல் காணப்படுவது வருத்தத்திற்குரியதாகும்.

முறையான சிந்தனையின்றி அமைக்கப்பெறும் இக்கல்விக்கூடங்கள் குழந்தைகளின் கற்கும் ஆர்வத்தைப் பெரிதும் பாதிக்கவும் செய்கின்றன. தாய்மொழி என்னும் சுற்றுச்சூழல் மொழி கற்க இயலாத நிலையில் புதுமொழியும்கூட பேச்சு, கேட்டல் செயல்பாடின்றி வெறும் பார்த்து எழுதும் பயிற்சியாக அமைந்த நிலை மனிதவள ஆற்றலைக் குறைத்துவிடுமோ என அஞ்சும் நிலையும் தோன்றியுள்ளது. ஊரகப் பகுதிகளிலும், இயல்பான தாய்மொழிப்பேச்சு, சூழலைப்புரிந்து கொள்ளல் என்னும் நிலைகளிலிருந்து குழந்தைகள் விடுபடுகின்றனர்.

## 9.3.1. தொடக்கக் கல்வி

ஐந்து வயது நிறைவுற்ற குழந்தைகள் முதல்வகுப்பில் சேர்ந்து ஐந்தாம் வகுப்புக் கல்வி நிறைவடையும் வரை வாய்ப்பளிக்கும் பள்ளிகள் தொடக்கப்பள்ளிகள் எனப்படும். குழந்தைகள் தங்களைச் சுற்றியிருக்கும் உலகைப் புரிந்து கொண்டு, மொழிவாயிலாக விளக்க முற்படுதலின் அடிப்படைத் தேவைகளையும் எண்ணெழுத்து அறிமுகத்தையும் நிறைவு செய்வனவாகத் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன.

சூழல்மொழி, புதுமொழி, எண்களின் அறிமுகச் செயல்பாடுகள், சூழலில் அமைந்துள்ளவற்றை வகைப்படுத்திப் புரிந்து கொள்ளும் அறிவியல் நோக்கு, தன்னைப்பற்றிய உணர்வை உருவாக்கும், பண்பாட்டுச் சூழலை அறியும் சூழ்நிலைக்கல்வியோடு, நன்னெறி / விழுமயங்கள், உடல்நலக்கல்வி ஆகியன தொடக்கக்கல்வியின் பாடத்திட்ட நோக்கங்களாக உள்ளன. தொடக்கக் கல்வியின் குறிக்கோள்களாக அனைவருக்கும் கல்வி வாய்ப்பு, இடைவிலகலின்றி தொடர்ந்து கற்றல், முழுமையான கல்வித் திறன் அடைவுகள் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய நாட்டின் ஊரகப்பகுதிகளில் 1 கி,மீ சுற்று வட்டத்தில் 94 விழுக்காடு தொடக்கப்பள்ளிகளும் 3 கி.மீ சுற்று வட்டத்தில் 84 விழுக்காடு உயர் தொடக்கப்பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 9.3.2.

இடைவிலகலைக் கட்டுப்படுத்த கீழ்க்காணும் நடைமுறைகளை அரசு திட்டமிட்டு மேற்கொண்டுள்ளது.

- பெற்றோர் விழிப்புணர்வு
- சமூக ஒத்துழைப்பு
- பொருளாதார ஊட்டம் வழங்கல்
- குறைந்த பட்சக் கற்றல் இலக்குகள்

- மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்
- அனைவருக்கும் கல்வி இயக்கம்
- மதிய உணவுத் திட்டம்
- தொடக்கக் கல்வி அடிப்படை உரிமையாகவும், கடமையாகவும், அரசியல் சட்டத்தின் 86வது திருத்தம் மூலம் உறுதி செய்யப்பட்டது.
- தேசிய ஆரம்பக் கல்வித் திட்டம்
- நடுவண் அரசின் மனிதவள அமைச்சரைத் தலைவராகக் கொண்டும், மாநில அரசுகளில் கல்வியமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் ஒரு தேசியக் குழு அமைக்கப்பட்டது.
- ஊடகங்களில் பிரச்சாரம் மற்றும் ஊக்கம் ஏற்படுத்துதல்

## 9.3.3. அனைவருக்கும் கல்வி இயக்கம்

சர்வசிக்ஷ அபியான் என அழைக்கப்படும் அனைவருக்கும் கல்வி இயக்கம் இந்திய அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 86–ன்படி இந்திய நாட்டில் 6 முதல் 14 வயதுள்ள 20 கோடி குழந்தைகளுக்கும் கி,பி. 2010க்குள் தரமான தொடக்கக்கல்வி அளிப்பதை உறுதி செய்யத் தொடங்கப்பட்டதாகும்.

- பள்ளி வாய்ப்பில்லாத குடியிருப்புகளில் உடனே தொடக்கப்பள்ளி வகுப்புகள் தொடங்கி நடத்த வாய்ப்பு
- பள்ளியின் உள் கட்டமைப்புகளான, வகுப்பறைக் கட்டடம், கழிப்பிட வசதி குடிநீர்த்தேவை, ஆகியவற்றிற்கு நிதி வழங்கல்.
- ஆசிரியர் தேவைப்படும் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதுடன், பணியில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி, கற்றல் உபகரணங்கள், நிதியுதவி, கல்வி கற்கும் முறைகளை வலுப்படுத்த மாவட்ட வட்டார, வள மையங்களை நிறுவுதல்.
- வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுக்கான கல்வி
- பெண் குழந்தைகளின் கல்வியில் சிறப்புக்கவனம்
- சவால்களை எதிர்நோக்கும் சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளின் கல்வியில் தனி அக்கறை.
- கணினிக் கல்வி எல்லோருக்கும் வழங்குதல்
- அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சிறப்பான செயற்பாடுகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகள்
- வருமான வரி மீது விதிக்கப்பட்ட சிறப்புக் கல்வி வரியிலிருந்து (Educational cess) 8746 கோடியும் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**செயல்**

அனைவருக்கும் கல்வி இயக்கம் – வெற்றிகரமான இயக்கம் – இக்கூற்றின் வன்மை, மென்மைகளை இரு அணிகளாக அமைத்து ஆதாரங்களுடன் விவாதிக்கவும்.

## 9.4. உயர் தொடக்கக் கல்வி

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு முடிய அமைந்துள்ள பள்ளிக் கல்வி உயர் தொடக்கக் கல்வி என அழைக்கப்படுகிறது. ஒன்று முதல் 8 வகுப்பு வரையுள்ள பள்ளிகள் உயர்தொடக்கப்பள்ளிகள் என்றும் நடுநிலைப்பள்ளிகள் என்றும் கூறப்படுகின்றன. இவ்வமைப்பில் மாநில அரசுகளின் பல்வேறு பள்ளிகளில் வேறுபாடுகள் அமைந்துள்ளன என்பதை முன்னரே கண்டோம்.

தமிழகத்தில் உயர் தொடக்க வகுப்புகளில் செயலூக்கக் கற்றல் முறைகள் (Active Learning Methodology) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## 9.4. செயலூக்கக் கற்றல் முறை (ALM)

### நோக்கம்

முதல் ஐந்து வகுப்புக்களை நிறைவு செய்த மொழியறிவும், எண்ணறிவும் கொண்ட மாணவர்களைத் தாமே கற்க வழிகாட்டுதல் இம்முறையின் நோக்கமாகும்.

இம்முறை மாணவர்களுக்குப் பாடப்பொருளை எளிதாக்குவதாகவும், புரிவிப்பதாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்துள்ளது. இம்முறை கற்றலில் அனைத்து மாணவர்களையும் பங்களித்து ஈடுபடுத்துவதாகவும், பின்வாங்காமல் கற்கச் செய்வதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வழிமுறைகள்

- குழந்தைகள் தாமே வாசித்துப் பொருளுணர்ந்து மனவரைபடம் (Mind Map) உருவாக்கும் அணுகுமுறை.
- தன்னை ஆய்வுக்குட்படுத்தும் தன் அனுபவ வினா – விடை அமைப்பு முறை.
- நுண்ணறிவு என்பதைப் பன்முக நுண்ணறிவு என உறுதிப்படுத்தி, உடல், இடம், மொழி, தர்க்கம், படம் எனப் பல்வேறு பரிமாணங்களுக்கும் வாய்ப்பளித்து உதவுதல்.
- ஏற்கனவே அமைந்த பாடத்திட்டங்களுக்கும் இம்முறையை நிறைவேற்றுதல்.
- வாழ்திறன் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம்.

**செயல்**

செயலூக்கக் கல்வி முறை உயர் தொடக்க வகுப்புகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பர். இம்முறையை நீவீர் அறிவீரா ? 6, 7, 8 வகுப்புகளுக்கு நீவீர் கற்பித்தல் பயிற்சி பெறச் சென்றாலும் செல்லவில்லை ஆயினும் ஒரு கற்றல் தொழில்நுட்பம் என்கிற வகையில் மொழிப்பாடம், கணிதம், அறிவியல், சமூகஅறிவியல் என அனைத்துப் பாடங்களுக்கும் இந்நுட்பத்தை நீவீர் நேரில் கண்டு அறிவது அவசியம்.


## 9.5. இடைநிலைக் கல்வி

இந்தியாவில் பள்ளிக்கல்விக் கட்டமைப்பில் வேறுபட்ட படி நிலைகள் நிலவுவதைக் கண்டோம். தமிழகத்தில் 1 முதல் 5 ஆம் வகுப்பு முடிய தொடக்கக் கல்வி (Primary) எனவும், 6 முதல் 8ஆம் வகுப்பு முடிய உயர் தொடக்கக் கல்வி (Upper Primary) எனவும், 9 மற்றும் 10 அம் வகுப்புகளை இடைநிலைக் கல்வி எனவும் குறிப்பிடுகின்றோம்.

தொடக்கக்கல்வியில் எழுத்தறிவும், எண்ணறிவும் பெற்ற ஒரு கற்பவர், உயர் தொடக்க வகுப்பில் தானே கற்றல் முறைகளை அறிந்துக் கற்று, இடைநிலைக் கல்வியில் தன் நாடு, சூழ்ந்த உலகம், அவை சார்ந்த அறிவியல், கணிதம், சமூகவியல் கூறுபாடுகளையும் மொழியின் பயன்பாட்டு விரிவுகளையும் கற்பதை இடைநிலைக்கல்வி கற்றல் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்விருவகுப்புக்களாகிய 9ம், 10ம் உயர்தொடக்கக்கல்விக்கும், மேல்நிலைக்கல்விக்கும் உள்ள இடைவெளியை நீக்கும் பாலமாக அமைந்துள்ளது. இடைநிலைக் கல்வியை அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக 16 வயது வரை அனைவருக்கும் உறுதி செய்ய வழிமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

## 9.6. மேல்நிலைக் கல்வி (HSC)

இடைநிலைக் கல்வித் தேர்ச்சி பெற்ற மாணவன் தன் எதிர்கால வாழ்க்கைக்கு உரிய தொடர் செயற்பாதையை, தொழில் நுணுக்கப்பாதையை எத்துறையில் தேர்ந்தெடுத்து இயங்குவது என்பதை நோக்கமாகக் கொண்டது மேல்நிலைக்கல்வி எனலாம்.




பதினோராம் வகுப்பில் சேரும் மாணவன் தன் வாழ்க்கைக்குரிய தனித்திறன் பெறுவதைத் தேர்ந்தெடுத்து அதனைத் தெளிவுபட பிரித்துக் கற்றலே மேல்நிலைக் கல்வியின் நோக்கமாகும்.

## 9.7.1. மைய அரசு கல்வி வாரியம்

மைய அரசு இடைநிலைக் கல்வி வாரியம் எனப்பெறும் சி.பி.எஸ்.சி. (Central Board of Secondary Education) இந்தியாவிலும், இந்திய நாட்டுக்கு வெளியிலும் வாழும் மக்களின் பள்ளிக் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 12 ஆம் வகுப்பு முடிய பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிச் செயல்படுத்துகின்றது.

மாநில வாரியங்களோடு ஒப்பிடும் போது எண்ணிக்கையில் இப்பள்ளிகள் குறைவானவை. தாய்மொழியோடு, அறிவியல் கணிதப் பாடங்களை ஆங்கில மொழி வாயிலாகவும் பிறவற்றை இந்திமொழி வாயிலாகவும் கற்க இப்பள்ளிப் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## 9.7.2. நவோதயா பள்ளிகள்

மைய அரசின் வழி, இந்தியாவின் எல்லா மாவட்டங்களிலும் நவோதயா பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய ஒருமைப்பாட்டு நோக்கத்துடன் வெவ்வேறு மொழி பேசும் பிற மாநிலத்தவர்களுடன் உடனுறை பள்ளிகளாக இயங்குகின்றன. இப்பள்ளிகளும் மைய அரசின் கல்வி வாரியத்தின் அங்கீகாரத்தோடே செயல்படுகின்றன.

## 9.7.3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

தமிழகத்தில் தமிழ்வழிப் பள்ளிகளில் சேர்ந்து கற்க இயலாத குழந்தைகளுக்குப் பத்தாம் வகுப்பு நிறைவு பெறும் வகையில் கல்லூரிக் கல்வியுடன் இணைந்த பல்கலைக் கழகத்தின் வழி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் தொடங்கப்பட்டன. ஆயினும், தமிழகத்தில் ஆங்கில வழிப் பள்ளிகள் தேவையை ஒட்டி மெட்ரிகுலேஷன் பள்ளிக் கல்வியுடன் இணைக்கப்பட்டு ஒரு தனி வாரியமாகச் செயற்பட்டு வருகின்றது.

இப்பள்ளிகளின் கல்வித் திட்டத்தில் மாநில அரசின் இடைநிலைக் கல்வி வாரியத்தின் வழிகளைக் கொண்டிருந்தாலும், பாடத்திட்டத்திலும், தேர்வுத் தாள் அமைப்பு முறைகளிலும் வேறுபாடு கொண்டுள்ளன. ஆயினும் அரசு சமச்சீர் கல்விமுறையை உண்டாக்குவதற்கு வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றமை கருதற்பாலது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அனைத்தும் அரசு நிதியுதவியில்லாமல் அரசின் அங்கீகாரத்துடன் மெட்ரிகுலேஷன் வாரியத்தின் கட்டுப்பாட்டுடன் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தத்தம் பெற்றோரின் சொந்த நிதி முயற்சியிலேயே கல்வி கற்கின்றனர்.

### கேந்திரய வித்யாலயங்கள்

மைய அரசின் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு கேந்திரிய வித்யாலயங்கள் அமைந்துள்ளன. இவை நிர்வாக அமைப்பில் மைய அரசின் நிதியுடன் இயங்குபவை. மைய அரசின் இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் இயங்கும் இப்பள்ளிகள் பெரும்பான்மையும் சிறந்த அடிப்படைக் கட்டமைப்புகளுடன் செயற்படுகின்றன. இவற்றில் வாய்ப்புக்கேற்றவாறு ஒதுக்கீட்டு அடிப்படையில் பிறதுறை சார் பெற்றோர்களின் குழந்தைகளும் சேர்க்கப்படுகின்றனர்.

## 9.8. முறை சாராக்கல்வி

முறை சார்ந்த பள்ளிக் கல்வியில் கற்கும்முறை, மாணவனின் தேவை, சமூக எதிர்பார்ப்பு ஆகிய மூன்றின் கலவையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இம்முறை சார்ந்த கல்வி கல்லாமை நிறைந்திருக்கும் ஒரு சமூகத்தில்தான் இயங்குகிறது. பொருளியல் மாற்றங்களைத் தனிமனிதவாழ்வில் தரும் ஒரு கருவியாகக் கல்வி அமைகிறது. கல்விப் பெருக்கத்தின் வாயிலாகச் சமூக மாற்றத்தை உருவாக்க வேண்டுமானால் கல்லாதவர்களையும் கற்றவர்களாக்கும் பணியை முறை சார்ந்த கல்வி வழங்கும் போது உடனிகழ்வாக முறைசார்ந்த கல்வியமைப்புக்குள் வர இயலாத அனைவருக்கும் வழங்க வேண்டியுள்ளது. பொருளியல் மாற்றங்களின் காரணிகளான அறிவு, மனப்பான்மை, திறன் ஆகியவற்றின் வளர்ச்சியே சமூகமாற்றத்திற்கு உதவும். கல்வி ஒரு தனிமனிதனைத் தன் உரிமை, தன் கடமை, சமூகத்தில் தன் பங்குப்பணி என்னும் மூன்றையும் குறித்த தெளிவை உண்டாக்க வேண்டும். ஒரு சமுதாயத்தின் அறிவுத் தெளிவும் திறனும் பொருளியல் மாற்றத்தை உண்டாக்கும்.

நம் நாட்டில் 80 சதவீத மக்கள் ஊரகப்பகுதிகளில், கிராமங்களில் வாழ்கின்றனர். முறைசார்ந்த கல்வி இப்பகுதிகளில் முழுமையாக விரிவடையவில்லை. இது கல்விக்கும் வேலைக்குமான பொருத்தமின்மையை உண்டாக்குகிறது. முறைசார்ந்த கல்வி வேலை வாய்ப்பில்லாத நிலையை உண்டாக்குகிறது. குலத்தொழிலையோ, தன் திறன் சார்ந்த வேலைகளிலோ இளைஞர்கள் சேர்ந்து செய்ய வாய்ப்பில்லை. இவ்வகையில் கல்வி ஒரு வெற்றிடத்தை உண்டாக்குகிறது. விளைநிலங்கள் நலிவுற்ற மக்கட்பிரிவினர்க்குப் பிரித்தளிக்கப்பட்டாலும் போதிய வேளாண்செய்திறன் அவர்களிடம் இன்மை காரணமாக அவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் நிலமற்றவர்களாக மாறும் சூழ்நிலை உள்ளது. இச்சூழலில் அவர்களுக்கு திறனும் தொழில்நுட்பமும் வாய்ந்த வேளாண்மைக்கல்வி அளிக்க வேண்டியதும் அவசியமாகிறது. அனைவரும் முறைசார்ந்த பள்ளிக்கல்வியைப் பல காரணங்களால் பெறமுடியா நிலை காணப்படுகிறது. முறைசார்ந்த கல்வியில் உள்ள சில கெடுபிடி, நெகிழ்ச்சியற்ற தன்மையால் முறைசாராக் கல்வியின் தேவை பரவலாகத் தோன்றுகிறது.

### 9.8.1. கல்வி வாய்ப்பின்மை

- முறையான கல்வி மக்கட்பிரிவினர் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பில்லாத நிலை.
- இந்நிலைமைக்கு எல்லா இடங்களிலும் பள்ளிவசதி கிடைக்காத நிலைமையும், மக்களின் கல்வி குறித்த அக்கறையின்மையும் அடிப்படைக் காரணங்களாகின்றன. தொடர்ச்சியான கல்விப் பாரம்பரியம் இன்மையும், கல்விக்கான தேவையின்மையும் மக்களிடத்தில் அக்கறையின்மையை உண்டாக்குகின்றன எனலாம்.

- இடைவிலகல்: முறைசார்ந்த கல்வியில் ஒரு குறிப்பிட்ட கல்வி நிலையை முடிப்பதற்கு முன்பே தொடர்ந்து கற்காமல் இடையில் விலகுவோரை இடைநிற்போர் (drop outs) என்பர். ஒரு குழந்தை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் தொடக்கப்பள்ளிகளில் கற்காத நிலையில் கல்வியின் பயன் ஏற்படவாய்ப்பில்லை.
- கல்வியின் வாழ்க்கையோடு தொடர்பற்ற தன்மை, ஊரகப்பகுதி மக்களின் வாழ்க்கை அல்லது பொருளியல் தேவையை ஈடுசெய்யக் கூடியதாக முறைசார்ந்த கல்வி அமையாத நிலை.

எனவே முறைசார்ந்த கல்வி, அன்றாட வாழ்வோடு தொடர்பில்லாத அறிவு, பொருத்தமில்லாத கற்பிக்கும் முறைகள், நெகிழ்வுத்தன்மையற்ற வகுப்பறைச்சூழல், செயல்திறனோடு தொடர்பில்லாத கல்வி, மனப்பாடம் செய்யும் முறை, இடைவிலகல் மிகுதி, தொடர்ந்து கல்வி பயில்வோர் விகிதக் குறைவு போன்றன முறைசாராக் கல்வியின் தேவைக்கு வழிவகுத்துள்ளன எனலாம்.

ஐக்கிய நாட்டு சபையின் கல்வி அறிவியல் மற்றும், அறிவியல் மன்றத்தின் பன்னாட்டுக் கல்வி ஆணையம் (UNESCO) 1972 ஆம் ஆண்டு கற்பித்தலிலிருந்து கற்றலுக்கு என்னும் அறிக்கை முறைசார் தொடக்கக் கல்வியின் தோல்விகளைப் பட்டியலிட்டது. இதனடிப்படையிலேயே முறை சாராக் கல்விமுறை வகுக்கப்பட்டது.

## 9.8.2. முறைசாராக் கல்வியின் தேவை

வளர்ந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் முறைசாராக் கல்வித் தேவையானது சமூகத்தில் எல்லோருக்குமான கல்வி வழங்குவதுடன் கற்பித்தலிலிருந்து தானே கற்பது என்பதற்கு மாறுவதன் வாயிலாக தரமான கல்வி பெற உதவுவது என்னும் அடிப்படைகளில் இன்றியமையாததாகிறது. வளர்முக நாடுகளில் முறை சார்ந்த கல்வியின் பொருளியல் தேவையைக் குறைத்து, கல்வி வாய்ப்பற்ற சமூகப் பிரிவினர்க்கும் கல்வியை வழங்குவதன் வாயிலாக நாட்டின் மேம்பாட்டுக்கு உடனடியாகவும், சிறப்புடனும் வழிவகுப்பது என்னும் நிலைகளில் தேவைமிக்க முறையாக முறைசாராக் கல்விமுறை அமைகிறது.

முறைசார்ந்த கல்வியில் பயில்வோரின் வாழ்க்கை மேம்பாட்டையும் ஒருவகையில் இம்முறை உதவுகிறது. தங்கள் தனித்திறனையும் வாழ்க்கைத் தகுதிகளையும் உயர்த்திக் கொள்ளவும் வழிவகுக்கிறது. நலிவுற்றோரும், ஏழைகளும் விடுதலை பெறவும் வாழ்க்கைத் தரமேம்பாட்டுக்கும் இக்கல்விமுறை உதவுகிறது.

## 9.8.3. இந்தியநாட்டில் முறைசாராக் கல்வியின் முக்கியத்துவம்

- ஒரு குடியரசு நாட்டிற்கு, குடிமக்களின் கல்வியும் அறிவுத்தெளிவும் மிகவும் இன்றியமையாதவை. இக்காரணத்தால்தான் வளர்ந்த நாடுகளில் இடைநிலைக் கல்வி வரை கட்டாயக்கல்வி எனச் சட்டமியற்றப்பட்டுள்ளது. வளரும் நாடுகளில் குறைந்தபட்சம் தொடக்கக் கல்வியாகிலும் குடியரசு மேம்பட எல்லாமக்களுக்கும் வழங்கப்படவேண்டும். 1947ல் இந்தியா விடுதலையடையும் போது 85 சதவீத மக்கள் படிக்காதவர்களாயிருந்தனர், 6–11 வயதில் 31 சதவிகிதத்தினர் மட்டுமே பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பிருந்தது. இது தேசியக் கவலையாக இருந்து வந்தது.
- 1949 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் அரசு 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக்கல்வி வழங்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என வழிகாட்டுநெறி நெறிமுறைகளில் கூறப்பட்டு உள்ளது. 62 ஆண்டுகளுக்கு முன் மேற்கொண்ட இவ்வுறுதி மொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இவற்றிற்கெல்லாம் நடைமுறை அளிக்கும் வகையில் அனைவருக்குமான கல்வி அளிக்க வேண்டிய தேவையின் வழிமுறையே முறைசாராக் கல்வியாக உருவெடுத்தது.

- பள்ளியில் எல்லாக் குழந்தைகளையும் சேர்த்தலும், தொடர்ந்துகற்கவைப்பதும் சமூகபொருளியல், கல்வி, அரசியல் காரணங்களால் இன்னும் எட்டாக்கனியாகவே உள்ளது. எனவே முறைசார்ந்த கல்வியோடு இணையான முறைசாராக் கல்வியும் தேவையாகிறது.
- முறைசார்கல்வி உரிய வயதினருக்கே இயலும் ஆனால் முறைசாராக்கல்வி வயதைத் தாண்டிவிட்டவர்களுக்கும், பள்ளிவாய்ப்பை இழந்தவர்களுக்கு அரியதோர் வாய்ப்பாகும். 1974 ஆம் ஆண்டு மத்தியக் கல்வி ஆலோசனைக் கழகம் (The Central Advisory Board) மக்கள் எண்ணிக்கை, மற்றும் கல்வித்தர அடிப்படையில் முறைசாராக் கல்வியை 9 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குப் பரிந்துரைசெய்தது.
- ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாம், பீஹார், ஜம்மு & காஷ்மீர், மத்தியப்பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம் ஆகிய ஒன்பது மாநிலங்களில் கல்லாமை மிகுந்திருந்ததைக் கணக்கிட்டு முறைசாராக் கல்வி இம்மாநிலங்களில் மத்திய அரசால் நிதியுதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. முறைசாராக்கல்வி தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (NCERT) நிறுவனத்தின் பாட மற்றும் தொழில் நுட்ப உதவியுடன் தொடங்கி நடத்தப் பெற்றது.

முறைசாராக்கல்வியானது, முறைசார்ந்த கல்வியின் குறைகளை ஈடுசெய்யவும், மக்கள் தொகைப்பெருக்கத்திற்கேற்ற உத்தியாகவும் கல்வியில் பின் தங்கியுள்ள மாநிலங்களில் தொடங்கி நிகழ்த்தப்பட்டு வருவது என்பது குறிப்பிடத்தக்கது.

## 9.8.4. ஒற்றுமை – வேற்றுமைகள்

| முறைசார்ந்த கல்வி | முறைசாராக் கல்வி |
|---|---|
| திட்டமிட்ட வகையில் ஒருங்கிணைந்த கல்வியைக் குழந்தைக்கு வழங்குகிறது | கற்றலை மட்டுமே மையமாகக் கொண்டு தானே கற்றலையும் குழுவாகக் கற்றலையும் கொண்ட அமைப்புமுறை |
| முழுநாள் கல்விக்கூடம் | பகுதிநேரக் கல்வி வாய்ப்பு |
| முழுநேரப்பாட ஆசிரியர்களால் நிகழ்வது | பெரும்பாலும் ஆசிரியர்க்கு இணையானவர் உதவி கொண்டு நிகழ்வது |
| ஆசிரிய மாணவர் உறவு மேல் – கீழ் அமைப்பு கொண்டது | ஆசிரியர் ஏதுவாளராகச் செயல்பட கற்றல் அமைவது |
| பள்ளி என்னும் குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்பட்டது | வாய்ப்புள்ள பண்ணைகள், தொழிற்சாலைகள், கடைகள், நூலகங்கள் போன்ற பொதுவிடங்களில் நிகழ்வது |
| ஒழுங்கும், இறுக்கமும் கொண்ட பாடத்திட்டம் | பன்முக, நெகிழ்வான, பழகுதன்மை கொண்ட பாடத்திட்டம் |
| வருகைப்பதிவு கட்டாயம் | மாணவர் விருப்பத்தையொட்டிய வருகை |
| பாடத்தில் வேலை என்பது பழக வேண்டிய பகுதி | வேலை செய்வோருக்கான கல்வியானதால் அதன் தேவையில்லை |
| மிகுந்த செலவினத்தின் வகையில் நிகழ்வது | சமூக வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதால் செலவினம் குறைந்தது |

கல்வியை நிறைவு செய்தல், தொடர்கல்வி, மேம்பாடுடைய திறன் பெறுதல், புத்துயிர்ப்புப் பயிற்சி பெறுதல், போன்றகூறுகள்முறைசாரக் கல்வியின் பெரும் பயன்களாகும்.

# அலகு–10
# தேசிய அக்கறைகளும், கல்வியும்

## முன்னோக்கு,

இந்தியா விடுதலை பெற்று சுதந்திரமும் (Independent) சமயச்சார்பின்மையும் கொண்ட (Secular), சமதர்ம (Socialist) கோட்பாட்டைப் பின்பற்றும் இறையாண்மைக் (Sovereign) குடியரசாக மலர்ந்தது. சுதந்திர உணர்வுடன் பாரத சமுதாயம் பல்திற வளர் மாற்றங்களைக் கண்டது. கல்விக்குப் புனராக்கமும், புத்தாக்கமும் தரவும், அக்கல்வியின் வாயிலாகத் தேசிய அக்கறைகளைப் பேணி பல நலன்களைச் செப்பம் செய்து கொள்ளவும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

வாழும் வகையை, வாழும் முறையை, வாழ்க்கையில் பிடிப்பை, பற்றைப், பண்பாட்டைப் படிப்பிப்பதாகக் கல்வி அமைந்திட வழிவகைகள் செய்யப்பட்டன. கல்விக்கு பொருளியல் தற்சார்பும் தன்னிறைவும் மட்டும் நோக்கமல்ல. உண்மை, நேர்மை, அருள் உள்ளம் ஆன்ம மலர்ச்சி முதலியவற்றிற்கு மக்களைப் பயிற்றுவிக்கும் இலட்சிய நோக்குடையதாகக் கல்விச் சீர்த்திருத்தங்கள் அமைந்தன. மக்களாட்சி முறையில் குடிமக்களுக்கு அறிவும், பயிற்சியும் பற்றுறுதியும் வளர்ப்பது முதன்மை நோக்கமாகும். ஒவ்வொரு குழந்தையும் மக்களாட்சி முறையில் உயர்ந்த கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்திடவும், எல்லார்க்கும் எல்லா உரிமைகளையும் நிறைவேற்றித் தரவும், கடமைத் திணவு, உரிமைக் காப்பு முதலிய விழுமிய மக்களாட்சிப் பெற்றிமைகள் மாணவர்களிடம் பூக்கவும் ஆவன செய்தவதாய் அமையுமாறும் கல்வி புகட்டப்பட்டது.

தேசத்தின் எதிர்காலத்தில் அக்கறை கொள்ளவும், தம்முடைய அடிப்படையான உரிமைகளையும், கடமைகளையும் புரிந்து கொண்டு பின்பற்றவும், ஒவ்வொரு குடிமகனையும் சமமாக நடத்தவும், நம்முடைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணி மதிக்கவும், தேச ஒருமைப்பாட்டை வளர்க்கவும், சமதர்ம சமுதாயத்தைப் போற்றிப் பாதுகாக்கவும் ஏற்ற கல்வி திட்டமிடப்பட்டது. விட்டுக் கொடுத்து வாழவும், தொழில்திறமையைக் குழந்தைகள் பெறவும், பெண்களின் திறன்களுக்கு ஆற்றலூட்டம் தந்து மேம்படுத்தி கல்வியால் சமவாய்ப்புக்கள் பெறச் செய்யவும், சிறப்புத் தேவையுள்ள குழந்தைகள், வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட பிரிவினர் (diasadvantageous group) கல்வி வாய்ப்புக்களைப் பெறவும் பன்னாட்டு உணர்வை வளர்க்கவும், சுற்றுச் சூழல் கல்வியைப் புரிந்து, உணர்ந்து சூழலைக் காக்கவும் திறனை வளர்த்துக் கொள்ளுமாறு செய்யவும், குழந்தைஉரிமைகள், மனித உரிமைகளை உணர்ந்து போற்றவும், குழந்தைகளை தேசத்தின் மீது அக்கறை கொள்ளச் செய்யவும், கல்வி திட்டமிடப்பட்டது.

## 10.1. சமயச்சார்பின்மை : (Secularism)

நம் தாய்நாடு சமதர்ம, இறையாண்மையுடைய சமயச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு ஆகும். சமயச்சார்ப்பின்மையின் சிறப்புக் கூறுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- ◈ நாட்டின் குடிமக்களும் ஆட்சியாளர்களும் தத்தம் சமயத்தைப் பின்பற்றியொழுக முழு உரிமை பெற்றவர்கள்.
- ◈ தாம் சார்ந்துள்ள சமயம் காரணமாக ஆட்சியாளர்கள் மக்களிடையே வேற்றுமை பாராட்டலாகாது.
- ◈ சமயத்தின் அடிப்படையில் நாட்டின் பொதுச் சட்டங்களை இயற்றுதல் கூடாது.
- ◈ ஒரு குறிப்பிட்ட சமயத்தின் வழிபாடுகள், தத்துவக் கோட்பாடுகள் நெறிமுறைகள் ஆகியவற்றை அரசு தழுவி முன் நின்று பிற மதத்தைச் சார்ந்தவர்களை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துதல் கூடாது.

- ◈ பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் எந்த ஒரு மதத்தின் மீதும் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ, சட்டம் மூலமாகவோ, தாக்கம் ஏற்படுத்துவது மூலமாகவோ அல்லது வற்புறுத்துதல் மூலமாகவோ அரசின் தலையீடு இருக்கக் கூடாது.
- ◈ வாய்ப்புகள் அளித்தல், அரசுப்பங்கு அளித்தல் ஆகியவற்றில் அரசு எல்லா சமயத்தினருக்கும் ஒத்த உரிமைகளை வழங்க வேண்டும்.
- ◈ எந்த ஒரு சமயத்தினரும் தத்தம் சமயக் கோட்பாடுகள், தத்துவக் கோட்பாடுகள், கருத்துக்கள், வழிபாடுகள், சமயச் சடங்குகள் ஒழுக்க நியதிகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் அரசின் குறுக்கீடு ஒரு போதும் இருக்கக் கூடாது. ஆயினும் நாட்டின் பொதுச் சட்டம் ஒழுங்கு முதலியன மீறப்படும் போது, அவற்றை நிலைநாட்ட அரசுக்கு முழு உரிமை உண்டு.
- ◈ அரசுக்கென தனியே வழிபாட்டு முறைகள் ஏதும் இல்லை.

சமயச்சார்பின்மை என்ற சொல்லிற்கு நமது முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர்.எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் கூற்றுப்படி சமயச்சார்பின்மை என்பதற்குப் பொருள் சமயங்கள் கூடாது என்பதன்று. நாம் எல்லாக் கோட்பாடுகளையும் மதங்களையும் மிகவும் மதிக்கின்றோம் என்பதே ஆகும். மகாத்மா காந்தியும், மற்ற சமயக் கோட்பாடுகளையும் என்னுடைய சமயக்கோட்பாடுகள் போன்றே மதிக்கிறேன் என சமயச்சார்பின்மையை வலியுறுத்திக் கூறுகிறார். மேலும் நாம் ஏற்றுக் கொண்டுள்ள சமயச் சார்பின்மை என்பது சமயத்தை அறவே புறக்கணிக்க வேண்டுமென்பது இல்லை ஆனால் அனைத்து சமயங்களையும் மதிக்கிறோம் என்பதாகும்.

கல்வி ஒரு மனிதனைச் சுதந்திரமான சிந்தனையாளனாகவும், திறந்த மனமுடையவனாகவும் வளரச் செய்கிறது. பகுத்தறியும் தன்மை என்பது மதத்திற்கு எதிரானதாக இருத்தல் கூடாது. சரியா தவறா என்று ஆராய்ந்து பார்க்க இயலாத மத உண்மைகளை நம்பள்ளிகளில் கற்பிக்கக் கூடாது. அனைத்து மதங்களிலும் அடங்கி இருக்கும் நல்ல பண்பு நலன்களை மாணவர்களுக்கு கற்றுத் தர வேண்டுவது அவசியம்.

அனைத்து மதங்களையும் சமமாகப் பார்க்கும் தன்மையான ‘சமய நடுநிலைமையை’ மாணவர்களிடையே வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் ஒரு பக்கமே சார்ந்த சார் பெண்ணங்களைக் கொண்டிருத்தல் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாட இணைச் செயல்களின் வாயிலாக மாணவர்களின் சமயப்பற்றை நெறிப்படுத்தவியலும். இன்றைய நிலையில் இந்தியாவில் சமய நடுநிலமையே மிகவும் அவசியமானதாகும்.

## செயல்

ஆசிரியர் ‘சமயச் சார்ப்பற்றவராகத்’ திகழவேண்டுமெனில் அவர் பள்ளியில் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகள் எவை என குழுவில் விவாதித்துப் பட்டியலிடுக.

சமயச்சார்பின்மை ஐந்து முக்கியப் பண்புகளை வலிவுயுறுத்துகிறது. அவையாவன அன்பு, உண்மை, சகிப்புத்தன்மை, அமைதி பிறரை மதிப்புடன் நடத்தும் பழக்கம் ஆகியனவாகும். சமயச் சார்பற்ற ஆட்சிமுறையை ஏற்றுக் கொண்ட நம் நாட்டில் எல்லா மதங்களையும், அவற்றின் நற்பண்புகளையும் எடுத்துரைக்கலாம். மேலும் அவற்றின் நல்ல அம்சங்களையெல்லாம் தெரிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றலாம்.

## கல்வியும், தேசிய ஒருமைப்பாடும்

சாதி, சமூகம், சமயம், மொழி, நாடு ஆகியவற்றில் வேறுபட்டு இருப்பினும், அனைவரும் ஒன்று சமம் என்ற உணர்வும், தங்கள் இன்ப துன்பங்கள் மகிழ்ச்சி ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்பவர்களாகவும் தேச நலத்தில் அக்கறை உள்ளவர்களாகவும் இருப்பின் அந்நாடு எளிதில் ஒன்றுபட்டு விடும். இங்கு வாழும் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்பவராகவும், சகிப்புத் தன்மை உள்ளவர்களாகவும், அந் நாட்டு மக்களின் பண்பாடு, கலாச்சாராம், வாழும் முறை, மரபுகள் ஆகியவற்றை மதிப்பவர்களாகவும் இருப்பார்கள்; பொதுவான தேசியக் கொள்கைகள், நோக்கங்கள், அக்கறைகள் மற்றும் தேசத்தின் எதிர் காலத்தின் மீது நம்பிக்கையும் அக்கறையும் கொண்டவர்களாக இருப்பர்.

''குறுகிய வட்டம், குறுகிய எண்ணமோ குறிப்பிட்ட மாநிலம், சாதி அல்லது சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற எண்ணங்களோ இல்லாமல் பொதுவான குறிக்கோளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணர வேண்டும். நேராக நிமிர்ந்து நின்று வானத்தை உற்று நோக்கி, நம் காலை முழுமையாகவும், ஆணித்தரமாகவும் நிலத்தில் ஊன்றி, இந்திய மக்களுக்கு ஒற்றுமையைக் கொண்டு வர முயற்சிகள் எடுக்க வேண்டும்'' எனப் பண்டித நேரு அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

## 10.2. தேசிய ஒருமைப்பாடு என்பதன் பொருள்

''சமுதாயத்தின், சிறிய பெரிய குழுக்கள் இடையே உள்ள உணர்வுகளைத் தாண்டி, தன்னை மையமாகக் கொண்ட குறுகிய செயல்களை மறந்து, தேச ஒற்றுமையையும், கூட்டுறவு மனப்பான்மையையும் கொண்டு பணிகளை மேற்கொண்டு தேசத்தை வளர்ச்சியுறச் செய்வதையே தேசிய ஒருமைப்பாடு குறிக்கும்.

இந்தியக் கல்விக் குழு (1964–66)–வின் பார்வையில், தேசிய ஒருமைப்பாடு என்பது:

(i) தேசத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை
(ii) மக்களின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ச்சியாக அதிகரிப்பது.
(iii) வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது.
(iv) சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்குச் சமமான வாய்ப்புக்கள் அளிப்பது.
(v) குடிமகன் என்ற முறையில் கடமையைச் செய்தல்
(vi) பாரபட்சமற்ற, நல்ல நிர்வாகம்
(vii) வேறுபட்ட சமூகத்தினரின் பண்பாட்டு மரபுகளை மதித்தல் மற்றும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல்.

## தேச ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம்

அனைவரும் ஒன்றே என்ற உணர்வு, ஒரே நாடு என்ற எண்ணம் தேச வளர்ச்சிக்கு முக்கியம். நமது மக்களாட்சி முறையைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு தேசிய ஒருமைப்பாடு இன்றியமையாத ஒன்றாகும் என சி.டி. தேஷ்முக் கூறியுள்ளார்.

''அரசியல் ஒருமைப்பாடு என்பதை ஒரு வரம்பிற்குள்தான் நாம் அடைந்திருக்கிறோம். ஆனால் ஆழமான ஒருமைப்பாட்டை இந்திய மக்களின் உணர்ச்சி, ஒருமைப்பாட்டை (Emotional Integration) அடைய – இறுக்கமான இணைப்பை ஏற்படுத்தி, வலிமைமிக்க ஒன்றுபட்ட தேசத்தை உருவாக்கி அதே சமயத்தில் வேறுபாடுகளையும் (Plurality) பாதுகாத்துப் பராமரித்து வருதல் வேண்டும்'' என முன்னாள் பிரதமர் நேரு மிகத் தெளிவான ஆலோசனை வழங்கியுள்ளார்.

‘‘தேச ஒற்றுமைக்காக மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்டுவதற்குத் தேவையான நடைமுறைகளை ஆலோசித்து நடவடிக்கைகளை எடுக்காவிடில், நம் மக்களின் எண்ணங்களில் வேண்டாத தன்மைகள் புகுந்துவிடும்’’ என நீதிபதி மகாஜன் எச்சரித்துள்ளார்.

## தேச ஒற்றுமையை வளர்ப்பதில் காணப்படும் கடினத் தன்மைகள்

- சமுதாயப் பிரிவினைகள்
- சாதி முறைகள்
- சமய வேற்றுமைகள்
- குறிப்பிட்ட மாநிலத்தவர் என்ற உணர்வு
- வட்டார எண்ணங்கள்
- மொழிப்பாகுபாடுகள்
- பொருளாதார ஏற்றத்தாழ்வு
- தவறான கல்விக் கொள்கை
- சமூக வேறுபாடுகள்
- திடமான தலைமையின்மை

## தேச ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஆலோசனைகள்

- கலைத்திட்டத்தை மறுசீரமைப்பு செய்தல்
- பாட இணைச் செயல்களை வகுத்தளித்தல்
- பாடப் புத்தகங்கள் தயாரிப்பில் சீரமைப்பு
- சமூக அறிவியல் பாடங்களைக் கற்பித்தலில் சிறப்புக் கவனம்
- பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை
- தேசிய விழாக்கள் கொண்டாடுதல்
- உறுதி மொழி எடுத்தல்
- சிறப்புக் கூட்டங்கள், சிறப்பு உரைகள் ஏற்பாடு செய்தல்
- கருத்துப்பரிமாற்றம்/கல்விச்சுற்றுலா
- நாடகங்களின் வழிக் கருத்தேற்றம்
- பிற மாநிலங்களைப் பற்றிய அடிப்படை அறிவை வளர்த்தல்
- சமய மற்றும் ஒழுக்கக் கல்வி
- ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா
- சமூக மற்றும் தேசப் பணி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்
- சமுதாய வளர்ச்சி நிகழ்வுகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபாடுமிக்க பங்கேற்பு
- சிறப்பான தேசியக் கல்விக் கொள்கை
- தேச ஒருமைப்பாட்டை வளர்க்கும் பயிலரங்குகள் அமைத்தல்
- மாநிலங்களிடையே பேனா நண்பர்களை உருவாக்குதல்
- நாட்டுணர்வுமிக்க ஆசிரியர்களின் பங்கு
- அகில இந்திய இளைஞர்கள் குழுமம் உருவாக்குதல்
- அகில இந்திய அளவில் பரிசுகள் வழங்குதல்.

**செயல்**

பள்ளிகளில் தேச ஒற்றுமையை வளர்க்க வேண்டிய செயல்களைப் பட்டியலிடுக.

பாடத்திலுள்ள கருத்துக்களை மட்டும் போதிப்பதோடு விட்டுவிடாமல் தேச நலனும், ஒருமைப்பாடும் மாணவர்களின் மனதில் பதியும் வண்ணம், பாடத்தினிடையே இருக்கும் கருத்துக்களோடு ஒருமைப்பாட்டுக் கருத்துக்களையும் இணைத்தும் பிணைத்தும் தகுந்த உத்தியைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும்.

தேசமுன்னேற்றத்திற்கு தேசிய ஒருமைப்பாடு மிகவும் அவசியமாகும். தேசிய ஒருமைப்பாட்டைக் கல்வியால் தான் வருங்காலத் தலைமுறையினரிடம் வளர்க்க முடியும். ஒற்றுமை, நாட்டுப்பற்று, நாட்டு நலம் பற்றிய உணர்வை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும். குடிமைப் பண்புகளையும், மக்களாட்சி விழுமியங்களையும் மாணவர்களிடம் வளர்ப்பது இன்றியமையாததாகும்.

## 10.3. மகளிரின் ஆற்றலூட்டம் (Women Empowerment)

கல்வி பெற்ற பெண்கள் ஆற்றலூட்டம் பெற்றவர்களாகவும், செயல் முடுக்கம் வாய்ந்தவர்களாகவும், ஆக்கத்திறன் செறிந்தவர்களாகவும் ஆக்கப்பட்டு நாடு செழிக்க, நன்மைகள் கொழிக்கப் பல பணிகளையும் ஆற்றிவருவதும் கண்கூடு.

"ஒற்றைக் குடும்பம் தனிலே பொருள் ஓங்க வளர்ப்பவன் தந்தை. மற்றைக் கருமங்கள் செய்தே மனை வாழ்ந்திடச் செய்பவள் அன்னை" என்ற கவிதைக்கிணங்கவும், "எல்லா பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற திரைக்கவிதைக்கு இணங்கவும் இல்லம் அமைப்பதிலும், பிள்ளை வளர்ப்பதிலும் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்களே, எனவே பெண்களுக்களிக்கப்படும் கல்வியே பெரும்பயன் விளைவிக்கும் கல்வி ஆகும்.

### மகளிர் முன்னேற்றம்

"பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் " என்பது காந்தியடிகளின் கூற்று. உரிமை என்பது அனைவருக்கும் பொதுவானது. பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். பழங்காலந் தொட்டே பெண்களை பாரதம் நன்கு போற்றியும் மதித்தும் வந்துள்ளதெனக் காவியங்களும் இலக்கியங்களும் நமக்கு எடுத்தியம்புகின்றன. ஒரு சமூகத்தில் பெண்கள் பெற்றுள்ள தகுதி நிலையிலிருந்து அச்சமூகத்தின் நாகரீகத்தன்மையை புரிந்து கொள்ள முடியும்.

எந்த நாடு பெண்களை சமமாகக் கருதுகிறதோ அந்த நாடுதான் விரைந்து முன்னேறும் என்பது விவேகானந்தரின் வலியுறுத்தலாகும். நீண்டகாலப் போராட்டத்திற்குப் பிறகே மேலைநாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. ஆனால், புராண இதிகாச காலந்தொட்டே இப்பாரத பூமி கற்றறிந்த பெண்களை அரசுக்கட்டிலில் வீற்றிருக்கச் செய்தும், அவையில் தோன்றி கவிபாடச் செய்தும், அறங்கூறச் செய்தும் அவர்தம் ஆற்றலையும், ஆளுந்திறத்தையும் அரங்கேற்றிய பெண்ணிய நியாயமும், ஞானமும் தழைத்த நாடாகும்.

சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனப் பிரகடணத்தின்போதே பெண் பிரதிநிதித்துவத் தகுதியையும், வாக்குரிமையும் வழங்கிப்பூரிக்கும் அதிநாகரீக நாடாகும் என்பது குறித்து இந்தியர் யாவரும் பெருமை கொள்ளலாம். இருப்பினும் நம் நாட்டில் பெண்களின் நிலை கல்வியால் மேலும் மாண்புற வேண்டும். எனவே, ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு சம உரிமைகளும், வாய்ப்புகளும் அளிக்கப்படும் வகையில் பெண் கல்விக்குப் போதிய சிறப்புக் கவனம் செலுத்தி நாட்டு நலம் பேண வேண்டும்.

### பெண்ணுரிமை

பெண்கள் அனைவரும் தேர்ந்த, சரிநிகர்த்த மனிதர்களே என்பதனால் பெண்ணுரிமைகள் அனைத்தும் மனித உரிமைகளே; வேறல்ல. 1993–ஆம் ஆண்டு ஆஸ்திரியா நாட்டின் தலைநகர் வியன்னாவில் நடைபெற்ற பன்னாட்டு மனித உரிமைகள் மாநாடு பெண்ணுரிமைகள் மனித உரிமைகளே என்பதைப் பறைசாற்றி உறுதிசெய்தது.

## காந்தியடிகளின் பார்வையில் பெண்கள்

பெண்களை ஆண்களைப் போன்றே எல்லாத் திறன்களும் நிறைந்தும் விஞ்சியும் நிற்கும் சக்தியின் உருவங்களாகவும், அறிவாற்றல் மிக்கவர்களாகவும் கருதியதால் பெண்களுக்கு அனைத்துத் துறைகளிலும் சமமான உரிமைகளும் சமமான வாய்ப்புகளும், வழங்கப்பட வேண்டுமெனப் பாடுபட்டார். பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளைச் சட்ட ரீதியாகவும், மனமாற்றத்தின் வாயிலாகவும் நீக்க மகாத்மா காந்தி பெரிதும் விழைந்தார்.

## மகளிர் கல்விக்கான தேசியக் குழு (1964)

1964 ஆம் ஆண்டு மைய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பெண்கள் கல்விக்கான தேசியக்குழுவில் அதன் தலைவர் முதலாய 27 உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். இக்குழுவின் முக்கியப் பணிகளாவன:

- ◈ பெண்களுக்கு கல்வியளிப்பதில் ஏற்படும் பிரச்சினைகளை மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.
- ◈ பெண்களுக்குக் கல்வியளிப்பதில் அதன் முக்கியத்துவம், நோக்கங்கள், வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்றவற்றிற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கு அரசுக்குப் பரிந்துரைத்தல்
- ◈ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ◈ பெண்கல்வியின் அவசியத்தை சமுதாயம் உணர்வதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வழிவகை மேற்கொள்ளல்.
- ◈ நாட்டில் பெண் கல்வியின் அவசியத்தை அறியவும், மேலும் மேம்படச் செய்யவும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்; கருத்தரங்கங்கள் நடத்தவும் ஆவன செய்தல்.
- ◈ பெண்கல்வியின் வளர்ச்சியை குறிப்பிட்ட கால இடைவெளியில் மதிப்பீடு செய்தல்.

## பெண்களுக்கான உரிமைகள்

### சமத்துவ உரிமை

ஐக்கிய நாடுகளின் உறுதிமொழியில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும், இனம், நிறம், மொழி, மதம், பால் அரசியல் அல்லது பிற தகுதிகள் போன்றவற்றால் எவ்வித பாரபட்சமுமின்றி ஒவ்வொருவருக்கும் உண்டு.

### உடல் நலம் பேணும் உரிமை

பெண்கள் ஒவ்வொருவரும் நோயுறுதல், வேலை செய்ய முடியாமை, விதவை நிலை, முதுமையடைதல் மற்றும் அவருடைய கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகள் உருவாகும் போது எந்நிலையிலும் பாதிப்படையாமல் பாதுகாப்புப் பெறும் உரிமை பெண்களுக்கு உண்டு (பிரிவு 25. 1).

### பாதுகாப்புடன் வாழ உரிமை

இளமைப் பருவமும், தாய்மையும், தனிக்கவனமும் தகுந்த உதவியும் பெறத் தகுதி பெற்றவை ஆகும். திருமணத்தின் மூலமோ அல்லது திருமணம் இன்றியோ பிறக்கின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே விதமான சமூகப்பாதுகாப்பு அளிக்கப்படும்.

### ஆண், பெண் சம ஊதியம் பெற உரிமை

ஆண், பெண் என எவ்வித வேற்றுமையுமின்றி ஒரே வேலைக்கு ஒரே ஊதியம் பெற ஒவ்வொரு பெண்ணுக்கும் உரிமை உண்டு (பிரிவு 23. 2)

## விரும்பியவரைத் திருமணம் செய்து கொள்ள உரிமை

பெண்கள் தான் விரும்பியவரை திருமணம் செய்து கொள்ளவும், திருமணம் செய்து கொள்ளப் போகிற பெண்களின் சுதந்திரமானதும் முழுமையானதுமான சம்மதத்தின் பேரில்தான் திருமண வாழ்க்கையைத் தொடங்க வேண்டும்.

## மகளிர் மீது காட்டப்படும் அனைத்து வகையிலான பாரபட்சங்களின் ஒழிப்பு உடன் படிக்கை

ஆண், பெண் இருபாலரும் சமமானவர்களே ஆவர். இவ்விரு பாலரிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனக் காணப்படும் பேதங்களையும், ஆண், பெண் எனும் இருபாலரின் மீதும் சமூகம் கொண்டுள்ள சார்பெண்ணங்களையும் மாற்றுவதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மேற்கண்ட பிரகடனம் கூறுகிறது. (பிரிவு 5. 1)

மகளிர் மீதான பாலியல் பலாத்காரம் மற்றும் அவர்கள் மீதான சுரண்டலுக்கு எதிராகவும் அனைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் அரசுகள் மேற்கொள்ளுதல் வேண்டும். (பிரிவு – 2)

சமூக, பொருளாதார வாழ்வில் பெண்களும், ஆண்களும் சமஉரிமை பெற்றவர்கள் ஆவார்கள். இந்நிலையில் பெண்களைப் பாகுபடுத்துகின்ற முறைகள் அனைத்தையும் போக்குவதற்கு அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (பிரிவு 8)

கல்வி பெறுவதில் ஆண்களோடு, பெண்களும் சமஉரிமை பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்தல் வேண்டும். அனைத்துக் கல்வி நிலைகளிலும் அதாவது, ஆரம்பக்கல்வி, உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி பெறுவதிலும் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைளாவன:

- ◈ பாடத்திட்டம், தேர்வு முறைகள், பள்ளிவளாகம், தரம் போன்ற அனைத்திலும் பெண்களுக்குப் பாகுபாடு காட்டுதல் கூடாது.
- ◈ கல்வி பெறுவதற்கான உதவித்தொகை வழங்குவதில் பால்பாகுபாடு காட்டப்படுதல் கூடாது.
- ◈ பள்ளியில் இடையில் நின்றுவிடும் பெண் குழந்தைகளின் மீது தனிக்கவனம் செலுத்தி, இடைநிற்போர் எண்ணிக்கையைக் குறைக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- ◈ விளையாட்டுத் துறையிலும் பெண்களுக்கு சமவாய்ப்புரிமை தரப்படுதல் வேண்டும்.
- ◈ பெண்களின் குடும்ப நலன், ஆரோக்கிய வாழ்வைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உரிய ஆலோசனைகளையும், செய்திகளையும் தர முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். (பிரிவு. 10)

**செயல்**

பெண்களுக்கு எதிரான பாகுபாட்டினைக் களைய அகில உலக மனித உரிமைகள் மாநாட்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின் இதர பிரிவுகளைப் பற்றி குழுவில் கலந்துரையாடுக.

## பெண்களின் இன்றையநிலை

எழுத்தறிவின்மை, தொன்று தொட்டு வரும் நமது மூடப்பழக்க வழக்கங்கள், சமூகத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்டு வந்த பற்பல தடைகள் ஆகியவற்றின் விளைவாகப் பெண்களின் வளர்ச்சி பெரிதும் பாதிப்படைந்துள்ளது. சட்டத்திட்டங்கள், பெண்களுக்கு சலுகைகளின் வாயிலாகப் பாதுகாப்பினைத் தந்தாலும் அவற்றைப்பற்றி போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் பெண்களால் அச்சலுகைகளை முழுமையாக அனுபவிக்க இயலவில்லை.

**பெண்களுக்கு அரசு வழங்கியுள்ள காப்புரிமைச் சட்டங்கள்**

- ◈ வரதட்சணைத் தடுப்புச் சட்டம் – 1961.
- ◈ விபச்சாரத் தடுப்புச் சட்டம் – 1956
- ◈ பால்யத் திருமணத் தடுப்புச் சட்டங்கள்
- ◈ மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்
- ◈ வன் கொடுமைத் தடுப்புச் சட்டம் – 1989

## பெண்ணுரிமை மீறல்கள்

பெண்களின் உரிமையை நிலைநாட்டப் பன்னாட்டு அளவிலும் தேசிய அளவிலும் பல சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் உலகநாடுகள் அனைத்திலும் இன்றும் சதி, பால்ய விவாகம் (குழந்தைத் திருமணம்) பெண்சிசுக்கொலை, பலதாரமணம், வரதட்சணைக் கொடுமை, கட்டாயத் திருமணம், விதவை மறுமணத்திற்கு எதிர்ப்பு, பாலியல் பலாத்காரம், பெண்ணடிமை, ஆணாதிக்கம், கட்டாயக் கருக்கலைப்பு போன்றவை ஆங்காங்கே பரவலாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

## மகளிர் ஆண்டுகளைக் கொண்டாடுதல்

## சர்வதேச மகளிர் ஆண்டு

பெண்கள் எவ்வித தாழ்வுகளுக்கும் உள்ளாகக் கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு 1975 ஆம் ஆண்டினை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை சர்வதேசப் பெண்கள் ஆண்டாகப் பிரகடனம் செய்தது.

## பன்னாட்டுப் பெண்கள் ஆற்றல் ஊட்ட ஆண்டு

## பெண்கள் ஆற்றல் : (International Year of Women's Empowerment)

பெண்களின் பொருளாதார மேம்பாடு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் மேம்படுத்தும் என்பதால் 2001–ம் ஆண்டினை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை "பெண்கள் ஆற்றலூட்ட ஆண்டாக" அறிவித்தது. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாட்டுக் கொரு புலவன் பாரதியின் கனவு நனவாகி வருகிறது.

இதனையொட்டிப் பெண்கள் நலனுக்கான பணி இல்லங்கள் ஆசிரியர்ப் பயிற்சிப் படிப்பு, பணிபுரியும் பெண்கள் தங்கும் இல்லங்கள், மகளிர்க்கென மேம்பாட்டு ஆணையம், பெண்கள் வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்கு தொழிற்பயிற்சித்திட்டம், விதவை மறுமணம், ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்குதல் போன்ற அரிய பல திட்டங்களை அரசும், சார்ந்த தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து செய்து வருவதால் தற்போது பெண்களின் நிலை மேம்பட்டு வருகிறது என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை. பெண்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதற்குக் காரணம் அவர்கள் எழுத்தறிவின்மையும், அறியாமையும், வறுமையுமே ஆகும். எனவே, இம் மூன்றையும் போக்குவதற்கு மைய அரசும் மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

“பெண்களும் மனித சமுதாய மேம்பாட்டில் முழுஒத்துழைப்பு அளிக்க வேண்டிய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள்” என்னும் பரிபூரண உணர்வு பெண்களுக்கு ஏற்பட வழிவகைகள் முழுமையாய செய்யப்பட வேண்டியது அவசியம்.

## 10.4. சுற்றுச் சூழல் கல்வி (Environmental Education)

### முன்னுரை

காற்று, நிலம், மண், நீர், மரம் தாவரங்கள், உயிரினங்கள் போன்ற உயிருள்ள, உயிரற்ற பொருட்களைப் பற்றி எடுத்துக் கூறுவது சுற்றுச்சூழல் எனப்படும்.

‘‘நாம் நிலத்தை, நம்முடைய பயன்படு பொருளாக நினைத்து தவறாகப் பயன்படுத்தி வருகின்றோம். நிலத்தை நம் சமூகமாகவும், நாம் ஜீவிக்கும் உடல், உயிர் போன்ற பொருளாகவும், கருதினால், அதன் மீது அன்பும், மரியாதையும் செலுத்தத் தொடங்குவோம்’’ என்று அல்டோலியோ போல்ட் (Aldoleopold) கூறியுள்ளார்.

‘‘பருப்பொருளை அல்லது புலன்களால் உணரப்படும் பொருளை உடனடியாகச் சுற்றியுள்ளவை மற்றும் அதன் மீது நேரடியான விளைவை ஏற்படுத்தும் எதுவும்’’ சுற்றுச் சூழல் எனப்படும் என்று– பி.கிஸ்பெர்ட் (P.Gisbert) விவரித்துள்ளார்.

சுற்றுச் சூழல் கோட்பாடு, விலங்குகள், செடி, கொடிகள், மரங்கள், மலைகள், நிலங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதையும், அவற்றைச் சீர்கேடு செய்யும் காரணிகளையும், அவற்றிலிருந்து பாதுகாப்பதையையும், உள்ளடக்கியதாகும்.

### சுற்றுச் சூழல் உட்கூறுகள்

1. இயற்கை அமைப்புக் கூறுகள் – நிலம், நீர், காற்று.
2. உயிரியல் கூறுகள் – தாவரங்கள், விலங்குகள்.
3. சமூகக் கூறுகள் – மக்கட் தொகை, சமூக முறை, சமூக மாற்றம், நகரமயமாதல்.
4. பண்பாட்டுக் கூறுகள் – அரசியல், பொருளாதாரம், நீதி, மதிப்புக்கள் (Value) சமயம் போன்றவை.
5. உளவியல் கூறுகள் – உண்மைகள், தன்கோட்பாடு.
6. ஆற்றல் கூறுகள் – சூரிய சக்தி, வெப்பசக்தி, அலைசக்தி.

### உலகச் சுற்றுச் சூழல் நாள்

ஒவ்வொர் ஆண்டும், ஜீன் 5 ஆம் நாள் அன்று உலகச் சுற்றுச் சூழல் நாளாக அனுசரிக்கப்படுகின்றது. 1972–ல் ஸ்டாக்ஹோமில் (Stockholm) நடைபெற்ற மனிதச் சூழல் மாநாட்டில் இதற்கான தீர்மானம் இயற்றப்பட்டது.

### 2003–ஆம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் நாளிற்கான தலைப்பு

‘‘நீர் – 2000 பில்லியன் (Billiion) மக்கள் இதனால் இறந்து கொண்டு இருக்கிறார்கள்’’. உலகச் சுற்றுச் சூழல் நாளை, ஊர்வலங்கள், மிதிவண்டிப்பயணம், பசுமைச் செயல்கள், கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள், மரம் வளர்த்தல், சுற்றுப்புறத்தைப் பராமரித்தல் போன்றவை வாயிலாகக் கொண்டாடலாம்.

**செயல்**

உங்கள் நிறுவனத்தில் உலகச் சுற்றுச் சூழல் நாள் கொண்டாடி அதில் ஆசிரிய மாணவர்கள், உரைகள், கவிதைகள், கதைகள் எழுதிவாசிக்குமாறு செய்க.

## சுற்றுச் சூழல் கல்வி

கல்வியின் வழியாக, “சுற்றுச் சூழல் பற்றி, சுற்றுச் சூழலுக்காக வழங்கப்படும் கல்வி சுற்றுச் சூழல் கல்வி'' எனப்படும்.

''மனிதன், இயற்கையோடும், மனிதனால் உருவாக்கப்பட்ட சூழலோடும் கொண்டுள்ள தொடர்பையும் மக்கட் தொகை, சுற்றுச் சூழல் சீர்கேடு, வளங்கள் ஒதுக்கீடு, பாதுகாத்தல், தொழில் நுட்பம், போன்றவற்றோடு மனிதன் கொள்ளும் முழுமையான தொடர்பையும் உள்ளடக்கிய கல்வி முறையே'' – சுற்றுச் சூழல் கல்வி என்று 1970–ல் ஐக்கிய நாட்டில் இயற்றப்பட்ட சுற்றுச் சூழல் கல்விச் சட்டம் எடுத்துரைத்துள்ளது.

''நிலம், நீர், காற்று ஆகியவற்றை சீரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளும் உறுதிப்பாடும், ஈடுபாடும், முயற்சிகளும் சுற்றுச்சூழல்கல்வி ஆகும் என்று'' இங்கிலாந்து சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குழுவின் முதல் அறிக்கை 1971 கூறியுள்ளது.

''இயற்கையான, மனிதன் பண்பாடு மற்றும் ஆன்மீக வளங்களால் உருவாக்கிய சமூக மற்றும் பருப்பொருள் சார்ந்த சுற்றுச் சூழலைப் பற்றிப் புரிந்துக் கொள்ளுதலையும், விழிப்புணர்வு ஏற்படுத்தலையும் மட்டுமின்றி, இவ்வளங்களை பாதுகாப்பதையும், அறிவு பூர்வமாக சிந்தித்துப் பயன்படுத்துவதையும் உள்ளடக்கியதே'' சுற்றுச்சூழல்கல்வி என ஆப்ரிக்கக் கல்வியாளர்களின் மாநாட்டு அறிக்கை (1968) கூறியுள்ளது.

## சுற்றுச் சூழல் கல்வி – வழி காட்டும் கொள்கைகள்

- இயற்கையான மற்றும் உருவாக்கப்பட்ட, சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு, வரலாறு போன்ற கூறுகளால் அமைக்கப்பட்ட சுற்றுச் சூழலை முழுமையாக, அதன் ஒட்டு மொத்தத் தன்மையையும் ஆழ்ந்து ஆராயச் செய்தல்.
- குழந்தை முன் பருவக் கல்வியில் தொடங்கி, வாழ்நாள் முழுவதும் தொடரும் கல்வி இது என்பதை உணர்தல்.
- அனைவரும் செயல் ஆர்வத்துடனும், துடிப்புடனும் சுற்றுச் சூழல் பிரச்சனைகளைத் தீர்க்கப் பங்கேற்றல்.
- உள்ளூர், தேசிய, வட்டார மற்றும் உலகளாவிய நோக்கில் சுற்றுச் சூழல் இடர்பாடுகளை ஆய்வு செய்வதும், கற்போருக்கு அவற்றைப் பற்றிய நுண்ணறிவுத் திறனை வளர்த்தலும்.
- உள்ளூர் தேசிய, வட்டார மற்றும் உலகளாவிய அடிப்படையில் இடர்பாடுகளை ஆய்வு செய்து. அதன் அடிப்படையில் விழுமியங்களைக் (Value) குழந்தைகளிடையே வளர்த்தல்.
- குழந்தைகள் தாம் வாழும் சமுதாயச் சூழலைப்பற்றிய உணர்வை நுட்ப அறிவை, பிரச்சனை தீர்க்கும் முறையை அறியுமாறு செய்தல்.

## சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986

1972 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்திற்குச் செயல் வடிவம் தரும் வகையில் இந்திய அரசு, பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றி, மனித இனத்திற்கும், பிற உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு அளித்தது. சட்டத்தின் வழியாகப் பின்வரும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளது.

– தூய்மையான காற்று, நீர், நிலம் போன்றவை வழங்குதல்.
– குறிப்பிட்ட அளவில் மாசுபடுதலை மட்டுப்படுத்துதல்.
– அபாயகரமான பொருட்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுதல்.
– அபாயகரமான பொருட்களைப் பல்வேறு பகுதிகளில் கையாளுவதைத் தடை செய்தல்.

- பல் வேறு பகுதியில் தொழிற்சாலைகள் தொடங்குவதைத் தடை செய்தல்.
- விபத்துக்கள் ஏற்படா வண்ணம் தகுந்த வழிமுறைகள் மற்றும் குறைகளைத் தவிர்க்க முயற்சிகள் எடுத்தல்.

## சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கல்வி வழங்குவதில் ஆசிரியர்களின் பங்கு :

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 51A, பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. '' காடு, ஏரி, ஆறு, மிருகங்கள் போன்ற இயற்கைச் சூழல்களை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும், அவைகளிடம் அன்பு பாராட்டுவதும், அவைகளால் ஏற்படும் நன்மைகளை உணர்வதும் கருணை காட்டுவதும், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்''

ஒவ்வொரு ஆசிரியரும் சமூக மாற்றம் மற்றும் நாட்டைக் கட்டமைப்பு செய்யும் முகவர்களாகச் செயல்பட வேண்டும். துவக்கப் பள்ளியில். குழந்தைகள் தம் ஆசிரியரைப் பார்த்து, அவரைப் போலவே செய்ய விழையும் : ஆகவே ஆசிரியர் இயற்கையைப் பாதுகாக்க, மேம்படுத்த முன்மாதிரிப் பங்கு அளிக்க வேண்டும்.

- காளிதாஸர், வேர்ட்ஸ் ஓர்த் (Words Worth) போன்றவர்கள் இயற்கையைப்பற்றிய வர்ணனை செய்தவைகளை, அறிவியல் அறிஞர்கள் சமூக மற்றும் பருப்பொருள் சூழலைப் பற்றிக் கூறியவைகளை, வகுப்பறையில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல்.
- பிறபாடங்களுடன் – மொழி, சமூக அறிவியல், அறிவியல்– இணைத்து மாணவர்களுக்கு நடத்துதல்.
- நேரிடையான, முதல்தர அனுபவங்கள் வாயிலாக மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் கல்வியை, அவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகள் மேம்பட வழங்குதல்.
- வகுப்பறையில், நேர்மறையான மனப்பாங்குகள் வளர, குழந்தைமைய அணுகுமுறையைப் பயன்படுத்துதல் வேண்டும்.
- கூட்டு மனப்பான்மையுடனும் தூய்மையான மனதுடனும் ஆசிரியர் பொறுப்புக்களை ஏற்று, குழந்தைகளுக்குச் சுதந்திரமாகக் கற்க, வேண்டிய வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.
- சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் புதிய அணுகுமுறையை, தீவிர சிந்தனைப் பரிமாற்றத்தைப் பயன்படுத்தி – மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். கலந்துரையாடச் செய்து முடிவுகளை மதிப்பீடு செய்து மாணவர்களின் விழிப்புணர்வு, மனப்பான்மை மற்றும் திறனை மேம்படுத்த வேண்டும்.
- சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் முன் மாதிரியாகத் திகழும் மாணவர்களுக்கு பாராட்டுரைத்தல்.
- சுற்றுச் சூழல் நீதி, நெறிமுறைகள் ஆகியவற்றை வளர்த்தல்.

## தொடக்க நிலையில் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய செயல்கள்

பள்ளியில் செடிகள், மரங்கள் வளரச் செய்தல், வளர்ச்சியை உற்று நோக்கல். மிருகங்கள் மற்றும் அவை வாழும் இடங்களைப் பார்வையிடல், மரங்கள், குகைகள், மலைகள், வீடுகள் படங்கள் வரைதல், தட்ப வெப்பநிலையைப் பதிவு செய்தல், விழாக்கள் கொண்டாடுதல். தேசிய விழாக்கள் கொண்டாடுதல், மிருகங்கள், விலங்குகள் ஆகியவற்றைப் பற்றி படித்தல், கதைகள் எழுதுதல், அருங்காட்சியகம், மிருகக் காட்சியகம், கடற்கரை, ஆற்றங்கரை, தீயணைப்பு நிலையம், தொழிற்சாலைகள் போன்றவற்றைப் பார்வையிடுதல், காற்று, நீர், இரைச்சல் போன்ற மாசுகளைத் தடுத்தல், மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுத்தல், உணவு கெடுதல் போன்றவற்றை உணர்த்துதல் – ஆகிய செயல்களை வழங்கலாம்.

''சுற்றுச் சூழலைப் பற்றிய அறிவை வழங்குவது முக்கியமானதாகும். குழந்தை முதல் சமுதாயத்தினுடைய அனைத்துப் பிரிவினர், அனைத்து வயதினருக்கும் இதனை வழங்கிட

வேண்டும். கல்வியினுடைய அனைத்துச் செயல்களோடும் இதனை இணைத்துப் புகட்ட வேண்டும் என தேசியக்கல்விக் கொள்கை 1986 சுற்றுச்சூழல் காப்புக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவுறுத்தியுள்ளது.

ஆகவே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான கல்வியை, மாணவர்களின் அறிவு, மனப்பான்மை, திறன், இயலுமை முதலியவற்றிற்கேற்ப போதிக்க வேண்டும்.

## 10.5. பன்னாட்டு உணர்வை வளர்ப்பதில் கல்வியின் பங்கு

அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாக, நாடுகளுக்கிடையே இடைவெளி குறைந்து விட்டது. இனி, எந்த நாடும் தனியாகவோ, பிற நாடுகளைப் பற்றி அக்கறை கொள்ளாமலோ இருக்கவியலாது. ஒரு நாட்டில் ஏற்படும் நன்மை, தீமைகள் பிற நாடுகளைப் பாதிக்கும். உற்றுழி உதவியும் உறுபொருள் ஈந்தும் பேரிடர்க்காலங்களில் காப்பது பன்னாட்டு உறவே; என்பது கண்கூடு. குஜராத் பூஜ்நகரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு உலகநாடுகள் பல இரங்கல் தெரிவித்து, நிவாரணக் கொடைகளை வழங்கின. வங்காள தேசத்தின் விடுதலைப் போரின்போது அந்நாட்டு மக்கள் இந்தியாவில் அகதிகளாக வந்து தஞ்சம் புகுந்தபோது பல்லாயிரக்கணக்கான அம்மக்களுக்கு அபயம் வழங்கி ஆதரித்துக் காத்தது.

இடிஅமீன், சதாம் உசேன், பின்லேடன் போன்ற தன்னாதிக்கக், கொடுஞ்செயலர்களும், தீவிரவாதிகளும் தலைதூக்கும் போது உலகமே திரண்டு அவர்களின் வெங்கொடுஞ்செயல்களைக் கண்டித்து முடக்குகிறது. மனித உரிமை, சிறார் உரிமை, பெண்ணுரிமை ஆகியவற்றிற்காகப் பன்னாட்டு உணர்வு திரட்டப்பட்டு முறை மீறல்களைக் கண்டித்துச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. பஞ்சம், வெள்ளம், வறட்சி, போர் போன்ற காலங்களில் உயிரிழப்பிலும், பொருளிழப்பிலும் உற்றுழி உதவவும், புரிந்து கொள்ளும் தன்மையும், நட்புணர்வும் தேவைப்படுகின்றன. இதுவே பன்னாட்டு உணர்வு எனப்படுகின்றது.

### 10.5.1. பன்னாட்டு உணர்வு : பொருள்

''ஒவ்வொரு தனிமனிதனும் தன் நாட்டிற்கான உறுப்பினராக மட்டுமின்றி, உலகத்தின் உறுப்பினராகவும் இருப்பதை உணர்த்தும் உணர்வு'' ஆலிவர் கோல்ட்ஸ்மித்.

''உலக நாடுகளிடையே நட்புணர்வும், இசைவும் ஏற்படுவதையும், தன் தனித்தனிமையையும், இறையாண்மையையும் பாதுகாத்துப் பராமரிப்பதையும், குறிக்கும்''. டாக்டர் ஆத்மானந்த மிஷா.

''உலக நாடுகள் கடல்களால், கண்டங்களால் பிரிக்கப்பட்டு இருந்தாலும், அவைகளிடையே இன்னும் புரிந்து கொள்ளாமையும், சந்தேகமும் இருப்பினும், அவைகள் ஒன்றுபட்டுள்ளன. நாம் ஒன்றுபட்டு வாழ்வதும். ஒருவருடைய பயம் மற்றும் கவலைகளைப் புரிந்து கொள்வதும் மிகவும் அத்யாவசியமான ஒன்றாகும். நாம் ஜெர்மானியர்கள், அமெரிக்கர்கள், ரஷ்யர்கள் என இருப்பினும், நாம் மனிதர்கள் என்ற அடிப்படை உண்மையை மறந்துவிடக் கூடாது. இந்த எண்ணமே 'பன்னாட்டு உணர்வாகும்'' என டாக்டர் ராதாக் கிருஷ்ணன் கூறுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் உலகுதழுவிய கருத்து பன்னாட்டு உணர்வு ஆகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இதன் முக்கியத்துவம் கூடியது. மற்றொரு உலகப் போரின் விளைவை உணர்ந்தும், அழிக்கும் சக்தி கொண்ட போர்க்கருவிகளின் ஆபத்தை அறிந்தும், உலக அமைதியை எற்படுத்தவும் அனைத்து நாடுகளுக்கிடையேயும் இப்பொதுக்கருத்து உருவானது. நிறத்தால், சமயத்தால், சாதிய உணர்வால், மனிதனுக்கு மனிதன் வேறுபடக் கூடாது எனவும் உலகத்தினர் எண்ணினர் அதன் வெளிப்பாடே பன்னாட்டு உணர்வு ஆகும்.

## பன்னாட்டு உணர்வின் தேவை மற்றும் முக்கியத்துவம்

மனிதனுடைய அமைதி நிலைப்பாடு பன்னாட்டு உணர்வை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்த பன்னாட்டுணர்வு புதினமான இணைக்கும் சக்தியாகப் பயன்பட்டு வருகின்றது. பன்னாட்டுச் சமரச ஒத்துழைப்பால் உலகில் பல்வேறு நன்மைகள் மலரக்கூடும்.

- உலகப் போரைத் தவிர்த்தல்.
- தன் இறையாண்மையைப் பாதுகாத்தல்.
- மக்களாட்சிக் கொள்கைகளை உறுதிப்படுத்துதல்.
- பின் தங்கியுள்ள நாடுகளை வளரச் செய்தல்.
- பிறநாடுகளுடன் நெருங்கியத் தொடர்பு.
- மனித நலத்தை மேம்படுத்தல்.
- பரஸ்பர நல்லிணக்கம்; மனித நேயம்

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், நாடுகளிடையேயுள்ள காலம் மற்றும் தூரத்தடைகளை நீங்கிவிட்டதால், உலக நாடுகள் அனைத்தும் பிரிக்க முடியாத ஒன்றாக மாறிவிட்டன. அதிக அளவில் கூட்டுறவாகவும், இணைந்து செயல்படவும் நாடுகள் விரும்புகின்றன. பொருளாதார அடிப்படையில் சார்ந்திருக்க ஒவ்வொரு நாடும் விழைந்து செயல்பட்டு வருகின்றது.

## யுனெஸ்கோ பரிந்துரைத்துள்ள கொள்கைகள்

பன்னாட்டு உணர்வை வளர்க்க யுனெஸ்கோ பின்வரும் பரிந்துரைகளையும் பின்வரும் கொள்கைகளையும், திட்டங்களையும் அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

1. உலக சமுதாயத்திற்கான கல்வியை மனித இனத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உலக சமுதாயத்தை, ஐக்கிய நாடுகள் சபையின் (United Nation) ஒப்பந்தம் வலியுறுத்தியுள்ள எழுச்சியின் அடிப்படையில் தோற்றுவித்தல்.

2. சமயக் கோட்பாடுகள் மற்றும் வாழ்க்கை, அரசியல் ஆகிய அடிப்படையில் நாடுகள் வேறுபட்டு இருப்பினும், உலக அமைப்புக்களில் ஒன்றுபட்டு செயல்படவும், அதில் அக்கறை காட்டவும், கடமைப்பட்டுள்ளன.

3. பல நாடுகளின் தோற்றத்தால், உலக நாகரீகம் தழைத்தது என்பதால் எல்லா நாடுகளும் பிறரைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதையும் தெளிவாக்குதல்.

4. கடந்த மற்றும் நிகழ்காலச் சூழல், மரபு, சிறப்புத் தன்மைகள். பிரச்சனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்களின் வாழ்க்கை முறை மாறிவிட்டது என்பதையும், அவற்றை செம்மையாக்குவது பற்றியும் தீர்மானித்தல்.

5. ஒழுக்கம், வயது முதிர்ச்சி, புரிந்து கொள்ளும் திறன், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக மனித இனத்திற்கான பொதுவான மரபுகள் அல்லது பிறப்புரிமைகள் தோன்றின. உலக நாடுகள் அரசியல் அக்கறை காரணமாக வேறுபட்டு இருப்பினும், அன்றாடம் மக்கள் ஒருவரை, ஒருவர் சார்ந்திருத்தல் கண்கூடு. அதற்கு உலக அளவில் ஒரு அமைப்பு அவசியம் என்பதை உணர்தல் வேண்டும்.

## பன்னாட்டு உணர்வை வளர்ப்பதற்கான வழி வகைகள்

போர் செய்யும் எண்ணம் மனிதனின் மனதில் எழுவதால், அமைதிக்கான எண்ணத்தையும் அவன் மனதிலேயே அமைக்க வேண்டும்'' என்று யுனெஸ்கோ ஆழகாகக் குறிப்பிட்டுள்ளது.

பன்னாட்டு உணர்வை, அரசியல் நோக்கில், கல்வி வளர்க்க இயலாவிடினும், பன்னாட்டு உணர்வு என்ற உணர்ச்சியை, கல்வி என்ற முகவர் மூலமே வளர்க்க இயலும் என்று பெர்ட்ரன் ரசல் (Bertrand Russel) குறிப்பிட்டுள்ளார். ஆகவே கல்வி, பின்வரும் வழி வகைகளின் அடிப்படையில் பன்னாட்டுணர்வை வளர்க்க முயலவேண்டும்.

### 1. கலைத்திட்டம் மற்றும் பாடப்புத்தக மறுசீரமைப்பு

உலக அமைதி மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றைக் கலைத் திட்டம் மற்றும் பாடப்புத்தகம் வலியுறுத்தும் வகையில் உருவாக்கவேண்டும். அதற்கு கீழ்க்கண்ட திறன்களை மாணவர்கள் பெறும் வகையில் கலைத்திட்டம் அமைதல் வேண்டும்.

i. உலக நாட்டின் பிறரைச் சார்ந்துள்ளனர் என்ற உணர்வு.
ii. பல சமயங்களில் ஒத்த சிந்தனைகள், ஒழுங்குக் கொள்கைகள் பற்றிய அறிவு .
iii. உலகத்தில் பின்பற்றப்படும் பல பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் பற்றிய அறிவு.
iv. உலகம், அதன் நாடுகள், மக்கள், வாழ்க்கைக்கான எண்ணங்கள் ஆகியவற்றைப் பற்றிய முழுமையான அறிவு.
v. அமைதியை ஏற்படுத்த மனித இனம் நிகழ்த்திய போராட்டங்கள் பற்றிய அறிவு.

பள்ளிகளில் போதிக்கப்பட்டும் வரலாறு, புவியியல், அறிவியல், இலக்கியம் போன்ற பாடங்கள் மாணவர்களுக்கு தாங்கள் உறுப்பினராக உள்ள உலகத்தைப் பற்றி விரிவான, பரந்த எண்ணத்தை உருவாக்க வேண்டும்.

### 2. பள்ளி இணைச் செயல்பாடுகள்

வர்த்தமான மகாவீரர், புத்தர், இயேசு, முகமது நபி, குருநானக், ஸ்ரீகிருஷ்ணர், இராமகிருஷ்ணர், தாகூர், காந்தி, சிவாஜி போன்ற பன்னாட்டு ஆன்மீகத் தலைவர்களின் விழாக்களைக் கொண்டாடுதல், வீரர்களின் பிறந்த நாள் கொண்டாடுதல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை மற்றும் உலக சுகாதார தினங்கள் கொண்டாடுதல், பேனா நண்பர்கள் கழகம் தொடங்குதல் போன்றவைகள் மூலம் பன்னாட்டு உணர்வை வளர்க்கலாம்.

### 3. பண்பாட்டுப் பரிமாற்றம்

ஆசிரியர்கள், மாணவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் கொண்ட பண்பாட்டுக் குழுவை பள்ளியின் வாயிலாக உலக நாடுகளுக்கு அனுப்பி, உலக மக்களிடையே அன்பும் அரவணைப்பும் ஏற்படச் செய்யலாம் ''உலக நாடுகளிடையே மனிதர்களைப் பரிமாற்றம் செய்து, அறிவு, திறன், அவைகளை பகிர்ந்து கொள்வதன் வாயிலாகவும், சுதந்திரமாகவும் மனம் திறந்த கலந்துரையாடல்கள் மூலமாகவும், வேறுபாடுகளைக் களைந்து ஒத்துணர்வை மேம்படுத்தி, ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும். கூடி வாழ்தல் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் செயல் மூலமாக அனைவரும் பயன் பெறச் செய்தல் வேண்டும்'' என சி.டி. தேஷ்முக் கூறியுள்ளார்.

### 4. ஆசிரியர் பங்கு

ஆசிரியரின் மனப்பான்மையும், பார்வையும், ஈடுபாடும் பன்னாட்டு உணர்வுக் கல்வியை வழங்குவதில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. உலகப் பார்வையும் விரிந்த மனப்பாங்கும், மனிதநேயமும் உடையவராக ஆசிரியர் இருக்க வேண்டும். பள்ளிச் செயல்களும், கற்பித்தல்

முறைகளும், உலகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு பல்வேறுநாடுகளின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் அறிமுகப்படுத்த வேண்டும்.

**செயல்**

உரிய வழிமுறைகளில் அணுகி பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவரும் வெவ்வேறு நாட்டினருடன் பேனா நண்பர்களைத் தேர்ந்துக் கொண்டு கடிதம் எழுதி உலகக் குடும்பத்தின் உறுப்பினர்களாக உங்களை மாற்றிக்காட்டுங்கள்.

‘‘கல்வி, அறிவியல், பண்பாடு ஆகியவற்றின் வாயிலாக நாடுகளுக்கிடையே அமைதியையும், பாதுகாப்பையும் வழங்குவதும், பால், இனம், சமயம் ஆகியவற்றால் வேறுபாடு இன்றி. சமூக நீதி, மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் பன்னாட்டுச் சட்டம் ஆகியவற்றை உலக மக்கள் அனைவரையும் ஒன்றுபட்டு மதிக்கச் செய்வதுமே பன்னாட்டுணர்வுக் கல்வியின் தலையாய நோக்கமாகும். மாணவரிடையே

i. செய்தித் தொடர்பு வழியாக பன்னாட்டு அறிவையும் புரிந்து கொள்ளும் திறனையும், தங்குதடையற்ற கற்பனை மற்றும் கருத்துக்களை வெளிப்படச் செய்தலையும் வளர்த்தல்.
ii. பன்னாட்டுணர்வுக் கலாச்சாரம் பரவ, கல்வியில் புதிய சிந்தனையோட்டத்தைப் பாய்ச்சுதல்.
iii. அறிவைப் பராமரித்தல், உயர்த்துதல், பரப்புதல் போன்றவற்றை வளர்த்தாக்குமாறு யுனெஸ்கோ பரிந்துரைத்துள்ளது.

யுனெஸ்கோ பின்வரும் முயற்சிகளின் வாயிலாக இந்தியாவில் பன்னாட்டுணர்வை வளர்த்து வருகிறது.

1. பண்பாட்டில் வீழ்ந்து வருகின்ற நாடுகளை மறுச் சீரமைப்புச் செய்தல்.
2. உலக அமைதியை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

    i. இனத்தொடர்பான தவறான எண்ணங்களை நீக்க ஆசிரியர், மாணவர் கருத்துப் பரிமாற்றம்.
    ii. பல நாடுகளைச் சார்ந்த மாணவர்களையும் சந்திக்கச் செய்து தங்களுடைய எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள முகாம்கள் ஏற்பாடு செய்தல்
    iii. கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல்
    iv. பிற நாடுகளின் தேவைகளைப் புரிந்து கொள்ள கல்வி மையங்களை ஏற்படுத்தல்
    v. நாடுகளின் பொதுவான பிரச்சனைகளை விவாதிக்க உலகப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தல்.
    vi. வானொலி, செய்தித்தாள் போன்றவற்றை உலக நலத்திற்காக மறு அமைப்பு செய்தல்.
    vii. பின் தங்கிய நாடுகளின் எழுத்தறிவை மேம்படுத்துதல்.
    viii. கலைக் கண்காட்சியை ஏற்பாடு செய்தல்.
    ix. ஆசிரியப் பயிற்சிக் கலைத் திட்டத்தில் செயல் முறை அடிப்படையில் சேர்த்தல்.
    x. நூலகம், அருங்காட்சியகம் ஆகியவற்றை விரிவுபடுத்துதல்.
    xi. சிறந்த இலக்கியங்களை மொழி பெயர்த்தல்.

யுனெஸ்கோ திட்டங்களை நம் நாட்டில் செயல்படுத்த இந்தியக் கல்வி அமைச்சகத்தின் கீழ் 1969 ஆண்டு யுனெஸ்கோவுடன் கூட்டுச் செயற்பாட்டிற்கான இந்திய தேசியக்குழுவை நிறுவியது.

**இக்குழுவின் செயல்பாடுகள்**

- யுனெஸ்கோ மற்றும் பிறநாடுகளின் தகவல்களைப் பரப்புதல்
- ஐக்கிய நாட்டு சபை நாள், மனித உரிமை நாள், உலக எழுத்தறிவு நாள். போன்றவற்றைக் கொண்டாடுதல்.
- மனிதர்கள் பரிமாற்றம்.
- பிறநாடுகள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு.
- பிற தேசிய குழுக்களுடன் உறவு
- புத்தகங்கள் வெளியீடு
- பள்ளிச் செயல் திட்டங்கள் தயாரிப்பில் பங்கு கொள்ளல்.
- புத்தகங்கள் இறக்குமதியில் யுனெஸ்கோ வழங்கும் அடையாளச் சீட்டை வழங்குதல்.
- திறமை வாய்ந்த இந்தியர்களுக்கு யுனெஸ்கோ அமைப்பில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருதல்.
- யுனெஸ்கோ மன்றங்கள் அமைத்தல்.

## பள்ளிச் செயல் திட்ட முறையில் யுனெஸ்கோவில் பங்கு

அ) ஐக்கிய நாடுகள் பற்றியும் அதன் சிறப்புத் தன்மை வாய்ந்த பிரதிநிதிகள் (Agencies) பற்றியும் கற்பித்தல்.

ஆ) மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் பற்றிக் கற்பித்தல்.

இ) பிற நாடுகள் பற்றிக் கற்பித்தல்.

## யுனெஸ்கோ மன்றங்கள்

இந்திய தேசியக்குழு, யுனெஸ்கோ மன்றங்களைப் பல்கலைக் கழகங்களில், பொது நூலகங்களில், பிற கல்வி மற்றும் கலாச்சார மையங்களில் அமைக்கத் தூண்டியது. இம்மன்றங்கள் யுனெஸ்கோ பற்றியும், அவற்றின் தேவை, பரிமாற்றம் பற்றிய தகவல்களை பரப்பும் பணியை செய்ய அமைக்கப்பட்டன. தற்போது 120 யுனெஸ்கோ மன்றங்கள் இந்தியாவில் பல இடங்களில் பணியாற்றி வருகின்றன.

## முடிவுரை

பன்னாட்டு உணர்வு இன்றைய அவசியத் தேவையாகும். கல்வி, பன்னாட்டு உணர்வை வலிமையாக வளர்ப்பதில் முக்கிய அங்கம் வகிக்கிறது. மனித சக்தியைத் தகுந்த பாதையில் திசைத் திருப்பி, அமைதியையும் ஒற்றுமையையும் வலுப்படுத்த கல்வி தன்னை முழு மூச்சாக அர்பணித்துக் கொண்டுள்ளது. பன்னாட்டு உணர்வை வளர்க்கும் வழிமுறை மெதுவாக இருப்பினும், அதன் பலன்கள் மிகவும் வலிமையானவை. மனித குலத்தில் வளர்ச்சியும், வலிமையையும் மட்டுமின்றி மனித குலத்தின் நிலைப்பாடு பன்னாட்டு உணர்வின் முன்னேற்றத்தைப் பொருத்தே அமையும்.

## 10.6. உரிமைப் பறிப்பும் இழப்புமற்ற சுதந்திர நோக்குடன் கூடிய சமவாய்ப்பு (Egalitarianism)

சட்டத்தின் முன்னால் அனைத்துக் குடிமக்களும் சமம். குடிமக்கள் அனைவரும் வாழ்க்கையில் முன்னேற்ற மடைவதற்கு சமவாய்ப்பு பெறும் உரிமையும் உண்டு. அதற்கு இன்றியமையாதது கல்வி ஆகும். குடிமக்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான

திறமைகளைப் பெற்றிருப்பது இயற்கையே. திறன்களை வளர்த்துக் கொள்ள பலருக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வேறு சிலர் வாய்ப்பின்மை காரணமாக நலிவடைவதும் கண்கூடு. கல்வி வாய்ப்புக்களை சமமாக அளிப்பதன் மூலம் அவர்கள் தத்தமது திறமைக் கேற்ப வாழ்க்கையில் முன்னேற்றமடையவும் சிறப்பைப் பெறவும் இயலும்.

பெற்ற சுதந்திரத்தின் நன்மைகளை நாம் பேரளவில் துய்த்திட கல்வி ஓர் அடிப்படையான தேவையாகும். ஒரு மக்களாட்சி நாட்டில் வாழும் குடிமகனுக்கு கல்வி உரிமைகளைக் கோரிப்பெறவும், பெற்று அனுபவிக்கவும், அனுபவித்து இன்புறவும், முன்னேறவும், தனது கடமைகளை அறியவும், அறிந்து நிறைவேற்றவும், நிறைவேற்றித் தன் நாட்டை உயர்த்திடவும் உரிய புரிதலை கல்வியில்லாமல் ஒருவர் பெறுவது முயற்கொம்பே.

தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்ள, தன் இறையாண்மையைப் பிறர் ஏய்த்து விடாது காத்துக் கொள்ள, தன் வாய்ப்புச் சமத்துவத்தை வரிந்து கட்டிக்கொண்டு கோரிப் பெற்றிட, சுரண்டலிலிருந்து தனது நலன்களைக் காத்துக்கொள்ள, வாக்குரிமையை அறிவுபூர்வமாகப் பயன்படுத்தி சரியான பிரதிநிதிகளைத் தெரிவும், தேர்வும் செய்ய எனப் பலவகைக்கும் கல்வி மிக மிகத் தேவை என்பது வெள்ளிடைமலை.

எண்ணெழுத்துக்கல்வியை, விழிப்புணர்வுக் கல்வியை, பொருளாதார மேம்பாட்டுக் கல்வியை, சமூகநீதிக்கான கல்வியைப் பெறாத ஒருவர் பலவகையிலும் ஏய்க்கப்படுவது திண்ணம். விழிப்புணர்வும், கல்வியும் இல்லாத குடிமக்களின் அடிப்படை உரிமைகளையும் அரசு காத்துத்தர விரும்பினாலும் அது இயலாததொன்றாகவே வீணடிக்கப்படுவதை நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். எனவே எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டுமெனில் அது எல்லார்க்கும் கல்வி தருவதன் வாயிலாகவே இயலும். ஏட்டிலிருக்கும் உரிமைகளை கேட்டுப்பெறவும், நிலைநாட்டி அடையவும், சமூகவிரோத சக்திகளிடமிருந்து காத்துத் துய்க்கவும் கல்வியால் வரும் விழிப்புணர்வு இல்லாதவர்களுக்கு அரசும் பிறரும் காவல் நின்று கொண்டிருப்பது எல்லாக்காலத்திலும் இயலுவதில்லை. எனவே உரிமை மறுப்பும், பறிப்பும் நேரலாம். சட்டப்படி சுதந்திரமிருப்பினும் தான் அதனை அறிந்தும், புரிந்தும், ஆளவும் வல்லவராய் இல்லாதவருக்கு அது கிட்டுவதில்லை.

எனவே உரிமைக்காப்பை, நன்மை சேர்ப்பை, இழப்பின்றி, தற்சார்புடன், தன்விருப்புக்கிணங்க நிறைவேற்றிக் கொள்ள, மக்களாட்சி நாட்டில் தன்னைத்தானே வழி நெறிப்படுத்திக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து இன்புற வேண்டிய ஆண்டான் அடிமையற்ற தன்மையை கல்வியால் மட்டுமே அனைவர்க்கும் வழங்கிட இயலும்.


கல்விச் சமவாய்ப்பை அளிப்பதால் நீதியுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை நாம் உருவாக்க இயலும். நல்ல சமுதாயம் உண்டாவதனால் நாட்டின் மனித வளம் மேம்பாடு அடையும். எனவே, நாட்டின் பொருளாதார நிலை உயர்வடையும். தனி மனிதத் தேவைகள் நிறைவேற்றப் படும் போது சமுதாயத் தேவைகள் நிறைவேறுகின்றன. எனவே கல்வியே சமவாய்ப்புக்கான முதன்மைக் காரணியாக செயல்படுகிறது.

அரசியலமைப்பு சட்டம், பிரிவு 45–ல் கூறியுள்ளதன் படி நமது நாட்டிலுள்ள 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பது ஒரு இலக்காகும். இக்கொள்கையை நிறைவேற்ற மைய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

மேலும் சாதி அடிப்படையிலும், சமூக ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி மரபினர் என்ற அடிப்படையிலும் இட ஒதுக்கீடு முறையை மத்திய மாநில அரசுகள் பின்பற்றுகின்றன. கல்வியில் சம வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்விட ஒதுக்கீடு முறை 1980 ஆம் ஆண்டிலிருந்தே அமல்படுத்தப்பட்டு வருகிறது.

## 10.7. குழந்தைகளின் உரிமைகள் (Rights of Children)

குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பிற்கான சில முக்கிய அம்சங்கள் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் நாள் ஐ.நா.சபையின் பொதுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உடன் பாட்டில் இந்தியா நவம்பர் மாதம் 1992 –ல் கையெழுத்திட்டது.




### ❖ பாதுகாப்புரிமை

மற்றவர்களால் சுரண்டப்படுவதில் இருந்தும் பிறரால் தவறாகப் பயன்படுத்தப்படுவதில் இருந்தும் மனிதாபிமானமற்ற இழிவுபடுத்தும் நடவடிக்கைகளிலுருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் பாதுகாப்பு பெறும் உரிமை குழந்தைகளுக்கு உண்டு.

### ❖ பங்கேற்கும் உரிமை

குழந்தைகட்கு மதிப்பளித்தல், கருத்துச் சுதந்திரம், துல்லியமான விவரங்களைப் பெறுவதற்கான உரிமை, மத உரிமை, அனைத்திலும் பங்கு பெறும் உரிமை ஆகியன ஆகும். இது சட்டத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் நிறைவேற்றித் தர வேண்டியவர்கள் பெற்றோரும், சமூகத்தினரும், ஆசிரியர்களுமே எனலாம்.

### ❖ வளர்ச்சி உரிமை

கல்வி பெறும் உரிமை, குழந்தைப் பருவ வளர்ச்சிக்கான ஆதரவு, அரவணைப்பு சமூகப் பாதுகாப்பு முதலியன பெறும் உரிமை. இவ்வுரிமைகளைச் சமுதாயத்தினரே நிறைவேற்றித்தர வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 10.8. இயலாதோருக்கான சிறப்புக் கல்வியும் : முன்வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளுக்கான கல்வியும். (Education of Children with special needs and disadvantaged groups)

### இயலாதோருக்கான சிறப்புக் கல்வியின் அவசியம்

உடலில் குறைபாடுடைய குழந்தைகள் அனைவரும் இயலாநிலைக் குழந்தைகள் என்றழைக்கப்படுகிறார்கள். கண்பார்வைக் குறைவு, காது கேளாமை, வாய் பேசாவியலாமை, மூளைவளர்ச்சிக்குறைவு உடல் ஊனமுற்றவர்கள் போன்ற இயலாமை உள்ளவர்கள் இப்பிரிவில் அடங்குவர்.

ஆதாரபூர்வமாகப் பத்து வகையாக இக்குறைபாடுடைய குழந்தைகளை வகுத்துரைக்கலாம். அவையாவன.

1. கண்பார்வையற்றவர்கள்.
2. ஓரளவு கண்பார்வையுள்ளவர்கள்
3. காது கேளாதவர்கள்
4. ஓரளவே காது கேட்கும் தன்மையுடையவர்கள்
5. கற்றலில் இயல்புக்கு மாறான நிலையுள்ள குழந்தைகள் (Educationally abnormal).
6. வலிப்பு நோய் உள்ள குழந்தைகள் (Epileptic)
7. பொருத்தப்பாடில்லாதவர்கள் (Maladjusted).
8. உடல் ஊனமுற்றோர் (Physically handicapped)
9. வாய் பேசாதோர் (ஊமைகள்) (Dumb)
10. நுண்ணறிவு குன்றியவர்கள் (Dull and idiots)

1986 ஆம் ஆண்டின் புதிய கல்விக் கொள்கையில் இவ்வியலாக் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

- ◈ இயலாக்குழந்தைகளுக்கு வகுப்பறையில் பிற குழந்தைகளுடன் சேர்த்து கற்றல் நிகழும் வண்ணம் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்தல்.
- ◈ புலனுறுப்புகளில் பாதிப்புள்ள குழந்தைகளுக்குப் பயிற்சியின் மூலம் கல்வி புகட்டுதல்.
- ◈ இயலாக் குழந்தைகளுக்கென மாவட்டந் தோறும் தங்குமிட வசதியுடன் கூடிய சிறப்புப் பள்ளிகளை (Special schools) நிறுவி சமுதாயத்திற்குப் பேருதவி செய்தல்.
- ◈ இயலாக் குழந்தைகள் தொழிற்கல்வியில் போதிய அளவு பயிற்சி பெறும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு மத்திய மாநில அரசுகள் கல்வி முறையில் மாற்றம் கொண்டுவருதல்.
- ◈ இவ்வியாலக்குழந்தைகளையும் பொதுவான வகுப்பறையில் சேர்த்து பயிற்றுவிக்கும் வகையில் ஆசிரியப் பயிற்சியில் குறிப்பாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான பாடத்திட்டத்தில் போதிய பாட அமைப்புகளை வகுத்தளித்தல்.
- ◈ சமுதாயமும், தன்னார்வ அமைப்புகளும் தாமாகவே முன்வந்து, இயலாக்குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் தங்களால் இயன்ற ஒவ்வொரு வகையிலும் உதவி புரிந்து இயலாக் குழந்தைகளை உய்வித்தல் போன்றவை ஆகும்.

## 10.9. சமூகப்பிரச்சனைகளைப் பற்றிய விழிப்புணர்வூட்டல் (Sensitisation for social issues)

ஆசிரியர், தன் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு சமூகப் பிரச்சனைகளைப் பற்றிய உணர்வை ஊட்ட வேண்டும். மாணவர்களுக்கு அறிவைப் புகட்டுதல், நல்லுறவை ஏற்படுத்துதல், பாடதிட்டக் கிளைச் செயல்பாடுகளை இணைப்பதன் வாயிலாக இவ்வுணர்வை ஏற்படுத்த முடியும்.

- ◈ மாணவர்களிடையே அன்பு, பரிவு, பாசம், பாதுகாப்பு போன்ற உணர்வை வளர்க்கும் கற்றல் அனுபவங்களை வழங்குதல்.
- ◈ நன்மதிப்புக்களைத் திட்ட வட்டமான சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி, பொய், உண்மை போன்றவற்றை வேறுபடுத்திப் பார்க்கும் அனுபவங்களை வழங்குதல்.
- ◈ நல்ல குடிமக்களை வளர்க்கத் தேவையான அனுபவங்களை வழங்குதல்.
- ◈ குழந்தைகள் தற்சார்புடன் சூழலோடு தன்னைப் பொருத்திக் கொள்ள வழி வகைச் செய்தல்.

- ◈ பண்பாட்டு, கலாச்சார பாங்குகளையும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் பன்னாட்டு உணர்வையும் வளர்த்தல்.
- ◈ ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி, வன்முறை, தீவரவாதம் போன்றவற்றிலிருந்து தம்மைக் குழந்தைகள் பாதுகாத்துக் கொள்ள வழி செய்தல்.

## 10.10. குழந்தைத் தொழிலாளர்கள் (Child Labour)

இந்திய அரசியல் சாசனம் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்து, 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கட்டாய ஆரம்பக் கல்விக்கான வாய்ப்பைக் கொடுத்திருந்தாலும் லட்சக் கணக்கான குழந்தைகள், வீட்டு வேலைகளிலும், சில ஆபத்தும், தீயவிளைவுகளும் உள்ள பணிகளில் தொழிலாளர்களாகவும் இருக்கின்றனர்.

வருங்கால இந்தியாவை வளமாக்கத் தயாராகி வருபவர்கள் இக்காலக் குழந்தைகள். இக்குழந்தைகளை நல்ல முறையில் பேணிக்காத்துக் கல்வி வழங்க வேண்டுமென்பது இன்றைய கல்வியின் முக்கியக் குறிக்கோளாக உள்ளது. எனவே குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஒழிக்க வேண்டுவது மிக முக்கிய தேசிய அக்கறையாக உள்ளது.

ஓய்வு நேரத்தை அனுபவிப்பதற்கும், பொழுது போக்கு, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்குமான உரிமை குழந்தைகளுக்கு உள்ளது. பெற்றோர்களும், முதியவர்களும் மிக்க பரிவுணர்வுடன் குழந்தைகளின் நியாயமான தன்மைகளை ஏற்று இறுக்கம், அச்சம், முடக்கம், அல்வழியற்ற வகையில் குழந்தைகளைப் பேணி திரண்ட வளரிளம்பருவத்தினரை உருவாக்கும் பொறுப்பில் தம் பங்கைச் சிறப்பாக ஆற்ற முன்வர வேண்டும்.

வாழும் உரிமை, உயர்ந்த சுகாதாரம், சத்தான உணவு, தரமான வாழ்க்கைத் தரம், பெயர் உரிமை, குடியுரிமை முதலிய உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றிற்குமாறான சமூக அநீதிகள் நிகழாவண்ணம் காப்பதில் எல்லார்க்கும் பங்குண்டு. எனினும் ஆசிரியர்களுக்கு இவற்றில் தலையாய பொறுப்பும் கடனும் உள்ளது.

## 10.11. எழுத்தறிவின்மை

இந்தியக் கல்வி அறைகூவல்களில் மிகவும் முன்நிலையில் இருப்பது எழுத்தறிவின்மையாகும். நம் நாட்டில் தற்போது (2001 –இன் கணக்கெடுப்பு) உள்ள மக்கள் தொகையில் 75% ஆண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும் 54% பெண்கள் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு மனிதரும் (ஆண்/பெண்) சமூதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றனர். தனி மனிதர்களின் வளர்ச்சிதான் சமூதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை. தனிமனிதனை விழிப்புணர்வும், பாதுகாப்பும் உள்ள மனிதராக்குவது கல்வியே. கல்லாமையும், எழுத்தறிவின்மையும் இன்றைய தேசிய அளவில் உள்ள அக்கறையாகும்.

## 10.12. சமுதாய ஏற்றத்தாழ்வுகள் (Class Inequalities)

நம் நாட்டில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணம் கல்வியறிவின்மையே என்பது பொதுவான உண்மை. இந்தியாவில் 1947–ல் ஆண்களில் 18 விழுக்காட்டினரும் பெண்களில் 9 விழுக்காட்டினரும் எழுத்தறிவு பெற்றிருந்தனர். ஆனால், அதுவே மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் பயனாக 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி ஆண்களில் 76 சதவீதத்தினரும் பெண்களில் 54 சதவீதத்தினரும் எழுத்தறிவு (கல்வியறிவு) பெற்றவர்களாக உள்ளனர் என்பதை நாம் அறிவோம். இதன் முலம் ‘அனைவருக்கும் கல்வி’ என்ற இலக்கை அடைய அதாவது ஆண், பெண் இருபாலரும்100 சதவீகித கல்வியறிவு பெற இன்னமும் பல வகைகளில் முயற்சிக்க வேண்டியுள்ளது. குறிப்பாகப் பெண்கல்வி முன்னேற்றத்திற்கு அதிக அக்கறை காட்ட வேண்டியது உள்ளது.

கல்வி அறிவின்மையால் தனிநபர் வருமான ஏற்றத்தாழ்வு அதிகமாகக் காணப்படுகிறது. இது பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்றது எனவே

- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பு கிட்டுவதில் சிரமம் ஏற்படுகிறது.

- நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப மனிதவள மேம்பாடு திருப்த்திகரமாக இல்லை.

- இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பை விரும்பாததால் வேலையின்மை பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதனால் பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள் எழக்கூடும்.

- மக்கள் தொகை கட்டுப்பாட்டின் விழிப்புணர்வு நம்மக்களிடையே போதுமானதாக இல்லை.

# அலகு 11
# ஆசிரியர் கல்விக் கட்டமைப்பு

## முன்னுரை

''குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோள் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே'' என்பார், நன்னூல் ஈந்த பவநந்தியார்.

''எந்த ஒரு நாடும் அந்நாட்டின் ஆசிரியர்களின் தகுதிக்கும் மேலாக உயர்ந்து விடமுடியாது'' என்பதோர் பொன்னுரை. எனவே ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் அதன் ஆசிரியர்களிடமே விடப்பட்டுள்ளது. ஆசிரியர் உயர அவர்தம் நோக்குயர, போக்குயர, வாக்குயர நாடே உயரும் எனவே ஆசிரியர்களைக் கல்வியால், பயிற்சியால், தகுதியால், திறனால், தொழிலறத்தால் உயர்த்தியே எந்நாடும் உயர முடியும் என்பது வெள்ளிடைமலை.

இந்திய நாட்டின் எதிர்காலம் வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள்ளேதான் தீர்மானிக்கப்படுகின்றது. வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப உலகில் மக்களின் முன்னேற்றம், பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியவற்றை நிர்ணயிப்பது கல்வியாகும். இக்கல்வி தரமானதாகவும், நாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அமைய முகவர்களாகச் செயல்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆவர். ஆசிரியர்கள் கற்பிக்கும் திறனும், மிக்குயர்ந்த தரமும், செறிந்த பண்பு நலன்களும் பெறத் துணை செய்வது ஆசிரியர் கல்வியாகும். மாணவர் பெறும் தரமான கல்வி ஆசிரியர்கள் பெறும் விளைவுமிக்க தரமான கல்வியையே சார்ந்தமையும்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''—திருக்குறள்.

வருங்கால நற்குடிமக்களை உருவாக்கும் தலையாய பொறுப்பு ஆசிரியரிடமே உள்ளது. மாணவர்களுக்கு பாடப்பொருளைக் கற்பிப்பதோடு மாணவரின் உள்ளுணர்வை அறிதல் (Understanding insight), ஆளுமையை வளர்த்தல், தகவல்களைச் சேகரித்தல், தொடர்பு படுத்திப் பார்த்தல், கற்றதைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு திறமைகளை வளர்த்தல் ஆசிரியரின் பொறுப்பாகும். மாணவர் தம் வாழ்வில் எதிர்கொள்ள நேரும் பிரச்சனைகளை ஆய்ந்து, அலசிப் பார்த்துத் தீர்வு காண்பதற்கான திறமைகளை வளர்த்தல் ஆசிரியரின் பொறுப்பாகும். நற்சிந்தனைகளையும், ஆர்வத்தையும் வளர்த்து மாணாக்கர்களிடையே நாட்டுப்பற்று பரிணமிக்குமாறு செய்வதில் ஆசிரியர் உறுதுணையாக நிற்றல் வேண்டும்.

பள்ளிக்கும் சமூகத்திற்கும் ஓர் ஆசிரியர் ஆற்ற வேண்டிய கடமைகளை எவரும் முழுமையாகப் பட்டியலிட்டுக் கூறிவிட முடியாது. ஆசிரியரின் முக்கியத்துவமும், செல்வாக்கும், பயனும், வழிக்காட்டுதலும் எங்கு முடிகிறது என எவரும் வரையறுத்துக் கூறுதல் இயலாது. ஆசிரியரின் பணி பன்முகப் பரிமாணங்களை உடையது.

ஒரு தொழில்நுட்ப வல்லுநர்
ஒரு முன்னோடி, வழிகாட்டி
ஒரு மாற்றத்தின் பிரதிநிதி
ஒரு செயல் ஆய்வாளர்
அரசின் கல்வித்திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துபவர்.
ஒரு நேர்மறைச் சிந்தனையாளர்
ஒரு நல்ல மனிதர்

## ஆசிரியர் ஒரு முன்னோடி, வழிகாட்டி

கல்வி என்பது வெறும் தகவல்களையும், அனுபவத்தினையும் வழங்கும் வெற்றுச்செயலல்ல. ஒரு முழுமையான வாழ்க்கைக்கு உதவும் வகையில் பழக்க வழக்கங்களை, மனப்பாங்குகளையும், திறன்களையும் வளர்ப்பதும் கல்வியாகும். அத்தகு சிறப்புமிக்க கல்வியை அளிக்கும் பொறுப்பேற்றிருக்கும் ஆசிரியர்கள், மற்றவர்க்கு கற்பிக்கும் வகையில் முன்மாதிரியாகத் தாம் அக்குணங்களைப் பெற்றுப் பணியில் ஈடுபட வேண்டும். தாம் கற்பிக்கும் குழந்தைகள்பால் அக்கறையும், அன்பும் கொண்டு ஒரு முன் மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் முனைப்புடன் நின்று வழி நடத்த வேண்டும்.

ஆசிரியர்
- ஒரு தொழில்நுட்ப வல்லுநர்
- ஒரு முன்னோடி, வழிகாட்டி
- ஒரு மாற்றத்தின் பிரதிநிதி
- ஒரு செயல் ஆய்வாளர்
- அரசின் கல்வித்திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துபவர்.
- ஒரு நேர்மறைச் சிந்தனையாளர்
- ஒரு நல்ல மனிதர்

ஆசிரியர் ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டுமெனில் அவர் பின்வரும் குறைந்தபட்ச பண்புகளையேனும் பெற்று இருக்க வேண்டும்.

i. திரண்ட ஆளுமைப் பண்புடையவராக இருத்தல்.
ii. மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருத்தல்.
iii. சுயசிந்தனை மற்றும் ஆக்கத்திறன் மிக்கவராயிருத்தல்.
iv. செய்யும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவராக இருத்தல்.
v. சுமூகமாகப் பழகி ஆக்கபூர்வமான உறவுகளை நிலைநிறுத்திக் கொள்பவராக இருத்தல்.

### i. ஆசிரியர் – ஆளுமைப் பண்புடையவராக இருத்தல்

ஆசிரியர் தலைமைப் பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் காலந்தவறாமை, சீரியநடை, உடை, பாவனை, சொல்லில் தெளிவு, செயலில் பதற்றமின்மை, பேச்சில் கம்பீரம், உயரிய சிந்தனை போன்ற ஆளுமைப் பண்புகளுடன் இருக்க வேண்டும். அவர் மாணக்கர்களை ஒற்றுமையுடன் நல்வழியில் நடத்த வேண்டும். அவரது கண்டிப்பும் கனிவும் மாணக்கர்களை அவர் சொல்படி கேட்டு நடக்க வைக்கும்.

**செயல்**

ஆசிரியர் முன் மாதிரியாகத் திகழ்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை கலந்துரையாடிப் பட்டியலிடுக.

### ii. மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருத்தல்

ஆசிரியர்கள் குழந்தைகளின் மூன்றாவது பெற்றோர். அப்பா அம்மாவுக்கு அடுத்தபடியாக குழந்தைகள் ஆசிரியரிடம் தான் அதிக எதிர்பார்ப்பு வைத்துள்ளனர். ஆசிரியர்கள் அவ்வெதிர்பார்ப்புகளை நிறைவேற்றித் தர வேண்டும். குழந்தைகள் ஒரு நாளின் பெரும்பகுதியை ஆசிரியருடன் தான் கழிக்கின்றனர். பள்ளி, மாணாக்கருக்கு இப்பருவம் சமூதாய வாழ்வின் ஆரம்பம் என்பதால், பாடப்பொருள் தவிர பிற கற்றுக் கொள்ள வேண்டியவைகளும் அதிகம் உள்ளன. மாணக்கர்களின் திறமைகள் வளர்க்கப்பட வேண்டியிருப்பதால் ஆசிரியர் அவர்களைப்

பற்றிய அக்கறை மிகவும் கொண்டவராகவும், அவர்களிடம் பரிவுணர்வு கொண்டவராகவும் இருத்தல் அவசியமாகும். பரிவும் ஒத்துணர்வும் ஆசிரியரின் வெற்றிக்கு வகை செய்யவல்லவைகளாகும்.

### iii. மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருத்தல்

போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில், மாணாக்கர்கள் அறிந்து கொள்ள வேண்டிய கருத்துக்கள் ஏராளமாக உள்ளன. பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் ஒரு பெரிய படைப்பின் ஆரம்ப நிலை. பல புதிய கோட்பாடுகளின் மையக்கருத்தை மட்டும் அது கற்பவருக்கு அளிக்கின்றது. ஆகவே ஒரு முன் மாதிரி ஆசிரியர் புதுமையான கருத்துகளை எடுத்துரைக்கவும், அவற்றைப் பயன்படுத்தவும் ஏற்ற பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும்.

### iv. ஆசிரியர் செய்யும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவராக இருத்தல்

கல்வி என்பது கற்போர், கற்பிப்போர், சமூகச் சூழ்நிலை இவை மூன்றிற்கும் இடையே ஏற்படும் செயல்பாடாகும். கற்றல், கற்பித்தல் என்பது ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அற்புதச் செயல்பாடு. இதில் ஆசிரியர் ஒரு செயல்வீரராகச் செயல்பட்டு மாணவர்களின் மதிப்பைப் பெற வேண்டும். ஆசிரியர்கள் பணிமனப்பான்மையுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்ற வேண்டும். கற்பித்தலில் உண்மையான ஆர்வம் கொண்டவராக கற்போரின் மனநிலைக்கு இறங்கி வந்து அவர்களது உணர்வுகளுடன், தம்முடைய உணர்வை இணையச் செய்து, புகட்ட வேண்டும். அவர்கள் வாழ்வு வளம்பெற நாளும் உதவும்போது அவர் ஒரு முன்மாதிரி ஆசிரியராகிறார்.

### v. மாணவர்களிடம் சுமூகமாகப் பழகி ஆக்கபூர்வமான உறவுகளைக் கொண்டிருத்தல்

ஆசிரியர் – மாணவர் உறவுமுறையை வலுப்படுத்த வேண்டுவது கல்விச் சூழலில் மிகவும் தேவையானதாகும். ஆசிரியரும் மாணாக்கரும் யாதொரு தடையுமின்றிக் கற்றவற்றைப் பற்றி தமக்குள் மனம் விட்டு விவாதிக்க வேண்டும். மாணாக்கர்களைச் சுதந்திரமாகக் கேள்விகள் கேட்கத் தூண்ட வேண்டும். ஆசிரியர் அவற்றுக்கெல்லாம் தக்க விடையளித்து மாணவர்களின் ஐயங்களைப் போக்க வேண்டும். கற்பிக்கையில் மக்கள் வாழ்க்கையிலிருந்தே பல செய்திகளையும் எடுத்துக் காட்டுகளையும் கூறி விளக்கம் அளிக்க வேண்டும். மாணாக்கரது அறிவு வேட்கையைத் தூண்டி வடிகாலாக்கி ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

ஆசிரியர் தன் மாணாக்கரின் குடும்பச் சூழ்நிலையைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். மாணாக்கரின் பெற்றோர்களுடன் மாணாக்கரது முயற்சி, வளர்ச்சி பற்றிக் கலந்தாலோசித்து மனிதநேயம் வளர்ப்பவராகத் திகழவேண்டும்.

## ஆசிரியர் – ஒரு தொழில் வல்லுநர்

"தொழில் வல்லுநர்" என்பதற்கு உயர்ந்த பண்புகளும், ஆழ்ந்த புலமையும், பணியில் திறமையும், மிக்கவர் எனப் பொருள் தருகிறது கலைச்சொல் அகராதி. ஆசிரியர் பணியில் இருப்பவர் பல்துறைப்புலமையோடு, விரிந்த பார்வையும், அறிவு நாட்டமும் கொண்டிருத்தல் வேண்டும். அறிவு வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுபவராக இருத்தல் வேண்டும். நாட்டுப் பற்று மிக்கவராக இருத்தல் வேண்டும். சமூதாயத்தில் ஆசிரியர் பணி அனைவராலும் மதிக்கப்பட்டு வருகின்றது. பொறுப்புகள் மிகுந்த ஆசிரியர் – ஒரு தொழில் வல்லுநராகத் திகழ கீழ்க்காணும் நேர்மறைப் பண்புகளையும் பெற்றிருத்தல் அவசியம்.

## i)ஆசிரியர் – பொறுப்புணர்வு மிக்கவர்

ஒரு குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர் ஆசிரியர் ஆவார். குழந்தையின் வளமான எதிர்காலத்திற்குப் பள்ளியில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியருடையதாகும். மாணாக்கர்களை வழிநடத்தும் ஆசிரியர், ஆசிரியையாகத் தன்னுடைய பள்ளியில் ஆற்றவேண்டிய கடமைகளை பல்வேறு கோணங்களில் நன்கு உணர்ந்து அதன்படி நடக்க வேண்டும்.

ஒரு பள்ளியின் தலையாய பொறுப்பு தலைமை ஆசிரியரிடம் உள்ளது. அவர் பிற ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் அலுவலர். ஒரு பள்ளியின் நலனுக்கு உதவி ஆசிரியர்களின் ஒத்துழைப்பு தலைமையாசிரியருக்கு மிகவும் தேவை. பள்ளியின் ஒழுங்கு, கட்டுப்பாடு, அதன் முழு வளர்ச்சியில் ஆசிரியர்களின் ஈடுபாடு தலைமையாசிரியருக்குத் தேவை. பள்ளியின் வளர்ச்சியை மனத்தில் கொண்டு, உதவி ஆசிரியர்கள், தலைமையாசிரியர் தமக்கு வழங்கிய பணிகளை முழுமனதுடன் செய்தல் வேண்டும். அங்ஙனம் ஒத்துழைப்புடன் பணி புரிதல் ஆசிரியருக்கு மதிப்பும் மகிழ்ச்சியும் தருவதாகும்.

மாணாக்கர்களின் எதிர்காலம் ஆசிரியர் கையில் என்பதை நாம் நன்கறிவோம் ஒரு வகுப்பில் பல்வேறு குடும்பப் பின்னணிகளையுடைய மாணாக்கர்கள் ஒருங்கே அமர்ந்திருப்பர். அவர்களது வாய்ப்புகளும் வளர்ப்புச் சூழ்நிலைகளும் வெவ்வேறானவை என்பதை வகுப்பிலிருந்து பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் கற்பிக்கும் பாடப்பொருளுடன் மனம் ஒன்றாத நிலையிலும் அவர்கள் இருக்கலாம். பாடப்பொருள் அனைத்து மாணாக்கர்களையும் சென்றடையாமலும் போகலாம். ஒரு சில மாணாக்கர்களே, ஆசிரியரின் எதிர்பார்ப்பின் படி பதில் அளிப்பர். ஆசிரியர் சரியான பதில் அளிக்காதவர்களை ஒதுக்கிவிடாமல், அவரவர் முன்னறிவு நிலைகளை அறிந்து, அனைவரும் கற்றலில் முழுமைபெறத் துணை செய்ய வேண்டும். தனி மாணாக்கரின் புரிந்து கொள்ளும் திறமையை அறிந்து அனைவர்க்கும் உகந்தவாறு கற்பித்தல் முறைகளை ஆசிரியர் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தன் பணியிலும் தலைமையாசிரியரிடத்திலும் மாணவர்களிடத்திலும் பொறுப்புணர்வு மிக்கவராகப் பணி செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

## ii) ஆசிரியர் விருப்பு வெறுப்பற்ற நடுநிலை மனத்தை உடையவர்

நீங்கள் பள்ளியில் பயின்றபோது உங்கள் ஆசிரியர் நடுநிலைமையாளராக விருப்பு, வெறுப்பற்றவராக பாரபட்சமற்றவராக எவ்வாறெல்லாம் திகழ்ந்தார் என்பதற்கான உண்மைச் சம்பவங்களை ஆசிரிய மாணவர்களை தனித்தனியே குறிப்பிடச் செய்து அவற்றை மற்ற மாணவ ஆசிரியர்களிடம் விவரித்து அதன் மூலம் தாங்கள் அடைந்த பண்புகளைக் குறிப்பிடச் செய்து மாணவர்களை ஆர்வமூட்டுக.

ஆசிரியரின் பார்வையில் குழந்தைகள் அனைவரும் சமம். உலகில் மனிதர் ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்தும் வேறுபடுகின்றனர். அதே போன்று மாணாக்கர்களிடையேயும் வேறுபாடுகள் இருக்கவே செய்யும். வேறுபாடு மனித இயல்பு என்பதையும், மாணாக்கர்கள் அனைவரும் ஆசிரியரிடம் நம்பிக்கையுடன் வந்தவர்கள் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

## நடுநிலை மனத்தை உடைய ஆசிரியர்

- ◈ நன்றாகப் படிப்பவன், சொன்னதைச் செய்பவன், அழகானவன் என்றெல்லாம் வேறுபாடு காட்டாமல் அனைவரும் சமம், அனைவரும் என்னுடைய மாணவர்கள் என்ற ஒரு பால் கோடாமை உணர்வை வளர்த்துக்கொள்வார்.
- ◈ கற்றல் நிகழ்வில் அனைத்து மாணாக்கர்களுக்கும் ஏற்படும் சிரமங்களைப் பாரபட்சமின்றிக் களைய முயற்சி எடுத்துக் கொள்வார்.
- ◈ அனைவரும் அடைவுத் திறனைப் பெற கவனம் செலுத்துவார்.
- ◈ திறனடைவில் பின்தங்கிய மாணாக்கர்களை இனங்கண்டு ஊக்குவித்து அவர்களும் தேர்ச்சியடைய வழி செய்வார்.

## iii) ஆசிரியர் – தன்னம்பிக்கை உடையவர்

ஆசிரியர் பயிற்சி மாணவர்களைச் செவ்வையாக வழிநடத்தி, இனிய சாயல்கள், திடசிந்தனை, அர்ப்பணிப்புணர்வு, தன்னார்வம், நாட்டுப்பற்று, விளைவிருப்பம் ஆகிய பண்புநலக் கூறுகளுடன் வளர்த்தாக்க வேண்டும்.

## தன்னம்பிக்கை உடைய ஆசிரியர்

“தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு போன்றது. மனம் பணி நெடுகிலும் சோர்வடையாமல் இருக்க மருந்து போன்றது”.

இதமான செயல்பாட்டால் வகுப்பில் மாணாக்கர்களிடம் ஈடுபாட்டினை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு மாணாக்கரையும் ஒரு உயரிய குறிக்கோள் அமைத்து வாழப்பழக்க வேண்டும். வகுப்பறைகளில் அடிக்கடி உயர் குறிக்கோள்களை நினைவுப்படுத்தி அதனை அடையும் வேட்கையை வளர்க்க வேண்டும். குறிக்கோளை அடையும் வேட்கையில் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மாணாக்கரிடம் வளருமாறு செய்ய வேண்டும்.

## iv) தொடர்ந்து புதியன கற்கும் ஆர்வமுடையவர்

ஆசிரியர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள் என்றாலும் மாறிவரும் சூழ்நிலையில், பாடத்திட்டமும், கற்பிக்கும் முறையும் மாற்றங்கள் பெறுவதால், புதியனவற்றைக் கற்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். எத்தகைய கற்றல் சந்தர்ப்பத்தை எதிர்க் கொள்ளும் பொழுதும், அறிவு, திறன், மனப்பாங்கு முதலியவற்றில் ஒருங்கிணைந்து முழுமைத்திறன் அடைய வேண்டும். கற்கும் ஆற்றல், வயது வளர்ச்சியுடன் வளர்ந்து கொண்டே வருகிறது.

கற்றல் ஒருவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. தொடர்ந்து கற்றல் பேரளவில் விரும்பந்தக்க நடத்தை மாற்றங்களை ஒருவரிடையே ஏற்படுத்துகின்றது. அந்த மாற்றம் நடத்தை மாற்றமாகவோ, சிந்தனை மாற்றமாகவோ இருக்கக் கூடும். கற்றல் வழியாக தற்புலக் காட்சி வளம் பெறும். அது புத்தாக்கத்தை (Reorientation) ஏற்படுத்துகின்றது.

## v) ஆசிரியர் – கற்பிக்கும் பொருள் பற்றிய தெளிந்த ஞானம் உடையவர்

கல்வி என்பது கொடுக்கப்பட்ட பாடப்பொருளில் தேர்ச்சி அடைவது மட்டுமல்ல. மாணாக்கர்களின் வளர்ச்சி, முன்னேற்றம் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட வாய்ப்புகளை பள்ளியில் அமைத்துத் தருவது கல்வியாகும்.

ஒரு நல்லாசிரியர் தொடர்ந்து கற்கும் பண்போடு அன்றாடம் தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை அறிந்து வைத்திருத்தலும் வேண்டும். கற்பிக்கும் பொருளின் உட்கருத்து; நடைமுறையில் அதன் செயல் ஆக்கம்; பின்விளைவு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்குதல்

வேண்டும். அவ்வாறு தொடர்புபடுத்திக் கற்பிக்கும் போது மாணாக்கர்கள் கற்கும் பொருளின் உண்மையை எளிதில் அறிந்து கொள்வார்கள்.

## ஆசிரியர் – மாற்றத்தின் முகவர்

அனைவருக்கும் கல்வி அடிப்படை உரிமையாக்கப்பட்டிருக்கிறது. முறைசாரக் கல்வியும், எழுத்தறிவுக் கல்வியும் பரவலாக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்டச் சூழ்நிலையில் பள்ளியில் கல்வி பயிலாமல் குழந்தை உழைப்புக்குச் செல்லும் குழந்தைகளும் நம்மிடையே உள்ளனர். பள்ளியில் இன்னமும் சேர்க்கப்படாத பெண் குழந்தைகளும் இருக்கவே செய்கின்றனர்.

ஆசிரியர் சமூக மாற்றத்தை நன்கு திட்டமிட்டு வழிநடத்த தெரிந்து வைத்திருக்க வேண்டும். இன்றைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கனுப்பும் பெற்றோர்களின் மனப்பான்மையை மாற்றி வேலைக்குச் செல்லும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புமாறு செய்ய வேண்டும். படிப்பை இடையில் நிறுத்திவிட்ட மாணவர்களுக்கு அரசின் கல்வி நலத்திட்டங்களை எடுத்துக் கூறி மீண்டும் படிப்பைத் தொடர வழிவகை செய்ய வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம் பற்றிக் கூறி, அதன் மூலம் பயனுறுமாறு செய்ய வேண்டும். இவ்வாறு ஆசிரியர் ஒரு முகவராக இருந்து செயலாற்றி சமூகமாற்றத்துக்கு உதவ வேண்டும்.

## ஆசிரியர் – செயல் ஆராய்ச்சியாளர்

வகுப்பறைச் சூழல் ஒவ்வொரு நாளும் புதிர் பொதிந்த ஒன்றாகும். ஒரே பாடப் பொருள் வெவ்வேறு மாணாக்கர்களிடம் வெவ்வேறு பிரதிபலிப்பைத் தரும். புதிய புதிய வினாக்கள் மாணாக்கர்களிடமிருந்து எழும்போது, புதிய புதிய கருத்துக்கள் ஆசிரியருக்கு கிடைக்கும். அதே நேரத்தில் பாடப்பொருள் மாணாக்கர்களிடம் சேரும் விதத்தில் பலதரப்பட்ட சிக்கல்கள் எழும். ஆசிரியர் சிக்கல்களை அதன் தன்மைகளைக் கொண்டு பகுத்தறிந்து தீர்வு காண வேண்டும். பிரச்சினைகளை ஆராய்ந்து உடனுக்குடன் அச்சூழ்நிலைக்கு ஏற்ப தீர்வு காண முற்படுகையில் ஆசிரியர் ஒரு செயல் ஆய்வாளராக செயல்படுகிறார்.

‘‘வகுப்பறையிலோ, பள்ளிச் சூழலிலோ அவ்வப்போது எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு முடிவு காண ஆசிரியரோ, தலைமை ஆசிரியரோ எடுத்துக் கொள்ளும் முறையான விஞ்ஞான அடிப்படையிலான செயல்முறை செயலாய்வு என்பதாகும்’’.

## அரசின் கல்வித் திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துதல்

பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி உறுதி செய்வதற்காக இந்தியாவில் அவ்வப்போது பல்வேறு கல்வித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித் திட்டங்கள் யாவும் மாணாக்கர்களை மையமாக வைத்தே தீட்டப்பட்டுள்ளன.

அரசுக் கல்வித் திட்டங்களும் நலத்திட்டங்களும் கல்வி மேம்பாட்டிற்காக செயற்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மாணாக்கர்களைச் சரிவரச் சென்றடைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழிகாட்டி ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

## ஆசிரியர் கல்வி நிகழ்ச்சிகளும் பயிற்சிகளும்

### முன்னோக்கு:

ஆசிரியர் கல்வி, கல்வி முறையுடன் இணைந்ததோர் அங்கமாகும். நம் இந்திய நாட்டிலுள்ள பள்ளிக் கல்வி முறைகளுக்கு ஏற்றவாறு ஆசிரியர் கல்விக்கான திட்டங்களை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) நிர்ணயம் செய்து வருகின்றது. பள்ளிகளில் மழலையர் கல்வி. தொடக்கக்

கல்வி, உயர்தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி என்ற நிலைகள் உள்ளன. இதற்கு ஏற்றவாறு ஆசிரியர் கல்வியும் பல நிலைகளில் இருத்தல் அவசியமாகும். கல்வியின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழும் ஆசிரியர், தன் தொழில் அறத்தை உருவாக்கிக் கொள்வதற்கு நம் நாட்டில் உள்ள ஆசிரியர் கல்வித் திட்டங்களை பற்றி இங்கு அறிந்து கொள்வோம்.

## ஆசிரியர் கல்வி

ஆசிரியர் கல்வி வெறும் பணிப் பயிற்சியன்று. ஓர் ஆசிரியர் தனது பொறுப்புகளையும் கடமைகளையும் மிகச் சிறப்பாக நிறைவேற்றத் தேவையான மனப்பான்மை, பண்பு நலன்கள் அறிவு, திறன்கள், ஆற்றல் ஆகியவற்றைப் பெற வழிவகுப்பதே ஆசிரியர் கல்வி ஆகும். ஆசிரியர் கல்வி என்பது ஆசிரியரின் மனப்பான்மைகள் (Attitudes), பழக்க வழக்கங்கள் நுட்பதிட்பங்கள், ஆளுமைப் பண்புகள், கண்ணியம் போன்றவற்றை வடிவமைக்கும் இயல்பான அணுகலாறுகளே எனலாம்.

''ஆசிரியர் கல்வி என்பது, மழலையர் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிப்பதற்குத் தேவையான திறன்களைப் பெற்றவர்களாக மனிதர்களை உருவாக்கும் கல்வி நிகழ்ச்சிகள், ஆய்வுகள் அல்லது பயிற்சிகள் எனலாம். இதில் முறைசாரா கல்வி, பகுதி நேரக் கல்வி, வயது வந்தோர் கல்வி மற்றும் தொலைத்தூரக் கல்வியும் இடம்பெறும் என தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் நெறிமுறைகள் (1993) விவரிக்கின்றன.

- ◈ பணி முன் ஆசிரியர் கல்வி என்பது மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களை உருவாக்கும் கல்வி நிகழ்ச்சிகள் ( Programmes ) ஆகும்.
- ◈ பணியிடை ஆசிரியர் கல்வி என்பது பணியிலுள்ள ஆசிரியர்களின் / பணி சார் திறன்களை மேம்படுத்த இடையிடையே அளிக்கும் பயிற்சிகள் ஆகும்.

## பணிமுன் ஆசிரியர் கல்வி (Pre - service Teacher Education)

நமது பள்ளிக் கல்வி அமைப்பில் மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளி என்ற நிலைகள் காணப்படுகின்றன. ஆசிரியரின் கற்பிக்கும் முறையும் திறனும் ஒவ்வொரு நிலைக்கும் வேறுபடும். அவ்வந்நிலைக்கும் ஏற்றவாறு ஆசிரியர்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு இந்தியக் கல்விக் குழு 1882 (Indian Education Commission) தொடக்க மற்றும் உயர்நிலை ஆசிரியர்களுக்கெனத் தனித்தனி ஆசிரியர் கல்விப் பயிற்சிகள் வழங்க அங்கீகாரம் அளித்தது. 1995 –ல் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) புதுடெல்லியில் நிறுவப்பட்டு ஆசிரியர் கல்விச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாகப் பின் வரும் ஆசிரியர் கல்விப் படிப்புகள் நம் நாட்டில் பல்வேறு கல்வி நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

i. மழலையர் கல்விச் சான்றிதழ் (Preprimary course certificate)
ii. ஆசிரியர் கல்விப் பட்டயம் (D.T.Ed.)
iii. இளநிலைக் கல்வியியல் பட்டம் (B.Ed)
iv. முதுநிலைக் கல்வியியல் பட்டம் (M.Ed)
v. ஆய்வியல் நிறைஞர் (M.Phil)
vi. ஆய்வியல் முனைவர் (Ph.D)

## மழலையர் கல்விச் சான்றிதழ் – படிப்பு

மேல்நிலைக் கல்வியை முடித்தவர்கள் இதில் சேர்வதற்கு தகுதிவாய்ந்தவர்கள் ஆவர். இதன் காலம் இரண்டு ஆண்டுகளாகும். அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் இக்கல்வியை வழங்குகின்றன. இச்சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் நம் நாட்டில் செயல்பட்டு வரும் கிண்டர்கார்டன் பள்ளிகள், மாண்டிசோரி முறைப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் திட்டத்தின் கீழுள்ள நர்சரி பள்ளிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேட்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடிப் பள்ளிகள், மழலையர் கல்வி மையங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் அங்கன்வாடி மையங்கள்.மழலையர்கல்வி மையங்களில் ஆசிரியர்களாக நியமனம் செய்யத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.

## ஆசிரியர் கல்விப் பட்டயச் சான்றிதழ் (D.T.Ed)

மேல்நிலைக் கல்வியை முடித்தவர்கள் இந்த படிப்பில் சேர்வதற்கு தகுதிவாய்ந்தவர்கள் ஆவர். இதன் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். இப்பயிற்சி மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் (DIETs), ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (TTIs) ஆகிய கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன. ஆசிரியர் கல்விப் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் **1** முதல் **5** வகுப்புகள் வரை கற்பிக்கும் இடைநிலை ஆசிரியர்களாக தொடக்கப் பள்ளிகளில் நியமனம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.

**செயல்**

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் ஏழு துறைகளைப் படப்பிரதியீடு செய்து அவற்றின் பணிகளைப் பட்டியலிட்டுக் காட்டுக.

## இளநிலைக் கல்வியியல் (B.Ed)

இளநிலைப் பட்டம் அல்லது முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் இளநிலைக் கல்வியியல் (B.Ed) படிப்பில் சேருவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவர். இளநிலைக் கல்வியல் படிப்பு முழுநேரக் கல்வியாகும். இளநிலைக் கல்வியலுக்கான காலம் ஓராண்டாகும். பல்கலைக் கழகத்திலுள் கல்வியல் துறையிலும் இளநிலைக் கல்வியல் பயிற்சி பெறும் வாய்ப்புள்ளது.

திறந்தநிலைப் பல்கலைக்கழகம் (Open Univesity) வழியாக பட்டப் படிப்பு முடித்து குறைந்தது மூன்று ஆண்டுகள் பள்ளியில் கற்பித்தலை மேற்கொண்டுள்ள பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பகுதிநேரமாக இரண்டு ஆண்டுகள் இளநிலைக் கல்வியியல் கல்வி வழங்கப்படுகின்றது. இத்தகுதி பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் எனப்படுவர் எம்.எ., எம்.எஸ்.ஸி., எம்.காம்., தகுதியுடன் பி.எட்., படித்தவர்கள் முதுநிலைப்பட்டதாரி ஆசிரியரிகள் எனப்படுவர்.

## முதுகலைக் கல்வியியல் (M.Ed)

இளநிலைக் கல்வியியல் (B.Ed) பட்டம் பெற்றவர்களே இதில் சேருவதற்கு தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.

இளநிலைக் கல்வியியல் கல்வி வழங்கும் நிறுவனங்களிலும் கல்லூரிகள் மற்றும் தொலைத் துரக் கல்வி முறையிலும் முதுநிலைக் கல்வியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கைகள் நிகழ்த்தப்படுகின்றன. முதுநிலைக் கல்வியியல் முடித்த ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்களாக D.I.E.T., BRC, மற்றும் T.T.I–களில் பணியாற்றவும் வாய்ப்பு உடையவர்கள் ஆவர்.

## ஆய்வு நிறைஞர் பட்டம் (M.Phil.,)

முதுநிலைக் கல்வியியலில் 55% மதிப்பெண் பெற்றவர்கள் M.Phil., (Education)–ல் சேர தகுதி வாய்ந்தவர்கள் ஆவர். பல்கலைக் கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் இத்தைகய கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த படிப்பிற்கான குறைந்தபட்ச காலம் இரண்டு ஆண்டுகள். ஆசிரியர்கள் மற்றும் அசிரியர் பயிற்றுநர்கள் தங்கள் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்திக் கொள்ள இக்கல்வி உதவுகின்றது. ஆராய்ச்சியினை ஒரு மேலாய்வாளர் துணையுடன் மேற்கொள்ள வேண்டும். M.Phil முடித்தவர்கள் கல்வியல் கல்லுரிகளில் விரிவுரையாளராக பணிச் செய்யும் தகுதியுடையவர்கள் ஆவர்.

## முனைவர் பட்டம் (Ph.D.,)

எம்.ஃபில்., படிப்பில் 55%. சராசரி மதிப்பெண் பெற்றவர்கள் முனைவர் கல்வியில் சேரத் தகுதி பெற்றவர்கள். இது முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் படிப்பில் சேர விரும்புவோர் அங்கீகாரம் பெற்ற ஒரு மேலாய்வாளரைத் தேரிவு செய்து ஆய்வு மேற்கொள்வதற்கான ஒரு தலைப்பை முன்மொழிதல் வேண்டும். அந்தத் தலைப்பு பல்கலைக் கழகத்தினால் ஏற்புறுதி வழங்கப்பட்ட பின்னர் தன் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். இதற்கான காலம் குறைந்தது **3** ஆண்டுகளாகும்.

## ஆசிரியர் பணியிடைக் கல்விப் பயிற்சிகள்

ஆசிரியர் கல்வி நிகழ்ச்சிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவது ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சி ஆகும். தொடர்ந்து கற்றல் கற்றுக்கொண்டே இருத்தல், அறிவைப் புதுப்பித்தல் ஆகியன ஆசிரியர்களுக்கு மிகமிக அவசியம். புதியன கற்றலுடன் பயிற்சியும் அவ்வப்போது வழங்கப்பட்டால் ஆசிரியர் பணியை செவ்வனே செய்ய ஊக்கமும் உறுதியும் கிடைக்கும்.

## பணியிடைப் பயிற்சியின் நோக்கங்கள் :

- ◈ ஒவ்வொரு ஆசிரியரிடமும், பணிசார் திறமையுடன் செயலாற்றி, அரசின் முக்கியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்கை வளர்த்தல்.
- ◈ ஆசிரியர்கள் தங்கள் தொழில் சார் வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ளுவதற்கான வாய்ப்புக்களை அவரவர் தேவைகள், தகுதிகள், திறமைகள் மற்றும் விருப்பத்திற்கு ஏற்றவாறு வழங்குதல்.

## பள்ளியுடன் இணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டிய நிறுவனங்கள்

பள்ளி என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட சமுதாய நிறுவனமாகும். சிறந்த கல்வியால் சீரிய சமுதாயம் அமைவதற்கும், சீரிய சமுதாயத்தால் வீறியக் கல்வி மேம்பாடு அமைவதற்கும் அடிப்படையாக விளங்குவது பள்ளிகளே ஆகும். பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் கீழ்க்காணும் நிறுவனங்களுடன் இணக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

- ◈ பெற்றோர் ஆசிரியர் கழகம்
- ◈ கிராமக் கல்விக்குழு
- ◈ மகளிர் மன்றம் / இளைஞர் மன்றம்

- ஊராட்சி ஒன்றியம் / மக்களாட்சி உறுப்பினர்கள்
- வட்டார வளமையம் / பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம்
- மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்
- சமூக நலத்துறை
- நல வாழ்வுத் துறை
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

## இணைப்புகளின் அவசியம்

"அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கை அடைவதற்கு சமுதாயத்திலுள்ள பிற நிறுவனங்களின் இணைப்பு பள்ளிச் சேர்க்கைக்கு ஆயத்தம், பள்ளிச் சேர்க்கை / பள்ளி வருகை, தக்க வைத்தல், பள்ளிச் சூழல் நலம் பேணுதல், பள்ளி வசதிகள் மேம்பாடு, பள்ளி ஆசிரியர் நியமனம், விளையாட்டுகள், பள்ளி விழாக்கள் நடத்துதல் கல்விக் கொடைகள் ஆகிய பின்வரும் தேவைகளை நிறைவேற்ற உதவும்.

## ஆசிரியர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் பல்வேறு அமைப்புகளின் பங்கு

பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்குவதை உறுதி செய்வதற்காக இந்தியாவில் அவ்வப்போது தீட்டப்படும் பல்வேறு கல்வித்திட்டங்கள் யாவும் தொடக்கக் கல்வியின் தரத்தை வலியுறுத்துகின்றன. இந்தியா முழுவதும் ஒரே நேரத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள "அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் குறிக்கோள்களின்" படி அனைவருக்கும் வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை வழங்குவது" ஆசிரியரின் தலையாய கடமை ஆகும். 'தரம்' என்பது பள்ளிக் கல்வியில் மட்டுமின்றி ஆசிரியர் கல்வியிலும் இன்றியமையாததாகும். கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக நம் நாட்டின் மத்திய மற்றும் மாநில அரசுகளும் பல கல்வி நிறுவனங்களும், குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

## கல்வி அமைப்புகள்

ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் தேசிய, மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் அமைந்துள்ள நிறுவனங்கள்

1. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமம் (NCERT)
   (National Council for Educational Research and Training)
2. தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் (NCTE)
3. மண்டலக் கல்வி நிறுவனங்கள் (RIEs)
4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி இயக்ககம் (DTERT/SCERT/SIE)
   (Directorate of Teacher Education, Research & Training)
5. மாநிலக் கல்வியல் மேம்பாட்டு நிறுவனம்
   (Insutitute of advanced Studies in Education)
6. மாவட்ட ஆசிரியர்கல்விப் பயிற்சி நிறுவனம் (DIET)
   (District Institute of Education & Training)
7. வட்டார வளமையம் (BRC) Block Resource centre)
8. பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் (CRC).
   (Cluster Resource Center)

## தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமம் (NCERT)

1961 ஆம் ஆண்டு புதுடெல்லியில் பள்ளிக் கல்விப் பணிகளுக்காக இது நிறுவப்பட்டது. கல்வி அமைச்சகத்தின் முதன்மை ஆலோசகராகச் செயல்பட்டு கல்வித் தொடர்பான

அறிவுரைகளை வழங்குவதற்காக (NCERT) இக்குழுமம் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது. இக்குழுவானது தேசிய அளவில் கல்வியின் தர மேம்பாட்டுச் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

- கல்வியில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள கல்வி அமைப்புகளை ஒருங்கிணைத்து ஊக்கம் அளித்தல்.
- பணிமுன் பயிற்சிகள் மற்றும் பணியிடைப்பயிற்சிகளை மேம்படுத்துவதற்காக உயர்மட்டப் பயிற்சிகளைத் திட்டமிட்டு வழங்குதல்.
- நாடு முழுவதிலும் உள்ள கல்வி ஆராய்ச்சி, ஆசிரியர் பயிற்சி, நிறுவனங்கள் மற்றும் பள்ளிகளில் விரிவாக்கக் (Extension) கல்வியை வழங்குதல்.
- இந்நிறுவனம் மாநில கல்வித்துறைகளுடனும், பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து கல்வியை மேம்படுத்துதல்.
- கலைத்திட்டம் வடிவமைத்தல், பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்கள் வெளியிடுதல் போன்ற பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

## தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் (NCTE)

1995–ஆம் ஆண்டு ஆசிரியர் கல்விச் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசால் புதுடெல்லியில் நிறுவப்பட்டுள்ளது. நாடுமுழுவதிலும் உள்ள ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கி ஆசிரியர் கல்வியின் தரத்தை நிலை நிறுத்துவதை தன் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் பணிகளாவன:

- ஆசிரியர் கல்விக்குத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொண்டு அதன் முடிவுகளை வெளியிடுதல்
- மத்திய, மாநில அரசுகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் தகுந்த திட்டங்களுக்குப் பரிந்துரை செய்தல்
- நம் நாட்டின் ஆசிரியர் கல்வி வளர்ச்சியைக் கண்காணித்து உதவிபுரிதல்.
- ஆசிரியர் கல்வி நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற கலைத்திட்டம் தயாரித்து நாட்டில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் பின்பற்றச் செய்தல்.
- ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் / கல்லூரிகள் தொடங்க அங்கீகாரமளித்தல்.
- ஆசிரியர் கல்வித் தொடர்பான ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.

## மண்டலக் கல்வி நிறுவனங்கள் (Regional Institutes of Education (RIEs))

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் கீழ் நாடு முழுவதிலும் ஐந்து மண்டலக் கல்வி நிறுவனங்கள் மைசூர், போபால், புவனேஸ்வர், ஆஜ்மீர், ஷில்லாங் ஆகிய தலைமையிடங்களில் இருந்து இயங்குகின்றன. இவையாவும் மண்டல அளவில் ஆசிரியர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக உருவாக்கப்பட்டவை ஆகும்.

- ஆசிரியர் கல்வியில் பணியிடைப் பயிற்சிகளை வழங்கும் மாநில மற்றும் மாவட்டக் கல்வி நிறுவனங்களுக்கு ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்குதல்.
- ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்களின் அறிவியல், கணிதப் பாடங்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குதல்.
- கல்வித் தொடர்புடைய ஆய்வுகளை மேற்கொள்ளுதல், போன்ற பணிகளை மண்டலக் கல்வி நிறுவனங்கள் செய்து வருகின்றன.

## மாநிலக் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககம் (DTERT/SCERT/ SIE)

இவைகள் சில மாநிலங்களில் எஸ்.ஐ.இ., எஸ்.சி.இ.ஆர்.டி., என்றும் தமிழ்நாட்டில் டி.ட்டி., இ.ஆர்.டி., என்றும் பெயரிடப்பட்டுள்ளன. இவை தத்தம் மாநிலங்களில் உள்ள பள்ளிக் கல்வி, ஆசிரியர் கல்வி, முறைசாரக் கல்வி மற்றும் கல்வியியல் மேம்பாட்டு ஆராய்ச்சி துறைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைப் புகுத்தி, நிர்வகிக்கின்றன.

## மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் பணிகள்

- கல்வியின் பல நிலைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள், கல்வித் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ள ஒருங்கிணைத்தல்.
- தேசியக் கல்விக் கொள்கையின் (NPE) பரிந்துரைக்கிணங்க ஆசிரியர்கட்கு திறமையும் தொழில் நுட்பமும் நிறைந்த கல்வியைப் பல்வேறு பயிற்சிகளின் மூலம் வழங்குதல்.
- பள்ளிக் கல்வி மற்றும் இடைநிலை ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்டத்தைத் திருத்தியமைத்து அதனையொட்டிப் பாட நூல்களைத் தயாரித்தல்.
- கல்வித் தரத்தை மேம்படுத்தும் கற்பித்தல் கருவிகளான பாடப்புத்தகம், கையேடுகள், பயிற்சிக் கையேடுகள், ஒலி, ஒளி நாடாக்கள் தயாரித்து ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- மக்கள் தொகைக் கல்வித்திட்டம், பள்ளிகளில் வளரிளம் பருவத்தினர்களுக்கான கல்வித்திட்டம், பள்ளி மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றையும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் வாயிலாகச் செயல்படுத்துதல்.


## மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் (DIET)

மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் என மனிதவள மேம்பாட்டுத் துறையின் நிதி உதவியுடன் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

### பணிகள்

- தரமான பணிமுன் பயிற்சி அளித்தல்.
- புதிய அணுகுமுறைகள் அடிப்படையிலான பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்.
- மாவட்டம் முழுமைக்குமானக் கல்வித் தேவைகளைத் திட்டமிடல்.
- கலைத்திட்டம் தயாரித்தல்.
- கல்வி நுட்பவியலைப் பயன்படுத்தி, பணி அனுபவத்தின் தரத்தை மேம்படுத்துதல்.
- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் அவ்வப்போது நடைமுறைப்படுத்தும் திட்டங்களை மாவட்டங்களில் செயல்படுத்துதல்.
- செயல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

இப்பணிகள் யாவற்றையும் மாவட்ட ஆசிரியர்கல்விப் பயிற்சி நிறுவனத்திலுள்ள ஏழு கிளைகள் (Branches) அம்மாவட்ட அளவில் செவ்வனே செயல்படுத்த வேண்டும்.





## வட்டார வளமையம் (BRC)

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் வட்டார அளவில் கல்விச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக இம்மையங்கள் அனைத்து மாவட்டத்திலுமுள்ள ஒன்றிய அளவில் இயங்குகின்றன. இம்மையங்கள் தங்கள் விவகார எல்லைக்குள் உள்ள பள்ளிகளின் தரத்தையும் ஆசிரியர்களின் தரத்தையும் மேம்படுத்தும் செயல்களில் பிற கல்வி அமைப்புகளுடன் (DIET, DTERT, IASE, கல்லூரிகள்.,) இணைந்து செயல்படுகின்றன.

## ஆசிரியர் கல்வியின் தர மேம்பாட்டிற்

- தொடக்கப் பள்ளிகளில் பணி தருதல்.
- பள்ளிகளை மேற்பார்வையி ஆலோசனைகள் வழங்குதல்.
- அனைவருக்கும் கல்வித் திட் ஏற்படுத்தப்படும் செயல்பாடு செயல்படுத்துதல்.
- தகவல் சேகரித்தல் (சேர்க்கை
- மாற்றுப் பள்ளிகள்/ மழலை உதவிகளை வழங்குதல்.
- பள்ளிக் கருத்தாய்வு மையங்க புதிய உத்திகளைப் பயிற்றுவித்




**செயல்**

வட்டார வளமையத்திற்குச் சென்று அவற்றில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்களின் செயல்பாடுகளை அறிந்து தொகுத்து எழுதுக.

## பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் (CRC) (Cluster Resource Centre)

வட்டார வளமையங்களின் கீழ் செயல்படுகின்ற ஒவ்வொரு வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநருக்கும் 50 ஆசிரியர்கள் கொண்ட ஒரு பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் செயல்படுகின்றது. வட்டாரத்தில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையங்களின் எண்ணிக்கை அமையும்.

## பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வுமையங்களின் பணிகள்

- கருத்தாய்வு மையத்தின் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளித்தல்.
- ஆசிரியர்கள் செயல் ஆராய்ச்சி மேற்கொள்ள வழி காட்டி அதன் முடிவுகளை மற்ற ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொள்ளுதல்.
- ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் மேற்கொண்ட புதிய அணுகுமுறைகளைப் பிற ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூற வாய்ப்பளித்தல்.
- பள்ளியின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சிகளைக் கண்டறிந்து திட்டமிட்டுப் பயிற்சி அளித்தல்.

## கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்கள்
## (Institutes of avanced Study in Education - IASE)

உயர்நிலை, மேல்நிலை மற்றும் உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் இது நிறுவப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் இரண்டு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்கள் உள்ளன. இவை இரண்டும் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. பெண்களுக்கான கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் திருவல்லிக் கேணியிலும் ஆண்களுக்கான கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் சைதாப்பேட்டையிலும் செயல்பட்டுவருகின்றன. இந்த நிறுவனங்களின் கீழ் ஒரத்தநாடு (தஞ்சை மாவட்டம்), குமாரபாளையம் (நாமக்கல் மாவட்டம்), கோவை (கோவை மாவட்டம்), வேலூர் (வேலூர் மாவட்டம்), புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) ஆகிய இடங்களில் கல்வியியல் கல்லூரிகள் (CTEs) செயல்பட்டு வருகின்றன.

# அலகு 12
# பள்ளி மேலாண்மை

## முன்னோக்கு

சமூக நிறுவனங்களில் மிக முக்கியமானது பள்ளி. சமுதாயத்தின் பல குறிக்கோள்களை வரையறுத்து, வலியுறுத்தி, அவற்றை நிறைவேற்றித் தரும் சமூக நிறுவனமாகப் பள்ளி அமைகின்றது. எதிர்காலச் சமுதாயத்தின் நலனைத் திட்டமிட்டு முழுமையாக உருவாக்குவதில் பள்ளி முக்கிய அங்கம் வகிக்கிறது. எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் முக்கிய பொறுப்பும் அதற்கு உண்டு. நாளைய குடிமக்களாகிய குழந்தைகளுக்கு உரிமைகளும், கடமைகளும் உள்ளன. அவற்றை அறிமுகமாக்கி வழங்கும் பொறுப்பு சமுதாயத்திற்கும், பள்ளிக்கும் உள்ளது.

பள்ளியின் சிறப்பு, திறன், வளர்ச்சி போன்றவை அதன் கட்டிடங்களால், வசதிகளால் வருவதன்று. உயர்ந்த கோட்பாடுகளின், கொள்கைகளின் அடிப்படையில், நிலையின் தாழாது அப்பள்ளியை நடத்துவதில், நிர்வகிப்பதில் அதன் சிறப்பு அமைந்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், மேலாளர்கள் மற்றும் அவர்தம் திட்டம், சிந்தனை, கொள்கைகள், நோக்கங்கள், அதனை நிர்வகிக்கும் தலைமை ஆசிரியர்களின் சிந்தனையினாலும் பள்ளியின் சிறப்பு உருவாக்கப்படுகிறது. பழைய மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள், கிராமக் கல்விக்குழுக்கள், மேற்பார்வை செய்யும் அதிகாரிகளின் செந்தண்மை, கல்வித்துறையின் வழிகாட்டல் ஆகியவற்றின் திரண்ட படைப்பாற்றலின் சின்னமாகவும் பள்ளிகள் திகழ்கின்றன.

## 12.1. பள்ளி மேலாண்மை – பொருள்

செயல்களை ஒருங்கிணைக்கவும், திறமை, சிக்கனம் மற்றும் வளங்களை மிகவும் விளைவுள்ள வகையில் பயன்படுத்தவும், நல்ல முடிவுகளை எடுக்கவும், பயனாளர்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்கிடவும், துரிதமாகச் செயல்படவும், காலம், வளம் மற்றும் முயற்சிகள் ஆகியவற்றை அறிவு பூர்வமாகப் பயன்படுத்திடவும் ஒவ்வொரு நிறுவனத்தையும் சிறப்பான மேலாண்மை செய்வது அவசியமாகும்.

மேலாண்மை என்ற சொல் மினிஸ்டிக் (Ministic) என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதன்பொருள் பிறருடைய நலத்திற்காகச் செய்யப்படும் பணி என்பதாகும்.

இது வியாபாரம், பொது விவகாரம் அரசு ஆகியவற்றை மேலாண்மை செய்வது என்றும் பொருள்படும் என அகராதி குறிப்பிடுகின்றது.

மனித முயற்சிகளை ஒருங்கிணைப்பது, உரிய வளங்களை, மனிதனின் உயர் பண்புகளைத் திறம்பட முன்னேற்றப் பாதையில் பயன்படுத்துவது, குழந்தைகள், இளைஞர்கள் மட்டுமன்றி, பள்ளியில் பணியாளர்கள் அனைவரையும் வளர்ச்சி அடையச் செய்வது ஆகியவற்றைக் குறிப்பிடும் எனக் கல்வி கலைக்களஞ்சியம் பொருள் தருகிறது.

முன்பே நிர்ணயம் செய்யப்பட்ட கொள்கையின் அடிப்படையில் கல்வி நிறுவனத்தை இயக்குவதற்குரிய நுட்பங்கள் மற்றும் வழிமுறைகள் 'மேலாண்மை' எனப்படும் என்று சி.வி.குட் (C,V,Good) குறிப்பிடுகின்றார்.

கால அட்டவணை, பாடத்திட்டம், கட்டிடவகை, ஆவணங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் மட்டுமன்றிப் பணியில் நம் மனப்பாங்கு, குழந்தைகளிடத்தில் நாம் நடந்து கொள்ளும் முறை போன்றவற்றிலும் அக்கறை கொண்டது 'பள்ளி மேலாண்மை' என்று ரைபர்ன் (Ryburn) வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட கல்வி நோக்கங்களை நிறைவேற்றுவதும், கல்வியின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் செயல்படுத்துவதைக் கண்காணிப்பதும், அவற்றிற்கான முயற்சிகளையும் இலக்குகளையும் நோக்கங்களையும் ஒருங்கிணைப்பதும் பள்ளி மேலாண்மையாகும்.

பள்ளி மேலாண்மை **1.** மனித வளம் **2.** பொருள் வளம் என்ற இரண்டுடன் தொடர்புடையது.

**1. மனித வளம்**

குழந்தைகள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், பணியாளர்கள், பல்கலைக்கழகங்கள், உள்ளூர், மாநில மற்றும் தேசிய அளவில் பணியாற்றும் அலுவலர்கள் போன்றவர்கள்.

**2. பொருள் வளம்**

நிதி, கட்டிடம், தளவாடம், விளையாடுமிடம், இடுபொருள்கள், கருவிகள், பிற பொருட்கள்.

இவைகள் தவிர, கொள்கைகள், கலைத்திட்டம், பாடப் பொருள்கள், விதிகள், சட்டங்கள், முறைகள், சமுதாயத் தேவைகள் போன்றவைகளும் உள்ளன. இவைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, செயல் முழு வெற்றி பெற முயற்சிகள் எடுப்பதில் பள்ளி மேலாண்மை முக்கியப் பங்கு வகிக்கிறது.

## 12.2. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் (AEEO/AAEEO)

தொடக்கக் கல்வியில் பள்ளிக் கல்விக்கு வளமூட்டும் நேரடி வாய்ப்புமிக்க அலுவலர்கள் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆவர். தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் நகரச்சரகம், ஊராட்சி ஒன்றியம் என்னும் உள்ளாட்சிப் பாகுபாடுகளையொட்டித் தமிழகம் முழுவதும் உள்ளனர். தாங்கள் கடமையாற்றும் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் தமிழ் வழிப் பள்ளிகளுக்கென இரு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களும், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி இணைந்த ஆங்கில வழிப் பள்ளிகளுக்கென மாவட்டத்திற்கு ஒரு உதவி தொடக்கக் கல்வி அலுவலருமாகச் செயற்படுகின்றனர்.

பள்ளிச் சூழலாகிய கட்டிடம், குழந்தைகள், ஆசிரியர்கள் அமருமிடம், இருக்கை வசதி உணவு, குடிநீர், விளையாட்டிடம், தகுதி, நியமனம், ஊதியம் ஆகியவற்றைக் கண்டு அங்கீகரிக்கும் பொறுப்பும் அலுவலர்க்குப் பரிந்துரைத்தலும், பள்ளியின் வேலை நாட்கள், பாடத் திட்டம், கல்விமுறை, பயிற்சி, குழந்தை நலனை மையமாகக் கொண்ட நிகழ்வுகளின் ஆய்வாளராகவும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் செயற்படுவார். பல்வேறு சூழல்களிலும் பள்ளியை ஏற்று நடத்தும் கல்வி முகவாண்மை பள்ளிக்குழு, ஆசிரியர்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் என்னும் விரிவு நிலைகளில் செயற்பாடு மிக்கவராக அரசுக்கும் மக்கள் அமைப்பிற்கும் இடையே தொடர்பு அலுவலராகவும், ஆட்சி அலுவலராகவும் இவர்கள் செயல்படுவர். இவர்கள் அலுவலக மேலாண்மையில் முதல்நிலை அலுவலராகச் செயல்பட்டு பங்கேற்பு மேலாண்மையில் நம்பிக்கை கொண்டு, குழந்தையை மையமாகக் கொண்ட கல்வி நலனைச் சிந்தனையில் கொண்டவர்களாக விளங்குதல் கல்வி மேம்பாட்டுக்கு மிகவும் அவசியம்.

**செயல்**

உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் பல்வேறு பணிகளைப் பட்டியலிடுக.

## 12.3. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் (DEEO)

தமிழகத்தின் அனைத்து கல்வி மாவட்டங்களிலும் இவர்கள் செயல்படுவர். ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் பரவலுக்கு ஏற்ப ஒன்றியங்களாகப்

பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் உதவித் தொடக்கக்கல்வி அலுவலர், கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் என இருவர் செயல்படுகின்றனர். இவர்கள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் தலைமையின் கீழ் செயல்படுகின்றனர். ஒன்றியத்தில் செயல்படும் பள்ளிகளின் மேலாளர்களாக இவர்கள் செயல்படுகின்றனர்.

## 12.4. வட்டார வளமையங்களில் (BRC) வகுப்பறைக் கல்விப்பணி

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கென ஒன்றிய அளவில் வட்டார வள மையங்கள் நாடெங்கும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்னும் நோக்கோடு, முறை சார்ந்த கல்வியில் விடுபடல், தேக்கம், ஆய்வு, பயிற்சி, எனப் பல பணிகளைச் செய்கின்றன. நவீன தொழில் நுட்பங்களையும் புதிய கற்றல் முறைகளையும், மதிப்பீட்டுச் செயல்பாடுகளையும் தம் பணிகளாகக் கொண்டுள்ளன. வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள் (BRTE) பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வாளர்கள் (CRCC) இம்மையங்களின் வாயிலாகக் கல்வி மேம்பாட்டு உத்திகளைப் பரப்பி, களநிலைத் தகவலறிந்து, அனைத்துவிதமான கற்றல், கற்பித்தல் பயிற்சிகளையும் வழங்குகின்றனர். 40 ஆசிரியர்கள், 10 பள்ளிகளுக்கு ஒன்றெனப் பள்ளித்தொகுப்புக் கருத்தாய்வு மையங்களை மாதமொருமுறை கூட்டி புதிய அணுகுமுறைகளையும், வெற்றிக் தகவல்களையும் பகிர்ந்து கொள்கின்றனர்.

### வகுப்பறை மேலாண்மை

தொடக்கப்பள்ளிகளில் தற்பொழுது தமிழகக் கல்வித்துறை செயல்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்துகிறது. இச்சூழலில் வகுப்பறை மேலாண்மையின் முக்கியத்துவம் சிறப்பான ஆய்வுக்கும், நெறிப்பாட்டுக்கும் உரியதாகும்.

மாணவர்களை அணிபட அமரச் செய்து ஆசிரியர்கள் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த நிலைமாறி, தற்பொழுது ஆசிரியர் கவனித்துக் கொண்டிருக்க மாணவர்கள் குழு உறுப்பினர்களாக வகுப்பறையில் பல குழுக்களாகவும் இணையர்களாகவும் செயலில் ஈடுபடுகின்றனர். அச்சூழலில் தனிமாணவர் ஒவ்வொருவரும் தாமே கற்க ஆவன செய்வதே வகுப்பறை மேலாண்மையாகிறது.

### செயல்வழிக் கற்றலில் வகுப்பறை மேலாண்மை

செயல்வழிக் கற்றல் வகுப்புகள் வழக்கமாக நிலவிவந்த வகுப்புகளை விடச் சற்றுக் கூடுதல் கவனிப்புடன் மேலாண்மை செய்யப்பட வேண்டியவை ஆகும்.

- வகுப்பறையில் மாணவர்கள் சுதந்திரமாக இயங்க இடம், தரையில் உட்காரும் பாய் ஆகியவற்றை வழங்க வேண்டும்.
- கரும்பலகைகள் வகுப்பறைச் சுவர்களில் மாணவர்கள் உயரத்துக்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும். அதில் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி இடம் ஒதுக்கப்பட வேண்டும்.
- மாணவர்கள் வகுப்பு நேரங்களில் பாடப்பயிற்சிகளை எழுதிப் பழக உதவலாம். வரைபடங்கள் வரைந்து பழக உதவலாம்.
- ஆசிரியர் ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்களைக் கவனித்து உதவும் போது பிற 5 குழு மாணவர்கள் தங்கள் தங்கள் கற்றல் செயல்களில் ஈடுபடலாம்.
- வகுப்பறையில் தலைக்கு மேல் மெல்லிய கம்பிகளைக் கொண்டு பந்தல் போன்று அமைக்க வேண்டும். இக்கம்பிப் பந்தலில் மாணவர்களின் படைப்புகளை, வண்ணம் தீட்டியவற்றை, வரைந்தவற்றை, சேகரித்தவைகளை அவரவர் பெயர்களுடன் கட்டித் தொங்கவிட வேண்டும். புதிய படைப்புகள் வரும்பொழுது பழையனவற்றை அகற்றிப் பாதுகாப்பாக வைத்திடல் வேண்டும்.

- செயல்வழிக் கற்றலில் மாணவர் பயன்படுத்தும் கற்றல் அட்டைகளை அவற்றின் குறியீடுகளுக்கு ஏற்பத் தனித்தனியாக வைக்க வேண்டும்.
- செயல்வழிக் கற்றலில் ஆறு குழுக்கள் அமையும். இந்த ஆறு குழுக்களுக்கும் ஆறு அட்டைகள் உண்டு. இந்த அட்டைகளுக்குக் குழு அட்டைகள் எனப்பெயர். முதலிரண்டு குழுக்கள் முழுவதும் ஆசிரியரைச் சார்ந்தவை. மூன்றாவது குழு சிறிதளவு ஆசிரியரைச் சார்ந்தது. நான்காவது குழு முழுவதும் சக மாணவர் உதவியுடன் செயல்பட வேண்டியது. ஐந்தாவது சக மாணவன் உதவியுடன் தாமே செயல்பட வேண்டியது. ஆறாவது குழு தானே கற்றல் குழுவாகும். இக்குழுசெயல்களுக்கேற்ப ஆசிரியர்கள் ஏதுவாளராக, கற்றல் கள மேற்பார்வையாளராகச் செயற்பட வேண்டும்.
- குழுவாகச் மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியேயும் பல குழு விளையாட்டுகளையும், பொம்மலாட்டம் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்வர். இவற்றைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து கற்றல் நிகழ ஆசிரியர் செயல்படுவதே வகுப்பறை மேலாண்மை எனப்படும்.

## வகுப்பறை மேலாண்மையும் உயர் தொடக்கக்கல்வியும்

உயர் தொடக்க வகுப்புகளில் மொழியறிவும் எண்ணறிவும் உடைய மாணவர்கள் தாமே கற்றல் அணுகுமுறையில் கற்கின்றனர். அவ்வேளையில், மன வரைபடம் (Mind Map) வரைதல், வாசித்தல், பொருளுணர்தல், குறிப்பெடுத்தல், மீளக்கற்றல் போன்ற தானே கற்றல் முறைகளுக்கு வழிகாட்டி நூலகச் செயல், செயல்திட்டம் ஆகியவற்றிற்குத் திட்டமிட்டு, ஒருங்கிணைத்துச் சிறப்புடன் ஆசிரியர்கள் செயற்படுவது செயலாக்கக் கற்றல் என்னும் உத்தியாகும்.

தன்னை ஆய்வு செய்தல், வாழ்திறன் பயிற்சி, பன்முக நுண்ணுணர்வுத் திறன் ஆகிய சிறப்பம்சங்களுடன் செயல்படுத்தப்பெறும் இந்த செயலூக்கமிக்க கற்றல் முறையில் (Active Learning Methodolody ) தற்போதைய உயர்தொடக்க வகுப்புகள் செயல்படுகின்றன.

மனப்படம் வரைதல், குழு விவாதம், சிறந்தவற்றைத் திறனாய்வு செய்தல் ஆகிய வகுப்பறைச் செயற்பாடுகளில் புரிந்து கொள்ளுதலுக்கும், சிந்தித்தலுக்கும், ஆக்கத்திறனுக்கும் அதிகவாய்ப்பு கிடைக்கிறது. தாங்களாகவே மாணவர்கள் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் செயற்பட ஆசிரியர் ஏதுவாளராக (Facilitator) மட்டுமன்றி, கற்றல் களத்தின் அமைப்பாளராக (Learning Field Organizer) செயற்பட வேண்டும்.

## கற்றல் கருவிகளும் வகுப்பறை மேலாண்மையும்

பெரும்பகுதி கல்வி வாய்மொழியாக நிகழ்வதே முந்தையக் கல்விமுறை. கரும்பலகையில் எழுதி உருவங்களை வரைந்து கற்பிக்கும் முறையைத் தாண்டி, இன்று தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஏராளமான கற்றல் துணைக் கருவிகளின் தாக்கம் அதிகரித்து வருகிறது.


வகுப்பறைக் கல்வியில் ஈடுபடும் ஆசிரியர், கணினி வழிக்கற்பித்தலை மேற்கொள்ளவும், குறுந்தகடு (CD) தொலைக்காட்சிக் கருவிகள், புகைப்படக் கைபேசிகள் (Cell Phone) எனக் கற்றல் கருவிகளை எண்ணற்ற வகையில் பயன்படுத்தலாம்.

கற்றல் கருவிகளை இயக்கவும், பாடப்பொருள் தேவைக்கு ஏற்பத் திட்டமிடவும். மாணவர்களின் பங்கேற்புடன் கூடிய உரையாடல் நிகழ்த்திக் கற்பிக்கவும் ஆசிரியர் திறன் கொண்டவராக விளங்க வேண்டிய வகுப்பறைச் சூழல் நிலவுகிறது.

வகுப்புப் பாடங்களைத் திட்டமிடும் போதே கற்றல் கருவிகளின் செயல்பாட்டையும் இணைத்துத் திட்டமிட்டு, இயக்கி, மாணவர்களையும் ஒருங்கமைத்து குழுக்களாக்குதல், கருவிகளை இயக்கப் பயிற்சி வழங்குதல், சுய மேம்பாட்டுடன் கற்க வழிவகுத்தல் எனப்பல வழிகளில் வகுப்பறை மேலாண்மை இன்றைய சூழலில் மாறி அமைந்துள்ளது.

## 12.5. முக்கியக் கூறுகள்

பள்ளி மேலாண்மை என்பது பணிகள் செய்யப்பட்டு, நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு உரிய பயன்கள் விளைவிக்கப்படும் வழிமுறையாகும். இது ஒவ்வொரு நிறுவனத்தையும் தன் செயல்களைச் செய்ய இயக்கும் அல்லது கட்டுப்படுத்தும், தேவையான முடிவுகளை அடைய வழி கோலும். செயல்களை நிறைவேற்றுதல், திறமையான மேலாண்மை வழங்குதல் ஆகியவற்றில் பிரச்சினைகள் ஏற்படின் தீர்ப்பதிலும், பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன்பே அதனை உணர்ந்து தடுப்பதிலும், கட்டப்படுத்துவதிலும் உதவி செய்கின்றது.




### 12.5.1. திட்டமிடல்

திட்டமிட்ட செயல்கள் விரும்பத்தக்க முடிவுகளைப் பெற்றுத் தரும். சரியான பாதையைக் காட்டிச் செயல்களை நிறைவேற்ற உதவி செய்யும். பிரச்சினைகளைத் தீர்க்கும் முகவராகச் செயல்படும்போது முதலில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளையும், வழிவகைகளையும் கணிக்க வேண்டும். ஏற்படும் சிக்கல்களைத் திட்டமிட்டுச் சமாளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எச்செயலையும் தொடங்கும் முன்னரே திட்டமிட வேண்டும்.

### 12.5.2. அமைத்தல்

திட்டமிட்ட அனைத்தையும் நிறைவேற்ற அமைப்பு எனும் ஓர் இயந்திரம் தேவை. பள்ளி மேலாண்மை தன் கடமையை நிறைவேற்றத் தேவைப்படும் மனித சக்தி மற்றும் பிற வளங்களை ஏற்பாடு செய்வதும், வழங்குவதும் இதில் முதல் பணியாகும். பின்னர் புத்தகங்கள் வாங்குதல், பள்ளிக்குக் கொணர்தல், தளவாடப் பொருட்களைத் தருவித்தல், கருவிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். மேலும் கலைத்திட்டம், கால அட்டவணை, கலைத்திட்ட இணைச் செயல்கள் ஆகியவற்றையும் செயலாக்கி ஒருங்கிணைக்க வேண்டும்.

### 12.5.3. இயக்குதல்

தலைமைப் பொறுப்பை ஏற்று, வழிகாட்டும் முக்கிய பணி இயக்குதல் ஆகும். இது பணியை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது. முடிவுகளை எடுக்கும் நபர் இப்பொறுப்பை ஏற்று ஆணைகள், வாய்வழி சொற்கள், வழிகாட்டுதல் மூலம் நிர்வகித்து, செயல்களை நிறைவேற்றுகிறார். பொதுவான நோக்கத்திற்காக, இலக்கிற்காகத் தேவையான வழிகளைக் காட்டி பள்ளியின் அனைத்து நலன்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

### 12.5.4. ஒருங்கிணைத்தல்

பள்ளி மேலாண்மை பல மனிதர்களின் விருப்புவெறுப்புகளை அனுசரித்து மாணவர் நலனை நிலைநாட்டுவது பற்றியதாகும். அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒரே மனநிலையை உண்டாக்கி, கூட்டு முயற்சியை ஏற்படுத்தி, பள்ளியை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல

ஒருங்கிணைத்தல் அவசியம். அனைத்துப் பணியாளர்களையும் இலக்கை நோக்கிய ஒரே பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுவது பள்ளித்தலைவரின் கடமையாகும்.

ஒவ்வொரு பள்ளியும் தனித்தனியான பல பரிமாணங்களைக் கொண்ட மனிதர்கள் மற்றும் பொருட்களைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு பகுதியையும் அலகையும் கூட்டாக ஒருங்கிணைத்துச் செயல்படுவதில் தான் பள்ளியின் முன்னேற்றம் அமைந்துள்ளது. பிரச்சினைகள் ஏற்படும் போது, நிறுவனத்தின் குறிக்கோள்களுக்காக, கொள்கைகளுக்காகப் பணியாற்றுகிறோம் என்ற கருத்தை மனதில் கொண்டு வேறுபாடுகளைக் களைந்து, ஒருங்கிணைந்து செயல்பட்டு பள்ளியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

### 12.5.5. விளைபயனை மதிப்பிடல்

பள்ளி மேலாண்மையைப் பற்றி, கருத்து மற்றும் முடிவுகளை அறிய மதிப்பிடல் அவசியம். மேலாண்மை வலிமைமிக்க வழிமுறையாதலால், அதனை அவ்வப்போது மறு ஆய்வு செய்ய வேண்டம். நிறுவனம், நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்குரிய செயல்களை ஆராய வேண்டும். குறைந்த திறனுடைய செயல்களை மிகுந்த திறனுடைய செயல்களால் மாற்றியமைக்க வேண்டும். முன்புள்ள செயல்களின் குறைபாடுகளைக் கண்டறிய. பள்ளியின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை மாற்றம் செய்ய அல்லது மேம்படுத்த, பள்ளியின் வெளியேயும், உள்ளேயும் உள்ள நிலையை மாற்ற. புதிய அறிவை, வழிமுறையை நுட்பத்தைக் கண்டறிய, மதிப்பிடல் மிக அவசியமாகும். வெற்றியை, இலக்கு அடைவை மட்டும் மதிப்பிடாமல் பயன்படுத்திய நடைமுறைகளையும், அவற்றின் ஏற்புடைமை பற்றியும் மதிப்பீடு செய்து நிர்வாகத்தைத் தகஅமைத்துக் கொள்ள வேண்டும்.

## 12.6. பள்ளி மேலாண்மையின் குறிக்கோள்களும் நோக்கங்களும்

### 12.6.1. பள்ளியின் பணியினை வரையறுக்க

பள்ளியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் சமுதாயம் நிர்ணயம் செய்கின்றது. பள்ளி மேலாண்மை, சமுதாயம் வரையறுத்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குரிய பங்கு பணிகளை ஆற்ற வேண்டும். பள்ளிகளில் நிறைவேற்ற வேண்டிய செயல்களையும், நிகழ்வுகளையும் அறிமுகப்படுத்தி கல்வியின் தேவைகளைப் பின்வாங்காமல் செய்ய வேண்டும்.

### 12.6.2. பயனற்றவைகளைக் களைய

பள்ளியில் வளங்கள் பயனற்ற வகையில் வீணாவதைக் களைய, உரியநேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். விளைவுமிக்க பயன்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

### 12.6.3. சிக்கல்களை எளிதாக்க

கால உணர்வு, கல்வித் தத்துவங்கள், கல்வி உளவியல், கல்வி நுட்பங்கள், கல்வி நோக்கங்கள், கலைத்திட்ட மற்றும் கலைத் திட்ட இணைச் செயல்கள், ஒழுங்கு, கட்டுப்பாடு, பணியாளர்கள் நியமனம், சேர்க்கை, வருகை, சான்றளித்தல், கோரிக்கையேற்றல், நிதிஆளுதல் கால அட்டவணை, விதிகள், வகுப்பறைக் கற்பித்தல், விளையாட்டு, வழிகாட்டல், மேற்பார்வை, தளவாடப் பொருட்கள், மக்களாட்சி முறையில் நிகழ்வுகள், மதிப்பீடு போன்ற பல பணிகள் பள்ளியில் உள்ளன. இவற்றை ஆலோசித்து, தகவு கருதி பகிர்ந்தளித்து எளிதாக்கிக் காலம் தாழாது விரும்பத்தக்க, முடிவுகளைப் பெற மேலாண்மை உதவுகின்றது.

### 12.6.4. ஆராய்ச்சிகள் மேற்கொள்ள

மேலாண்மையைச் சீரமைத்துக் கொள்ளவும், சரியான திசையில் செல்கிறோமா என்பதை உறுதி செய்து கொள்ளவும், கல்வி ஆய்வுகள், ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன. காலம், உழைப்பு, வளங்கள், நிதி முதலியவற்றின் விரயத்தைத் தவிர்க்க, மேலாண்மை செய்பவருக்கு ஆராய்ச்சி மனப்பான்மை தேவை. அனைவருக்கும் கல்வி, இருபாலர் கல்வி, தொழிற் கல்வி, வேறுபட்ட பாடங்கள், கலைத்திட்ட நிறைவேற்றம், ஏற்புடைமை, கள நிலவரம், பொதுக்கருத்து, வளர்ச்சி, தர மேம்பாடு, மனித உறவுகள், இடைவினைகள், பரவலாக்கம் ஆகிய பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற் கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்த பள்ளி மேலாண்மை முன்வர வேண்டும்.

“அறிஞர்களின் அறிவுரைகளுக்கேற்ப பள்ளியை அமைக்க, கல்வியாளர்களுக்குப் பயற்சியளிக்க, பார்வையை விரிவாக்க, மனதைப் பண்படுத்த, நடத்தையை ஒழுங்கு படுத்த மற்றும் வலிமையாக்க, அழகுணர்வு ஆர்வத்தை வளர்க்க உடலைத் திடப்படுத்த, உடல் நலத்தைச் சீரமைக்க, கடமையை அறிவுறுத்த, பள்ளியை மேம்படுத்த பள்ளி மேலாண்மை அவசியம்”. எனப் பி.சி.ரென், (P.C. Wren) மேலாண்மையின் நோக்கங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

## 12.7. பள்ளி மேலாண்மைக் கோட்பாடுகள்

### 12.7.1. கல்வித்தத்துவங்களுடன் ஒத்துப்போதல்

கல்வித்தத்துவங்களின் அடிப்படையில் கல்வி நோக்கங்கள் வரையறுக்கப்படுகின்றன சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ற கல்வித்தத்துவங்களை, ஒவ்வொரு நாடும் உருவாக்கி வருகின்றன. உலக அரங்கில் தன்னாடு பின்தங்கவோ, தொய்வடையவோ கூடாதென உலகக்கல்வித் தத்துவக் கோட்பாடுகளை ஒவ்வொரு நாடும் குறித்த கால இடைவெளியில் புனரமைப்பும் தகவமைப்பும் செய்து வருகின்றன. நாட்டின் இத்தகு நோக்கங்கள் பள்ளிகளில், வகுப்பறைகளில் நாளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

### 12.7.2. மக்களாட்சி அணுகுமுறை

பள்ளிக் குழந்தைகளை, நாளைய இந்தியக் குடிமக்களாக உருவாக்க உரிய பயிற்சியை அளிக்கும் முகவாண்மையாகப் பள்ளிகள் செயல்படுகின்றன. பள்ளி தன் அன்றாடச் செயல்களில் மக்களாட்சி முறைகளைப் பின்பற்றுவதன் வாயிலாகக் குழந்தைகளிடையே அப்பண்புகளை உருவாக்க முடியும். எல்லா முடிவுகளும் கூட்டு மனப்பான்மையில் மற்றவர்களையும் அனுசரித்து எடுக்கப்பட வேண்டும். தலைமையுடன் ஆசிரியர், மாணவர், பெற்றோர் கலந்து பேசி பள்ளியின் செயல்பாடுகளை, பொதுநலன் கருதிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் பின்பற்ற வேண்டும். பயனாளிகளின் கருத்துக்களையும், உணரப்பட்ட தேவைகளையும் அறிந்து திரட்டி, உகந்தவாறு பிரதிபலிப்பதாகப் பள்ளி நடைமுறைகள் அமைதல் நன்று.

### 12.7.3. அனைவரும் பங்கேற்றல்

கூட்டுமனப்பான்மையும், இணைந்து செயல்படுதலும் நவீன மேலாண்மையின் உத்திகளாகும். நிறுவனத்தின் வெற்றியில் அனைவரும் பங்கேற்று மிகச் சிறந்த பணியினை நிறுவனத்திற்கு வழங்க முன்வருமாறு மேலாண்மை அமைய வேண்டும். சமுதாயம், மேற்பார்வையாளர், பெற்றோர், ஆசிரியர், மாணவர் மற்றும் அனைவரது சிறந்த பங்களிப்பைப் பெற்று, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு வழங்குதல் வேண்டும். ஒவ்வொருவருடைய பங்களிப்பிற்கும் உரிய வாய்ப்பையும் வரவேற்பையும் முனைந்து வழங்க வேண்டும். இயற்றப்படும் திட்டங்கள் பங்கேற்பால் இயற்றப்படும் திட்டங்களாய் அமைவதும், அவற்றின் நடைமுறைப்பாடு பயனாளர்களால் தாங்கிச் செல்லப்படுவதாகவும், மேலாண்மையாளரின் தன்முனைப்பு தொனிக்காத உள்ளுறை ஆற்றலாகவும் அமைதல் மேலாண்மைக்கு அழகு.

### 12.7.4. தனித்தன்மையை மதித்தல்

தனியாள் வேற்றுமைகள் மதிக்கப்பட வேண்டும். தான் முதன்மையானவர் என்று யாரும் எண்ணுதலோ, பிறரை அதன் காரணமாகக் கட்டளையிடுவதோ கூடாது. ஒவ்வொருவருடைய தனித்தன்மையையும் நிறுவன மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மனிதர்கள் அனைவரும் பலபடித்தானவர்கள்; வெவ்வேறு இயல்புகளும், விருப்பு வெறுப்புகளும் உள்ளவர்கள் என்பதே சமூகவியல் உண்மை. தனித்தன்மை ஆக்கபூர்வமாக மதிக்கப்படும் போது அது அர்ப்பணிப்பு உணர்வாகவும், நிராகரிக்கப்படும் போது எதிரிடையானதாகவும் மாறிவிடக் கூடும் என்பதையும் ஒருக்காலும் மறந்துவிடலாகாது. ஒவ்வொரு குழந்தையின் விருப்பம், ஆற்றல்கள் தனிப்பட்ட தன்மையில் வளரவும் உதவ வேண்டும்.

### 12.7.5. வேறுபட்ட செயல்களுக்கு முக்கியத்துவம்

வேறுபாடுகள் இயற்கையின் நியதி: வித்தியாசங்கள் தனித்தன்மை, புதுமைகளின் அடிப்படை. ஒருமைப்பாட்டை போலவே பன்மைத்தன்மையும் ஒரு சிறப்புக் கூறே. சமூகப் பன்மைத்தன்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் அலுப்போ, வெறுப்போ பொருளற்றது. அடிப்படையில் நாம் அனைவரும் சமன்பாட்டை விரும்பினாலும், ஒருமைப்பாட்டை நோக்கமாகக் கொண்டாலும் ஆர்வத்தில் வேறுபாடுகளையும், நாட்டத்தில் மாறுபாடுகளையும், சமுதாயத்தில் பன்மைத் தன்மையையும் நாம் நிராகரிக்காமல், அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து மேலாண்மை செய்தல் அவசியம்.

### 12.7.6. நம்பிக்கையான மனப்பாங்கு

உலகைச் சரிவர விளங்கிக் கொள்ள நம்பிக்கையும் அவ நம்பிக்கையும் இரு கண்கள்; இரண்டும் தேவைதான். எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுவது ஒருவரின் பலவீனம். அதற்காக ஆயுந்தன்மையையும், விழிப்புணர்வையும் இழந்துவிடலாகாது.

“தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்” என வள்ளுவப் பெருந்தகையும் இதனையே ஆய்ந்து கூறியுள்ளார்.

பள்ளி நிர்வாகம், திறமையான செயல்பாடுகளில் மிக முழுமையான நம்பிக்கைக் கொள்ள வேண்டும். சுய மதிப்பீட்டிற்கு முக்கியத்துவம் அளித்து செயல்பாடுகளைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த நம்பிக்கையான மனப்பாங்கு உடையவர்களாகத் திகழ வேண்டும்.

### 12.7.7. ஆசிரியரின் பணி மேம்பாடு

ஆசிரியரின் பணியைப் பள்ளியின் வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதோடு, அவர்களின் மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் நிர்வாகம் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். தங்களுடைய அறிவை. தொழில் நுட்பத்தை வளர்த்துக் கொள்ள பணியிடைப் பயிற்சி வாயிலாகவும், புதிய எண்ணங்களை, யுக்திகளைக் கருத்தரங்கு, பணிமனை போன்றவற்றில் பிறருடன் பகிர்ந்து கொள்வதன் வாயிலாகவும், தொழில் சார்ந்த திறன்களை நாளும் வளர்த்துக்கொள்ள, ஆசிரியர்களை வல்லுநர்களாக்கிட மேலாண்மை திட்டமிட்டு ஆவன செய்ய வேண்டும்.

## 12.8. பள்ளி – சமுதாயத் தொடர்பு

பள்ளிகள் சமூக நிறுவனங்கள்: சமுதாயத்தின் கல்வித்தேவை, விருப்பம், நாட்டம் ஆகியவற்றை நிறைவேற்றிக் கொள்ளவே சமுதாயத்தின் முயற்சியால் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. சமுதாயத்தினரே பள்ளியின் உரிமையாளர்கள்.

பள்ளிக்கும், சமுதாயத்திற்குமிடையே உள்ளன்புமிக்க செயல் நோக்கமுள்ள உறவை மேம்படுத்துதல் அவசியம். பள்ளியின் செயல்பாடுகளும், முன்னேற்றங்களும், சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகவே திட்டமிடப்பட வேண்டும். பள்ளி நிர்வாகத்தின் சமுதாயத்தினரை உள்வாங்கி அவர்தம் பிள்ளைகளின் கல்வி நலனை உரிய வழிகாட்டுதலுடனும், சமுதாய ஆதரவுடனும் நிறைவேற்றித்தர வேண்டும். சமுதாய விழிப்புணர்வு, சமுதாயப் பங்கேற்பு, சமுதாய ஒத்துழைப்பு, சமுதாய மேலாண்மை, சமுதாய மதிப்பீடு, சமுதாய உடைமை எனச் சமுதாயத்தைத் தயார்படுத்திக் கல்வித் தன்னாட்சிக்கும் பள்ளி நிர்வாகம் திட்டமிட்டு வழிகோல வேண்டும்.

**செயல்**

1. ஒவ்வொரு பள்ளியும் எப்படித் தோன்றின? 2. அவற்றின் தோற்றத்தைக் கனவு கண்டவர்கள் யாவர்? 3. அப்பள்ளிக்கு விண்ணப்பித்தோர் யாவர்? 4. ஏன் விண்ணப்பித்தனர்? 5. பள்ளிக்குக் கிராமம் வழங்கிய கொடைகள் யாவை? 6. புரவலர்கள் எத்தனை பேர்? 7. பள்ளி விழாக்களின் செலவை ஏற்றுக் கொள்வோர் யாவர்? 8. பள்ளி சீரழிந்தால் பாதிக்கப்படுவோர் யாவர்? 9. இப்பள்ளியில் படித்து முன்னேறியோர்–வெளியேறியோர் இதுவரை மொத்தம் எத்தனை பேர்? என்பனவற்றைக் கேட்டறிந்து குறித்து–பள்ளி யாருக்குச் சொந்தம்? ஆசிரியர் சமுதாயத்தை எவ்வாறு அணுக வேண்டும். இப்பொழுது நாம் அணுகிவரும்முறை சரிதானா? என்பனவற்றிற்கு விடை காண்க.

## முடிவுரை

பள்ளியின் வளர்ச்சிக்கும், பணிகள் திறம்படவும், ஒருங்கிணைந்து செயல்படவும் நல்ல பள்ளி நிர்வாகம் தேவை. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களிடையே நல்ல உறவையும், பொருட்கள், வசதிகள், நிதி, வளங்கள், கட்டிடம், தளவாடப் பொருட்கள் முதலியவற்றிலிருந்து உச்சபயனையும் நல்ல நிர்வாகம் பெற முடியும் என்பது திண்ணம்.

## 12.9. தலைமையாசிரியரின் பங்குப் பணிகள்

## முன்னுரை

தலைமை ஆசிரியர் பள்ளியின் நிர்வாகி. தலைமை ஆசிரிர் ஒரு பண்முகப் பணியாளர். தலைமை ஆசிரியர் கிராமக் கல்வி நல அலுவலர் பள்ளியின் தரக் காவலர்; மாணவர் நலப்பொறுப்பாளர்; கிராம சமுதாயத்தின் நண்பன்; சக ஆசிரியர்களின் தலைவர்; கல்வி ஆர்வலர்; என்றும் கற்க விரும்பும் மாணவன்; பள்ளிக்கும் கல்வித்துறைக்கும் இணைக்குநர்; வழிகாட்டும் ஆர்வம் மிக்க முன்மாதிரி ஆசிரியர் எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

### 12.9.1. தலைமையாசிரியர் : பொருள்

“கடிகாரத்திற்குக் கம்பிச் சுருள் போல், இயந்திரத்திற்கு இயக்கச் சக்கரம் போல், விசைப்படகுக்குத் எந்திரம் போலப் பள்ளிக்குத் தலைமையாசிரியர் ஆவார்” எனப் பி.சி.ரென் கூறுகிறார்.

“பள்ளி நிர்வாகம் என்ற கட்டமைப்புக்கு அடித்தளம் போன்றவர் தலைமையாசிரியர்” – என்பார் எஸ்.என்.முகர்ஜி.

“தலைமையாசிரியரைச் சார்ந்தே பள்ளியின் பணிகள், அமைந்துள்ளன” – என்பது இடைநிலைக் கல்விக்குழு.

தன்னுடைய அலுவல் காரணமாக, அரசிற்கும் பள்ளி நிர்வாகத்திற்கும், நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்கும், ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும்

ஆசிரியர்களுக்கும் இடையே தன்னுடைய நடத்தை, நுண் நயம் மற்றும் இரக்க குணங்களின் வழியாக உறவை மேம்படுத்துபவர் தலைமையாசிரியர் என்று எஸ். பாலகிருஷ்ண ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

**செயல்**

தலைமையாசிரியர் தன்னுடைய பள்ளியில் பராமரித்து வரும் ஆவணங்களைப் பட்டியலிட்டு ஒப்படைப்பாக்குக.

### 12.9.2. தலைமையாசிரியரின் பண்பு நலன்கள்

தலைமையாசிரியர் தன்னுடைய பணியைச் செவ்வனே செய்ய, நல்ல பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். பிறருக்கு முன் மாதிரியாகத் திகழ்தல் நல்ல மனிதர், நல்ல கொள்கைகள், அறிவு, சமூகப்பணி, தலைமைப் பண்பு, நடுநிலையாளர் எனும் குணநலன்களைப் பெற்றுத் திகழ வேண்டும். நிர்வாகி என்ற முறையில் திறமையான நிர்வாகப் பொறுப்பையும், கல்வியாளர் என்ற அடிப்படையில் பள்ளியில் கற்றல் சூழலை ஏற்படுத்தவும், ஆசிரியர் என்ற முறையில் முறையான கல்வியை வழங்கி அடைவுகளை மேம்படுத்தவும், மனிதன் என்ற முறையில் மனித உறவுகளை வலுப்படுத்தவும், தலைவர் என்ற முறையில் பள்ளியின் அனைத்துச் செயல்களிலும் மனமுவந்து பொறுப்பை ஏற்கும் பண்பைக் கொண்டவராகவும் அமைதல் அவசியம்.

எஸ்.இ.பிரே (S,E,Bray) மற்றும் டாக்டர். ஜஸ்வந்த் சிங் (Dr. Jaswant Singh) தலைமையாசிரியர் பெற்றிருக்க வேண்டிய குண நலன்களைக் கீழ்க்காணுமாறு பட்டியல் இட்டுள்ளனர்.

- கடமையுணர்வு
- கருணையுள்ளம்
- பணியாற்றுவதில் ஆர்வம்
- சுயக்கட்டுப்பாடு
- போதுமான தொழில் வல்லமை
- உடல்நலம்
- உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல்
- சுய ஆய்வு
- மனிதநேயம்

**செயல்**

தலைமை ஆசிரியர் ஓர் ஆசிரியர்; ஒரு நிர்வாகி: ஒரு பண்பாளர் என்ற மூன்று நிலைகளிலும் கோணங்களிலும் அவரிடம் அமைந்திருக்க வேண்டிய நலக்கூறுகளைப் பட்டியலிட்டுப் பதிக.

### 12.9.3. தலைமையாசிரியரின் கடமைகள்

தலைமையாசிரியர், தன் பள்ளியின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துபவராக, மாணவர்கள், ஆசிரியர்களின் ஒழுக்கத்தைப் பராமரிப்பவராக, கற்றல் களத்தைத் திட்டமிட்டு மேற்பார்வையிடுபவராக, பாடப்புத்தகக் கருத்துகள் அனைத்திலும் மிகு புலமை வாய்ந்தவராக, ஆலோசித்து வழிகாட்டுபவராக, விளையாட்டுகளை அமைப்பவராக, பள்ளியின் ஆவணங்களைச் சீராகப் பராமரிப்பவராக, நேர்மைமிக்க பொதுநிதி ஆள்பவராக, மாணவர்களின் உடல், அறிவு மற்றும் ஒழுக்க நலன்களைப் பாதுகாப்பவராகச் செயல்பட்டுக் கடமை ஆற்ற

வேண்டியவர், எனப் பஞ்சாப் கல்விச் சட்டத் தொகுப்புகள் கூறுகின்றன. தலைமையாசிரியரின் கடமைகளைப் பின்வருமாறும் ஆறு கூறுகளின் கீழ் ஆயலாம்.

- அமைப்பு மற்றும் நிர்வாகம்
- திட்டமிடுதல்
- கற்பித்தல்
- உறவுகள் பராமரித்தல்
- மேற்பார்வை
- வழிகாட்டுதல்

**செயல்**

தலைமையாசிரியர்
1) தலைமைப் பண்பு உடையவர் (Leader)
2) திட்டமிடுபவர், மேலாளர் (Planner & Manager)
3) கண்காணிப்பாளர், மதிப்பீட்டாளர் (Monitor & Evaluator)
4) நேர்மறை மனப்பாங்கை உருவாக்குபவர் (Developer of Positive Outlooks)
5) ஒருங்கிணைப்பாளர் (Co-ordinator)
6) மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relations Officer)
7) நன்னெறிக் கல்வியாளர் (Value Educator)
8) வழிகாட்டி நெறிப்படுத்துபவர் (Guide & Counsellor)
9) வளங்களைச் சேகரித்துப் பயன்படுத்துபவர் (Resource Builder Economic User)

என்ற 9 முகப்புக்களில் ஆற்ற வேண்டிய பணிகளை, கடமைகளை விவாதித்துப் பட்டியலிடுக.

தலைமையாசிரியர் தன்னுடைய அனுபவம், திறமை, சக்தி, விழிப்புணர்வு, நுண்நயம், கடமை உணர்வு, சமூக உணர்வு, கற்பனைத்திறன், புதியன படைக்கும் திறன் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தன் கிராமத்தின் எதிர்கால, நிகழ்காலக் கல்வி நலனைக் காக்க வேண்டும்.

## 12.10. ஆசிரியர் பங்கு

ஆசிரியர் என்பவர் குழந்தைகளின் மூன்றாவது பெற்றோர். குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுபவர். குழந்தைக்குக் கல்வி வழங்கும் அரிய பணியை ஆற்றுபவர். குழந்தைகள், தங்களுடைய அறிவு, விவேகம், நடை, உடை, பாவனை ஒழுக்கம், ஊக்கம் முதலியவற்றைப் பெறுவதில் ஆசிரியரைச் சார்ந்துள்ளனர்.

“சமுதாயத்தில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது. சிந்திக்கும் ஆற்றல் மற்றும் நுட்பத்திறன் ஆகியவற்றை ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைகளுக்கு மாற்றம் செய்பவர். நாகரிக விளக்கை அணையாமல் பாதுகாப்பவர். தனிமனிதர்களுக்கு வழிகாட்டுபவர். இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர் அவர்” என்று டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

‘‘வரலாற்றை உருவாக்குபவர் ஆசிரியர்’’ – எச்.ஜி. வெல்ஸ்

‘‘கல்விப் புனரமைப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்கு முக்கியக் காரணி ஆசிரியர்: அவருடைய ஆளுமைத்தன்மை, கல்வித்தகுதி, தொழிற்பயிற்சி, சமுதாயம் மற்றும் பள்ளியில் அவர் பெற்றிருக்கும் உரிய இடம், பள்ளியின் புகழ், சமுதாய வாழ்வில் அதன் தாக்கம் ஆகியவை ஒரு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியரைப் பொறுத்தே அமையும்’’

– இடைநிலைக் கல்விக்குழு

## 12.10.1. ஆசிரியரின் பண்புகள்

நல்ல ஆசிரியர், தன்னுடைய சக்தியின் வாயிலாக நல்ல ஒழுக்கத்தை மாணவர்களிடம் ஏற்படுத்த முடியும். தேசத்தை வடிவமைப்பவர், வரலாற்றை உருவாக்குபவர், மனிதனை மனிதனாக்குபவர், தேச எல்லைகளைக் கடந்து உலக உணர்வை வளர்ப்பவர், நாகரிகத்தைப் பேணிக்காத்து வரும் தலைமுறைக்கு அளிப்பவர் போன்ற பல்வேறு பணிகளைச் செய்பவர் ஆசிரியர்.

- சூழ்நிலையை ஆளுந்திறன்
- ஆளுமைத்திறன்
- ஊக்கமுடைமை
- கூட்டுணர்வு மனப்பான்மை
- உடல் நலம்
- நேர்மை
- தலைமைப் பண்பு
- சிறந்த அறிவு
- கற்பனைத்திறன்
- சுயகட்டுப்பாடு
- சுய ஆய்வு
- தன்னொழுக்கம்
- சமுதாய உணர்வு
- குழந்தைகளிடம் அன்பு
- பணி மீது ஈடுபாடு
- அறிவுத் தாகம்

ஆகிய பொருத்தப்பாடுகள் அமையப் பெற்றவராக ஆசி

மனிதஉறவு
- மாணவர்களுட
- பிற ஆசிரியர்களு
- மேல் அதிகாரிக
- பெற்றோருடன்
- சமுதாயத்துடன்

தன் பணியுடன் தொடர்வுடைய அனைவரிடமும் பொறுப்புடன் இடைவினை புரிபவராகவும், திறந்த மனம் படைத்தவராகவும், ஆக்கபூர்வமான தகவல் தொடர்பாளராகவும், நன்மை நாடுபவராகவும் அமைதல் வேண்டும்.

**செயல்**

ஆசிரியரின் கடமைகளைப் பட்டியலிடுக. அவற்றை நிறைவேற்ற ஆசிரியர்களிடம் அமைய வேண்டிய நலன்களைப் பட்டியலிட்டுப் பொருத்துக.

‘‘ஆசிரியர்களை நான் வாழ்த்துகிறேன். இராணுவத்தளபதிகள் யுக்திகளை வகுத்துக் கொடுத்திருப்பினும், வீரர்கள் வெற்றியைப் பெற்றுத் தருவது போல், கல்வியாளர்கள் புதிய பாடத்திட்டத்தைத் திட்டமிட்டாலும் ஆசிரியர்கள் இளைஞர்களை இயக்கியும், வழிகாட்டியும் அனுபவங்களை வழங்குகிறார்கள். தன்னுடைய அன்றாட செயல்களில் பொறுமையைக் கடைபிடித்து, அறியாமை என்ற இருளை விரட்ட முற்படுகின்றனர். தீயசக்திகளை எதிர்த்துப்

போராடுகின்றனர். குழந்தைகளை எழுச்சியூட்டி ஆர்வங்களை வளர்த்து உறுதியான எண்ணங்களை தோற்றுவிக்கின்றனர். குழந்தைகளுக்குக் கற்றல் வழியாக மகிழ்ச்சியைப் பரப்பி, தன் மனப் புதையல்களை, அறிவுச் செல்வங்களைப் பங்கிட்டுக் கொள்கிறார். அறிவைப் புத்தகங்களிலிருந்து பெறலாம்; ஆனால் பிறரை நேசிக்கும் பண்பை நேரிடையான தொடர்பு வழியாக மட்டுமே பெற முடியும். ஆசிரியரைத் தவிர வேறுயாரும் இதற்கு மாற்று கிடையாது. தனக்குத் தானே அரசனாகவும், மனித சமுதாயத்திற்குப் பணியாளராகவும் சேவகனாகவும் இருப்பவர் ஆசிரியர் ஒருவரே'' என்று ஹென்றி வேன் டியூக் (Henry Van Duke) கூறியுள்ளார்.

## 12.11. ஆசிரியர் உறுதிப்பாடு (Teacher Commitment)

### 12.11.1. முன்னுரை

குழந்தைகளின் கல்வியில் முக்கிய அங்கம் வகிப்பவர் ஆசிரியர். கல்வி முறையின் வெற்றி: தோல்வி ஆசிரியரைப் பொறுத்தே அமைகின்றது. ஆசிரியர்கள் சிறந்த கல்விப் புலமையாளர்களாவும், தேர்ந்த பயிற்சிகள் பெற்றவர்களாகவும், உயிரோட்டமான அறிவுடன் தொழிலில் ஆர்வம் மிக்கவர்களாவும், விளங்கி விருப்பமுடன் பழகி குழந்தைகளிடம் அன்பும், பரிவும் காட்டிக் கல்வி வெற்றி பெறத் துணை செய்ய வேண்டும்.

கல்வி முறையின் வலிமைமிக்க சக்தியாகத் திகழ்பவர் ஆசிரியர். ஆசிரியர் இல்லாத கல்வி, ஆன்மா இல்லாத உயிர்; இரத்தமும் தசையும் இல்லாத எலும்புக்கூடு; உட்பொருள் இல்லாத நிழல் (Shadow Without substance) போன்றது. ஆசிரியர் தன் மனிதப் பண்புகளைக் கொண்டு, சமூக சீர்த்திருத்தவாதி என்ற அடிப்படையில், குழந்தைகளிடையே மனிதத்தன்மையையும், சமூக மாற்றத்திற்கான பண்புகளையும் வளர்க்க வேண்டும்.

### 12.11.2. ஆசிரியர் உறுதிப்பாடு

முற்காலத்தில், பெற்றோர்கள் தமது குழந்தைகள் முழுமையான ஆளுமை வளர்ச்சி பெறுவதற்கு, உறுதியாகவும் நம்பிக்கையாகவும் 'குரு'விடம் ஒப்படைத்தனர் ஆசிரியர்களும், எவ்வித பலனும் எதிர்ப்பார்க்காமல், தம்முடைய அறிவை விற்பனைப் பொருள் போலன்றி, சுய ஈடுபாட்டுடன் கொடையாக வழங்கி வந்தனர்.

#### 12.11.2.1 உறுதிப்பாடு – வரையறை

''ஒரு தொழிலில் அல்லது நம்பிக்கையில் ஒவ்வொரு தனிநபரும் வெளிப்படுத்தும் சுயமுயற்சியின் அளவே உறுதிப்பாடு'' – மார்சியா (1967)

#### 12.11.2.2. ஆசிரியர் உறுதிப்பாடு

''தனது சுய விருப்பங்களை முன்னிறுத்துவோரை விட, பிறர்மீது அக்கறையும், அர்ப்பணிப்பு உணர்வும், பணியின் மீதுள்ள ஆழ்ந்த பற்றும் உடைய ஆசிரியரை உறுதிப்பாடு மிக்கவர்'' என்று எலியட் மற்றும் கிராஸ்வெல் கூறுகின்றனர்.

பணி விருப்புக்கான ஓர் அடையாளமாகவும், மகிழ்வினை அளிக்கும் ஓர் உந்துதலாகவும் ஆசிரியர் உறுதிப்பாடு அமைகிறது.

வேத காலத்தில் ஆசிரியர் உறுதிப்பாடு என்பது குருவின் அர்ப்பணிப்பு, உபாசனை, சமர்ப்பணம், சத்தியம் போன்ற உன்னதத் தன்மைகளாகக் கருதப்பட்டன.

**செயல்**

யார் நல்ல ஆசிரியர்? ஒரு நல்ல ஆசிரியரின் அடையாளங்கள் யாவை ? ஆசிரியர்களை மிக நல்லவர்களாக்கும் பண்புக்கூறுகள் யாவை ? என்பனபற்றிக் கருத்தரங்கம் நிகழ்த்தி மேலோங்கும் கருத்துக்களை வரைந்து வைக்க.

## 12.11.3. ஆசிரியர் உறுதிப்பாடு – சிறப்பியல்புகள்

- கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான உறுதியான எண்ணமும், செயலும்
- கற்றல் தேவைகளைப் புரிந்து கொள்ளும் திறன் மற்றும் ஆற்றல்
- கண்டறியப்பட்ட கற்றல் தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் செயல் ஆர்வம்
- எழுச்சி சார்ந்த உயர் பண்புகளை உருவாக்குவதற்கான செயல் ஆர்வம்.
- குழந்தைகள் பால் அக்கறை
- மனசாட்சியுடன் தனது பங்கு மற்றும் பொறுப்புணர்வைச் செயல்படுத்துதல்.
- கண்ணியமான தொழில் நோக்கு

## 12.11.4. ஆசிரியர் உறுதிப்பாடு – மாற்றத்திற்கான தேவை

மாறிவரும் சமூகச் சூழலுக்கு ஏற்ப, நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல, ஆசிரியர் தமது பணிப்பாங்கினை மாற்றிக் கொண்டு, புதிய கருத்துகளுக்கேற்ப தமது சிந்தனைகளைப் புதுப்பித்துக் கொண்டு, புதிய சமூகத்தை உருவாக்கும் பெரும் பணியினை ஆற்றிட ஆசிரியர் உறுதிப்பாடு மிகவும் அவசியமாகும்.

### முக்கிய மாறுதல்கள்

| இதிலிருந்து | இதற்கு |
|---|---|
| கற்பித்தல் ஒரு வேலை | ஓர் உயர் பணி |
| பாடம் நடத்துபவர் | கற்றல் நிகழ்வுகளுக்கு ஏதுவாளர் |
| தகவல் தொடர்பாளர் | குழந்தைகளின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்துபவர் |
| பழைய கற்பித்தல் உத்திகளை மட்டுமே பயன்படுத்துபவர் | புதிய உத்திகளை நாளும் தேடிப் புகுத்துபவர் |
| கவர்ச்சியற்ற வகுப்பறைச் சூழல் | ஆர்வமும், ஈடுபாடும் மிக்க கற்றல் களம் |
| இணக்கமற்றவர், சூழ்நிலையையே குறை காணும் ஆசிரியர் | இணக்கமான, சூழலை மாற்றி அமைக்கும் செயல் ஊக்கமுள்ள ஆசிரியர் |
| அதிகாரமிக்க தலைவர் | அன்பால் அகிலத்தை வெல்லுவதில் நம்பிக்கை உள்ளவர் |

**ஆசிரியர்கள் பின்வருவனவற்றிற்குத் தயாராக இருக்க வேண்டும்.**

- பிள்ளைகளைக் கண்காணித்தல் மற்றும் அவர்களோடு இருத்தலை விரும்புதல்.
- சமூக கலாச்சார, அரசியல் சூழ்நிலையில் குழந்தைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- கருத்துக்களை ஏற்கத் தயாராகவும், எப்போதும் கற்க விருப்பமுள்ளவராகவும் இருத்தல்.
- பாடப்புத்தகங்களில் இருக்கும் பொருளாக அறிவைக் கருதாமல், கற்றல் – கற்பித்தல் முறையாலும் சுய அனுபவத்தாலும், விவாதித்தும் கருத்தேற்றமடைந்து கட்டமைப்பு செய்து கொள்வது அறிவு எனப் புரிந்துகொள்ளுதல்.


- சமுதாயத்திற்குப் பொறுப்புள்ளவராக இருந்து நல்ல உலகைப் படைக்க முயலுதல்.
- பாடப்பொருளறிவைப் பள்ளிக்குத் தொடர்பு படுத்திக் கற்பித்தல்.
- கலைத்திட்ட வடிவமைப்பில், செயல்திட்டங்களை இணைத்து அனுபவ அறிவாக்குதல் மற்றும் பாடப்புத்தகங்களை நன்கு ஆராய்தல்.

–தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005

## 12.11.5. ஆசிரியர் உறுதிப்பாடு உட்கூறுகள்

## 12.11.5.1. கற்போர் சார்ந்த ஆசிரியர் உறுதிப்பாடு

- கற்போரின் அறிவுசார்ந்த உறுதிப்பாடு.
- கற்போரின் பரஸ்பர உறவு சார்ந்த உறுதிப்பாடு.
- கற்போரின் உடல்நலம் சார்ந்த உறுதிப்பாடு.
- உளவியல் சார்ந்த உறுதிப்பாடு.
- கற்போரின் குடும்பச் சூழல் சார்ந்த உறுதிப்பாடு.




## 12.11.5.2. பாடப்பொருள் அறிவு மற்றும் [illegible] சார்ந்த உறுதிப்பாடு

பாடக் கத்தைப் பற்றித் தெளிந்த, விசாலமான, இனறளவிலான அறிவைப் [illegible] ஆசிரியரின் முக்கிய தேவையாகும். அவர் [illegible] டே இருக் [illegible]

- ○ பாடப் பொருள் அறிவு.
- ○ கருத்துப் பரிமாற்றத்திறன்.
- ○ பாடக் கருத்துக்களை வெளிப்படுத்தும் தி[illegible]
    - ◈ செயல்பாடுகளை வடிவமைத்தல்.
    - ◈ பொருளுடன் திரும்பக் கூறுதல்.
    - ◈ கண்மூலம் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளல்.
    - ◈ சொற்களை வெளிப்படுத்தும் வேகம்.
    - ◈ மொழி, குரல் வளம்.
    - ◈ கற்றல், கற்பித்தல் துணைக் கருவிகள் பயன்படுத்தல்.
- ○ அறிவைப் பெருக்கிக் கொள்ளுதல்.
- ○ சக ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- ○ பாட இணைச் செயல்பாடுகள்.

## 12.11.5.3. அடிப்படை நன்னெறிகளில் ஆசிரியர் உறுதிப்பாடு

“தற்போது கல்வியிலும், சமுதாயத்திலும் ஏற்பட்டுள்ள பல கேடுகளுக்கும், குறைபாடுகளுக்கும், அதனால் வாழ்வில் ஏற்பட்டுள்ள இடர்களுக்கும் காரணம், மக்கள் மனதில் அறநெறிப் பண்புகள் மறைந்ததுதான் என்றும், அதற்கு ஒரே தீர்வு பண்பு மற்றும் ஆன்மீகக் கோட்பாடுகளை வாழ்வின் தொடக்கத்திலிருந்து வழங்க வேண்டியது அவசியம்” என திரு.டி. பிரகாசம் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது.

### வளர்க்கப்பட வேண்டிய நன்னெறிகள்

ஆசிரியர் ஒவ்வொருவரும் உயிரோட்டமுள்ள சமுதாயத்தின் உறுப்பினர்கள். அவர்களிடம் காணப்பட வேண்டிய நன்னெறிகள் அவர் வாழும், சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்றனவாகவும், சமுதாய முழுமைக்கும் பயன்படுவனவாகவும், தரமிக்கனவாகவும், பொருந்தக்கூடியவையாகவும் அமையவேண்டும்.

- நமது பொதுவான பண்பாட்டு மரபு.
- மனித சமத்துவத்தை உறுதிப்படுத்தல்.
- மக்களாட்சி.
- சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல்.
- சமூகத்தடைகளை அகற்றுதல்.
- சிறுகுடும்ப நெறிகளைப் பின்பற்றுதல்.
- அறிவியல் மனப்பாங்கு.
- சமயச் சார்பற்ற நிலை.
- சமாதான சக வாழ்வு.
- சமத்துவம்.
- தேசிய ஒருமைப்பாடு.

### நன்னெறியை வளர்ப்பதில் ஆசிரியர் பங்கு

குழந்தைகள் கல்வியின் மூலம் தன்னுடைய அறிவு, உடல் மற்றும் உணர்ச்சி சார்ந்த பண்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். ஆசிரியர், குழந்தைகள் அனைவரையும் சமுதாயத்தின் உறுப்பினராக மாற்ற வேண்டிய உண்மை, அறிவு, கடுமையான உழைப்பு, நேரம், தூய்மை, உடல் நலம், பிறர் பற்றிய அக்கறை, சகவாழ்வு, அமைதி – பண்புகளை வளர்க்க முக்கிய பங்கு ஆற்ற வேண்டும்.

## 12.11.5.4. சமுதாயம் சார் உறுதிப்பாடு

இன்றைய குழந்தைகளே வருங்காலத்தில் சிறந்த குடிமக்களாக–சமுதாயமாக உருப்பெறுகிறார்கள். சமுதாய ஒத்துழைப்பின்றி எப்பள்ளியும் இயங்க, வளர முடியாது. சமுதாய முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைச் சூழல் மாற்றத்திற்கும் ஆசிரியர் தாமாகவே முன்வந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி, சமூக அமைப்பை மேம்படுத்த உதவ வேண்டும்.

## 12.11.5.5. ஆசிரியர் பணிக்கடன் விழைவு (Teacher Accountability)

ஒருவர் தன் கடமை மற்றும் பொறுப்புக்களைத் தன் நிலையிலிருந்து எவருடைய உந்தத்திற்கும் காத்திராமல், சுணக்கமின்றிச் செயல்பட்டு அனைவருக்கும் நிறைவை வழங்கும் வகையில் தன்னார்வத்துடன் விழைந்து கடனாற்றுவதே பணிக்கடன் விழைவாகும். அமெரிக்க கலைக் களஞ்சிய விளக்கப்படி, கல்வியில் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளிக் குழுக்கள், பள்ளி நிர்வாகிகள், அரசு அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நிறைவளிக்கும் வகையில் கடமை செய்வதே பணிக்கடன் விழைவு ஆகும்.

மேக்லானில் (1988) என்பர் பணிக்கடனை (அ) தனிநபர் பணிக்கடன் (ஆ) நிறுவனத்தின் பணிக்கடன் என இரு வகைகளாகப் பிரித்துள்ளார்.

## அ. தனிநபர் பணிக்கடன்

ஓர் ஆசிரியர் தன்னுடைய தொழில்சார் செயல்பாடுகளை விருப்பு வெறுப்பின்றி தானே, நிர்ணயித்துக் கொண்ட தர உறுதித் தன்மையோடு ஒப்பிட்டு நிறைகுறைகளைக் கண்டறிந்து அதற்கேற்ற தொடர்பணி மேற்கொள்வதே பணிக்கடனாகும்.

## ஆ. நிறுவனத்தின் பணிக்கடன்

நிறுவனம் தன வாடிக்கையாளர்கள் / பயனாளர்கள் / சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய அனைத்துக் கடமைகளையும் நீக்குப்போக்கின்றிக் கடமைபாட்டுடன் செய்துமுடிக்க இயக்கமுறுவதே நிறுவனத்தின் பணிக்கடனாகும்.
நிறுவனத்தின் பணிக்கடனை மூன்று கூறுகளில் பிரித்தாயலாம்.

- மாணவர் சார் பணிக்கடன்.
- பெற்றோர்சார் பணிக்கடன்.
- சமுதாயம் சார் பணிக்கடன்.

## பணி உறுதிப்பாடுள்ள ஆசிரியரின் குணநலன்கள்

- பள்ளியின் இலக்கு, தொலைநோக்கு (Vission & Mission) இவற்றை அடைவதில் தன்கடனாற்றத் தாமே பங்கேற்பவர்.
- பள்ளியின் ஒரு அங்கமாகத் தன்னை ஆட்படுத்திக் கொள்வார்.
- பள்ளியின் குறைபாடுகளைப் பிறர் சுட்டிக்காட்டும் போது ஏற்றுக்கொள்வார்.
- முன்னேற்றமடைந்த பள்ளிகளின் தரத்துடன் தம் பள்ளியை ஒப்பு நோக்கி முயலுவார்.
- தனது நிறுவனமும், தானும் முன்னிலைப் பெற வேண்டும் என்னும் நோக்கோடு, ஈடுபாட்டோடு பணியாற்றுவார்.

## முடிவுரை

ஓர் ஆசிரியர், பல நிலைகளிலும், மாணவர்களை, சமுதாயத்தை உருவாக்குவதில் உறுதிப்பாடு உடையவராகத் திகழ வேண்டும். ஆகவே ஆசிரியர் சமூகப் பொறியாளராக (Social Engineer), காவல் காக்கும் தோட்டக்காரராக, களநிபுணராக, குருவாக, இரண்டாம் பெற்றோராக, முன்னோடியாக, பாதுகாவலராகச் செயல்படுகிறார் என்பதை நாம் உணர்ந்து நம்மை அத்தகு தகுதிகளுக்குப் பாத்திரர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

# 12.12. முழு நிறைவுத் தர மேலாண்மை (Total Quality Management)

தரமுள்ள பொருட்கள் அனைவராலும் விரும்பப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் மதிப்பு, தரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு நிறுவனமும் சேவை செய்வதைப் போலவே நிலைத்து நிற்பதற்கும் பாடுபடுகின்றன. நிலைத்து நிற்க தரம் அவசியம்.

## 12.12.1. தரம் – பொருள் விளக்கம்

"ஒரு பொருளின் உயர்ந்து காணப்படும் தன்மையே அப்பொருளின் தரம் எனப்படும்" – ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி (1970).

“ஒரு விலைப் பொருளை ஒருவர் வாங்குவதால் என்ன பயனைப் பெறுகிறார் அல்லது அப்பொருள் அவருக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதற்கு மாறாக அப்பொருளை அவர் வாங்கவில்லையெனில் அவருக்கு ஏற்படும் இழப்பு என்ன என்பதைப் பொருத்தே தரம் அமைகிறது” என்று சல்ட்டர் கூறுகின்றார்.

## 12.12.2. முழு நிறைவுத் தர மேலாண்மை விளக்கம்

‘முழு நிறைவுத் தர மேலாண்மை’ என்பது எட்வாட்ஸ் டீமிங் என்ற அமெரிக்கரால் இரண்டாவது உலகப் போருக்குப்பின் உருவாக்கப்பட்டது. இதனை ஜப்பானியர்கள் பயன்படுத்தி, பொருளாதாரத்தில் வெற்றியைப் கண்டனர். அதன் பின் உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

முழு நிறைவுத் தர மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் உள்ளோரும் வாடிக்கையாளரும் திருப்தியடைய வைப்பது என்றும், பணிபுரிவோரை ஒருங்கிணைத்தல், அவர்களைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து, அவர்களைத் தரத்திற்கான பாதையில் செல்லவைத்து, தொடர்ந்து தர முன்னேற்றத்தை நிறுவனத்திலும், விளை பொருளிலும் உருவாக்கும் காரணி” என சேய்லர் விளக்குகிறார்.

முழு நிறைவுத் தர மேலாண்மை என்பது “குறிப்பாக இடர்ப்பாடுகளுக்கான தீர்வை நிறுவனத்திலுள்ள அனைத்துப் பணிநிலைகளிலுமுள்ளோர் குழுக்களாகச் செயல்பட்டு குறைகளைக் கண்டுபிடித்துத் தர முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய ஒரு வியூகம் அல்லது செயல்பாடு ஆகும்” என்று ஹில் டெய்லரும் கூறியுள்ளனர்.

## 12.12.3. முழுநிறைவுத் தர மேலாண்மையின் பகுதிகள் (Elements)

- ஓர் அமைப்பானது முழு நிறைவுத் தர மேலாண்மையில் தனக்குள்ள ஈ டு பா ட் டை விளக்குதல்
- வாடிக்கையாளர் ஆர்வம்
- தொலை நோக்கைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டு முயற்சி
- கூட்டு உடன்பாடு
- செய்முறை சார்பு
- தொடர்ச்சியான தர முன்னேற்ற மனப்பான்மை
- மதிப்பீட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல்

## 12.12.4. பள்ளியின் முழுத் தர மேலாண்மை

பள்ளியின் தரம் என்பது வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல், நிகழ்வோடு நிர்வாகம், மேற்பார்வைப் பணிகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. மாணவர்கள், பெற்றோர்கள், சமுதாயம் ஆகியோரின் மனநிறைவைப் பொறுத்தே பள்ளியின் தரம் அமைகின்றது. எனவே பயனுறு திட்ட மேலாண்மையும், கல்வியாளர்களின் தொழில் நுட்ப ஒத்துழைப்பும் உள்ள சூழலில் உருவாகும் பள்ளியானது முழு நிறைவுத் தரப் பள்ளியாக அமையும் என்பதில் ஐயமில்லை

பள்ளி அமைப்பானது பல உட்கூறுகளைக் கொண்டது. உண்மையில் கல்வி ஆட்சியாளர்கள், மேற்பார்வையாளர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள். பெற்றோர்கள் ஆகிய பல உட்கூறுகள் பள்ளியில் காணப்படுகின்றன. இவ்வமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஒரு குறிக்கோளை நோக்கிச் செயல்படும் போது மட்டுமே பள்ளியில் தரம் காணப்படும். சேவைகளை ஒன்று திரட்டிக் குறிக்கோள்களை நோக்கி நகர வைப்பதற்குத் தேவைப்படும் கருவி, முழுத் தர மேலாண்மை ஆகும்.

### 12.12.5. முழுத் தரத்தில் ஆசிரியரின் பண்புகள்

- பாடத்தின் நோக்கங்களைஅறிதல்
- பாடப்பொருளில் ஆழமான அறிவு
- கற்பித்தல் முறைகளை அறிதல்
- கல்வி நுட்பங்களைப் பயன்படுத்துதல்
- செயல்வழிக் கற்றலை முழுமனதுடன் பயன்படுத்தல்
- பல வகுப்புக் கற்பித்தல் மற்றும் மேலாண்மையைப் பயன்படுத்தல்
- கற்றல் – கற்பித்தல் பொருட்களை உருவாக்குதல்
- சுயக் கற்றலை ஊக்கப்படுத்தல்
- குழுக்கற்றலை மேன்மைப்படுத்தல்.

### 12.12.6. முழுத் தரப் பள்ளியில் ஒரு தலைமையாசிரியரின் பண்புகள்

- தொலை நோக்குடன் பார்த்தல்
- சவால்களை எதிர்கொள்வதை ஊக்கப்படுத்தல்
- தடைக்கற்களை நீக்குதல்
- மாறுதலுக்கான உறுதிப்பாடு
- உடன் பணியாற்றுவோரின் திறனை மேம்படுத்துதல்
- தலைமைப் பண்பைச் சீர்ப்படுத்துதல்

## 12.13. ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு

கல்வி, சமுதாயம் மற்றும் அரசியல் புனரமைப்பிற்கு ஆசிரியர்கள் மிகப் பெரிய பங்குபணி ஆற்ற வேண்டும் என்று கல்வி அலுவலர்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றார்கள். நாட்டின் முழுமையான வளர்ச்சிக்கு உரிய செயல்களைச் சிந்தித்து நடைமுறைப்படுத்தும் கடமையும், பொறுப்பும் ஆசிரியர்களுக்கு உள்ளது. ஆகவே ஆசிரியர் தன் தொழில் சார்ந்த கூறுகளைக் கண்டறிந்து தங்களை அதற்கேற்ப தக அமைத்துக் கொண்டு பணிமேம்பாடு அடைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

### 12.13.1. பணியிடைப் பயிற்சியின் அவசியம்

ஒவ்வொரு ஆசிரியரும் தம் பணித்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும், தன் மனப்பாங்கை மாற்றி அமைத்துக் கொண்டு மாணவர் சமுதாயம் மேம்படுவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவும், தன் குறைகளைக் கண்டு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளவும், எப்போதும் கற்பவராகத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளவும், இன்றைய நாள் வரை புலங்கள் பலவற்றில் தான் அடைந்துள்ள முன்னேற்றங்களை வளர்ச்சிகளை அறிந்து, மாணவர்களுக்குத் தேவையானபோது அவற்றை அறிமுகப்படுத்தவும், புதிய உத்திகளைக் கையாளவும், கண்டறியவும் பணியிடைப் பயிற்சி தேவைப்படுகிறது.

ஆசிரியர் ஒருவர், தன்னுடைய தொழிலுக்கான கல்வி மற்றும் பயிற்சி பெறுதல், தன் சமூகக் கடமைகளைப் முழுமையாகச் செய்தல், நடத்தை விதிகளைப் பின்பற்றுதல், பணியிடைப் பயிற்சி மற்றும் கருத்தரங்குகளில் பங்கேற்றுத் தன்னை முன்னிலைப்படுத்தித் தன் பணி சார்ந்த திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 12.14. பள்ளி இணைப்புத்திட்டம் (School complex)

மனித மற்றும் பொருள் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்காக, பள்ளி இணைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தொடக்கக்கல்வி முதல் உயர் கல்வி வரையுள்ள அனைத்துக் கல்வி நிலைகளையும் இணைத்து அவற்றின் பயனைஅனைத்துக் கல்வி நிலைகளிலும் பயன் பெறச் செய்வதே இதன் நோக்கமாகும்.

பள்ளி இணைப்புத் திட்டம் என்பது பல பள்ளிகள் இணைந்த ஒரு தொகுப்பு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஒன்றாக இணைந்து பணியாற்றும் ஒரு கல்வி நிறுவனங்களின் தொகுப்பாகச் சேர்ந்தியங்குவதாகும். தன்னொத்த பிற கல்வி நிறுவனங்கள், உதவி பெறும் வகையில், கல்விச் செயல்களைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். மேல்நிலை முதல் தொடக்க நிலை வரையுள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து, தங்களுடைய எண்ணங்கள், முயற்சிகள் வளங்களைப் பயன்படுத்திக் கல்வியின் தரம் உயரப் பாடுபட பள்ளி இணைப்புத் திட்டம் பயன்படும்.

## 12.14.1. மூன்றடுக்கு முறை

### முதல் அடுக்கு

அருகிலுள்ள எட்டு முதல் பத்து தொடக்கப் பள்ளிகளை, ஒரு நடுநிலைப்பள்ளியுடன் இணைத்தல் வேண்டும். ஒரு நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் தன் இணைப்பிலுள்ள பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் பணி சார்ந்த, கல்வி சார்ந்த வழிகாட்டுதல்களை வழங்குதல் வேண்டும்.

### இரண்டாவது அடுக்கு

உயர்நிலைப் பள்ளிகளுடன், அருகிலுள்ள நடுநிலைப்பள்ளிகள் இணைக்கப்பட்டு, அவற்றின் தரமான கல்விக்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

### மூன்றாவது அடுக்கு

உயர்நிலைப் பள்ளிகளை அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, கல்வியியல் கல்லூரி, மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைத்து, அப்பள்ளிகளின் தர உயர்வுக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

## 12.14.2. பள்ளி இணைப்புத் திட்டத்தின் பணிகள்

### கல்வி சார்ந்த வழிகாட்டல்

திறமை வாய்ந்த ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் தங்களுடைய பணியினை, இணைப்புப் பள்ளிகளுக்கு வழங்குதல் வேண்டும். இதனை மூன்று வழிகளில் மேற்கொள்ளலாம்.

அ) கற்பித்தல்
ஆ) பாட இணைத்திட்ட செயல்பாடுகள்
இ) பள்ளி மேம்பாட்டுச் செயல் திட்டங்கள்

### தேவையான உபகரணங்களை வழங்குதல்

அ) நூலகம்
ஆ) ஆய்வக உபகரணங்கள்
இ) காட்சிக் கேள்விக் கருவிகள்
ஈ) விளையாடுமிடம் முதலியவற்றைத் தொகுப்பிலுள்ள அனைத்துவகைப் பள்ளிகளும் பயன்படுத்திக் கொள்ளுதல்.

### மேற்பார்வைப் பணி

கற்பிக்கும் பணி அமைப்பு செயல்படும் விதம் முதலியவற்றை மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்குதல்.

**மதிப்பீட்டுப் பணி**

வினாத்தாள் தயாரிப்பு, மதிப்பீட்டில் புதிய உத்தி போன்றவை.

**பணியிடைப் பயிற்சி**

தொழில் சார்ந்த வளர்ச்சிக்கும், தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும். பணியிடைப் பயிற்சி மிகமிகத்தேவை. ஆசிரியர்களைக் கூட்டி, ஆலோசனைகள் வழங்கி, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து, மாதிரி வகுப்புகள் நடத்தி, கற்பித்தலில் புதிய முயற்சிகளை மேற்கொண்டு அவற்றை பிறருடன் பகிர்ந்து புதிய அறிவினை, திறனை எல்லோரும் பெற வழி செய்வதற்கு பணியிடைப் பயிற்சி உதவிட வேண்டும்.

## 12.14.3. நன்மைகள்

- வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துதல்
- ஆசிரியர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சி, மேம்பாடு
- கற்றல் மதிப்பீடு மற்றும் மேம்பாடு
- பள்ளிகளின் தனிப்பட்ட வேறுபாடுகளைக் களைதல்
- சிறந்த நிர்வாகக் கட்டுப்பாடு
- பள்ளிச் செயல்பாடுகளில் மேன்மை
- சிக்கன நடவடிக்கைகள்

## 12.15. பிற அமைப்புக்களுடன் தொடர்பு

ஓர் ஆசிரியர் தன் பணி வகுப்பறையுடன் முடிந்து விட்டதாகக் கருதுதல் கூடாது. சமுதாய முன்னேற்றம், மாணவர் முன்னேற்றம், நாட்டு முன்னேற்றம் என்ற மூன்றிற்கும் ஆசிரியர் முக்கிய அங்கம் வகிக்கின்றார்.


## 12.15.1. பிற அமைப்புகளுடன் தொடர்பு கொள்வதன் நோக்கங்கள்

- பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்
- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்
- கல்வியில் தரமேம்பாடு அடையக் கற்றல், கற்பித்தல் வளங்களைச் சேகரித்தல்
- பள்ளியின் இயற்கை வளங்களைப் பராமரித்துப் பாதுகாத்தல்
- ஏழை, எளிய மாணவர்களுக்கு அனைவரும் கூட்டாகச் சேர்ந்து உதவி செய்தல்
- பள்ளிப்புரவலர் திட்டத்திற்கு கொடையாளர்களைச் சேர்த்து தேவையான உதவி பெறுதல்
- சமுதாய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளல்

ஆசிரியர் இல்லாத பள்ளிகளில் உள்ளூர் பட்டதாரிகளை வேண்டி அழைத்து கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல்.

மாணவர்களுக்கு வாழ்வியல் கல்வி அளிக்கவும், மாறிவரும் சூழலுக்கேற்ப ஆசிரியர் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளவும், பள்ளிக்கு வெளியேயும் கல்விசார் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் பிற அமைப்புகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

## 12.15.2. பல்வேறு அமைப்புகளுடன் தொடர்பு




**செயல்**

மேற்கண்ட அமைப்புகளுடன், பள்ளி கொண்டுள்ள தொடர்பை நீ வாழும் சமுதாயத்தில் இயங்கும் பள்ளியோடு தொடர்புபடுத்தி, ஒவ்வொன்றினுடைய பணியையும் பள்ளியின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு எழுதுக.

# இந்தியக்கல்விமுறை

## வினாத்தாள் வரைவு - I

| வ. எண். | அலகுகள் | குறுவினா | | | பத்திவினா | | | நெடுவினா | | | மொத்தம் | | | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | |
| 1. | வரலாற்று மேல்நோக்கு | 1(2) | 1(2) | | | 1(4) | 1(4) | - | | 1(10) | 1(2) | 2(6) | 2(14) | 5(22) |
| 2. | கல்வியின் நோக்கங்கள் | | 1(2) | | 1(4) | | | - | | 1(10) | 1(4) | 1(2) | 1(10) | 3(16) |
| 3. | தொடக்கக்கல்வியின் நிலை | | | 1(2) | | 1(4) | | | | | - | 1(4) | 1(2) | 2(6) |
| 4. | அறிவுப் பொருளாதாரம்–மனிதவள மேம்பாடு | 1(2) | | 1(2) | | | | | 1(10) | | 1(2) | 1(12) | 1(2) | 5(14) |
| 5. | கல்வி மேலாண்மையில் சமூகத்தின் ஈடுபாடு | | 1(2) | | 1(4) | | | | | | 1(4) | 1(2) | - | 2(6) |
| 6. | பண்பாட்டு பாரம்பரியம் | | 1(2) | | | 1(4) | | | | | - | 2(6) | - | 2(6) |
| 7. | மக்களாட்சி அமைப்பில் அரசியலும், கல்வியும் | | | 1(2) | | | 1(4) | | | | - | - | 2(6) | 2(6) |
| 8. | தொடக்கக் கல்வியின் அறைகூவல்கள் | | | 1(2) | | | 1(4) | | 1(10) | | - | - | 2(6) | 2(6) |
| 9. | பள்ளிக் கல்வி கட்டமைப்பு | 1(2) | | | 1(4) | | | | | | 2(6) | 1(10) | - | 3(16) |
| 10. | தேசிய அக்கறையும் கல்வியும் | | 1(2) | | | 1(4) | | | | | - | 2(6) | - | 2(6) |
| 11. | ஆசிரியர் கல்வி கட்டமைப்பு | | 1(2) | | | | 1(4) | 1(10) | | | 1(10) | 1(2) | 1(4) | 3(16) |
| 12. | பள்ளி மேலாண்மை | | 1(2) | 1(2) | | 1(4) | | | | 1(10) | | 2(6) | 2(12) | 3(16) |
| | **Total** | 3(6) | 7(14) | 5(10) | 3(12) | 5(20) | 4(16) | 1(10) | 2(20) | | 7(28) | 14(54) | 12(56) | 33(138) |
| | | 15(30) | | | 12(48) | | | 6(60) | | | 33(138) | | | 33(138) |
| | **மாணவர் விடையளிக்க வேண்டியவை** | 15x2=30 | | | 10x4=40 | | | 3x10=30 | | | | | | 100 |

(அடைப்பில்) மதிப்பெண்கள்

# இந்தியக்கல்விமுறை

## வினாத்தாள் வரைவு - II

| வ. எண். | அலகுகள் | குறுவினா | | | பத்திவினா | | | நெடுவினா | | | மொத்தம் | | | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | |
| 1. | வரலாற்று மேல்நோக்கு | 1(2) | 1(2) | | | 1(4) | 1(4) | - | | 1(10) | 1(2) | 1(2) | 1(10) | 5(24) |
| 2. | கல்வியின் நோக்கங்கள் | 1(2) | | | | | 1(4) | - | | | 1(2) | - | 1(4) | 2(6) |
| 3. | தொடக்கக்கல்வியின் நிலை | | | 1(2) | | 1(4) | | | | | 1(10) | 1(4) | 1(2) | 3(16) |
| 4. | அறிவுப் பொருளாதாரம்–மனிதவள மேம்பாடு | | 1(2) | 1(2) | 1(4) | | | | 1(10) | | 1(4) | 1(12) | 1(3) | 4(18) |
| 5. | கல்வி மேலாண்மையில் சமூகத்தின் ஈடுபாடு | | 1(2) | 1(2) | | 1(4) | | | | | - | 2(6) | 1(2) | 3(8) |
| 6. | பண்பாட்டு பாரம்பாரியம் | | | 1(2) | 1(4) | | | | | | 1(4) | 1(10) | 1(2) | 3(16) |
| 7. | மக்களாட்சி அமைப்பில் அரசியலும், கல்வியும் | | 1(2) | | | | 1(4) | | 1(10) | | - | 1(2) | 1(4) | 2(6) |
| 8. | தொடக்கக் கல்வியின் அறைகூவல்கள் | | | 1(2) | 1(4) | | | | | 1(10) | 1(4) | - | 2(12) | 3(16) |
| 9. | பள்ளிக் கல்வி கட்டமைப்பு | | 1(2) | | | | | | | | - | 2(6) | - | 2(6) |
| 10. | தேசிய அக்கறையும் கல்வியும் | 1(2) | | | 1(4) | | | | | | 2(6) | - | - | 2(6) |
| 11. | ஆசிரியர் கல்வி கட்டமைப்பு | | | | | | | 1(10) | | | - | 1(2) | 1(4) | 2(6) |
| 12. | பள்ளி மேலாண்மை | | 1(2) | | | | 1(4) | | | | 1(10) | 2(6) | - | 3(16) |
| | **Total** | 3(6) | 6(12) | 5(10) | 4(16) | 3(12) | 4(16) | 1(10) | 2(20) | 2(20) | 9(42) | 13(50) | 9(42) | 34(136) |
| | | 14(28) | | | 11(44) | | | 6(60) | | | 33(138) | | | 33(138) |
| | **மாணவர் விடையளிக்க வேண்டியவை** | 15x2=30 | | | 10x4=40 | | | 3x10=30 | | | | | | 100 |

## மாதிரி வினாத்தாள்–1
## இந்தியக் கல்விமுறை

### பிரிவு–1

**I. அனைத்து வினாக்களுக்கும் 100 சொல் அளவில் விடையளி. 2 x 15 = 30**

1. கல்வி, கேள்வி என்ற சொற்களுக்குப் பொருள் தருக.
2. கல்வித் தத்துவங்களின் பொதுவான நான்கு வகைகளைக் கூறுக.
3. கல்வியின் நான்கு தூண்கள் எனப்படும் நோக்கங்களை எழுதுக.
4. அறிவுப்பொருளாதாரம் என்றால் என்ன ?
5. அமைதிக்கல்வியின் அவசியங்களுள் எவையேனும் எட்டினை எழுதுக.
6. தேசியக்கல்விக் கொள்கை வலியுறுத்தும் ஏதேனும் நான்கு விழுமங்களைக் கூறுக.
7. பண்பாட்டின் தன்மைகள் எவையேனும் நான்கிளைக் கூறுக.
8. மாணவர் சேர்க்கை விகிதம் (GER), நிகர மாணவர் சேர்க்கை விகிதம் (NER) இரண்டையும் வேறுப்படுத்துக.
9. கிராமக் கல்விக்குழுவின் பணிகளை எழுதுக.
10. பள்ளிகளின் சமுதாயத்தின் உடைமை என்றால் என்ன ?
11. இந்தியப் பள்ளிக் கல்விப்படிநிலைகளை உரிய வயதுடன் விவர விளக்கப்படம் வரைக.
12. மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனத்தின் உட்பிரிவுகளை எழுதுக.
13. இந்திய தேசியக் கல்வி அக்கறைகள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.
14. ஒரு முன்மாதிரி ஆசிரியராய்த் திகழும் வகையில் உம்மிடம் உள்ள பண்பு நலன்களை எழுதுக.
15. ஒரு நல்ல தலைமையாசிரியரின் பண்புகள் எவையேனும் பத்தினைக் கூறுக.

### பிரிவு–2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. 10 x 4 = 40**

1. ஒரு இந்தியநாட்டு ஆசிரியர் என்ற வகையில் நீவிர் பெருமை கொள்ளக்கூடிய இந்தியாவின் கல்விப் பாரம்பரியச் சிறப்புகளை விவரிக்க.
2. சமணக்கல்வியின் சிறப்புக் கூறுகளை விவரி ?
3. காலனி ஆதிக்க காலக்கல்வியின் நோக்கங்களைத் தெளிவு படுத்துக.
4. சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சியை விவரி.
5. பொருளாதார மேம்பாட்டின் அடிப்படை, கல்வி மேம்பாடே என்பதை விளக்குக.
6. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள் எவை ?
7. நாளந்தா பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
8. பண்பாட்டை வரையறுத்துக் கல்வியால் ஏற்படும் பண்பாட்டுத் தாக்கங்களை எழுதுக.
9. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தனித்தன்மைகள் யாவை ?
10. பங்கேற்பு முறையில் திட்டமிடல் என்ற திட்டமிடும் ஆய்வு முறையை விளக்குக.
11. வட்டார வளமையங்களின் பணிகளைக் கூறுக.
12. ஆசிரியர்களின் இலக்கணம் என நன்னூலார் கூறுவன யாவை ?

## பிரிவு–3

**III. நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 10 x 3 = 30**

1. சங்ககாலத் தமிழகத்தின் கல்விச் சிறப்புகளை பின்வரும் குறுந்தலைப்புகளில் ஆய்க.
   அ. சங்க இலக்கியங்கள்
   ஆ. கல்வி விழிப்புணர்வு, முக்கியத்துவம்
   இ. சங்க காலக் கல்வியின் பாடப்பொருள்
   ஈ. ஜாதி பாகுபாடற்ற கல்வி

   (அல்லது)

   சமணக்கல்வியின் சிறப்புக் கூறுகள்
   அ. சமணப் பள்ளிகள்
   ஆ. சமணர்களின் பயிற்றுமுறைப் படிநிலைகள்
   இ. ஆசிரியர்–மாணவர் நல்லொழுக்கம்
   ஈ. கல்வி–இலக்கியத்தொண்டு
2. பள்ளி சமுதாயத்தின் உடைமை; ஆசிரியர்கள் சமுதாயத்தின் கல்வி நலக்காவலர்கள் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

   (அல்லது)

   பண்பாடும் கல்வியும் ஒன்றை ஒன்று தழுவியவை–என்பதை விளக்கி இந்தியரிடையே பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் கல்வி வழிமுறைகளைக் குறிப்பிடுக.
3. தேசியக் கல்வி அக்கறைகள் எவையேனும் ஐந்தினைக் கூறி அவற்றிற்கு நும்பணியால் நீவிர் எவ்வாறு நலம் சேர்ப்பீர் என விவரி.

   (அல்லது)

   முறைசார் பள்ளிக்கல்வியையும் முறைசாராக் கல்வியின் முயற்சிகளையும் ஒப்பிட்டு முறைசாராக் கல்வித் தேவைகளை நிறுவுக.

## மாதிரி வினாத்தாள்–2
## இந்தியக் கல்விமுறை

### பிரிவு–1

**I. அனைத்து வினாக்களுக்கும் 100 சொல் அளவில் விடையளி.** **2 x 15 = 30**

1. 'பூரண ஞானம் பொலிந்த நன்னாடு' எனப் பாரதம் புகழப்படுவதற்கு நான்கு காரணங்களைக் கூறுக.
2. கல்வி வரையறைகள் எவையேனும் நான்கினைக் கூறுக.
3. வேதகாலக் கல்வியின் நோக்கங்கள் யாவை ?
4. சங்க இலக்கியங்கள் யாவை ?
5. கல்விக்கான நோக்கங்கள் எவையேனும் நான்கினைக் கூறுக.
6. இந்தியக் குடியரசின் 50 ஆண்டுக்காலக் கல்வி வளர்ச்சியை ஏதேனும் இரு புள்ளி விவரங்களால் மெய்ப்பி.
7. கிராமக் கல்விக்குழு சிறப்பாகச் செயல்படப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒரு ஊக்கியாக விளங்குகிறார் என்பதற்கு நான்கு கருத்துக்கள் கூறுக.
8. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் எவையேனும் நான்கினைக் கூறுக.
9. கிராமக் கல்விப் பதிவேடு (VER) குறிப்பு வரைக.
10. செயலூக்கக் கற்றல் முறையின் (ALM) எவையேனும் நான்கு சிறப்புக்களைக் கூறுக.
11. சுற்றுச்சூழல் கல்வியை உம் பள்ளியில் வழங்குவதில் உமது சிறப்புப் பங்குகளைக் குறிப்பிடுக.
12. கிராமக் கல்விக் குழுவின் பணிகளை எழுதுக.
13. இந்தியர்கள் அறிந்திருந்த 64 கலைகளில் எவையேனும் எட்டினைக் குறிப்பிடுக.

### பிரிவு–2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.** **10 x 4 = 40**

1. சங்க இலக்கியங்கள் பற்றிக் குறிப்பு வரைக.
2. 'கீழ்நோக்கிப் பரவும் கல்விமுறை' குறிப்பு வரைக.
3. தனிமனிதன் தன் நோக்கத்தை எய்துவதற்கு வழிகாட்டுவதே கல்வி–விவரி.
4. நமது கல்வி நடைமுறையின் கவலை அளிக்கக்கூடிய அம்சங்களையும் அவற்றைச் சரி செய்ய தேசிய கலைத்திட்டம் 2005 மேற்கொள்கின்ற முயற்சிகளையும் எழுதுக.
5. அமைதிக் கல்வியின் கலைத்திட்டம் சார்ந்த செயல்பாடுகளை எழுதுக.
6. கல்வி வளர்ச்சிக்குச் சமுதாயப் பங்கேற்பால் கிடைக்கும் நன்மைகள் யாவை ?
7. மாணவரின் ஆளுமையை உருவாக்குவதில் பண்பாட்டின் பங்கை எழுதுக.
8. குழந்தைகளின் உரிமைகளை விவரி.
9. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள் யாவை ?
10. மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் உள்ள பணிப்பிரிவுகளையும் அவற்றின் பணிகளையும் விவரி.
11. குழந்தைகளின் நோயற்ற வளமான தன்மையே கல்விக்கு அடிப்படை என்ற நோக்கில் அரசின் செயல்திட்டங்களை விவரி.
12. "தலைமை ஆசிரியர் எவ்வழி; பள்ளியும் அதைப் போன்றே அமையும்" இக்கருத்தை நிறுவுக.

## பிரிவு–3

**III. நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 10 x 3 = 30**

1. மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கையைப் பின்வரும் குறுந்தலைப்புகளில் ஆய்க.
   அ. உடல் மனம் ஆன்மா–ஒத்திசைவுக்கல்வி
   ஆ. மக்களாட்சிப் பயிற்சிக் கல்வி
   இ. ஆதாரக் கல்வித் திட்டம்
   ஈ. தனிநபர் ஒழுக்கக் கல்வி

   (அல்லது)

   மரியா மாண்டிசோரியின் கல்விக் கருத்துக்களை பின்வரும் குறுந்தலைப்புகளில் விவரித்து எழுதுக.
   அ. குழந்தைமையக் கல்வி அணுகுமுறை
   ஆ. புலன் பயிற்சிக் கொள்கை
   இ. தானே கற்றல் கொள்கை
   ஈ. தசைப் பயிற்சிக் கொள்கை

2. ஒரு நாட்டின் அடிப்படைக் கல்வியைத் தழுவியே அந்நாட்டின் மக்களாட்சி எடுபடும் என்பதனை நிறுவுக.

   (அல்லது)

   மழலையர் உடல் நலக்காப்பு மற்றும் மழலைக் கல்விக்கான அரசின் நலத்திட்டங்களைக் விவரி,

3. சுதந்திரத்திற்கு முந்திய இந்தியாவின் ஆரம்பக்கல்வி முன்னேற்றத்தை சுதந்திர இந்தியாவின் கல்வி முன்னேற்றத்துடன் ஒப்பிடுக.

   (அல்லது)

   ஓர் இந்தியர் என்பதில் தாங்கள் கொள்ளும் பெருமிதக் கூறுகளையும் அவ்வுணர்வுகளை மாணவர்களிடம் வளர்ப்பதில் ஓர் ஆசிரியர் என்கிற முறையில் தங்களது பங்குப் பணிகளையும் வரைக.

# மேற்கோள் நூல்கள்


1. Indian National Education – Chidbhavanandha, 1964.
2. இந்தியக் கல்வி வரலாறு, Dr. சுவாமிநாதன். 1998.
3. சங்க கால வரலாற்று ஆய்வுகள், நூல் I, II மயிலைசீனி வேங்கடசாமி, 2001.
4. Principles of Education, S.S. Chandra etal, 2004.
5. Text Book of Education Phiolosophy, Ramnathsharma, 2000.
6. Fifty Great Thinkers on Education Vol-I & II, Joy A. Palmer.
7. தமிழ் அகரமுதலி, த.நா. பாடநூல் நிறுவனம், 1985.
8. The wonder that was India, A.L. Basham, 1967.
9. சமணமும் தமிழும், மயிலை சீனி வேங்கடசாமி, 1954.
10. Encyclopaedia of Edn System in India, 1991.
11. பகவான் மஹாவீரர், அ.லெ. நடராஜன், 1968.
12. தமிழகத்தில் சமணம், M. இராதாகிருஷ்ணன், 1964.
13. Religion and and culture of Jains, Dr. Jyothi Prakash Jain, 1983.
14. தத்வார்த்த சூத்ரம், ஸ்ரீ. ஆர்ஜவசாகர் முனிவர், 2001.
15. கொங்குநாடும் சமணமும், செ. இராசு, 2005.
16. Indian Education System, IGNOU, ES 334, 2000.
17. History of Modern Indian Education, J.C. Aggarwal, 2007.
18. Education In Emerging Indian Society, Y.K. Singh & Ruchikanath, 2005.
19. Foundations of Education, Ramesh Ghauta, 2004.
20. மகாகவி பாரதியார் கவிதைகள்
21. National Curriculum frame work, NCERT, 2005.
22. Education for a New World, Maria Montessosi, 1974.
23. கல்வி சொற்பொருளாய்வு, ஆய்வுக்கட்டுரை கா. நடராஜன், 2007,
24. Principles of Education, Bhatia K.K — Kalyani Publication , New Delhi 1989.
25. Education in the Emerging Indian Society, Dr.Sharma D.L. — Loyal Book Depot. Meerut 1990.
26. Principles of Education, Swarup Saxena N.R. Loyal Book Depot. Meerut 1990.
27. Dr.Haseen Taj- Current challenges in Education, Neelkamal Publication Pvt. Ltd., Hyrabad 2005.
28. Aggarwal J.C. Theory and Principles of Education, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi 2002.
29. Biranchi Narayan Dash – Teacher and Education in the emerging Indian Society. Neelkamal Pub. Pvt. Ltd, Hydrabad 2005.
30. Vidya Ratna Taneja – Educational Thoushil & Practice Sterling Pub. Pvt. Ltd., New Delhi 1986.
31. Sodhi T.S. Education and Economic Development Vani Educational Books, New Delhi 1985.
32. Dash B.N. Principles of Educaton Neelkamal Pub Pvt. Ltd, Hydrabad 2006.
33. Dr.Hemalatha Taleora & Others – Managing Educational Challenge Author Press, Newdelhi 2005.
34. Dash B.N. – Trends and issues in Indian Education – Neelkamal Publishers Pvt. Ltd., New Delhi 2004.
35. Munimuddin Pureshi – Social Aspects of Education Anmol Publication Pvt. Ltd., New Delhi 2005.
36. Educational administration in Tamil Nadu R,S Tyagi S. Paramasivan- NIEPA 2001. New - Delhi.
37. Trends & Issues in Indian Education, B.N. Dash 2004. Dominant Publishers and Distributors - New Delhi.
38. Teachers Education - Principle, Theory and Practice - Aarti Basal 2004. Sublime

Publication - Jaipur.

39. கிராமக் கல்விக்குழு – ஆசிரியர் பயிற்று நர்களுக்குகான பயிற்சிக் கட்டகம் –DTERT - 2003 T. Nadu.
40. அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டச் செயல்பாடுகள் வழிகாட்டுதல் கையேடு 2003. – மாநிலத்திட்ட இயக்ககம் கல்லூரிச்சாலை, சென்னை 600 006.
41. Current challenges in Education - Dr. Haseen Taj Neelkamal Publication Pvt.Ltd., Peace Education Frame work for Teacher Education – 2008 UNESCO New Delhi.
42. அமைதிக் கல்வி – பயிற்சி ஏடு DIET Perundurai 2008 T. Nadu
43. இந்தியச் சமுதாயத்தில் எழுந்துள்ள கல்விசார் அறை கூவல்கள்
    – பேராஇ. நாகராஜன் மற்றும் முனைவர் மும்தாஜ் பேகம்
    – இராம் பதிப்பகம், சாலிகிராமம், சென்னை–93, ஆகஸ்ட் 2003.
44. Current Chalenges in Education - DR. Haseen Raj
    - Neelkamal Pvt Private Ltd., New Deilhi - 2005
45. Shankar Rao, C.N. Socilogy Primary Principle S.chand & Company, New Delhi-2001.
46. Phiolosophy & Sociology of Education – Directorate of correspondence courses and continuing Education, Annamalai University – M.Ed. Degree cases unit 1-3 – 1982-83
47. Manorama year book 2005 – Malayala Manorama, Kottayam 40th year of publication – 2005.
48. Biranchi Narayan Dash – Teacher and Education in the Emerging Indian Socity – Vol II – Neal kamal Publication Pvt. Ltd. Hydrabad – 2006.
49. Aggarwal J.C. Theary & Principles of Education – Vikas publishing House Private Ltd. NewDelhi – 2002.
50. Introduction, Music, Architecture, Sculpture, Paintings, Literature, Theatre and property materials- Director. Centre for cultural Resources, and Training, NewDelhi.
51. Performing Arts and Plastic Arts Slides –Director CCRT, New Delhi.
52. National Portal Content Management Team –Webstie w.w.w. Cultural Heritage.com. in.
53. Dr. Haseen Taj-Current Challenges in Education, Neelkamal Publication Pvt. Ltd., Hydrabad - 1005.
54. Biranchi Narayan Dash - Teacher and Education in the Emerging Indian Society - (Vol I & II) Neelkamal Pub. Pvt. Ltd., Hydrabad 2005.
55. Aggarwal J.C. - Theory and Principle of Education - Vikas Publishing House Pvt. Ltd. New Delhi - 2002.
56. Pylee M.V. India's consitution - S. Chand & Company Ltd., New Delhi - 2002.
57. Dash Bin Trends and issues in Indian Education Dominant Publishers and Distributers, New Delhi - 2004.
58. National Curriculam Frame Work - 2005 - NCERT, New Delhi - 2005
59. Inservice Teacher Education Package Vol. I & II.
60. Bhatia K.K. Principles of Education - Kalyani Publishers - New Delhi - 1985.
61. அட்டவணை 1 – 3 Aggarwal J.C. Teacher and Education to a developing society. Vikas Publishing House Pvt. Ltd., New Delhi. Reprint 2005 (Fourth Edition)
62. Kulbir Singh Sidha, School Organisation and Administration, Sterling Publishing Private Ltd. New Delhi - 2000
63. ஆசிரியர் உறுதிப்பாடு – பயிற்சிக்கட்டகம், DIET வடலூர் DTERT சென்னை 2007
64. முழுநிறைவுத் தர மேலாண்மை – பயிற்சிக் கையேடு – 2007 DIET புதுக்கோட்டை 2007
65. B.N. Dash Principles of Collection, Neelkamal publication Pvt. Ltd. hydrabad 2006.
66. தலைமையாசிரியர் பணியிடைப்பயிற்சி கையேடு DIET ஆடுதுறை (2002–03) DETERT Chennai
67. Training Programmee on Supervisor Skills for Headmasters of High schools and Higher Secondary School of Tamilnadu - Training manual & Reading material - Regional Institute of Education, NCERT, Mysore.

## இந்தியக் கல்விமுறை
## அகமதிப்பீட்டுத் தேர்வு மதிப்பெண்கள்

| வ. எண் | பொருள் | கணக்கீடு | நிகர மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | பாடநூலிலுள்ள ஐம்பத்து எட்டு செயல்கள் (ஒன்றையே அனைவரும் செய்யாது வெவ்வேறாய் செய்தல்) | 5 x 10=50 | 5 |
| 2. | தேர்வுகள்<br>அலகுத் தேர்வுகள் – 3<br>மீள்பார்வைத் தேர்வுகள் – 2 | 5 x 10=50 | 5 |
| 3. | கருத்தரங்கம் – 2 | 2 x 25=50 | 5 |
| 4. | கூடுதல் புத்தகம் வாசிப்பு | 2 x 25=50 | 5 |
| 5. | பாடப்பொருள் பற்றிய செயல்கள்<br>பாடத்திட்டத்தில் (Syllabus)<br>குறிப்பிட்டுள்ள செயல்கள் | 5 x 10=50 | 5 |
| | **மொத்தம்** | **250** | **25** |